
Koviloor Digital Library

திருச்சிற்றம்பலக்கோவை

என்னும்

திருக்கோவையார்



Acc. No. 45871

உரையாசிரியர்

முனைவர் பழ. முத்தப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

திருச்சிற்றம்பலக்கோவை

என்னும்

திருக்கோவையார்

மூலமும் - உரையும்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45871

உரையாசிரியர்

முனைவர் பழ. முத்தப்பன்

உமா பதிப்பகம்

171, (புதிய எண். 18), பவளக் காரத் தெரு,

மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 2521 5363, 2525 0092

Koviloor Digital Library

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	திருச்சிற்றம்பலக்கோவை என்னும் திருக்கோவையார் (மூலமும் - உரையும்)
உரையாசிரியர்	:	முனைவர் பழ. முத்தப்பன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - மே - 2006 இரண்டாம் பதிப்பு - 2008 மூன்றாம் பதிப்பு - செப்டம்பர் - 2011 நான்காம் பதிப்பு - ஆகஸ்ட் - 2016 ஐந்தாம் பதிப்பு - பிப்ரவரி - 2021 ஆறாம் பதிப்பு - ஜூலை - 2024
பதிப்புரிமை	:	© உமா பதிப்பகம்
தாள்	:	16 கி.கி. மேப்லித்தோ
நூல் அளவு	:	14 x 21 செ.மீ. டெம்மி
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	vii+416=424
பைண்டிங்	:	கலிக்கோ கட்டு
விலை	:	ரூ. 230.00
ஒளி அச்சு	:	அழகு சிஸ்டம்ஸ் சென்னை - 600 005.
அச்சிட்டோர்	:	விசால் எண்டர்பிரைசஸ் சென்னை-600 024.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

Koviloor Digital Library

91/4

உ

சிவ சிவ

''தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே''

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
✆ : 04577 - 264227
- 264466

நாள் : 04-05-2006

வாழ்த்துரை

சைவ சித்தாந்தத்தில் துறை போகிய நம் பேராசிரியர் திரு. பழ. முத்தப்பன் அவர்கள் அறுபதாண்டு மணிவிழாக் காண்கிறார். தம்மணி விழாவின் நினைவாக அருள்ஞான அமுதாகிய ''திருச்சிற்றம்பலக் கோவை'' எனும் ''திருக்கோவை''யாருக்கு உரை எழுதியுள்ளார்.

பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுமாறு இறைவன் அருளாணையிட்டதால் அதை ஏற்று மணிவாசகப் பெருமான் ''திருக்கோவையார்'' பாடியதாகக் கூறுவார்கள்.

ஸ்சவ சித்தாந்தத் தத்துவத்தில் நுண்மாண் நுழை புலமும், திருமுறைகளில் தோய்ந்த ஞானமும், பரந்து பட்ட உலகியல் அறிவு, கனமான செய்தி களையும் எளிமையாக விளக்குகின்ற, போதிக்கும் பயிற்சியும் கைவரப் பெற்ற திரு. பழ. முத்தப்பன் அவர்களின் திருக்கோவையார் உரை விளக்கம் தத்துவதரிசனம் விளங்க சிறப்பாக அமைந்துள்ளது. உரையின் தனிச் சிறப்பே சொற்பொருள் விளக்கமாக மட்டும அமையால் தத்துவ விளக்கமாகவும் அமைந்துள்ளதுதான்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து அப்பெருவாழ்வின் பயனாய், நல் எண்ணத்தில் சிறந்து மண் பயனுற வாழ்தலே ஆகும். தம் வாழ்வின் அரிய பணியாய் திருக்கோவையார் உரை தந்திட்ட பேராசிரியர் பழ. முத்தப்பன் அவர்கள் எல்லா வளமும், நலமும் பெற்று சிறக்க வாழட்டும்! தமிழ் கூறும் நல் உலகிற்கு மென்மேலும் படைப்புகளைப் படைக்கட்டும்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்

Koviloor Digital Library

பதிப்புரை

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென்றுணர்.

'திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர்' ஆகிய **மாணிக்கவாசகர்** அருளியதே **திருக்கோவையார்;** இது திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் வழங்கப் பெறும். பழமையான பிரபந்தங்களுள் இதுவும் ஒன்று. தேவாரம் அருளிய மூவருக்கும் முந்தியவர் மாணிக்கவாசகர் எனின் இதுவே முதற்கோவையாம்.

மறையவர் **வேதம்** என்பர்;
சிவபோகத்தர் **ஆகமம்** என்பர்;
காமுகர் **இன்பநூல்** என்பர்;
அளவை (தர்க்க) நூலவர் **எண்ணூல்** என்பர்;
தமிழ்ப் புலவர் **இலக்கணநூல்** என்பர்.

இதைப் பாடக் கேட்பவரும் எழுதியவரும் வேதியராகிய முன்னின்றருளிய **ஆதியங்கடவுளே** யாதலால் இதன் மெய்ச் சிறப்பு நன்குணரப்படும்.

இந்த அரிய நூலுக்கு மிக எளிய உரை தந்த முனைவர் பழ. முத்தப்பன் அவர்களுக்கு நன்றி. இந்நூல் வெளியிடும் வாய்ப்பு உமா பதிப்பகத்திற்கு அமைந்ததை பெரும் பாக்கியமாக எண்ணி மகிழ் கின்றேன்.

தமிழ் அன்பர்கள் இதனை விருப்பமுடன் வரவேற்று, தமிழ் நலத்தினும், சிவநேயத்தினும், அன்புட் பெரு நெறியினும் திளைப்பார்கள் என நம்புகின்றேன்.

இராம. லட்சுமணன்
உமா பதிப்பகம்

Koviloor Digital Library

91/4

உ
சிவமயம்

முன்னுரை

சைவ சமயக் கருவூலங்கள் பன்னிரு திருமுறைகளாகும். இதில் எட்டாம் திருமுறை திருவாதவூர்ப் பெருமானாகிய மணிவாசகர் பாடியருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். மணிவாசகப் பெருமான் பாடிய திருப்பாடல்கள் இருவேறு நூல்களாக இருந்தாலும் சித்தாந்தச் சான்றோர்களால் திருவாசகம் என்றே அழைக்கப்பெற்றன. அதாவது திருவாசகம் என்றும் கோவைத் திருவாசகம் என்றே அழைக்கப்பெற்றேன். வீட்டுப் பேறாகிய பேரின்பத்தை அடைவதற்குரிய பக்திவழி இலக்கியமாக விளங்குவது திருவாசகம். உலகியல் வாழ்விற்குத் தேவையான அகஇன்பத்தின் முறைமையை விரித்துரைக்கப் பக்திநெறியை அடிப்படையாகக் கொண்டு அனுபவநிலையை விளக்குவது திருக்கோவையாராகும்.

திருக்கோவையாரை மணிவாசகர் தில்லையில் பாடியருளினார். அங்கு புத்தர்களை வாதில் வென்ற பிறகு அழகிய சிற்றம்பலமுடையானால் பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று ஆணையிட்ட வண்ணம் திருக்கோவையாரை மணிவாசகர் பாடியருளினார் என்பது வரலாற்று மரபு. திருச்சிற்றம்பலம் உடையானே தம் திருக்கரத்தால் திருக்கோவையாரை மணிவாசகர் பாடிட எழுதிக் கொண்டார் என்பதும் மரபுவழிச் செய்தியாகும். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகம் உய்ய ஆனந்த நடனம் ஆடியருளுகின்ற தில்லைச் சிற்றம்பலத்தைப் பாடல் தோறும் மணிவாசகர் போற்றி வணங்குவதால் திருக்கோவையார் திருச்சிற்றம்பலக்கோவை என்றும் வழங்கப் பெறுகிறது.

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று கோவை இலக்கியமாகும். அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு பொருள் தொடர்பு அமையும் வண்ணம் கோர்வையாக 400 பாடல்களை அமைத்துப் பாடப்பெறுவது கோவை இலக்கியமாகும். ஒத்த உருவமும், ஒத்த செல்வம், ஒத்த பருவம், ஒத்த அன்பும் உடையவராய் விளங்கும் காதல் தலைவன் தலைவியர் இருவரும் ஊழின்வழியே சந்தித்துக் கொடுப்போர் இன்றிக் கந்தருவ மணத்தால் கலந்து வாழும் நிகழ்ச்சியைக் கூறுவது இவ்வகை இலக்கியத்தின் பொருட் சிறப்பாகும். இவ்வகை இலக்கியங்களில் தலைவன் தலைவியரின் இயற்பெயர்கள் தமிழ்

Koviloor Digital Library

இலக்கண மரபுப்படி இடம் பெறுவதில்லை; என்றாலும் இலக்கியத்திற்குரிய பாட்டுடைத் தலைவனாகத் தெய்வமோ, வள்ளலோ, அறிஞரோ பாடல்தோறும் இடம் பெறுவதுண்டு. அவர்தம் பெயர்களும், அவர்தம் நாடும், அவர்தம் ஊரும், அவர்தம் சிறப்பும் பாடல்களில் இடம் பெறும்.

கோவை இலக்கியங்களைக் கட்டளைக் கலித்துறைப் பாவினால் பாடுவது தமிழ் இலக்கிய மரபாகும். இந்த அடிப்படையில் திருக்கோவையார் பாட்டுடைத் தலைவனாகத் திருச்சிற்றம்பலம் உடையான் பாடல்தோறும் சிறப்பிக்கப்பெற்று அவருடைய திருத்தலமான தில்லையும், அதனுடைய வளமும், திருச்சிற்றம்பலம் உடையாரின் சிறப்பும் இடம் பெற்று விளங்குகின்றன. பெரும்பாலும் சிவபெருமானின் பெருமைகளாக நஞ்சுண்டதும், முப்புரம் எரித்தலும், மன்மதனை அழித்தலும், அயனும் மாலும் அறியாவண்ணம் ஒளியாய் நின்றதும் திருக்கோவையாரில் இடம் பெற்றுள்ளன. மேலும் சிவபெருமானின் திருத்தலங்கள் பெயர்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கனவாம். அகப் பொருட்சுவைக்கு ஏற்ப உவமை, உருவகங்கள் அமைந்து இலக்கியச் சுவையைத் தருகின்றன.

திருக்கோவையாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ள உரைகளில் தொன்மையும் பெருமையும் பெற்றது பேராசிரியர் உரையாகும். அவ்வுரையில் பாடல்கள் ஒவ்வொன்றிற்கும் பாடற் பொருளைச் சுருக்கமாக வெளிப்படுத்தும் கொளு என்ற அமைப்பு இடம் பெற்றுள்ளது. இவ்வமைப்பு ஒருவரி அல்லது இரண்டு வரிகளில் அமைந்துள்ளன. இக்கொளுவை மணிவாசகருக்குப் பின்னால் வந்தவர்கள் பாடியிருக்க வேண்டும் என்பது சைவச் சான்றோர்களின் முடிபாகும். பேராசிரியருடைய உரை அகப்பொருள் உரையாகவே அமைந்துள்ளது. ஆயின் பின்னால் வந்த உரையாசிரியர்கள் மணிவாசகர் தத்துவ வித்தகர் என்பதால் உண்மை விளக்க உரைஎன்ற அடிப்படையில் சைவ சித்தாந்த அடிப்படையில் தத்துவ உரையும் தந்தனர். இவ்வுரையின் காதல் தலைவனாக ஆன்மாவும், காதல் தலைவியாக சிவத் தலைவியும், தலைவியின் தோழியாகத் திருவருளும், தோழனாக ஆன்ம அறிவும், இன்பமாக ஞானமும், பரத்தையாகப் பிறதெய்வ வழிபாடும் கொள்ளப் பெற்று உரை வகுக்கப் பெற்றது. ஆனால் திருக்கோவையாரின் செய்யுட்களில் தத்துவ உரை கொள்ளுவதற்குரிய சொற்கள் இடம் பெறாததால் சமய அடிப்படையில் இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு பாடப்படுவதுதான் மரபு என்பதாலும் இத்தத்துவ உரை கூறுவது பொருத்தமற்றது என்று சைவப் பெரியார்கள் சிலர் வாதிடுவதுண்டு.

Koviloor Digital Library

பேராசிரியர் உரைக்குப் பின்னால் சைவத் திருமடங்களின் சார்பாகச் சைவச் சான்றோர் பலரின் உரைகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. திருமடத்து வெளியீடுகளின் உரைகள் மிக விரிவாகவும் தத்துவ அடிப்படையிலும், இலக்கியச் சுவை ததும்பும் வண்ணம் அமைந்துள்ளன. தற்காலத்துக்கு ஏற்ப எளிய உரைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மாநாட்டு மலர் ஒன்று வெளியிடுகின்ற பணியில் உமா பதிப்பகம் திரு. இராம. லெட்சுமணனோடு தொடர்பு கொள்ள இறையருள் கூட்டுவித்தது. அவர்கள் பன்னிரு திருமுறைகளையும் பேராசிரியர் புலவர் பி.ரா. நடராசன் அவர்களின் உரையாக வெளியிட்டு வருகின்றார். அதில் அன்னாருடைய உரை திருக்கோவையாருக்கு மட்டும் அமையாது எம்வினைப் பயனால் திருக்கோவையாருக்கு உரை எழுதும் சூழல் ஏற்பட்டது. இச்சூழலை ஏற்படுத்தித் தந்த இறையருளுக்கு என்றும் நன்றி உடையோம் ஆவோம்.

இவ் எளிய உரை பேராசிரியர் உரையின் அடிப்படையில் எளிய தொடர்களைக்கொண்டு எழுதப்பெற்றுள்ளது. இவ்வுரையில் துறைகளுக்குரிய விளக்கமும் பேராசிரியர் உரையில் காணப்படுகின்றபடியே, கொளுக்களும், அதற்கு எளிய உரையும், சொற்பொருள் விளக்கமும் அமைந்துள்ளன. மேலும் திருக்கோவையார் சமய இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப் பட்டமையால் சமய அடிப்படை நிலையில் தத்துவ விளக்கமும இடம் பெறலாம் என்ற கோட்பாட்டில் திருவாவடுதுறைப் பதிப்பான மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் உண்மை விளக்க உரை அடிப்படையில் தத்துவ விளக்கச் சுருக்கக் குறிப்பும் தரப் பெற்றுள்ளது. இந்த உரை எம் மணிவிழா நாளில் வெளிவருவது இறைவனின் பேரருள் திறமாகும்.

இவ்வுரையை எழுதச் செய்து அழகுடன் பதிப்பித்திருக்கும் உமா பதிப்பகத்தார் அத்துணை பேருக்கும் எம்முடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொளகிறேன். உடனிருந்து வழக்கம் போல் உதவிய என் மனைவி மு. அழகம்மைக்கும், மகன் முனைவர் மு. பழனியப்பன் அவர்களுக்கும் நன்றி கலந்த வாழ்த்துகள் உரியதாகும். பிழை திருத்தத்திற்கு உத்விய அருமை நண்பர் திருச்சி புலவர் வ. கேசவன் அவர்கள உதவியும் நன்றி பாராட்டத்தக்கது. எல்லாம் வல்ல இறையருளையும், வாதவூர் வள்ளலின் திருவடிகளையும் நெஞ்சாரப் போற்றி மகிழ்வேனாக.

11.5.2006

தமிழாகரர், சித்தாந்தச் செம்மணி

முனைவர் பழ. முத்தப்பன்

6, அன்னை சாரதா நகர்,
சோமரசம் பேட்டை, திருச்சி - 9.
✆ : 0431 - 2060678

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலக்கோவை
என்னும்
திருக்கோவையார்

விநாயக வணக்கம்

எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே - நண்ணியசீர்த்
தேனூ று செஞ்சொல் திருக்கோவை யென்கின்ற
நானூ றும் என்மனத்தே நல்கு

பொருள்: புகழ்பெற்ற தில்லையில் எழுந்துநிற்கும் கோபுரங்கள் அழகு செய்யக் காண்பவர் கண்களுக்கு நிறைந்து நின்று திருவருள் புரிகின்ற கற்பக விநாயகப் பெருமானே, சீர்மை மிகும் தேன் போன்ற சொற்களால் யாக்கப் பெற்ற திருக்கோவையார் என்னும் நானூறு செய்யுட்களும் என் மனத்தே இருக்க அருள்புரிவாயாக.

Koviloor Digital Library

நூற் சிறப்பு

ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் நூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

பொருள்: திருச்சிற்றம்பலக் கோவையை வேதம் என்று கூறுவர் அந்தணர். சிவயோகியர்கள் ஆகமங்களின் காரணமாகக் கூறுவர். சிற்றின்ப நோக்கினை உடையவர் காமநூல் என்பர். தருக்க நூலார் தருக்க நூல் என்பர். புலவர்கள் இலக்கண நூல் என்பர். தெய்வத்தன்மை பொருந்திய இத் திருச்சிற்றம்பலக் கோவையை இவ்வாறு அவரவர் நோக்கில் கூறுவர்.

இவ்விரண்டு பாடல்களும் பிற்காலத்து ஆன்றோர்களால் செய்யப்பெற்றவை. சில பதிப்புகளிலேயே இவ்விரண்டு பாடல்களும் காணப்பெறுகின்றன.

இயற்கைப் புணர்ச்சி.

தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் அகப்பொருள் செய்திகள் களவு, கற்பு என இருவகைப்படும். களவு என்பது ஊழின் முறைமையால் ஆடவனும் பெண்ணும் (தலைவனும் தலைவியும்) தமியராய் ஓரிடத்தில் எதிர்ப்பட்டு, கண்டு, காதலித்து வாழ்வதாம். இக்காதல் பிறர் அறியாதவாறு நிகழ்வதால் களவு எனப் பெற்றது. கற்பு என்பது காதலித்த இருவரும் பின்னர் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்வில் வாழத் தலைப்படுதலாம். முதற் பகுதியான களவு இயற்கைப் புணர்ச்சி முதலாக நான்கு வகைகளை உடையது. முதலாவதான இயற்கைப் புணர்ச்சி என்பது தலைவனும் தலைவியும் எவ்விதக் காரணமும் இல்லாமல் இயல்பாகச் சந்திக்கின்ற புணர்ச்சியாகும். இதில் புணர்ச்சி என்ற சொல் மனத்தால் ஒன்று படுவதைக் குறிப்பதாம். இது பதினெட்டுத் துறைகளை உடையது.

1. காட்சி

தன்னுடைய தோழர்களோடு காதல் தலைவன் வேட்டையாடுதல் போன்ற தொழில் காரணமாகச்

Koviloor Digital Library

செல்லுகின்ற பொழுது ஊழின் வயத்தால் அவர்களை விட்டுப்பிரிந்து, தனிவழியில் செல்ல இவனைப் போலவே காதல் தலைவியும் தன் தோழியரைவிட்டு நீங்கித் தனியே நிற்க அவளை அவன் காணுதல் காட்சியாகும்.

கொளு : மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர் வேலவன் கண்ணுற்றது.

பிறைச் சந்திரனைப் போன்ற ஒளி பொருந்திய நெற்றியினை உடைய வளர்கின்ற வஞ்சிக் கொடியைப் போன்ற தலைவியை, ஒளி பொருந்திய வேலையுடைய தலைவன் கண்டது.

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண்(டு) ஓங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின்
ஒல்கி அனநடைவாய்ந்(து)
உருவளர் காமன்தன் வென்றிக்
கொடிபோன்(று) ஒளிர்கின்றதே. (1)

பொருள்: அழகுமிக்க தாமரையையும் (முகம்), சிறப்புடைய நீலமலரையும் (கண்கள்), சிவபெருமான் எழுந்தருளியுள்ள தில்லையில் பூத்த குமிழ மலரையும் (மூக்கு), கோங்க மலரையும் (மார்பு), கார்தள் மலரையும் (கைகள்) சேர்த்துக் கட்டிய மாலை ஒன்று மின்னலைப் போன்று அசைந்து, அன்னத்தைப் போல் நடந்து மன் மதனை வெல்லும் கொடியைப் போல் காட்சியளிக் கின்றதே. இது வியப்பாக உள்ளதே.

சொ.பொ.விளக்கம்: காட்சிக்குரிய தலைவியின் உறுப்புகட்கு மலர்கள் உவமையாகக் கூறப்பெற்றுள்ளன. மலர்கள் சேர்த்துக் கட்டப்பெற்ற மாலையைப் போன்றவள் அழகான உறுப்புகளைக் கொண்ட தலைவி எனக் கூறப் பெறுகின்றாள். அவளுடைய தோற்றம், அழகு— தலைவனுக்கு வியப்பைத் தருகிறது. காவி — நீலமணி, வல்லி — மின்னல், வென்றி — வென்றுள்ள.

Koviloor Digital Library

தத்துவப் பொருள்: சிவஞானம் பெற்றிட, சத்திநிபாதம் பெற்ற ஆன்மா சிவத்தலைவியைக் கண்டது.

2. ஐயம்

கொளு: தெரிய அரியதோர் தெய்வம் என்ன
அருவரை நாடன் ஐயுற்றது.

அறிவதற்கு அருமையான தெய்வமோ என்று தலைவியை மலை நாட்டை உடையவன் சந்தேகித்தது. (அருவரை — அரியமலை)

போதோ! விசும்போ! புனலோ!
பணிக ளதுபதியோ!
யாதோ அறிகுவ(து) ஏதும்
அரிதி யமன்விடுத்த
தூதோ அனங்கன் துணையோ
இணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயிலோ என
நின்றவர் வாழ்பதியே (2)

பொருள்: கொல்லுவதற்கு யமன் விட்ட தூதோ, வசப் படுத்துவதற்குக் காமன் விட்ட துணையோ, ஒப்பில்லாத இறைவனுடைய தில்லையில் வாழ்கின்ற பெண்ணோ, அல்லது மயிலோ என்று சந்தேகப்படும் படியாக நிற்கின்ற இப்பெண் வாழும் இடம் தாமரைப்பூவோ, ஆகாயமோ, நீரோ, நாகர் உலகமோ? எது என்று எம்மால் சிறிதும் துணிவதற்கு இயலாது.

சொ.பொ.வி: போது — தாமரை. பணிகளது பதி — பாம்புகள் வாழும் நாகர் உலகம், அனங்கன் — மன்மதன்.

தத்துவப் பொருள்: அறிவதற்கு முடியாத இறைவனின் ஞானத்தைத் தரும் சிவத்தலைவியின் திருமேனி எங்கே உள்ளதோ என் ஐயப்பட்டது.

Koviloor Digital Library

3. தெளிதல்

கொளு: அணங்கல்லள்என்(று) அயில்வேலவன்
குணங்களை நோக்கிக் குறித்துரைத்தது.

உறுப்புகளைக் கண்டு தலைவியைத் தெய்வம் அல்லள் மானுடத்தவளே எனத் தெளிதலாகும்.

பாயும் விடையரன் தில்லையன்
நாள்படைக் கண்ணிமைக்கும்
தோயும் நிலத்தடி தூமலர்
வாடும் துயரமெய்தி
ஆயும் மனனே அணங்கல்லள்
அம்மா முலைசுமந்து
தேயும் மருங்குல் பெரும்பணைத்
தோளிச் சிறுநுதலே (3)

பொருள்: பாய்ந்து செல்லுகின்ற இடபத்தை உடைய (காளையை) சிவபெருமானின் திருத்தலமான தில்லையை ஒப்பாகிய தலைவியினுடைய வேல்போலும் கண்கள் இமைக்கின்றன. பாதங்கள் பூமியில் பொருந்துகின்றன. அவள் சூடியுள்ள பூக்களும் வாடுகின்றன. எனவே ஐயப் பட்டு ஆராய்கின்ற மனமே அவள் தெய்வம் அல்லள்! காண். அழகிய முலைகளைச் சுமந்து வருந்துகின்ற இடை யினையும், (மூங்கிலை வென்ற) தோளினையும், சிறு நெற்றியினையும் உடைய இவள் தெய்வமல்லள்.

சொ.பொ.வி: விடை — காளை வாகனம், தோயும் — பதியும், அணங்கு — தெய்வம், மருங்கு—இடை. காதலனுக்குத் தில்லையைக் காட்டிலும் உயர்ந்தது வேறு ஒன்று இருப்பதாக நினைக்காததால் தில்லைத் தலத்தையே தலைவிக்கு ஒப்பாகக் கண்டான். இறை வடிவத்தில் இயங்காத உறுப்புகள் சிவத்தலைவியாக வடிவெடுத்து வரும்பொழுது இயங்குகின்றன என்ற தத்துவக் குறிப்பு வெளிப்படுகின்றது.

தத்துவப் பொருள்: சிவம் ஆன்மாவிற்கு ஞானம் வழங்க மானுடச் சட்டை தாங்கி, சிவத்தலைவியாய் வந்தமை தெளிதல்.

Koviloor Digital Library

4. நயப்பு

கொளு: வண்டமர் புரிகுழல் ஒண்டொடி மடந்தையை
நயந்த அண்ணல் வியந்துள் ளியது.

வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தலையும், அழகிய வளையல்களையும் உடைய தலைவியை நயந்து (விரும்பி) தலைவன் நின்றது.

அகல்கின்ற அல்குல் தடமது
கொங்கை அவைஅவம்நீ
புகல்கின்ற (து) என்னை நெஞ்(சு) உண்டே
இடைஅடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லில்செற் றோன்தில்லை
ஈசன்எம் மான்எதிர்ந்த
பகல்குன்றப் பல்உகுத் தோன்பழ
னம்அன்ன பல்வளைக்கே. (4)

பொருள்: அகன்ற அல்குல் இருக்கின்ற தடம் அது. முலைகள் இருக்கின்றன. எனவே மனமே இடை இல்லை என்று சொல்வது ஏன்? பகைவருடைய முப்புரங்களாம் கோட்டைகளை மேருமலையாகிய வில்லால் வென்றவன், தில்லைச் சிதம்பரத்தில் உள்ளவன், மாறுபாடு கொண்ட சூரியனின் பல்லை உடைத்தவன் ஆகிய சிவபெருமானுடைய திருப்பழனம் என்ற வீட்டை ஒத்தவளாகிய தலைவிக்கு இடை உண்டு.

சொ.பொ.வி: அடையார் — பகைவர், புரங்கள் — மூன்று கோட்டைகள், இகல் — பகைமை, குன்றவில் — மலையாகிய வில், செற்றோன் — வென்றவன், பகல் — சூரியன், குன்ற — பெருமைகுறைய.

தத்துவப் பொருள்: இறைவன் மானுடச் சட்டையாம் திருமேனி தாங்கி சிவத்தலைவியாக எழுந்தருளி உள்ளமையால் அவளை அடைவதற்குச் சந்தர்ப்பம் உண்டு என விரும்பியது.

Koviloor Digital Library

5. உட்கோள்

கொளு : இறைதிருக் கரத்து மறிமான் நோக்கி
உள்ளக் கருத்து வள்ளல் அறிந்தது.

இறைவன் கையில் உள்ள மானினுடைய கண்ணைப் போன்ற கண்களை உடைய தலைவியின் மனத்தின் எண்ணத்தைத் தலைவன் அறிந்தது. (மறிமான் — மான்மறி — மானின்கண்)

அணியும் அமிழ்தும்என் ஆவியும்
ஆயவன் தில்லைச்சிந்தா
மணிஉம்ப ரால்அறி யாமறை
யோன்அடி வாழ்த்தலரிற்
பிணியும் அதற்கு மருந்தும்
பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் குல்பெருந்
தோளி படைக்கண்களே (5)

பொருள்: எனக்கு ஆபரணமாகவும் என்னுயிராகவும் இருக்கின்ற இறைவன் தில்லையின் கண் அன்பர்க்கு நினைத்ததைக் கொடுக்கின்ற சிந்தாமணி போன்றவன். அன்பரல்லாத தேவர்களும் அறியமுடியாத அந்தணன். அவனுடைய திருவடிகளை வழுத்தாதவர்கள் பெறுகின்ற நோயைப் போல — மின்னலையும் பாம்பையும் ஒத்த இடையினையும், பெருந்தோள்களையும் உடைய தலைவியின் கண்கள் பிறழும்தோறும் பொதுநோக்கால் நோயைத் தரும். பின் அவள் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் நாணோடு கூடிய நோக்கத்தால் மருந்துமாகி நிற்கும். (அவளுடைய கண்கள் என்றவாறு)

சொ.பொ.வி: அணி — இறைவனின் திருவடிகளைத் தன்னுடைய தலைக்கு அணியாக அணிந்து கொள்வதால் தலைவன் அவனை அணி என்றான். சிந்தாமணி — நினைத்ததைக் கொடுக்கும் அணி, பணி — பாம்பு, படைக் கண்கள் — வாள்போன்ற கண்கள். பெண்கள் முதலில் நோக்குவது பொதுநோக்கமாகும். இதனைத் திருக்குறள், “பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே யுள” *(1099)*

Koviloor Digital Library

என்று குறிப்பிடும். மேலும் காதல் பெண்களின் கண்கள் இருவகை என்பதை, "இரு நோக்கு இவளுண்கண் உள்ளது" *(1091)* என்று குறிப்பிடும்.

தத்துவப் பொருள்: மலபரிபாகம் உள்ள ஆன்மா தன்மீது சிவமாம் தலைவிக்கு அருள் உண்டு என்பதை அவளின் அருள்நோக்கால் அறிந்து கொள்ளும்.

கைக்கிளை முற்றிற்று.

6. தெய்வத்தை மகிழ்தல்

கொளு: **அன்ன மென்னடை அரிவையைத் தந்த**
மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந்து ரைத்தது.

அன்ன நடையினைப் போன்ற நடையினை உடைய காதல் தலைவியைக் கூட்டிவைத்த தெய்வத்தை மகிழ்ந்து பாராட்டியது. (அரிவை — தலைவி)

வளைபயில் கீழ்கடல் நின்றிட
மேல்கடல் வான்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத்
தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயின் நீக்கிஇக் கெண்டைஅங்
கண்ணியைக் கொண்டுதந்த
விளைவயல் லால்விய வேன்நய
வேன்தெய்வம் மிக்கனவே. (6)

பொருள்: சங்குகள் அதிகமாக உள்ள கிழக்குக் கடலிலிருந்து கழியைப் (கம்பு) போகவிட அது சென்று மேற்குக் கடலில் போடப்பெற்ற நுகத்தடியின் துளையிலே சேர்ந்தாற்போல, தில்லையின் தொன்மையான சிவ பெருமானின் கயிலாயத் திருமலையில் உள்ள தோழியர் கூட்டத்திலிருந்து பிரித்து, கெண்டைமீன் போன்ற கண்ணினை உடைய தலைவியை நான் கண்டு கூடுவதற்கு அருள் செய்த நல்வினையாகிய தெய்வத்தை அல்லது பிற தெய்வங்களை விரும்பமாட்டேன் (என்று தலைவன் கூறியது)

Koviloor Digital Library

சொ.பொ.வி: வளை — சங்கு, வான்நுகம் — பெரிய நுகத்தடி, கழி — கம்பு, கிளை — தோழியர், கெண்டை— மீன், விளைவை — தந்த தெய்வத்தை.

தத்துவப் பொருள்: சிவத்தலைவி வழி ஞானம் கிடைப்பதற்கு அருள்செய்த தன் பதி ஞானத்தை ஆன்மா வியந்தது.

7. புணர்ச்சி துணிதல்

கொளு: கொவ்வைச் செவ்வாய்க் கொடியிடைப் பேதையைத்
தெய்வப் புணர்ச்சி செம்மல் துணிந்தது.

கொவ்வைக் கனியைப் போன்ற சிவந்த வாயினையும், கொடிபோன்ற இடையினையும் உடைய காதல் தலைவியைக் கந்தருவ மணமுறையால் கூடுவதற்குத் துணிதல். (பேதை — தலைவி, தெய்வப்புணர்ச்சி — கந்தருவமணம்)

ஏழுடை யான்பொழில் எட்டுடை
யான்புயம் என்னைமுன்ஆள்
ஊழுடை யான்புலி யூர்அன்ன
பொன்இவ் உயர்பொழில்வாய்ச்
சூழுடை ஆயத்தை நீக்கும்
விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணம் காண்அணங்(கு)
ஆய்வந்(து) அகப்பட்டதே. (7)

பொருள்: ஏழு உலகத்தையும் உடையவன், எட்டுத் திக்கையும் தன் கரங்களாகக் கொண்டவன், என்னை அடிமையாக்கிக் கொள்வதற்கு முன்னமேயே வழி வகுத்துக் கொண்டவன். மனமே அவனுடைய திருத்தலமாகிய தில்லையை ஒத்த தலைவியை நான் கூடும் வண்ணம் தோழியர்களை விட்டு நீக்குவதற்குக் காரணமாக இருந்த விதியைத் துணையாகக் கொண்டு கந்தருவ மணம் காண்பதற்கு முன்னே வருத்தத்தைத் தந்த இவள் இப்பொழுது கந்தருவ மணம் புரிவதற்கு நம்மிடையே அகப்பட்டுக் கொண்டாள்.

Koviloor Digital Library

சொ.பொ.வி: பொழில்—உலகு, புயம்—தோள், யாழுடையர் மணம் — கந்தருவர்மணம்.

தத்துவப் பொருள்: சிவத்தலைவியின் தரிசனத்தை அனுபவித்த ஆன்மா இத்தரிசனம் சிவனருளால் கிடைத்த சிவபோகம் எனக் கொண்டு சிவத்தலைவியோடு கூடி இன்பம் பெறத் துணிந்து நிற்றலாகும்.

8. கலவி உரைத்தல்

கொளு கொலைவேலவன் கொடியிடையொடு
கலவியின்பம் கட்டுரைத்தது.

வேட்டையாடுகின்ற வேலினை உடைய தலைவன் கொடியிடையை உடைய தலைவியோடு கூடிப்பெற்ற இன்பத்தைக் கூறுவது.

சொற்பால் அமுதிவள் யான்சுவை
என்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று
நானிவ ளாம்பகுதிப்
பொற்பார் அறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி(து)
ஓட்ட களவகத்தே. (8)

பொருள்: தில்லையில் உள்ளவனாகிய தூயவனாம் இறைவனின் பொதியலாகிய மலையில் கற்கள் பரந்து கிடக்கும் மலைச்சாரலில் காவல் இல்லாத களவுப் புணர்ச்சி நிகழும்பொழுது, சொல்லிடத்து உள்ளதாகிய அமுது போன்றவள் இவள். அந்த அமுதத்தைச் சுவைக்கின்ற சுவை நான் என்று சொல்லும்படி அனுபவிக்கும் அனுபவத்தை விதியாகிய தெய்வம் தந்தது. (அதாவது சுவை உடைய பொருளுக்கும் சுவைக்கும் வேறுபாடு இல்லாதது போல எனக்கும் இவளுக்கும் வேறுபாடு இல்லை என்ற நிலையைத் தந்தது) இவ்வாறு வேறுபாடு இல்லை என்றாலும் புணர்ச்சியால் வரும் இன்பம் துய்த்தற்

Koviloor Digital Library

பொருட்டு இன்று யான் என்றும் இவள் என்றும் வேறு பட்ட இவ்வழகை யாராலே அறியமுடியும்.

சொ.பொ.வி: அமுதும் சுவையும் போல் இருவர் உள்ளங்களும் ஒன்றாயதோடு தலைவியிடத்தில் தான் வேறாய் நில்லாது தலைவன் அவளோடு ஒன்றி இருத்தல் கூறப்படுகிறது. இதனை நான் இவளாம் என்ற தொடர் குறிப்பிடுகிறது. நான் பிரமமாகிறேன், அது நீயாகின்றாய் என்ற உபநிடத வாக்கியங்களை இது உணர்த்துகின்றது. இந்த அதீத நிலையை,

"அந்நிலை கரண மாகா வகையதில் அறிவடங்கி
மன்னிய வியாபிய வான்பயன் தோன்றுமன்றே"

(பா. 78)

என்று சிவப்பிரகாசம் குறிப்பிடும். "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" (பா.650) என்று திருவாசகம் குறிப்பிடும்.

தத்துவப் பொருள்: சிவபோகத்தில் அழுந்திய ஆன்மா சிவத்தலைவியோடு இரண்டறக் கலந்தமையால் விளைந்த பேரானந்தத்தை வியந்து கூறியது.

9. இருவயின் ஒத்தல்

கொளு : ஆராவின்பத் தன்பு மீதூர
வாரார் முலையை மகிழ்ந்துரைத்தது.

முடிவில்லாத இன்பத்தாலே அன்பு மிகுந்து, கச்சினாலே கட்டப்பட்ட மார்பகத்தை உடையாளை விரும்பிச் சொன்னது.

உணர்ந்தார்க்(கு) உணர்வரி யோன்தில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட. கொவ்வைச்செவ்
வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தால் புணரும் தொறும்பெரும்
போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாள்அல்குல்
போல வளர்கின்றதே. (9)

Koviloor Digital Library

பொருள்: தன்னை உணர்ந்தவர்களுக்கு உயர்வானவன், உணராதவர்களுக்கு அரியவன், சிற்றம்பலமாம் தில்லையில் உள்ளவன் ஆகிய இறைவனது குணமாகிய சிவானந்த மகிமை வெளிப்பட்டதைப்போலத் தோன்றியுள்ள, கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையும், வஞ்சிக் கொடி போன்ற இடையினையுடைய இவளுடைய தோள் களையும் கூடினால் கூடுந்தோறும் இன்பம் ஒருகாலைக்கு ஒருகால் புதிதாகத் தோன்றும். அந்த இன்பமானது சிறந்த கூந்தலை உடைய தலைவியின் அல்குலின் பெருமைக்கு உவமையில்லாதது போலப் பெருமை பெற்று விளங்கு கின்றது.

சொ.பொ.வி: போகம் — இன்பம், மணந்தாழ்புரிகுழல் — நறுமணமிக்க கூந்தல், சிவத்தை தரிசிப்பதற்கு முன் இருந்த வேட்கை, தலைப்பட்ட பின்னும் குறையாது நிற்கும். மேலும் மேலும் வளரும். வளர்கின்ற பொழுது நுகர, நுகர அப்பேரின்பம் புதிதாகத் தோன்றும். குணந் தான் வெளிப்பட்ட தலைவி என்பது இறைவனுடைய பேரின்பம். அதாவது சிவபோகம் பெற்றார்க்கு வெளிப் படுவது போன்று தலைவியின் தோற்றம் இன்பத்தைத் தந்தது என்றவாறாம்.

தத்துவப் பொருள்: சிவபோகம் (குணம்) என்பது புதிது புதிதாய் எல்லையின்றிப் பெருகி நிற்பது. அதுபோலத் தலைவியாகிய சிவத்தின் இன்பம் புதிது புதிதாய்த் தோன்றுவதாகும்.

10. கிளவி வேட்டல்

கொளு: அன்ன மன்னவள் அவயவங் கண்டு
மென்மொழி கேட்க விருப்புற்றது.

அன்னநடை உடைய தலைவியின் உறுப்பு இன்பங் களை நுகர்ந்த தலைவன் அவளுடைய சொல்லைக் கேட்பதற்கு விரும்பியது.

அளவியை யார்க்கும் அறி(வு)அரி
யோன்தில்லை அம்பலம்போல்

Koviloor Digital Library

வளவிய வான்கொங்கை வாள்தடங்
கண்நுதல் மாமதியின்
பிள(வு)இயல் மின்இடை பேரமை
தோளிது பெற்றியென்றால்
கிளவியை யென்றோ இனிக்கிள்ளை
யார்வாயிற் கேட்கின்றதே. (10)

பொருள்: தனது திருவருள் எல்லையின் செய்தியை யாவர்க்கும் அறிவதற்கு அரியவாகிய இறைவனின் தில்லையிலுள்ள சிற்றம்பலம்போலத் தலைவியின் முலைகள் வளத்தை உடையன. அவளுடைய கண்கள் கூரிய வாளை ஒக்கும். நெற்றி சந்திரனின் பிளவை ஒக்கும். இடை மின்னலை ஒக்கும். தோள்கள் பெரிய மூங்கிலை ஒக்கும். இவ்வாறு இவளுடைய உறுப்புக்கள் இத்தகைய சிறப்பு உடையவை. ஆனால், இவளுடைய கிளி போன்ற சொல்லை இனிக் கேட்க என் மனம் விரும்புகின்றதே. (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி: அளவு — திருவருள் எல்லை, வளவிய — வளம், பிளவு இயல் — பிளவுபட்ட சந்திரன் (பிறைச் சந்திரன்), கிளவி — சொல், கிள்ளை — கிளி. கிளி போன்ற சொல்லை உடைய தலைவி என்பதால் கிள்ளையார் எனப்பட்டது. ஏனைய உறுப்புகளின் பெருமையை உணர்ந்ததிலிருந்தே வாய்ச்சொல்லும் பெருமை உடையது என்ற எண்ணத்தில் வெளிப்பட்டதே கிளிமொழியார் என்ற உவமை.

தத்துவப்பொருள்: சிவமாம் தலைவியின் காட்சியில் நயன தீட்சையையும், கூடலில் பரிச தீட்சையையும் பெற்ற ஆன்மா உபதேசமாகிய தீட்சையைப் பெறுவதற்கு வேண்டி நிற்றல்.

11. நலம் புனைந்துரைத்தல்

கொளு : பொங்கி ழையைப் புனைநலம் புகழ்ந்(து)
அங்கதிர் வேலோன் அயர்வு நீங்கியது.

Koviloor Digital Library

அழகிய ஆபரணங்களை அணிந்த அழகுடைய தலைவியைப் புகழ்ந்து வேலினை உடைய தலைவன் தன் வருத்தம் நீங்கியது.

கூம்பலங் கைத்தலத்(து) அன்பர்என்(பு)
ஊடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்தில்லை
அம்பலம் பாடலரின்
தேம்பலம் சிற்றிடை ஈங்கிவள்
தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோஅளி
காள்நும் அகன்பணையே. (11)

பொருள்: வண்டுகளே, கைகுவித்து வணங்கும் அன்பர்களின் எலும்பும் உருகுமாறு திருநடம் புரிகின்ற பாம்பை அணிகலனாக ஏற்ற சிவபெருமானின் தில்லையம்பலத்தைப் பாடாதவர்களைப் போல, இளைத்த இடையை உடைய தலைவியின் கனிந்த வாய் போல மணம் வீசுகின்ற ஆம்பல் பூக்கள் நீங்கள் வாழுகின்ற மருத நிலத்தில் உளவோ, கூறுவீராக

சொ.பொ.வி: கூம்பல் — குவிதல், என்பு — எலும்பு, குனிக்கும் — குறுகும், பரம் — சிவம், தேம்பும் — மெலியும் — (இளைக்கும்) ஆம்பலம் போது — ஆம்பல்பூக்கள், அளிகாள் — வண்டுகளே, பணை — மருத நிலம்.

தத்துவப்பொருள்: உபதேச மொழியை விரும்பிக் கேட்ட ஆன்மா அதனைப் பெறாத நிலையில் சிவமாம் தலைவியின் புன்முறுவலைக் கண்டது. சிறிது வருத்தம் நீங்கி அவளது திருவாய் அழகினைப் புகழ்ந்து உரைத்தது.

12. பிரிவுணர்த்தல்

கொளு: பணிவரல் அல்குலைப் பயிர்ப்பு றுத்திப்
பிணிமலர்த் தாரோன் பிரிவுணர்த் தியது.

பாம்பின் படத்தைப் போன்ற அல்குல் தடத்தை உடைய தலைவிக்குக் கட்டப்பட்ட மாலை அணிந்த தலைவன் பிரிவுணர்த்தியது.

Koviloor Digital Library

சிந்தா மணிதென் கடல்அமிர்
தம்தில்லை யான்அருளால்
வந்தால் இகழப் படுமே
மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை
யான்அகன்(று) ஆற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோஎன்னை
வாட்டம் திருத்துவதே. . (12)

பொருள்: தெய்வ உலகச் சிந்தாமணியும், தென்கடலில் தோன்றிய அமுதமும் தில்லைக்கூத்தன் அருளால் முயற்சி யின்றி இயற்கையாகக் கிடைக்கப்பெற்றால் அது இகழப் படுமா? மானின் விழி போன்ற கண்களை உடையவளே, மயில் போன்ற சாயலை உடையவளே, தாமரையில் வாழுகின்ற அன்னம் போன்றவளே, உன்னைப் பிரிந்து ஆற்றி நான் வாழுவேனோ? சிந்தை மயக்கமுற்று என்னை ஏன் வாட்டுகிறது?

சொ.பொ.வி: சிந்தாமணி — கேட்டதைக் கொடுக்கும் தெய்வ அணிகலன், மடமான் — இளையமான், சிந்தா குலம் — மனவருத்தம்.

தத்துவப்பொருள்: சிவமாம் தலைவியைக் கூடிய ஆன்மாவை நெடுங்காலம் கூடியிருப்பதற்கு இறை பிரியாமல் பிரிக்கும். அதனை உணர்ந்த ஆன்மா பிரிவுக்கு வருந்தியது.

13. பருவரல் அறிதல்

கொளு : பிரிவுணர்ந்தீ பெண்கொடிதன்
பருவரலின் பரிசு நினைந்தது.

தலைவனின் பிரிவு உணர்ந்த பெண் கொடியாகிய தலைவி தன்னுடைய துன்பத்தினை நினைந்து வருந்தியது.

கோங்கின் பொலிஅரும்(பு) ஏய்கொங்கை
பங்கன் குறுகலர்ஊர்
தீங்கில் புகச்செற்ற கொற்றவன்
சிற்றம்பலம் அனையாள்

Koviloor Digital Library

நீங்கின் புணர்(வு) அரி(து)என்றோ
நெடி(து)இங்ங னேயிருந்தால்
ஆங்(கு)இற் பழியாம் எனவோ
அறியேன் அயர்கின்றதே. (13)

பொருள்: கோங்கின் அரும்பினை ஒத்த கொங்கை களைக் கொண்ட உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்ட வனும், பகைவர்களின் கோட்டைகளான முப்புரங்களை அழித்தவனுமாகிய சிவபெருமானின் தில்லைச் சிற்றம் பலத்தை ஒத்தவளாகிய தலைவி வருந்துவது — தலைவன் பிரிந்தால் பின் கூடுவது அரிது என்று நினைந்தோ அல்லது நீண்ட நேரம் இருவரும் கூடி இருந்தால் பிறந்த குடிக்குப் பழி ஏற்படும் என்றோ? அறியேன் (என்று தலைவன் வருந்தினான். தலைவியின் வருத்தத்தைக் கண்ட தலைவன் பாடல் இது)

சொ.பொ.வி: கோங்கு — கோங்கமரம், குறுகலர் — பகைவர், கொற்றவன் — அழித்தவன், புணர்வு—பின் கூடுதல், ஆங்குஇல், — ஆயத்திலிருந்தகுடி, தலைவனும் தலைவியும் இங்கு நெடுநேரம் கூடியிருந்தால் அங்குள்ள இல்லத்திற்குப் பழி வரும் என்ற நிலையில் வருத்தத்தைத் தந்ததோ என்பது பெறப்படுகிறது.

தத்துவப்பொருள்: பிரியேன் என்று ஆன்மா சொல்ல சிவமாகிய தலைவி ஆன்மா பிரியப் போகிறதே என்று வருந்துதல், அதாவது மலபரிபாகம் பெற்றுத் தன்னை வந்தடைந்த ஆன்மா மலவாசனையினால் மீண்டும் பிறப் பெடுக்கும்பொழுது பிரியும் நிலையை உணர்த்தியது.

14. அருட்குணம் உரைத்தல்

கொளு : கூட்டிய தெய்வத்தின் அருட்குணம்
வாட்டம் இன்மை வள்ளல் உரைத்தது.

தலைவன்—தலைவி இருவரையும் கூட்டிய தெய்வத் தின் அருளில் குறைவில்லாத் தன்மையை உரைத்தது.

Koviloor Digital Library

தேவரில் பெற்றநம் செல்வக்
கடிவடி வார்திருவே
யாவரின் பெற்றினி யார்சிதைப்
பார்இமை யாதமுக்கண்
மூவரின் பெற்றவர் சிற்றம்
பலம்அணி மொய்பொழில்வாய்ப்
பூஅரில் பெற்ற குழலிஎன்
வாடிப் புலம்புவதே. (14)

பொருள்: அழகு மிக்க தலைவியே, இறைவனால் தரப் பெற்ற நமது செல்வத் திருமணத்தைப் பிரிக்கக்கூடிய வல்லமையை யாரிடம் இருந்து யார் பெற்று பிரிப்பார்கள்? மூன்று சுடரையும் இமைக்காத மூன்று கண்களாகப் பெற்ற இறைவன் தில்லைச் சிற்றம்பலத்தே உடைய அழகிய பொழிலில் பூத்த பூக்களைக் கொண்டு கட்டப்பெற்ற மாலையை உடைய கூந்தலை உடையவளே. நீ வாடிப் புலம்புவது ஏன்?

சொ.பொ.வி: செல்வக்கடி—சிறப்புடைய கந்தருவ மணம், மூவரின்—மூன்று சுடர்களால் (சந்திரன், சூரியன், அக்னி) பொழில்—பூந்தோட்டம்.

தத்துவப்பொருள்: திருவருள் பெற்ற ஆன்மா மல வாசனையால் ஏற்பட்ட பிரிவுக்குக் கவலைப்படாது யாம் பிரிந்தோம் ஆயினும் பிரிவில்லை என்று கூறியது.

15. இடம் அணித்துக்கூறி வற்புறுத்தல்

கொளு: மடவரலை வற்புறுத்தி
இடமணித்தது என்று அவன் இயம்பியது.

மடவரலாம் தலைவியை வற்புறுத்தி உன் வாழுமிடத்திற்கு என் இடம் அண்மையில் உள்ளது என்று தலைவன் கூறியது.

வருங்குன்றம் ஒன்றுரித் தோன்தில்லை
அம்பல வன்மலயத்(து)

Koviloor Digital Library

இருங்குன்ற வாணர் இளங்கொடி
யேஇடர் எய்தல் எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள
பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம்
ஏய்க்கும் கனங்குழையே. (15)

பொருள்: யானையினைக் கொன்று அதன் தோலை அணிந்தவன் தில்லைச் சிற்றம்பலத்தான். அவனுடைய பொதிய மலையின்கண் வாழுகின்றவருடைய மகளே வருத்தத்தை விட்டு விடுவாயாக. கனத்த காதணியை உடையவளே, எங்கள் ஊரிடத்தே உள்ள பெரிய மலை போலும் மாளிகையில் பூசப் பெற்ற வெண்சாந்தின் ஒளி பரந்து வந்து உங்களூர்க் குன்றத்தில் படியும். அதனால் உங்கள் குன்றம் வெள்ளைநிறச் சட்டையைப் போர்த்தியது போல் இருக்கும். எனவே வருந்தாதே.

சொ.பொ.வி: வருங்குன்றம் — பகைவரின் யாகத்தில் தோன்றிய யானை, (நடக்கும்மலை) மலையம் — பொதிகை மலை, களபம் — சாந்து, கஞ்சுகம் — சட்டை, ஏய்க்கும் — போன்றது, கனங்குழை — கனமான காதணி.

தலைவன் மாளிகையில் அடிக்கப்பெற்ற வெள்ளை நிறம் தலைவியின் ஊரில் உள்ள குன்றில் பிரதிபலிப்பதால் தலைவியின் ஊருக்குத் தலைவனின் ஊர் பக்கத்தில் உள்ளது என்பது பெறப்படுகிறது.

தத்துவப்பொருள்: பிறப்பு என்பது பிரிதல்போல் இருந்தாலும் ஆன்மாவிற்கும் சிவத்திற்கும் பிரிவு இல்லை என்பது வலியுறுத்தப்படுகிறது.

16. ஆடிடத்து உய்த்தல்

கொளு: வன்புறையின் வற்புறுத்தி
அன்புறு மொழியை அருகு அகன்றது.

வற்புறுத்தும் வார்த்தைகளால் (வன்புறை — வற்புறுத்தல்) வற்புறுத்தி, அன்புடைய சொற்களையுடைய தலைவியிடமிருந்து நீங்கியது.

Koviloor Digital Library

தெளிவளர் வான்சிலை செங்கனி
வெண்முத்தம், திங்களின்வாய்ந்(து)
அளிவளர் வல்லிஅன் னாய்முன்னி
யாடுபின் யான்அளவா
ஒளிவளர் தில்லை ஒருவன்
கயிலை யுகுபெருந்தேன்
துளிவளர் சாரல் கரந்துங்க
னேவந்து தோன்றுவனே. (16)

பொருள்: ஒளிபொருந்திய வில்லைஒத்த புருவத்தையும், சிவந்த கொவ்வைக் கனிஒத்த இதழையும், வெண் முத்துகளைப் போன்ற பற்களையும், ஒரு முழுச் சந்திரன் போன்ற முகத்தையும் பெற்ற, கருணை மிகுந்த பூங்கொடி போன்றவளே. யான் சொல்வதை நன்கு கேட்டுத் தெளிவாயாக. உன் தோழியருடன் இப்பொழுது விளையாடுவாயாக. ஒளி வளர்கின்ற தில்லையில் எழுந்தருளியுள்ளவனின் கயிலையின் தேனை இடைவிடாது சொரிகின்ற மலைச்சாரலில் உள்ள சோலையில் மறைந்து மீண்டும் வந்து தோன்றுவேன் என்று தலைவன் கூறினான்.

சொ.பொ.வி: தெளிவளர் — ஒளிபொருந்திய, சிலை — வில், கரந்து — மறைந்து.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியை ஆன்மா உன் திருவிளையாடலைத்தான் காண நித்தலும் நடத்துக என வேண்டிக் கொண்டது.

17 அருமை அறிதல்

கொளு: சுற்றமும் இடனும் சூழலும் நோக்கி
மற்றவள் அருமை மன்னன் அறிந்தது.

தலைவியின் தோழியரையும், அவர்களுடைய வாழ் இடத்தையும், சூழலையும் கண்டு தலைவன் தலைவியின் பெருமையை அறிந்தது.

புணர்ப்போன் நிலனும் விசும்பும்
பொருப்புந்தன் பூங்கழலின்

Koviloor Digital Library

துணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல்
லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ(து) அணிகுழல் ஏழைதன்
நீர்மைஇந் நீர்மையென்றால்
புணர்ப்போ கனவோ பிறிதோ
அறியேன் புகுந்ததுவே. (17)

பொருள்: மண்ணையும், விண்ணையும் இவற்றிடையே விளங்கும் மலைகளையும் படைப்போனும், தன் திருவடித் தாமரையை எனக்குச் சூட்டுபவனும் தொன்மை உடைய வனுமாகிய கூத்தன் எழுந்தருளியுள்ள தில்லையில் உள்ள பொழிலில் பூச்சூடிய கூந்தலையுடைய தலைவியின் நிலைமை இத்தகையது என்றால் இவளை நாம் பெற்றது உள்ளபடி புணர்ச்சிதானா? அன்றிக் கனவா? வேறு எதுவோ? கிடைத்த இன்பம் எத்தகைத்து என்று அறியேனே!

சொ.பொ.வி. : புணர்ப்போன் — படைப்போன், துணர்ப்போது — கொத்துப்பூ, (திருவடியாகியபூ), இணரப் போது — கொத்துப்பூ, ஏழை — தலைவி, நீர்மை — தன்மை.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் பேரருளாகிய திறத்தையும் கூடியுள்ள தவமுனிவர்களாகிய ஞானிகளை யும் கண்டு—இத்துணை பெருமையுடைய சிவத்தலைவியின் அருள் கிடைத்தமை கண்டு ஆன்மா அதிசயித்தது.

18. பாங்கியை அறிதல்

கொளு: கடல்புரை ஆயத்துக் காதல் தோழியை
மடவரல் காட்ட மன்னன் அறிந்தது.

கடலைப்போன்ற தோழியர் கூட்டத்தே தனக்கு மிகவும் அன்புடைய தோழியைத் தலைவி காட்டத் தலைவன் அறிந்தது.

உயிரொன்(று) உளமும்ஒன்(று) ஒன்றே
சிறப்(பு)இவட்(கு) என்னோடென்னப்

Koviloor Digital Library

பயில்கின்ற சென்று செவியுற
நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிர்ஒன்று முப்புரம் செற்றவன்
தில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்தன் அருளென
லாகும் பணிமொழிக்கே. (18)

பொருள்: ஆகாயத்தின் கண்ணே பகைவரின் முப்புரமும் அழித்தவன். தில்லையில் திருவம்பலத்தே ஆடுகின்ற அருட்கூத்தை உடையவன். அவனுடைய அருள் என்று கூறும் அளவிற்குரிய சொல்லையுடைய தலைவியின் காதளவு நீண்ட கண்கள், என்னோடு இவட்கு உயிரும் உளமும், பெற்றோர்கள் செய்யும் சிறப்பும் எல்லாம் ஒன்றே என்று சொல்லுமாப்போல் (தோழியர் கூட்டத்தில்) ஒருத்தி பால் சென்றது. (எனவே அவளே உயிர்த் தோழி யாவாள்) என்றவாறு.

சொ.பொ.வி: சிறப்பு—பெற்றோர் செய்யும் சிறப்பு.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியிடம் திருவருள் நிறைந்திருத்தலைக் கண்டு ஆன்மா இவளுக்குத் தோழமை யானது திருவருளே என நினைத்தது. அத்திருவ்ளாலேயே சிவத்தலைவியை அடையலாம் என உணர்ந்தது.

இயற்கைப் புணர்ச்சி முற்றிற்று.

2.. பாங்கற் கூட்டம்

இயற்கைப் புணர்ச்சியில் தெய்வத்தின் அருளால் தலைவியைக் கூடிய தலைவன் களவுஒழுக்கத்தை விடுத்துத் தலைவியை அவள் பெற்றோர் கொடுப்பத் திருமணம் செய்து கொள்வது சிறப்புடைத்து 'என்றாலும் தலைவியை மீண்டும் தனியே பின்ஒருநாளில் சந்திக்க விரும்புவா னாகில் தமிழ் வழக்காற்றின்படி தோழனால் தலைவியைச்

Koviloor Digital Library

சந்திப்பது உண்டு. அவ்வாறு தோழன் துணையாகச் சந்திக்கும் சந்திப்பு பாங்கற் கூட்டமாகும். (பாங்கன் — தோழன்) இப்பகுதி முப்பது துறைகளை உடையது.

1. பாங்கனை நினைதல்

கொளு : எய்துதற்(கு) அருமை ஏழையில் தோன்றப்
பையுள் உற்றவன் பாங்கனை நினைந்தது.

தலைவியைச் சந்திப்பதற்கு அரிதாக இருந்தமையால் வருத்தமுற்ற தலைவன் தோழனை நினைந்தது. (பையுள் — வருத்தம்)

பூங்கனை யார்புனல் தென்புலி
யூர்புரிந்(து) அம்பலத்துள்
ஆங்கெனை யாண்டுகொண் டாடும்
பிரானடித் தாமரைக்கே
பாங்கனை யான்அன்ன பண்பனைக்
கண்(டு)இப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப்
பாவையை எய்துதற்கே. (19)

பொருள்: பூக்கள் நிரம்பியுள்ள நீராலே சூழப்பெற்ற தென்தில்லைத் தலத்தில் சிற்றம்பலத்தே எழுந்தருளியிருந்து என்னை அடிமையாக ஆண்டுகொண்டு ஞானநடம் புரியும் சிவபெருமானின் தாமரை போன்ற திருவடி களுக்குப் பாங்காய் உள்ளவன். என்னை ஒத்த இயல்பினை உடையவன் ஆகிய என் தோழனைக் கண்டு நிகழ்ந்த காதல் தன்மையைச் சொன்னால் தலைவியை எய்துவதற்கு என்னைத் தடுப்பார் யார்? ஒருவருமில்லை என்றவாறு.

சொ.பொ.வி: பூங்கனையார்புனல் — பூக்கள் நிரம்பிய நீர், இப்பரிசு — இத்தன்மை

தத்துவப்பொருள்: சிவத்தலைவியை அடைவதற்குத் திருவரு ளாகிய தோழி முதன்மை என்றாலும் அவளை ஆன்மா முதலில் உதவியாகக் கொள்ளவில்லை. ஆன்ம அறிவாகிய தோழன் முதலில் உதவி செய்திட எண்ணுவது

Koviloor Digital Library

2. பாங்கன் வினாதல்

கொளு.: கலிகெழு திரள்தோள் மெலிவது கண்ட
இன்னுயிர்ப் பாங்கன் மன்னனை வினாயது.

புகழ்கொண்ட தோள்கள் இளைத்தது கண்டு இனிதாகிய உயிர்த்தோழன் தலைவனை வினவியது.

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந்(து) எய்தியதே. (20)

பொருள்: தலைவனே, அணையினால் காக்கப் பெற்ற மிகுந்த நீரை உடைய சிற்றம்பலத்துள்ளும், என் சிந்தை யுள்ளும் ஒத்தநிலையில் தங்கியுள்ள கூத்தப் பெருமானின் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த மதுரை மாநகரில் சங்கத்திலே இருந்து ஆராய்ந்த தமிழின் துறைகளிடத்தே நு~ழைந்தாயா? அல்லது ஏழிசையின் சூழலில் புகுந்தாயா? உன்னுடைய மலைபோலும் தோள்களுக்கு மெலிவு புகுந்தது எவ்வாறு? என்று தோழன் கேட்டான்)

சொ.பொ.வி: சிறை— அணை, கூடல் — மதுரை, ஏழிசை — குரல், துத்தம், கைக்கிளை, விரளி, தாரம், உழை, இளி என்பன, துறை — தமிழின் அகப்பொருள், புறப் பொருு் துறைகள். இறைவா — தலைவனே, தடவரைத் தோள் — மலை போன்ற தோள்.

சிவபெருமான் சங்கப் புலவராய் வீற்றிருந்தார் என்பதனை,

"சீலமாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் திளைத்தார்
சாலு மேன்மையில் தலைச்சங்கப் புலவனார் தம்முள்"
(பெரியபுராணம், திருஞானசம். — பா. 667,

Koviloor Digital Library

என்று சேக்கிழார் குறிப்பிடுவார். முத்தமிழுள் ஒன்றையோ அல்லது எழிசையுள் ஒன்றையோ உணரப் புகுந்தவழியும் உடல்மெலிவு உண்டாகும் என்பது பெறப்படுகிறது.

தத்துவப் பொருள்: தலைமகனாகிய ஆன்மாவை ஆன்ம அறிவாகிய தோழன் மனத்தை வாயிலாக வைத்து சிவத்தலைவியைக் கண்டு உடல் மெலிந்ததற்குக் காரணம் வினவியது.

3. உற்றது உரைத்தல்

கொளு : மற்றவன் வினவ, உற்றது உரைத்தது.

வருத்தத்திற்குக் காரணத்தைத் தோழன் வினவ, தலைவன் தனக்கு உற்றது உரைத்தல்.

கோம்பிக்கு ஒதுங்கிமே யாமஞ்ஞை
குஞ்சரம் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படிங்கிழித்(து)
ஆங்(கு)அப் பணைமுலைக்கே
தேம்பல் துடியிடை மான்மட
நோக்கிதில் லைச்சிவன்தாள்
ஆம்பொன் தடமலர் சூடும்என்
ஆற்றல் அகற்றியதே. (21)

பொருள்: பச்சோந்திக்குப் பயந்து வெளியே வந்து இரையைத் தேடிப் பெறாத மயில், யானைக்கே தீங்கு விளைவிக்கும் பாம்பைப் பிடித்து அதன் படத்தைக் கிழித்தாற்போல, மானைப் போன்ற நோக்கினை உடைய தலைவியின் பெருத்த முலையால் மெலிந்த துடி போன்ற இடையானது தில்லைக்கண் எழுந்தருளியுள்ள இறைவ னின் திருவடித் தாமரைகளையே சூடிக் கொள்ளும் என் ஆற்றலை நீக்கிற்று.

சொ.பொ.வி.: கோம்பி—பச்சோந்தி, மஞ்ஞை—மயில், (பச்சோந்தியால் மயில் கொல்லப்படும் என்பர்) குஞ்சரம் — யானை, கோள்—கொலை, பணை—பெருத்த, தேம்பல் — மெலிந்த.

Koviloor Digital Library

பச்சோந்திக்கு அஞ்சி ஒளிந்து கிடக்கும் மயில், யானையைக் கொல்லும் பாம்பைக் கொன்றாற் போலத் தலைவியினுடைய இடையானது, புறப்பகையையும் அகப் பகையினையும் வெல்லக்கூடிய தலைவனின் ஆற்றலைக் கெடுத்தது என்பது இப்பாடலின் கருத்து.

தத்துவப்பொருள்: ஆன்மாவாகிய தலைவன் கயிலைக் குச் சென்றேன், சிவத்தலைவியைக் கண்டேன், இவ்வாறா யினேன் என்று கூறியது.

4. கழறியுரைத்தல்

கொளு: வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்
கற்பனையில் கழறியது

தலைவனை அவனுடைய உண்மையான தோழன் நெருங்கிச் சொல்லும் வார்த்தைகளால் கழறியுரைத்தது.

உளமாம் வகைநம்மை உய்யவந்(து)
ஆண்டுசென்(று) உம்பர்உய்யக்
களமாம் விடம்அமிர்(து) ஆக்கிய
தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து
நின்றொர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் றோஇன்றெம்
அண்ணல் இரங்கியதே. (22)

பொருள்: நாம் என்றும் இன்பத்தோடு இருக்கும் வகையால் வாழ்வைத் தந்து கருணையால் எம் உள்ளத்தை வலிய வந்து ஆட்கொண்டும், தேவர்கள் வாழும்படி நஞ்சைத் தன்னுடைய திருமிடற்றில் அடக்கி அமுதாக்கி யும் அருள்செய்த தில்லையில் உள்ளவனாகிய தொன்மை யுடைய இறைவனின் கயிலையில் உள்ள வளமார்ந்த மாஞ்சோலையில் — வருந்துகிறோம் என்று அறியாமல் நின்று கொடிபோலும் இடையை உடைய ஓர் இளைய மான் நோக்கியதாலோ எம் தலைவன் வலி அழிந்தது. (இது நின் பெருமைக்கு உரியது ஆகாது என்றவாறு)

Koviloor Digital Library

சொ.பொ.வி: உளமாம் வகை உய்ய — பிறப்பிலிருந்து தப்புமாறு நிலைத்த திருவருள் வாழ்வு, உம்பர் -- தேவர், களம் — கழுத்து, பொதும்பர் — சோலை, வஞ்சி — தலைவி, விழித்து — நோக்கியது.

தத்துவப்பொருள்: ஆன்ம அறிவானது (தோழன்), சரியை, கிரியை, யோகங்களில் நிலைபெற்ற ஆன்மா இவ் வண்ணம் நிலை இழத்தல் ஆகாது என்று இடித்துரைத்தல்.

5. கழற்றெதிர் மறுத்தல்

கொளு: ஆங்குயி ரன்ன பாங்கன் கழற
வளந்தரு வெற்பன் உளந்தளர்ந்து உரைத்தது.

உயிர் போன்ற தோழன் மறுத்துச் சொல்ல எல்லா வளப்பத்தையும் தருகின்ற மலைக்குத் தலைவனானவன் மனம் தளர்ந்து சொன்னது.

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத்
தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கச் கூத்தன் வடவான்
கயிலை மயிலைமன்னும்
பூணிற் பொலிகொங்கை யாவியை
ஓவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை
மென்தோள் கரும்பினையே (23)

பொருள்: விண்ணை எட்டும் அளவிற்கு விளங்குகின்ற செம்பொன்னால் ஆகிய மாளிகைகளைக் கொண்ட தில்லையின்கண் உள்ள திருச்சிற்றம்பலத்து எழுந்தருளி யிருக்கும் இறைவனுக்குரிய கயிலையின் கண் வாழுகின்ற மயிலை, அணிகள் பூண்டுள்ள கொங்கைகளை உடைய என் உயிரை, ஓவியமாகிய பொற்கொழுந்தை நீ காண்பா யாகில் இவ்வண்ணம் இடித்துரைக்க மாட்டாய். மேலும் தலைவியின் மெல்லிய தோள்களாகிய கரும்பையும் நீ காணவில்லை. (ஆதலால் இவ்வாறு சொல்கின்றாய் என்றவாறு)

Koviloor Digital Library

சொ.பொ.வி: சேண் — ஆகாயம், மாணிக்கக் கூத்தன் — மாணிக்கம் போன்ற உயர்ந்த கூத்தை உடையவன். "மாணிக்கத்கூத்தனை வன்தில்லைக் கூத்தனை" என்பார் திருமூலரும். கழறலை — இடித்துரையாய்.

6. கவன்றுரைத்தல்

கொளு: கொலைகளிற் றண்ணல் குறைநயந்(து) உரைப்பக்
கலக்கஞ்செய் பாங்கன் கவன்(று) உரைத்தது.

கொலைத் தொழில உடைய யானையைப் போன்ற தலைவன் தன்னுடைய குறையைத் தீர்க்கும்படி விரும்பிச் சொல்ல அதற்குக் கலக்கம் செய்கின்ற தோழன் கவலை யுற்று உரைத்தது.

விலங்கலைக் கால்விண்டு மேன்மேலும்
இடவிண்ணும் மண்ணும் முந்நீர்க்
கலங்கலைச் சென்றஅன் றுகலங்
காய்கமழ் கொன்றைதுன்றும்
அலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத்
தான்அருள் இல்லவர்போல்
துலங்கலைச் சென்றிதென் னோவள்ளல்
உள்ளம் துயர்கின்றதே. (24)

பொருள்: வள்ளலாகிய தலைவனே, காற்று, மலை களைப் பிளந்து மேலும் மேலும் இட .விண்ணுலகும் மண்ணுலகும் கடலால் கலங்க, நிகழும் பேருழிக் காலத்தும் கலங்காத தலைவனாகிய நீ கொன்றைப் பூமாலை அணிந்த தில்லைச் சிற்றம்பலத்தானின் அருள் கிடைக்காதவர்கள் போலக் கலங்கி உள்ளம் கவலையுற்றது என்னோய!

சொ.பொ.வி: விலங்கல்—மலை, கால்—காற்று, விண்டு — பிளந்து, இட — எறிய, முந்நீர்—கடல், அலங்கல்— மாலை, துலங்கல் — நடுங்குதல்.

தத்துவப்பொருள்: மலபரிபாகம் உள்ள ஆன்மா கலங்காத நிலையை உடையதாகும். ஆனால் இப்பொழுது

Koviloor Digital Library

கலங்குகின்றதே என்று ஆன்ம அறிவாம் தோழன் கவலை யுற்றுக் கூறியது.

7. வலியழிவுரைத்தல்

கொளு: நிறைபொறை தேற்றம் நீதியொடு சால்பு
மறியுறு நோக்கிற்கு வாடினேன் என்றது.

ஐம்புலன்களை நிலை நிறுத்தலும், பொறை உடைமை யும், தெளிவுடைமையும், நீதி வழுவாமையும், சால் புடைமையும் ஆகிய ஐந்து குணங்களையும் தலைவியின் மான்போன்ற நோக்கிற்கு இழந்தேனே (என்று தலைவன் கூறியவாறு)

தலைப்படு சால்பினுக் கும்தள
ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வார்இல்லை யாரையும்
தேற்றுவன் எத்துணையும்
கலைச்சிறு திங்கள் மிலைத்தசிற்
றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யால்அழி
வுற்று மயங்கிளேனே (25)

பொருள்: தலைமையான சால்பு அழிந்து, மனம் தளர்ந் திலேன், சித்தம் பித்தேறினான் என்று என்னோடு மாறு படுவாரும் இல்லை. மாறுபட்டால் யாவரையும் தெளி வாக்கும் வலிமையும் உடையேன். அத்தகையவனாகிய நான் இப்போது பிறையணிந்த சிற்றம்பலத்தானின் கயிலைமலையின் கண் வாழுகின்ற தலைவியின் மான் போன்ற விழியால் அறிவுஅழிந்து மயங்கிளேன் என்றவாறு.

சொ.பொ.வி: தலைப்படு — தலைமை சான்ற, மலைத்து — மாறுபட்டு, கலைச்சிறு திங்கள் — பிறைச் சந்திரன், மிலைத்த — சூடிய.

தத்துவப்பொருள்: ஆன்மா தன் நெஞ்சோடு ஒன்றி எதற்கும் கலங்காத யான் இப்பொழுது கலங்குகின்றேனே என்று உருகி உரைத்தல்.

Koviloor Digital Library

8. விதியொடு வெறுத்தல்

கொளு: கல்விமிகு பாங்கன் கழற வெள்கிச்
செல்வமிகு சிலம்பன் தெரிந்து செப்பியது.

கல்வியால் மிக்க தோழன் கழறி உரைத்திட, செல்வச் சிறப்புடைய மலைக்குரிய தலைவன் (சிலம்பு — மலை) ஆராய்ந்து கூறியது.

நல்வினை யும்நயம் தந்தின்று
வந்து நடுங்குமின்மேல்
கொல்வினை வல்லன கோங்கரும்
பாம்என்று பாங்கன் சொல்ல
வில்வினை மேருவில் வைத்தவன்
தில்லை தொழாரின்வெள்கித்
தொல்வினை யால்துய ரும்என(து)
ஆருயிர் துப்புறவே. (26)

பொருள்: அசைகின்ற மின்னலின் மேல் (இடை) உண்டாகிய கோங்கு அரும்புகளாம் தலைவியின் முலைகள் கொல்லும் தொழிலில் வல்லனவாம் என்று பாங்கன் கூற (அவனைப்) பற்றுக்கோடாக எண்ணியிருந்த யான் மேருமலையை வில்லாகக் கொண்டவனாகிய இறைவன் எழுந்தருளியுள்ள தில்லையை வணங்காதவர் களைப் போல வெட்கப்பட்டு என்னுடைய பழவினையால் வருந்தும் எனது உயிர் வலிமைப்படும் வண்ணம் யான் செய்த புண்ணியங்கள் பயன்தரவில்லையே. (என்று தலைவன் வருந்திக் கூறியவாறு)

சொ.பொ.வி: நல்வினை — புண்ணியங்கள், வில்வினை — வில்செய்யும் தொழிலை, தொழார் — வணங்காதவர், வெள்கி — வெட்கப்பட்டு, தொல்வினை — பழவினை, துப்புற — வலிமை பெற.

தத்துவப்பொருள்: ஆன்மா, ஆன்மஅறிவோடு (தோழன்) ஒன்றி நின்று, அது பயன் படாதது கண்டு நாணி, தான் செய்த நல்வினைகளாகிய பசு, புண்ணியங்கள் பயன் தந்திலவே என்று வருந்தியது.

Koviloor Digital Library

9. பாங்கன் நொந்துரைத்தல்

கொளு : இன்னுயிர்ப் பாங்கன் ஏழையை சுட்டி
நின்னது தன்மை நினைந்திலை என்றது.

இனிய உயிர் போன்ற பாங்கன் தலைவியைச் சுட்டி, தலைவனிடத்தில் உன்னுடைய உயர்ந்த தன்மையை நீ நினைக்கவில்லை என்று கூறியது.

ஆலத்தி னால்அமிர்(து) ஆக்கிய
கோன்தில்லை அம்பலம்போல்
கோலத்தி னாள்பொருட் டாக
அமிர்தம் குணங்கெடினும்
காலத்தி னால்மழை மாறினும்
மாறாக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயும் நினையா(து)
ஒழிவதென் தீவினையே. (27)

பொருள்: நஞ்சால் அமுதத்தை உண்டாக்கிய இறைவனின் சிற்றம்பலம் போலும் தலைவியின் பொருட்டு. அமிர்தம் தன் இனிமை மாறினும், மழை உரிய காலத்தில் பெய்யாது இருப்பினும், தவறாதது உன்னுடைய வள்ளன்மை. இத்தகைய உன்னுடைய பொன்போலும் பெறுதற்கரிய ஒழுக்கத்தை அறிந்த நீயும் இப்பொழுது உன் நிலையை அறியாது ஒழிகின்றது என் தீவினைப் பயனே ஆகும் (என்று பாங்கன் கூறியவாறு)

சொ.பொ.வி: ஆலம் — விடம். கவிகை — தலைவனின் வள்ளல் தன்மை குறிக்கப்பெற்றது. என் தீவினையே என்று தன்னையும் சேர்த்துப் பாங்கன் எளிவந்து இரங்கிக் கூறியது சிறப்புடைத்தாம்.

தத்துவப்பொருள்: ஆன்மா சீலத்தைக் கைவிடுவது கண்டு ஆன்மஅறிவு தான் செய்த பாவம் என்று நொந்துரைப்பது.

Koviloor Digital Library

10. இயல்இடங் கேட்டல்

கொளு: கழுமல் எய்திய காதல் தோழன்
செழுமலை நாடனைத் தெரிந்து வினாயது.

வருத்தமுற்ற தோழன், வளப்பமுடைய மலைக்குரிய தலைவனை ஆராய்ந்து கேட்டது.

நின்னுடை நீர்மையும் நீயும்இவ்
வாறு நினைத்தெருட்டும்
என்னுடை நீர்மையி(து) என்னென்ப
தேதில்லை யேர்கொன்முக்கண்
மன்னுடை மால்வரை யோமல
ரோவிசும் போசிலம்பா
என்னிடம் யாதியல் நின்னையின்
னேசெய்த ஈர்ங்கொடிக்கே. (28)

பொருள்: தலைவனே, உன்னுடைய குணமும் இவ்வாறாயிற்று. ஒரு காலத்தும் கலங்காத நீ கலங்கினை. உன்னைத் தெளிவிக்கும் என்னுடைய நிலைமையும் இது. இனி என் சொல்வது? அது இருக்க தலைவனே, உன்னை இத்தன்மைக்கு ஆக்கிய கொடி போல்வளாகிய தலைவிக் குரிய இடம் தில்லையில் எழுந்தருளியுள்ள மூன்று கண்களை உடைய இறைவனின் பெரிய கயிலைமலையோ, தாமரை மலரோ, விண்ணோ எது? அவளுடைய இலக்கணம்தான் என்ன? (என்று தோழன் தலைவனிடம் கேட்டான்)

சொ.பொ.வி: நீர்மை — தன்மை, யாதுஇயல் — என்ன இலக்கணம், என்னிடம் — ஏது இடம்.

தத்துவப் பொருள்: ஆன்ம அறிவு, ஆன்மாவிடம் சிவத்தலைவி இருக்கும் இடம் ஏது? இயல்பு யாது என வினவியது.

11. இயலிடங்கூறல்

கொளு : அழுங்கல் எய்திய ஆருயிர்ப் பாங்கற்குச்
செழுங்கதிர் வேலோன் தெரிந்து செப்பியது.

Koviloor Digital Library

தலைவனின் துன்ப நிலைக்கு வருந்திய உயிர்ப் பாங்கனுக்கு வேலைத் தாங்கிய தலைவன் ஆராய்ந்து சொன்னது.

விழியால் பிணையாம் விளங்கிய
லான்மயி லாம்மிழற்று
மொழியால் கிளியாம் முதுவா
னவர்தம் முடித்தொகைகள்
கழியாகக் கழல்தில்லைக் கூத்தன்
கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற்(கு)எழி
லாம்எங் குலதெய்வமே (29)

பொருள்: இந்திரன் முதலாகிய தேவர்களுடைய மணி முடிகள் நீங்காத திருவடியை உடைய தில்லைக் கூத்தனின் கயிலை மலையிடத்து—அருவி முத்துக்களைக் கொழிக்கும் அழகு போல கொழித்து அழகு செய்யும் சோலைக்கு, அழகு செய்யும் தலைவி விழிகளால் பெண்மானைப் போன்றவள், சாயலால் மயில் போன்றவள், கொஞ்சுகின்ற மொழியால் கிளி போன்றவள் ஆவாள் என்று தலைவன் கூறினான்.

சொ.பொ.வி.: பிணை — மான், முதவானவர் — முதன்மையான வானவர். (இந்திரன் போன்றோர்), கழியா — நீங்காத, முத்தம் — முத்துக்கள், கொழியா—கொழிக்கும்.

தத்துவப்பொருள்: ஆன்மஅறிவுக்கு தனக்குக் அருள் கிடைத்த சிவத்தலைவியின் இடத்தை ஆன்மா கூறியது.

12. வற்புறுத்தல்

கொளு : பெயர்ந்துரைத்த பெருவரை நாடனை
வயங்கெழு புகழோன் வற்புறுத் தியது.

இடம் இயல்பு சொன்ன தலைவனை, பூமியில் பொருந்திய புகழை உடைய பாங்கன் ஆற்றுப்படுத்தியது.

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத்
தில்லையெங் கூத்தப்பிரான்

Koviloor Digital Library

கயிலைச் சிலம்பில்பைம் பூம்புனம்
காக்கும் கருங்கண் செவ்வாய்
மயிலைச் சிலம்பகண்(டு) யான்போய்
வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை
நண்ணும் பளிக்றையே. (30)

பொருள்: குயில் போலும் குரலையும், சிலம்பணிந்த அடியினையுடைய பூங்கொம்பினையும், தில்லையில் நடம் புரியும் கூத்தனின் கயிலைமலைக்கண் பசிய தினைப் புனத்தைக் காக்கும் கரிய கண்களையும், சிவந்த வாயையும் உடைய மயிலை ஒத்த தலைவியைப் பூங்கொடிகள் போன்ற தோழிகள் நெருங்க அவர்களோடு விளையாடும் பளிங்குப் பாறைக்கண் நான் சென்று கண்டு வருவேன். அதுகாறும் நீ ஆற்றியிருப்பாயாக (என்று பாங்கன் வற்புறுத்தியது)

சொ.பொ.வி: பண்ணை — விளையாடும் இடம், நண்ணும் — பொருந்துகின்ற, பளிக்கரை — பளிங்கரை.

தத்துவப்பொருள்: ஆன்மஅறிவு சிவமாகிய தலைவியைக் கயிலையின் கண் சென்று கண்டு வருவேன் என்று ஆன்மாவை ஆற்றுப்படுத்தியது.

13. குறிவழிச் சேறல்

கொளு : அறைகழல் அண்ணல் அருளின வழியே
நிறையுடைப் பாங்கன் நினைவொடு சென்றது.

ஒலிக்கின்ற வீரக்கழலை உடைய தலைவன் கூறிய வழியே நிறையுடைத் தோழன் சென்றது.

கொடுங்கால் குலவரை ஏழ்ஏழ்
பொழில்எழில் குன்றும்அன்று
நடுங்கா தவனை நடுங்க
நுடங்கு நடுவுடைய

Koviloor Digital Library

விடங்கால் அயிற்கண்ணி மேவுங்கொ
லாம்தில்லை ஈசன்வெற்பில்
தடங்கார் தருபெரு வான்பொழில்
நீழலம் தண்புனத்தே.

பொருள்: கொடிய காற்றாலே மலைகள் ஏழும், பூமிகள் ஏழும் அழகு அழிகின்ற ஊழிக் காலத்தும் நடுங்காத தலைவனை நடுங்கவைத்த — அசைகின்ற இடைய உடைய வேல்போன்ற கண்களை உடைய தலைவி. தில்லை இறைவனின் மலையில் நிழலுடைய குளிர்ந்த சோலையிடத்தே நிற்பாளோ (என்ற ஐயத்துடன் பாங்கன் சென்றான்)

சொ.பொ.வி.: கால் — காற்று, பொழில் — பூமி, அயில் — வேல், நுடங்கு — அசைகின்ற, வெற்பு — மலை, தடங்கார் — பெரியமுகில், தண் — குளிர்ச்சி.

தத்துவப் பொருள்: ஆன்ம அறிவு, ஆன்மா கூறியவழி சிவத்தலைவியைக் காண இயலுமா என்ற ஐயத்துடன் சென்றது.

14. குறிவழிக் காண்டல்

கொளு: குளிர்வரை நாடன் குறிவழிச் சென்று
தளிர்புரை மெல்லடித் தையலைக் கண்டது.

குளிர்ந்த மலைமேல் உள்ள நாட்டினை உடைய தலைவன் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தளிரை (இலையை) ஒத்த மென்மையான அடிகளை உடைய தலைவியை பாங்கன் கண்டது.

வடிக்கண் இவைவஞ்சி அஞ்சும்
இடைஇது வாய்பவளம்
துடிக்கின்ற வாவெற்பன் சொற்பரி
சேயான் தொடர்ந்துவிடா
அடிச்சந்த மாமலர் அண்ணல்விண்
ணோர்வணங்கு அம்பலம்போல்

Koviloor Digital Library

படிச்சந் தரும்இது வேஇவ
ளேஅப் பணிமொழியே. (32)

பொருள்: தலைவன் கூறிய கூர்மையான கண்களும் இவை. வஞ்சிக் கொடியை அஞ்சச் செய்யும் இடை இதுவே. பவளம் போன்ற வாயானது துடிக்கின்றது. அதுவும் தலைவன் கூறியபடியே உள்ளது. அதனால் நான் பற்றி விடமாட்டாதாகிய திருவடித் தாமரை மலரைக் கொண்ட இறைவனுடைய — தேவர்கள் வந்து வணங்கும் சிற்றம்பலம் போலும் இடமும் இதுவே. அழகிய சொற்களை உடைய தலைவியும் இவளே.

சொ.பொ.வி.: வடி — கூர்மை, வஞ்சி — கொடி, சந்த மாமலர் — அழகானமலர்.

தத்துவப் பொருள்: ஆன்மா அறிவித்த வண்ணம் ஆன்மஅறிவு சிவத்தலைவியைக் கண்டு ஆன்மா கூறிய இயலும் இடமும் இதுவே எனத் தெளிதலாம்.

15. தலைவனை வியந்துரைத்தல்

கொளு : நயந்த உருவும் நலனும் கண்டு
வியந்து அவனையே மிகுத்துரைத்தது.

தலைவன் விரும்பிய உருவத்தையும் நலத்தையும் கண்டு வியந்து தலைவனைப் பெருமையுடன் கூறியது.

குவளைக் களத்(து)அம் பலவன்
குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின்(று)
ஆண்ட அவயவத்தின்
இவளைக்கண்(டு) இங்குநின்(று) அங்குவந்(து)
அத்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ண லேதிண்ணி
யான்இக் கடலிடத்தே. (33)

பொருள்: குவளைப்பூ போலும் கழுத்தினை உடைய அம்பலவனின் (இறைவனின்) திருவடிபோலும் செந் தாமரைப் பூவின் மேலிருக்கும் திருமகளை அடக்கி ஆண்ட

Koviloor Digital Library

அவயவங்களுடைய தலைவியைக் கண்டும், இங்கிருந்து பிரிந்து தன்னுடைய நாட்டிற்கு வந்தும் நினைவோடு தலைவியைப் பற்றிக் கூறிய யானை போன்ற அண்ணலே இவ்வுலகத்து வலிமை உடையவனாம். (திண்ணியனாம்)

சொ.பொ.வி.: களம் — கண்டம், கமலத்தவள் — தாமரை மேலுள்ள திருமகள், பயங்கரமாக — திருமகளை அடிமை கொண்டதை மேம்படுத்தும் சொல்லாக இருக்கிறது. கவளக்களிறு — தான் விரும்பும் கவளத்தைப் பெற்ற யானை — இங்கு தலைவியை விரும்பிப் பெற்ற தலைவனைக் குறித்தது,

தத்துவப் பொருள்: ஆன்மஅறிவு, ஆன்மாவை வியந்து பாராட்டியது. அதாவது சிவத்தைக் கண்டும் மலவாசனை யால் மீண்டும் பிறந்த ஆன்மாவைப் பாராட்டியது.

16. கண்டமை கூறல்

கொளு: பிடிமிசை வைத்துப் பேதையது நிலைமை
அடுதிறல் அண்ணற்கு அறிய உரைத்தது.

ஒரு பெண் யானையை (பிடி) மையமாக வைத்துக் தலைவியின் நிலையைக் கொல்லும் வினையினை உடைய தலைவனுக்குக் கூறியது.

பணந்தாழ் அரவரைச் சிற்றம்
பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங்(கு) அகன்ற பொருகரி
யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண்
பரப்பி மடிப்பிடிவாய்
நிணந்தாழ் சுடரிலை வேல்கண்
டேன்ஒன்று நின்றதுவே (34)

பொருள்: வேலின் முனையில் தசை தங்கியுள்ள இலை வடிவான வேலை ஏந்திய தலைவனே. படத்தைக்கொண்ட பாம்புகளை அணிந்த, திரு இடையினை உடைய சிற்றம்பல நாதனின் கயிலைமலையின் கண் தன்னைக் கூடிப்பிரிந்த

Koviloor Digital Library

களிற்றுயானையை எண்ணி எதிர்நோக்கி தினைப் புனத்திற்கு அருகே கூர்மையான கண்களை உடைய பெண் யானை ஒன்று நின்றது, அதனைக் கண்டேன் (என்று பாங்கன் கூறினான்)

சொ.பொ.வி.: தலைவனை நோக்கிக் காத்திருந்த தலைவியைக் களிற்றுயானை (ஆண்யானை)யை நோக்கி (பிடி) பெண்யானை காத்திருந்த பொருளில் கூறப் பெற்றுள்ளது. பணம் — படம், அரவரை — இடை, கரி — ஆண்யானை, உன்னி — நினைந்து, மடப்பிடி — மடமைத்தன்மை உடைய பெண்யானை, நிணம் — தசை.

தத்துவப் பொருள்: சிவத்தலைவி ஆன்மாவின் வரவு நோக்கி, ஞானபூமியில் நிற்கின்றது என்று ஆன்மாவிற்கு ஆதரவாக ஆன்மஅறிவு அறிவித்தது.

17. செவ்வி செப்பல்

கொளு: அற்புதன் கைலை மற்பொலி சிலம்பற்கு
அவ்வுருக் கண்டவன் செவ்வி செப்பியது.

அழகிய மலைநாட்டை உடைய தலைவனுக்குக் கயிலைப் பொழிலில் அவன் சொன்ன உருவோடு பொருந்திய தலைவியைக் கண்டு வந்த பாங்கினைத் தோழன் கூறியது.

கயலுள வேகம லத்தலர்
மீது கனிபவளத்(து)
அயலுள வேமுத்தம் ஒத்த
நிரைஅரன் அம்பலத்தின்
இயலுள வேஇணைச் செப்புவெற்
பாநின(து) ஈர்ங்கொடிமேல்
புயலுளவே மலர்சூழ்ந்து இருள்
தூங்கிப் புரள்வனவே. (35)

பொருள்: வெற்பனே, உன்னுடைய தலைவியாகிய கொடியின்மீது தாமரை மலர் (முகம்), அதன்மீது கயல் மீன்கள் (கண்கள்), உள. முற்றிய பவளமலர் (இதழ்), அதில்

Koviloor Digital Library

வரிசையான முத்துக்கள் (பற்கள்) உள. சிவபெருமான் வீற்றிருக்கின்ற பொன்னம்பலத்தின் இயல்பைக் கொண்ட இரண்டாகிய செப்புக்கள் உள (முலைகள்). மாலைகள் அணியப் பெற்ற இருள் போன்ற புரள்வனவாகிய மேகங்கள் (கூந்தல்) உள. இங்ஙனம் கூறிய அனைத்தும் யான் கண்டது நீ கூறிய உருவமே ஆகும் (என்று பாங்கன் கூறியது)

சொ.பொ.வி.: கயல் — கண்கள், கமலம் — தாமரை, முத்தம்—முத்து, செப்பு—கிண்ணம், தன்னைச் சார்ந்த வரைப் போகவிடாத திருஅம்பலம் போல மார்பகங்கள் காட்சி அளித்ததால் பொன்னம்பலம் உவமையாயிற்று. புயல் — மேகம், தூங்கி — செறிந்த

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் நிலைமையை ஆன்ம அறிவானது ஆன்மாவிற்குக் கூறியது.

18. அவ்விடத்து ஏகல்

கொளு: அரிவையது நிலைமை அறிந்தவன் உரைப்ப
எரிகதிர் வேலோன் ஏகியது.

தலைவியின் நிலையை அறிந்து வந்து தோழன் சொல்ல, ஒளிபொருந்திய தேரை உடைய தலைவன், தலைவியைக் காண அவ்விடத்திற்குச் சென்றது.

எயிற்குலம் மூன்(று)இரும் தீஎய்த
எய்தவன் தில்லையொத்துக்
குயிற்குலம் கொண்டுதொண் டைக்கனி
வாய்க்குளிர் முத்தநிரைத்(து)
அயிற்குல வேல்கம லத்திற்
கிடத்தி அனநடக்கும்
மயிற்குலம் கண்டதுண் டேல்அது
என்னுடை மன்னுயிரே. (36)

பொருள்: மூன்று கோட்டைகளையும் தீப்பற்றுமாறு அம்பு எய்த சிவனது தில்லை நகரை ஒத்து — குயிற்கூட்டம்

Koviloor Digital Library

போலும் இனிமையான குரலைக் கொண்டு, கொவ்வைக் கனியிடத்து முத்துக்களை வரிசையாகப் பதிந்து கொண்டு, கூரிய வேலைச் செந்தாமரை மலரில் குறுக்காகக் கிடத்தி அன்னம் போலும் நடக்கும் மயில்குலம் உண்டாயின் அதனைக் கண்டபின்னர் எனதுயிர் நிற்கும்.

சொ.பொ.வி: குயில், கோவைக்கனி, முத்து, வேல், தாமரை, அன்னம், மயில் ஆகியவை தலைவியின் குரல், இதழ், பல், கண்கள், முகம், நடை, அழகு இவற்றை உணர்த்தும் உருவகங்களாம். முத்தம் — பல், அயில் — கூர்மை, அனம் — அன்னம்.

தத்துவப்பொருள்: ஆன்மஅறிவு கழன்றுபோக ஆன்மா வானது முன்காட்சி அனுபவத்தால் சிவத்தலைவியைக் காண்பதற்குச் சென்ற தன்மையாம்.

19. மின்னிடை மெலிதல்

கொளு: மன்னனை நினைந்து மின்னிடை மெலிந்தது.

தலைவனை நினைத்து மின்னலைப் போன்ற இடையை உடைய தலைவி வாடியது.

ஆவியன் னாய்கவ லேல்அக
லேம்என்(று) அளித்தொளித்த
ஆவியன் னார்மிக் கவாவின
ராய்க்கெழு மற்(கு)அழிவுற்(று)
ஆவியன் னார்மன்னி ஆடிடம்
சேர்வர்கொல் அம்பலத்தெம்
ஆவியன் னான்பயி லுங்கயி
லாயத்து அருவரையே. (37)

பொருள்: என் உயிர் போன்றவளே, கவலைப்படதே, உன்னைவிட்டு அகலேன், மீண்டும் வருவேன் என்று அருள் செய்து பிரிந்து போன என்னுடைய உயிர்போன்ற தலைவர் மிக்க வேட்கை உடையவராய், புணர்ச்சியின் காரணமாக உள்ளம் வருந்துதலால் முன்வு கூடிய இட மறியாது அம்பலத்தில் என் உயிர் போன்ற கூத்தப்

Koviloor Digital Library

பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலாயத்து மலைச் சாரலில்: என்னுடைய உயிர்த் தோழிகள் விளை யாடுகின்ற இடத்திற்கு வந்துவிடுவாரோ (எனத் தலைவி ஐயுற்றாள்)

சொ.பொ.வி.: கவலேல் — கவலையுறாதே, அகலேம் — பிரியேன், அளித்து — அருள்செய்த, ஒளித்த — பிரிந்த, அவாவுடையர் — வேட்கைஉடையவர், கெழுமற்கு — புணர்ச்சிக்கு (கூடுவதற்கு), அருவரை — மலைச்சாரல்.

தத்துவப்பொருள்: வாசனா மலத்தால் சிறிது அகன்ற ஆன்மா திரும்பவும் வருமோ என்று சிவத்தலைவி நினைத்தது.

20. பொழில் கண்டு மகிழ்தல்

கொளு: மணங்கமழ் பொழிலின் வடிவுகண்(டு)
அணங்கென நினைந்(து) அயர்வு நீங்கியது.

நறுமணம் கமழ்கின்ற சோலையினைக் கண்டு அதனைத் தலைவியாக நினைத்துத் தலைவன் வருத்தம் நீங்கியது.

காம்பிணை யால்களி மாமயி
லால்கதிர் மாமணியால்
வாம்பிணை யால்வல்லி ஒல்குத
லான்மன்னும் அம்பலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன்
கயிலைப் பயில்புனமும்
தேம்பிணை வார்குழ லாளெனத்
தோன்றும்என் சிந்தனைக்கே (38)

பொருள்: பாம்புகளைக் காதணியாகக் கொண்ட இறைவனின் கயிலைமலையைச் சார்ந்த சோலையானது, மூங்கில்கள் இணைந்து நின்று தோள்களை ஒத்தும், களி மயில்களால் சாயலை ஒத்தும், ஒளியுடைய நீலமணிகளால் கூந்தலை ஒத்தும், இளமான் நோக்கத்தால் விழிகளை ஒத்தும், கொடிகளை உடையதால் இடையினை ஒத்தும்

Koviloor Digital Library

மாலைசூடிய நீண்ட கூந்தலை உடைய தலைவியை ஒத்துக் காட்சி அளித்தது (என்று தலைவன் மகிழ்ந்தான்)

சொ.பொ.வி.: காம்பிணை — இருமூங்கில், வாம்பிணை — தாவுகின்றமான், வல்லி — கொடி, ஒல்குதல் — துவளுதல், தேம்பினை — தேன்பொருந்திய மாலை.

தத்துவப்பொருள்: ஆன்மா மலவரிபாகத்தால் கிடைத்த சிவஞானத்தால் எதனையும் சிவமாகத் தரிசித்தது.

21. உயிரென வியத்தல்

கொளு: வெறியுறு பொழிலின் வியன்பொ தும்பரின்
நெறியுறு குழலி நிலைமை கண்டது.

மணமிக்க சோலையின் அழகிய பொதும்பரில் (இடத்து) சுருண்ட கூந்தலை உடைய தலைவியைக் கண்டது.

நேயத்த தாய்நென்னல் என்னைப்
புணர்ந்துநெஞ் சம்நெகப்போய்
ஆயத்த தாய்அமிழ் தாய்அணங்
காய்அரன் அம்பலம்போல்
தேயத்த தாய்என்றன் சிந்தைய
தாய்த்தெரி யிற்பெரிது
மாயத்த தாகி இதோவந்து
நின்ற(து)என் மன்னுயிரே. (39)

பொருள்: அன்புடையதாய், நேற்று என்னோடு கூடிப் பின்பு மனநெகிழ்ச்சி இல்லாதது போல என்னுடைய மனத்தை உடைந்துபோகும் வண்ணம் செய்து என்னை விட்டு நீங்கித் தோழியர் கூட்டத்தின் கண்ணதாய்ச் சேர்ந்த — அமிழ்தம் போல மிக இனிப்பதாய், பிரிவால் துன்பம் தருவதாய், தில்லையம்பலம் போல் ஒளியை உடையதாய் என் மனத்தகத்ததாய் ஆராயும் பொழுது பெரிய மயக்கம் உடையதாய் வந்து நிற்கின்றதே என் உயர் (ஆகிய தலைவி என்றான்)

Koviloor Digital Library

சொ.பொ.வி: நேயம் — அன்பு, நென்னல் — நேற்று, நெஞ்சுநெக — மனநெகிழ்ச்சி, தேயத்ததாய் — ஒளி பொருந்தியதாய், சிந்தையதாய் — மனத்ததாய், மாயத்ததாய் — மயக்கமுடையதாய்.

தத்துவப்பொருள்: பேரின்பமே திருவருள் என்று துணிந்து கருணையால் இங்ஙனம் வந்து நிற்கின்றதே என்று சிவத்தலைவியை ஆன்மா வியத்தல்.

22. தளர்வு அகன்று உரைத்தல்

கொளு: பனிமதி நுதலியைப் பைம்பொ ழிலிடைத்
தனிநிலை கண்டு தளர்வகன்(று) உரைத்தது.

குளிர்ந்த சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய தலைவி, அழகிய சோலையிடத்துத் தனியே நிற்றல் கண்டு தளர்வு அகன்று தலைவன் உரைத்தது.

தாதிவர் போதுகொய் யார்தைய
லார்அங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந்(து) அடியார்
சுனைப்புனல் ஆடல்செய்யார்
போதிவர் கற்பக நாடுபுல்
லென்னத்தம் பொன்அடிப்பாய்
யாதிவர் மாதவம் அம்பலத்
தான்மலை எய்துதற்கே. (40)

பொருள்: மகரந்தத் தாதுக்களை உடைய பூக்களைப் பறிக்கவில்லை. தோழியரோடு கூடி நின்று பந்தாடவில்லை. சுனையிலுள்ள புனலில் ஆடவில்லை. தாது மிக்குடைய கற்பக மலர்களை உடைய தேவருலகம் பொலிவு அழிய நிலந்தோயாத தன்னுடைய திருவடியை நிலத்தில் ஊன்றி ஆடுகின்ற அம்பலவாணனாம் இறைவனின் கயிலை மலையை அடைவதற்குத் தலைவி செய்யக் கருதுகின்ற பெரிய தவம் யாது? (என்று தலைவன் நினைத்தான்)

சொ.பொ.வி.: பூக்கொய்தல் முதலிய தொழில்களை விட்டு விட்டு மனத்தால் தன்னை நினைத்து கயிலை

Koviloor Digital Library

மலையில் நிற்பதால் தலைவியைத் தலைவன் யாது இவள் செய்த மாதவம் என்கின்றான். தாது — மகரந்தப்பொடி, சோதி — ஒளியை உடைய.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவமாவது எந்த இடத்திலும் சார்ந்திராது, ஞானபூமியில் நிலைத்து நிற்றலைக் கண்டு வியத்தது.

23. மொழிபெற வருந்துதல்

கொளு: கூடற்(கு) அரிதென வாடி யுரைத்தது.

தலைவியைக் கூடுவதற்கு அரிதென்று தலைவன் வருந்தி உரைத்தது.

காவிநின்(று) ஏர்தரு கண்டர்வண்
    தில்லைக்கண் ணார்கமலத்
தேவிஎன் றேஐயம் சென்ற(து)அன்
    றேஅறி யச்சிறிது
மாவியன் றன்னமென் நோக்கிநின்
    வாய்திற வாவிடின்என்
ஆவியன் றேஅமிழ் தேஅணங்
    கேஇன்(று) அழிகின்றதே. (41)

பொருள்: நீலமலர் போன்று ஒளி பொருந்திய திருமிடற்றை உடையவருடைய தில்லைக்கண் உள்ள தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளோ என்ற ஐயம் தோன்றுகியது. எனவே ஐயத்தைப் போக்க மானின் பார்வையுடைய தலைவியே உன் வாய் திறந்து ஒரு சொல்லாகினும் சொல்வாயாக. அவ்வாறு சொல்லவில்லை எனின் என் உயிர் நில்லாது. எனக்கு இன்பமும், துன்பமும் ஒரு நேரத்திலேயே தருவதால் அமிழ்தத்தையும், வருத்தும் தெய்வத்தையும் ஒப்பாய். இப்பொழுது என் உயிர் அழிகின்றதே (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: காவி — நீலமலர், கமலத் தேவி — திருமகள்

தத்துவப்பொருள்: பிறவியால் தளர்ச்சியுற்ற ஆன்மா மேலும் சிவஞான உபதேசம் பெற வேண்டுதல்.

Koviloor Digital Library

24. நாணிக்கண் புதைத்தல்

கொளு: ஆயிடைத் தனிநின்று ஆற்றா(து) அழிந்து
வேயுடைத் தோளியோர் மென்கொடி மறைந்தது.

தலைவன் வருணித்ததைக் கேட்டுத் தலைவி தனியே நின்று ஆற்றாது மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவள் கொடிகளுக்கிடையே நாணி மறைதல்.

அகலிடம் தாவிய வானோன்
அறிந்திறைஞ்(சு) அம்பலத்தின்
இகலிடம் தாவிடை ஈசன்
தொழாரின்இன் னற்கிடமாய்
உகலிடம் தான்சென்(று) எனதுயிர்
நையா வகையொதுங்கப்
புகலிடம் தாபொழில் வாய்எழில்
வாய்தரு பூங்கொடியே. (42)

பொருள்: மூன்று உலகத்தையும் இரண்டடியால் தாவி அளந்த திருமால் தான் வணங்கக் கூடிய இடம் இதுதான் என்றறிந்து வணங்கிய தில்லை அம்பலத்தில் உள்ளவன், பகையை உடைய இடங்களில் சென்று பாயும் இடப வாகனத்தை உடையவன் ஆகிய சிவபெருமானைத் தொழாதவரைப் போல — தானே அழியும் அளவிற்குத் துன்பம் அடைந்த என்உயிர் வருந்தாத வண்ணம் சோலை யில் உள்ள பூங்கொடியே யான் ஒதுங்குவதற்குப் புகலிடம் தருவாயாக (என்று தலைவி ஒரு கொடியைப் பார்த்துக் கூறியவாறு)

சொ.பொ.வி.: அகலிடம் தாவிய வானோன் — இரண்டியால் உலகைத்தாவிய திருமால் — சிவபெருமா னின் வாகனமாகிய விடையாகவும் புராணங்கள் கூறுவது உண்டு. இங்கு ஈரடியால் அளந்ததும், வாகனமாக அமைந்ததும் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் கூறப் பெற்றிருப்பது சிறப்பு. அகலிடம்—பூமி, வானோன்—திருமால், உகல் இடம்தான் — அழியும் நிலையைத் தான் அடைந்து.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மா புகழ்ந்தது போற்றியது கண்டுசிவத்தலைவி நாணியதுபோல் ஒருவழி ஒதுங்கியது.

25. கண்புதைக்க வருந்துதல்

கொளு: வேல்தரும் கண்ணினை மிளிர்வன அன்றுநின்
கூற்றரு மேனியே கூற்றெனக்(கு) என்றது.

வேல்போன்ற கண்கள் இரண்டும் உலவுவன அல்ல, என்னைக் கொல்லுவதற்குரிய உருமாக வந்தன எனத் தலைவன் தலைவியின் கண்களைப் பற்றிக் கூறியது.

தாழச்செய் தார்முடி தன்னடிக்
கீழ்வைத் தவரைவிண்ணோர்
சூழச்செய் தான்அம் பலங்கை
தொழாரின்உள் ளந்துளங்கப்
போழச்செய் யாமல்வை வேற்கண்
புதைத்துப்பொன் னேஎன்னைநீ
வாழச்செய் தாய்சுற்று முற்றும்
புதைநின்னை வாணுதலே. (43)

பொருள்: தன்னைத் தாழ்ந்தவர்களுடைய முடிகளைத் தன் திருவடிக்கீழ் வைத்து, அவர்களைத் தேவர்கள் என்றும் சூழ்ந்திருக்குமாறு செய்த சிவபெருமானது அம்பலத்தைத் தொழாதவர்களைப் போல என் நெஞ்சத்தை நடுங்க வைக்கும் கூறிய கண்களை உடைய பெண்ணே. நீ புதைத்து (கண்ணைக் கையால் மறைத்து) வாழவைத்தாய், ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே, மேலும் நான் வருந்தாத வண்ணம் உன் மேனி முழுவதையும் மறைப்பா யாக (எனத் தலைவன் கூறியது)

சொ.பொ.வி.: விண்ணோர் — தேவர்கள், துளங்க — கலங்க, வாள்நுதல் — ஒளி பொருந்திய நெற்றி.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி அருட்குணத்தை மறைக்க ஆன்மா அச்செயலுக்கு ஆற்றாது வருந்தியது.

Koviloor Digital Library

26. நாண்விட வருந்தல்

கொளு: ஆங்ஙனம் கண்(டு) ஆற்றா ளாகி
நீங்கின நாணொடு நேரிழை நின்றது.

தலைவன் கூறிய வருத்தத்தைக் கண்டு ஆற்றாத தலைவி நாணம் நீங்கி நின்றது.

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக்
கூத்தினை ஏத்தலர்போல்
வருநாள் பிறவற்க வாழியரோ
மற்றென் கண்மணிபோன்(று)
ஒருநாள் பிரியா(து) உயிரின்
பழகியுடன் வளர்ந்த
அருநாண் அளிய அழல்சேர்
மெழுகொத்(து) அழிகின்றதே. (44)

பொருள்: நல்ல நிறம் பொருந்திய பூக்களை உடைய சோலைகள் சூழ்ந்த தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவனை, வணங்காதவர்களைப் போல எனக்கு இனி வரக்கூடிய நாட்கள் பிறவாது ஒழிக என்று கூறி மேலும் என் கண்ணுள் விளங்கும் மணியைப் போன்று உயிரோடு ஒன்றிப் பழகி ஒருபொழுதும் என்னைவிட்டுப் பிரியா திருக்கிற என்னுடன் வளர்ந்த அருமையான நாணமாவது தீயினைச் சேர்ந்த மெழுகுபோல உருகுகிறது (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: வழிபடாதாருடைய நாள்கள் துன்பத்திற் குரிய நாள்கள் ஆகும். அத்தகைய நாள்கள் எனக்கு வாராது ஒழிக என்றும் கூறிய தலைவி பின்னும் தன் னுடைய நாண் அழிந்து கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டாள். குரு — நிறம், ஏத்தலர் — வணங்காதவர், நாணம் பெண்களுக்கு இயல்பாய் உடன்இருந்து வருகின்றது என்பது குறிக்கப் பெறுகிறது.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி தன்னை விட்டு என்றும் நீங்காது இருக்கின்ற இன்ப அருளானது நெகிழ்தலைக் குறிப்பிடுகிறது.

Koviloor Digital Library

27. மருங்கணைதல்

கொளு: ஒளிதிகழ் வார்குழல் அளிகுலம் விலக்கிக்
கருங்களிற் றண்ணல் மருங்க ணைந்தது.

ஒளி பொருந்திய கருமையான கூந்தலி லிருந்த வண்டுகளை ஓட்டுவதுபோலக் கருமையான யானையை யுடைய தலைவன் தலைவியின் அருகில் சென்றது.

கோலத் தனிக்கொம்பர் உம்பர்புக்(கு)
அஃதே குறைப்பவர்தம்
சீலத் தனகொங்கை தேற்றகி
லேம்சிவன் தில்லையன்னாள்
நூலொத்த நேரிடை நொய்ம்மையெண்
ணாதுநுண் தேன்நசையால்
சாலத் தகாதுகண் டீர்வண்டு
காள்கொண்டை சார்வதுவே. (45)

பொருள்: அழகிய நுனிக்கிளையின் உச்சியில் இருந்து கொண்டு அடிமரத்தை வெட்டுபவனுடைய செய்தியை உடையது மார்பில் உள்ள முலைகள்.இச்செயலை நாம் அறிவோம். அதனால் வண்டுகளே சிவபெருமான் எழுந் தருளியுள்ள தில்லையை ஒத்தவளுடைய நூல் போன்ற இடையின் அருமையை அறியாமல் நீவீர் தேனை நுகரும் விருப்பத்தால் அவளுடைய கூந்தலில் மொய்ப்பது தகாது (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: நுனியிலிருந்து அடிமரத்தை வெட்டு பவனுடைய செய்திபோல மார்பிலிருந்த கொங்கை களானவை இடையை முறிக்கப் பார்க்கின்றன என்று இடையின் சிறுமையைக் கூறியது. அதனை வலியுறுத்தும் வண்ணம் வண்டுகளும் கூந்தலிலிருந்து இடைமுறியும் பாரத்தை ஏற்றக்கூடாது என்று இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது. கோலம் — அழகு, கொம்பர் — கொம்பு, சீலம்— தன்மை, நேரிடை — நுணுகிய இடை, நொய்ம்மை — மென்மை.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் கருணையினை எண்ணி, ஆன்மாவானது அதைச் சார்வதற்கு அருகில் சென்றது.

28. இன்றியமையாமை கூறல்

கொளு: வெற்றி வேலவன் மெல்லியல் தனக்(கு)
இன்றி யமையாமை எடுத்து ரைத்தது.

வெற்றி வேலினை உடைய தலைவன் தலைவியைத் தவிரத் தனக்கு இன்றியமையாதது எதுவுமில்லை என்று எடுத்துரைத்தது.

நீங்கரும் பொற்கழல் சிற்றம்
பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமும்
எய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்அமிழ் துஞ்செழுந்
தேனும் பொதிந்துசெப்பும்
கோங்கரும் பும்தொலைத்(து) என்னையும்
ஆட்கொண்ட கொங்கைகளே. (46)

பொருள்: திருவருள் என்றும் பிரியாது இருக்கின்ற திருவடிகளை உடைய இறைவனின் படைப்புக்கு உட்பட்ட விண்ணுலகமும், கடலால் சூழப்பட்ட மண்ணுலகமும் ஒரு சேர வந்து கிடைக்கப் பெறுவதாயினும் கரும்புச் சாற்றையும், அமிழ்தத்தையும், முதிர்ந்த தேனையும் பொதிந்து வைத்த செப்பினையும், கோங்கின் அரும்புகளையும் வென்று என்னையும் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட கொங்கைகளை நான் மறவேன் (என்று தலைவன் கூறியது)

சொ.பொ.வி.: விசும்பு — விண்ணுலகம், வாங்கு — சூழப்பட்ட.

தத்துவப்பொருள்: முத்தியைப் பெறுவதற்குரிய அட்டமாசித்திகள் அனைத்தும் தாமே வந்து பொருந்தினாலும் சிவத்தின் பெருமையை என்றும் இகழேன் என்று ஆன்மா கூறியது.

Koviloor Digital Library

29. ஆயத்து உய்த்தல்

கொளு: தேங்கமழ் சிலம்பன் பாங்கிற் கூட்டியது.

மணம் நிறைந்த மாலையினை உடைய தலைவன் தலைவியைத் தோழியர் கூட்டத்திடைக் கொண்டுபோய் விட்டது.

சூளா மணியும்பர்க்(கு) ஆயவன்
சூழ்பொழில் தில்லையன்னாய்க்(கு)
ஆளா ஒழிந்ததென் ஆருயிர்
ஆரமிழ் தேஅணங்கே
தோளா மணியே பிணையே
பலசொல்லி என்னைதுன்னும்
நாளார் மலர்ப்பொழில் வாய்எழில்
ஆயம் நணுகுகவே. (47)

பொருள்: தேவர்களின் முடியணியாய் விளங்குகின்ற இறைவன் எழுந்தருளியுள்ள தில்லையை ஒத்த உனக்கு எனது அரிய உயிர் அடிமையாயிற்று. என் சொல்லி என்ன? நிறைந்த அமிழ்தே, அணங்கே, துளைப்படாத மணியே, பெண்மானே, நீ பலகாலும் விளையாடுகின்ற பூக்களை உடைய சோலையிடத்து உன்னுடைய தோழியர் கூட்டத்துள் சென்று சேர்வாயாக (என்று தலைவன் தலைவியை விடுத்தது)

சொ.பொ.வி.: ஆளாய் — அடிமையாய், தோளா — துளைக்கப்படாத, துன்னும் — நிறைந்த.

தத்துவப்பொருள்: தனக்கு இன்பத்தைத் தரும் சிவம் உண்மையான அடியார் கூட்டத்துள் கலந்திருக்க ஆன்மா வேண்டுவது.

30. நின்று வருந்தல்

கொளு: பாங்கிற் கூட்டிப் பதிவயின் பெயர்வோன்
நீங்கற்(கு) அருமை நின்று நினைந்தது.

Koviloor Digital Library

தலைவியைத் தோழியர் கூட்டத்துள் விடுத்துத் தன் ஊரை நோக்கிச் செல்லும் தலைவன் தலைவியை விட்டு நீங்குவதற்கு இயலாத நிலையை நினைந்தது.

பொய்யுடை யார்க்(கு)அரன் போல்அக
லும்மகன் றாற்புணரின்
மெய்யுடை யார்க்கவன் அம்பலம்
போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப்
பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்(து)அல்குல்
காக்கும்பைம் பூம்புனமே. (48)

பொருள்: மை தீட்டப் பெற்ற வாள்போன்ற கண்களையும், மணிகளை உடைய அணிகலன்களை அணிந்த முலையினையும், ஒளி பொருந்திய நெற்றியினையும், படத்தை உடைய பாம்பு போன்ற அல்குலையும், கொண்ட உமையவளாகிய தலைவியைக் காக்கின்ற இந்தப் பூஞ்சோலை — அதனை விட்டு அகன்றால் பொய்ம்மை உடையவர்க்குச் சிவபெருமான் துன்பத்தைச் செய்து சேய்மையன் ஆவதுபோல மிக்க துயரத்தைத் தரும். அச்சோலையை அடைந்தால் மெய்ம்மை உடையார்க்குச் சிவபெருமானின் அம்பலம் பேரின்பத்தைத் தந்து அண்மையில் இருப்பதைப் போல இன்பத்தைத் தரும். எனவே இச்சோலையைப் பிரிதல் அரிது என்று தலைவன் கூறினான்.

சொ.பொ.வி.: புணரின் — அடைந்தால், நணுகும் — அருகிருக்கும் , மை — கண்மை, பூம்புனம் — பூஞ்சோலை.

தத்துவப்பொருள்: அடியார் கூட்டத்தில் உள்ள சிவத்தைக் கண்ட ஆன்மா, சிவத்தை என்றும் தான் பிரியும் தரத்ததன்று என்று வருந்தியது.

பாங்கற்கூட்டம் முற்றிற்று.

Koviloor Digital Library

3. இடந்தலைப்பாடு

இடந்தலைப்பாடு என்பது தலைவியை தலைவன் முதன் முதல் சந்தித்த இடத்தில் மீண்டும் சந்திக்க முற்படுதல். தலைப்பாடு — பற்றுக்கோடு. இது இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் நிகழ்தல் உண்டு. ஆனால் மணிவாசகர் பாங்கன் கூட்டத்திற்குப் பின் அமைத்துள்ளார். இப்பகுதி நடைபெறாமலும் பாங்கற் கூட்டம் நிகழ்தல் உண்டு. அதாவது இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற் கூட்டம் நிகழும். பாங்கற் கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும். எனவே இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றே நிகழும். ஆயின் இலக்கண உரைகாரர்கள் இயற்கைப் புணர்ச்சியும் இடந் தலைப்பாடும் நிகழ்ந்த பின்னர் களவொழுக்கம் நிகழு மாயின் பாங்கற் கூட்டமும் நிகழும் என்பர். இது ஒரு துறையை மட்டும் உடையது.

1. பொழிலிடைச் சேறல்

கொளு: ஐயரிக் கண்ணியை ஆடிடத் தேசென்(று)
எய்துவன் எனநினைந்(து) ஏந்தல் சென்றது.

வரிபரந்த கண்களை உடைய தலைவியை முன்பு விளையாடிய இடத்தே சென்று காண்பேன் என எண்ணித் தலைவன் சென்றது.

என்னறி வால்வந்த(து) அன்றிது
முன்னும்இன் னும்முயன்றால்
மன்னெறி தந்த(து) இருந்தன்று
தெய்வம் வருந்தல் நெஞ்சே
மின்எறி செஞ்சடைக் கூத்தப்
பிரான்வியன் தில்லைமுந்நீர்
பொன்னெறி வார்துறை வாய்ச்சென்று
மின்தோய் பொழிலிடத்தே (49)

பொருள்: தலைவியோடு கூடிய புணர்ச்சி நேற்று என் முயற்சியால் வந்தது அன்று. தெய்வத்தால் (விதி) வந்தது. இன்னும் நான் முயன்றால் இக்காதல் ஒழுக்கத்தை

Koviloor Digital Library

அத் தெய்வம் மிகுத்துத்தரும். ஆதலால் நெஞ்சமே வருந் தாதே. மின்னலை வெல்கின்ற சடையை உடைய சிவபெரு மானின் தில்லையைச் சூழ்ந்த கடல்திரை பொன்னைக் கடற்கரையில் சேர்க்கும் துறையைச் சேர்ந்த பூஞ் சோலையில் அவளைச் சென்று அடைவேம் (என்று தலைவன் கூறியது)

சொ.பொ.வி: மன் நெறி தந்தது — நிலைபெற்ற தலைவி யின் காதலைத் தெய்வம் தந்தது. முந்நீர் — கடல், துறை — கடற்கரை.

தத்துவப்பொருள்: சிவம் முன்பு எவ்விதக் கைம்மாறும் கருதாது சிவஞானம் தந்தருளியது. அத்தகைய கருணைக்கு என்றும் இடையீடு இன்மையால் அவரருகில் சென்று மீண்டும் ஞானம் பெறுவேன் என ஆன்மா சென்றது.

இடந்தலைப்பாடு முற்றிற்று.

4. மதியுடம்படுத்தல்

மதியுடம்படுத்தல் — அறிவை(தோழியின்) ஒருப்படுத்து தல் எனப் பொருள்படும். தோழியின் அறிவைத் தன் காதலுக்குத் தலைவன் ஒருப்படுத்திக் கொள்ளுதலாம் என்றவாறு. இயற்கைப் புணர்ச்சியில் தெய்வத்தின் அருளால் தலைவியைக் கூடிய தலைவன் பின்னும் இடந் தலைப்பாட்டிலோ, பாங்கனிடலோ தலைவியைக் கூடிய பின் களவ வெளிப்பட்டு விடுமே என அச்சமுற்றுத் தலைவியைத் திருமணம் செய்தல் வேண்டும். அச்சப்பட வில்லை எனின் தோழியைத் துணையாகப் பெற்றுக் களவொழுக்கத்தை நீளச் செய்தல் உண்டு. இதுவே இப்பகுதி. இது பத்து துறைகளை உடையது.

1. பாங்கியிடைச் சேறல்

கொளு: கரந்துறை கிளவியில் காதல் தோழியை
இரந்துகுறை உறுவல்என்(று) ஏந்தல் சென்றது.

Koviloor Digital Library

(பாங்கற் கூட்டத்தால் தலைவியை எய்திப் பின் பிரிந்த தலைவன் — தோழியின் துணையால் மீண்டும் எய்தும் என எண்ணி) பணிந்து சொல்லும் சொற்களாலே தோழியிடம் என் குறையைக் கூறுவேன் என்று தலைவன் சென்றது.

எளிதன்(று) இனிக்கனி வாய்வல்லி
புல்லல் எழில்மதிக்கீற்(று)
ஒளிசென்ற செஞ்சடைக் கூத்தப்
பிரானைஉன் னாரின்என்கண்
தெளிசென்ற வேற்கண் வருவித்த
செல்லல்எல் லாம்தெளிவித்(து)
அளிசென்ற பூங்குழல் தோழிக்கு
வாழி அறிவிப்பனே. (50)

பொருள்: கோவைக்கனி போன்ற இதழை உடைய தலைவியை நான் இடையீடு இல்லாது கூடுதல் எளிய செயலல்ல. ஆதலால் அழகிய திங்களின் ஒளிபரந்த சிவந்த சடையை உடைய சிவபெருமானை நினையாதரைப் போல நான் வருந்த தலைவியின் வேல் போலும் கண்கள் என்னிடத்து உண்டாக்கிய இன்னாமை முழுமையும் பூங்குழலை உடைய தோழியிடம் குறிப்பினாலே சொல்வேன் (என்றவாறு)

சொ.பொ.வி.: புல்ல — புணர்தல் தெளி — விளக்கம் பொருந்திய, செல்லல் — துன்பம் அளி — வண்டு.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியை, திருவருள் துணைகொண்டு மீண்டும் பெறுவதற்கு என் குறையை எடுத்துச் சொல்வேன் என ஆன்மா எண்ணியது.

2. குைறயுறத்துணிதல்

கொளு: ஓரிடத்தவரை ஒருங்கு கண்டுதன்
பேரிடர் பெருந்தகை பேசத் துணிந்தது.

Koviloor Digital Library

தலைவியையும் தோழியையும் ஓரிடத்தில் ஒருங்கு கண்ட தலைவன் தன்னுடைய பெரிய துன்பத்தைச் சொல்லத் துணிந்தது.

குவளைக் கருங்கண் கொடியேர்
இணீயிக் கொடிக்கடைக்கண்
உவளைத் தனதுயிர் என்றது
தன்னோ(டு) உவமையில்லா
தவளைத்தன் பால்வைத்த சிற்றம்
பலத்தான் அருளிலர்போல்
துவளத் தலைவந்த இன்னலின்
னேயினிச் சொல்லுவனே. (51)

பொருள்: குவளை போன்ற கருமையான கண்ணினையும், கொடியை ஒத்த இடையினையும் உடைய தலைவியின் கடைக்கண்கள் — தோழியைத் தன் உயிர் என்று கூறியது. ஆதலால் தனக்கொப்பில்லாத உமையவளைத் தன் ஒரு கூறாகக் கொண்ட சிற்றம்பலத்தானின் அருளைப் பெறாத வரைப்போல் நான் வருந்தும் வண்ணம் என்னிடம் வந்த இன்னாமையை அவளிடம் இனிச்சொல்வேன் (என்றவாறு)

சொ.பொ.வி.: உவளை — தோழியை (பக்கத்தில் நின்றதால் அவள், இவள் என்றாற்போல் உவள் என்றாயிற்று) உவமையில்லாதவள் — உமையவள், துவள — வருந்த, இன்னலின் — இன்னாமையை.

தத்துவப்பொருள்: சிவமும், திருவருளும் பிரிப்பின்றி இருந்ததைக் கண்ட ஆன்மா திருவருளாலேயே சிவத்தை கூடமுடியும். என்று உணர்ந்து திருவருளிடம் குறையைக் கூறுவேன் என்றது.

3. வேழம் வினாதல்

கொளு: ஏழையர் இருவரும் இருந்த செவ்வியுள்
வேழம் வினாஅய் வெற்பன் சென்றது.

தலைவியும் தோழியும் இருந்த இடத்தில் சென்று யானை பற்றித் தலைவன் வினவியது.

Koviloor Digital Library

இருங்களி யாய்இன்(று) யான்இறு
மாப்பஇன் பம்பணிவோர்
மருங்(கு)அளி யாஅனல் ஆடவல்
லோன்தில்லை யான்மலையீங்(கு)
ஒருங்(கு)அளி யார்ப்ப உமிழ்மும்
மதத்(து)இரு கோட்(டு)ஒருநீள்
கருங்களி யார்மத யானையுண்
டோவரக் கண்டதுவே. (52)

பொருள்: அடியவர்களோடு கூடி பெரிய மகிழ்வை யுடையவனாய் யான் இன்று இறுமாப்பு அடையும் வண்ணம் பேரின்பத்தை எனக்களித்து, தீயின்கண் ஆடவல்லனாகிய தில்லையான் மலையில், வண்டுகள் மொய்க்கின்ற மும்மதத்தை உடைய, இருகொம்பினை உடைய நீண்ட கரிய களிப்புடைய ஒரு மத யானை வருவதைக் கண்டதுண்டோ உரைமின் (என்றவாறு)

சொ.பொ.வி.: பணிவோர் — அடியார், இருங்களி — பெரிய மகிழ்ச்சி.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியும், திருவருளும் கூடிய இடத்தில் சென்று — உங்களை அணுகமுடியா வண்ணம் தடுக்கும் ஆணவம் என்னும் யானையை சிவ புண்ணிய மாகிய அம்பால் எய்தேன், அவ்யானை இங்கு வந்ததோ என ஆன்மா வினவியது.

4. கலைமான் வினாதல்

கொளு: சிலைமான் அண்ணல் கலைமான் வினாயது.

வில் தொழிலில் வல்ல தலைவன் கலைமான் வந்ததா என வினவியது.

கருங்கண் ணனையறி யாமைநின்
றோன்தில்லைக் கார்ப்பொழில்வாய்
வருங்கண் நனையவண் டாடும்
வளரிள வல்லியன்னீர்

Koviloor Digital Library

இருங்கண் அனைய கணைபொரு
புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் அனையதுண் டோவந்த(து)
ஈங்கொரு வான்கலையே. (53)

பொருள்: கரிய திருமால் அறியாதவண்ணம் தன்னை மறைத்துக் கொண்டு நின்றவனது தில்லையில் உண்டான சோலையிடத்து மேனியில் தேன் நனையும் வண்ணம் வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற வளரும் கொடியை ஒத்த பெண் களே, உங்கள் கண்களைப் போன்று அம்பு தைத்ததால் உண்டான புண்ணோடு கூடிய பெரிய மான் ஒன்று இப்புனத்தின் கண் வந்தது உண்டோ. (என்றவாறு)

சொ.பொ.வி.: கரியமால் அறியாவண்ணம்—-அடி-முடி தேடிய புராண வரலாறு குறிப்பிடப் பெறுகிறது. கருங் கண்ணன் — திருமால், வரும்கண் நனைய வண்டுகள் — தன் உடம்பில் தேன் நனையும் வண்ணம் ஆடும் வண்டுகள், இரும்கண்—பெரிய கண், புணரி — பொருந்தி, வான்கலை — கலைமான் (மான்)

தத்துவப்பொருள்: ஆன்மா திருவருளிடத்தில் பாச ஞானம் (மான்) கண்டதுண்டோ என வினவியது.

5. வழி வினாதல்

கொளு: கலைமான் வினாய கருத்து வேறறிய
மலைமா அண்ணல் வழி வினாயது.

கலைமான் வந்ததோ எனக் கேட்ட கருத்து முற்றிய படியால் மலையை ஒத்த தலைவன் அவர்களின் ஊருக்கு வழி கேட்டல்.

சிலம்பணி கொண்டசெஞ் சீறடி
பங்கன்தன் சீரடியார்
குலம்பணி கொள்ள எனைக்கொடுத்
தோன்கொண்டு தான்அணியும்
கலம்பணி கொண்டிடம் அம்பலம்
கொண்டவன் கார்க்கயிலைச்

Koviloor Digital Library

சிலம்பணி கொண்டநும் சீறூர்க்(கு)
உரைமின்கள் செல்நெறியே. (54)

பொருள்: சிலம்பு அணிந்த சிறிய அடியை உடைய உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவனும், அவனுடைய அடியவர்களுக்கு நான் பணி செய்யும் வண்ணம் அவர்கட்கு என்னை அடிமையாக்கியவனும், தான் அணிகின்ற அணிகலன்கள் யாவும் பாம்பாகக் கொண்டவனும் வாழும் இடத்தை பொன்னம்பலமாகக் கொண்டவனும் ஆகிய கூத்தப்பெருமானுடைய கயிலை மலையை அழகு செய்யும் நும்மூர்க்குச் செல்லும் வழியைக் கூறுமின் (என்றவாறு)

சொ.பொ.வி.: யானை, மான் இவை பற்றித் தலைவன் கேட்க — இவன் வேறு ஒரு குறிப்பினால் இவ்வாறு கேட்கிறான் என்று அறிந்த தோழியின் உணர்வை அறிந்த தலைவன் அதனை மாற்றிட ஊரின் வழி கேட்டான். பணிகொள்ள — பணியாற்ற, கலம் — அணிகலன், சிலம்பு — மலை.

தத்துவப்பொருள்: ஆணவம், பாசஞானம் பற்றி வினவிய ஆன்மா சிவத்தின் ஊராகிய சிவஞான பூமிக்குச் செல்லும் வழியைச் கேட்டது.

6. பதி வினாதல்

கொளு: பதியொடு பிறவினாய் மொழிபல மொழிந்து
மதியுடம் படுக்க மன்னன் வலிந்தது.

ஊருடன் பலவற்றையும் வினாவி, சொற்கள் பலகூறித் தோழியைத் தனக்கு உதவி செய்யுமாறு தலைவன் கேட்டுக் கொண்டது.

ஒருங்(கு)அட மூவெயில் ஒற்றைக்
கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கடம் மூன்றுகு நால்வாய்க்
கரியுரித் தோன்கயிலை

Koviloor Digital Library

இரும்கடம் மூடும் பொழில்எழில்
கொம்பர்அன் னீர்களின்னே
வருங்கள்தம் ஊர்பகர்ந் தால்பழி
யோஇங்கு வாழ்ப்வர்க்கே. (55)

பொருள்: மூன்று கோட்டைகளையும் ஒருங்கே அழியும்படி ஒரு தனி அம்பை விடுத்த சிற்றம்பலவன் மூன்று மதங்களைக் கொண்ட யானையின் தோலை உரித்தவன். அப்படிப்பட்ட அவனின் கயிலைக்கண் பெரிய காடுகளால் (மரம்) மூடப்பெற்ற சோலையில் நிற்கின்ற அழகுடைய கொம்பு போன்றவர்களாகிய நீங்கள் இங்கே வந்து உங்களது ஊரை உரைத்தால் இம்மலையில் வாழ் பவர்க்குப் பழியாகுமோ (என்றவாறு)

சொ.பொ.வி.: முப்புரத்தை ஓரம்பால் அழித்ததை, 'ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில் — ஓரம்பே முப்புரம்' (பா.276) என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் குறிப்பிடுவார். கருங்கடம் — கருமையான மதநீர், நால்வாய் — யானை, இரும்கடம் — காடு, வருங்கள்தம்— வாருங்கள் உம்முடைய.

தத்துவப்பொருள்: சிவஞானபூமியை அடைவதற்குரிய வழியைக் கூறவில்லை என்றாலும் பதியின் பெயரை யேனும் உணர்த்துவது பழியன்றே என்று ஆன்மா கேட்டுக் கொண்டது.

7. பெயர் வினாதல்

கொளு: பேரமைத் தோளியர் பேர் வினாயது.

பெரிய மூங்கிலை ஒத்த தோள்களை உடைய பெண்களின் பெயரைக் கேட்டது.

தாரென்ன வோங்கும் சடைமுடி
மேல்தனித் திங்கள்வைத்த
காரென்ன ஆரும் கறைமிடற்(று)
அம்பல வன்கயிலை

Koviloor Digital Library

ஊரென்ன என்னவும் வாய்திற
வீர்ஒழி வீர்பழியேல்
பேரென்ன வோஉரை யீர்விரை
யீர்ங்குழற் பேதையரே. (56)

பொருள்: உயர்ந்த சடைக்கு மேலே பிறைச்சந்திரனை மாலையாகக் கொண்ட மேகம் என்று சொல்லும்வண்ணம் கருநிறத்தைக் கொண்ட கழுத்தினை உடைய அம்பலவாணனின் கயிலையின் கண் உம்முடைய ஊர் எது என்று சொல்வதற்கு வாய் திறக்காது இருக்கின்றீர். அவ்வாறு கூறுவது பழியாயின் அதனை விட்டு விட்டு உம்முடைய பெயர் எத்தன்மையது என்பதையாவது நறுமணமிக்க கூந்தலை உடைய பேதையீர் கூறுவீராக.

சொ.பொ.வி.: ஊரின் பெயர் கூறுதல் பழி என்றால் உமது பெயர் கூறுங்கள் என்றான் தலைவன். தார் — மாலை, கார் — மேகம், விரை — மணம், ஈர்ங்குழல் — சுருண்ட கூந்தல்.

தத்துவப்பொருள்: இடம் வினாவிய பொழுது சிவத்தலைவி பதில் தராமையைக் கண்டு ஆன்மா இன்பத்தைப் பயக்கும் நும் திருப்பெயர் யாது என்று திருவருளைக் கேட்டது.

8. மொழி பெறாது கூறல்

கொளு: தேமொழி யவர் வாய்மொழி பெறாது
மட்டவிழ் தாரோன் கட்டு ரைத்தது.

தேனை ஒத்த வார்த்தைகளைக் கொண்ட பெண்களிடம் ஒரு சொல்லும் பெறாத வகையால் தேனை உடைய மாலைகளைக் கொண்ட தலைவன் கூறியது.

இரதம் உடைய நடம்ஆட்(டு)
உடையவர் எம்முடையர்
வரதம் உடைய அணிதில்லை
அன்னவர் இப்புனத்தார்

Koviloor Digital Library

விரதம் உடையர் விருந்தொடு
பேச்சின்மை மீட்டதன்றேல்
சரத முடையர் மணிவாய்
திறக்கில் சலக்கென்பவே. (57)

பொருள்: இனிமை உடையதாகிய ஆனந்த நடனத்தை உடையவர் எம்முடைய தலைவர். அவருடைய அழகிய தில்லையை ஒத்தவராகிய இப்புனத்தில் நின்ற இவர்கள் எதிர் வந்து விருந்தினர்களோடு பேசாமையை விரதமாக உடையவர்கள் போலும். அல்லது வாய் திறந்தால் முத்து உதிரும் என்ற நினைப்பை உடையவர்கள் போலும் (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: இரதம் — இனிமை, ஆட்டு — நடனம் உடையவர்—தலைவர், வரதர் — விரும்பியவற்றைக் கொடுப்பவர், சரதம் — மெய்ம்மை (வழக்கம்), மணி — ஈண்டு முத்து, சலக்கு — வீரைவு.

தத்துவப்பொருள்: வின்விய காலங்களில் இனியமொழி யாகிய பதிலைக் கூறவேண்டிய சிவத்தலைவி வாய் திறக்காமல் இருப்பதால் ஆன்மா வருந்தியது.

9. கருத்தறிவித்தல்

கொளு: உரைத்தது உரையாது கருத்தறி வித்தது

முன் கூறியவற்றைக் கூறாது தன்னுடைய கருத்தினை அறிவித்தது.

வின்னிற வாணுதல் வேல்நிறக்
கண்மெல் லியலைமல்லல்
தன்னிறம் ஒன்றில் இருத்திநின்
றோன்தன(து) அம்பலம்போல்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில்
வெண்ணகைப் பைந்தொடியீர்
பொன்னிற அல்குலுக்(கு) ஆமோ
மணிநிறப் பூந்தழையே. (58)

பொருள்: வில்லைப் போன்ற நெற்றியையும், வேல் போன்ற கண்களையும் உடைய உமையவளைத் தன்

Koviloor Digital Library

திருமேனியின் ஒரு பக்கத்தே இருத்திக்கொண்ட கூத்தப் பெருமானின் தில்லையம்பலத்தை ஒத்த நுண்ணிய இடையையும், வெண்மையான பற்களையும், பசுமையான வளையல்களையும் உடைய பெண்களே, இப்பசுந்தழை உமது பொன்னிறமான அல்குலுக்குத் தகுமோ? தகுதி யுடையதாயின் அணிந்து கொள்வீர்களாக (என்றவாறு)

சொ.பொ.வி.: வில்நிறம், வேல்நிறம், மின்நிறம் என்பன வற்றில் நிறம் — இயல்பு, தன்னிறம் — தன்மேனி, பொன் னிறம் — பொன்போன்ற நிறம்.

தத்துவப்பொருள்: ஆன்மா, சிவத்தலைவியின் திரு மேனியில் அணிவிக்கும் பச்சிலைகளைக் கொண்டுவந்து திருவருளிடம் ஏற்றுக்கொள்ள வேண்டுதல்.

10. இடை வினாதல்

கொளு: வழிபதி பிறவினாய் மொழிபல மொழிந்தது.

வழியையும், ஊரையும் வினவிய தலைவன் அவர்களது இடை முதலியவற்றைப் பற்றிக் கூறியது.

கலைக்கீழ் அகல்அல்குல் பாரம(து)
ஆரம்கண் ஆர்ந்(து) இலங்கு
முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றல்முற்
றா(து)அன்(று) இலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம்
பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர்
எதுநுங்கள் சிற்றிடையே. (59)

பொருள்: மேகலைக் கீழ் அமைந்துள்ள அல்குலின் பாரம் முத்துவடம் அணிந்த முலையின்கீழ் அமைந்த இடை இல்லாது இருப்பதால் தாங்க முடியாததாகும். கயிலையை எடுத்த இலங்கை அரசன் இராவணன் மலையின் கீழ் விழும் வண்ணம் வென்ற சிற்றம்பலத் தானின் அழகினை உடைய கயிலையில் நிற்கின்ற வில்லும், அதில் வைத்த அம்பு போலும் புருவத்தையும் கண்களை

Koviloor Digital Library

யும் உடைய பெண்களே. உம்முடைய சிற்றிடை யாது? எம்முடைய கண்களுக்குப் புலனாகவில்லை (என்றவாறு)

சொ.பொ.வி.: கலை — மேகலை என்ற அணி, ஆரம் — முத்துமாலை, இலங்கையர்கோன் — இராவணன், சிலை — வில்.

தத்துவப்பொருள்: ஆன்மா தான் நுகர்வதற்குரிய ஞானங்களைத் தருவதற்குரிய தோற்றமுடன் நின்றதன் காரணம் யாது? எனக் கேட்டது.

மதியுடம் படுத்தல் முற்றிற்று.

5. இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்

தலைவன் தோழியும் தலைவியும் தனித்திருக்கும் நிலைமை அறிந்து சென்று யானை வினாவுதல் முதலிய நிகழ்வுகளைச் செய்ய, அவை பற்றிய அவனது உ.ள்ளக் கருத்தைத் தோழி அறிந்து கொள்ளுதல். இது இரண்டு துறைகளை உடையது.

1. ஐயுறுதல்

கொளு: அடற்கதிர் வேலோன் தொடர்ச்சி நோக்கித்
தையல் பாங்கி ஐயம் உற்றது.

நெற்றியினைத் தொடும் ஒளி பொருந்திய வேலினை உடைய தலைவன் தொடர்ச்சியாக இடைவிடாது வந்து போவதைக் கண்டு தோழி ஐயுற்றாள்.

பல்இல னாகப் பகலைவென்
றோன்தில்லை பாடலர்போல்
எல்இலன் நாகத்தொ(டு) ஏனம்
வினா இவன் யாவன்கொலாம்
வில்இலன் நாகத் தழைகையில்
வேட்டைகொண் டாட்டமெய்ஓர்
சொல்இலன் ஆகற்ற வாகட
வான்இச் சுனைப்புனமே. (60)

Koviloor Digital Library

பொருள்: பல் இல்லாதவனாகச் சூரியனை வென்றவனாகிய சிவபெருமானது தில்லையைப் பாடாதவர்களைப் போல ஒளி இழிந்தவனாய் யானையையும் பன்றியையும் கேட்கின்ற இவன் யார்? இவன் தொழில் வேட்டையாடுவதாகத் தெரிகிறது. ஆனால் கையிலோ வில்லில்லை. கையில் நாகமரத்தின் தழை வைத்துள்ளான். இவன் உண்மையான சொல் ஒன்றையும் கூறவில்லை. இவ்வாறு பேசுவதற்கு எங்குக் கற்றான்? இச்சோலையையே சுற்றி வருகின்றான். இவன் யாவனோ? (என்று ஐயுற்றாள் தோழி)

சொ.பொ.வி.: தக்கன் யாகத்தில் கலந்து கொண்டதால் சூரியனுடைய பல்தகர்க்கப் பெற்றது புராணவரலாறு. அது இங்குக் குறிக்கப் பெற்றுள்ளது. பகலை — சூரியனை, எல் — ஒளி, நாகம் — யானை, ஏனம் — பன்றி, நாகம் — நாக மரம், ஆகற்றவா — எப்படிக்கற்றான். கடவான் — அகலான்.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருளை ஆன்மாவோடு சேர்ப்பிப்பதாகிய திருவருளாகிய தான் முன்பு இன்றியே சிவபுண்ணிய வசத்தால் சிவத்தோடு ஆன்மா கலந்தது! எவ்வாறு எனத் திருவருள் ஐயுற்றது.

2. அறிவு நாடல்

கொளு: வெற்பன் வினாய சொற்பதம் நோக்கி
நெறிகுழற் பாங்கி அறிவு நாடியது.

தலைவன் முன்பு கேட்ட வினாக்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்துச் சுருண்ட கூந்தலை உடைய தோழி தன்னுடைய அறிவினால் அவனுடைய எண்ணத்தை அறிந்தது.

ஆழமன் னோஉடைத்(து) இவ்வையர்
வார்த்தை அனங்கன்நைந்து
வீழமுன் நோக்கிய அம்பலத்
தான்வெற்பின் இப்புனத்தே
வேழமுன் னாய்க்கலை யாய்ப்பிற
வாய்ப்பின்னும் மென்தழையாய்

Koviloor Digital Library

மாழைமென் நோக்கி யிடையாய்க்
கழிந்தது வந்துவந்தே. (61)

பொருள்: முன் ஒரு காலத்தில் மன்மதன் அழிந்து சாம்பல் பொடியாய் வீழ, தன் நெற்றிக் கண்ணால் நோக்கிய சிவபெருமானின் மலையைச் சார்ந்த இச் சோலையின் கண்ணே தலைவன் கூறுவது — யானையாய், மானாய், பின் வேறு சிலவாய் இன்னும் மெல்லிய தழையாய்த் தொடர்ந்து வந்து முடிந்த நிலையில் பேதமைத் தன்மை உடைய மெல்லிய நோக்கத்தைக் கொண்ட தலைவியின் இடையாய் நின்றது. எனவே தலைவனுடைய வார்த்தைகள மிகவும் பொருள் பொதிந்தவையாகும் (எனத் தோழி ஐயம் தீர்ந்தாள்)

சொ.பொ.வி.: முன்பாடலில் ஐயுற்ற தோழி தலைவனின் வினாக்களை வரிசைப் படுத்திப் பார்த்து அவன் காதல் நிலையை ஒருவாறு அறிந்தாள் என்பது கருத்து. ஆழம் — பொருள்பொதிந்த, ஐயர் — தலைவன், அனங்கன் — மன்மதன், மாழை — மென்மை.

தத்துவப்பொருள்: ஆன்மாவானது வினவியவற்றைப் பார்த்துத் திருவருளானது, ஆன்மா சிவத்தையே வினவியது என்று தெளிந்து ஆன்மாவின் சொல் ஆழமுடைத்து என்று அறிதலாம்.

இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் முற்றிற்று.

6. முன்னுற உணர்தல்

தலைவிக்குத் தலைவனிடத்தே கூட்டம் ஏற்பட்டமையைத் தோழி அறிதல். இது ஒரு துறையைக் கொண்டது.

1. வாட்டம் வினாதல்

கொளு: மின்னிடை மடந்தை தன்னியல் நோக்கி
வீங்கு மென்முலைப் பாங்கி பகர்ந்தது

Koviloor Digital Library

மின்னலைப் போன்ற இடையை உடைய தலைவியின் இயல்பினை நோக்கி பெருத்த மென்மையான முலையை உடைய பாங்கி கூறியது.

நிருத்தம் பயின்றவன் சிற்றம்
பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலும் கயிலை
மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலும் சுனைகுடைந்(து)
ஆடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி
மெல்லியல் வாடியதே. (62)

பொருள்: திருச்சிற்றம்பலத்து நடனம் பயின்றவனும், நெற்றியின் கண் ஒப்பற்ற கண்ணை உடையவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கயிலை மலையின் கண் உச்சியிலுள்ள தீர்த்தமாகிய சுனையில் குடைந்து குடைந்து ஆடியும் மலைக்கு எதிரான எதிரொலியை அழைத்தும் விளையாட்டைப் பயின்றதாலோ, வேறு எதனாலோ தலைவியே நீ வாடியது (எனத் தோழி வினவினாள்)

சொ.பொ.வி.: நிருத்தம் — நடனம், திருத்தம் — தீர்த்தம், சிலம்பு — மலை, கூய்—எதிரொலிக்கக்கூவி, வல்லி — தலைவி.

தத்துவப்பொருள்: சிவமானது ஆனமாக்கள் மாட்டு அருளுகின்ற கருணையையும், அக்கருணையைப் பெற்ற ஆன்மா பெறும் தெளிவையும் திருவருள் நுனிதாக அறிந்து சிவத்தை வினவியது.

முன்னுறவுணர்தல் முற்றிற்று

7. குறையுற உணர்தல்

தலைவன் தோழியிடம் தன்னுடைய குறையைப் புலப்படுத்த அதனால் தோழி அவன் கருத்தை அறிதல். இது நான்கு துறைகளை உடையது.

Koviloor Digital Library

1. குறையுற்று நிற்றல்

கொளு: கறையுற்ற வேலவன் குறையுற்றது.

குருதிக்கறை படிந்த வேலை உடைய தலைவன் தன்னுடைய குறையைச் சொன்னது.

மடுக்கோ கடலின் விடுதிமில்
அன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக்
கோபரன் தில்லைமுன்றில்
கொடுக்கோ வளைமற்று நும்ஐயர்க்(கு)
ஆயகுற் றேவல் செய்கோ
தொடுக்கோ பணியீர் அணியீர்
மலர்நும் சுரிகுழற்கே. (63)

பொருள்: படகைக் கடலில் படியச் செலுத்துவேனோ அல்லது அலைகளை உடைய கடலில் சென்று மீன் வேட்டை புரிவேனோ அல்லது முத்துக் குளிக்கேனோ, அல்லது சிவபெருமானின் தில்லை முன்றில் சங்கு வளைகளை விற்பேனோ அல்லது உம்முடைய தாய் தந்தையர் இட்ட ஏவல்களைச் செய்வேனோ அல்லது தேன் பொருந்திய மலரை உம்முடைய சுருண்ட குழலுக்கு ஏற்பத் தொடுப்பேனோ? எது செய்யவேண்டும்? சொல்லு மின் (என்று தலைவன் தோழியிடம் கூறினான்)

சொ.பொ.வி.: மடுத்தல் — செலுத்துதல், திமில் — பட்கு, படுக்கோ — பிடிப்பனோ, பணிலம் — முத்து, வளை — வளையல், ஐயர் — பெற்றோர்.

தத்துவப்பொருள்: திருவருளிடம் சென்று ஆன்மா வானது அடிமையாய், உமக்கே ஆளாய் குற்றேவல் செய்வேன் என்று விண்ணப்பித்தல்.

2. அவன் குறிப்பறிதல்

கொளு: பொற்றொடித் தோளிதன் சிற்றிடைப் பாங்கி,
வெறிப்பூஞ் சிலம்பன் குறிப்ப றிந்தது.

Koviloor Digital Library

பொன்னால் ஆகிய அணிகலன்களை உடைய தலைவியின் சிறிய இடையினை உடைய தோழி மணம் பொருந்திய பூக்களால் கட்டப் பெற்ற மாலையினைச் சூடிய தலைவன் குறிப்பை உணர்ந்தது.

அளியமன் னும்மொன்(று) உடைத்(து) அண்ணல்
எண்ணரன் தில்லையன்னாள்
கிளியைமன் னுங்கடியச் செல்ல
நிற்பின் கிளர்அளகத்(து)
அளியமர்ந்(து) ஏறின் வறிதே
யிருப்பின் பளிங்கடுத்த
ஒளியமர்ந்த தாங்கொன்று போன்றுஒன்று
தோன்றும் ஒளிமுகத்தே. (64)

பொருள்: சிவபெருமானது தில்லையை ஒத்த தலைவி கிளியை ஓட்டுவதற்காகச் சிறிது அகன்றாலும், அவளது கூந்தலில் வண்டுகள் மொய்த்தாலும், அவள் வெறுமனே இருந்தாலும், பளிங்கு தன்னைச் சேர்ந்த பொருளின் நிறத்தைப் பெற்றிருப்பது போலத் தலைவன் முகமும் முன்பு வேறு ஒன்று போல் இருந்து பிறகு இவள் குறிப்பால் வேறாகத் தோன்றுகிறது. அதனால் தலைவனின் குறிப்பு ஏதோ ஒன்றினை உடைத்து. அஃது இவளைப் பற்றியது போலும் (என்று தோழி நினைத்தாள்)

சொ.பொ.வி.: குறையைச் சொல்லி நிற்கின்ற தலைவன் முகமானது தலைமகளது செய்கைக்கு ஏற்ப வேறு பாட்டுடன் அவ்வப்போது தோன்றியது. அதனால் தோழி அவனுடைய காதற் குறிப்பை அறிந்தாள் என்பது குறிப்பு. அளிய —இரங்கத்தக்க அண்ணல் — தலைவன், கடிய — விரட்ட, அளகம் — கூந்தல், அளி — வண்டு, வறிதே — வாளாயிருத்தல். பளிங்கு வெண்மையுடையது.

தத்துவப்பொருள்: பளிங்கின் கீழ் எந்தப் பொருள் வைக்கப் படுகிறதோ அந்த நிறத்தையே அது காட்டும். அது போல உயிர் எந்தப் பொருளைச் சேர்கிறதோ அந்தப் பொருளின் தன்மையை உடையதாய் இருக்கும் என்பது தத்துவநிலை. இதனை ‘பன்னிறம் காட்டும் படிகம்போல்’

Koviloor Digital Library

என்ற சிவஞான போத உதாரண வெண்பா குறிப்பிடும். (சூ.8, அதி,3, வெ,1) ஆன்மா இந்திரியங்களின் இயல்பையே தன் இயல்பாகக் கண்டு அது சிறப்பு அல்லது எனத் தெளிந்து சிவத்தைச் சார நினைக்கும் என்பது பெறப் படுகிறது.

3. அவள் குறிப்பறிதல்

கொளு: ஆங்கவள் குறிப்புப் பாங்கி பகர்ந்தது.

தலைவனிடத்தில் தலைவியின் குறிப்பைத் தோழி கூறியது.

பிழைகொண்(டு) ஒருவிக்கெடா(து) அன்பு
செய்யின் பிறவியென்னும்
முழைகொண்(டு) ஒருவன்செல் லாமைநின்(று)
அம்பலத்(து) ஆடுமுன்னோன்
உழைகொண்(டு) ஒருங்(கு)இரு நோக்கம்
பயின்றஎம் ஒண்ணுதல்மாந்
தழைகொண்(டு) ஒருவன்என் னாமுன்னம்
உள்ளம் தழைத்திடுமே. (65)

பொருள்: பிழைகளைச் செய்து கெடாது அதிலிருந்து நீங்கி அன்பு செய்வானேயானால் அவனுக்குப் பிறவி என்ற குகையை அடைக்கின்ற சிவபெருமான் கையில் ஏந்தியுள்ள மானின் மருண்ட பார்வையால் ஒத்து விளங்கும் தலைவி — அதே பார்வையில் நோய்நோக்கமும், மருந்து நோக்கமும் ஆகிய இரு நோக்குகளைக் கொண்ட அவள், 'மாந்தழையை ஏந்திக் கொண்டு வந்தான்' என்று சொல்லுவதன்முன் உள்ளம் நெகிழ்ந்தாள். ஆதலால் தலைவியின் உள்ளம் தலைவன் கண்ணதாகும் (என்று தோழி உணர்ந்தாள்)

சொ.பொ.வி.: இறைவனின் அருள்தன்மை முன் இரு அடிகளில் கூறப்பெற்றுள்ளது. பிற உயிருக்குக் குற்றம் செய்யாத அன்பு காட்டினால் பிறவித்துன்பம் ஏற்படாத வண்ணம் இறைவன் காப்பான் என்பது அத்தன்மை. ஒருவி — நீங்கி, முழை— குறை, உழை — மான். இரு நோக்கு

Koviloor Digital Library

— வெள்ளை நோக்கு, கள்ள நோக்கு என்று கொள்வது முண்டு. என்னாமுன்னம் — கூறுவதற்கு முன்னே.

தத்துவப்பொருள்: சிவத்தோடு ஆன்மா கலத்தலால் — ஆன்மாவிடத்தில் சிவம் விளங்குவதைத் திருவருள் அறிதல்.

4. இருவர் நினைவும் ஒருவழி உணர்தல்

கொளு: அன்புறு நோக்கு ஆங்குஅறிந்து
இன்புறு தோழி எண்ணியது.

இருவரின் அன்புடைய பார்வையை அறிந்த தோழி அத்தன்மையாலே மகிழ்ந்து தலைவியை விசாரித்தது.

மெய்யே இவற்(கு)இல்லை வேட்டையின்
மேல்மனம் மீட்(டு)இவளும்
பொய்யே புனத்தினை காப்பது
இறைபுலி யூர்அனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம்
வாழும்செந் தாமரைவாய்
எய்யேம் எனினும் குடைந்தின்பத்
தேனுண்(டு) எழில்தருமே. (66)

பொருள்: சிவபெருமானின் புலியூரை (தில்லையை) ஒத்த தன்மையுடைய தலைவியின் குவளை போலும் கண்களாகிய வண்டினம் தான் வாழ்வதற்குத் தகுந்தது தலைவன் முகமாகிய செந்தாமரை இடத்தது என்பதை யாம் அறியேம் ஆயினும் குடைந்து இன்பததினை நுகர்ந்து அழகு பெறுகிறது. ஆதலால் இவனுக்கும் உண்மையில் வேட்டைத் தொழில்மேல் உள்ளமில்லை. இவளும் புனத்தின் கண் தினையைக் காப்பதும் பொய்யே ஆகும்.

சொ.பொ.வி.: தலைவியின் கண்ணாகிய வண்டு தான் வாழ்வதற்கு ஏதுவாக ஒரு தாமரை இடத்துச் சென்று (தலைவனின் முகம்) முழுகி இன்பத்தினை உண்டு அழகு பெறுகிறது என்பது தலைவியின் பார்வை தலைவனிடத்திலும், தலைவனின் எண்ணம் தலைவியிடத்தும்

Koviloor Digital Library

இருப்பதைக் காட்டுவதாகும். எய்யேம் எனினும் — யாம் அறியேம் என்றாலும்.

தத்துவப்பொருள்: இன்ப வடிவான சிவமும், சிவத்தின் அருளைப் பெறும் ஆன்மாவும் அனுபவ நிலையில் ஒத்தவை என்பது அறிவிக்கப் பெறுகிறது.

குறையுறஉணர்தல் முற்றிற்று

8. நாண நாட்டம்

தலைவிக்குத் தலைவனோடு கூட்ட உண்மையை உணர்ந்து கொள்வதற்குத் தோழி தலைவிக்கு நாணம் ஏற்படும்படி சில சொற்களைச் சொல்லி ஆராய்தல். இதில் ஐந்து துறைகள் உள்ளன.

1. பிறைதொழுகென்றல்

கொளு: பிறைதொழு கென்று பேதை மாதரை
நறுநுதற் பாங்கி நாண நாட்டியது.

பிறையைத் தொழுவாயாக என்று பேதைத் தன்மை உடைய தலைவியை நல்ல நெற்றியினை உடைய தோழி கூறித் தலைவி நாணும்படி செய்தது.

மைவார் கருங்கண்ணி செங்கரம்
கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன்
பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்
றோன்சடை மேல(து)ஒத்துச்
செவ்வான் அடைந்த பசுங்கதிர்
வெள்ளைச் சிறுபிறைக்கே. (67)

பொருள்: மையெழுதப்பட்ட அரிய கண்களை உடைய தலைவியே, மறந்தும் பொய்யான தேவர்களிடத்தில் நான் செல்லாது, தன்னுடைய அழகிய திருவடிகளிலேயே நான் பிழைக்கும் பொருட்டுப் புகும்படி கட்புலனுக்குத் தெரியத்

Koviloor Digital Library

தில்லையில் நின்றவனுடைய சடையின் கண்ணே விளங்கும் பிறையை ஒத்த, செவ்வானத்தில் இருக்கும் ஒளி பொருந்திய வெண்மையான சிறிய பிறையை நோக்கிச் சிவந்த கைகளைக் கூப்புவாயாக.

சொ.பொ.வி.: பொய்வானவர் — தெய்வ அருள் இல்லாதவரை வானவர் என்று சிலர் கூறுதல் பற்றிப் பொய் வானவர் எனப்பட்டது. "திருவுரு அன்றி மற்றோர் தேவர் அத்தேவர் என்ன அருளாதரைக் கண்டால் அம்மா நாம் அஞ்சுமாறே" *(517)* என்று திருவாசகத்தில் மாணிக்க வாசகர் குறிப்பிடுகின்றார். தலைவனைப் பெற்றுக் கன்னிமை நீங்கிய பெண்டிர் தலைவனோடு நின்றுதான் பிறையைத் தொழவேண்டும். இங்குத் தலைவி தனித்து நிற்கத் தோழி பிறையை வணங்கு என்று கூறியதால் தலைவிக்கு நாணம் ஏற்பட்டு ஒரு பக்கத்தே ஒதுங்கி நின்றாள். இதுவே நாண நாட்டம் ஆகும்.

தத்துவப்பொருள்: சிவம் வணங்கப்படுதலே அன்றி தான் யாரையும் வணங்கி அறியாது ஆதலின் பிறை தொழுக என்பது பெருமை உடையது ஆகாது. அதனால் நாணம் கொண்டது. ஆன்மாவோடு சிவம் ஒன்றிற்று என்பதைத் திருவருள் உணர்ந்தது.

2. வேறுபடுத்திக் கூறல்

கொளு: வேய்வளைத் தோளியை வேறுபாடு கண்டு
ஆய்வளைத் தோழி அணங்கென்றது.

மூங்கில் போலும் தோள்களை உடைய தலைவியினது உடலின் வேறுபாடு கண்டு வளையல்களை அணிந்த தோழி தலைவியைத் தெய்வம் என்றது.

அக்கின்ற வாமணி சேர்கண்டன்
அம்பல வன்மலயத்(து)
இக்குன்ற வாணர் கொழுந்திச்
செழுந்தண் புனமுடையாள்
அக்குன்ற ஆ(று)அமர்ந்(து) ஆடச்சென்
றாள்அங்கம் அவ்அவையே

Koviloor Digital Library

ஒக்கின்ற ஆரணங் கேஇணங்
காகும் உனக்கவளே. (68)

பொருள்: எலும்பாலாகிய மணியை அணிந்த கழுத்தினை உடையவனாகிய சிற்றம்பலத்தானது பெரிய மலையின்கண் வாழ்கின்ற குறவர் மகளாகிய தினைப் புனத்தைக் காக்கின்ற தலைவி மலையில் உள்ள ஆற்றில் நீராடச் சென்றாள். தெய்வமே — உன் அவயங்களை அவள் அவயங்கள் ஒத்துள்ளன. ஆதலால் அவள் உனக்கு ஒப்பாவாள். நீ அவளைக் கண்டு போவாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: ஆற்றில் நீராடச் சென்ற தலைவி — தலைவனுடன் நீராடினாள். எனவே அவளுடைய வடிவம் நீராடுவதற்கு முன் உள்ளவாறு இல்லாது வேறுபட்டுத் தெய்வ வடிவம் போல் ஆகியது. ஆதலால் தெய்வத்தைத் தோழி அழைத்து உன்னோடு ஒத்த இவளை நீ கொண்டு செல் என்று கூறி — என் தலைவியை நான் தேடிக் கொள்கிறேன் என்றாள். இதனைக்கேட்ட தலைவிக்கு நாண் ஏற்பட்டது என்பது குறிப்பு. அக்கு — எலும்பு, கொழுந்தி — மகள், அமர்ந்து — விரும்பி, அங்கம் — உடல்உறுப்பு, இணங்கு — இணக்கத்திற்குரியவள்.

தத்துவப்பொருள்: சிவத்தை நோக்கித் திருவருள் இன்பச்சுனை ஆடிவருக எனக்கூற, சிவம் ஆன்மாவிற்கு இன்பம் அளித்திட, ஆன்மா அடைந்த இன்பத்தைக் கண்டு திருவருள் சிவத்தை வியந்தது.

3. சுனையாடல் கூறி நகைத்தல்

கொளு: மாண நாட்டிய வார்குழல் பேதையை
நாண நாட்டி நகை செய்தது.

மாண்புடைய நீண்ட கூந்தலை உடைய தலைவியை நாணும்படி கூறி தோழி சிரித்தது.

செந்நிற மேனிவெண் ணீறணி
வோன்தில்லை அம்பலம்போல்
அந்நிற மேனிநின் கொங்கையில்

Koviloor Digital Library

அங்கழி குங்குமமும்
மைந்நிற வார்குழல் மாலையும்
தாதும் வளாய் மதஞ்சேர்
இந்நிற மும்பெறின் யானும்
குடைவன் இருஞ்சுனையே. (69)

பொருள்: சிவந்த மேனியில் வெள்ளிய திருநீற்றை அணிவோனாகிய சிவபெருமானின் தில்லையம்பலத்தை ஒக்கும் — அழகிய மேனியை உடைய உன்னுடைய முலைகளில் அழிந்த குங்குமத்தையும், கருமையான நீண்ட கூந்தலில் உள்ள மாலையையும், மகரந்தத்தையும் மேனி முழுவதும் பெற்றுக் களிப்புடைய இந்த நிறத்தையும் பெறுவேனாயின் நீ குடைந்து விளையாடிய சுனையில் நானும் விளையாடுவேன் என்று தோழி கூறினாள்.

சொ.பொ.வி.: தலைவி தலைவனுடன் சுனையில் நீராடியதால் மேனி வேறுபட்டது. அதனைக்கண்டு தலைவியின் காதல் களவு ஒழுக்கம் தனக்குத் தெரியும் என்பதைத் தோழி கூறியது பெறப்படுகிறது. மதம் — களிப்பு.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவினை ஆட்பட்டு இன்புற்றது கண்டு திருவருள் தானும் ஆட்படுவதாக நகையாடியது.

4. புணர்ச்சியுரைத்தல்

கொளு: மணக்குறி நோக்கிப் புணர்ச்சி உரைத்தது.

தலைவனுடன் கூடிய கூட்டத்தைத் தலைவியின் மேனி வேறுபாடுகள் காட்டியதால் அவ்வேறு பாடுகளைக் கண்ட தோழி தலைவன் — தலைவியின் புணர்ச்சியை (கூடியதை) உரைத்தது.

பருவங்கண் கவர்கொலை வேழப்
படையோன் படப்படர்தீத்

Koviloor Digital Library

தருங்கண் ணுதல்தில்லை அம்பலத்
தோன்தட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய்
விளர்ப்பக்கண் ணார்அளிபின்
வருங்கண் மலைமலர் சூட்டவற்
றோமற்றவ் வான்சுனையே. (70)

பொருள்: பருத்த கணுக்களையும், கொலைத் தொழிலையும் உடைய கரும்பு வில்லைக் கொண்ட மன்மதன் இறந்துபடச் செய்த நெற்றிக்கண்ணை உடைய வனது மலையிடத்து உள்ள அந்தச் சுனை கருமையான கண் சிவப்பு நிறம் பெறவும், கொவ்வைக்கனி போன்ற வாய் வெளுக்கவும், வண்டுகள் மொய்க்கும் மலர் மாலையைச் சூட்டவும் வல்லதோ (எனத் தோழி தலைவி யிடம் கேட்டனள்)

சொ.பொ.வி.: ஆண் பெண் கூட்டத்தால் கண் சிவக்கும், உதடு வெளுக்கும் என்பது வழக்கு. இதனைக் கண்ட தோழி தலைவியின் புணர்ச்சியை அறிந்தனள். வேழம் — கரும்பு, விளர்ப்ப — வெளுக்க, அளி — வண்டு.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவுடன் கூடி ஆட் கொண்டு தமதாக்கிய தன்மையைத் திருவருள் கூறி மகிழ்ந்தது.

5. மதியுடன் படுதல்

கொளு: அயில்வேல் கண்ணியொடு ஆடஅவன் தனக்கு
உயிர் ஒன்றெனு
மயிலியல் தோழி மதியுடம் பட்டது.

கூரிய வேல் போன்ற கண்களைக் கொண்ட தலைவி யுடன் தலைவன் உயிர்ஒன்றினான் என்னும் நிலையை மயில் போன்ற சாயலை உடைய தோழி அறுதியிட்டது (உறுதிகொண்டது)

காகத்(து) இருகண் ணிற்(கு)ஒன்றே
மணிகலந் தாங்(கு)இருவர்

Koviloor Digital Library

ஆகத்து ளோர்உயிர் கண்டனம்
யாமின்றி யாவையுமாம்
ஏகத்தொருவன் இரும்பொழில்
அம்பல வன்மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய்
வரும் இன்பத் துன்பங்களே. (71)

பொருள்: எல்லாப் பொருள்களிடத்தும் கலந்து ஒன்றாய் விளங்கும் சிவபெருமானாம் தில்லையம்பலத்தானின் மலையில் வாழும் தலைவிக்கும் தலைவனுக்கும் இன்ப துன்பங்கள் ஒன்றாய் நிகழ்கின்றன. ஆதலால் காகத்தின் இரு கண்களுக்கும் கண்மணி ஒன்றே கலந்து காணுதல் போல இவ்விருவர் உடம்பில் உயிர் ஒன்றையே காண்போம் (எனத்தோழி வியந்தது)

சொ.பொ.வி.: காக்கை ஒரு கண்மணியால் இரு கண்களிலும் காண்பது இடம் பெற்றுள்ள உவமை. ஆகம் — உடம்பு, ஏகனாய் — இறைவன்நிலை. "அவனே தானே ஆகிய அந்நெறி" — சிவஞானபோதம் சூ.10 என்பதும் அது. தோகை—தலைவி, தோன்றல்—தலைவன்.

தத்துவப்பொருள்: ஆன்மா திருவருளால் சிவமாம் தன்மை பெறும். [சிவம்பட்ட பிரம்படி உயிர்கட்கும், உயிர்கள்பெற்ற இன்பம் சிவத்திற்கும் விளைந்தமை மணிவாசகர் வாழ்வால் அறிவுறும்.]

நாணநாட்டம் முற்றும்.

9. நடுங்க நாட்டம்

தோழி தலைவியை நடுங்கும்படி சில சொற்கள் கூறித் தலைவியின் கூட்டத்தை அறிதல். இது ஒரு துறை உடைத்து.

1. புலமிசை வைத்து உரைத்தது

(இத்தலைப்பு பலபிரதிகளில் இல்லை)

கொளு: நுடைங்கிடைப் பாங்கி நடுங்க நாடியது.

Koviloor Digital Library

அசைகின்ற இடைய உடைய தோழி தலைவியை நடுங்கும்படி கூறிப் புணர்ச்சியை அறிந்தது.

ஆவா இருவர் அறியா
அடிதில்லை அம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின்
றோனையுன் னாரின்முன்னித்
தீவாய் உழுவை கிழித்த(து)அந்
தோசிறி தேபிழைப்பித்(து)
ஆவா மணிவேல் பணிகொண்ட
வாறின்றோர் ஆண்டகையே. (72)

பொருள்: திருமாலும் பிரமனும் அறிய இயலாத திருவடியை மூவாயிரவர்கூடி வணங்கத் தில்லையம்பலத்து நின்ற சிவபெருமானை நினையாதவரைப் போல வருந்த — எதிர்பட்டு நின்ற புலி தன் வாயைத் திறந்தது. தலைவன் அதனிடத்திலிருந்த தப்ப தன் அழகிய வேலைத் தொழில் செய்ய வைத்தான். (எனத் தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: புலி வாயைத் திறந்தது என்று கூறியது நடுங்க வைத்தது. புலியை அவன் கைவேல் வென்றது என்று கூறியது மகிழவைத்தது. ஆவா — ஆ ஆ எனப் பிரியும். இருவர் — திருமால், பிரமன். மூவாயிரவர் — தில்லைவாழ் அந்தணர், உழுவை — புலி, கிழித்தது — திறந்தது, அந்தோ — அச்சக்குறிப்பு.

தத்துவப்பொருள்: ஆன்மா மலவாசனை நீங்கி சிவத்தின் அருள்பெற்றதைத் திருவருள் அறிந்தது.

நடுங்க நாட்டம் முற்றிற்று.

10. மடற்றிறம்

தோழியிடம் தலைவன் தன் காதல் நிறைவேற என்னுடைய குறையை உன்னிடம் கூறினேன். அக்குறையை நீ தீர்த்துவைப்பாய் என எண்ணினேன். நீ முடித்து வைக்காத காரணத்தால் இனி மடல் ஏறியாவது

Koviloor Digital Library

என் காதலை நிறைவேற்றிக் கொள்வேன் எனக் கூறுதல். இது ஒன்பது துறைகளை உடையது. மடல் ஏறுதல் என்பது பண்டைக்காலத்தில் தலைவன் ஒருவன் தன் காதலை நிறைவேற்றிக்கொள்ளக் கையாளும் ஒரு வழியாகும். காதல் நிறைவேறாமல் தலைவன் தான் இறந்துபடும் நிலை உண்டானால் அப்பொழுதும் இதனைக் கையாளுவான்.

பனைமரத்தின் கருக்கு கொண்டு மடலால் குதிரை செய்து தன் காதலியின் உருவத்தை ஒரு துணியில் எழுதி அதன் மேல் அவள் பெயரையும் தன் பெயரையும் எழுதி உடல் முழுவதும் சாம்பலைப் பூசி எருக்கு மாலையை அணிந்துகொண்டு "எழுதப்பட்ட பிம்பத்தில் உள்ள தலைவியால் நான் இறந்துப்படப் போகிறேன்" என்று பறையடித்துக் கொண்டு தெருவில் வருவதாகும். பெண்கள் மடல் ஏறுதல் இல்லை. ஆண்களுக்கு மட்டுமே இது உண்டு.

1. ஆற்றாது உரைத்தல்

கொளு: மல்லல் திரள் வரைத்தோளவன்
சொல்லாற்றாது சொல்லியது.

வளமுடைய மலையை ஒத்த தோள்களை உடைய தலைவன் தன் ஆற்றாமையைச் சொல்லியது.

பொருளா எனைப்புகுந்(து) ஆண்டு
புரந்தரன் மாலயன்பால்
இருளாய் இருக்கும் ஒளிநின்ற
சிற்றம் பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச்
செவ்வாய்த் துடியிடையீர்
அருளா(து) ஒழியின் ஒழியா(து)
அழியும்என் ஆருயிரே. (73)

பொருள்: ஒரு பொருளல்லாத என்னையும் மதித்து அடிமையாகக் கொண்டு — இந்திரன், திருமால், பிரமன் முதலானவர்களுக்கு இருளாய் இருக்கின்ற — ஒளி பொருந்திய தில்லைச் சிற்றம்பலம் போன்றவர்கள் என்று சொல்லுவதற்குரிய — சுருண்ட கூந்தலையும், வெள்ளிய

Koviloor Digital Library

நகையினையும், சிவந்த வாயினையும், துடிஇடையினையும் உடைய பெண்களே, எனக்கு நீங்கள் அருளவில்லை என்றால் எனது உயிர் தப்பாமல் அழியும். ஆகவே அருள்வீர்களாக (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: புரந்தரன் — தேவேந்திரன்

தத்துவப்பொருள்: சிவத்தலைவியைத் தனித்து எண்ணி ஆன்மாவானது தன் குறையை முடிக்குமாறு விண்ணப் பித்தது.

2. உலகின் மேல் வைத்துரைத்தல்

கொளு: புலவேல் அண்ணல் புனைமடல் ஏற்(று)
உலகின்மேல் வைத்து உய்த்துரைத்தது.

புலால் நாறும் வேலினை உடைய தலைவன் மடலேறு தலை உலகின்மேல் வைத்துத் தன் நிலையைக் கூறியது.

காய்சின வேலன்ன மின்னியல்
கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந்
தார்வியன் தென்புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும்
அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்ச்சின மாவென ஏறுவர்
சீறூர்ப் பனைமடலே. (74)

பொருள்: மிக்க சினத்தை உடைய வேல்போலும் ஒளிவீசும் கண்ணாகிய வலையைப் பெண்கள் வீசிய பொழுது தங்களுடைய மனமாகிய மீனை இழந்தவர்கள் — தென்புலியூர் எனப்படும் தில்லையில் உள்ளவனாகிய சிவபெருமானுடைய திருநீற்றையும் எருக்கம்பூவையும் அணிந்து உருவம் எழுதிய படத்தைப் பிடித்துக் கொண்டு பாய்கின்ற சினத்தை உடைய குதிரை எனப் பனைமடலில் சிறிய ஊரின் கண்ணே ஊர்ந்துசெல்வர்.

சொ.பொ.வி.: சாந்து — திருநீறு, கிழி — படம், மா — குதிரை, சீறூர் — சிறிய ஊர்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தைச் சார்வதற்காக உடல் கிடைத்தது என்பதை ஆன்மா உணர்ந்து முத்தி இன்பம் கிடைக்கவில்லை என்றால் இந்த உடலை விட்டுவிடுவேன் என்று திருவருளிடம் தெரிவித்தது.

3. தன் துணிபு உரைத்தல்

கொளு: மான வேலவன் மடன்மாமிசை
யானும் ஏறுவன் என்ன உரைத்தது.

வீரவேலை உடைய தலைவன் பனைமடல் தானும் ஏறுவேன் என்று கூறியது.

விண்ணை மடங்க நீ விரிநீர்
பரந்துவெற் புக்கரப்ப
மண்ணை மடங்க வரும்ஒரு
காலத்து மன்னிநிற்கும்
அண்ணல் மடங்கல் அதள்அம்
பலவன் அருளிலர்போல்
பெண்ணை மடன்மிசை யான்வரப்
பண்ணிற்றொர் பெண்கொடியே. (75)

பொருள்: விண் அடங்கவும், எங்கும் பரவி மலைகள் மறையவும், பூமி அழியவும் வருகின்ற ஒரு பேரூழிக் காலத்தும் நிலை பெற்று நிற்கும் அண்ணல், சிங்கத்தின் தோலை ஆடையாகப் போர்த்தியவன் ஆகிய இறை வனுடைய அருள் இல்லதவர்கள் போலப் பிறர் இகழும் வண்ணம் பனைமட்டையால் ஆகிய குதிரையின் மீது நான் வரும்படி ஒரு பெண்கொடி செய்துவிட்டது. (என்று தலைவன் கூறினான்.)

சொ.பொ.வி.: மண்ணி — நிலைபெற்று, மடங்கல் — சிங்கம், அதள் — தோல்.

தத்துவப்பொருள்: சிவத்திடத்து இடைவிடாது அன்புடைய ஆன்மா சிவத்தை யான் எய்தவில்லை என்றால் வாழமாட்டேன் என்று திருவருளுக்கு உரைத்தது.

Koviloor Digital Library

4. மடலேறும் வகையுரைத்தல்

கொளு: அடல்வேலவன் அழிவுற்று
மடலேறும் வகையுரைத்தது.

வெற்றி வேலினை உடைய தலைவன் நெஞ்சம் அழிந்து மடலேறுகின்ற வகையை மேலும் கூறியது.

கழிகின்ற என்னையும் நின்றநின்
கார்மயில் தன்னையும், யான்
கிழியொன்ற நாடி எழுதிக்கைக்
கொண்டென் பிறவிகெட்டின்(று)
அழிகின்ற(து) ஆக்கிய தாள்அம்
பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரல்நும் சீறூர்த்
தெருவிடைப் போதுவனே. (76)

பொருள்: அழிந்துபட இருக்கின்ற என்னையும், நான் இவ்வாறு இருக்கவும், தன் தன்மையில் சிறிது கூடத் தாழாது இருக்கின்ற மயில்போலும் தலைவியையும் இப் படத்தின் கண்ணே எழுதிக் கையில் ஏந்திக் கொண்டு என்னுடைய பிறவி இன்று அழியத் திருவடி தந்து திருவருள் காட்டிய சிவபெருமானின் கயிலை மலையைச் சார்ந்த நம் சிற்றூர்த் தெருவில் திரிவேன். அதனால் விளையும் பயனை நீங்கள் அறிவீர்களாக.

சொ.பொ.வி.: கழிகின்ற — இறந்து கொண்டிருக்கின்ற

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அடையப் பிறவி அழிந்து முயற்சிப்பேன் என்று திருவருளிடம் கூறியது.

5. அருளால் அரிதென விலக்கல்

கொளு: அடல்வேல் அண்ணல் அருளு டைமையின்
மடல் ஏற்றுனக்(கு) அரிதென்றது.

தோழி, தலைவனை நோக்கி வெற்றிவேலை உடைய தலைவனே, உன்னிடத்தில் அருளுடைமை இருப்பதால் உனக்கு மடலேறுதல் அரிது என்று கூறியது.

Koviloor Digital Library

நடனாம் வணங்கும்தொல் லோன்எல்லை
நான்முகன் மாலறியாக்
கடனாம் உருவத்(து) அரன்தில்லை
மல்லற்கண் ணார்ந்தபெண்ணை
உடனாம் பெடையொ(டு)ஆண் சேவலும்
முட்டையும் கட்டழித்து
மடனாம் புனைதரின் யார்கண்ண
தோமன்ன இன்னருளே. (77)

பொருள்: தில்லைக் கூத்தன் நான் வணங்கும் பழையவன் ஆவான். பிரமனும் திருமாலும் அறியமுடியாத திருவுருவை உடையவன் அத்தகையவனது தில்லை நகர்க்கண் வளர்ந்த பனையில் அதன்கண் உள்ள சேவலை யும், பெட்டையையும், முட்டையையும் அழித்து மடல் ஊர்தல் நீ செய்தால் தலைவனே, இனிமேல் அருள் என்பது இவ்வுலகத்தில் எவரிடத்தும் இருக்கும் என்று தோழி கூறியது.

சொ.பொ.வி.: நடனாம் — தில்லைக்கூத்தன், கடனாம் — இயல்பான, மல்லல் — வளம், கட்டழித்து — காவல் அழித்து.

தத்துவப்பொருள்: முத்தியைப் பெறத் துணை செய்யும் உடலை ஆன்மா கைவிடக் கருதினால் உலகம் பழி கூறும் என்று ஆன்மாவிடம் திருவருள் கூறுதல்.

6. மொழிநடை எழுதல் அரிதென விலக்கல்

கொளு: அவயவம் அரிதின் அண்ணல் தீட்டினும்
இவையிவை தீட்டல் இயலா(து) என்றது.

(தலைவியின் உருவத்தைப் படத்தில் எழுதும் பொழுது) அவளின் அவயங்களைத் தீட்டினாலும் அவைகளின் தன்மையை உன்னால் எழுத இயலாது என்று தோழி கூறியது.

அடிச்சந்த மால்கண் டிலாதன
காட்டிவந்(து) ஆண்டுகொண்டென்

Koviloor Digital Library

முடிச்சந்த மாமலர் ஆக்குமுன்
னோன்புலி யூர்புரையும்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக்
கன்னி அனநடைக்குப்
படிச்சந்தம் ஆக்கும் படம்உள
வோநும் பரிசகத்தே. (78)

பொருள்: வேதமும் திருமாலும் கண்டறியாத திருவடிகளை எனக்குக் காட்டித் தானே வந்து எனை ஆட்கொண்டு என் தலையில் அத் திருவடிகளைப் பெரிய மலராகச் சூட்டி அருளிய முன்னவனாம் இறைவனின் புலியூரை ஒக்கும் சிறந்த நிறத்தை உடையவளும், யாழொலி போன்ற மொழியினை உடையவளும் ஆகிய தலைவியின் அன்னத்தின் நடைபோலும் நடையை எழுதுகின்ற படம் உமது சித்திரச் சாலையின் கண் உளதோ (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தலைவியின் கால்களை எழுதமுடியுமே தவிர அவளது அன்ன நடையை எழுதிக் காட்ட முடியாது என்பது குறிப்பு. சந்தம் — ஓசைவடிவமான வேதம், கடிச் சந்தம்—மிக்க அழகு, அனநடை—அன்னநடை, படிச்சந்தம் — (வடமொழிச் சிதைவு) ஒன்றின் வடிவை உடையதாய் உள்ளதை அதுவாகவே கருதப்படும் இயல்பு. அன்ன நடையை அன்னமாகவே கருதுகின்ற இயல்பு.

தத்துவப்பொருள்: சிவத்தின் உபதேச உண்மை களையும், அருள் வழங்குதல் முதலிய தொழில்களையும் ஓவியத்தால் தீட்ட இயலாது என்று திருவருள் ஆன்மா விற்குக் கூறியது.

7. அவயவம் எழுதல் அரிதென விலக்கல்

கொளு: அவயவம் ஆனவை இவைஇவை என்றது.

தோழி, தலையின் உறுப்புக்கள் இன்னது இன்னது என்று குறித்துச் சொன்னது.

யாழும் எழுதி, எழில்முத்(து)
எழுதி, இருளின்மென்பூச்

Koviloor Digital Library

சூழும் எழுதியொர் தொண்டையும்
தீட்டியென் தொல்பிறவி
ஏழும் எழுதா வகைசிதைத்
தோன்புலி யூரிளமாம்
போழும் எழுதிற்றொர் கொம்பருண்
டேற்கொண்டு போதுகவே. (79)

பொருள்: தலைவனே, தலைவியின் மொழியாக யாழின் ஓசையையும் எழுதி, அவளுடைய பற்களின் வரிசையாக அழகிய முத்துக்களையும் எழுதி, அவளுடைய கூந்தலும் மாலையுமாக இருளின் கண் தோன்றுகின்ற மெல்லிய பூமாலைகளையும் எழுதி, உதடுகளாகக் கொவ்வைக் கனிகளையும் எழுதி, என்னுடைய பழைய பிறவிகள் ஏழினையும் பிரமன் என் தலையில் எழுதாக வண்ணம் வினையைத் தீர்த்த சிவபெருமானின் புலியூரில் உள்ள மாவடுவின் பிளவைக் கண்களாக எழுதி ஒரு கொடி உண்டாயின் அதனைக் கையில் ஏந்தி மடலேறி ஏம் மூர்க்கண் வருக (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: தொண்டை — கொவ்வைக்கனி, ஏழு — பிறவிகள் ஏழு.

தத்துவப்பொருள்: திருவருளாகிய தோழி, சிவத்தின் கருணையினை எழுத இயலாது என்று சிவத்தின் சிறப்பை ஆன்மாவிற்கு உணர்த்தியது.

8. உடம்படாது விலக்கல்

கொளு: அடுபடை அண்ணல் அழிதுயர் ஒழிகென
மடநடைத் தோழி மடல் விலக்கியது.

கொல்லுகின்ற வேற்படையைக் கையிலே உடைய தலைவனே, உன்னை அழியும்படி செய்கின்ற வருத்தத்தைத் தீர்ப்பாயாக என்று தோழி கூறித் தலைவனை மடல் ஏறவேண்டாம் என விலக்கியது.

ஊர்வாய், ஒழிவாய் உயர்பெண்ணைத்
திண்மடல் நின்குறிப்புச்

Koviloor Digital Library

சீர்வாய் சிலம்ப திருத்த
இருந்திலம் ஈசர்தில்லைக்
கார்வாய் குழலிக்குன் ஆதர(வு)
ஓதிக்கற் பித்துக்கண்டால்
ஆர்வாய் தரின்அறி வார்பின்னைச்
செய்க அறிந்தனவே. (80)

பொருள்: அழகிய சிலம்பை அணிந்த தலைவனே, உயர்ந்த பனைக் கருக்குகளால் செய்யப்பெற்ற மடலில் ஏறி ஊர்ந்து செல்வதை ஒழிப்பாயாக. உன்னுடைய காதற் குறிப்பைத் திருத்துகின்ற விருப்பை உடையோம் அல் லோம். (மறுக்கவிரும்போம்) சிவனின் தில்லைக்கண் உள்ள, கரிய கூந்தலை உடையவளாகிய தலைவிக்கு நின்னுடைய கருத்தை அறிவித்தால், அவள் உன் காதலுக்கு சில குறிப்புடன் உடன்படலாம். அதனை அறிவார் யார்? அங்ஙனம் உடன்படாளாயின் நீ அறிந்தவற்றைப் பின்னர் சொல் வாயாக.

சொ.பொ.வி.: தலைவனை ஏற்றுக் கொள்ளும்படியாகச் சில வார்த்தைகளால் தோழி கூறினாலும் தலைவி தன்னுடைய உடன்பாட்டை நேரிடையாகச் சொல்ல மாட்டாள். அதுதான் தமிழ்ப் பெண்மையின் இயல்பு. எனவே யாரறிவார் என்ற தொடர்பு பாடலில் அமைந்து உள்ளது. ஊர்வாய் — மடல்ஊர்தல். பெண்ணை — பனைமரம், குறிப்பு — விருப்பம், திருத்தம் — மறுப்ப, ஓதி — சொல்லி, கற்பித்து — கற்பனையில் சில சொற்களைக் கற்பித்து, வாய் — வாய்ப்பு.

தத்துவப்பொருள்: திருவருள் ஆன்மாவின் விருப்பத்தை சிவத்தலைவியிடம் சென்று விண்ணப்பிப்பேன் என்றும், சிவத்தலைவி அதனை ஏற்குமாயின் பின்னர் நிகழுவதை யார் அறிவார் என்று திருவருள் ஆன்மாவிடம் கூறியது.

9. உடம்பட்டு விலக்கல்

கொளு: அரவரு நுண்ணிடைக் குரவரு கூந்தல்என்
உள்ளக் கருத்து விள்ளாள் என்றது.

Koviloor Digital Library

பாம்பின் படத்தைப் போன்று அல்குலை உடைய இடையினையும், மணம் பொருந்திய கூந்தலையும் உடைய தலைவி என் மனத்திடை தோன்றும் நினைவையே உடையவள். எனவே என் கருத்து வேறு அவள் கருத்து வேறு அல்ல எனத் தோழி சொல்லியது.

பைந்நாண் அரவன் படுகடல்
வாய்ப்படு நஞ்சமுதாம்
மைந்நாண் மணிகண்டன் மன்னும்
புலியூர் மணந்தபொன்இம்
மொய்ந்நாண் முதுதிரை வாயான்
அழுந்தினும் என்னின்முன்னும்
இந்நாள் இதுமது வார்குழ
லாட்(கு) என்கண் இன்னருளே. (81)

பொருள்: படத்தை உடைய பாம்பை இடையில் நாணாக உடையவன். மேலும் கடலிடத்தே தோன்றிய நஞ்சை அமுதாக உண்டு, கருமை நிறமே நாணும்படியாக, நீலமணி போன்ற நிறம் கொண்ட கண்டத்தை உடையவனாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள புலியூரில் வாழும் திருமகள் போன்ற தலைவி, கடலாடும் காலத்தில் கடலின் கண் நான் மூழ்கினால் அவளும் எனக்கு முன்னே மூழ்குவாள், நீண்ட கூந்தலை உடைய தலைவிக்கு என்கண் உண்டாகிய அருள் இத்தன்மையாகும்.

சொ.பொ.வி.: முதற்பாடலில் தான் சொன்ன குறிப்பைக் கொண்டு தலைவி உடன்படாவிட்டால் தன்னால் அறிய முடியாதது என்று கூறி உடம்படாதது போல் மடலை விலக்கினாள். இப்பாடலில் கடலில் தான் விழுவதற்கு நினைக்கும் பொழுது அவரும் விழுவாள் என்று தன் கருத்திற்கு உடன்பட்டவள் தலைவி என்றுகூறித் தலைவனை மடல் விலக்கினாள். முதற் பாடலில் தலைவி தன்னோடு உடன்படாதது போலக் கூறப்பட்டது. பை— படம், நாண் — இடையில் கட்டும் கயிறு, முதுதிரை — பழமையான கடல், அழுந்தினும் — மூழ்கினும்.

தத்துவப்பொருள்: சிவத்தைப் பெற்றே ஆக வேண்டும் என்று உறுதியாக நிற்கும் ஆனமாவைக் கண்டு திருவருள்

Koviloor Digital Library

நீ ஒன்றும் செய்யவேண்டாம், சிவம் என் வழிப்பட்டது, நானே சென்று உன்குறை கூறிச் சிவனருளை நீ பெற வைப்பேன் என்று ஆன்மாவிடம் கூறியது.

மடல்திறம் முற்றிற்று

II. குறைநயப்புக் கூறல்

தோழி தலைவனிடம் மடல் ஏறுதலை விலக்குமாறு கூறி அவனுடைய குறையை ஏற்றுக் கொண்டாள். அவ்வாறு ஏற்றுக்கொண்ட அவள் தலைவியிடம் சென்று தலைவனின் குறையை எடுத்துக் கூறுதல் இப்பகுதியாகும். இது எட்டுத் துறைகளை உடையது.

1. குறிப்பறிதல்

கொளு: நறைவளர் கோதையைக் குறைநயப்பித்தற்(கு)
உள்ளறி குற்ற ஒள்ளிழை யுரைத்தது.

மணமிக்க மாலையை உடைய தலைவியிடம் தலைவனின் குறையைக் கூறி, அவள் தலைவனை விரும்பு கின்ற விருப்பத்தினை அறிந்துகொள்ளும் தோழியின் நிலையைக் கூறியது.

தாதேய் மலர்க்குஞ்சி அஞ்சிறை
வண்டுதண் தேன்பருகித்
தேதே எனும்தில்லை யோன்சேய்
எனச்சின வேல்ஒருவர்
மாதே புனத்திடை வாளா
வருவர்வந்(து) யாதும்சொல்லார்
யாதே செயத்தக் கதுமது
வார்குழல் ஏந்திழையே. (82)

பொருள்: மகரந்தம் நிறைந்துள்ள மலரை அணிந்துள்ள தலைமுடியில் வண்டுகள் தேனைப்பருகித் தேதே என இசைபாடும் தில்லைக்கண் எழுந்தருளியுள்ள கூத்தப் பெருமானின் திருமகனாகிய முருகன் என்றே சொல்லும்

Koviloor Digital Library

படியான வேலன் நம் தினைப்புனத்திற்குப் பலகாலும் வருவார். வந்தவர் ஒன்றும் பேசமாட்டார். தலைவியே அவரிடத்து நாம் செய்யத்தக்கது யாது? நான் அறிந்திலேன் எனத் தோழி கூறினாள்.

சொ.பொ.வி. தினைப்புனத்திற்குத் தலைவன் வந்ததை நான் அறிவேன் என்று தோழி கூறித் தலைவியின் முகக் குறிப்பை அறிய முற்பட்டாள். தாது — மகரந்தப்பொடி, குஞ்சி—ஆண்களின் தலைமுடி, சேய்—மகன், வாளா — அடிக்கடி.

தத்துவப்பொருள்: திருவருள் சிவத்தின் பால் அணுகி ஆன்மாவின் நிலை இது, ஆன்மாவைக் கருணையால் ஏற்றல் நம் கடன் என்று கூறியது.

2. மென்மொழியால் கூறல்

கொளு: ஒளிரு.று வேலவன் தளர்வுறு கின்றமை
இன்மொழி யவட்கு மென்மொழி மொழிந்தது.

வேலை ஏந்திய தலைவனின் தளர்ச்சியுற்ற தன்மையை இனிய சொற்களை உடைய தலைவிக்குத் தோழி மென்மை யாக எடுத்துரைத்தது.

வரிசேர் தடங்கண்ணி மம்மர்கைம்
மிக்கென்ன மாயங்கொலோ
எரிசேர் தளிரன்ன மேனியன்
ஈர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல்
பூங்கணை வேள்கொலென்னத்
தெரியேம் உரையான் பிரியான்
ஒருவன்இத் தேம்புனமே. (83)

பொருள்: செவ்வரி படர்ந்த கண்களை உடைய தலைவியே, ஒருவன் மயக்கம் உடையவனாய் தீயில் விழுந்த தளிரை ஒத்த மேனியினை உடையவனாய், கையில் தழையை உடையவனுமாய், நம்முடைய புன்த்தை விட்டு அகலாமலும், ஒன்றும் சொல்லாமலும் உலவுகின்றான். அவன் சிவபெருமானின் திருமகனோ, அல்லது

Koviloor Digital Library

மன்மதனோ, நம்மால் துணிய முடியவில்லை. இது என்ன மாயமோ என்றாள் (தோழி)

சொ.பொ.வி.: மம்மர் — மயக்கம், வாடியமேனி என்பதும், வாடாத் தழை என்பதும் சிறப்புடைத்து. புதல்வன்—முருகன், வேள்—மன்மதன், தேம்புனம் — இனிய தினைப்புனம்.

தத்துவப்பொருள்: திருவருள், சிவத்திடம் ஆன்மாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப்பணிந்த மொழிகளால் வேண்டிக் கொண்டது.

3. விரவிக் கூறல்

கொளு: வன்மொழி யின்மனம் மெலிவ(து) அஞ்சி
மென்மொழி விரவி மிகுத்து ரைத்தது.

தலைவனின் குறையைத் தலைவியிடம் கூறுமிடத்து, தலைவியின் மனம் வாடாத வண்ணம் மென்மையாகவும், அதே நேரத்தில் தலைவனுடைய குறையை அழுத்த மாகவும் தோழி கூறியது.

நீகண் டனையெனின் வாழலை
நேரிழை அம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோர்
அலவன்தன் சீர்ப்பெடையின்
வாய்கண் டனையதோர் நாவற்
கனிநனி நல்கக்கண்டு
பேய்கண்(டு) அனையதொன் றாகிநின்
றான்அப் பெருந்தகையே. (84)

பொருள்: தலைவியே, பொன்னம்பலத்தானின் மகனைப் போன்ற தன்மையை உடைய ஒருவன் தினைப் புனத்தில், ஒரு ஆண் நண்டு பெண் நண்டினது வாயில் வண்டு போன்ற நாவல் பழத்தைக் கொண்டு போய்க் கொடுக்க, அதனைக் கண்டு அப்பெருந்தகை பேயைக் கண்டதைப் போல் நின்றான். அதனை நீ கண்டால் உயிர் வாழமாட்டாய் என்று கூறினாள்.

Koviloor Digital Library

சொ.பொ.வி.: ஆண் நண்டும், பெண் நண்டும் ஒன்றி நிற்பதைக் கண்ட தலைவன் தானும் தலைவியும் அவ்வாறு இருக்க முடியவில்லையே என்று ஏங்கிப் பேய் பிடித்தவர்கள் எவ்வாறு தன் உணர்வு இல்லாது இருப்பார்களோ அதுபோலத் தலைவனும் தன் உணர்வு இன்றி நின்றான் என்பது கூறப்படுகிறது. இது மென்மொழி, நீ வாழமாட்டாய் என்று கூறியது வன்மொழி. இரண்டும் அமைந்ததால் இது இத்துறை ஆயிற்று. வாழலை — வாழ மாட்டாய், அலவன் — நண்டு, பெடை — பெண்.

தத்துவப்பொருள்: சிவனிடத்து ஆன்மாவிற்கு உள்ள இடையறாத காதலைத் திருவருள் கூறியது.

4. அறியாள் போறல்

கொளு: அறியாள் போன்று குறியாள் கூறியது.

தோழி கூறியவற்றை ஏற்காதவள் போலத் தலைவி தொடர்பில்லாத வேறோர் செய்தியைக் கூறுதல்.

சங்கம் தருமுத்தி யாம்பெற
வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப்
பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலின்
ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்தில்லை
வானவன் நேர்வருமே. (85)

பொருள்: மிகுந்த ஆபரணங்களை உடையவளே, பழமையாகிய மரக்கலங்களாகிய படகுகளால் சிறந்த கடலானது, தில்லையில் வாழுகின்ற தேவனாகிய இறைவனுக்கு ஒப்பாகும். எவ்வாறு என்றால் கடலானது சங்கு தருகின்ற முத்துக்களை, அதனைப் பிரித்து எடுப்பவர்களுக்கு அன்றி நாமும் பெறும்படியாக மிகுந்த உப்பங் கழிகளைப் பொருந்தியுள்ளது. மேலும் மிகுந்த நீரை உடையதாகிய கங்கை முதலாகிய ஆறுகளையும் தன்னகத்தே கடல் ஏற்றுக் கொள்ளுகிறது. மேலும் மிகப் பெரிய

Koviloor Digital Library

படகுகள் உலவும் வண்ணம் உள்ளது (என்று தலைவி தோழியின் கருத்தை ஏற்காதவள் போலக் கடலாகிய வேறு ஒரு பொருளைப் பற்றிப் பேசினாள்.)

சொ.பொ.வி.: இப்பாடல் சிலேடை அமைப்பைப் பெற்றதாகும். தில்லை இறைவனையும் கடலையும் சிலேடையாகக் கூறுகிறது என்றாலும் உட்பொருளாகத் தோழியின் கூற்றுக்கு மறுமொழியாகவும் அமைந்துள்ளது. அதாவது பெரிதாகிய கடல் தன்னிடத்தில் உள்ள முத்தினை முத்துச் சேகரிப்பார்க்கு மட்டுமின்றிக் கடலாட வருகின்ற நாமும் பெறும்படி சிறிய உப்பங்கழியிடத்தே எளிதாக வருமாறு போலப் பெரியோனாகிய தில்லைத் தலைவன் தன்னிடத்தில் உள்ள புணர்ச்சி இன்பத்தினை நான் பெறும்படி தோழியாகிய உன்னிடத்தில் எளிமையாக வந்திருக்கிறான்.ஆதலால் வேண்டியதை நீ செய்வாயாக என்று உள்ளுறை அமைந்து காணப்படுகிறது.

சிலேடை ஒப்புமை: தில்லை இறைவனுக்கு — பெரியவர்கள் பெறுகின்ற முத்தியை அன்பில்லாத நாம் பெறும்படி திருவடியை உடையவன். மிக்க நீராகிய கங்கையைச் சடையிலே கொண்டவன். பற்று என்னும் பறவைகள் உலாவுகின்ற தலையோட்டைக் கைகளிலே உடையவன் (பிச்சைப் பாத்திரமாக). கடலுக்கு — முத்துக் குளிப்பவர்க்கு அன்றிக் கடலாடுவார் பெறும் வண்ணம் முத்துக்களைச் சிறிய உப்பங்கழியில் தரும். கங்கை முதலிய ஆறுகளைத் தன்னிடத்தில் கலக்க வைக்கும். படகுகள் மிகுதியாக உலவுகின்ற அலைகளைப் பெற்றிருக்கும்.

தத்துவப்பொருள்: கடல் சிவபெருமானை ஒத்ததைப் போலச் சிவஞானத்தால் தரிசிப்பார்க்கு உலகத்தில் எல்லாம் சிவமாகவே தோன்றும் என்பது உணர்த்தப் பெறுகிறது.

5. வஞ்சித்து உரைத்தல்

கொளு: நெஞ்சம் நெகிழ்வகை வஞ்சித்(து) இவையிவை
செஞ்சடை யோன்புகழ் வஞ்சிக்(கு) உரைத்தது.

Koviloor Digital Library

நெஞ்சில் நிகழ்வதை மறைத்து செஞ்சடையுடைய இறைவனின் புகழைத் தோழிக்குக் கூறியது.

புரங்கடந் தான்அடி காண்பான்
புவிவிண்டு புக்கறியா(து)
இரங்கி(டு)எந் தாய்என்(று) இரப்பத்தன்
ஈரடிக்(கு) என்இரண்டு
கரங்கள்தந் தான்ஒன்று காட்டமற்(று)
ஆங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை அம்பல
முன்றில்அம் மாயவனே. (86)

பொருள்: முப்புரங்களை வெற்றி கொண்டவனுடைய திருவடிகளைக் காண்பதற்காகப் பூமியைப் பிளந்து திருமால் சென்றார். அகங்காரத்தோடு சென்றதால் அங்கு காண முடியவில்லை. அதனால் தில்லைச் சிற்றம்பலத்தில் புகுந்து நீயே இரக்கம் காட்ட வேண்டும் எந்தாய் என்று வேண்டிக் கொள்ளத் தன்னுடைய இரண்டு திருவடிகளையும் அவனுக்கு ஒரு திருவடியாகச் சிவபெருமான் காட்டி அருள, மற்றொரு திருவடியையும் காட்டி அருள வேண்டும் என்று திருமால் தில்லையம்பலத்தில் காத்துக்கிடந்தான்.

சொ.பொ.வி.: தலைவி தன் உள்ளத்திலுள்ள காதலைக் கூறாது சிவபெருமானது பெருமை யாகத் திருமால் காத்துக் கிடந்ததைக் கூறினாள். இதன் மூலம் தோழனால் முதலில் கூடிய தலைவன் தோழியினால் சேர்வதற்கு நினைக்கின்றான் என்பது உட்பொருளாகிறது. புறம்—முப்புரம், புவி — பூமி, விண்டு — பிளந்து, மாயவன் — திருமால்.

தத்துவப்பொருள்: சிவஞான பூமியில் (மேலுலகம்) இன்பத்தைச் சேர்ந்த ஆன்மா தற்போதத்தால் சிவத்தைச் சேரமுடியாது என்பதை உணர்ந்து திருவருளைச் சேர்ந்து பேரின்பத்தை எய்தலாம் என்று காத்துக் கிடக்கிறது.

6. புலந்து கூறல்

கொளு: திருந்திய சொல்லில் செவ்வி பெறாது
வருந்திய சொல்லின் வகுத்து ரைத்தது

Koviloor Digital Library

திருந்திய சொற்களால் கூறாது வன்மையான சொற்களால் தோழி தலைவியிடத்துப் புலந்து (வெறுத்து) சொன்னது.

உள்ளப் படுவன வுள்ளி
உரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துணிதுணி
யேல்இது வேண்டுவல்யான்
கள்ளப் படிறர்க்(கு) அருளா
அரண்தில்லை காணலர்போல்
கொள்ளப் படாது மறப்ப(து)
அறிவிலென் கூற்றுக்களே. (87)

பொருள்: ஆராயத் தக்கவற்றை ஆராய்ந்து வெளிப்பட உரைப்பனவற்றை நீ உன்னுடைய உண்மைத் தோழியர்க்கு உரைப்பாயாக. நீ பொய்யென்று கருதுகின்ற நான் கூறிய சொற்களைத் துணிந்து ஏற்பாயாக. அல்லது ஏற்காது விட்டு விடுவாயாக. கள்ளத் தன்மை உடைய வஞ்சகர்களுக்கு அருள் செய்யாத சிவபெருமானது தில்லையை ஒரு காலும் காணாதவர்களைப்போல வாடுகின்ற அறிவில்லாதவளாகிய என் கூற்றுக்ளை உன்னுடைய உள்ளத்தில் கொள்ளத்தகாது என்றால் அதனை மறப்பாயாக, யான் வேண்டுவது இதுவே (என்று தோழி தலைவியிடம் கோபமாகக் கூறினாள்.)

சொ.பொ.வி.: உள்ளப்படுதல் — ஆராயப்படுதல், அவர் — நெருங்கிய தோழியர், படிறு — பொய், துணி — ஏற்றுக் கொள், கள்ளம் — வஞ்சனை, அறிவிலி — அறிவில்லாத.

தத்துவப்பொருள்: ஆன்மாவைக் கூட்டும் உதவி திருவருளுக்கே உரியதாகையால் அதுவே வழிப்படுத்தும் சிவத்தோடு ஆன்மாவைக் கூட்டுவிக்கும். ஆனால் சிவம் தன்னுடைய கருணை மிகுதியால் ஆன்மாவோடு கலந்தமையை மறைத்ததே என்று திருவருள் புலந்தது.

7. வன்மொழியாற் கூறல்

கொளு: கடல்உல(கு) அறியக் கமழலந் துறைவன்
மடலே றும்என வன்மொழி மொழிந்தது.

Koviloor Digital Library

கடல்சூழ்ந்த உலகத்தில் உள்ள மக்கள் துய்க்கும்படி மணம் கமழுகின்ற உப்பங்கழிகளை உடைய கடல்துறைத் தலைவன் மடலேறப் போகின்றான் எனத் தோழி தலைவி யிடம் வன்மையாகக் கூறி அவனுடைய குறையை எடுத்துச் சொல்லியது.

மேவிஅும் தோல்உடுக் கும்தில்லை
யான்பொடி மெய்யிற்கையில்
ஓவியம் தோன்றும் கிழிநின்
எழில்என்(று) உரையுளதால்
தூவியம் தோகையன் னாய்என்ன
பாவம்சொல் ஆடல்செய்யான்
பாவிஅந் தோபனை மாமடல்
ஏறக்கொல் பாவித்ததே. (88)

பொருள்: விருப்பத்துடன் தோலையே ஆடையாக உடுத்திய தில்லையம்பல நாதனுடைய திருநீறு உடம்பு முழுவதும் பூசப் பெற்றிருந்தது. கையில் பிடித்திருந்த கொடியில் எழுதப் பெற்றிருந்த உருவம் உன்னுடைய வடிவாக இருந்தது. இவ்வாறு தலைவன் தோன்றுவதற்குக் காரணமாகிய தீவினையை யான் அறியேன். என்னிடத்தில் எதுவும் உரையாடாது நிற்கின்றான். எனவே அப்பாவி (தலைவன்) பனையின் பெரிய மடலில் ஏறுவதற்காக நினைததானோ, ஐயோ (என்று தோழி தலைவியிடம் கூறினாள்).

சொ.பொ.வி.: மேவி — விரும்பி, கிழி — கொடி, என்னபாவம் — என்னதீவினை சொல்லாடல் — உரை யாடல், பாவித்தது — நினைத்தது.

தத்துவப்பொருள்: ஆன்மா உலகத்து ஆசாரங்களை நினைத்து உயிர் விடவும் துணிந்தது. ஆதலால் யான் அறிய ஆன்மாவுக்கு வெளிப்படையாக அருள் செய்க என்று சிவத்திடம் திருவருள் வேண்டியது.

Koviloor Digital Library

8. மனத்தொடு நேர்தல்

கொளு: அடல்வேலவன் ஆற்றானெனக்
கடல்அமிழ் தன்னவள் காணல் உற்றது.

கொலைத் தொழிலில் சிறந்த வேலினைக் கையினில் ஏந்திய தலைவன் ஆற்றான் எனத் தோழி சொல்லக் கேட்டுக் கடலில் பிறந்த அமுதம் போன்ற தலைவி தலைவனைக் காண எண்ணியது.

பொன்னார் சடையோன் புலியூர்
புகழார் எனப்புரிநோய்
என்னால் அறிவில்லை யானொன்(று)
உரைக்கிலன் வந்தயலார்
சொன்னார் எனும்இத் துரிசுதுன்
னாமைத் துணைமனனே
என்ஆழ் துயர்வல்லை யேற்சொல்லு
நீர்மை இனியவர்க்கே. (89)

பொருள்: பொன்னை ஒத்த சடையினைக் கொண்ட இறைவனின் தில்லையை வாழ்த்தாதவர்களைப் போல வருத்தும்படியான என்னுடைய நோய் என்னால் அறியப் படவில்லை என்றாலும் இதுபற்றி நான் ஒன்றும் மறைக்க மாட்டேன். என்னுடைய மனமே, "ஊரார் சொன்னார்" என்று தோழியாகிய இவள் வந்து சொல்லுகின்ற இக்குற்றம் என்கண் வாராமல் தலைவனுடைய ஆற்றாமை கூறக் கேட்ட என்னுடைய துயரத்தை உன்னால் கூற முடியும் என்றால் இனியவனாகிய தலைவனிடத்தில் நீ சென்று சொல்லுவாயாக (என்று தலைவி தன் மனத்தைப் பார்த்துக் கூறியது)

சொ.பொ.வி.: அறியவில்லை — அறியாதது, அயலார் — ஊரார், துரிசு — குற்றம், இனியவன் — தலைவன்.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் ஆற்றாமை தன்னால் வந்தது என்று உலகம் பழி தூற்றா வண்ணம் சிவமானது தன்னுடைய உள்ளத்தை (சத்தியை) நீ சென்று ஆன்மாவுக்கு அருளை உணர்த்துவாயாக என்று கூறியதாம்.

குறைநயப்புக் கூறல் முற்றிற்று

Koviloor Digital Library

12. சேட்படை

சேய்மைக் கண் (தூரத்தில்) நீக்கி நிறுத்துதல். அதாவது தன்னிடத்தில் குறை நேர்ந்த தலைவனுக்குத் தோழி குறை நயந்தாள் என்றாலும் தலைவியினுடைய அருமையை அவன் உணரற்பொருட்டும், களவொழுக்கத்தில் காலத்தை நீட்டிக்காது விரைவில் திருமணம் செய்தற் பொருட்டும் தலைவன் கூறியவற்றுக்கெல்லாம் மறுப்புச் சொல்லி அவனைப் போக்குதலாம். இது இருபத்தாறு துறைகளை உடையது.

1. தழை கொண்டு சேறல்

கொளு: கொய்ம் மலர்க் குழலி குறைந யந்தபின்
கையுறை யோடு காளை சென்றது.

பறித்த பூவைத் தலையிலே சூடியுள்ள தலைவி தனக்கு உடன்பட்டபின் அவளுக்காகக் கையுறைப் பொருளை ஏந்திக் கொண்டு தலைவன் தோழிமுன் சென்றது.

தேமென் கிளிவிதன் பங்கத்(து)
இறையுறை தில்லையன்னீர்
பூமென் தழையும்அப் போதும்கொள்
ளீர்தமி யேன்புலம்ப
ஆமென்(று) அருங்கொடும் பாடுகள்
செய்துநும் கண்மலராம்
காமன் கணைகொண்(டு) அலைகொள்ள
வோமுற்றக் கற்றதுவே. (90)

பொருள்: தேன்போன்ற இனிய சொற்களைக் கொண்ட, உமையவளைத் தன் பாகத்தில் கொண்ட, சிவபெருமான் வாழுகின்ற தில்லையை ஒத்தவர்களே, நான் கொண்டு வந்த பூவை உடைய மெல்லிய தழைகளையும் பூக்களையும் ஏற்றுக் கொண்டீர் இல்லை. நான் தனியே வருந்தும் வண்ணம் உங்களுடைய கண்களாகிய மலர் களால் (காமபாணத்தால்) எனக்குத் துன்பத்தையும்

Koviloor Digital Library

செய்கின்றீர். இதுதான் நீங்கள் கற்றதுவோ (என்று தலைவன் தோழியிடம் கூறினான்.)

சொ.பொ.வி.: கிளவி — சொல், போது — பூ, அலை கொள்ள — துன்பம் கொள்ள.

தத்துவப்பொருள்: திருவருள் துணை கொண்டு பூவும், நீரும் பச்சிலையும் கொண்டு வழிபடுதலாகிய கிரியையைச் செய்து ஞானத்தைக் கூடி சிவபோகமாகிய இன்பத்தைத் துய்க்க எதிர்நோக்குகின்ற என்னை (ஆன்மாவை) வருத்துவதோ நீ கற்றது என்று ஆன்மா திருவருளிடத்துக் கூறியது.

2. சந்தனத்தழை தகாதென்று மறுத்தல்

கொளு: பிறை நுதற் பேதையைக் குறைநயப் பித்தபின்
வாட்படை யண்ணலைச் சேட்படுத்தது.

பிறை போன்ற நெற்றியினை உடைய தலைவியைக் குறை நயப்பிப்பதற்காக வந்த வாள் படையை உடைய தலைவனை விலக்கியது.

ஆரத் தழையராப் பூண்(டு)அம்
பலத்துஅன லாடிஅன்பர்க்(கு)
ஆரத் தழையன்(பு) அருளிநின்
றோன்சென்ற மாமலயத்(து)
ஆரத் தழையண்ணல் தந்தால்
இவையவள் அல்குல்கண்டால்
ஆரத் தழைகொடு வந்தார்
எனவரும் ஐயுறவே. .(91)

பொருள்: பாம்பினை மாலையாகச் சூடி தில்லையம்பலத்தில் அனலைக் கையிலே ஏந்தி ஆடியருளித் தனக்கு அன்பு செய்பவர்களுக்கு அருளைக் கொடுத்து அவர்களுடைய இதயத்தில் நிலைத்து நிற்கின்றவன் சிவபெருமான். அவனுடைய பொதிகை மலையின் சந்தனத் தழையை நீ தந்தால் அதனை நாங்கள் எங்கள் இடையிலே சூடினால் அதனைக் கண்டவர்களுக்கு இதனைக்

Koviloor Digital Library

கொண்டு வந்து தந்தவர் யார்? என்று ஐயம் தோன்றிவிடும். ஆதலால் இந்தச் சந்தனத் தழை தகாது (என்று தோழி மறுத்துக் கூறினாள்)

சொ.பொ.வி.: ஆர — மாலை, அரா — பாம்பு, ஆரத் தழை — மிக்க, ஆரத்தழை — சந்தனத்தழை.

தத்துவப்பொருள்: சிவத் தலைவியிடம் பேரின்பம் பெற ஞான புட்பங்களைச் சூட்ட வேண்டுமே அன்றிப் பூமியில் தோன்றிய தழை கூடாது என்று திருவருள் ஆன்மாவிடம் மறுத்தது.

3. நிலத்தின்மை கூறி மறுத்தல்

கொளு: கொங்கலர் தாரோய் கொணர்ந்த கொய்தழை
எங்குலத் தாருக்(கு) ஏலா(து) என்றது.

விரிந்த மலர்கொண்ட மாலையை உடைய தலைவனே, நீ கொண்டு வந்த இப்பிற தழைகள் எம் குடியில் உள்ளார்க்குப் பொருந்தாது என்று தோழி மறுத்தது.

முன்தகர்த்(து) எல்லா இமையோரை
யும்பின்னத் தக்கன்முத்தீச்
சென்(று) அகத்(து)இல்லா வகைசிதைத்
தோன்திருந்(து) அம்பலவன்
குன்றகத்(து) இல்லாத் தழைஅண்
ணல்தந்தால் கொடிச்சியருக்(கு)
இன்(று)அகத்(து) இல்லாப் பழிவந்து
கூடும்என்(று) எள்குதுமே. (92)

பொருள்: தக்கன் வேள்விக்குச் சென்ற எல்லாத் தேவர்களையும் புடைத்து, பின்பு தக்கனுடைய மூன்று அக்கினிகளையும் குண்டத்தில் இல்லாதபடி அழித்த பெருமையை உடையவன் அழகிய தில்லையம்பலத்தான் ஆவான். அவருடைய திருமலையில் இல்லாத தழைகளை நாயகனே நீ தந்தால் குறத்தியராகிய எங்களுக்கு இன்று எம் குடியில் இல்லாத பழி வந்து சூழ்ந்து கொள்ளும். ஆதலால் நீ தரும் தழைகளைப் பெற்றுக் கொள்ள

Koviloor Digital Library

தயங்குகிறோம். தழையால் ஏதும் குற்றம் இல்லை (என்று தோழி தலைவனிடம் கூறினாள்).

சொ.பொ.வி.: முத்தீ — யாகத்தில் எழுப்பப்படும் தீ, கொடிச்சியர் — குறத்தியர், எள்குதும் — தயங்குகிறோம்.

தத்துவப்பொருள்: இத்தழை இப்புனத்திலுள்ள உண்மை அடியார்க்கு ஒவ்வாதது. ஆதலால் உன் அன்பைப் புலப்படுத்த வேறு தழைகொணர்க எனத் திருவருள் ஆன்மாவை மறுத்தது.

4. நினைவறிவுகூறி மறுத்தல்

கொளு: மைதழைக் கண்ணி மனமறிந்(து) அல்லது
கொய்தழை தந்தால் கொள்ளேம் என்றது.

கருமை மிக்க கண்களை உடைய தலைவியின் மனம் அறிந்தல்லது நீ கொண்டு வந்து தருகின்ற தழையை நாம் வாங்கிக் கொள்ளோம் என்றது.

யாழார் மொழிமங்கை பங்கத்(து)
இறைவன் எறிதிரை நீர்
ஏழாய் எழுபொழி லாய்இருந்
தோன்நின்ற தில்லையன்ன
சூழார் குழல்எழில் தொண்டைச்செவ்
வாய்நவ்வி சொல்லறிந்தால்
தாழா(து) எதிர்வந்து கோடும்
சிலம்ப தரும்தழையே. (93)

பொருள்: யாழ்போன்ற சொற்களை உடைய உமையவளை ஒரு பாகத்திலே கொண்ட சிவபெருமான் கடல் ஏழுமாக இருந்தோன் ஆவான். அவன் எழுந்தருளியுள்ள தில்லையைப் போன்று மாலை அணிந்து சுருண்டு நீண்ட கூந்தலையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையும், மான்போன்ற கண்ணினையும் கொண்ட தலைவியுடன் பேசி அவளுடைய சொல்லை அறிந்தபின் நீ தரும் தழையை வாங்கிக் கொள்வோம். அவள் சொல் அறியாது வாங்கிக்கொள்ள மாட்டோம் (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: திரைநீர் — கடல், பொழில் — பூமி, தொண்டை—கொவ்வைக்கனி, நவ்வி—மான், சிலம்பன் — தலைவன்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் திருவுளக் குறிப்பை வாய்மொழியில் அறிந்தபின் பின்னே கையுறையை ஏற்பேன் என்று திருவருள் ஆன்மாவிடம் சொல்லியது.

5. படைத்து மொழியான் மறுத்தல்

கொளு: அருந்தழை மேன்மேல் பெருந்தகை கொணரப்
படைத்துமொழி கிளவியில் தடுத்தவண் மொழிந்தது.

கிடைத்தற்கரிய தழையை மேலும் மேலும் பெருந்தகை யாம் தலைவன் கொண்டுவர — தோழி தானே படைத்துக் கொண்ட சொற்களால் அந்தத் தழையைப வாங்காது விலக்கியது.

எழில்வாய் இளவஞ்சி யும்விரும்
புமமற்(று) இறைகுறையுண்(டு)
அழல்வாய் அவிரொளி அம்பலத்(து)
ஆடும்அம் சோதிஅம்தீம்
குழல்வாய் மொழிமங்கை பங்கன்குற்
றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய் தடவரை வாயல்ல(து)
இல்லைஇப் பூந்தழையே. (94)

பொருள்: தலைவனே, நீ கொண்டுவந்த இத்தழையை யானேஅன்றி அழகிய இளவஞ்சிக் கொம்பினைப் போன்ற தலைவியும் விரும்புவாள். என்றாலும் ஒரு குறையுண்டு. அனலிடத்தே விளங்கும் ஒளியாய் உள்ளவன், அம்பலத்தே ஆடுகின்ற அழகிய சோதியானவன், இனிய குழல் ஓசை போன்ற சொற்கள் உடைய மங்கையைப் பாகத்திலே வைத்தவன். அப்படிப்பட்ட சிவபெருமானின் குற்றாலத் தின்கண் உள்ளதாகிய மலையில் உள்ள அசோகச் சோலை யின்கண் இத்தழை உள்ளதே அன்றி வேறு இடத்தில் இல்லை. (எனவே எப்படி எங்களிடம் வந்தது என்ற

Koviloor Digital Library

ஐயத்தை உண்டாக்கும் என்று தோழி தலைவனிடம் கூறினாள்.)

சொ.பொ.வி.: இளவஞ்சி — இளைய வஞ்சிக்கொடி, கோலம் — அழகு, பிண்டி — அசோக மரம், பொழில் — சோலை.

தத்துவப்பொருள்: சிவத்திற்கு எல்லா இலையும் உடையது என்றாலும் குற்றாலத்துக் தழை கூடாது என்பது படைத்து மொழியப்பட்டது.

6. நாணுரைத்து மறுத்தல்

கொளு: வாள்நுதல் பேதையை நாணுதல் உரைத்தது.

ஒளி சிறந்த நெற்றியை உடைய தலைவி இத்தழையைச் சூட நாணுவாள் என்று கூறி மறுத்தது.

உறுங்கண்ணி வந்த கணையுர
வோன்பொடி யாய்ஒடுங்கத்
தெறுங்கண்ணி வந்தசிற் றம்பல
வன்மலைச் சிற்றிலின்வாய்
நறுங்கண்ணி சூட்டினும் நாணும்என்
வாணுதல் நாகத்தொண்பூங்
குறுங்கண்ணி வேய்ந்திள மந்திகள்
நாணும்இக் குன்றிடத்தே. (95)

பொருள்: மிக்க தேனை உடைய மலர்களால் ஆகிய அம்பினை உடைய மன்மதன் சாம்பராய்க் கெட நெற்றிமீது கண்ணை உடைய சிற்றம்பலத்தானது மனைக்கண் உள்ள சிறிய வீடு கட்டி விளையாடுமிடத்து, நல்ல மாலைகளைத் தாயார் சூட்டினாலும் தலைவி நாணுவாள். இத்தகைய பெண்களைப் பற்றி என்ன சொல்வது? மேலும் எங்கள் மலையிடத்து நாகமரத்தினது ஒளிபொருந்திய மலர்களால் தொடுக்கப்பெற்ற சிறு மாலையைச் சூட்டினாலும் இளமந்திகள் கூட நாணி நிற்கும்.

சொ.பொ.வி.: மந்திகளே நாணும் என்பதால் தலைவி நாணம் கொள்வதில் வியப்பில்லை என்றவாறு. உறும்

Koviloor Digital Library

கண்ணி — உறும் கள் (மிக்க தேனை உடைய), கணை — பூவாகிய அம்பு, உரவோன் — மன்மதன், நாகம்—மரம், இளமந்தி — இளைய பெண்குரங்கு

தத்துவப்பொருள்: திருவருள் மெய்யடியார்கள் அணிவித்த மாலையை அன்றி உலகஇன்பம் வேண்டிச் சூட்டும் மாலைகளுக்கு சிவம் அஞ்சும் என்றவாறு.

7. இசையாமை கூறி மறுத்தல்

கொளு: வசைதீர் குலத்திற்கு இசையாது என்றது.

குற்றமற்ற எங்கள் குலத்திற்கு இது பொருந்தாது என மறுத்தல்.

நறமனை வேங்கையின் பூப்பயில்
பாறையை நாகநண்ணி
மறமனை வேங்கை எனநனி
அஞ்சும்அஞ் சார்சிலம்பா
குறமனை வேங்கைச் சுணங்கொடு
அணங்கலர் கூட்டுபவோ
நிறமனை வேங்கை அதள்அம்
பலவன் நெடுவரையே. (96)

பொருள்: தேனுக்கு உறைவிடமாகிய (மிக்கதேன்) வேங்கை மரப்பூக்கள் உதிர்ந்து கிடக்கும் பாறையை யானை கண்டு, அதனை அஞ்சாமையை உடைய புலி என்று அஞ்சிய மேகம் தவழும் மலையை உடைய தலைவனே, குறவர் மனையில் நிற்கும் வேங்கைமரப் பூக்களோடு தெய்வத்திற்குரிய செங்கழுநீர் மலரை நாங்கள் சூட்டப் பெறுவோமா. புலித்தோலை அணிந்த தில்லைச் சிற்றம்பலத்தான் மலையில் இது தகுமோ.

சொ.பொ.வி.: நாகம் — யானை, மஞ்சு — மேகம், அதள் — தோல்.

தத்துவப்பொருள்: யானை பாறையைப் புலி என மயங்கியதுபோல ஆன்மா மயக்கம் உடையதால் சிவத்தைச் சார இயலாது எனக் கூறியது.

Koviloor Digital Library

8. செவ்வியிலள் என்று மறுத்தல்

கொளு: நவ்வி நோக்கி செவ்வியிலள் என்றது.

மான்போன்ற பார்வையை உடைய தலைவி பக்குவத்தை உடையவள் அல்லள் என்று கூறியது.

கற்றில கண்டன்னம் மென்னடை
கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப்
பெறாகிள்ளை பிள்ளையின்றோன்(று)
உற்றிலள் உற்ற(து) அறிந்திலள்
ஆகத்(து) ஒளிமிளிரும்
புற்றில வாளரவ வன்புலி
யூரன்ன பூங்கொடியே. (97)

பொருள்: தலைவி வெளியே சென்று விளையாடாத காரணத்தால் இவளுடைய நடையைக் கண்டு அன்னங்கள் நடை கற்கவில்லை. இவளுடைய பார்வையைப் பெண் மான்களும் பெறவில்லை. இவளுடைய இனிய சொற்களைக் கிளிகளும் பெறவில்லை. எம்பிள்ளை போன்ற இத் தலைவி இன்று விளையாட்டில் ஈடுபடவுமில்லை. தன்னுடைய திருமார்பில் புற்றில் வாழுகின்ற பாம்பினை அணிகலனாக அணிந்துள்ள சிவபெருமானின் தில்லை போன்ற பூங்கொடியான தலைவி நீ என்னிடத்தில் குறை நேர வந்ததையும், நான் உனக்குக் குறை நேர்ந்தவாறையும் அவள் அறிந்ததில்லை (என்று தோழி தலைவனிடத்துக் கூறினாள்)

சொ.பொ.வி.: பிணை — மான், கிள்ளை — கிளி, ஒன்று உற்றிளள் — விளையாட்டில் ஈடுபடவில்லை. உற்றது — குறை உற்றதும், குறை நேர்ந்ததும், ஆகம் — மார்பு, அரவன் — பாம்பைச் சூடியவன்.

தத்துவப்பொருள்: சிவம் எழுந்தருளுதலும் அதன் அருள்நோக்கும், உபதேசமும் இன்னும் பெற்றிடவில்லை. திருவருளுக்கும் ஆன்மாவுக்கும் இடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சிவத்திடம் தெரிவிக்க உரிய பொழுது

Koviloor Digital Library

கிடைத்திடவில்லை எனத் திருவருள் ஆன்மாவுக்கு உணர்த்தியவாறு.

9. காப்புடைத்தென்று மறுத்தல்

கொளு: காப்புடைத் தென்று சேட்ப டுத்தது.

(தலைவியைச் சுற்றிலும்) காவல் உடையது என்று கூறித் தலைவனை விலக்கியது.

முனிதரும் அன்னையும் என்ஐயர்
சாலவும் மூர்க்கர்இன்னே
தனிதரும் இந்நிலத் தன்(று)ஐய
குன்றமும் தாழ்சடைமேல்
பனிதரு திங்கள் அணிஅம்
பலவர் பகைசெகுக்கும்
குனிதரு திண்சிலைக் கோடுசென்
றான்சுடர்க் கொற்றவனே. (98)

பொருள்: தலைவனே, நீ இவ்விடத்தில் காலம் தாழ்த்தல் செய்தால் தாய் எங்கள் மீது கோபப்படுவாள். எங்களுடைய ஐயன்மார்கள் மிகவும் மூர்க்கர்கள். இந்த இடமும் மக்களின் நடமாட்டம் இல்லாததால் தனிமையாகிய அச்சத்தைத் தரும். உம்முடைய இருப்பிடமாகிய மலையும் இப்பகுதியைச் சார்ந்ததன்று. சூரியனும் தாழ்ந்த சடைமேல் குளிர்ந்த சந்திரனை அணிந்த சிவபெருமானுடைய வளைந்த வில்லாகிய மேரு மலையின் சிகரத்தை அடைந்தான். ஆதலால் நீ இங்கே நிற்காதே (என்று தோழி தலைவனை விலக்கியது).

சொ.பொ.வி.: முனி — கோபம், ஐயர் — தந்தை, சகோதரர்கள், சால — பெரிது, செகுக்கும் — அழிக்கும்.

தத்துவப்பொருள்: சூரியன் மறைந்தது என்பது ஆன்மா சிவபோகம் எய்துவதற்குரிய சிவஞானத்தை இழந்ததாகும். அன்னை முனிதரும் என்பது அறக்கருணை. ஐயர் மூர்க்கர் என்பது மறக்கருணை. நிலம் நனி தரும் என்பது சிவஞான பூமி அருள் அனுபவத்தைத் தராத வண்ணம் வெற்றிடமாக உள்ளது என்பதாகும்.

Koviloor Digital Library

10. நீயே கூறென்று மறுத்தல்

கொளு: அஞ்சுதும் பெரும பஞ்சின் மெல்லடியைக்
கூறுவ நீயே கூறு கென்றது.

பெருமானே, யாம் பெரிதும் அஞ்சுகிறோம். பஞ்சு போன்ற மென்மையான அடிகளை உடைய தலைவிக்குக் கூற வேண்டுவனவற்றை நீயே சொல்வாயாக என்றது.

அந்தியின் வாயெழில் அம்பலத்(து)
எம்பரன் அம்பொன்வெற்பின்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை
பைந்தே னொடும்கடுவன்
மந்தியின் வாய்கொடுத்(து) ஓம்பும்
சிலம்ப மனம்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே
மொழிசென்றம் மொய்குழற்கே. (99)

பொருள்: அந்திக்காலத்து வானத்தைப் போல அழகிய திருமேனியை உடைய தில்லை அம்பலவாணப் பெருமான் அப்பாலுக்கு அப்பாற்பட்டவன், அவனுடைய அழகிய பொன்மலையிடத்து வேரோடு கூடிய பலாச்சுளையை ஆண் குரங்கு பெண் குரங்கின் வாயிலே கொடுத்து அதனைப் பாதுகாக்கும் மலையை உடைய தலைவனே, உன்னுடைய இனிய மொழிகளைத் தலைவியைச் சந்தித்து நீயே கூறுவாயாக. (என்று தோழி கூறியது)

சொ.பொ.வி.: அந்தி — மாலைநேரம், வெற்பு — மலை, பந்தி — வரிசை, கடுவன் — ஆண் குரங்கு, சிலம்பன் — மலையை உடையவன்.

தத்துவப்பொருள்: நாம் காண அம்பலத்தில் செம் மேனி அம்மானாக வீற்றிருக்கின்ற இறைவனின் திருமேனி அப்பாலுக்கு அப்பாலாய் அருவமாகி நிற்கும் என்றவாறு.

11. குலமுறை கூறி மறுத்தல்

கொளு: தொழுகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தேம் எனவுரைத்தது.

Koviloor Digital Library

வணங்கத் தக்க உயர்ந்த குலத்தைச் சார்ந்த தலைவனே, நீ கூறுகின்ற சொற்களுக்கு உரிய நிலையில் நாங்கள் இல்லை. நாங்கள் இழி குலத்தவர்கள் என உரைத்துத் தலைவனை மறுத்தது.

தெங்கம் பழம்கமு கின்குலை
சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத்(து) ஒளிர்குளிர்
நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றில்
குன்றன்ன மாபதைப்பச்
சிங்கம் திரிதரு சீறூர்ச்
சிறுமிஎம் தேமொழியே. (100)

பொருள்: தென்னம்பழம்(தேங்காய்) கமுகம் தார்களை மோதி வாழைகளை முறித்துப் பூந்தாதுக்கள் சிந்திக் கிடக்கின்ற தடாகமாகிய நீர்நிலையில் கிடக்கும் சிறப் பினை உடைய மருத நிலத்துக்குத் தலைவனாக இருக் கின்றாய் நீ. உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவ னாகிய சிற்றம்பல நாதனின் திருப்பரங்குன்ற மலை போன்ற, யானைக் கூட்டங்கள் அஞ்சும்படி சிங்கங்கள் உலாவுகின்ற சிறிய ஊரைச் சார்ந்தவள் எம் முடைய இனிய சொற்களை உடைய தலைவி ஆவாள் (என்று தோழி கூறியது.)

சொ.பொ.வி.: மருத நிலத்திற்குரிய தலைவன் உயர்ந்தவ னாகவும், குறிஞ்சி நிலத்திற்குரிய தலைவி இழிந்தவ ளாகவும் கூறப்படுகிறது. தெங்கம்பழம் — தேங்காய், கமுகு — பாக்கு, கதலி — வாழை, கொங்குஅம் பழனம் — பூந்தாதுக்களை உடைய நீர்நிலம், மா — யானை.

தத்துவப்பொருள்: மருத நிலமாகிய மாயேயம் ஆகிய நிலத்தில் வாழ்வது ஆன்மா. யானை அஞ்சும் சிங்கம் உலவுகின்ற மாயாதீதம் ஆகிய சித்து வடிவான இடத்தில் உள்ளது சிவம். இரண்டும் இணைந்து இன்பம் நுகர இயலும் என்பது எப்படி என்பதாம்.

Koviloor Digital Library

12. நகையாடி மறுத்தல்

கொளு: வாள்தழை எதிராது சேட்படுத் தற்கு
மென்னகைத் தோழி யின்னகை செய்தது.

ஒளிசிறந்த தழையை ஏற்றுக் கொள்ளாது தலைவனை விலக்குவதற்குப் புன்முறுவலை உடைய தோழி இனிமை தோன்றச் சிரித்தது.

சிலையொன்று வாணுதல் பங்கன்சிற்
றம்பல வன்கயிலை
மலையொன்று மாமுகத்(து) எம்ஐயர்
எய்கணை மண்குளிக்கும்
கலையொன்று வெங்கணை யோடு
கடுகிட்ட தென்னிற்கெட்டேன்
கொலையென்று திண்ணிய வா(று)ஐயர்
கையிற் கொடுஞ்சிலையே. (101)

பொருள்: வில்லைப் போன்ற நெற்றியை உடைய உமையவளைப் பாகத்தில் கொண்டவன், தில்லைச் சிற்றம் பலவன். அவனுடைய கயிலை மலையிடத்துத் திரண் டிருக்கும் யானைக் கூட்டத்தில் எங்கள் அண்ணன்மார் எய்தஅம்பு யானை ஒன்றின் மேல் பட்டுப் பிறகு மண்ணில் சென்று தைத்து மறையும். ஆனால் ஒற்றை மான் தலைவன் எய்த அம்பைக் கொண்டு விரைந்து ஓடும். இத்தகைய நிலையை உடையது தலைவன் கையிலே உள்ள வில் (என்று தோழி நகையாடினாள்)

சொ.பொ.வி.: தலைவியின் அண்ணன் அம்பு யானையை மாய்த்தது. ஆனால் தலைவனின் அம்போ மானின் மீது பாய்ந்தாலும் அதனைக் கொல்லவில்லை என்று ஏற்றத்தாழ்வைக் கூறி நகையாடியது. ஐயர் — அண்ணன்மார், கணை — அம்பு, மண் — நிலம், கலை — மான், கடுகிவிட்டது — விரைந்தது. ஐயர் கையில் — தலைவன் கையில்.

தத்துவப்பொருள்: குறிக்கோள் இல்லாது கெட்ட ஒன்றால் (ஆன்மாவால்) சிவம் எய்துவதற்கு அரியது

Koviloor Digital Library

என்பது உணர்த்தியவாறாம் (மான்மீது எய்த அம்பு இலக்கு அற்றதாம்).

13. இரக்கத்தொடு மறுத்தல்

கொளு: கையுறை எதிராது காதல் தோழி
ஐய நீபெரிது அயர்த்தனை என்றது.

கையுறையை ஏற்றுக் கொள்ளாது அன்புடைய தோழி தலைவனை நோக்கி ஐயனே, நீ பெரிதும் மயங்கி உள்ளாய் எனக் கூறியது.

மைத்தழை யாநின்ற மாமிடற்(று)
அம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பினர்
போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா
வினாய்க்கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன
பாவம் பெரியவரே. (102)

பொருள்: இருள்போன்ற கண்டத்தை உடைய சிற்றம் பலவனின் திருவடிக்கு உண்மையான அன்பாகிய பக்தியைச் செலுத்தி நின்ற அன்பரைப் போல மிகவும் நடுநடுங்கிக் கையில் தழையை ஏந்திக் கொண்டு யானையையும் மாலையும் வினவிக் கையில் வில்லும் இன்றித் தலைவன் மயக்கமாக வார்த்தைகளைக் கூறு கின்றானே, இவன் என்ன பாவம் செய்தானோ?

சொ.பொ.வி.: மைத்த — கருத்த, மிடறு — கண்டம், த்தழையா நின்ற மெய்யன்பு — உண்மை அன்பால் நின்ற பக்தி, கடமா — யானை, பெரியவன் — தலைவன்.

தத்துவப்பொருள்: சிவத்திடம் இடையறாப் பேரன்பு உடையார் — பித்தராய், பாலராய், பேயராய் விளங்குவர் என்று கூறப்பட்டது.

Koviloor Digital Library

14. சிறப்பின்மை கூறி மறுத்தல்

கொளு: மாந்தளிரும் மலர் நீலமும்
ஏந்தல் இம்மலை இல்லை என்றது.

மாந்தளிரும், நீலமலரும் இவளுடைய வடிவுக்கு அஞ்சித் தோன்றவில்லை என்று கூறி மறுத்தது. (இவை உன்னால் தரப்பெற்றால் ஐயத்திற்கு இடமாகும் என்பது குறிப்பு)

அக்கும் அரவும் அணிமணிக்
கூத்தன்சிற் றம்பலமே
ஒக்கும் இவள(து) ஒளிர்உரு
வஞ்சிமஞ் சார்சிலம்பா
கொக்கும் சுனையும் குளிர்தளி
ரும்கொழும் போதுகளும்
இக்குன்றில் என்றும் மலர்ந்தறி
யாத இயல்பினவே. (103)

பொருள்: வெண்மேகங்கள் படிந்துள்ள மலையை உடையவனே, உருத்திராட்ச மணிகளையும், பாம்பையும் அணிந்துள்ள மாணிக்கக் கூத்தனது சிற்றம்பலத்தை ஒத்த இவளது வடிவத்தை அஞ்சி, மரங்களும் சுனைகளும் அழகிய பூக்களையும், தளிர்களையும் மலர்ந்தறியாத இயல்பினை உடையன. ஆதலால் இங்கே இல்லாத இவற்றை நாம் அணிதல் தகாது என்றவாறு.

சொ.பொ.வி.: அக்கு—உருத்திராட்சம், மஞ்சு— மேகம், கொக்கு — மாமரம், போது — பூ.

தத்துவப்பொருள்: சிவத்தின் வடிவத்திற்கு அஞ்சி தளிரும் மலரும் தோன்றா என்று கூறுவதன் பயன் அவற்றை அணிவதால் சிறப்பில்லை என்பதாம். இவற்றைச் சிவத்துக்கு அணிவதால் சிறப்பில்லை. உள்ளம்தான் பூக்கவும் மலரவும் வேண்டும்.

15. இளமைகூறி மறுத்தல்

கொளு: முளைஎயிற்(று) அரிவை விளைவிலள் என்றது.

Koviloor Digital Library

முளைக்கின்ற பல்லைக் கொண்ட தலைவி மிகவும் இளையவள் ஆதலால் விளைவை அறியாள் என்று கூறி மறுத்தது.

உருகு தலைச்சென்ற உள்ளத்தும்
அம்பலத் தும்ஒளியே
பெருகு தலைச்சென்று நின்றோன்
பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை
முடியா முலைபொடியா
ஒருகு தலைச்சின் மழலைக்கென்
னோஐய ஒதுவதே. (104)

பொருள்: உருகுதலைச் செய்து வணங்குகின்ற அடியார் நெஞ்சிலும், சிற்றம்பலத்திலும் அருள்ஒளியைப் பெருக்கும் தன்மை உடையவன் இறைவன். அவனுடைய திருப்பெருந்துறையில் உள்ள தலைவியாகிய இவளுடைய நாற்றம் மிக்க தலைமயிர் கடை முடிய எழுந்ததில்லை. (நீண்டு வளரவில்லை) முலைகளும் இன்னும் வெளியே தெரியவில்லை. எப்பொழுது பேசினாலும் குதலை மொழி எனப்படும் ஒரே சொல்லை உடையாள். எனவே நீ சொல்லுவதுதான் யாது— (என்று தோழி தலைவனிடம் வினவினாள்)

சொ.பொ.வி.: நீண்ட கூந்தல், பருவத்திற்குரிய மார்பகம், வயதிற்குரிய பேச்சு தலைவிக்கு இல்லை என்று அவளுடைய இளமையைக் கூறித் தலைவனின் காதல் மொழிக்கு விளக்கம் கேட்டது என்பது குறிப்பாம். பிள்ளை — தலைவி, கூழை—கூந்தல், முடியா— நீளமில்லை, பொடியா—பருத்து எழவில்லை, குதலை — பொருள் விளங்காச் சொல்.

தத்துவப்பொருள்: சிவம் கருணை வழங்கும் நிலையில் ஆன்மா இல்லை என்பதை சிவத்தின் மேல் ஏற்றி உரைத்தது.

Koviloor Digital Library

16. மறைத்தமை கூறி நகைத்துரைத்தல்

கொளு: என்னை மறைத்தபின் எண்ணியது அரிதென
நன்னுதல் தோழி நகைசெய்தது.

என்னை மறைத்தவிடத்து நீ (தலைவன்) நினைத்த காரியத்தை முடிக்க இயலாது என்று அழகிய நெற்றியை உடைய தோழி கூறிச் சிரித்தது.

பண்(டு)ஆல் இயலும் இலைவளர்
பாலகன் பார்கிழித்துத்
தொண்டால் இயலும் சுடர்க்கழ
லோன்தொல்லைத் தில்லையின்வாய்
வண்டால் இயலும் வளர்பூந்
துறைவ மறைக்கின்என்னைக்
கண்டால் இயலும் கடனில்லை
கொல்லோ கருதியதே. (105)

பொருள்: முன்னொரு காலத்தில் ஆலிலையில் பள்ளிகொள்ளும் பாலனாகிய திருமால் நிலத்தைக் கிழித்துச் சென்று காணாது பின் தொண்டு செய்து கண்டு மகிழ்ந்த ஒளிபொருந்திய வீரக்கழலினை அணிந்திருக்கின்ற அம்பல வாணனின் பழைய தில்லையின்கண் வாழுகின்ற வண்டுகள் ஒலிக்கின்ற பூக்களை உடைய துறையை உடையவனே, என்னை மறைத்தவிடத்து நீ நினைத்த காரியம் முடிவதற்கு அரிதாகும் (என்று தோழி கூறியது)

சொ.பொ.வி.: பண்டு — முன்ஒரு காலம், பாலகன் — திருமால், கண்டால் — ஆராய்ந்தால், கடன் — செயல்.

தத்துவப்பொருள்: திருவருளை மறைத்துச் சிவத்தைச் சாரஇயலாது என்றவாறு.

17. நகை கண்டு மகிழ்தல்

கொளு: இன்னகைத் தோழி மென்னகை கண்டு
வண்ணக் கதிர்வேல் அண்ணல் உரைத்தது.

தோழியினுடைய அழகிய சிரிப்பைக் கண்டு ஒளி பொருந்திய வேலையுடைய தலைவன் கூறியது.

Koviloor Digital Library

மத்தகம் சேர்தனி நோக்கினன்
வாக்கிறந்(து) ஊறமுதே
ஒத்தகம் சேர்ந்தென்னை உய்யநின்
றோன்தில்லை ஒத்திலங்கு
முத்தகம் சேர்மென் னகைப்பெருந்
தோளி முகமதியின்
வித்தகம் சேர்மெல்லென் நோக்கமன்
றோஎன் விழுத்துணையே. (106)

பொருள்: நெற்றியிலே கண்ணை உடையவன், சொல்லையும் பொருளையும் கடந்து ஊறுகின்ற அமுதத்தை ஒத்து என்னுடைய நெஞ்சிலே பொருந்தி என்னைப் பிழைக்க வைக்கின்றவன். அத்தகைய சிவ பெருமானின் தில்லையை ஒத்து விளங்கும் முத்துப்போன்ற முறுவலையும், பெரிய தோள்களையும் உடையவளே, உன் முகமாகிய சந்திரனின் சதுரப்ப்பாடோடு கூடிய மெத்தன்ன பார்வைதான் எனக்குத் துணையாகும். (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: மத்தகம் — நெற்றி, வாக்கிறந்து — சொல்லும் பொருளும் கடந்து, முத்துஅகம்சேர் மென்னகை — முத்துப்போன்ற பற்கள் வெளியே தோன்றாத புன் முறுவல், வித்தகம் — சதுரப்பாடு (திறமை)

தத்துவப்பொருள்: திருவருள் நோக்கத்தை அன்றிச் சிவத்தைச் சார்தல் ஆகாது என்பதை ஆன்மா உணர்ந்தது.

18. அறியாள் போன்று நினைவு கேட்டல்

கொளு: வேந்தன் சொன்ன மாந்தளிர் மேனியை
வெறியார் கோதை யறியேன் என்றது.

தலைவன் சொன்ன மாந்தளிர் போன்ற மேனியை உடைய தலைவியை நறுமணம் மிக்க மாலையை உடைய தோழி அறியேன் என்று கூறுதல்.

Koviloor Digital Library

விண்இறந் தார்நிலம் விண்டவர்
என்றுமிக் கார்இருவர்
கண்இறந் தார்தில்லை அம்பலத்
தார்கழுக் குன்றினின்று
தண்நறுந் தா(து)இவர் சந்தனச்
சோலைப்பந் தாடுகின்றார்
எண்இறந் தார்அவர் யார்கண்ண
தோமன்ன நின்னருளே. (107)

பொருள்: விண்ணைக் கடந்தவர், நிலத்தைப் பிளந் தவர் என்று சொல்லப்படுகின்ற பெரியவர் இருவருடைய (பிரமன், திருமால்) கண்களால் காண முடியாதவர். தில்லையம்பலத்தில் உள்ளார். அவரது திருக்கழுக் குன்றத்தின் கண் உள்ள மகரந்தத் தாதுகள் மிக்கு இருக் கின்ற சந்தனச் சோலையிடத்துப் பந்து விளையாடு கின்றவர்கள் பலர் ஆவார்கள். தலைவனே, அத்தகைய பெண்களுள் நினது அருள் யாரின்கண் உள்ளது, கூறுவாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தலைவியை அறியாதாள் போல வேண்டுமென்றே தலைவனிடம் கூறியது பெறப்படுகிறது. விண்இறந்தார் — பிரமன், நிலம் விண்டவர் — திருமால், தாது — மகரந்தத்தூள்.

தத்துவப்பொருள்: சிவம் பொறி புலன்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும்உண்மை கூறப்படுகிறது.

19. அவயவம் கூறல்

கொளு: அவயவம் அவளுக்(கு) இவைஇவை என்றது.

(தலைவன்) என்னால் அறியப்பட்ட தலைவியின் அவயங்கள் இப்படி இருக்கும் என்று தோழிக்குக் கூறியது.

குவவின கொங்கை குரும்பை,
குழல்கொன்றை, கொவ்வைசெவ்வாய்,
கவவின வாள்நகை வெண்முத்தம்
கண்மலர் செங்கழுநீர்

Koviloor Digital Library

தவவினை தீர்ப்பவன் தாழ்பொழில்
சிற்றம் பலம்அனையாட்(கு)
உவவின நாள்மதி போன்றொளிர்
கின்ற(து) ஒளிமுகமே. (108)

பொருள்: தவ விரதங்களால் வரும் துன்பங்களை நீக்கி அன்பர்களுக்கு இன்னருளைத் தருகின்ற சிற்றம்பலத்தை ஒத்தவளாகிய தலைவியின் குவிந்த முலைகள், குரும்பையை ஒக்கும். அவளுடைய கூந்தல் கொன்றை மரத்துப் பூவை ஒக்கும். அவளுடைய வாய் கொவ்வைக் கனியை ஒக்கும். பல் முத்தை ஒக்கும், கண்கள் செங்கழுநீர்ப் பூவை ஒக்கும், ஒளிமுகம் அழகிய திங்களை ஒக்கும் (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: தலைவியைத் தெரியாது என்ற தோழிக்கு அவள் அறியும் வண்ணம் தலைவியின் உறுப்புகளின் அழகைத் தலைவன் கூறினான். குவவின — குவிந்த. குரும்பை — தென்னங்குரும்பை, கவவின — வாயிலுள்ள, தவவினை தீர்ப்பவன் — தவத்தால் வருகின்ற துன்பத்தை நீக்குபவன், உவவின—கலைகளோடு கூடிய மதியில் உள்ள நிழல்.

தத்துவப்பொருள்: ஆன்மா தன் அனுபவத்தில் உள்ள சிவத்தின் மேனியைத் திருவருளுக்குக் கூறியது.

20. கண்நயந்து உரைத்தல்

கொளு: கண்இணை பிறழ்வன வண்ணம் உரைத்தது.

தலைவியின் இரு கண்களின் அழகைத் தலைவன் உரைத்தது.

ஈசற்(கு) யான்வைத்த அன்பின்
அகன்றவன் வாங்கியஎன்
பாசத்தின் காரென்(று) அவன்தில்லை
யின்ஒளி போன்றவன்தோள்
பூ(சு)அத் திருநீ(று) எனவெளுத்(து)
ஆங்கவன் பூங்கழல்யாம்

Koviloor Digital Library

பே(சு)அத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங்கண்களே. (109)

பொருள்: தலைவியின் கண்கள் இறைவனிடத்தில் தான் வைத்த அன்பினைப் போல அகன்றது. இறைவனால் என்னிடத்திலிருந்து வாங்கப் பெற்ற என்னுடைய பாசம் போல் கருமைநிறம் உடையது. அவனுடைய தில்லையைப் போல ஒளி பொருந்தியது. அவனுடைய திருத்தோள்களில் அணியப் பெற்ற திருநீறு போல் வெளுத்தது. அவனுடைய திருவடித் தாமரைகளைப் போற்றி நான் பேசுகின்ற திரு வார்த்தைகளைப் போல நீண்டது (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: கார் — கருமை, தலைவியின் கண்களின் இயல்புக்குத் திருவருள் தொடர்பான நிலைகளை உவமை யாக்கிய இத்திருப்பாடல் குறிப்பிடத்தக்கதாம்.

தத்துவப்பொருள்: ஆன்மா தன்னுடைய நோக்கு எல்லாம் சிவமாய் இருப்பதைத் திருவருளிடம் வலி யுறுத்தியது.

21. தழையெதிர்தல்

கொளு: அகன்ற இடத்(து) ஆற்றாமை கண்டு
கவன்ற தோழி கையுறை எதிர்ந்தது.

தோழி தலைவன் கேட்ட உதவிக்கு மறுப்பாள் போல அகன்றிருந்தபொழுது அவனுடைய ஆற்றாமை கண்டு அவன் கொடுத்த கையுறையை ஏற்றது.

தோலாக் கரிவென்ற தற்கும்
துவள்விற்கும் இல்லின்தொன்மைக்(கு)
ஏலாப் பரி(சு)உள வேயன்றி
ஏலேம் இருஞ்சிலம்ப.
மாலார்க்(கு) அரிய மலர்க்கழல்
அம்பல வன்மலையில்
கோலாப் பிரசம்அன் னாட்(கு)ஐய
நீதந்த கொய்தழையே. (110)

Koviloor Digital Library

பொருள்: பெரிய மலைக்குரிய தலைவனே, (எமக்குத் தீங்கு செய்ய வந்த்) தோல்வியை ஏற்காத யானையை வென்றமைக்கும், நாங்கள் மறுத்தும் நீ போகாது துவண்டு நிற்கும் உன்னுடைய தன்மைக்கும், எமது குடியின் பழமைக்கும் — எளிய நிலையில் நாங்கள் ஏற்காத பரிசுகள் உண்டோ. திருமாலுக்கு அரியவராகிய மலர் போலும் திருவடியை உடைய தில்லைச் சிற்றம்பலவனின் மலையின் கண் வைக்கப்படாத தேனை ஒத்த தலைவிக்கு நீ தந்த கொய்யப்பட்ட தழையைத் தவிரப் பிறவற்றை ஏற்க மாட்டோம்.

சொ.பொ.வி.: தலைவனுடைய வீரம், குழைந்து நிற்றல், தலைவியின் குடிப்பெருமை இவற்றிற்கு எப்பரிசு அளித்தாலும் அப்பரிசுகளைத் தலைவியின் குடி ஏற்க வேண்டியதில்லை. ஏனென்றால் அப்பரிசுகளைவிட உயர்ந்த பரிசுகள் தலைவியின் குடியில் உள்ளன. என்றாலும் தலைவன் தருகின்ற தழை என்ற பரிசுமட்டும் மேற்கூறியவற்றால் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ற குறிப்பு பெறப்படுகிறது. தோலா — தோல்வி அடையாத, ஏலாப் பரிசு உள — பரிசுகளை ஏற்கும் இழி தன்மை இல்லை, மாலா — திருமால், கோலாப் பிரசம் — ஈக்கள் கட்டாத தேன், பிரசம் — தேன்.

தத்துவப்பொருள்: ஆன்மா அன்பே வாயிலாகச் சிவத்தைச் சேர்தற்குத் திருவருள் துணை செய்வேன் என்றது.

22. குறிப்பறிதல்

கொளு: தழை எதிரா(து) ஒழிவதற்கோர்
சொல்லறி யேனெனப் பல்வளைக்(கு) உரைத்தது.

(தோழி தலைவியிடம் சென்று) தலைவன் தந்த தழையை ஏற்றுக்கொள்ள இயலாது என்று கூறுவதற்கு உரிய சொல் ஒன்றும் அறியேன் என்று தோழி கூறியது.

கழைகாண் டலும்சுளி யுங்களி
யானையன் னான்கரத்தில்

Koviloor Digital Library

தழைகாண் டலும்பொய் தழைப்பமுன்
காண்பன்இன்(று) அம்பலத்தான்
உழைகாண் டலும்நினைப் பாகும்மென்
நோக்கிமன் நோக்கங்கண்டால்
இழைகாண் பணைமுலை யாய்அறி
யேன்சொல்லும் ஈடவற்கே. (111)

பொருள்: *அங்குசம் கண்ட வழி கோபிக்கின்ற யானையை ஒத்த தலைவனுடைய கரத்தில் தழையைக் கண்டதும் அப்பொழுது சொல்லத் தக்க பொய்யை முன்பு கண்டேன். ஆனால் (இன்று) தில்லையம்பலத்தானின் கரத்தில் உள்ள மானைக் கண்டதும் நினைவு கூறுத்தக்க கண்களை உடையதலைவியே, தலைவனுடைய வருத் தத்தைக் கண்டால் நினைவு வருகின்ற பெரிய முலையை உடைய தலைவியே, பொய் சொல்லும் மொழி அறியேன், இனி யாது செய்வதாம் (என்று தோழி கூறினாள்)*

சொ.பொ.வி.: *கழை — குத்துக்கோலாகிய அங்குசம், உழை—மான், இழைகாண் பணைமுலை — அணிகலன்கள் காணப்படுகின்ற மார்பகம்.*

தத்துவப்பொருள்: *சிவத்தை அன்றி வேறு எண்ணாத ஆன்மாவின் நிலை கண்ட பிறகு அதனைச் சிவத்தோடு சேர்ப்பிப்பது அன்றித் திருவருளுக்கு வேறு செயல் இல்லை என்றவாறு.*

23. குறிப்பறிந்து கூறல்

கொளு: ஏழைக்(கு) இருந்தழை தோழிகொண்டு உரைத்தது.

தலைவியிடம் தலைவன் தந்த தழையைத் தோழி கொடுத்துக் கூறியது.

தவளத்த நீறணி யும்தடந்
தோள்அண்ணல், தன்னொருபால்
அவள்அத்த னாம்மக னாம்தில்லை
யான்அன்(று) உரித்ததன்ன

Koviloor Digital Library

கவளத்த யானை கடிந்தார்
கரத்தக்ண் ணார்தழையும்
துவளத் தகுவன வோசுரும்
பார்குழல் தூமொழியே. (112)

பொருள்: வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையும், நல்ல மொழிகளையும் உடைய தலைவியே, வெண்மையான திருநீற்றை அணிந்த பெரிய தோள்களை உடைய அண்ணல் தன்னுடைய பாகத்தில் உள்ள உமையவளுக்குத் தந்தையும் மகனும் ஆகிய தில்லையான் ஆவான். அப் பெருமான் அன்று உரித்த யானையை ஒத்த இன்றைய யானையை நம்மேல் வராமல் காத்தவராகிய தலைவனின் தழை வாடலாமோ (என்று தோழி கூறியது).

சொ.பொ.வி.: சிவத்திலிருந்து சக்தி தத்துவம் தோன்றுவதால் உமையவளுக்கு இறைவன் தந்தையாவான். மேலும் சக்தி தத்துவத்திலிருந்து சதாசிவத் தத்துவம் தோன்றுவதால் மகனும் ஆவான் என்ற தத்துவப் பொருள் பெறப்படுகிறது. "இமவான் மகட்குத் தன்னுடைய கேள்வன் மகன் தகப்பன்" என்பது (திருவாசகம் திருப்பொற்சுண்ணம் . 13ம் பாட்டு) இங்கு நினைவுகூறத் தக்கது. "சிவம் சக்தி தன்னை ஈன்றும், சக்தி தான் சிவத்தை ஈன்றும்" (சிவஞானசித்தியார்) என்பதும் அது. தவளத்த — வெண்மைநிறம் உடைய, அவள் அத்தன் — அவளுக்கு அப்பன், கவளத்த யானை — கவளத்தை உண்டு மதங்கொண்ட யானை.

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்குத் துன்பத்தைக் காட்டலாமோ எனச் சிவத்திடம் திருவருள் வேண்டியது.

24. வகுத்துரைத்தல்

கொளு: கடித்தழை கொணர்ந்த காதல் தோழி
மடக்கொடி மாதர்க்கு வகுத்துரைத்தது.

மணமிக்க தழையை ஏற்றுக் கொண்டு உயிர்த்தோழி மடப்பம் மிக்க தலைவிக்கு வகுத்துரைத்தது.

Koviloor Digital Library

ஏறும் பழிதழை யேற்பின்மற்(று)
ஏலா விடின்மடன்மா
ஏறும் அவன்இட பங்கொடி
ஏற்றிவந்(து) அம்பலத்துள்
ஏறு மான்மன்னும் ஈங்கோய்
மலைநம் இரும்புனம்காய்ந்(து)
ஏறும் மலைதொலைத் தாற்(கு)என்னை
யாம் செய்வ(து) ஏந்திழையே. (113)

பொருள்: ஏந்திழையே, தலைவன் கொடுத்த தழையை ஏற்போம் என்றால் பழி நமக்கு வரும். அதனை நாம் ஏற்க வில்லை என்றால் அவன் மடல் ஏறுவான். தர்மத்தின் வடிவாகிய இடபக்கொடியினைத் தாங்கிய இறைவன் நமது பிறவித் துன்பத்தைப் போக்கத் தில்லையம்பலத்தின் கண் எழுந்தருளியிருக்கும் பெருமான் தங்கியிருக்கும் திரு ஈங்கோய் மலையின்கண் தினைப்புனத்தை அழித்து நம்மை நோக்கிவந்த யானையினை விரட்டிய தலைவர்க்கு நாம் செய்யும் உதவிதான் என்ன? ஏதும் அறிந்திலேன் என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

சொ.பொ.வி.: தழை ஏற்பதே தர்மம் என்று தோழி வற்புறுத்தினாள் என்பது கருத்து. அரன் — சிவபெருமான், இரும்புனம் — பெரிய தினைப்புனம்.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் பிறவியைத் தொலைப் பதற்காக இடபக்கொடி ஏந்தி அம்பலத்தில் ஆடுகிறான் சிவபெருமான் என்பதாம்.

25. தழையேற்பித்தல்

கொளு: கருங்குழல் மடந்தைக்(கு) அரும்பெறல் தோழி
இருந்தழை கொள்கென விரும்பிக் கொடுத்தது.

கரிய கூந்தலை உடைய தலைவிக்கு அருமை உடைய தோழி அழகிய தழையைக் கொள்க என விரும்பிக் கொடுத்தது.

Koviloor Digital Library

தெவ்வரை மெய்யெரி காய்சிலை
ஆண்டென்னை ஆண்டுகொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம்
பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண்
டாய்உள்ள வா(று)அருளான்
இவ்வரை மேற்சிலம் பன்எளி
தில்தந்த ஈர்ந்தழையே. (114)

பொருள்: நம்மிடத்துக் கொண்ட அன்பின் காரணமாக இம்லையைச் சார்ந்த தலைவன் எளிதாகக் கொண்டு வந்த இந்தத்தழை — மேருமலையை வில்லாக வளைத்து மாறு பாடானவர்களின் முப்புரத்தையும், அவர்கள் மேனியையும் எரியச் செய்தவன். என்னுடைய நெஞ்சாகிய கல்லை உருக்கியவன். பவளமலை போன்ற திருமேனியை உடையவன். அத்தகைய சிற்றம்பலத்தானின் கயிலாய மலையிடத்து அல்லாது பிறிதோரிடத்தில் இல்லை. எனவே இதை ஏற்றுக்கொள்வாயாக (என்ற தோழி கூறியது)

சொ.பொ.வி.: தெவ்வரை மாறுபாடானவர், மெய் — மேனி, செவ்வரை — பவளமலை.

தத்துவப்பொருள்: ஞானபூமியின் கண் வளர்ந்த கயிலைத் தழையை எளிதில் ஆன்மா தந்தது என்பதால் அரிய சிவத்தை எளிதில் கூடும் பரிபாகம் கிடைத்தது என்றவாறு.

26. தழை விருப்புரைத்தல்

கொளு: விருப்பவள் தோழி பொருப்பற்(கு) உரைத்தது.

தலைவியின் விருப்பத்தை அவளுடைய உயிர்த்தோழி தலைவனுக்குச் சொல்லியது.

பாசத் தளையறுத்(து) ஆண்டுகொண்
டோன்தில்லை அம்பலஞ்சூழ்

Koviloor Digital Library

தேசத் தனசெம்மல் நீதந்
தனசென்(று) யான்கொடுத்தேன்
பேசிற் பெருகும் சுருங்கு
மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலள்அன்றிச் செய்யா
தனஇல்லை பூந்தழையே. (115)

பொருள்: பாசமாகிய விலங்கை அறுத்து என்னை ஆண்டு கொண்டவனின் தில்லையம்பலத்தைச் சூழ்ந்த தேசத்தின் கண் இத்தழைகள் உள்ளன. மேலும் அச்சிறப்பே அன்றிச் செம்மலாகிய உன்னால் தரப்பட்டன. அத்தகைய தழையை நான் தலைவியிடம் கொண்டு போய்க் கொடுத் தேன். அப்பொழுது நிகழ்ந்தனவற்றைச் சொன்னால் அது நீளும். சுருங்கிய இடையினை உடைய தலைவி அப் பூந் தழையைப் அரைத்துத் தன் மேனியெங்கும் பூசிக்கொள்ளும் செயலைத் தவிர அனைத்தும் செய்தாள்.

சொ.பொ.வி.: தலைவி தலைவன் தந்த தழையை விருப்பத்தோடு ஏற்று மகிழ்ந்தாள் என்பது பெறப்படுகிறது. பாசம் — ஆணவம் , கன்மம், மாயை என்ற மும்மலங்கள், தளை — விலங்கு, செம்மல் — உயர்ந்தவன்.

தத்துவப்பொருள்: ஆன்மா தந்த பச்சிலை சிவத்திற்குப் பெரு விருப்பை அளித்தது.

சேட்படை முற்றிற்று.

13. பகற்குறி

தலைவன் தந்த தழையைப் (பரிசுப்பொருள்) தலைவி ஏற்குமாறு செய்த தோழி தலைமகனுடன் தலைவியைப் பகற்குறிக் கண் சந்திக்க வைத்தல். பகல் —பகற் பொழுது, குறி—குறிப்பிட்ட இடத்தில் சந்தித்தல். இது முப்பத்திரண்டு துறைகளை உடையது.

Koviloor Digital Library

1. குறியிடங் கூறல்

கொளு: வாடிடத்(து) அண்ணல் வண்தழை எதிர்ந்தவள்
ஆடிடத்(து) இன்னியல்(பு) அறிய உரைத்தது.

தலைவன் தந்த தழையை ஏற்றதலைவி விளையாடு கின்ற இடத்தின் இயல்பைத் தோழி தலைவனுக்கு அறியும்படி சொல்லியது.

வானுழை வாள்அம்ப லத்தரன்
குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாஇரு ளாய்ப்புற
நாப்பண்வண் தாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து
திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றாங்கெழில்
காட்டுமொர் கார்ப்பொழிலே. (116)

பொருள்: ஆகாயம் வரை நுழையத் தக்க ஒளியாய் உள்ளவனாகிய சிற்றம்பலத்தானின் மலை என்பதால் வெட்கப்பட்டு அதன் நான்கு புறமும் சூரியன் நுழைய முடியாத காரணத்தால் ஏற்பட்ட இருட்டில் நட்சத் திரங்கள் போலச் சுரபுன்னைகள் மலர்ந்து காட்சியளித்தன. அத்தகைய காட்சி நிறைந்து பளிங்குப் பாறையால் சந்திரன் வானிடத்து உள்ள வாழ்வை விட்டு விட்டுக் காட்டில் நுழைந்து வாழ்வு பெற்றாற் போலப் பேரழகைக் கொண்டது இவ்வரிய பூஞ்சோலையாகும். (இதில் தலைவி விளையாடுகிறாள் என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: வானுழை — ஆகாயத்தின், வெய்யோன் — சூரியன், புறம் — நான்கு பக்கம், தாரகை — நட்சத்திரம், நாகம் — நாகமரப் பூக்கள், பளிங்கு — பளிங்குப் பாறை.

தத்துவப்பொருள்: அருள் வழங்குகின்ற சிவத்தை உயிர் கலக்குமிடம் திருவருளால் குறிக்கப் பெறுகிறது.

Koviloor Digital Library

2. ஆடிடம் படர்தல்

கொளு: வண்தழை எதிர்ந்த ஒண்டொடிப் பாங்கி
நீடமைத் தோளியொடு ஆடிடம் படர்ந்தது.

தலைவனின் தழையை ஏற்றுக் கொண்ட வளைகளை அணிந்த தோழிநீண்ட தோள்களை உடைய தலைவியோடு விளையாடுமிடம் சென்றது.

புயல்வளர் ஊசல்முன் ஆடிப்பொன்
னோன்பினைப் போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றில்நின் றேற்றும்
அருவி திருவுருவில்
கயல்வளர் வாட்கண்ணி போதரு
காதரம் தீர்த்தருளும்
தயல்வளர் மேனியன் அம்பலத்
தான்வரைத் தண்புனத்தே. (117)

பொருள்: பொன்னை ஒத்தவளே, மீனை ஒத்த கண் களை உடையவளே, நீ போவாயாக. பிறவியால் வருகின்ற அச்சத்தைச் தீர்த்தரு ளுகின்ற உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட சிற்றம்பல நாதனின் திருமலையில் உள்ள சோலையினிடத்தே முதலில் ஊசலை ஆடியபின்பு அருவி நீரைக் கையால் எற்றி விளையாடுவோமாக (எனத் தோழி தலைவியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: புயல் — மேகம் தவழுகின்ற மலை, ஊசல் — ஊஞ்சல், எற்றும் — எற்றி, கயல் — மீன், திரு உருவான — திருமகளைப் போன்ற உருவினை உடைய, காதரம் — பிறவித் துன்பம், தண் — குளிர்ந்த.

தத்துவப்பொருள்: தனியிடத்தே ஆன்மாவோடு சிவம் தலைப்பெய்யத் திருவருள் அழைத்துச் சென்றது.

3. குறியிடத்துக் கொண்டு சேறல்

கொளு: அணிவளர் ஆடிடத்(து)ஆய வெள்ளம்
மணிவளர் கொங்கையை மருங்குஅ கன்றது.

Koviloor Digital Library

அழகுமிக்க விளையாடும் இடத்தில் இருந்த தோழியர் கூட்டத்திலிருந்து முத்துமணி ஆபரணங்களை அணிந்த தலைவியைப் பிரித்து (தலைவன் நிற்கும்) பக்கத்தில் தோழி சேர்த்தது.

தினைவளங் காத்துச் சிலம்பெதிர்
கூஉய்ச்சிற்றின் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர்
கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி
அம்பல வன்தன்வெற்பில்
புனைவளர் கொம்பர்அன் னாய்அன்ன
காண்டும் புனமயிலே. (118)

பொருள்: தன்னை வணங்கி எழுகின்றவருடைய வினைப்பெருக்கம் அனைத்தையும் சாம்பல் ஆகும்படி செய்து திருவெண்ணீறு அணிந்துள்ள சிற்றம்பலத்தானின் மலையில் உள்ள பூங்கொம்பை ஒத்த தலைவியே, தினை யாகிய வளத்தைக் காத்து மலைகளில் எதிரொலிகளை அழைத்து, சிறிய வீடுகளைக்கட்டி அருவி நீரில் பாய்ந்து, நல்ல மலர்களைப் பறித்து அங்குள்ள மயில்களையும் காண்குவம் வருவாயாக (எனத் தோழி தலைவியைத் தனியிடத்திற்கு அழைத்துச் சென்றாள்)

சொ.பொ.வி.: சிலம்பு — மலை, எதிர்கூஉய் — எதிரொலிகளை உண்டாக்கி, சிற்றில் — சிறுவீடு.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் மலவாசனையைப் போக்கிச் சொரூபநிலையில் உயிர்களோடு மணி ஒளி போல விளங்கி நிற்பான் வேண்டித் திருவருள் சிவத் தலைவியை அழைத்துச் சென்றது.

4. இடத்துய்த்து நீங்கல்

கொளு: மடத்தகை மாதரை இடத்தகத்(து) உய்த்து
நீங்கல் உற்ற பாங்கி பகர்ந்தது.

Koviloor Digital Library

மடமைத் தன்மை மிக்குடைய தலைவியைப் பகற் குறியிடத்துக் கொண்டுவிட்டதன் பின் தோழி அவளை விட்டு நீங்கும்பொழுது சொன்னது.

நரல்வேய் இனநின தோட்(கு)உடைந்(து)
உக்கநன் முத்தம்சிந்திப்
பரல்வேய் அறையுறைக் கும்பஞ்
சடிப்பரன் தில்லையன்னாய்
வரல்வேய் தருவன்இங் கேநில்உங்
கேசென்றுன் வார்குழற்(கு)ஈர்ங்
குரல்வேய் அளிமுரல் கொங்கார்
தடமலர் கொண்டுவந்தே. (119)

பொருள்: சிவபெருமானது தில்லையை ஒத்தவளே, யான் உவ்விடத்திலே சென்று வண்டுகள் மொய்க்கின்ற மகரந்தம் நிறைந்த மலர்களைப் பறித்து வந்து உன்னுடைய நீண்ட கூந்தலிலே சூடுவேன். காற்றால் ஒன்றுக்கொன்று உராய்ந்து ஒலியெழுப்பும் மூங்கில் மரக் கம்புகள் உன் தோளுக்குத் தோற்று முத்துக்களைச் சிந்தியுள்ளன. மேலும் பருக்கைக் கற்கள் மூடியபாறை உனது பஞ்சுபோலும் மெல்லிய கால்களுக்கு உருத்தும். ஆகவே நீ வர வேண்டாம். இங்கேயே நில் (என்று தோழி கூறினாள்).

சொ.பொ.வி.: தலைவனும் தலைவியும் சந்திக்கும் இடம்விட்டுத் தோழி அகன்றாள் என்ற குறிப்புப் பெறப் படுகிறது. நரல்வேய்இனம் — உராய்ந்து ஒலிக்கின்ற மூங்கில்மரக் கூட்டம், பரல்வேய்அறை — சிறுகற்கள் மூடிய பாறை, பஞ்சடி — பஞ்சு போன்ற கால்கள், பரன் — சிவ பெருமான், வாரல் என்பது வரல் என நின்றது. வேய்தருவன். சூட்டுவன்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி பரிபாகம் உற்ற ஆன்மா வருதலை நோக்கிக் கருணையோடு இருக்க வேண்டுமே அன்றித் தன்னோடு வருதல் வேண்டாம் எனத்திருவருள் கூறியது.

Koviloor Digital Library

5. உவந்துரைத்தல்

கொளு: களிமயிற் சாயலை ஒருசிறைக் கண்ட
ஒளிமலர்த் தாரோன் உவந்துரைத்தது.

களிப்புடைய மயில்போன்ற சாயலை உடைய தலைவியை ஒருபுறமாக நிற்கக் கண்ட தலைவன் மகிழ்ந்து உரைத்தது.

படமா சுணப்பள்ளி இக்குவ
டாக்கியப் பங்கயக்கண்
நெடுமால் எனஎன்னை நீநினைந்
தோநெஞ்சத் தாமரையே
இடமா இருக்கலுற் றோதில்லை
நின்றவன் ஈர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து
வைகிற்றுஇவ் வார்பொழிற்கே. (120)

பொருள்: முத்துவடம் பொருந்திய மார்பகங்களை உடையவளே, தில்லைக்கண் நின்றவனது கயிலை மலையில் உள்ள இச்சோலையிடத்து நீ வந்து தங்கியது இம் மலையைப் பாம்பணையாக்கி என்னைத் திருமாலாக எண்ணியோ— யான் பிரிந்தாலும் என் மனமாகிய தாமரையை உனக்குரிய தங்குமிடமாகக் கொள்ள நினைத்ததோ கூறுவாயாக (எனத் தலைவன் கூறினான்).

சொ.பொ.வி.: தலைவியைத் திருமகளாக எண்ணித் தலைவன் வியந்து பாராட்டினான். படமாசுணம் — படத்தை உடைய பாம்பு, பள்ளி — பாம்புப்படுக்கை.

தத்துவப்பொருள்: சிவபோகத்தில் அழுந்தியவர்கள் மதுஉண்ட வண்டுபோல அதிலே தோய்ந்து அதுவாகவே இருப்பர் என்ற அடிப்படையில் ஆன்மா சிவத்தால் முன்பு கிடைத்த இன்பத்தினை நினைத்து அதையே நினைந்து கூறியது.

Koviloor Digital Library

6. மருங்கணைதல்

கொளு: வாணுதல் அரிவை நாணுதல் கண்ட
கோதை வேலவன் ஆதர வுரைத்தது.

ஒளி பொருந்திய நெற்றியை உடைய தலைவி நாண முறுவதைக் கண்டு மாலையணிந்த வேலினைக் கையிலே கொண்ட தலைவன் அவளிடத்து ஆதரவாகச் சொல்லியது.

தொத்தீன் மலர்ப்பொழில் தில்லைத்தொல்
லோன்அருள் என்னமுன்னி
முத்தீன் குவளைமென் காந்தளின்
மூடித்தன் ஏர்அளப்பாள்
ஒத்(து)ஈர்ங் கொடியின் ஒதுங்குகின்
றாள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பணைமுலை காள்என்னுக்(கு)
இன்னும் பெருக்கின்றதே. (121)

பொருள்: கொத்துக்களைத்தரும் மலர்ச்சோலலையை உடைய தில்லையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது அருள்போல் வந்து எதிர்ப்பட்டுக் கண்ணீர்த் துளிகளைச் (முத்துக்களை) சிந்தாது நின்ற கண்ணாகிய குவளைகளைக் கையாகிய காந்தாள் பூவால் மூடி தன் அழகை அளந்து பார்ப்பதுபோலப் பக்கத்தில் உள்ள கொடியின்கண் நாணத்தால் தலைவி மறைந்தாள். அத்தகையவளின் இடை வருந்தப் பெரிதாக இருக்கின்ற முலைகளே, மேன்மேலும் பெருப்பது எதற்காக? இது நல்லதல்லவே (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: தொத்து — மலர்க்கொத்து, தொல்லோன் — பழமையானவன் சிவபெருமான், குவளை, காந்தள் — பூக்கள், ஏர் — அழகு, மருங்குல் . இடை, பித்தீர் — பித்தத்தை உடையீர், என்னுக்கு — எதற்கு.

தத்துவப்பொருள்: சிவபெருமான் மெய்யடியார்களுக்கு வலியே வந்துமுன்னே நிற்பது போலச் சிவம் தனக்கு முன்னே வந்து நின்றது என ஆன்மா வியந்து பாராட்டியது. இங்கு முலை பாராட்டப் பெற்றது இன்ப நிலைக்களனை வெறுப்பித்துப் பேரின்பத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது.

Koviloor Digital Library

7. பாங்கியறிவுரைத்தல்

கொளு: நெறிகுழற் பாங்கி அறிவறி வித்தது

அழகிய கூந்தலை உடைய தோழி இப்பொழுது நடந்ததை (தலைவன், தலைவி கூட்டத்தை) அறிந்தாள் என்பதைத் (தலைவன்) அறிவித்தது.

அளிநீ(டு) அளகத்தின் அட்டிய
தாதும் அணியணியும்
ஒளிநீள் சுரிகுழல் சூழ்ந்தஒண்
மாலையும் தண்நறவுண்
களிநீ யெனச்செய் தவன்கடல்
தில்லையன் னாய்கலங்கல்
தெளிநீ அனையபொன் னேபன்னு
கோலம் திருநுதலே. (122)

பொருள்: நீ கள்ளை உண்ட களிமகள் என்று பிறர் கூறும் வண்ணம் உன்னை மகிழ்ச்சியடையச் செய்த இறைவனது கடற்கரைக் கண் உள்ளதாகிய தில்லையை ஒத்தவளே, உன்னுடைய அழகான கூந்தலில் இடம்பெற்ற பூந்தாதும் அணிந்த அணிகளும், கூந்தலில் சுற்றிய மாலையும் இவை அனைத்தும் உன்னோடு ஒத்தவளாகிய தோழி செய்த கோலமே ஆகும். அழகான நுதலை உடையவளே, அதனை மாற்றி விட்டேன் எனக்கலங்காதே (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: தலைவன் தலைவியிடம் நீயும் நானும் கூடுகிற இந்தக் கூட்டம் தோழிக்குத் தெரியும் என்பதை ஒப்பனை செய்வதில் நானும் அவளும் ஒத்தவர் என்று கூறுவதால் (தலைவியை) உணரவைக்கிறான். அளி — வண்டு, அளகம்— கூந்தல், அட்டிய — சூடிய, நறவு — கள்.

தத்துவப்பொருள்: திருவருள் ஆன்மாவிற்குத் துணை செய்யுமே அன்றிச் சிவத்தை நுகராது. ஆன்மாவுக்கே நுகரும் தன்மை உண்டு என்பதையும், இந்த நுகர்வைத் திருவருள் அறிந்திருக்கும் என்றும் கூறப்பெறுகிறது.

Koviloor Digital Library

8. உண்மகிழ்ந்துரைத்தல்

கொளு: தண் மலர்க் கோதையை
உண் மகிழ்ந்து உரைத்தது.

தலைவன் தலைவியை உள்ளத்துள் நினைந்து மகிழ்ந்து உரைத்தது.

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம்
பலவன் திருக்கழலே
கெழுநீர் மையில்சென்று கிண்கிணி
வாய்க்கொள்ளும் கள்ளகத்த
கழுநீர் மலரிவள், யானதன்
கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பரு கும்பெரு
நீர்மை அளிகுலமே. (123)

பொருள்: குளிர்ச்சி பொருந்திய திங்களை மாலையாகச் சூடியுள்ள தில்லை அம்பலவனது திருவடிகளையே பொருந்திய தன்மையால் உள்மகிழ்ந்து முகம் மலர்வது போல மொட்டு என்ற நிலையை விட்டு மலர் என்ற நிலையை அடைந்து சிறிது சிறிதாக மலரத் தொடங்கும் தேனை மிகுதியாட உடைய செங்கழுநீர் மலர் இவள். நான் அக்கழுநீர் மலரை ஒருக்காலும் பிரியாத தன்மை உடைய அம்மலரிலுள்ள தேனைப்பருகும் வண்டு போன்றவன் ஆவேன் (என்று தலைவன் கூறியது)

சொ.பொ.வி.: கெழுநீர்மை — பொருந்தும் தன்மை, கிண்கிணிவாய்க் கொள்ளும் — மொட்டாய் இருந்து மலரும் தன்மை, மருவி — பொருந்தி, நற — தேன், அளி — வண்டு, குலம் — சாதி.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அல்லாது பிற தெய்வம் சேர்தல் இல்லை என்பதை வலியுறுத்துகிறது.

9. ஆயத்து உய்த்தல்

கொளு: கனைகடல் அன்ன கார்மயில் கணத்துப்
புனைமட மானைப் புகவிட்டது.

Koviloor Digital Library

ஒலிக்கின்ற கடலையும், கார்காலத்து மயிலையும் ஒத்த தோழியர் கூட்டத்தில் மான் போன்ற தலைவியைப் புகவிடுத்தது.

கொழுந்தா ரகைமுகை கொண்டலம்
பாசடை விண்மடுவில்
எழுந்தார் மதிக்கமலம் எழில்
தந்தென இப்பிறப்பில்
அழுந்தா வகையெனை ஆண்டவன்
சிற்றம் பலம்அனையாய்
செழுந்தா(து) அவிழ்பொழில் ஆயத்துச்
சேர்க திருத்தகவே. (124)

பொருள்: இந்தப் பிறவிக்கண் அழுந்தாத வண்ணம் என்னை அடிமையாகக் கொண்ட சிற்றம்பலத்தை ஒத்தவளே, நட்சத்திரங்களாகிய மொட்டுக்ளையும், மேக மாகிய பச்சிலையையும் உடைய ஆகாயமாகிய குளத்தில் எழுந்து விளங்குகின்ற சந்திரனாகிய வெண்தாமரைப்பூ, நட்சத்திரங்களாகிய மொட்டுக்களுக்குத் தன்னுடைய அழகை வெளிப்படுத்தியதைப் போலச் செழுமையான இச் சோலையில் விளையாடுகின்ற ஆயத்தின் கண் (தோழியர் கூட்டத்தின்) சென்று சேர்வாயாக (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி. :சந்திரன் நட்சத்திரங்களுக்கு அழகு "தருவது போலத் தோழியர் கூட்டத்தில் அழகு தரும்படி தலைவியைத் தலைவன் சேர்த்தான் என்ற கருத்து பெறப்படுகிறது. தாரகை — நட்சத்திரம், முகை — மொட்டு, கொண்டல் — மேகம், பாசடை — இலை, மடு — குணம்.

தத்துவப்பொருள்: சிவபோகத்தை அடைந்த ஆன்மாவிற்குப் பிரிவு இல்லை என்றாலும் பிற ஆன்மாக் களும் விளக்கம் பெறச் சிவத்தலைவியை விடுத்தது என்றவாறு.

Koviloor Digital Library

10. தோழி வந்து கூடல்

கொளு:நெறியுறு குழலியை நின்றிடத்(து) உய்த்துப்
பிறைநுதற் பாங்கி பெயர்ந்தவர்கட்(கு) உரைத்தது.

சுருண்ட கூந்தலை உடைய தலைவியைப் பகற் குறியிடத்தே நிறுத்தி நீங்கிய பிறை போன்ற நெற்றியை உடைய தோழி திரும்பவந்து கூறியது.

பொன்அனை யான்தில்லைப் பொங்கர
வம்புன் சடைமிடைந்த
மின்னனை யான்அருள் மேவலர்
போன்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி
யேல்வெறி யார்மலர்கள்
இன்னன யான்கொணர்ந் தேன்மணந்
தாழ்குழற்(கு) ஏய்வனவே. (125)

பொருள்: அசைந்து ஓடும் மான்குட்டியைப் போன்றவளே, இறைவன் பொன்னை ஒத்தவன், தில்லைக்கண், பாம்பு சூடிய சடையைக் கொண்டு மின்னலை ஒத்தவன். அவனது அருளைப் பெறாதவர்களைப் போல உன்னுடைய மெல்லிய விரல்கள் வருந்த மெல்லிய அரும்புகளைப் பறிக்க வேண்டாம். உன்னுடைய கூந்தலுக்குப் பொருத்தமான நல்ல மணம் பொருந்திய பூக்களை நான் கொண்டு வந்துள்ளேன், அதனைச் சூடிக் கொள்வாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: மறி — மான்குட்டி, வெறி — மணம்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி உயிரோடு கலந்தமை உலகம் அறியாதவாறு நாணம் கொண்டு நிற்க அச்சத்தோடு திருவருள் சென்றடைந்தமையாம்.

11. ஆடிடம் புகுதல்

கொளு:தனிவ்ளை யாடிய, தாழ்குழல் தோழி
பனிமதி நுதலியொ(டு) ஆடிடம் படர்ந்தது.

Koviloor Digital Library

தனியே விளையாடிய அழகிய கூந்தலை உடைய தோழி அழகான நெற்றியினை உடைய தலைவியோடு ஆயத்தார் விளையாடிய இடத்திற்குச் சென்றது.

அறுகால் நிறைமலர் ஐம்பால்
நிறை யணிந் தேன்அணியார்
துறுகான் மலர்த்தொத்துத் தோகைதொல்
லாயம்மெல் லப்புகுக
சிறுகால் மருங்குல் வருந்தா
வகைமிக என்சிரத்தின்
உறுகால் பிறர்க்(கு)அரி யோன்புலி
யூரன்ன ஒண்ணுதலே. (126)

பொருள்: என்னுடைய தலையின் மீது வைத்த தன்னுடைய திருவடியைப் பிறர்க்கு அரிதாகச் செய் பவனுடைய தில்லையை ஒத்த ஒளியுடைய நெற்றியை உடையவளே, அழகான மலர்க் கொத்துக்களை உன் னுடைய வண்டுகள் நிறைந்த ஐந்துவகையாகப் பிரித்துப் பின்னப்பட்ட கூந்தலில் அணிவித்தேன். ஆதலால் நீ சிறிய இடை வருந்தாதவண்ணம் மெதுவாகச் சென்று தோழியர் கூட்டத்திற்குள் புகுவாயாக (எனத் தோழி கூறினாள்.

சொ.பொ.வி.: அறுகால் — ஆறுகால்களை உடைய வண்டு, ஐம்பால் — ஐந்து வகையாகப் பின்னப்பட்ட கூந்தல், துறு — நெருங்கிய, மருங்குல் —இடை.

தத்துவப்பொருள்: திருவருளுக்குக் கிடைத்த திருவடிப் பேறு வேறு எவர்க்குக் கிட்டும்? என்பது பெறப்படுகிறது.

12. தனிகண்டு உரைத்தல்

கொளு:வேயொத்த தோளியை ஆயத்து உய்த்துக்
குனிசிலை அண்ணலைத் தனிகண்(டு) உரைத்தது.

மூங்கிலை ஒத்த தோழியர் கூட்டத்தாரிடையே விட்டு விட்டு வில்லை ஏந்திய தலைவனைத் தனியே கண்டு தோழி சொல்லியது.

Koviloor Digital Library

தழங்கும் அருவிஎம் சீறூர்
பெரும இதுமதுவும்
கிழங்கும் அருந்தி இருந்(து)எம்மோ(டு)
இன்று கிளர்ந்துகுன்றர்
முழுங்கும் குரவை இரவிற்கண்(டு)
ஏகுக, முத்தன்முத்தி
வழங்கும் பிரான்எரி யாடிதென்
தில்லை மணிநகர்க்கே. (127)

பொருள்: தலைவனே, அருவிகளை உடையது இச் சிற்றூர். இவ்வூரின் கண் நாங்கள் உண்ணுகின்ற தேனையும், கிழங்கையும் எம்மோடு நீயும் தங்கியிருந்து உண்டு, குறவர்கள் ஆடுகின்ற குரவைக் கூத்தைக் கண்டு களித்து முத்தியை வழங்கும் முதல்வனும் ஊழித்தீயின்கண் ஆடு கின்றவனும் ஆகிய சிவபெருமானது தில்லை நகர்க்கு நாளை செல்வாயாக (என்று தலைவனிடம் தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தழங்கும் — ஒலிக்கின்ற, மது — தேன், கிளர்ந்து—எழுந்து, குரவை—கூத்துவகை, முத்தன்— மும் மலங்கள் இல்லாத இறைவன்.

தத்துவப்பொருள்: சிவம் தடையற்ற கருணையால் ஆட்கொண்ட ஆன்மாவை விட்டு ஒரு கணமேனும் அகன்று இருத்தல் இல்லை என்பது திருவருளால் உணர்த்தப் பெறுகிறது.

13. பருவங்கூறி வரவு விலக்கல்

கொளு: மாந்தளிர் மேனியை வரைந்(து) எய்தா(து)
ஏந்தல் இவ்வா(று) இயங்கல் என்றது.

மாந்தளிர் போன்ற மேனியை உடைய தலைவியைத் திருமணம் செய்துகொள்வதற்கு அன்றி இந்த வழியில் வாராதே என்று தோழி தலைவனிடத்தில் கூறினாள். (அதாவது விருந்துண்ட நீ உன்னுடைய வீட்டிற்குச் சென்ற பிறகு திருமணம் செய்து கொள்வதற்குத் தான் இந்த

Koviloor Digital Library

வழியில் வரவேண்டுமே அன்றித் தலைவியைப் பார்ப்பதற்கு வரல் வேண்டா என்றது)

தள்ளி மணிசந்தம் உந்தித்
தறுகண் கரிமருப்புத்
தெள்ளி நறவந் திசைதிசை
பாயும் மலைச்சிலம்பா
வெள்ளி மலையன்ன மால்விடை
யோன்புலி யூர்விளங்கும்
வள்ளி மருங்குல் வருத்துவ
போன்ற வனமுலையே. (128)

பொருள்: நிலத்தில் தோன்றும் மணிகளை ஆற்றின் இருமருங்கும் தள்ளி, சந்தன மரங்களைப் புரட்டி, யானையின் கொம்புகளை அலைத்து, தேன் ஆறானது திசைகள் தோறும் பாய்கின்ற மலைக்குரிய தலைவனே, இறைவனின் வெள்ளி மலையை ஒத்த பெரிய விடையேற்றினை (காளையை) உடையவனது தில்லைநகர் போல விளங்கும், தலைவியின் இடையை முலைகள் வருத்துவது போல் பெருத்தன. எனவே விரைவில் திருமணம் செய்து கொள்வாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தலைவனின் மலையில் உள்ள பூக்களின் தேனானது மிகுதியாக ஓடி மேற்கூறிய செயல்களைச் செய்தன என்பது வருணனைச் சிறப்பாகும். தலைவியின் பருவ உயர்வைக்கூறி அவளை விரைவில் திருமணம் செய்துகொள் என்று தோழி தலைவனை வற்புறுத்துகிறாள். கரி — யானை, தெள்ளி — அலைத்து, நறவம் — தேன், மால் — பெரிய, வள்ளி — கொடி போன்ற தலைவி.

தத்துவப்பொருள்: சிவமும் ஆன்மாவும் பிரியாது இருத்தல் வலியுறுத்தப் பெறுகிறது.

14. வரைவு உடம்படாது மிகுத்துக் கூறல்

கொளு: வரைவு கடாய வாணுதல் தோழிக்கு
விரை மலர்த் தாரோன் மிகுத்துரைத்தது.

Koviloor Digital Library

திருமணம் செய்து கொள்ள வற்புறுத்திய தோழிக்கு நறுமணம் மிக்க மாலையணிந்த தலைவன் வருந்திக் கூறியது.

மாடஞ்செய் பொன்னக ரும்நிக
 ரில்லைஇம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தாமரை யோன்பெற்ற
 பிள்ளையை உள்ளலரைக்
கீடஞ்செய் தென்பிறப் புக்கெடத்
 தில்லைநின் றோன்கயிலைக்
கூடஞ்செய் சாரல் கொடிச்சியென்
 றோநின்று கூறுவதே. (129)

பொருள்: மாடங்களை வைத்துச் செய்யப் பெற்ற தேவலோகமும் இவளுக்கு ஒப்பில்லை என்று சொல்லும் வண்ணம் அழகு படைத்தவள் தலைவி. அவள் தாமரை ஆகிய பீடத்தின் மேல் இருக்கும் பிரமன் பெற்ற பிள்ளை ஆவாள். அவளை — தன்னை வணங்காதவர்களைப் புழுக் களாகச் செய்து, நினைத்தவர்களுக்குப் பிறவியைக் கெடுக்கும் வண்ணம் தில்லையில் எழுந்தருளியிருப்பவனது கயிலைமலையின்கண்கூடமாகச் செய்யப் பெற்றுள்ள சாரலின்கண் வாழும் கொடிச்சியாகக் கூறலாகுமா?

சொ.பொ.வி.: மாடம் — மேல்மாடங்கள், பொன்நகர் — தேவருலக அமராவதி, உள்ளவர் — நினையாதவர், கீடம்—புழு, கூடம் — மன்றம் (தில்லை மன்றம் போன்றது) கொடிச்சி — தலைவி.

பிரமன் பெற்ற பிள்ளையாகிய உயர்ந்த தலைவியை எளிதில் திருமணம் செய்து கொள்ளக் கூடிய கொடிச்சி போலக் கூறலாகுமா என்று தலைவன் வருந்தி அவளை வரைந்து கொள்வது அவ்வளவு எளிமையுடையது அன்று என்று கூறுகிறான்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவபோகத்தை எய்துவது அவ்வளவு எளிதல்ல என்பது வற்புறுத்தியவாறாம்.

Koviloor Digital Library

15. உண்மை கூறி வரைவு கடாதல்

கொளு: கல்வரை நாடன் இல்ல(து) உரைப்ப
ஆங்கவள் உண்மை பாங்கி பகர்ந்தது.

மலைக்கு உரிய தலைவன் மணம் செய்து கொள்ளத் தயங்கி உரைத்தமையால் அவனிடம் தோழி தலைவியின் உண்மை நிலையாம் எளிமையைக் கூறியது.

வேய்தந்த வெண்முத்தம் சிந்துபைங்
கார்வரை மீன்பரப்பிச்
சேய்தந்த வானக மானும்
சிலம்பதன் சேவடிக்கே
ஆய்தந்த அன்புதந் தாட்கொண்ட
அம்பல வன்மலையில்
தாய்தந்தை கானவர் ஏனல்எங்
காவல்இத் தாழ்வரையே. (130)

பொருள்: மூங்கில் உதிர்த்த வெண்மையான முத்துக்கள் கிடக்கும் பசுமையான சோலைகள் மூடியுள்ள கருமையான மலையின் பாறையில் நட்சத்திரங்கள் பரந்து காணப்படுவதால் — தூரத்தில் இருந்த ஆகாயமானது அண்மையில் இருப்பது போல் தோன்றும் மலையை உடையநாடனே. எம்முடைய தாய் தந்தையர் — ஆராயப் பட்ட அன்பைத் தந்து எம்மை அடிமையாக்கிக் கொண்ட சிவபெருமானின் மலையில் வாழ்கின்ற கானவர்களே, அம்மலையில் உள்ள தினைப்புனம் எம் காவலுக்கு உரியது. ஆதலால் எங்களை மேம்படுத்திக் கூறவேண்டியதில்லை.

சொ.பொ.வி.: கார்வரை — மலையில் உள்ள பாறை, மீன் — நட்சத்திரங்கள், கீழே உள்ள பாறையை மேலே உள்ள ஆகாயம் போல் காட்டுகின்ற மலையை உடைய தலைவன் என்பதால் மலைக் காட்டில் வாழுகின்ற தலைவியையும், தோழியையும் முன் பாடலில் தேவலோகப் பெண்களாகத் தலைவன் கூறியதை மறுத்து இப்பாடலில் தோழி தங்களை எளிமைக்குரியவளாகக் காட்டுகிறாள் என்பதாகும்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மா தம்முள் ஏற்றத் தாழ்வுடையதாக இருந்தாலும் சிவத்தால் பேரின்பத்தை அடையக்கூடிய நிலையை உடையதாம் என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

16. வருத்தம் கூறி வரைவு கடாதல்

கொளு: கனங்குழை முகத்தவள் மனங்குழை உணர்த்தி
நிரைவளைத் தோளி வரைவு கடாயது.

கனமான குழையாகிய காதணியை அணிந்த தலைவியின் மனவருத்தத்தை உணர்த்தி வளையல்களை அணிந்த தோள்களை உடைய தோழி தலைவனைத் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தியது.

மன்னும் திருவருந் தும்வரை
யாவிடின், நீர்வரைவென்(று)
உன்னும் அதற்குத் தளர்ந்தொளி
வாடுதிர் உம்பரெல்லாம்
பன்னும் புகழ்ப்பர மன்பரஞ்
சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புலன்
என்னப் புலம்புவனே. (131)

பொருள்: தலைவனே, நீ திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் திருமகள் போன்றவளாகிய தலைவி வருந்துவாள். நீயோ திருமணம் செய்து கொள் என்றால் உள்ளம் தளர்ந்து உடல் வளம் குன்றிவாடுகிறாய். தேவர்களுக்கெல்லாம் மேலான புகழை உடைய தலைவனும், பெரும் சோதி வடிவாகிய சிற்றம்பல நாதனும் ஆகிய இறைவனின் திருவடிகளை வணங்க மாட்டாதவருடைய அறிவைப் போல நானும் தனிமை உற்று வருந்துகிறேன் என்ன செய்வது (என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்)

சொ.பொ.வி.: திரு — திருமகள் போன்ற தலைவி, உம்பர் — தேவர், வழுத்தார் — வணங்காதவர்கள், புலன் — அறிவு. தலைவியின் வருத்தத்தையும், தலைவன் வருத்தத்தையும் கண்ட தோழி தானும் வருந்துவதாகக் கூறி

Koviloor Digital Library

அதன் மூலம் திருமணம் செய்யத் தலைவனை வற்புறுத்து கிறாள்.

தத்துவப்பொருள்: சிவத்தின் கருணைக்கு ஏற்ப ஆன்மா பேரின்பம் பெற விரைவுபடவில்லை என்பது உணர்த்தப்பெறுகிறது.

17. தாய் அச்சங்கூறி வரைவு கடாதல்

கொளு: மடத்தகை மாதர்க்கு அடுப்பன அறியா
வேற்கண் பாங்கி ஏற்க உரைத்தது.

தலைவியின் பருவம் வளர்ந்ததைக் கண்டு தாய் அஞ்சு கிறாள் என்று கூறி வேல் போன்ற கண்களை உடைய தோழி, தலைவனைத் திருமணத்திற்கு வற்புறுத்தியது.

பனித்துண்டம் சூடும் படர்சடை
அம்பல வன்உலகம்
தனித்துண் டவன்தொழும் தாளோன்
கயிலைப் பயில்சிலம்பா
கனித்தொண்டை வாய்ச்சி கதிர்முலைப்
பாரிப்புக் கண்டழிவுற்(று)
இனிக்கண் டிலம்பற்றுச் சிற்றிடைக்(கு)
என்றஞ்சும் எம்மனையே. (132)

பொருள்: குளிர்ச்சி உடைய பிறைச் சந்திரனை அணிந்துள்ள சடையை உடைய அம்பலவனும் உலகம் முழுவதையும் தனியே உண்டவனாகிய திருமால் வணங்கும் திருவடியை உடையவனும் ஆகிய சிவபெரு மானது கயிலை மலையின் கண் உள்ள தலைவனே, கொவ்வைக் கனிபோலும் சிவந்த வாயை உடைய தலைவியின் முலைகள் வளர்ந்த பருவத்தைக் கண்டு மனம் வருந்தி எம்முடைய தாய் தலைவியின் சிற்றிடைக்கு ஒரு பற்றுக் கோடைக் காணவில்லையே என்று அஞ்சுகிறாள். ஆதலால் என்ன நடக்குமோ என்று அறியேன் எனத் தோழி தலைவனுக்குக் கூறினாள்.

Koviloor Digital Library

சொ.பொ.வி.: பனி — குளிர்ச்சி, கனி — கொவ்வைக் கனி, பராமரிப்பு—வருத்தம் முலையின் வளர்ச்சியால் இடை வருந்தும். அந்த வருத்தத்தைத் தீர்க்கப்பற்றுக் கோடாகத் திருமணம் செய்ய வேண்டும் என்று தாய் நினைத்து வேறு யாருக்காவது திருமணம் செய்து விடலாம் என்று கூறித் தலைவனை தோழி திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியது.

தத்துவப்பொருள்: ஆன்மா நுகர்ந்த பேரின்பம் பிறர் மாட்டும் புகுந்திட நேரும் என்று சிவத்தலைவி வருந்தும் என்பது கூறியதாம்.

18. இற்செறி அறிவித்து வரைவு கடாதல்

கொளு: விற்செறி நுதலியை இற்செறி உரைத்தது.

வில்போன்ற நெற்றியை உடைய தலைவியை (தாய்) இல்லத்தில் அடைத்து வைத்திடுவாள் என்று தோழி தலைவனிடம் கூறியது. (இச்செறித்தல் — வெளியில் செல்லவிடாது வீட்டில் தங்கவைத்து விடல்)

ஈவிளை யாட நறவிளை(வு)
ஓர்ந்தெமர் மால்பியற்றும்
வேய்விளை யாடும்வெற் பாவுற்று
நோக்கிஎம் மெல்லியலைப்
போய்விளை யாடல்என் றாள்அன்னை
அம்பலத் தான்புரத்தில்
தீவிளை யாடநின் றேவிளை
யாடி திருமலைக்கே. (133)

பொருள்: தேன்கூட்டில் தேனீக்கள் பறந்து விளை யாடுவதைக் கண்டு தேன்கூடு முதிர்ந்தமையை அறிந்து கண் ஏணியை வேடர்கள் தயார் செய்யும் மூங்கில்மலை நாட்டை உடையவனே, என் தாய் தலைவியை உற்றுப் பார்த்து, 'நீ முப்புரங்களைத் தீயினால் எரிக்க அம்புவிடுத்த தில்லை அம்பலவாணனது மலைப்பக்கத்தில் சென்று விளையாடாதே' என்று கூறிவிட்டாள். நீ அறிவாயாக (என்று தோழி தலைவனிடம் .கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: விளைவு ஓர்ந்து — தேன் முதிர்ந்தமை அறிந்து, தமர் — வேடர், மால்பு — வழி, (கண்ணேணியைத் தயார் செய்தல்)

தத்துவப்பொருள்: மேலும் மேலும் சிவத்தலைவியின் கருணை முதிர்வு கண்டு அதனை அடைய ஆன்மா விழைதல் வேண்டும் என வற்புறுத்தியது.

19. தமர் நினைவு உரைத்து வரைவு கடாதல்

கொளு: விற்செறி நுதலியை இற்செறி விப்பரென்(று)
ஒளிவே லவற்கு வெளியே உரைத்தது.

வில் போன்ற நெற்றியை உடைய தலைவியைத் தமர் (தந்தை, அண்ணன்மார்) உறுதியாக இற்செறிப்பர் என்று வேலை ஏந்திய தலைவனுக்குத் தோழி உரைத்தது.

சுற்றும் சடைக்கற்றைச் சிற்றம்
பலவன் தொழாதுதொல்சீர்
கற்றும் அறியல ரின்சிலம்
பாஇடை நைவதுகண்(டு)
எற்றும் திரையின் அமிர்தை
இனித்தமர் இற்செறிப்பார்
மற்றும் சிலபல சீறூர்
பகர்பெரு வார்த்தைகளே. (134)

பொருள்: சிலம்பா, சுருண்ட சடைகளை உடைய தில்லையம்பலவனை முற்பிறவியில் வணங்காமையால் இப் பிறவியில் நூல்பல கற்றும் இறைவனின் புகழை அறியாதவர்போல முலைச்சுமை தாங்காது இடை வருந்த, பாற்கடலில் தோன்றிய அமுதத்தை ஒத்த தலைவியை இப்பொழுது தமரும் இற்செறிப்பர். மேலும் எமது சிற்றூரில் அவளைப் பற்றிய அலர் தூற்றுகின்ற வார்த்தைகளும் சில உள என்பதை அறிவாயாக. (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: கற்றும் அறியலர் என்பது — "கற்றதனால் ஆய பயன்என் கொல்" எனத் தொடங்கும் திருக்குறள்

Koviloor Digital Library

கருத்தை நினைவு படுத்துவதாம். நைவது — வருந்துவது. எற்றும் திரை — கடல், வார்த்தை — அலர் தூற்றுவது. கல்வி கற்றும் இறைவன் புகழ் அறியாது வருந்துவார் போல முலை பெருத்ததால் தாங்கும் பற்றுக்கோடு இன்றி இடை வருந்தியது என உவமை விளக்கப்பெறுகிறது.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அடையவில்லை என்றால் பிறவித்துன்பம் ஏற்படும். அறிவற்ற நிலையும் தோன்றும் என்றவாறு.

20. எதிர்கோள்கூறி வரைவு கடாதல்

கொளு: ஏந்திழைத் தோழி ஏந்தலை முன்னிக்
கடியா மாறு நொடிக என்றது.

அழகிய ஆபரணங்களைக் கொண்ட தோழி, தலைவனை எதிர்ப்பட்டு விரைவில் திருமணம் செய்து கொள் என மேலும் வற்புறுத்தியது.

வழியும் அதுஅன்னை என்னின்
மகிழும்வந்(து) எந்தையும்நின்
மொழியின் வழிநிற்கும் சுற்றம்முன்
னேவயம் அம்பலத்துக்
குழிஉம்பர் ஏத்தும்எம் கூத்தன்குற்
றாலமுற் றும்அறியக்
கெழிஉம்ம வேபணைத் தோள்பல
என்னோ கிளக்கின்றதே. (135)

பொருள்: தாயானவள் என்னைப் போலவே மகிழ்வாள். உலகியல்பால் நீ மறுத்து நின்றாலும் உன் தகுதி நோக்கி முன்னே வந்து எம் தந்தையும் என் மொழியை ஏற்பார். நீ வரைவதற்கு முன்னமேயே எம்முடைய சுற்றத் தாரும் உம் வசமாவார்கள். தேவர்கள் துதிக்கின்ற தில்லை யம்பலப் பெருமானது குற்றாலத்தில் உள்ளவர்கள் அறிந்த உம்முடைய பணை போலும் தோள்களைத் தலைவி அடைவதே சிறந்த வழியாகும். பலபடச் சொல்லுவது ஏன்? என்றாள் தோழி.

Koviloor Digital Library

சொ.பொ.வி.: குழி — திரண்டு, உம்பர் — தேவர், கெழி— பொருந்திய, உம்மவே — உம்முடைய

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தோடு இயைவதற் குரிய வழியை அறிந்தால், தடையாக இருந்த மறைத்த லாகிய திரோதாயம் உபகாரமாகச் செயல்படும் என்பதாம்.

21. ஏறுகோள் கூறி வரைவு கடாதல்

கொளு: என்னையர் துணிவு இன்ன(து). என்றது.

எம்முடைய தமர் துணிந்த செயல் இது என்று தோழி தலைவனுக்கு உரைத்தது.

படையார் கருங்கண்ணி வண்ணப்
பயோதரப் பாரமும்நுண்
இடையார் மெலிவுகண்(டு) அண்டர்கள்
ஈர்முல்லை வேலிஎம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட்
டார்வியன் தென்புலியூர்
உடையார் கடவி வருவது
போலும் உருவினதே. (136)

பொருள்: படைக்கருவி போன்ற கண்ணினை உடைய தலைவியின் முலைப்பாரத்தையும், இடையினது மெலிவை யும் கண்ட எம்முடைய தமர் முல்லைக் கொடிகளை வேலியாக உடைய எம்முடைய ஊரின்கண் காளைகளின் கொம்புகளைச் சீவிக் கூர்மைப் படுத்திவிட்டார்கள். அந்தக் காளைகளோ சிற்றம்பலத்தான் ஏறி வருகின்ற இடபத்தை ஒத்த உருவம் உடையவவை. இனி என்ன நடக்குமோ? (என்று தோழி தலைவனிடம் கூறியது)

சொ.பொ.வி.: காளையை அடக்கியவர்களுக்குத் தலைவியைக் கொடுப்பர் என்ற முல்லை நிலத்து இயல்பு நிலை (மரபு) வெளிப்படுகிறது. படை — வேற்கருவி, பயோதரம் — முலை, அண்டர்கள் — ஆயர்களாகிய தமர், விடையார் — இடையர்கள், கடவி — செலுத்துதல்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஏறு அடக்கல் என்பதுபோல் ஆன்மா இந்திரியங்களை அடக்க வேண்டும் எனத் திருவருள் வலியுறுத்துகிறது.

22. அயல் உரைத்து வரைவு கடாதல்

கொளு: கயல்புரை கண்ணியை அயலுரை உரைத்தது.

கயலை ஒத்த கண்களை உடைய தலைவியை நாளை வரைவு செய்வான் வேண்டி வேற்றவர் வருவார் என்று தோழிக் கூறியது.

உருப்பனை அன்னகைக் குன்றொன்(று)
உரித்(து)உர ஊர்எரித்த
நெருப்பனை அம்பலத்(து) ஆதியை
உம்பர்சென்(று) ஏத்திநிற்கும்
திருப்பனை யூர்அனை யாளைப்பொன்
னாளைப்புனைதல் செப்பிப்
பொருப்பனை முன்னின்(று)என் னோவினை
யேன்யான் புகல்வதுவே. (137)

பொருள்: தோற்றத்தால் பனைமரத்தை ஒக்கும் கையை உடைய யானையின் தோலை உரித்து வலிமை மிக்க முப்புரங்களை எரித்து, சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள ஆதியாம் முதல்வனைத் தேவர்கள் சென்று வழிபட்டு நிற்கும் திருப்பனையூர் என்ற ஊரை ஒத்த தலைவியை அயலவர்கள் நாளைப் பொன் புனைதலைச் (திருமணம்) சொல்லிடத் தீவினையை உடைய நான் தலைவனிடம் சென்று கூறுத்தக்க சொற்கள் யாவை? அறியேனே (என்று தோழி கூறியது)

சொ.பொ.வி.: உரு — வடிவம், கைக்குன்று — யானை, உரஊர்—வலிமையாகிய முப்புரம், பொன்னாளை புனைதல் — நாளைப் பொன்புனைதல்—நாளை பொன்னணி பூணும் திருமணம். (திருமண நிச்சயம்)

தத்துவப்பொருள்: காலந் தாழ்த்துவதால் ஆன்மாவிற்கு அன்பில்லை என்பதன்று. மற்றவர் சொல்வதற்கு முன்னால்

Koviloor Digital Library

ஆன்மா சிவத்திடம் இருக்கும் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பதாம்.

23. தினைமுதிர்வு உரைத்து வரைவு கடாதல்

கொளு: ஏனல் விளையாட்டு இனிஇல்லை என
மானல் தோழி மடந்தைக்கு உரைத்தது.

தினைப் பயிரைக் காத்து விளையாடும் விளையாட்டும் இனி இல்லை என்று — தோழி தலைவியிடம் கூறியது.

மாதிடம் கொண்(டு)அம் பலத்துநின்
றோன்வட வான்கயிலைப்
போதிடம் கொண்டபொன் வேங்கை
தினைப்புனம் கொய்கஎன்று
தாதிடம் கொண்டு பொன்வீசித்தன்
கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு
வித்தது தூமொழியே. (138)

பொருள்: தூய மொழியை உடைய தலைவியே, உமையவளை இடப்பாகம் கொண்டு எல்லோரும் காணத் தில்லையம்பலத்தில் ஆடுகின்ற சிவபெருமானது — வடக்கின் கண்ணதாகிய பெரிய கயிலை மலையின்கண் பூத்த வேங்கை மரமானது தினைப்புனத்தைக் கொய்க என்று தன் பூந்தாதினைத் தூவி, தேனைச் சொரிந்து, சோதிடம் கூறி எம்மைக் கெடுத்து விட்டது. இனி என்ன செய்வது? (என்று தோழி தலைவியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: இப்பாடல் தலைவியிடம் தோழி கூறுவது போல — மறைமுகமாக சிறைப்புறமாக நின்ற தலைவனுக்குக் கூறி வரைவு கடாவியதாம். போது — மலை, பொன்வீசி — பொன்மலர்களை வீசி. வேங்கை பூத்து — கார் காலத்தை உணர்த்தியது.

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்கு வினைப்போகம் முதிர்ந்துவிட்டது. எனவே சிவத்தொடு சேர முற்பட வேண்டும் என்பது.

Koviloor Digital Library

24. பகல்வரல் விலக்கி வரைவு கடாதல்

கொளு: அகல்வரை நாடனைப் பகல்வரல் என்றது.

அகன்ற மலைநாட்டை உடைய தலைவனைப் பகற் குறிக்கு வாராதீர் எனத்தோழி கூறியது.

வடிவார் வயல்தில்லை யோன்மல
யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர்
தூற்றப் பெருங்கணியார்
நொடிவார் நமக்கினி நோதக,
யான்உமக்(கு) என்னுரைக்கேன்
தடிவார் தினைஎமர் காவேம்
பெருமஇத் தண்புனமே. (139)

பொருள்: அழகுமிக்க வயல்கள் சூழ்ந்த தில்லையில் இருப்பவனாகிய சிவபெருமானது பொதியமலையின் கண் நின்று வருகின்ற தேனீக்களும், மனத்தை ஆராய்கின்ற வண்டுகளும், பூக்களைக் குடைந்து தூற்ற, அப்பூக்களை உடைய வேங்கை மரங்கள் தினை கொய்யும் பருவத்தை நினைவூட்டுகின்றன. தலைவனே, ஆதலால் நான் உமக்கு என்ன சொல்வேன்? எம்முடைய சுற்றத்தார் தினையை அறுத்துவிடுவார்கள். நாங்களும் இத்தினைப் புனத்தே இனி இருக்கமாட்டோம். எனவே நீ பகற்காலத்தில் வரவேண் டாம் (எனத் தோழி தலைவனிடத்தில் கூறினாள்)

சொ.பொ.வி.: வடிவு — அழகு, தேன் — தேனீக்கள், கணியார் — வேங்கை மரத்திற்கும், பெரிய சோதிடருக்கும் உரிய சொல், நோதக — துன்பத்தைத் தர, தடிவார் — அறுப்பார்கள், காவேம் — காத்தல் செய்யோம்.

தத்துவப்பொருள்: ஐந்தவத்தைகளில் ஒன்றாகிய நனவுநிலை உண்டாகின்ற பசுகரணத்தில் ஆன்மா சிவத்தை எய்த இயலாது. எனவே சிவகரணமாக உயர்ந்த பொழுது தான் எய்தமுடியும் என்பது வலியுறுத்தியவாறு.

Koviloor Digital Library

25. தினையொடு வெறுத்து வரைவு கடாதல்

கொளு: தண்புனத் தோடு தளர்வுற்றுப்
பண்புனை மொழிப் பாங்கி பகர்ந்தது.

குளிர்ந்த தினைப்புனத்தோடு தோழி வருந்தி (பண்) ஓசை பொருந்திய சொற்களைத் (தலைவன் கேட்குமாறு) உரைத்தது.

நினைவித்துத் தன்னைஎன் நெஞ்சத்(து)
இருந்(து)அம் பலத்துநின்று
புனைவித்த ஈசன் பொதியின்
மலைப்பொருப் பன்விருப்பில்
தினைவித்திக் காத்துச் சிறந்துநின்
றேமுக்குச் சென்றுசென்று
வினைவித்திக் காத்து விளைவுண்ட
தாகி விளைந்ததுவே. (140)

பொருள்: தன்னை நினைக்கச் செய்து என் மனத்து எழுந்தருளித் தில்லைச் சிற்றம்பலத்தும் இருந்து என்னால் தன்னைப் புகழுமாறு செய்து கொண்ட சிவபெருமானது பொதிகைமலைப் பொருப்பனிடம் வைத்த ஆசையினால் தினைகளை விதைத்து அதற்குக் கெடுதல் வராத வண்ணம் காத்துச் சிறந்த எமக்குத் தீவினைகளை விதைத்துக் காத்துத் துன்ப விளைவைத் தந்தது போல் தினை விளைந்தது என்ன செய்யவோம்? (எனத் தோழி கூறியது)

சொ.பொ.வி.: தினை விதைக்கப் போய் அது வினையாக விளைந்தது என்பதை அடியொற்றியது இப்பாடல். அதாவது தோழியும் தலைவியும் 'தினைப் பயிரை விளைத்துக் காத்தவர்களுக்கு அது சீக்கிரமே விளைந்து அறுவடை நிலையை உண்டாக்கித் தலை வனைச் சந்திக்க முடியாத வண்ணம் தீவினையைத் தந்தது என்ற பொருள் பெறப்படுகிறது. புனைவித்த—செய்த, வினைவித்து — தீவினையை விளைவித்தது.

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்கு உரிய பழைய வினைகள் நுகரப் பெற்று முதிர்ந்தன. பயன் ஊட்டும் சத்திநிபாதம் வந்துவிட்டது என்பதாம்.

Koviloor Digital Library

26. வேங்கையொடு வெறுத்து வரைவு கடாதல்

கொளு: நீங்குக இனிநெடுந் தகையென
வேங்கை மேல்வைத்து விளம்பியது.

பெரிய தகைமையினை உடைய தலைவனே, நீ போய் விடுவாயாக. இனி வராதே என்று கூறுவாள் போன்று வேங்கை மரத்தோடு வெறுத்துத் தோழி கூறியது.

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண்
டார்க்(கு)அம் பலத்(து)அமிழ்தாய்
வினைகெடச் செய்தவன் விண்தோய்
கயிலை மயிலனையாய்
நனைகெடச் செய்தனம் ஆயின்
நமைக்கெடச் செய்திடுவான்
தினைகெடச் செய்திடு மாறும்உண்
டோஇத் திருக்கணியே. (141)

பொருள்: ஒலிக்கின்ற கடலிலிருந்து தோன்றிய நஞ்சை உண்டும், தில்லையம்பலத்தில் வழிபட்டார்க்கு அமுதமாய் நாம் ஈட்டிய வினைகளைக் கெடச் செய்கின்ற சிவ பெருமானின் ஆகாயத்தைத் தீண்டும் கயிலை மலையில் வாழும் மயிலை ஒத்தவளே! அரும்பாக இருந்தபொழுதே வேங்கையின் அரும்பைக் கெடுத்திருந்தோம் என்றால் இப்பொழுது இவ்வேங்கைமரம் நாம் தினையறுக்குமாறு பூத்திருக்குமா? (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தோழியின் கூற்றாக அமைந்த இப்பாடல் தலைவியிடம் கூறுவதுபோல் அமைந்து ஒருபக்கம் மறைந்து நின்ற தலைவனுக்குக் கூறப்பட்டதாம். தினை அறுக்கப் பட்டு விட்டதால் காவல் செய்து கொண்டிருந்த நாங்கள் காவலை முடித்தோம். ஆதலால் எங்களைக் காண வராதே (என்று தலைவனுக்குக் கூறுவதுபோல் இப்பாடல் அமைந்துள்ளது) கண்டார்க்கு — வழிபடுவார்ககு, வினை கெட — முன்பு ஈட்டிய பழவினை, நனைகெட — அரும்பு கெட, தினைகெட — தினைஅறுக்க, கணி— வேங்கை மரத்தைக் குறிக்கும்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மாவிடம் கொண்ட இரக்கத்தால் திருவருள் இனி ஆகாமியவினை செய்யாதே, தவம் செய்க, சிவகரணத்தால் சிவத்தை அடைக என்று கூறியவாறாம்.

27. இரக்கமுற்று வரைவு கடாதல்

கொளு: செழுமலை நாடற்குக் கழுமலுற்(று) இரங்கியது.

அழகிய மலைநாட்டை உடைய தலைவனுக்குத் தம் இரக்கம் கூறித் தோழி வரைவு வேண்டியது.

வழுவா இயல்எம் மலையர்
விதைப்பமற்(று) யாம்வளர்த்த
கொழுவார் தினையின் குழாங்கள்எல்
லாம்எம் குழாம்வணங்கும்
செழுவார் கழல்தில்லைச் சிற்றம்
பலவரைச் சென்றுநின்று
தொழுவார் வினைநிற்கி லேநிற்ப
தாவ(து)இத் தொல்புனத்தே. (142)

பொருள்: விதைக்கும் பருவத்தும், கொய்யும் பருவத்தும் தவறாது தொழிலைச் செய்கின்ற எம்முடைய சுற்றத்தார் தினையை விதைக்க, அதில் தீங்கு புகாது நாங்கள் வளர்த்துக் காக்க, விளைந்த தினையினுடைய கதிர்கள் அனைத்தும் — எங்கள் கூட்டம் சென்று வணங்குகின்ற நெடிய கழலை உடைய தில்லையம்பலம் சென்று தொழுகின்றவர்கள் வினைகள் கெடாது நின்றாலும் இத்தினைப் புனத்தில் முன்சொன்ன கதிர்கள் நிற்காது, அறுக்கப்பட்டு விடும் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: சிற்றம்பலத்தைத் தொழுதவர் வினை நில்லாது. அதுபோல இத்தினைப் புனத்தில் தினைக் கதிர்களும் நில்லாது அறுக்கப்பட்டுவிடும் என்பது பொருள். வழுவாஇயல் பருவம்—தவறாமல் செய்யும் தொழில், எம்மலையர் — உறவினர், குழாம் — தினைக் கதிர்கள்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்:மாவினுடைய வினை சிவத்தைச் சேரும் சத்திநிபாதம் நேர்ந்ததால் நில்லாது என்பதாம்.

28. கொய்தமை கூறிவரைவு கடாதல்

கொளு: நீடிரும் புனத்தினி ஆடேம் என்று
வரைவு தோன்ற உரை செய்தது

நீண்ட தினைப்புனத்தில் இனி விளையாடோம் என்று கூறி விரைவில் வரைந்து கொள்வாயாக எனத் தோழி கூறியது.

பொருப்பர்க்(கு) யாம்ஒன்று மாட்டோம்
புகலப் புகல்எமக்காம்
விருப்பர்க்(கு) யாவர்க்கும் மேலர்க்கு
மேல்வரும் ஊர்எரித்த
நெருப்பர்க்கு நீ(டு)அம் பலவருக்(கு)
அன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற
தின்றிக் கடிப்புனமே. (143)

பொருள்: எமக்குப் புகலிடமாய் இருக்கின்றவர்க்கு, எல்லார்க்கும் மேலானவர்க்கு ஆகாயத்தில் பறந்து திரியும் முப்புரங்களை எரித்த நெற்றிக் கண்ணாகிய நெருப்பை உடையவர்க்கு ஊழிதோறும் அழியாத அம்பலத்தை உடையவர்க்கு உரிய அன்பர்கள் கூட்டம். பிறவிக்குக் காரணமான உலகப் பற்றினை விட்டு அகன்றாற் போல எங்கள் காவலை உடைய இந்தத் தினைப் புனமும் தினை கொய்யப் பெற்றது. ஆதலால் தலைவனுக்கு இனியாம் ஒன்றும் கூறுவதற்கு வன்மை பெற்றிலேம். (என்று தோழி சிறைப்புறமாகக் கூறியது)

சொ.பொ.வி.: புகல் — புகலிடம், அன்பர்குலம் — அடியவர் கூட்டம், நிலத்துக்கருப்பற்று—உலகத்தில் பிறவிக்குக் காரணமான பற்றினை விட்டு, கரு — பிறவி.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அடையத் தாமே முயற்சிப்பது அல்லது யாம் புகலுவதற்கு ஒன்றும் இல்லை.

Koviloor Digital Library

அதாவது சரியை, கிரியை, யோகம் செய்துழி சிவஞானம் கிடைக்கப் பெறும் என்பதாம். இப்பொழுது ஆன்மாவிற்குச் சிவஞானம் கிடைத்துள்ளது. எனவே ஆன்மா சிவத்தோடு கலப்பதற்கு முயற்சிப்பதன்றித் திருவருள் துணைவேண்டா.

29. பிரிவு அருமைகூறி வரைவு கடாதல்

கொளு: மறைப்புறக் கிளவியின் சிறைப்புறத்து உரைத்தது.

(மறைத்துப் பிரிது ஒன்றைக் கூறும் சொற்களாலே) தினைப்புனத்தை விட்டு அகலுவதைப் பறவையின் மேல் வைத்துத் தோழி கூறியது.

பரிவுசெய்(து) ஆண்(டு)அம் பலத்துப்
பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவிசெய் தாழ்புனத்(து) ஐவனம்
கொய்யவும் இவ்வனத்தே
பிரிவுசெய் தால்அரி தேகொள்க
பேயொடும் என்னும்பெற்றி
இருவிசெய் தாளின் இருந்(து)இன்று
காட்டும் இளங்கிளியே. (144)

பொருள்: எமக்கு இரங்கி எம்மை ஆட்கொண்டு சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திருப்பரங்குன்றத்தில் அருவிநீர் ஓடுகின்ற இப்புனத்தில் உண்டான ஐவன நெல்லைக் கொய்யவும், அதன் அரியப் பட்ட தாளில் கிளிகளே நீங்கள் தங்கியிருந்து நட்புச் செய்தால் பேயொடு ஆயினும் பிரிவு அரிதாகும். இதனை உளம் கொள்வீர்களாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: நெல் விளைந்திருந்த காலத்தில் கதிரில் வீழ்ந்த கிளிகள் பேயோடு நட்புக் கொண்டது ஆயினும் பிரிவரிது எனக் கூறுவது தலைவனும் இப்புனத்தே தலைவியைக் கூடியதால் பிரியமுடியாதவனாய் நாம் போயின பின்னும் இங்குவந்து வருந்துவரே எனக் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது. பிரிவு — கருணை, ஆண்டு — அடிமையாய், ஐவனம்—ஒருவகை நெல். (இங்கு தினையைக்

Koviloor Digital Library

குறிக்கிறது எனலாம்) பெற்றி—செயல், இருவி— தினைத் தாளடி.

தத்துவப்பொருள்: ஆன்மா உலகப் பற்றாகிய பழக்கம் தீரச் சிவத்தோடு சேர்வதாகிய ஞானத்தைப் பெறவேண்டும் தவிர மீண்டும் உழல்தல் கூடாது என்றவாறாம்.

30. மயிலொடு கூடி வரைவு கடாதல்

கொளு: நீங்கரும் புனம்விடு நீள்பெருந் துயரம்
பாங்கி பகர்ந்து பருவரல் உற்றது.

நீங்குவதற்கு அருமையான தினைப்புனத்தை விட்டு நீங்குகின்ற பெரிய துன்பத்தைத் தோழி கூறித் தங்கள் துயரத்தை உரைத்தது. (உரைப்பதன் மூலம் தலைவனை வரைவுக்குத் தூண்டுதல்)

கணியார் கருத்தின்று முற்றிற்று
யாம்சென்றும் கார்ப்புனமே
மணியார் பொழில்காள் மறத்திர்கண்
டீர்மன்னும் அம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்காள்
அயில்வேல் ஒருவர்வந்தால்
துணியா தனதுணிந் தார்என்னும்
நீர்மைகள் சொல்லுமினே. (145)

பொருள்: வேங்கை மரத்தின் எண்ணம் இன்று முடிந்தது. நாங்களும் செல்கின்றோம். கரிய தினைப்புனமே, மணிகள் நிறைந்த பொழில்களே, வேங்கை மரத்தோடு நீங்கள் பழகுவதால் எம்மை மறந்து விடுவீர்கள். நிலை பேற்றை உடைய தில்லையம்பலத்தானின் கயிலை மலையில் வாழும் மயில்களே, வேலை ஏந்திய தலைவன் வந்தால் துணியக் கூடாத செயலைத் துணிந்தனர் என்று சொல்லுங்கள் (என்று தோழி மயிலைப் பார்த்துக் கூறும் வண்ணம் தலைவனுக்கு திருமணத்தைத் தூண்டினாள்)

சொ.பொ.வி.: துணியாதன துணிந்து — பிரிதலும் பிரிந்து ஆற்றி இருத்தலும், தோழி மயிலைப் பார்த்துப்

Koviloor Digital Library

பிரிதலையும் பிரிந்து ஆற்றி இருத்தலையும் நாங்கள் செய்கின்றோம் என்று கூறுவதால் ஒரு பக்கத்தில் இருக்கின்ற தலைவன் கேட்டு வரைந்து கொள்வான் என்று பொருள் பெறப்படுகிறது. கணியார்—வேங்கைமரம், கருத் தின்று முற்றிற்று—பூத்துத் தினைகொய்யும் காலத்தை அறிவிப்பது, மணியார்பொழில்—மணிநிறைந்த பொழில்கள்.

தத்துவப்பொருள்: ஆன்மா சார்ந்ததன் வண்ணம் ஆதலின் உலகப் பற்றினைச் சார்ந்திருந்ததனை விடுத்து விட்டுச் சிவத்தைச் சார வற்புறுத்தியது.

31. வறும்புனம் கண்டு வருந்துதல்

கொளு: மென்புனம் விடுத்து மெல்லியல் செல்ல
மின்பொலி வேலோன் மெலிவுற்றது.

மென்மையான தினைப்புனத்தை விட்டுத் தலைவியும் தோழியும் சென்றதன் பின்னர் தலைவன் புனத்திற்கு வந்து வருந்தியது.

பொதுவினில் தீர்த்(து) என்னை யாண்டோன்
புலியூர் அரன்பொருப்பே
இதுவெனில் என்னின்(று) இருக்கின்ற
வா(று)எம் இரும்பொழிலே
எதுநுமக்(கு) எய்திய(து) என்உற்
றனிர்அறை ஈண்டருவி
மதுவினில் கைப்புவைத் தாலொத்த
வாமற்(று)இவ் வான்புனமே. (146)

பொருள்: என்னைப் பிறசமயப் பொதுவிலிருந்து தவிர்த்து ஆட்கொண்டு தில்லையம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மலை இதுவாயின் இன்று இது இருக்கின்ற தன்மை ஏன்? எம்முடைய பெரிய சோலையே, இன்று உனக்கு வந்த துன்பம் யாது? மேலும் இப்புனத்தில் அருவியாய் விழுகின்ற தேனில் இனிய சுவை இல்லாது கைப்புச்சுவை உள்ளது போல் தோன்றுகின்றதே, இது எவ்வாறு? (என்று தலைவன் வருந்திக் கூறினான்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: தலைவி இல்லாத தினைப்புனமாக இருப்பதால் இத்தகு வறுமைக் காட்சி தோன்றியதாம். பொது — பல்வேறு சமயச் சூழலில் அகப்பட்டு உய்யும் நெறி இதுவோ, அதுவோ என்று மயங்கும் நிலை, மது — தேன், கைப்பு — கசப்புச்சுவை.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி இல்லாததால் துரியத்தானம் வெறுமையாய் இருப்பதைக் கண்டு இன்பம் எய்திற்றிலோமே என்று ஆன்மா வருந்தியது.

32. பதிநோக்கி வருந்தல்

கொளு: மதிநுதல் அரிவை பதிபுகல் அரிதென
மதிநனி கலங்கிப் பதிமிக வாடியது

பிறைச் சந்திரனை ஒத்த நெற்றியை உடைய தலைவியின் ஊருக்குள் செல்லுதல் அரிதாகுமே என அறிவின் மிக்குடைய தலைவன் வருந்திக் கூறியது.

ஆனந்த மாக்கடல் ஆடுசிற்
றம்பலம் அன்னபொன்னின்
தேனுந்து மாமலைச் சீறூர்
இதுசெய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி
அழும்மழப் போலுமன்னோ
நானுந் தளர்ந்தனன் நீயும்
தளர்ந்தனை நன்னெஞ்சமே. (147)

பொருள்: ஆனந்தமாக இறைவன் ஆடுகின்ற சிற்றம்பலத்தை ஒத்த பொன்போன்ற தேனருவி பாய்கின்ற பெரிய மலையினைச் சார்ந்த சிறிய ஊர் இது. நல்ல நெஞ்சமே, இவ்வாறு இந்த ஊர் அண்மையில் இருந்தாலும் நம்மால் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. ஆகாயத்தில் உள்ள சந்திரனை எடுத்துத்தா என்று அழுகின்ற பச்சைக் குழந்தை போல நீயும் அந்த ஊருக்குள் செல்லுவதற்கு நினைந்து தளர்ந்துள்ளாய். என் செய்வது? அதனால் நானும் தளர்ந்தேன் (என்று தலைவன் நெஞ்சைப் பார்த்துக் கூறியது)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: ஆனந்தமாக்கடல் — ஆனந்தமாக ஆடுகின்ற இறைவன், வானுந்து — வானத்தில் செல்லுகின்ற, அழுமழம் — அழுகின்ற மழலை.

தத்துவப்பொருள்: சிவம் உறையும் பதியாகிய துரியாதீதத்தைக். கண்டு அங்குச் செல்லுதற்குரிய பரிபக்குவம் தனக்கு இல்லையே என்று ஆன்மா வருந்தியது.

<u>பகற்குறி முற்றிற்று.</u>

14. இரவுக்குறி

பகற்காலத்தில் தோழி குறிப்பிட்ட இடத்தில் தலைமகளைப் புணர்ந்தும் பின் தோழியால் பகற்குறி விலக்கப் பட்டும் நின்ற தலைமகன் அதனால் வருந்தித் திருமணம் செய்து கொள்ளுதல் சிறப்பு. அவ்வாறு திருமணம் செய்து கொள்ளானாயின் தலைவி இல்லத்தில் சிறை வைக்கப் பட்ட பின்னும் (இற்செறிக்கப்பட்டபின்) தோழியை இரவுக்குறி வேண்டிச் செயல்படுவான். இது முப்பத்து மூன்று துறைகளை உடையது.

1. இரவுக்குறி வேண்டல்

கொளு: நள்ளிருள் குறியை வள்ளல் நினைந்து
வீங்கு மென்முலைப் பாங்கிக்(கு) உரைத்தது.

மிகவும் இருட்டாக உள்ள இரவில் கூடும் கூட்டத்தைத் தலைவன் நினைந்து, நேரத்திற்கு நேரம் பெருக்கும் முலையை உடைய தோழியிடம் உரைத்தது.

மருந்துநம் அல்லற் பிறவிப்
பிணிக்(கு)அம் பலத்(து) அமிர்தாய்
இருந்தனர் குன்றின்நின்(று) ஏங்கும்
அருவிசென்(று) ஏர்திகழப்
பொருந்தின மேகம் புகைந்திருள்
தூங்குழ் புனன் இறும்பின்

Koviloor Digital Library

விருந்தினன் யான்உங்கள் சீறூர்
அதனுக்கு வெள்வளையே. (148)

பொருள்: வெண்மையான வளையலை அணிந்தவளே, துன்பத்தைத் தரும் நம் பிறவியாகிய நோய்க்கு அரு மருந்தாகவும், தில்லையம்பலத்து அமிர்தமாகவும் இருக்கும் சிவபெருமானது மலையின்கண் வீழுகின்ற அருவிகள் பாய மேகங்கள் வந்து தங்கின. அத்தகைய மேகங்கள் புதைந்திருக்கும் செய்காட்டை உடைய உங்கள் சிற்றூர்க்கு யான் ஒரு விருந்தினன். என்னை ஏற்றுக் கொள்க(என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: ஏர் — அழகு, புனைஇறும்பு — நன்கு ஆக்கப் பெற்ற செய்காடு, அதாவது இயல்பான காடல்லாது உண்டாக்கப்பட்ட காடு.

தத்துவப்பொருள்: ஆன்மா திருவருளிடத்துச் சிவ கரணம் பெற்று, சிவத்தலைவிடம் சேர உதவி வேண்டல் என்றவாறாம்.

2. வழி அருமை கூறி மறுத்தல்

கொளு: இரவரல் ஏந்தல் கருதி உரைப்பப்
பருவரல் பாங்கி அருமை உரைத்தது

இரவு வருதலைத் தலைவன் எண்ணி உரைத்திட அதனால் துன்புற்ற தோழி வழி அருமை உரைத்தது.

விசும்பினுக்கு ஏணி நெறியன்ன
சின்னெறி மேன்மழைதூங்கு
அசும்பினில் துன்னி அளைநுழைந்
தால்ஒக்கும், ஐயமெய்யே
இசும்பினில் சிந்தைக்கும் ஏறற்(கு)
அரி(து)எழில் அம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிலைந்தான்
மலையத்(து)எம் வாழ்பதியே. (149)

பொருள்: தலைவனே, ஆகாயத்திற்கு ஏறுவதற்குச் செய்யப் பெற்ற ஏணிபோல் எம்மூர் சிறு வழியை

Koviloor Digital Library

உடையது. அவ் வழியிலும் மழை இடையறாது பெய்கிறது. எனவே நீர்த்திவலைகளை உடையது. மேலும் சிறுவழி என்பதால் குகைக்குள் நுழைவதுபோல் இருக்கும். தில்லையம்பலத்தில் உளனாய், குளிர்ந்த பிறையைச் சூடிய சிவபெருமானது மலையின்கண் உள்ளதாகிய எம் ஊர் வழுக்குவதாய், உண்மையான மனத்தினால் ஏறுதற்கும் அரியதாகும். ஆதலால் எம்மூர்க்கு இரவில் நீர்வர இயலாது (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: அசும்பு — நீர்த்துளி, அளை — குகை, இசும்பு — வழுக்கும், கோடு — வளைந்த சந்திரன் (பிறை)

தத்துவப்பொருள்: சிவப்பேரின்பம் அடைதற்கு அரிது. ஆதலால் ஆன்மா அன்பு கொண்டு முயற்சித்தாலே கிட்டும் என்றவாறு.

3. நின்று நெஞ்சுடைதல்

கொளு: பாங்கி விலங்கப் பருவரை நாடன்
நீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது.

தோழி இரவுக்குறியை விலக்கிச் சொல்ல, மலை நாட்டை உடைய தலைவன் அக்குறியிடத்தில் நீங்காது நின்று தன் நெஞ்சு நொந்து கூறியது.

மாற்றேன் எனவந்த காலனை
ஓலம் இடஅடர்த்த
கொற்றேன் குளிர்தில்லைக் கூத்தன்
கொடுங்குன்றின் நீள்குடுமி
மேற்றேன் விரும்பு முடவனைப்
போல மெலியும்நெஞ்சே
ஆற்றேன் அரிய அரிவைக்கு
நீவைத்த அன்பினுக்கே. (150)

பொருள்: ஒருவராலும் மாற்ற முடியாது என்று சினத்தோடு மார்க்கண்டேயன் மேல் வந்த யமனை, ஓலமிடும் வண்ணம் நெருங்கி உதைத்த கொம்புத் தேன் போன்றவன், குளிர்ந்த தில்லைக்கண் கூத்தாடுபவனின்

Koviloor Digital Library

கொடுங்குன்றின் உச்சியின் மேல் உள்ள தேனை விரும்பும் முடவனைப்போல மெலியும் நெஞ்சே, அருமையுடைய தலைவியிடத்து நீ வைத்த அன்பால் யான் ஆற்றமுடியாது வருந்துகின்றேன் (எனத் தலைவன் கூறிக்கொண்டான்)

சொ.பொ.வி.: மாற்றேன் — மாற்றமுடியாது, காலன் — யமன், அடர்ந்த — உதைத்த, கோல்தேன் — கொம்புத் தேன், குடுமி — மலை, அரிவை — தலைவி.

தத்துவப்பொருள்: ஆன்மா எளிதில் அடைவதற்கு அரிது சிவம் என எண்ணி வருந்தியது.

4. இரவுக்குறி நேர்தல்

கொளு: தடவரை நாடன் தளர்வு தீர
மடநடைப் பாங்கி வகுத்துரைத்தது

பெரிய மலைநாட்டை உடைய தலைவன் தளர்ச்சி நீங்க மடப்பத்தை உடைய பாங்கி உடன்பாடு தோன்றக் கூறியது.

கூளி நிரைக்கநின்(று) அம்பலத்(து)
ஆடி குரைகழற்கீழ்த்
தூளி நிறைத்த சுடர்முடி
யோஇவள் தோள்நசையால்
ஆளி நிரைத்தடல் ஆனைகள்
தேரும் இரவில்வந்து
மீளி யுரைத்தி வினையேன்
உரைப்பதென் மெல்லியற்கே. (151)

பொருள்: பேய்கள் வரிசையாக நிற்கத் தில்லை யம்பலத்தில் ஆடுகின்ற இறைவனது ஒலிக்கும் கழலை உடைய திருவடிக்கண் உண்டாகிய தூசி நிறைந்த முடியை உடையவனே. தலைவியின் தோள்மீது வைத்த விருப்பி னால் சிங்கக் கூட்டங்கள் வலிமை பொருந்திய யானை களைத் தேடுகின்ற இரவில் வந்து போகின்றாய். அதனால் மென்மையான உள்ளம் படைத்த தலைவிக்குத் தீவினை யேனாகிய நான் தெரிவிப்பது எதுவோ (என்றவாறு)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: இரவில் வந்து போகும் தலைவன் என்பதால் தோழி இரவுக்குறிக்கு உடன்பட்டவள் ஆயினாள். கூளி — பேய், தூளி — துகள் (தூசி), நசை — விருப்பம், ஆளி — சிங்கம்.

தத்துவப்பொருள்: சிவானுபத்தை எய்த நினைக்கும் ஆன்மாவிற்குக் கோபமாகிய சிங்கமும், காமமாகிய களிறும் இணைந்து அச்சுறுத்தும். அவற்றுக்கு உடன்படாத ஆன்மா அன்பு செலுத்தின் சிவப்பேறு உண்டாம்.

5. உட்கோள வினாதல்

கொளு: நெறிவிலக்(கு) உற்றவன் உறுதுயர் நோக்கி
யாங்கொரு சூழல் பாங்கி பகர்ந்தது.

இரவுக்குறிக்கு வரவேண்டாம் என்று விலக்கப்பட்ட தலைவன் உற்ற துயரை நோக்கித் தோழி வருவதற்குரிய ஒரு சூழ்ச்சியைச் சொல்லியது.

வரையன்(று) ஒருகால் இருகால்
வளைய நிமிர்த்துவட்கார்
நிரையன்(று) அழல்எழ எய்துநின்
றோன்தில்லை அன்னநின்னூர்
விரையென்ன மென்னிழல் என்ன
வெறியுறு தாதிவர்போ(து)
உரையென்ன வோசிலம் பாநலம்
பாவி ஒளிர்வனவே. (152)

பொருள்: அன்று மார்பையும் தோளையும் நிமிர்த்தி, இரு கால்களையும் வளைத்து, மேருமலையை வில்லாக ஆக்கி முப்புரங்களையும் அழல் எரியும் வண்ணம் அம்பு எய்தவனது தில்லையினை ஒக்கும் நின் ஊரிலுள்ளார் பூசும் நறுமணப் பொருள் எத்தன்மையன? அவர்கள் விளையாடும் மெல்லிய நிழல் எத்தன்மையது? அவர்கள் சூடும் பூக்கள் எத்தன்மையன?

சொ.பொ.வி.: இவ்வாறு தோழி கேட்பதால் அவன் வருகின்ற கோலத்தை அறிந்து தலைவியைக் கூட்டுவிப்

Koviloor Digital Library

பதற்கு ஏதுவாக அமையும் என்ற பொருள்பட இரவுக் குறிக்கு உடன்பட்டவள் ஆகிறாள். வரை — மேருமலை, இருகாலும் — வில்லின் இரண்டு பக்கமும், நிமிர்த்து — மார்பும்தோளும் நிமிர்த்து, வட்கார் — பகைவர், விரை — மணம், போது — மலர்.

தத்துவப்பொருள்: சிவத்தை எய்துவதற்கு அதற்குரிய ஆசார சீலங்களுடன் ஆன்மா வரவேண்டும் என்பதைத் திருவருள் உணர்த்தியது.

6. உட்கொண்டு வினாதல்

கொளு: தன்னை வினவத்தான் அவள் குறிப்பறிந்(து)
என்னை நின்னாட்(டு) இயல்அணி என்றது.

தோழி தன்னை வினவியதை அறிந்து கொண்டு தலைவன் அவளுடைய உடன்பாட்டை அறிந்ததால் அவள் ஊரில் உள்ளோர் செய்து கொள்ளும் கோலத்தோடு வருவதாகக் கூறினான்.

செம்மலர் ஆயிரம் தூய்க்கரு
மால்திருக் கண்அணியும்
மொய்ம்மலர் ஈர்ங்கழல் அம்பலத்
தோன்மன்னு தென்மலயத்(து)
எம்மலர் சூடிநின்(று) எச்சாந்(து)
அணிந்(து) என்ன நன்னிழல்வாய்
அம்மலர் வாட்கண்நல் லாய்எல்லி
வாய்நுமர் ஆடுவதே. (153)

பொருள்: அழகிய மலர்போலும் கண்களை உடையவளே, தாமரை மலர்கள் ஆயிரத்தைத் தூவி வழிபட ஒன்று குறைய கருமையுடைய திருமால் தாமரை ஒத்த தம் கண்ணினைத் தோண்டி அணிவித்த பெரிய மலர்போலும் திருவடியை உடைய சிற்றம்பலத்தவனின் பொதிகை மலை இடத்து இரவுப் பொழுதில் உம்முடைய தோழியர் எம்மலரைச் சூடிக்கொண்டு விளையாடுவர்? எவ்வகைச் சாந்தினை அணிந்து எந்த நிழலில் நிற்பர் கூறுவாயாக (என்று தலைவன் கேட்டான்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: தூய் — தூவி, திருக்கண்— மலர்போன்ற கண், தென்மலயம் — பொதிகை

தத்துவப்பொருள்: சிவத்தைச் சார்ந்தவர்கள் போல ஆன்மாவும் பூசிப் புனைந்து வருவேன் என்று கூறுதல், அதாவது திருநீறு பூசி உருத்திராக்கம் அணிந்து வருவேன் என்றது.

7. குறியிடங்கூறல்

கொளு: இரவுக் குறியிவண் என்று பாங்கி
அரவக் கழலவற்(கு) அறிய உரைத்தது.

இரவுக்குறி இத்தன்மையது என்று தோழியானவள் குறியிடத்தை வீரக்கழல் கட்டிய தலைவன் முன் கூறியது.

பனைவளர் கைம்மாப் படாத்(து)அம்
பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரல் பொதியில்
மலைப்பொலி சாந்தணிந்து
சுனைவளர் காவிகள் சூடிப்பைந்
தோகை துயில்பயிலும்
சினைவளர் வேங்கைகள் யாங்கள்நின்(று)
ஆடும் செழும்பொழிலே. (154)

பொருள்: பனைமரம் போலும் துதிக்கையினை உடைய யானையின் தோலை உரித்துப் போர்த்திய சிற்றம்பலத்தானது திருவடிகளைத் தேவர்கள் தொழும் இடமாகிய பொதிகை மலையில் தோன்றிய சாந்தத்தை அணிந்து அங்குள்ள சுனையில் வளரும் நீலமலர்களைச் சூடி நாங்கள் விளையாடும் சோலையானது மயில்கள் துயில் கொள்ளும் கிளைகளை உடைய வேங்கை மரம் உள்ள பொழிலாகும் (என்று தோழி கூறினாள்.)

சொ.பொ.வி.: கைமா — துதிக்கையை உடைய யானை, படாம் — தோலாகிய போர்வை, காவி — சுனை, தோகை — மயில், சினை — கிளை, வேங்கை — வேங்கைமரம்.

தத்துவப்பொருள்: சிவமாகிய தலைவியைச் சாரவேண்டின் நீறணிந்து மயிலின் முட்டைபோல

Koviloor Digital Library

பிரிப்பின்றி நிற்கும் சூட்சுமையாகிய ஐந்தெழுத்தை எழுப்பி வரவேண்டும் என்றவாறாம்.

8. இரவுக்குறி ஏற்பித்தல்

கொளு: அரவக் கழலவன் ஆற்றானென
இரவுக் குறி ஏற்பித்தது.

ஒலிக்கின்ற வீரக்கழலை உடைய தலைவன் ஆற்றான் என்று தலைவியிடம் இரவுக்குறிக்கு உடன்படத் தோழி உரைத்தது.

மலவன் குரம்பையை மாற்றிஅம்
மால்முதல் வானர்க்குஅப்பால்
செலஅன்பர்க்(கு) ஒக்கும் சிவத்தில்லைக்
கானலிற் சீர்ப்பெடையோ(டு)
அலவன் பயில்வது கண்(டு)அஞர்
கூர்ந்(து) அயில் வேல்உரவோன்
செலஅந்தி வாய்க்கண் டவனன்என்ன(து)
ஆங்கொல்மன் சேர்துயிலே. (155)

பொருள்: மும்மலங்களால் ஆகிய வலிமையான குடிசையாகிய உடம்பினை மாற்றித் திருமால் முதலிய தேவர்களுக்குக் கிடைக்காத பேரின்ப நிலையை மெய்யன்பர்களுக்கு என்று ஒதுக்கி வைக்கும் இறைவனது தில்லையைச் சூழ்ந்த காட்டில் பெண் நண்டோடு ஆண் நண்டு விளையாடுவதைக் கண்டு வருந்தி வேலை ஏந்திய ஒருவன் மாலைக்காலத்தே வரக்கண்டேன். அவனது துயிலாத தன்மை எத்தன்மைத்தாம்? நானறியேன் (என்று தோழி தலைவனிடம் கூறினாள்.)

சொ.பொ.வி: தலைவன் இரவில் துயிலான் என்று தோழி கூறுவதால் தலைவி இரவுக்குறி நேர்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. மலவன்குரம்பை— மும்மலங் களால் ஆகிய உடம்பு, மால் — திருமால், ஒக்கும் — ஒதுக்கும், பெடை — பெண்நண்டு, அலவன்—ஆண் நண்டு, அஞர்—துன்பம், அந்தி — மாலை, சேர்துயில் — துயிலாத் தன்மை.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: நண்டு விளையாடுவது போல சிவசக்திகள் பயின்று வருதல் கண்டு ஆன்மா அருள் பெற்றிடச் சிவத்தலைவி அருளவேண்டும் எனத் திருவருள் உணர்த்தியது.

9. இரவரவு உரைத்தல்

கொளு: குரவருகு குழலிக்(கு) இரவர வுரைத்தது.

குரவம் பூவின் நாற்றத்தை ஒத்த கூந்தலை உடைய தலைவிக்கு இரவில் தலைவன் வருவதைக் கூறியது.

மோட்டங் கதிர்முலைப் பங்குடைத்
தில்லைமுன் னோன்கழற்கே
கோட்டந் தரும்நம் குருமுடி
வெற்பன் மழைகுழுமி
நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள்
நாகம் நடுங்கச்சிங்கம்
வேட்டம் திரிசரி வாய்வரு
வான்சொல்லும் மெல்லியலே. (156)

பொருள்: மெல்லிய தன்மை உடையவளே, பருத்த முலையை உடைய உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட தில்லைச் சிற்றம்பலவனது திருவடி ஒன்றுக்கே வணக்கத்தைக் கொண்ட தலைவியை உடைய நம் முடைய தலைவன் — மேகங்கள் திரண்டிருப்பதால் கண்களைப் புதைத்தாற் போன்ற மிகுந்த இருளிடத்தே யானைகள் நடுங்க, சிங்கம் அதனை வேட்டையாடத் திரியும் மலைச் சாரலிடத்தே வருவதாகச் சொல்கிறான். இனி நான் செய்யத் தக்கது என்ன? கூறுவாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: மோடு — பெருமை, கோட்டம் தரும் — வளைதலைத்தரும் (வணங்குதலைத்தரும்), குரு — கருமைநிறம், மழை — மேகம், நாட்டம் — கண், நாகம் — யானை.

தத்துவப்பொருள்: இருளாகிய ஆணவமலத்தையும், யானையாகிய மாயா காரியத்தையும், சிங்கமாகிய

Koviloor Digital Library

கோபத்தையும் வென்று ஞானமுடையதாய் ஆன்மா சிவத்தை விரும்புகிறது என்று திருவருள் உரைத்ததாம்.

10. ஏதங்கூறி மறுத்தல்

கொளு: இழுக்கம் பெரி(து)இர வரின்என
அழுக்கம் எய்தி அரிவை உரைத்தது.

தலைவன் இரவில் வரின் குற்றம் (ஆபத்து) பெரிது என்று வருத்தமுற்றுத் தலைவி தோழிக்குக் கூறியது.

செழுங்கார் முழவதிர் சிற்றம்
பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்தயர்
வோன்கழல் ஏத்தலர்போல்
முழங்கார் அரிமுரண் வாரண
வேட்டைசெய் மொய்இருள்வாய்
வழங்கா அதரின் வழங்கென்று
மோஇன்றுஎம் வள்ளலையே. (157)

பொருள்: மேகம் போன்று குடமுழவு (முரசு) முழங்குகிறது. அத்தகைய தில்லையம் பலத்தின் கண்ணே திருமால் மலர்கள் கொண்டு வழிபட, கூத்துதனை ஆடுபவனாகிய இறைவனது திருவடிகளை வணங்காதவர்கள் போல் வருந்த — கர்ச்சிக்கின்ற சிங்கம் தன்னுடைய பகையான யானைகளை வேட்டையாடும் மிகுந்த இருட்கண் மக்கள் நடமாட்டமே இல்லாத வழியில் தலைவனை வருக என்று கூறுதல் தகுமோ என்று தலைவி கூறி வருந்தினாள்.

சொ.பொ.வி.: முழவு — ஒருவகை இசைக்கருவி, கான் — வாசனை, அரி — சிங்கம், வாரணம் — யானை, வழங்குதல் — நடமாட்டம்.

தத்துவப்பொருள்: ஆன்மாவிடம் கொண்டுள்ள கருணையால் ஆணவ இருளில் காம, குரோத விலங்குகள் நிறைந்த பிறவிக் காட்டில் ஆன்மாவை வருக என்று

Koviloor Digital Library

கூறுதல் திருவருளுக்குத் தகுமோ, அல்லது சிவத்திற்குத் தகுமோ என்பதாகும்.

11. குறை நேர்தல்

கொளு: அலைவேல் அண்ணல் நிலைமை கேட்டுக்
கொலைவேற் கண்ணி குறைநயந்தது.

வேலைக் கையில் ஏந்திய தலைவனது நிலைமை கேட்டுக் கொலைத் தொழிலில் சிறந்த வேல் போன்ற கண்ணை உடைய தலைவி இரவுக்குறிக்கு உடன்பட்டது.

ஓங்கும் ஒருவிடம் உண்(டு)அம்
பலத்துஉம்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை
வாய்த்தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்(து)அன்(று)
அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்(கு)அறி யேன்சிறி
யேன்சொல்லும் வாசகமே. (158)

பொருள்: உலகம் முழுவதையும் விழுங்கக் கூடிய விடத்தைத் தான் உண்டு. தேவர்கள் வாழ்வதற்குத் துன்பம் வராமல் காத்த தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானின் பெரிய மலையிடத்து ஒலிக் கின்ற அருவியால் நீர் பெருகிய சுனைப்புனலில் அன்று வீழ்ந்து முழுக இருந்த என்னை (தலைவியைப்) பிடித்து எடுத்துக் கரை சேர்த்த பெரியோனாகிய தலைவனுக்கு சிறியவளாகிய நான் சொல்லும் வாசகம் அறியேன். (என்று உடன்பட்டதைக் குறிப்பாகத் தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: விடம் — நஞ்சு, தடவரை — பெரிய மலை, தழங்கும் — ஒலிக்கும்.

தத்துவப்பொருள்: சிவம் மூழ்கி அழிதலாவது ஆன் மாவிற்குப் புலனாகாமல் அதற்குள் மறைவதாம். அவ்வாறு மறைய ஆன்மா புனலாகிய பிறவியெடுத்து துய்த்துச் சிவத்தை உள்ளவாறு உணர்ந்து தனக்குள் இருந்ததை வெளிப்படுத்திக் காணுதல் ஞானம் பெறுதலாகும்.

Koviloor Digital Library

12. குறைநேர்ந்தமை கூறல்

கொளு: குறைந யந்தனள் நெறிகு ழலியென
எறிவேல் அண்ணற்(கு) அறிய உரைத்தது

சுருண்ட கூந்தலை உடைய தலைவி தலைவனின் குறையை ஏற்றுக் கொண்டாள் என வேலைக் கையில் ஏந்திய தலைவன் அறியும்படி தோழி கூறியது.

ஏனற் பசுங்கதிர் என்றூழ்க்
கழிய எழிலியுன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை
செய்யும்வம் பார்சிலம்பா
யான்இற்றை யாமத்து நின்னருள்
மேல்நிற்க லுற்றுச்சென்றேன்
தேனக்க கொன்றையன் தில்லை
யுறார்செல்லும் செல்லல்களே. (159)

பொருள்: தினைப்பயிர் கோடை வெப்பத்தால் அழிகின்ற நேரத்தில் அது அழியாமல் மழை பொழிய வேண்டிக் குறவர்கள் தெய்வத்திற்குப் பலி கொடுத்து ஆரவாரிக்கின்ற மலை நாட்டை உடையவனே — நான் இன்று நடுஇரவின்கண் நின் ஏவல்வழி நிற்கக் கருதி — தேன்சிந்தும் கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானது தில்லையை அடையாதவர்கள் அடைந்த துன்பத்தை அடைந்தேன் (என்று தோழி தலைவனிடம் கூறினாள்).

சொ.பொ.வி.: தலைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் தலைவியிடம் துன்பப்பட்டு முடித்தேன் என்று தோழி தலைவனிடம் கூறுவதால் தலைவி இரவுக் குறிக்கு உடன்பட்டாள் என்ற குறிப்பு பெறப்படுகிறது. ஏனல் — திணை, என்றூழ்க்கழிய — வெயில் கழிய, எழிலி — மழை, கம்பலை — விழாவின் ஆரவாரம், அருள் — ஏவல்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அடையத் திருவருள் உதவியாக இருந்ததையும், அதற்கு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளையும் கூறுதலாயிற்று.

Koviloor Digital Library

13. வரவுணர்ந்து உரைத்தல்

கொளு: வளமயில் ஏடுப்ப இளமயிற் பாங்கி
சேருவேல் அண்ணல் வரவு ரைத்தது.

அழகிய மயில் போன்ற சாயலை உடைய தோழி வேலை ஏந்திய தலைவன் இரவுக்குறிக்கு வந்தமையை உரைத்தது.

முன்னும் ஒருவர் இரும்பபொழில்
மூன்றற்கும் முற்றும்இற்றால்
பின்னும் ஒருவர்சிற் றம்பலத்
தார்தரும் பேரருள்போல்
துன்னுமோர் இன்பம்என் தோகைதம்
தோகைக்குச் சொல்லுவபோல்
மன்னும் அரவத்த வாய்த்துயில்
பேரும் மயிலினமே. (160)

பொருள்: *உலகங்கள் மூன்றும் தோன்றுவதற்கு முன் தாம் ஒருவராய் நின்றும், உலகங்கள் அனைத்தும் ஒடுங்கு கின்ற பேர்ஊழிக் காலத்திற்குப் பின்னும் தாம் ஒருவராய் நிற்கும் பெருமையை உடைய சிற்றம்பல நாதர் அருளிய பேர் அருள்போல — ஒப்பற்ற இன்பம் இந்த இல்லின்கண் வர இருக்கிறது என்று தம்முடைய இளைய மயில்களுக்கு உரைப்பன போல ஆரவாரத்தைச் செய்த மயில் இனங்கள் தூக்கம் கலைந்து எழுந்தன. இது என்னோ என்றவாறு.*

சொ.பொ.வி.: பெரிய மயில் கூட்டம் தூக்கம் கலைந்து எழுந்தன என்று கூறப்படுவதால் தலைவன் இரவுக்குறிக் கண் வந்ததை அறிவிக்க எழுப்பிய ஓசைதான் மயில் கூட்டத்தை எழுப்பியது என்று பொருள்பட்டுத் தலைவன் வரவு உணரப்பெறுகிறது. பொழில் — உலகம், மூன்று — மேல் உலகம், பாதாள உலகம், மண்உலகம்.

தத்துவப்பொருள்: ஆணவம் விரைந்து வந்து வீட்டின் எல்லையாகிய ஆஞ்ஞைத் தானத்தில் நிற்பதால் மயில் ஓசை போன்று ஒரு நாதம் அனுபவத்தில் எழும். அது பேரின்பம் நிகழ இருப்பது என்பதை உணர்த்தும் என்பதாம்.

Koviloor Digital Library

14. தாய் துயில் அறிதல்

கொளு: ஊசன் மிசைவைத்(து) ஒள்அ மளியில்
தாயது துயில் தான் அறிந்தது.

தோழி, தாய் தூங்குகிறாளா அல்லது விழித்திருக் கிறாளா என்று அறிவதற்குப் பிற சொற்களைச் சொல்லி அவள் துயின்றதை அறிந்தது. (அமளி — படுக்கை)

கூடார் அரண்நெரி கூடக்
கொடுஞ்சிலை கொண்டஅண்டன்
சேடார் மதின்மல்லல் தில்லைஅன்
னாய்சிறு கண்பெருவெண்
கோடார் கரிகுரு மாமணி
ஊசலைக் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தை
நூக்கும்நம் சூழ்பொழிற்கே. (161)

பொருள்: பகைவர்களின் அரண்களைத் தீ சென்று பற்றும்படியாக வளைந்த வில்லைக் கையில் தாங்கிய இறைவனது பெரிய மதில் சூழ்ந்த வளமிக்க தில்லையை ஒத்தவளே. சிறிய கண்ணையும் பெரிய வெண்மையான கொம்புகளையும் உடைய யானை நமது சோலையின் கண் உயர்ந்த மணிகளால் செய்யப்பெற்ற நம்முடைய ஊஞ் சலை அழித்தது. மேலும் இதழ்களைக் கொண்ட நல்ல மலர்களால் ஊஞ்சலின் கயிறு தொடுக்கப்பெற்று நாக மரத்தில் கட்டப் பெற்றிருந்தது. அம்மரத்தையும் தூக்கி எறிந்தது. இதற்கு என் செய்வோம். (என்று தோழி கூறியது)

சொ.பொ.வி.: இவ்வாறு ஊஞ்சல் அழிந்ததைக் கூறு கின்ற பொழுது தாய் பதில் சொல்லாது இருந்ததால் தாய் தூங்குகிறாள் என்பது பெறப்படுகிறது. அண்டன் — இறைவன், சேடார் — பெரிய, குரு — நிறம், ஊசல் — ஊஞ்சல், கோட்டி — அழகு, தோடு — இதழ், நாகம் — நாகமரம், நூக்கும் — தூக்கி எறிந்து அழிக்கும்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவம் (ஆன்மாவோடு) கூடுவதற்கு ஏதேனும் உபகாரம் உண்டா? அல்லது தடை வருமா? எனத் திருவருள் எண்ணிப் பார்த்தது.

15. துயிலெடுத்துச் சேறல்

கொளு: தாய்துயில் அறிந்(து)ஆய் தருபவள்
மெல்லியற்குச் சொல்லியது.

தாயினுடைய துயிலை அறிந்த தோழி தலைவிக்குச் சொல்லி அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்பிக் கொண்டு செல்லுதல்.

விண்ணுக்கு மேல்வியன் பாதலக்
கீழ்விரி நீர்உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்துதென்
தில்லைநின் றோன்மிடற்றின்
வண்ணக் குவளை மலர்கின்
றனசின வாண்மிளிர் நின்
கண்ணொக்கு மேற்கண்டு காண்வண்டு
வாழும் கருங்குழலே. (162)

பொருள்: வண்டு ஒலிக்கும் கரிய கூந்தலை உடையவளே, விண்ணுக்கு மேலாகவும், பாதாளத்திற்குக் கீழாகவும், கடல் சூழ்ந்த உலகத்திற்கு நடுவாகவும் நிற்கின்றவனும், விருப் பத்தோடு தில்லையில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய சிவபெருமானது நீலகண்டத்தைப் போல — கருமை யுடைய குவளை மலர்கள் மலர்ந்திருப்பதை உன்னுடைய ஒளிபொருந்திய கண்கள் ஒத்திருக்குமா எனக் காண்பதற்கு வருவாயாக (என்று தோழி தலைவியைக் கூறி எழுப்பினாள்)

சொ.பொ.வி.: குவளை மலர் ஒத்ததா எனக் காண எழு என வேறொன்று கூறி இரவுக்குறிக்குத் தோழி அழைத்துச் சென்றமை புலப்படுகிறது. நாப்பண் — நடுவிடம் , சினவாண்மிளிர் — சினத்தை உடைய வாள் பிறழ்வது போன்ற கண். விண், பாதாளத்தில் இறைவ னுடைய கடந்த நிலையும், மண்ணில் நாப்பண் கலந்த

Koviloor Digital Library

நிலையும், தில்லையில் நின்றதில் உடனாகிய நிலையும் உணர்த்தப்படுகின்றன.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் மனநிறைவால் சிவமும் மலரவேண்டும் என்று திருவருள் வேண்டிக்கொண்டவாறு.

16. இடத்துய்த்து நீங்கல்

கொளு: **மைத்தடங் கண்ணியை உய்த்திடத்து ஒருபால் நீங்கல் உற்ற பாங்கி பகர்ந்தது.**

மை பூசப்பெற்ற பெரிய கண்களை உடைய தலைவியை இரவுக்குறியிடத்து விட்டுவிட்டுத் ஒருபக்கத்தே நீங்கித் தலைவியிடம் தோழி கூறியது.

நந்தீ வரமென்னு நாரணன்
நாண்மலர்க் கண்ணிற்(கு) எஃகம்
தந்தீ வரன்புலி யூரனை
யாய்தடங் கண்கடந்த
இந்தீ வரமிவை காணின்
இருள்சேர் குழற்கெழில்சேர்
சந்தீ வரமுறி யும்வெறி
வீயும் தருகுவனே. (163)

பொருள்: நந்தி வரம் தரவேண்டும் என்று வணங்கிய நாராயணனுக்கு மலர் போன்ற தன் கண்ணை இடந்து அர்ச்சித்தவனுக்கு ஒரு சக்கரத்துப் படையைக் கொடுத்த இறைவனது தில்லையை ஒத்தவளே — உன்னுடைய பெரிய கண்களை ஒத்த இந்த நீல மலர்களைப் பார்ப்பாயக. உன்னுடைய இருண்ட கூந்தலுக்குச் சந்தன மரம் தரும் அழகிய தளிர்களையும், மலர்களையும் நான் சென்று கொண்டு வருவேன். (அதுவரை) இந்த நீலமலர்களைக் கண்டு கொண்டு இருப்பாயாக (என்று தோழி தலையிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: இதனால் தலைவியைக் குறியிடத்தே தனியே விட்டுவிட்டுத் தோழி பிரிந்தாள் என்பது பெறப் படுகிறது. நந்தி — இறைவன் பெயர்களில் ஒன்று, நந்தி நாமம் நமசிவாயவே என்பது திருமுறை. நாரணன் —

Koviloor Digital Library

திருமால், எஃகம் — படை, தந்துஈவரன் — படைத்துக் கொடுத்த மேன்மை உடையவன், கண்கடந்த — கண்ணை வென்ற, இந்தீவரம் — நீல மலர், சந்து ஈ—சந்தனமரம் தந்த, வரமுறியும் வெறி வீயும் — சிறந்த தளிர், மணம் பொருந்திய மலர்.

தத்துவப்பொருள்: சிவத்தை விழித்திரு என்று திருவருள் வேண்டிக் கொண்டவாறாம். அவ்வாறு விழித் திருந்தால் கருணை சிறக்கும். ஆன்மா அருள்பெறும் என்றவாறு.

17. தளர்வகன்று உரைத்தல்

கொளு: வடுவகிர் அனைய வரிநெடுங் கண்ணியைத்
தடுவரி அன்பொடு தளர்வகன்று ரைத்தது.

மாவடு பிளந்ததை ஒத்த செவ்வரி பரந்த கண்ணை உடைய தலைவியைத் தடுத்ததற்கு அரிய அன்புடனே தலைவன் தளர்ச்சி நீங்கக் கூறியது.

காமரை வென்றகண் ணோன்தில்லைப்
பல்கதி ரோன்அடைத்த
தாமரை இல்லின் இதழ்க்கத
வம்திறந் தோதமியே
பாமரை மேகலை பற்றிச்
சிலம்பொதுக் கிப்பையவே
நாமரை யாமத்(து)என் னோவந்து
வைகி நயந்ததுவே. (164)

பொருள்: காமனை வென்ற நெற்றிக்கண்ணை உடைய இறைவனது தில்லையின்கண் கதிரவன் அடைத்த தாமரை போன்ற உமது இல்லின்கண் இதழ்களாகிய கதவை நீங்களே திறந்து கொண்டோ வெளியே வந்தது. (மேலும்) இடையில் கிடந்த மேகலை ஒலிக்காமல் பிடித்தும், காற்சிலம்பு அசையாதவாறு காலின்மேலே செறித்தும், தனியே இந்த இருண்ட யாமத்தின் கண் நீ இவ்விடத்து விரும்பி வந்தது என்னோ? கூறுவாயாக (எனத் தலைவன் தலைவியிடம் கூறினான்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: பாம்அரை — பரந்த இடை , ஒதுக்கி — மேலே செறித்து.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி எளிவந்த கருணை யால் ஆன்மா இருக்கும் இடம் வந்தமை வியப்பு என்றது.

18. மருங்கணைதல்

கொளு: அன்பு மிகுதியின் அளவளாய் அவளைப்
பொன்புனை வேலோன் புகழ்ந்துரைத்தது

அன்பு மிகுதியால் தலைவியை அழகிய வேலை உடைய தலைவன் புகழ்ந்து உரைத்தது.

அகழின் புகைவிம்மி ஆய்மலர்
வேய்ந்(து)அஞ் சனம்எழுதத்
தகிலும் தனிவடம் பூட்டத்
தகாள்சங் கரன்புலியூர்
இகலும் அவரில் தளரும்இத்
தேம்பல் இடைஞெமியப்
புகிலும் மிகஇங்ங னேயிறு
மாக்கும் புணர்முலையே. (165)

பொருள்: கூந்தலில் அகிற் புகை விம்ம, காம்பு கிள்ளி மலர்களைச் சூட்டி, கண்ணிற்கு மை எழுதி (அழகு செய்யத் தக்கவள் என்றாலும்) ஒப்பற்ற முத்துமாலையை அணியத் தகாதவள் (இடை பொறுக்காது) — இறைவனது தில்லையின் பெருமை உணராது மாறுபடுவரைப் போல தளர்கின்ற — தேய்ந்து இடை ஒடியப் புகினும் — அதனை அறியாது ஒன்றோடு ஒன்று முலைகள் மிகவும் விம் முகின்றன. இதன் முடிவு என்னவாகுமோ அறிந்திலமே (எனத் தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: இவ்வாறு தலைவியின் இடையை வருணித்து அவள் இடையை அணைத்தான் என்றவாறு, விம்மி — மிகுந்து, வேய்ந்து — சூடி, அஞ்சனம் — கண்மை, தகிலும்— செய்தாலும் , தேம்பல்இடை — மெலிந்த இடை, ஞெமியப் புகிலும் — ஒடிந்தாலும்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தலைவியின் பேரருளாம் அழகினை வியந்து அடைய முற்பட்டது.

19. முகங்கண்டு மகிழ்தல்

கொளு: முகையவிழ் குழலி முகமதி கண்டு
திகழ்வேல் அண்ணல் மகிழ்வுற்றது.

அரும்பு அவிழ்ந்து மலரைச் சூடிய தலைவியின் முகம் கண்டு வேலையுடைய தலைவன் மகிழ்ந்து உரைத்தது.

அழுந்தேன் நரகத்து யானென்(று)
இருப்பவந்(து) ஆண்டுகொண்ட
செழுந்தேன் திகழ்பொழில் தில்லைப்
புறவில் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுதம்
இவள்யான் குரூஉச்சுடர்கொண்(டு)
எழுந்(து)ஆங் கதுமலர்த் தும்உயர்
வானத்து இளமதியே. (166)

பொருள்: நான் ஒருக்காலும் நரகத்திலே அழுந்தேன் என்று இறுமாப்புடன் இருக்க, தாமே எளிவந்து கருணையால் ஆண்டு கொண்ட சிவபெருமான் எழுந் தருளியுள்ள சோலை சூழ்ந்த தில்லை நகர வயற்காட்டில் தேனையும், மலர்ச்சியையும் உடைய குமுதமலர் இவள். நான் அக்குமுத மலரை மலர்த்தும் வானத்தில் விளங்கும் இளமதியோன் ஆவேன் (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: குமுதமலர் போன்ற மலர்ச்சி தலைவி யின் முகத்தில் தோன்றுவதால் அவள் முகத்தைப் பாராட்டி— அவள் மனமகிழ தான் சந்திரனாக விளங்கி யதை எண்ணித் தலைவன் மகிழ்ந்தமை பெறப்படுகிறது. புறவு — இளங்காடு, செறு — வயல், குரூச்சுடர் — நிறத்தை உடைய நிலவு.

தத்துவப்பொருள்: குமுதமாக சிவம், இளமதியாக ஆன்மா என்பது பொருள். ஆன்மாவின் கரமாகிய அந்தக் கரணங்கள் தீண்டச் சிவம் மலர்ந்து கருணை பொழியும்.

Koviloor Digital Library

20. பள்ளியிடத்து உய்த்தல்

கொளு: பிரிவது கருதிய பெருவரை நாடன்
ஒள்ளிழைப் பாங்கியொடு பள்ளிகொள்க என்றது.

பிரியக் கருதிய பெரிய மலைநாடன் அழகிய ஆபரணங்களை அணிந்த தோழியொடு சென்று உறக்கம் கொள்க என்று தலைவியிடம் கூறியது.

சுரும்புறு நீலம் கொய்யல்
தமிநின்று துயில்பயின்மோ
அரும்பெறல் தோழியொ(டு) ஆயத்து
நாப்பண் அமரர்ஒன்னார்
இரும்புறு மாமதில் பொன்இஞ்சி
வெள்ளிப் புரிசையன்றோர்
துரும்புறச் செற்றகொற் றத்(து)எம்
பிரான்தில்லைச் சூழ்பொழிற்கே. (167)

பொருள்: தேவர்களுக்குப் பகைவராகிய அசுரர்களின் இரும்பு, பொன், வெள்ளி மூன்றினால் ஆகிய கோட்டைகளைக் கொண்ட ஊர்களைத் துரும்பாகச் சுட்டுஎரித்த இறைவனுடைய தில்லையைச் சூழ்ந்த சோலையிடத்தே தனியே நின்று நீலமலர்களைக் கொய்யாதே. தோழியர் கூட்டத்தோடு சென்று துயில்வாயாக (என்று தலைவன் தலைவியிடம் கூறினான்)

சொ.பொ.வி.: நாப்பண் — தோழியர் கூட்டத்தின் நடுவில், ஒன்னார் — தேவர்களின் பகைவர் கமலன், கமலாலட்சன், வித்யுண்மாலி ஆகிய மூன்று அரக்கர்களுடைய இரும்பு, பொன், வெள்ளியாலான கோட்டைகள், புரிசை — கோட்டை.

தத்துவப்பொருள்: பேரின்பம் துய்த்த ஆன்மா சிவத் தலைவியை நோக்கி மெய்யடியார் கூட்டத்துச் சென்று சேர்க. என்னிடத்தில் மட்டும் இல்லாது அவர்க்கும் அருள்க என்று கூறியது.

Koviloor Digital Library

21. வரவு விலக்கல்

கொளு: தெய்வம்அன் னாளைத் திருந்(து) அமளிசேர்த்தி
மைவரை நாடனை வரவுவிலக் கியது.

தெய்வம் போன்ற தலைவியைப் பள்ளியிடத்தில் சேர்த்துத் தோழி நல்ல மலை நாடனாகிய தலைவனை இனி இரவுக்குறி வாரற்க என விலக்கியது.

நற்பகல் சோமன் எரிதரு
நாட்டத்தன் தில்லையன்ன
விற்பகைத்(து) ஓங்கும் புருவத்(து)
இவளின் மெய்யேஎளிதே
வெற்பகச் சோலையின் வேய்வளர்
தீச்சென்று விண்ணினின்ற
கற்பகச் சோலை கதுவுங்கல்
நாடஇக் கல்லதரே. (168)

பொருள்: மலையிடத்தும் சோலையிடத்தும் உள்ள மூங்கிலின்கண் பிறந்த தீ ஆகாயத்திலுள்ள கற்பகச் சோலையைச் சென்று பற்றும் உயர்ந்த மலையை உடைய தலைவனே, சந்திரன், சூரியன், அக்கினி என்ற மூன்றையும் கண்களாகக் கொண்ட சிவபெருமானது தில்லையை ஒக்கும் வில்போன்ற புருவத்தை உடைய தலைவியின் காரணமாக இந்த வழி எளிதாக இருக்கலாம் என்றாலும் இரவில் இந்த வழியில் வாராதே (என்று தோழி தலைவனைத் தடுத்தாள்)

சொ.பொ.வி.: சோமன் — சந்திரன், எரி — அக்கினி, நாட்டம் — கண், மெய் — வழி, கதுவும் — பற்றுகின்ற, கல்லதர் — கற்களை உடைய வழி.

தத்துவப்பொருள்: யோக நெறிக்கண் அனுபவம் முதிர்ந்தார்க்கு அடைவதற்கு எளிமையானது சிவமாகும். ஆனால் சாதக நிலையில் உள்ள பரிபாகர்க்கு எண்ணிய போது எய்தும் எளிமை உடையது அல்ல சிவம். எனவே துரியாதீத நிலையை அடைய ஆன்மா சிவத்தோடு ஒன்றி யிருத்தல் வேண்டும் என்று திருவருள் கூறியது.

Koviloor Digital Library

22. ஆற்றாது உரைத்தல்

கொளு: வரைவு கடாய வாணுதல் தோழிக்(கு)
அருவரை நாடன் ஆற்றா(து) உரைத்தது

திருமணத்தை வலியுறுத்திய தோழிக்கு உயர்ந்த மலைநாட்டை உடைய தலைவன் ஆற்றாது உரைத்தது.

பைவாய் அரவுஅரை அம்பலத்(து)
எம்பரன் பைங்கயிலைச்
செவ்வாய்க் கருங்கண் பெரும்பணைத்
தோள்சிற் றிடைக்கொடியை
மொய்வார் கமலத்து முற்றிழை
இன்றென்முன் னைத்தவத்தால்
இவ்வா(று) இருக்கும்என் றேநிற்ப(து)
என்றும்என் இன்னுயிரே. (169)

பொருள்: படத்தை உடைய பாம்பை அரைஞாணாகக் கட்டிய சிற்றம்பல நாதனது கயிலையின் கண் வாழும் சிவந்த வாயையும், கருமையான கண்ணையும், பெரிய மூங்கில் போலும் தோள்களையும், சிறிய இடையினையும் உடைய கொடி போலும் தலைவியைத் தாமரையில் வாழும் திருமகளாகப் பண்டை நற்தவத்தால் காணுகிறேன். அவ்வாறு இருக்க அவளைச் சிறிய கொடிச்சியாக இருக்கிறாள் என்று கனவில் கூட நினைத்துப் பார்க்க எனது உடலில் உயிர் இருப்பதில்லை. (ஆதலால் நீ வரைந்து கொள் என்று எவ்வாறு எளிதாகக் கூறுகிறாய்?)

சொ.பொ.வி.: பை — படம், மொய் — இதழ்கள், முற்றிழை — திருமகள்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தைப் பிரிந்திருக்க ஆற்றாத தன்மையை அறிவித்தவாறு.

23. இரக்கம் கூறி வரைவு கடாதல்

கொளு: அதிர்க ழலவன் அகன்றவழி
எதிர்வ(து) அறியா(து) இரங்கி உரைத்தது.

Koviloor Digital Library

ஆரவாரிக்கின்ற வீரக்கழலினை உடையவன் பிரிந்த விடத்து அவனுக்கு வரும் தடைகளைக் குறிப்பிட்டுத் தோழி வருந்திச் சொன்னது.

பைவாய் அரவும் மறியும்
மழுவும் பயின்மலர்க்கை
மொய்வார் சடைமுடி முன்னவன்
தில்லையின் முன்னினக்கால்
செவ்வாய் கருவயிர்ச் சேர்த்திச்
சிறியாள் பெருமலர்க்கண்
மைவார் குவளை விடும்மன்ன
நீண்முத்த மாலைகளே. (170)

பொருள்: தலைவனே, தலைவியினுடைய பெரிய கண்களாகிய குவளைகள் நீண்ட முத்து மாலைகளாம் கண்ணீர்த்துளிகளை ஒழுகாது நிற்கும். ஆதலால் படத்தை உடைய பாம்பும், மான்குட்டியும், மழுவாயுதமும் ஏந்திய மலர்போலும் கைகளையையும், சடைகளால் இயன்ற முடியையும் உடைய சிவபெருமானது தில்லை நகரத்தை நீ அடைந்தவுடன் உன்னுடைய சிவந்த வாயில் நீண்ட ஊதுகொம்பினைச் சேர்த்து அடையாளத்திற்கு ஊது வாயாக.

சொ.பொ.வி.: இரவுப் பொழுது வந்த தலைவன் பத்திரமாக ஊர் சென்று சேர்ந்ததை அறியும்வரை தலைவி வருந்துவாள் என்பதைக் குறிப்பிட்டுச் சேர்ந்ததற்கு அடையாளமாக ஊதுகுழலால் ஊதும்படி தோழி கூறினாள். மறி — மான், முன்னவன் — முதல்வன், முன்னினக்கால் — அடைந்தபொழுது, கருவயிர் — ஊதுகொம்பு.

தத்துவப்பொருள்: சிவத்தலைவிக்கு ஆன்மாவிடம் உள்ள கருணையின் மிகுதி காட்டப்பெறுகிறது.

24. நிலவு வெளிப்பட வருந்துதல்

கொளு: தனிவே லவற்குத் தந்தளர்(வு) அறியப்
பனிமதி விளக்கம் பாங்கி பகர்ந்தது.

Koviloor Digital Library

வேலினை உடைய தலைவனுக்குத் தங்களுக்குத் தளச்சியைத் தந்த குளிர்ந்த திங்களுடைய விளக்கத்தைத் தோழி கூறியது. (தளர்ச்சி — புறப்பட இயலாத் தன்மை)

நாகம் தொழஎழில் அம்பலம்
நண்ணி நடம்நவில்வோன்
நாகம் இதுமதி யேமதி
யேநவில் வேற்கைஎங்கள்
நாகம் வரஎதிர் நாங்கொள்ளும்
நள்ளிருள் வாய்நறவார்
நாகம் மலிபொழில் வாயெழில்
வாய்த்தநின் நாயகமே. (171)

பொருள்: திங்களே, வேலை ஏந்திய கையை உடைய தலைவனாகிய யானை போல்வான் வர, நாங்கள் எதிர்கொள்வதற்குரிய இந்த இரவு நேரத்தில் தேன்மிக்க மலர்களை உடைய நாக மரங்கள் நிறைந்த சோலை யிடத்திலே நீ செய்கின்ற இந்த அழகிய ஒளி பிரகாசிக்கும் நிலைமை நினக்கு நன்றி ஆகுமா? பதஞ்சலி முனிவராகிய பாம்பு வணங்கத் தில்லையம்பலத்தில் நடம்புரியும் பெருமானது மலை இது. இதை உணர்ந்து கொண்டு செயல்படுவாயாக (என்று தோழி கூறியது)

சொ.பொ.வி.: சந்திரனைப் பாம்பு விழுங்குவது கிரகணம் ஆகும். ஆதலால் பாம்பு வணங்குகின்ற மலையில் சந்திரன் ஒளி பிரகாசித்து விளங்குவது அறிவுடையது ஆகாது என்று கூறப்பெற்றுத் தலைவனைத் தலைவி சந்திக்க நிலவு பிரகாசித்து தடையாக இருக்கிறது என்பதைத் தலைவனுக்குத் தோழி சிறைப்புறமாகக் கூறியது. நாகம் — நாகமாகிய பதஞ்சலி முனிவர், நாகம் — மலை, மதி—அறிவு, மதி—திங்கள், நாகம்—மலையாகிய தலைவன், நாகம் — நாகமரம்.

தத்துவப்பொருள்: பாசஞானமும், பசுஞானமும் இறைவனைத் தரிசிப்பதற்குத் துணை ஆகா என்று ஆன்மாவுக்குத் திருவருள் உணர்த்தி அவற்றை இடை யூறாகக் கருதி விலக்க வற்புறுத்தியது.

Koviloor Digital Library

25. அல்லகுறி அறிவித்தல்

கொளு: வல்லி யன்னவள் அல்ல குறிப்பாடு
அறைப்புனல் துறைவற்குச் சிறைப்புறத்(து) உரைத்தது.

கொடி போன்றவளாகிய தோழி அல்ல குறிப்பட்ட நிகழ்ச்சியை ஆரவாரிக்கின்ற நீர்த் துறையை உடைய தலைவனுக்குச் சிறைப்புறமாக உரைத்தது.

அல்லகுறி — இரவுக்குறிக்கண் தலைவன் தான் வந்ததை அறிவிப்பதற்காகப் பறவைகளை எழுப்புதல், குளத்தில் கல் எறிதல், ஆகிய குறிகளாகிய செயல்களைச் செய்வது வழக்கம். அவன் இவற்றைச் செய்யாத பொழுது இயற்கையாக அந்நிகழ்ச்சிகள் நடந்து விட்டால் அவை அல்லகுறி எனப்படும்.

மின்அங்(கு) அலரும் சடைமுடி
யோன்வியன் தில்லையன்னாய்
என்அங்(கு) அலமரல் எய்திய
தோளழில் முத்தம்தொத்திப்
பொன்அங்(கு) அலர்புன்னைச் சேக்கையின்
வாய்ப்புலம் புற்றுமுற்றும்
அன்னம் புலரும் அளவும்
துயிலா(து) அழுங்கினவே. (172)

பொருள்: ஒளி பொருந்திய சடைமுடி உடைய சிவ பெருமானது தில்லையை ஒத்த தலைவியே, முத்துப்போன்ற கொத்துக்களை உடையதாய் பொன்போன்ற மலரை உடைய புன்னை மரங்கள் சூழ்ந்துள்ள சோலையில் அன்னப் பறவை அனைத்தும் துன்புற்று விடியும்வரை துயிலாது ஆரவாரித்தன. அவ்வாறு நடை பெற்றதற்குரிய செயலைச் செய்தது யார்? நாம் அறிகின்றிலோம்? (என்று தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தோழி தலைவியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: துயின்ற அன்னப் பறவைகள் எழுந்து ஆரவாரித்தது அல்லகுறியாம். முதல் நாள் இரவு சென்று அல்லகுறியால் துன்பப்பட்டுத் தலைவனைச் சந்திக்காது

Koviloor Digital Library

திருப்பிய சூழல் குறிப்பாகக் காட்டப்பெறுகிறது. மின் — மின்னல், அலமரல் — ஆரவாரம், தொத்தி — கொத்தாக, புன்ன — புன்னைமரம், புலம்பிற்று— துன்புற்று.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தின்பால் பரிவுடையது ஆயினும் அப்பரிவில் சிவம் எளிதின் எய்தமுடியாது தடைப்பட்ட சூழலை அறிவுறுத்தியதாம்.

26. கடலிடை வைத்துத் துயர் அறிவித்தல்

கொளு: எறிகடல் மேல் வைத்(து) இரவருதுயரம்
அறைக ழலவற்(கு) அறிய உரைத்தது.

அலைகளை உடைய கடலின் மேல் வைத்துச் சில சொற்களைக் கூறி இரவுக்குறியில் ஏற்பட்ட வருத்தத்தை வீரக்கழலினை உடைய தலைவனுக்குத் தோழி சொல்லியது.

சோத்துன் அடியம்என் றோரைக்
குழுமித்தொல் வானவர்சூழ்ந்(து)
ஏத்தும் படிநிற்ப வன்தில்லை
யன்னாள் இவள்துவள
ஆர்த்துன் அமிழ்தும் திருவும்
மதியும் இழந்தவம்நீ
பேர்த்தும் இரைப்பொழி யாய்பழி
நோக்காய் பெருங்கடலே. (173)

பொருள்: பெரிய கடலே, முன் ஒரு காலத்தில் இவ்வாறு ஒலித்து உன்னிடம் தோன்றிய அமுதத்தையும், திருமகளையும், திங்களையும் இழந்திருந்தும் நீ மீண்டும் சோத்தம் என்று கூறி, அடிமையானவர்களைத் தேவர்கள் கூடிநின்று ஏத்தும் வண்ணம் தில்லைச் சிற்றம்பலத்தில் திருநடம் புரிகின்ற இறைவனது தில்லை போன்ற தலைவி வீணே வாடும்படி ஒலிக்கின்றாய். இதனால் வருகின்ற பழியையும் நோக்கவில்லை (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: அமுதம், திருமகள், சந்திரன் ஆகிய மூன்றும் பாற்கடலில் தோன்றினாலும் கடலுக்குப் பயன் படாது, பிறருக்குப் பயன்பட்டது. அதுபோல

Koviloor Digital Library

இப்பொழுதும் தலைவி வருந்தும்படி ஒலி எழுப்பி தனக்குப் பயனற்றுப் பிறருக்கு வருத்தத்தைச் செய்கிறது என்ற கருத்து வெளிப்படுகிறது. சோத்தம் — தாழ்வானவர்கள் கூறும் வணக்கச் சொல், இச்சொல்லைச் சொன்னதினால் அவர் களை வானவர்கள் சூழ்ந்து போற்றும் பெருமை கிடைக்கிறது என்று இறைவனை வணங்கும் பயன் கூறப் பட்டது. திரு — திருமகள், பேர்த்தும் — மீண்டும், இரைப்பு ஒழியாய் — ஆரவாரித்தலை ஒழியாய்.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவிடத்தில் கொண்ட கருணையைத் திருவருள் தெரிவித்தவாறு. மேலும் சோத்தம் என்று தன்னை வணங்குவோரை இறைவன் வானவர்கள் வணங்கும்படி செய்வான் என்பதும் பெறப்படுகிறது.

27. காமம்மிக்க கழிபடர்கிளவி

கொளு: தாமம் மிக்க தாழ்குழல் ஏழை
காமம் மிக்க கழிபடர் கிளவி

மாலை சூடிய தாழ்ந்த குழலை உடைய தலைவி காமம் மிக்க கழிபடர் சொற்களைக் கூறியது. காமம் மிக்க கழிபடர் கிளவி — தலைவன் மீது கொண்ட காதல் மிகுதியால் கேட்பதும், பேசுவதும் இல்லாத பிற உயிரினங் களிடத்துத் தலைவி பேசுதல்.

மாதுற்ற மேனி வரையுற்ற
வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி
காள்எழிற் புள்ளினங்காள்
ஏதுற்(று) அழிதிஎன் னீர்மன்னும்
ஈர்ந்துறை வர்க்(கு)இவளோ
தீதுற்ற(து) என்னுக்(கு)என் னீர்இது
வோநன்மை செப்புமினே. (174)

பொருள்: உமாதேவி பொருந்திய மேனியையும், மேருவாகிய வில்லையும் உடைய கூத்தப் பிரானது தில்லை நகரைச் சூழ்ந்து விளங்கும் சோலைகளே, கழிகாள்பறவை இனங்களே, என்னைப் பார்த்து உனக்கு என்ன வந்தது?

Koviloor Digital Library

ஏன் வருந்துகிறாய்? என்று கேட்காது இருக்கின்றீர்கள். கடற்கரைத் தலைவனுக்கு இவள் துன்புற்றது எதற்காக? என்று உங்களுக்குள் பேசிக் கொள்ளவில்லை. இதுவோ என்மீது கொண்ட அன்பு கூறுங்கள் (என்று தலைவி பேசினாள்)

சொ.பொ.வி.: கழிகாள் — சோலைக்குப்பக்கத்தில் உள்ள இடங்கள், புள்ளினம் — பறவைகள், அழிதி — வருந்துதல், என்னுக்கு — என்ன காரணம், நன்மை — காதல்தன்மை

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மா மீது கொண்ட கருணையை வெளிப்படுத்த இயலாமல் ஆன்மா வாடுகின்ற பொழுது பிறபொருளின் மேல் கருணை காட்டி அருள்புரிதல்.

28. காப்புச் சிறைமிக்க கையறு கிளவி

கொளு: மெய்யுறு காவலில் கையறு கிளவி

தப்பாத காவலால் சந்திக்க இயலாத தன்மையைத் தலைவி கூறியது.

இன்னற வார்பொழில் தில்லை
நகரிறை சீர்விழவில்
பன்னிற மாலைத் தொகைபக
லாம்பல் விளக்கிருளின்
துன்னற வுய்க்கும்இல் லோரும்
துயிலில் துறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின்
ஞாளி குரைதருமே. (175)

பொருள்: தேன் பொருந்திய சோலை சூழ்ந்த தில்லைநகர்த் தலைவனாகிய சிவபெருமானுக்குரிய சிறப்பு மிக்க விழாவின் கண் மாணிக்கம், வைரம் முதலிய மணிகளால் கட்டப் பெற்ற மாலைகள் வீசும் ஒளியும், விழாவில் ஏற்றப்பட்ட விளக்குகளின் வெளிச்சமும் இருளை ஓட்டும். வீட்டிலுள்ளார் தூங்குவது அறிந்து தலைவன் வேலை ஏந்திக் கொண்டு வரின் அவனைப்

Koviloor Digital Library

பார்த்து நாய் குரைக்கும். ஆகவே இரவுக்குறியில் தலைவனைச் சந்தித்தல் அரிது போலும் (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: பல ஒளிகள் இருளைப் பகலாக்குவ தாலும், நாய்கள் குரைப்பதாலும் இரவுக்குறியில் சந்திப்பு நிகழ்வது அரிதாம் என்பது பெறப்படுகிறது. நறவு — தேன், ஞாளி — நாய். இக்கூற்றால் வரைவு வேண்டுதல் பெறப்படுகிறது.

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்கு அருள்புரியச் சிவம் முனைந்தாலும் ஆன்மாவின் வினையால் சில தடைகள் ஏற்படுவதுண்டு. அத்தடைகைளைக் குறிப்பிட்டு ஆன்மா விற்கு அருள்புரிதல் காலம் தாழ்த்தப் பெறுகிறது.

29. ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

கொளு: நாறு வார்குழல் நவ்வி நோக்கி
ஆறு பார்த் துற்ற அச்சக்கிளவி

நறுமணம் மிக்க கூந்தலினை உடைய, மான் போன்ற நோக்கத்தை உடைய தோழியானவள் தலைவன் வரும் வழியில் ஏற்படும் துன்பங்களைக் கூறி இரவுக்குறிக்கு வரவேண்டாம் என்று கூறியது.

தாருறு கொன்றையன் தில்லைச்
சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா(று) அளவில
நீந்திவந் தால்நினது
போருறு வேல்வயப் பொங்குரும்
அஞ்சுகம் அஞ்சிவரும்
சூருறு சோலையின் வாய்வரற்
பாற்றன்று தூங்கிருளே. (176)

பொருள்: மாலையாகக் கொன்றையை அணிந்தவ னும், தில்லைக்கண் உள்ளவனும், சடைமுடியினை உடையவனும் ஆகிய இறைவனது கயிலை மலைக்கண் நீரோட்டம் மிக்க காட்டாற்றினைக் கடந்து வந்தால்

Koviloor Digital Library

உன்னுடைய கையில் ஏந்திய வேலுக்கு மேகத்தில் தோன்றும் இடியானது அஞ்சி வாராதிருக்க. என்றாலும் வெண்மேகம் பரந்து நிற்கும் சோலையிடத்துத் தெய்வங்கள் உள்ளன. ஆதலால், அச்சத்தைத் தருகின்ற மிகுந்த இருளின் கண் வாராதே (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: காட்டு வழியில் மேகங்கள் இடிக்கும், சோலையில் எழுந்தருளியுள்ள காவல் தெய்வங்கள் அச்சுறுத்தும் என்பவை கூறப்பெற்று இரவுக்குறி மறுக்கப் படுகிறது. தார் — மாலை, கான்யாறு — காட்டாறு, மஞ்சி — மேகம், உறும் — இடி, சூர் — காவல் தெய்வம்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி தன்னால் ஆட் கொள்ளப்பட்ட ஆன்மாவிடம் கருணை வழங்கும்போது. தடை வருமோ என்று எண்ணுவதாகத் திருவருள் கூறியது.

30. தன்னுள் கையாறு எய்திடு கிளவி

கொளு: மின்னுப் புரையும் அந்நுண் மருங்குல்
தன்னுட் கையா(று) எய்திடு கிளவி.

மின்னலை ஒத்த இடையினை உடைய தலைவி தன்னிடத்தில் ஏற்பட்ட வருத்தத்தைக் கேட்கும் தன்மை இல்லா உயிரினங்களிடத்தில் கூறியது.

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண்
தில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப்
புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குல்எல்
லாம்மங்குல் வாய்விளக்கும்
மண்டல மேபணி யாய்தமி
யேற்கொரு வாசகமே. (177)

பொருள்: இரவு முழுவதும் ஆகாயத்தை ஒளி பெறச் செய்யும் சந்திரமண்டலமே, தேவர்கள் அனைவருக்கும் வேந்தனாகிய ஞானநடம் ஆடும் இறைவனது தில்லை நகரத்தின் எல்லையில் உள்ள கழிகள் சூழ்ந்த தாழைப் புதர்களே, சான்றாக இப்புன்னை மரத்தின் கண் என்னைக்

Koviloor Digital Library

கலந்த கள்வராகிய தலைவன் ஒருகால் வரக் கண்டாயா? துணை இல்லாத எனக்கு ஒரு வாசகம் கூற மாட்டாயா? (என்று கேட்கும் தன்மையில்லாதவைகளிடத்தில் தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: விண்டலை — விண்ணுலகம், கண்டல் — தாழைப்புதர், கரியாக — சாட்சியாக, பணியா — கூறமாட்டாயா

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்கு கருணைக் செய்யும் சிவத்தலைவி பரிவோடு மதிமண்டலத்தை உசாவியது.

31. நிலைகண்டு உரைத்தல்

கொளு: நின்னின் அழிந்தனள் மின்னிடை மாதென
வரைவு தோன்ற வுரை செய்தது

மின்னலை ஒத்த இடையை உடைய தலைவி உன் காரணமாக வருந்துகிறாள். எனவே நீ வரைந்து கொள் வாயாக என்று தலைவனிடம் தோழி கூறியது.

பற்றொன்றி லார்பற்றும் தில்லைப்
பரன்பரங் குன்றில்நின்ற
புற்றொன்(று) அரவன் புதல்வ
னெனநீ புகுந்துநின்றால்
மற்றொன்று மாமலர் இட்டுன்னை
வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல
ளோமங்கை வாழ்வகையே. (178)

பொருள்: பற்றுக்களை விட்ட மெய்ஞ்ஞானியர் பற்றுக் கொள்ளும் தில்லை இறைவனின் திருப்பரங்குன்றில் புற்றின்கண் வாழுகின்ற பாம்பை அணிந்தவன் சிவன். நீ அவனுடைய :புதல்வனாகிய முருகனைப்போல இந்த மலைப்பகுதியில் வந்து நின்றால் உன்னைப் பூக்களை இட்டு வணங்குதலன்றி வேறு என்ன என்று எம் உறவினர் எள்ளி நகையாடினால் தலைவியாகிய எம் மங்கை உயிர் வாழ்வதற்கு வல்லவளோ, அல்லல் என்றவாறு.

Koviloor Digital Library

சொ.பொ.வி.: புதல்வன் — முருகன், பற்று ஒன்றில்லார் பற்றுதல் — 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்ற திருக்குறள் ஒப்பு.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் நிலை கண்டு சிவத் தலைவி வருந்தியதாகத் திருவருள் உரைத்தது.

32. இரவுறு துயரம் கடலொடு சேர்த்தல்

கொளு: எறிவேற் கண்ணி இரவரு துயரம்
செறிக டலிடைச் சேர்த்தி யுரைத்தது.

வேல் போன்ற கண்களை உடைய தலைவி இரவில் தனக்கு ஏற்படும் துன்பத்தைக் கடலிடத்திலும் உண்டாக்கிக் கூறியது.

பூங்கணை வேளைப் பொடியாய்
விழவிழித் தோன்புலியூர்
ஓங்கணை மேவிப் புரண்டு
விழுந்தெழுந்(து) ஓலமிட்டுத்
தீங்கணைந் தோர்அல்லும் தேறாய்
கலங்கிச் செறிகடலே
ஆங்கணைந்தார் நின்னை யும்முள
ரோசென் றகன்றவரே. (179)

பொருள்: பூவாகிய அம்புகளை உடைய மன்மதன் சாம்பலாக அழியும்படி விழித்த நெற்றிக்கண்ணை உடைய சிவ பெருமானது தில்லை வரைப்பில் பொருந்திய கடலே, நீ உயர்ந்த கரைகளைப் பொருந்திப் புரண்டு விழுந்து ஆரவாரித்துக் கலங்கி ஓர் இரவும் தெளிந்தாய் இல்லை. அதனால் உன்னைக் கூடியவரும் பிரிந்து விட்டாரோ அவர் எவ்விடத்தில் உள்ளார்? கூறுவாயாக (என்று தலைவி கூறியது)

சொ.பொ.வி.: தான் பெற்ற துன்பத்தைக் கடலும் பெறுவதாகத் தலைவி கூறுகிறாள். அதாவது தலைவியும் கடலும் இரவில் தூங்கவில்லை என்பதாம். வேள் — மன்மதன், ஓங்கணை — ஓங்கிய கரைகள், அல்லும் — இரவிலும், தேறாய் — தெளிவாய்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவுக்குச் செய்யும் கருணையைப் பிறவற்றின் மேலிட்டுக் கூறுதலாம்.

33. அலர் அறிவுறுத்தல்

கொளு: அலைவேல் அண்ணல் மனம கிழருள்
பலரால் அறியப் பட்ட(து) என்றது.

பகையை வருத்தும் வேலை ஏந்திய தலைவனே, உன்னுடைய மனமானது மகிழும்படிக் காதலானது பலரும் அறியும்படி வெளிப்பட்டு விட்டது என்று தோழி கூறியது.

அலர்ஆ யிரம்தந்து வந்தித்து
மால்ஆ யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய்
தாற்(கு)அள வில்ஒளிகள்
அலரா விருக்கும் படைகொடுத்
தோன்தில்லை யான்அருள்போன்(று)
அலராய் விளைகின்ற(து) அம்பல்கைம்
மிக்குஐய மெய்யருளே. (180)

பொருள்: திருமால் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு தமது ஆயிரம் கைகளாலும் இறைவனது திருவடியை வணங்கி வழிபாடு செய்ததற்கு எல்லையில்லாத ஒளி பொருந்திய சக்கரப் படையை அளித்த தில்லையம்பலப் பெருமானுடைய திருவருள் போன்று — தலைவனே, உன்னுடைய உண்மையான அருள் (காதல்) அம்பல் மிகுந்து அலராக ஆயிற்று. இனித்தக்கது செய்க (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: அலர் — மலர், ஒளிகள் அலராயிருக்கும் — ஒளிகள்பரந்து நிற்கும், படை — சக்கரப்படை, அம்பல் — அலரின் தொடக்கநிலை (பழிச்சொல்).

தத்துவப்பொருள்: இறைவனது திருவருள் முதலில் சிலரால் அறியப்பட்டுப் பின் பலரால் அறியப்படுவது ஆன்மாவிற்கு உணர்த்தப்படுகிறது.

இரவுக்குறி முற்றிற்று.

Koviloor Digital Library

15. ஒருவழித் தணத்தல்

இரவுக்குறிக்கண் தோழியால் அலர் அறிவிக்கப்பட்ட தலைவன் வரைய முற்பட வேண்டும். அவ்வாறு முற்படாது அலர் அடங்கும்வரை, வாராது ஓரிடத்தே பிரிந்திருப்பான். அவ்வாறு பிரிந்து நிற்றலே ஒருவழித் தணத்தலாகும். இது பதின்மூன்று துறைகளை உடையது.

1. அகன்று அணைவு கூறல்

கொளு: வழிவேறு படமன்னும் பழிவேறு படும் என்றது.

இரவுக்குறியால் எற்பட்ட பழியானது வேறுபட வழியினைத் தோழி தலைவனிடம் கூறியது.

புகழும் பழியும் பெருக்கில்
பெருகும், பெருகிநின்று
நிகழும் நிகழா நிகழ்த்தின்அல்
லால்இது நீநினைப்பின்
அகழும் மதிலும் அணிதில்லை
யோன்அடிப் போதுசென்னித்
திகழும் அவர்செல்லல் போலில்லை
யாம்பழி சின்மொழிக்கே. (181)

பொருள்: ஏதோ ஒரு காரணத்தால் பிறந்த புகழும் பழியும் அக்காரணங்களை ஒருவன் மேலும் வளர்த்தால் வளரும். தொடர்ந்து வரும் செயலால் அக்காரணங்கள் அழியாது நிலைபெற்று விடும். மேலும் அவை தாமாக நிகழ்வன இல்லை. இதனை நீ உணர்ந்தால் அகழியையும் மதிலையும் உடைய தில்லையின் தலைவனாகிய இறைவனின் திருவடிகளைத் தம் தலையில் சூடியவர்களின் பிறவித் துன்பங்களைப் போலத் தலைவிக்குப் பழி இல்லையாம்.

சொ.பொ.வி.: தலைவிக்கு வருத்தமும் பழியும் வருவதற்குக் காரணம் அலராகும். அந்த அலர் அடங்கத் தலைவன் சிறிது காத்திருந்தால் தலைவிக்குப் பழி ஏற்படாது. எனவே சில நாள் தங்கி இவளை வரைந்து

Koviloor Digital Library

கொள்ள வருவாயாக என்ற தோழியின் குறிப்பு பெறப் படுகிறது. அகழும் — அகழி, செல்லல்போல் — பிறவி இல்லைபோல்.

தத்துவப்பொருள்: வினை மறையும் வரை ஆன்மா சிவம் உறையும் பகுதிக்கண் தலைகாட்ட இயலாது.

2. கடலொடு வரவு கேட்டல்

கொளு: மணந்தவர் ஒருவழித் தணந்ததற்(கு) இரங்கி
மறிதிரை சேரும் எறிகடற்(கு) இயம்பியது.

கூடிய தலைவன் ஒருவழித் தணத்தில் பிரிந்ததற்கு வருந்தி ஆரவாரிக்கும் திரை பொருந்திய கடலுக்குச் சொன்னது.

ஆரம் பரந்து திரைபொரு
நீர்முகில் மீன்பரப்பிச்
சீரம் பரத்தின் திகழ்ந்தொளி
தோன்றும் துறைவர்சென்றார்
போரும் பரிசு புகன்றன
ரோபுலி யூர்ப்புனிதன்
சீரம்பர் சுற்றி எற்றிச்
சிறந்தார்க்கும் செறிகடலே (182)

பொருள்: புகழை உடைய அம்பர் என்ற திருத் தலத்தின் கண் எழுந்தருளியுள்ள இறைவனது தில்லை யம்பலத்தைச் சூழ்ந்துள்ள கரைகளை மோதி ஒலித்து எல்லை கடவாத கடலே — முத்துக்களைக் கொழிக்கும் அலைகள் தம்முள் மோதிக் கொள்ளும் கடல் நீர்— மேகங் களையும் மீனையும் தம்மிடத்தில் கொண்டு சிறந்த ஆகாயம் போல் விளங்குகிறது. அத்தகைய வளம்மிக்க துறைவராகிய தலைவர் நம்மை விட்டுப் பிரிந்துள்ளார். அவர் திரும்பி வருவதை உனக்குத் தெரிவித்தனரோ கூறுவாயாக (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: ஆரம் — முத்து, சீர்அம்பரம் — சிறந்த ஆகாயம், போரும் — மீள்தல், சீரம்பல் — சிவத்தலம்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத் தலைவி ஆற்றாமை மிக்கு திருவருளாம் தோழியை வினவுவது போலக்கடலை வினவியது.

3. கடலோடு புலத்தல்

கொளு: செறிவளைச் சின்மொழி எறிகடற்(கு) இயம்பியது.

வளைகளை அணிந்த மெல்லிய சொற்களை உடைய தலைவி கரையுடன் மோதும் கடலிற்குக் கூறியது.

பாணிகர் வண்டினம் பாடப்பைம்
பொன்தரு வெண்கிழிதம்
சேணிகர் காவின் வழங்கும்புன்
னைத்துறைச் சேர்ப்பர்திங்கள்
வாணிகர் வெள்வளை கொண்டகன்
றார்திறம் வாய்திறவாய்
பூணிகர் வாளரவ வன்புலி
யூர்சுற்றும் போர்க்கடலே. (183)

பொருள்: 'பூணணியை ஒத்து விளங்கும் பாம்பை அணிந்த இறைவனது தில்லையைச் சூழ்ந்த கரையொடு மோதுகின்ற கடலே, இசைப்பாணர்களை ஒத்து வண்டுக் கூட்டங்கள் பாட, அவற்றிற்குச் செம்பொன்னாகிய மகரந்தங்களைக் கொடுக்கின்ற மலர்களாகிய கிழிச்சீலையைத் தூரத்தே நிற்கும் பூஞ்சோலையிருந்து தருகின்ற புன்னைத் துறையை உடைய தலைவர், என்னுடைய சந்திரன் போன்ற ஒளியை ஒடைய வளையல்களைக் கொண்டு பிரிந்தார். அவருடைய செயலைப் பற்றி ஓர் வார்த்தையும் வாய்திறந்து கூறுகிறாய் இல்லை. (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: பாடுவார்க்குப் பொன் கொடுத்தல் மர; அதுபோல வண்டுகள் பாடச் செம்பொன்னாகிய மகரந்தங்களைச் சொரியும் பூக்களைச் சேய்மையிலுள்ள சோலையிலிருநது கொடுப்பதாகக் கூறப் படுகிறது. வெண்கிழி என்பது வெண்மையான சீலையைக் குறிக்கும். இங்கு மலரைக் குறிப்பிடுகிறது. பாணிகர் — பாடும் பாணர்கள், சேண் — சேய்மை, வ்ளை — வளையல்கள், பூணிகர்— பூணுகின்ற அணிகலனை ஒக்கும்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவம் மீண்டும் ஆன்மாவைப் பிரிய இயலாத் தன்மையைக் கூறியது.

4. அன்னமோடு ஆய்தல்

கொளு: மின்னிடை மடந்தை அன்னமோ(டு) ஆய்ந்தது.

மின்னலைப் போன்ற இடையை உடைய தலைவி அன்னத்திடம் கூறியது.

பகன்தா மரைக்கண் கெடக்கடந்
தோன்புலி யூர்ப்பழனத்(து)
அகன்தா மரையன்ன மேவண்டு
நீல மணியணிந்து
முகன்தாழ் குழைச்செம்பொன் முத்தணி
புன்னையின் னும்உரையா(து)
அகன்றார் அகன்றே ஒழிவர்கொல்
லோநம் அகன்துறையே. (184)

பொருள்: *பகன் என்னும் சூரியனது கண்ணானது கெட அவனை வென்ற இறைவனது தில்லையின்கண் உள்ள வயல்களில் பூத்திருக்கும் தாமரையில் வாழும் அன்னமே, வண்டுகளாகிய நீலமணி அணிந்து பூந்தாதாகிய செம்பொன்னையும், அரும்பாகிய முத்துக்களையும் அணிந்துள்ள புன்னை ஒன்றும் உரையாது நிற்கின்றது. நம்மைப் பிரிந்தவர் நம் கடற்துறையை விட்டு அகன்று போவாரோ, இனி வாராரோ சொல்லுவாயாக (என்று தலைவி கூறினாள்)*

சொ.பொ.வி.: *கடலும் மரமும் ஒன்றும் கூறாததால் அன்னத்தோடு பேசினாள் என்பது பெறப்படுகிறது. பகன் — ஆதித்தர் பன்னிருவர்களில் ஒருவர் தக்கன் வேள்வியில் கலந்து கொண்டதால் இறைவன் அவர் கண்ணைப் பறித்தார். "உன்னைப் புகுந்த பகன் ஒளித்தோடாமே — கண்ணைப் பறித்தவா றுந்தீபற" என்ற திருவாசகப் பகுதி (பா.306) அறியத்தக்கது. பழனம் — வயல், புன்னை — புன்னைமரம், இங்குப் பெண்ணாக உருவகிக்கப் பெற்றுள்ளது.*

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவம் எல்லாம் அறிந்தாலும் இங்ஙனம் வினவுவது ஆன்மாவிற்கு அருளைத் தருவதற் காக.

5. தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல்

கொளு: மீன்தோய் துறைவர் மீளும் அளவு
மான்தேர் வழியை அழியேல் என்றது.

அதிகமான மீன்களை உடைய கடல்துறையை உடைய தலைவன் மீண்டும் வரும்வரை குதிரை பூட்டப்பட்ட தேர் சென்ற அடையாளத்தைக் கடலே நீ அழியாது பார்த்துக் கொள் என்று தலைவி கடலைப் பார்த்துக் கூறியது.

உள்ளும் உருகி, உரோமம்
சிலிர்ப்ப உடையவன்ஆட்
கொள்ளும் அவரிலோர் கூட்டம்தந்
தான்குனிக் கும்புலியூர்
விள்ளும் பரிசுசென் றார்வியன்
தேர்வழி தூரல்கண்டாய்
புள்ளும் திரையும் பொரச்சங்கம்
ஆர்க்கும் பொருகடலே. (185)

பொருள்: பறவைகளும் அலைகளும் தம்முள் ஆர வாரித்துக் கொண்டு இருக்கின்ற கரையினை உடைய பெருங்கடலே, மனம் உருகி ரோமங்கள் சிலிர்ப்பத் தன்னை வணங்குகின்ற மெய்யடியார் கூட்டத்துள் எனக்கும் ஒரு இடம் தந்த இறைவன் நின்று திருநடம் புரியும் தில்லையை விட்டுச் சென்றவனது பெரிய தேர் போன வழியை அழித்து விடாதே. எம் உயிருக்குப் பற்றுக்கோடு அதுவே யாகும்.

சொ.பொ.வி.: குனிக்கும் — நடனமாடும், விள்ளும் — நீங்கும், தூரல் — அழிக்காதே, பொர — போர்செய்ய, சங்கம் — சங்கு, ஆர்க்கும் — ஒலிக்கும்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மாவிடம் தாம் கொண்டுள்ள விருப்பத்தை மற்றொன்றின் மேல் வெளிப் படுத்தியது.

Koviloor Digital Library

6. கூடல் இழைத்தல்

கொளு: நீடலந் துறையில் கூடல் இழைத்தது

நீண்ட அழகிய துறையில் கூடல் இழைத்துப் பார்த்தது. (கூடல் இழைத்தலாவது கண்ணை மூடிக்கொண்டு வட்டம் இழைத்து இருமுனையும் சேர்கிறதா என்று பார்த்தல்)

ஆழி திருத்தும் புலியூர்
உடையான் அருளின்அளித்(து)
ஆழி திருத்தும் மணற்குன்றின்
நீத்தகன் றார்வருகென்(று)
ஆழி திருத்திச் சுழிக்கணக்(கு)
ஓதிநை யாமல்ஐய
வாழி திருத்தித் தரக்கிற்றி
யோஉள்ளம் வள்ளலையே. (186)

பொருள்: ஆணைச் சக்கரத்தால் இவ்வுலகம் முழுமையும் தன் வழியில் நிற்கவைக்கும் தில்லையம்பல வனின் அருள்போல இன்பம் எய்த — கடல் மணற் குன்றின் மீது என்னைவிட்டுப் பிரிந்து சென்ற தலைவன் வரவேண்டுமென்று கூடல் சுழியை இழைத்து, அதன் கணக்கைச் சொல்லி தலைவி, "நான் வருந்தாமல் கூடல் தெய்வமாகிய பெரியவனே, நீ வாழ்வாயாக. தலைவனின் உள்ளத்தை நெகிழ்வித்து அவனை ஈண்டு இங்கு கூட்டுவாயாகில் கூடுவாயாக" என்று கூறினாள்.

சொ.பொ.வி: ஆழி — ஆணைச் சக்கரம், ஆழி —கடல், ஆழிதிருத்தி — கூடல் இழைத்து, ஆழி — வட்டங்கள் எத்தனை என்ற கணக்கு, நையாமல் — வருந்தாமல், தரக்கிற்றியோ — தரவல்லாயோ.

தத்துவப்பொருள்: ஆன்மா பதிஞானம் ஏற்படுமாயின் சிவத்தைக் கூடி ஒன்றும் என்பது கூடல் சுழிமூலம் அறிவிக்கப்படுகிறது.

Koviloor Digital Library

7. சுடரொடு புலம்பல்

கொளு: குணகடல் எழுசுடர் குடகடல் குளிப்ப
மணமலி குழலி மனம்புலம் பியது.

கிழக்கில் எழுந்த சூரியன் மேற்குக் கடலில் மூழ்க நறுமணம் மிக்க கூந்தலை உடைய தலைவி கூறியது.

கார்த்தரங் கம்கதிரை தோணி
சுறாக்கடல் மீன்எறிவோர்
போர்த்த(ரு)அங் கம்துறைமானும்
துறைவர்தம் போக்குமிக்க
தீர்த்தர்அங் கன்தில்லைப் பல்பூம்
பொழிற்செப்பும் வஞ்சினமும்
ஆர்த்தர்அங் கம்செய்யு மால்உய்யு
மா(று)என்கொல் ஆழ்சுடரே. (187)

பொருள்: கருமையான அலையும், அலையில் அலைகின்ற தோணியும், சுறாவும், மீன்பிடிக்கும் படவரும், கடலும் — போரினை ஏற்படுத்தும் அங்கங்களையும், போர்க் களத்தையும் ஒக்கும்,துறையை உடைய தலைவனது பிரிவும் — தூயவர்களாகிய திருமால், பிரமன் ஆகியோர் களது எலும்பை அணிந்த இறைவனது தில்லையில் உள்ள சோலையில் என்னைப் பிரியமாட்டேன் என்று சொல்லி யவரது வஞ்சினமும் என்னுடைய உடலை நோயுற்றார் உடல்போலச் செய்கின்றன. மேற்கடலில் மறைகின்ற சுடரே, நான் வாழ்வதற்குரிய நெறியைக் கூறுவாயாக (என்று தலைவி கூறியது)

சொ.பொ.வி.: கடற்கரை போர்க்களத்தை ஒத்தது. திரை — குதிரைப்படை, தோணி — தேர், சுறாமீன் — யானை, படவர்—காலாட்படை, கடல் — போர்க்களம். கார்த் தரங்கம் — கரிய அலை, போர்த்தரங்கம் — போரைத்தரும் சதுரங்க சேனைகள், தீர்த்தர் — தூயோர், (மால் — அயன்), அங்கன் — எலும்பை அணிந்தவன். ஆர்த்தர் — நோயுடையார்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மாவின் நிலையை எய்தித் தானும் தளர்ந்து நின்றதாம்.

Koviloor Digital Library

8. பொழுது கண்டு மயங்கல்

கொளு: மயல்தரு மாலை வருவது கண்டு
கயல்தரு கண்ணி கவலை யுற்றது.

மயக்கத்தைத் தருகின்ற மாலை வருவது கண்டு கயல் மீனைப் போன்ற கண்களை உடைய தலைவி வருந்தியது.

பகலோன் கரந்தனன் காப்பவர்
சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி
யோன்எவ ரும்புகலத்
தகலோன் பயில்தில்லைப் பைம்பொழிற்
சேக்கைகள் நோக்கினவால்
அகலோங்(கு) இருங்கழி வாய்க்கொழு
மீனுண்ட அன்னங்களே. (188)

பொருள்: சூரியன் மறைந்தான். மாலைக் காலத்துத் துன்பத்தைப் போக்குகின்ற தலைவரும் சேய்மைக்கண் உள்ளார். உப்பங்கழியில் திரிந்த கொழுத்த மீனை உண்ட அன்னங்களும் — ஐம்புலன்களால் பற்றற்றவர்க்குப் புகலிடம் ஆனவன், தன்னை அடைந்தவர்களுக்குப் பரிவைத் தருபவன். அனைவரும் போற்றத் தக்கவன் ஆகிய இறைவன் எழுந்தருளியிருக்கின்ற தில்லையில் விளங்கும் கோயில் அமைந்த தங்களுடைய இருப்பிடத்தை நோக்கிச் சென்றன. இனி என்ன செய்வேன். (என்று தலைவி வருந்தினாள்)

சொ.பொ.வி.: காப்பவர் — தலைவர் , சேயர் — சேய்மை இடத்தவர், போக்கு அரியோன் — நீங்குவதற்கு அரியவன், தகலோன் — தருபவன், சேக்கை — இருப்பிடம்.

தத்துவப்பொருள்: மாலைப் பொழுதைக் கண்டு ஆன்மாவைக் காணாத சிவத்தலைவி எதிர்நோக்கியது.

9. பறவையொடு வருந்தல்

கொளு: செறிபிணி கைம்மிகச் சிற்றிடைப் பேதை
பறவைமேல் வைத்துப் பையுள்எய் தியது.

Koviloor Digital Library

காதல் நோய் மிகுதியாகிவிட மெலிந்த இடையை உடைய தலைவி தன்னுடைய வருத்தத்தைப் பறவைகள் மீது வைத்துக் கூறியது.

பொன்னும் மணியும் பவளமும்
போன்று பொலிந்திலங்கி
மின்னும் சடையோன் புலியூர்
விரவா தவரினுள்நோய்
இன்னும் அறிகில வால்என்னை
பாவம் இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை
தேரும்வண் டானங்களே. (189)

பொருள்: பொன் போலப் பொலிந்து மாணிக்கம் போல ஒளி தந்து, பவளம் போல மின்னுகின்ற சடையை உடைய இறைவனது தில்லையைச் சேராதவரைப் போல — யானுற்ற மனத் துன்பத்தை அறிந்து என்னுடைய துன்பத்திற்கு ஏதுவாகிய பரிகாரத்தைத் தேடாது உப்பங்கழி யிடத்திலே புகுந்து இரைதேடுகின்ற வண்டானம் என்னும் பறவைகள் இருக்கின்றனவே, இது என்ன பாவமோ? (என்று தலைவி கூறியது)

சொ.பொ.வி.: விரவாதவர் — சேராதவர், மன்னும் பகலே — பகற்காலத்தில் வண்டானம் — நீர்ப்பறவை.

தத்துவப்பொருள்: பிறர் படும் துன்பத்திற்குப் பரிகாரம் தேடி உதவுகின்ற இயல்புடைய ஆன்மா தனக்கே செயல் படுமானால் அதற்காகச் சிவத்தலைவி வருந்திடும்.

10. பங்கயத்தோடு பரிவுற்று உரைத்தல்

கொளு: முருகவிழ் கான லொடுபரி வுற்றது.

மணமிக்க கடற்சோலையுடன் வருந்தித் தலைவி கூறியது.

கருங்கழி காதல்பைங் கானலில்
தில்லைஎம் கண்டர்விண்டார்

Koviloor Digital Library

ஒருங்(கு)அழி காதர மூவெயில்
செற்றஒற் றைச்சிலைசூழ்ந்(து)
அருங்கழிகாதம் அகலும்என்
றூழ்என்(று) அலந்துகண்ணீர்
வருங்கழி காதல்வனசங்கள்
கூப்பும் மலர்க்கைகளே. (190)

பொருள்: தில்லையில் உள்ளானாகிய இறைவனைப் பகைத்த மூன்று அரக்கர்களின் முப்புரங்களை அழிக்கக் கொண்ட வில்லாகிய மேருமலையைச் சூழ்ந்துள்ள கடத் தற்கரியவாகிய வழிகளைக் கடந்து சூரியன் நீங்கினான். இனி எங்ஙனம் ஆற்றுவாள் என்று வருந்தி உப்பங்கழியின் கண்ணும் பசுமையான கானலின் கண்ணும் உள்ள தாமரைகள் துன்புற்றுத் தேனாகிய கண்ணீரைச் சிந்திச் சூரியனை நோக்கித் தலைவன் விரைந்து வரவேண்டு மென்று மலர்களைக் கூப்பி நின்றன. ஆதலால் தாமரை மலர்கள் என்மாட்டு அன்புடையன போலும்.

சொ.பொ.வி.: சூரியன் மறைந்தால் தாமரை கூம்புவது இயல்பு. தலைவி தனக்காக அவை சூரியனை நோக்கிக் கைகளைக் கூப்பி வணங்குவதாகக் கொண்டாள். கருங்கழி — உப்பங்கழி, ஒருங்குஅழி — ஒருங்கேஅழிய, அருங்கழி காதம் அகலும் — கடத்தற்கரிய பல காதத் தூரங்களைக் கடக்கும், என்றூழ் — ஞாயிறு, அலந்து — வருந்தி, கண்ணீர் — கள்நீர், வனசம் — தாமரை.

தத்துவப்பொருள்: சிவம் அன்புக்கு இரங்குதல் தன்மை உடைத்து என்பதை வலியுறுத்துகிறது.

11. அன்னமோடு அழிதல்

கொளு: இன்ன கையவள் இரவரு துயரம்
அன்னத்தோ(டு) அழிந்து ரைத்தது

அழகிய புன்முறுவலை உடைய தலைவி இரவுப் பொழுதில் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை அன்னப் பறவைக்குக் கூறியது.

Koviloor Digital Library

மூவல் தழீஇய அருள்முத
லோன்தில்லைச் செல்வன்முந்நீர்
நாவல் தழீஇயஇந் நானிலம்
துஞ்சும் நயந்த இன்பச்
சேவல் தழீஇச்சென்று தான்துஞ்சும்
யான்துயிலாச் செயிர் எம்
காவல் தழீஇயவர்க்(கு) ஓதா(து)
அளிய களியன்னமே. (191)

பொருள்: மூவலூர் என்ற திருப்பதியைப் பொருந்தி அருட்செல்வத்தைத் தரும் முதல்வனாகிய தில்லையம்பலத் தானது கடல் சூழ்ந்த நாவலந் தீவாகிய உலகம் முழுவதும் தூங்குகிறது. ஆயின் நான்மட்டும் தூங்காது வருந்து கின்றேன். அதற்குரிய காரணத்தை எம் தலைவர்க்கு உரையாது களி மகிழ்வுடைய அன்னம் தான் விரும்பிய இன்பச் சோலையில் தூங்குகிறது. எனின் என்துன்பத்தைக் கூறுவார் யார்? (என்று தலைவி அன்னத்திடம் கூறி வருந்தினாள்).

சொ.பொ.வி.: மூவல் — வைப்புத்தலம் , முந்நீர் — கடல், நாவல் — நாவலந் தீவு

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவிற்குக் கருணை வழங்கக் கருதியிருக்கும் தன் ஆற்றாமையை வெளிப் படுத்தியது.

12. வரவு உணர்ந்து உரைத்தல்

கொளு: சென்றவர் வரவுணர்ந்து நின்றவள் நிலைமை
சிறப்புடைப் பாங்கி சிறைப்புறத்து உரைத்தது.

பிரிந்து சென்ற தலைவன் வந்து நின்றமையை அறிந்த தோழி தலைவியின் நிலைமையினைத் தலைவனுக்குச் சிறைப்புறமாகக் கூறியது.

நில்லா வளைநெஞ்சம் நெக்குரு
கும்நெடுங் கண்துயிலக்

Koviloor Digital Library

கல்லா கதிர்முத்தம் காற்றும்
எனக்கட் டுரைக்கதில்லைத்
தொல்லோன் அருள்களில் லாரிற்சென்
றார்சென்ற செல்லல்கண்டாய்
எல்லார் மதியே இது,நின்னை
யான்இன்(று) இரக்கின்றதே. (192)

பொருள்: ஒளிமிக்க சந்திரனே, தில்லை இறைவனின் அருள் இல்லாதவரைப் போலக் கண்ணோட்டமின்றிச் சென்ற தலைவனால் விளைந்த துன்பங்களை நீ அறிவாய், அவள் கைகளில் வளையல்கள் நிற்கவில்லை. நெஞ்சம் உருகுகின்றது. நெடிய கண்கள் தூங்காமல் கண்ணீரைச் சிந்தின. இவற்றைத் தலைவனுக்குச் சொல்வாயாக. இதுவே நான் உன்னை வேண்டுவது (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: துயிலக்கல்லா — துயிலாமல், முத்தம் காற்றும் — கண்ணீர்விடும்

தத்துவப்பொருள்: தன்னை விட்டுச்சென்ற ஆன்மாவுக்கு அருள் கருணை பொழியச் சிவத்தலைவி காத்திருந்த நிலையைத் திருவருள் உரைத்தது.

13. வருத்தமிகுதி கூறல்

கொளு: நீங்கி அணைந்தவர்க்குப் பாங்கி பகர்ந்தது.

ஒருவழித் தணத்தலாகிய பிரிவில் பிரிந்து வந்த தலைவனுக்குத் தோழி கூறியது.

வளரும் கறியறி யாமந்தி
தின்றுமம் மர்க்(கு)இடமாய்த்
தளரும் தடவரைத் தண்சிலம்
பாதன(து) அங்கம்எங்கும்
விளரும் விழும்எழும் விம்மும்
மெலியும்வெண் மாமதிநின்(று)
ஒளிரும் சடைமுடி யோன்புலி
யூர்அன்ன ஒண்ணுதலே. (193)

Koviloor Digital Library

பொருள்: வளர்கின்ற மிளகுக் கொடியைத் தமக்குரிய உணவு அன்று என்று அறியாத இளைய பெண்குரங்கு தின்று நோய்க்கு இடமாகி வருந்துகின்ற பெரிய மலைகளை உடைய தலைவனே, ஒளி பொருந்திய பிறைச்சந்திரன் விளங்கும் சடைமுடியை உடைய இறைவனது தில்லையை ஒத்த ஒளிபொருந்திய நெற்றியை உடைய தலைவி தன் மேனி முழுவதும் பசலை பூத்தாள். படுக்கையில் விழுவாள், எழுவாள், விம்முவாள், பொருமுவாள், மெலிவாள், ஆதலால் இவள் இத்தன்மை உடையவள் என்று என்னால் கூற முடியாததாகும் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: கறி — மிளகுக் கொடி, மந்தி — பெண்குரங்கு, மம்மர் — நோய், ஒண்ணுதல் — தலைவி

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தலைவியை பொருந்த வருவது கண்டு திருவருள் சிவத்தின் நிலையை எடுத்துக் கூறியது.

ஒருவழித் தணத்தல் முற்றிற்று

16. உடன்போக்கு

தலைவன், தலைவியை அவள் பெற்றோருக்குத் தெரியாத வண்ணம் தன் ஊருக்கு உடன் கொண்டு செல்லுதல். இது ஐம்பத்தாறு துறைகளை உடையது.

1. பருவங்கூறல்

கொளு: உருவது கண்டவள் அருமை உரைத்தது.

தலைவியின் பருவநிலை கண்டு அவளுடைய அழகினைத் தலைவனுக்குத் தோழி உரைத்தது.

ஓராகம் இரண்டெழி லாய்ஒளிர்
வோன்தில்லை ஒண்ணுதல்அங்
கராகம் பயின்(று)அமிழ் தம்பொதிந்(து)
ஈர்ஞ்சுணங்(கு) ஆடகத்தின்

Koviloor Digital Library

பராகம் சிதர்ந்த பயோதரம்
இப்பரி சேபணைத்த
இராகங்கண் டால்வள்ள லேஇல்லை
யேஎமர் எண்ணுவதே. (194)

பொருள்: ஓர் உடலின் கண்ணே ஆண் அழகும், பெண் அழகும் ஒரு சேர விளங்கும் உமையொரு பாகனாகிய இறைவனின் தில்லைக்கண் உள்ளவளாகிய தலைவியின் பூசும் பொடியைப் பூசிய அமுதம் பொதிந் திருக்கும் முலைகள் இப்படிப் பெருத்திருக்கின்ற கதுப்பைக் கண்டால் எம்முடையை சுற்றத்தார் எண்ணுவது ஒன்று உண்டோ என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

சொ.பொ.வி.: ஆகம் — உடல், இரண்டெழில் — ஆணழகு, பெண்ணழகு, அங்கராகம் — மேனியில் பூசப் படும் மாவு, சுணங்கு — தேமல், பராகம்—பொடி, பயோதரம் — கொங்கை, இராகம் — நிலை, எண்ணுவதே இல்லையே — முலையின் நிலைகண்டால் எம் சுற்றத்தார் எதனையும் எண்ண மாட்டார்களா? அதாவது திருமணம் செய்ய எண்ணுவர் என்றவாறாம்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியைப் பெறுகின்ற காலம் இதுவே என்று ஆன்மாவிற்குத் திருவருள் கூறியது.

2. மகட் பேச்சுரைத்தல்

கொளு: புடைத்துமொழி கிளவியில் பணிமொழிப் பாங்கி
அடற்கதிர் வேலோற்(கு) அறிய உரைத்தது.

தானே படைத்துக் கொண்டு கூறுகின்ற சொற்களால் பணிவான மொழி கூறும் தோழி ஒளி பொருந்திய வேலை உடைய தலைவனுக்கு அறிவுறுத்தியது.

மணிஅக்(கு) அணியும் அரன்நஞ்சம்
அஞ்சி மறுகிவிண்ணோர்
பணியக் கருணை தரும்பரன்
தில்லையன் னாள்திறத்துத்

Koviloor Digital Library

துணியக் கருதுவ(து) இன்றே
துணிதுறை வாநிறைபொன்
அணியக் கருதுகின் றார்பலர்
மேன்மேல் அயலவரே. (195)

பொருள்:தலைவனே, அக்குமணியை அணிந்தவனும் சிவனும், நஞ்சினைக் கண்டு தேவர்கள் வணங்கி வேண்ட, அதனை உண்டு கருணை புரிகின்ற பரமசிவனும் ஆகிய சிற்றம்பலப் பெருமானது தில்லையை ஒத்த தலைவியின் மாட்டு நீ செய்ய எண்ணுவதை இன்றே செய்க. வேற்றவர் பலர் இவளுக்குப் பொன்னணியை அணிந்து திருமணம் செய்ய எண்ணுகின்றனர் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: அரன், பரன் — சிவபெருமானின் பெயர்கள், துணியக் கருதுவது — திருமணம் அல்லது உடன்போக்கு, மருகி — சுழன்று, பொன் அணிய — பொன்மாலை அணிந்து திருமணம் செய்ய.

தத்துவப்பொருள்: திருவருள் தானாகவே படைத்துக் கொண்டு ஆன்மா சிவத்தை அடைய சரியை, கிரியை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்க என்று வலி யுறுத்தியது.

3. பொன்னணி உரைத்தல்

கொளு: பலபரி சினாலும் மலர்நெடுங் கண்ணியை
நன்னுதற் பாங்கி பொன்னணிவர் என்றது

மலர் போன்ற கண்ணினை உடைய தலைவியைப் பலர் தங்கள் தகுதியோடு பொன்அணிய வருவர் என்று தோழி தலைவனுக்கு உரைத்தது.

பாப்பணி யோன்தில்லைப் பல்பூ
மருவுசில் ஓதியைநற்
காப்பணிந் தார்பொன் அணிவார்
இனிக்கமழ் பூந்துறைவ
கோப்பணிவான் தோய்கொடி முன்றில்
நின்றிவை ஏர்குழுமி

Koviloor Digital Library

மாப்பணி லங்கள் முழங்கத்
தழங்கும் மணமுரசே. (196)

பொருள்: மணம் பொருந்திய பூக்கள் நிறைந்த துறைக்குரிய தலைவனே, பாம்பை அணிந்த இறைவனது தில்லைக்கண் வாழுகின்ற பூவினைச் சூடிய கூந்தலைக் கொண்ட தலைவியை உறவினர் காவல் செய்தார்கள். இனிப் பொன்னை அணிவார்கள், திருமணத்திற்கு ஏற்ற செயல்களைச் செய்து, கொடிகள் நிறைந்த வீட்டு முற்றத்தில் மணமுரசோடு பெரிய சங்குகள் முழங்கச் செய்வார்கள். ஆதலால் இனி நீ ஏற்றதைச் செய்வாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: பாப்பணி — பாம்பணி, ஓதி — கூந்தல், காப்பு—காவல்செய்து அதற்குரிய காப்பு அணிதல் அதாவது காப்புக்கட்டி வெளியே செல்லவிடாது தடுத்தல். கோப்பு — திருமண அலங்காரம், பணிலம் — சங்கு, தழங்கும் — ஒலிக்கும்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி கருணை செய்வதற்கு உரிய நிலையில் ஆன்மாவின் நிலைகள் தடையாக இருக்கின்றன. ஆதலால் ஆன்மா இனிச் செய்ய வேண்டிய வற்றைச் செய்ய வேண்டும் என்று திருவருள் கூறியது.

4. அருவிலை உரைத்தல்

கொளு: பேதையர் அறிவுபேதமை உடைத்தென
ஆதரத் தோழி அருவிலை உரைத்தது.

பேதமை கொண்ட அறிவில்லாதவனுடைய செயல் பேதமையை உடையதாகும் என்று தோழி கூறித் தலைவியைப் பெறுவதற்கு அரிய நிலையைத் தலைவனுக்கு எடுத்துரைத்தது.

எலும்பால் அணியிறை அம்பலத்
தோன்எல்லை செல்குறுவோர்
நலம்பா வியமுற்றம் நல்கினும்
கல்வரை நாடர்அம்ம

Koviloor Digital Library

சிலம்பா வடிக்கண்ணி சிற்றிடைக்
கேவிலை செப்பல்ஒட்டார்
கலம்பா வியமுலை யின்விலை
என்நீ கருதுவதே. (197)

பொருள்: தலைவனே, எலும்பணி அணிந்து கொள்ளும் இறைவனது எல்லைக்கண் செல்ல விரும்புவோரது நன்மை பரந்த உலகம் முழுவதும் நீ கொடுக்க விரும்பினும் மலை நாடர்களாகிய எம்மவர்கள் மாவடு போன்ற கண்களை உடைய தலைவியின் சிறிய இடைக்கு விலையாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறு இருக்க அவளின் முலையின் விலையாக எதனை நீ கருதுவது? ஒன்றிற்கும் அவர்கள் உடன்படார்கள் (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: நலம்பாவிய —நன்மை பரந்த அருள் உலகம் அனைத்தையும், கல்வரை நாடர் — எம்சுற்றத்தார், கலம்பாவிய — அணிகலன் அணிந்த.

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்குச் சிவத்தை அடைவது அரிது என்று திருவருள் கூறியது.

5. அருமை கேட்டழிதல்

கொளு: பெருமைநாட் டத்தவள் அருமைகேட்(டு) அழிந்தது.

பெரிய கண்களை உடைய தலைவியின் அருமையைக் கேட்டுத் தலைவன் நெஞ்சு அழிந்தது.

விசும்புற்ற திங்கட்(கு) அழும்மழப்
போன்(று)இனி விம்மிவிம்மி
அசும்புற்ற கண்ணோ(டு) அலறாய்
கிடந்(து)அரன் தில்லையன்னாள்
குயம்புற் றர(வு)இடை கூர்எயிற்(று)
ஊறல் குழல்மொழியின்
நயம்பற்றி நின்று நடுங்கித்
தளர்கின்ற நன்நெஞ்சமே (198)

Koviloor Digital Library

பொருள்: தில்லையை ஒத்தவளாகிய தலைவியின் முலைகள், பாம்பின் படம் போலும் இடை, பல்லின் கண் ஊறிய நீர், குழலோசை போலும் மொழி என்ற இவற்றில் மயங்கி, இன்பத்தைக் கருதி வருந்துகின்ற நல்ல நெஞ்சமே, ஆகாயத்தில் உள்ள சந்திரனைக்கேட்டு அழுகின்ற குழந்தை போல, நீர் வற்றாத கண்ணோடு விம்மி விம்மி இனிக் கிடந்து அழுவாயாக (என்று தலைவன் கூறிக்கொண்டான்)

சொ.பொ.வி.: விசும்பு — ஆகாயம், மழம் — குழந்தை, அசும்பு — நீர்த்துளி , குயம் — முலை, எயிறு — பல்.

தத்துவப்பொருள்: ஆன்மா தனது நெஞ்சிற்குச் சிவத்தின் பேரின்பத்தை வியந்து கூறியது.

6. தளர்வறிந்து உரைத்தல்

கொளு: **தண் துறைவன் தளர்வறிந்து**
கொண்டு நீங்கெனக் குறித்துரைத்தது.

குளிர்ந்த நீர்த்துறையினை உடைய தலைவனின் தளர்ச்சியை அறிந்து தோழி தலைவியை உடன் கொண்டு நீங்குக என்று அறிவுறுத்தியது.

மைதயங் கும்திரை வாரியை
நோக்கி மடல்அவிழ்பூங்
கைதைஅங் கானலை நோக்கிக்கண்
ணீர்கொண்(டு)எங் கண்டர்தில்லைப்
பொய்தயங் கும்நுண் மருங்குல்நல்
லாரையெல் லாம்புல்லினாள்
பைதயங் கும்அர வம்புரை
யும்அல்குல் பைந்தொடியே. (199)

பொருள்: பாம்பின் படத்தை ஒத்த அல்குலை உடைய வளையல் அணிந்த தலைவி, அலை உடைய கடலை நோக்கித் தாழைப்புதர் பொருந்திய கானலைக் கண்டு கண்ணீர் வடித்து இறைவனது தில்லைக்கண் உள்ளவ ராகிய இடைமெலிந்து விளங்கும் தோழியரைத் தழுவிக்

Koviloor Digital Library

கொண்டாள். எனவே அவள் கருதியது ஒன்று உண்டு போலும்.

சொ.பொ.வி.: தலைவி தலைவனைத் தழுவிக் கொள்வதற்கு எண்ணுகிறாள் என்பது குறிப்பு. மை — கருமை, வாவி — கடல், கைதை — தாழைப்புதர், பொய் தயங்கும் — பொய்மை உடைய, (மெலிந்த), புல்லினாள் — தழுவினாள், பை—படம்.

தத்துவப்பொருள்: ஆன்மாவுக்கு அருள் புரிகின்ற குறிப்பைச் சிவம் கொண்டுள்ளது என்பதைத் திருவருள் கூறியது.

7. குறிப்புரைத்தல்

கொளு: நறைக் குழலி குறிப்புரைத்தது

மணம் பொருந்திய கூந்தலை உடைய தலைவியின் குறிப்பைத் தோழி தலைவனுக்கு உரைத்தது.

மாவைவந் தாண்டமென் நோக்கித்தன்
பங்கர்வண் தில்லைமல்லற்
கோவைவந் தாண்ட செவ்வாய்க்கருங்
கண்ணி .குறிப்பறியேன்
பூவைதந் தாள்பொன்னம் பந்துதந்
தாள்என்னைப் புல்லிக்கொண்டு
பாவைதந் தாள்பைங் கிளியளித்
தாள்இன்றென் பைந்தொடியே. (200)

பொருள்: என்னுடைய தோழியாகிய தலைவி இன்று என்னைத் தழுவிக் கொண்டு தன்னுடைய நாகணவாய்ப் பறவைகளை என்னிடம் தந்தாள். பொன்னால் செய்ய' பட்ட பந்தினைத் தந்தாள். உடன் விளையாடும் பாவை யைத் தந்தாள். உமையவளை ஒரு பக்கத்தில் கொண்ட சிவபெருமானது தில்லை நகரின் வளப்பத்தை உடைட' கொவ்வைக்கனி போன்ற வாயையும், அழகிய கண்ணை யும் உடைய தலைவியின் குறிப்பை அறியேன் (என்று தோழி தலைவனுக்கு உரைத்தாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: மா — மான், கோவை — கோவைப் ட ழம், பூவை—நாகணவாய்ப் பறவை, பாவை — பொம்மை.

தத்துவப்பொருள்: திருவருள் சிவத்தின் செயல் ...டுகளை ஆன்மாவிற்கு எடுத்துரைத்தது.

8. அருமை உரைத்தல்

கொளு: கானின் கடுமையும் மானின் மென்மையும்
பதியின் சேட்சியும் இதுவென உரைத்தது.

காட்டினது கடுமைத் தன்மையும், மான்போன்ற நோக்கத்தை உடைய தலைவியின் மென்மையும் தனது ஊரினது தூரத்தையும் தலைவன் தோழிக்குச் சொல்லியது.

மெல்லியல் கொங்கை பெரியமின்
நேரிடை மெல்லடிபூக்
கல்லியல் வெம்மைக் கடங்கடும்
தீக்கற்று வானம்எல்லாம்
சொல்லிய சீர்ச்சுடர் திங்கள்அங்
கண்ணித்தொல் லோன்புலியூர்
அல்லியங் கோதைநல் லாய்எல்லை
சேய்த்துஎம் அகல்நகரே. (201)

பொருள்: வானவர்கள் அனைவரும் சொல்லுகின்ற புகழை உடைய பிறையாகிய தலை மாலையை அணிந்த இறைவனது தில்லையில் அகவிதழ்களால் சிறப்புடைய மாலையை அணிந்த பெண்ணே (தோழியே) நம் தலைவியது கொங்கைகயோ பெரியன. இடை மின்னலுக்கு ஒப்பானது. பாதங்கள் பூப்போன்றவை. கற்கள் பரந் திருக்கும் காடு கொடிய தீப்போல் இருக்கிறது. எனது பெரிய ஊர் 'மிகத் தூரத்தில் உள்ளது. ஆதலால் உடன்போக்கு அழைத்துச் செல்வது பெரிதும் அரிது (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: அடி — பாதம், அல்லி — புறஇதழ், கோதை — மாலை, நல்லாய் — தோழி

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவம் அரிய பொருள் என்று ஆன்மா திருவருளிடம் கூறியது.

9. ஆதரங்கூறல்

கொளு: அழல்தடம் புரையும் அருஞ்சுரம் அதுவும்
நிழல்தடம் அவட்கு நின்னொ(டு) ஏகின் என்றது.

நெருப்புத் தடம் போன்ற அருமையான காடும் தலைவி உன்னோடு வருவாளேயானால் குளிர்ச்சி பொருந்திய தடாகத்தை ஒத்ததாகும் என்று தோழி தலைவனிடம் கூறியது.

பிணையும் கலையும்வன் பேய்த்தே
ரினைப்பெரு நீர்நசையால்
அணையும் முரம்பு நிரம்பிய
அத்தமும் ஐயமெய்யே
இணையும் அளவும்இல் லாஇறை
யோன்உறை தில்லைத் தண்பூம்
பணையும் தடமும்அன் றேநின்னோ(டு)
ஏகின்எம் பைந்தொடிக்கே. (202)

பொருள்: தலைவனே! உன்னுடன் வருவாளேயானால் பெண்மானும் ஆண்மானும் மிகுந்த நீர் வேட்கையால் கானல் நீராகிய பேய்த்தேரினை அணுகும் மணல் மேடுகள் நிரம்பிய பாலைவனமும் ஐயனே எம்முடைய தலைவிக்கு ஒப்பில்லாத இறைவன் எழுந்தருளியிருக்கும் தில்லையில் உள்ள பூத்த வயலும் குளமுமாகத் தோன்றும். நீ இவ்வாறு கூறுவது ஏன்? எனறு தோழி கூறினாள்.

சொ.பொ.வி.: பிணை — பெண்மான், பேய்த்தேர் — கானல்நீர், நகை — வேட்கை, முரம்பு — மணல்மேடு, அத்தம் — வழி. இணை — ஒப்புமை, பூம்பணை — வயல், தடம் — குளம்.

தத்துவப்பொருள்: சிவம் பரிபாகமுற்ற ஆன்மாவோடு கூடின் எல்லாம் இன்பமாகவே தோன்றும்.

Koviloor Digital Library

10. இறந்துபாடு உரைத்தல்

கொளு: கார்த் தடமும் கயலும் போன்றீர்
வார்த்தட முலையும் மன்னனும் என்றது.

குளத்தையும் அதில் வாழும் மீனையும் நீயும் எம் தலைவியும் ஒப்பீர்கள் என்று தோழி கூறியது. (மீன் குளத்தை விட்டுப் பிரிந்தால் இறந்துவிடும். அது போலத் தலைவனை விட்டுத் தலைவி பிரிந்தால் இறந்துவிடுவாள் என்று தோழி கூறியது)

இங்(கு)அயல் என்நீ பணிக்கின்ற(து)
ஏந்தல் இணைப்பதில்லாக்
கங்கைஅும் செஞ்சடைக் கண்ணுதல்
அண்ணல் கடிகொள்தில்லைப்
பங்கயப் பாசடைப் பாய்தடம்
நீஅப் படர்தடத்துச்
செங்கயல் அன்றே கருங்கயல்
கண்ணித் திருநுதலே. (203)

பொருள்: ஒத்தது என்று வேறு இல்லாத கங்கையை அணிந்த சிவந்த சடையையும், நெற்றிக் கண்ணையுமுடைய இறைவனது காவல் பொருந்திய தில்லையில் உள்ள தாமரை பூத்து இலைகள் படர்ந்த குளம் நீ. அக்குளத்தில் வாழும் சிவந்த கயல் மீன் போன்று கண்களையும் ஒளி பொருந்திய நெற்றியினையும் உடையவள் தலைவி. ஆதலால் நீ வேறு கூறுவது என்னை.

சொ.பொ.வி.: தலைவன் பிரிந்தால் தலைவி இறப்பாள் என்ற குறிப்புப் பெறப்படுகிறது. பணிக்கின்றது — கூறுவது, இணைப்பு — ஒத்ததாகக் கூறப்படும் மற்றொரு பொருள், பங்கயம் — தாமரை, பாசடை — இலை, தடம் — குளம்.

தத்துவப்பொருள்: அடிமை இல்லாமல் ஆண்டான் இல்லை என்பது போலச் சிவம் இல்லாமல் ஆன்மா இல்லை என்றவாறு.

Koviloor Digital Library

11. கற்பு நலன் உரைத்தல்

கொளு: பொய்யொத்த இடை போக்குத்துணிய
வையத்திடை வழக்குரைத்தது.

இல்லை என்று சொல்லும்படியான இடையை உடைய தலைவி உடன்போக்கிற்கு உடன்பட, உலகத்தின் இயல்பைத் தோழி தலைவிக்கு உரைத்தது.

தாயிற் சிறந்தன்று நாண்தைய
லாருக்(கு)அந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளிதிண்
கற்பின் விழுமிதன்(று)ஈங்
கோயில் சிறந்துசிற் றம்பலத்(து)
ஆடும்எம் கூத்தப்பிரான்
வாயில் சிறந்த மதியில்
சிறந்த மதிநுதலே. (204)

பொருள்: திருஈங்கோய் மலையில் சிறந்து எழுந்தருளி சிற்றம்பலத்தில் நடம்புரியும் கூத்தப் பிரான்பால் உபதேசம் பெற்று ஞானத்தில் சிறந்தும், அறிவிற் சிறந்தும் — சந்திரனைப் போன்று நெற்றியையும் உடைய தலைவியே, பெண்களுக்குத் தாயைப் போல நாண் சிறந்தது. மூங் கிலைக் காட்டிலும் மெல்லிய தோள்களை உடையவளே, அந்த நாணமும் உறுதியான கற்பைக் காட்டிலும் சிறந்தது அன்று. எனவே கற்பே சிறந்தது.(என்று தோழி தலைவி யிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: கற்பு சிறந்தது என்பதால் கற்பைக் காத்திடத் தலைவனோடு உடன்போக்குச் செல்லவேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. தையல்—பெண்கள், விழுமியது — சிறந்தது, ஈங்கோய் — வைப்புத்தலம், வாயில் — வாய் மொழியாகிய ஞானம். "உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும் செயிர்தீர் கற்புச் சிறந்தன்று" (தொல் — பொருள் 111) என்ற இலக்கணப் பகுதி ஒப்பிடத் தக்கது.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவோடு சென்று உடன் உறைதல் இன்றியமையாதது என்ற கற்பு கூறப்பெறுகிறது.

Koviloor Digital Library

12. துணிந்தமை கூறல்

கொளு: பொருவேல் அண்ணல் போக்குத் துணிந்தமை
செருவேற் கண்ணிக்குச் சென்று செப்பியது.

வேலை உடைய தலைவன் உடன் போக்கிற்குத் துணிந்துள்ளான் என்று வேல் போன்ற கண்ணை உடைய தலைவிக்குத் தோழி கூறியது.

குறப்பாவை நின்குழல் வேங்கையம்
போதொடு கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்நினை
வார்தம் பிரான்புலியூர்
மறப்பான் அடுப்பதோர் தீவினை
வந்திடின் சென்றுசென்று
பிறப்பான் அடுப்பினும் பின்னும்துன்
னத்தகும் பெற்றியரே. (205)

பொருள்: குறவர் தம் மகளே, தில்லையை மறக்கக் கூடிய தீயவினை விளைகின்ற நேரத்தால் பல பிறப்புக் களிலும் சென்று சென்று பிறக்கின்ற சூழல் ஏற்படினும் எத்தகைய நிலையினும் உன்னைச் சேரத் தக்க தன்மையுடைய தலைவன், உன் மனையிலுள்ள வேங்கைப் பூவோடு கோங்கப் பூவையும், பாதிரிப் பூவையும் கலந்து கட்டுவதற்கு எண்ணி இருக்கின்றார் (என்று தோழி தலைவியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: கோங்கும் பாதிரியும் பாலை நிலத்திற்கு உரியது ஆதலின் அந்நிலத்தில் உடன்போக்குச் சென்று தலைவியின் கூந்தலில் சூடத் தலைவன் நினைக்கிறார் என்பது பெறப்படுகிறது. குறப்பாவை — குறமகளிர், கோங்கு — மரம், நறம் — மணம், பாடலம் — பாதிரி, அடுப்பினும்— பொருந்தினும், துன்னத்தகும் — சேரத்தகும்.

தத்துவப்பொருள்: பல பிறப்புக்களில் வாழ்ந்தாலும் ஆன்மா நிறைவில் சிவத்தை அடையும் என்பது பெறப் படுகிறது.

Koviloor Digital Library

13. துணிவொடு வினாவல்

கொளு: சிலம்பன் துணிவொடு செல்சுரம் நினைந்து
கலம்புனை கொம்பர் கலக்க முற்றது.

தலைவன் செல்லுதற்குத் துணிந்த சுரத்தின் கடுமை நினைந்து அணிகலன் அணிந்த தலைவி கலக்கமுற்றது.

நிழல்தலை தீநெறி நீரில்லை
கானகம் ஓரிகத்தும்
அழல்தலை வெம்பரற் றென்பர்என்
னோதில்லை அம்பலத்தான்
கழல்தலை வைத்துக்கைப் போதுகள்
கூப்பக்கல் லாதவர்போல்
குழல்தலைச் சொல்விசெல் லக்குறிப்
பாகும்நம் கொற்றவர்க்கே. (206)

பொருள்: நிழல் இல்லை, நீரும் இல்லை, நரிகள் கத்தும், தீப்பிழம்பு போல நுண்ணிய பருக்கைக் கற்களைக் கொண்டது அந்தக் காட்டுவழி என்பர். தில்லையம்பல வாணனின் திருவடியைத் தலைமேற் சூடிக் கைகுவித்து வணங்கக் கல்லாதவர் துன்பத்தைப் போலத் துன்பம் தரும் இக்காட்டு வழியில் தலைவர் போவதற்கு எண்ணினாரே. இது என்ன காரணமோ? குழல் போன்ற இனிய சொற்களை உடைய தோழியே, சொல்வாயாக (என்று தலைவி தோழியிடம் கேட்டாள்.)

சொ.பொ.வி.: ஓரி — நரி, பரல் — கற்கள், கழல் — திருவடி, குழல்தலைச் சொல்லி— குழல் போன்ற இனிய சொற்களைச் சொல்லுபவளே.

தத்துவப்பொருள்: பேரின்பம் எய்துவதற்குரிய நெறி ஞானம் ஆதலால் அதனை அடைவதற்கு எளிமை இல்லை என்றாலும் சிவஞானம் வாயிலாக ஆன்மா முயன்ற துணிவைக் கூறியது.

14. போக்கு அறிவித்தல்

கொளு: பொருசுடர் வேலவன் போக்குத் துணிந்தமை
அரிவைக்(கு) அவள் அறிய உரைத்தது.

Koviloor Digital Library

ஒளி பொருந்திய வேலை உடைய தலைவன் உடன் போக்குக்குத் துணிந்த காரணத்தைத் தலைவி அறிய தோழி உரைத்தது.

காயமும் ஆவியும் நீங்கள் சிற்
றம்பல வன்கயிலைச்
சீயமும் மாவும் வெரீஇவரல்
என்பல் செறிதிரைநீர்த்
தேயமும் யாவும் பெறினும்
கொடார்நமர் இன்னசெப்பில்
தோயமும் நாடும் இல்லாச்சுரம்
போக்குத் துணிவித்தவே. (207)

பொருள்: தோழியே, நீங்கள் இருவரும் உடலும் உயிரும் போல ஒருவரை இன்றி ஒருவர் வாழமுடியாத அன்பை உடையீர். தில்லையம்பலவனது கயிலை மலையில் சிங்கத்தையும், கொடிய விலங்குகளையும் அஞ்சித் தலைவனை வரவேண்டாம் என்று கூறிவிட்டாய். ஆனால் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தையும், பொன் முதலியவற்றையும் உனக்கு விலையாக அவன் தந்தாலும் நம்மவர்கள் நின்னை மணம் செய்து கொடுக்க மாட்டார்கள். ஆதலால் குடிநீரும் மக்களும் இல்லாத காட்டுவழி செல்லுவதற்குத் தலைவன் துணிந்தான் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: குறியிடத்தில் அச்சத்தின் காரணத்தால் தலைவன் வருவதற்கு வாய்ப்பில்லை. நம்மவரும் மணம் செய்து கொடுக்க மாட்டார்கள். எனவே தலைவன் உடன்போக்குக் கொண்டான் என்று தோழி கூறுவதாகிய குறிப்பு பெறப்படுகிறது. காயம் — உடம்பு, சீயம் — சிங்கம், மா — விலங்கு, வெரீஇ — அஞ்சி, நமர் — சுற்றத்தார், தோயம் — நீர், நாடு — மக்கள் வாழும்இடம்.

தத்துவப்பொருள்: போகும் நெறி கொடிதாயினும் ஆன்மா சிவஞானம் வாயிலாகச் சிவத்தைப் பெற வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது.

Koviloor Digital Library

15. நாணிழந்து வருந்துதல்

கொளு: கற்பு நாணினும் முற்சிறந் தமையின்
சேண்நெறி செல்ல வாணுதல் துணிந்தது.

நாணத்தின்முன்னே கற்பு சிறந்தது. ஆகையால் தூரத்தில் உள்ள வழியில் ஒளி பொருந்திய நெற்றியை உடைய தலைவலி உடன்போக்குச் செல்லத் துணிந்தது. (உடன்போக்கு நாணத்தைத் தரும் என்றாலும் அது கற்பைக் காப்பதற்காகச் செய்யப்படுவதாயிற்று.)

மற்பாய் விடையோன் மகிழ்புலி
யூர்என் னொடும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர்
விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப்
பறித்தெறி யக்கழிக
இற்பாற் பிறவற்க ஏழையர்
வாழி எழுமையுமே. (2U8)

பொருள்: பாய்ந்து செல்லும் விடையை (காளையை) உடைய சிவபெருமான் விரும்பும் தில்லையில் என்னோடு தோன்றி என்னோடு வளர்ந்த பொறப்புடைய நாணம் தலைவன் மேல் வைத்த காதலாகிய கருணை இடையே புகுந்து செலுத்தக் கற்பாகிய புயல் அதனை அலைத்துப் பிடுங்கி என்னிடத்தில் இல்லாது சேய்மைக்கண் எறிவதால் என்னைவிட்டு அது கழியட்டும். இனி மகளிர் ஏழு பிறப்பும் உயர்குடியில் பிறவாது ஒழிவாராக (என்று தலைவி கூறிக் கொண்டாள்)

சொ.பொ.வி.: விடை — காளை, பொருப்பர் — மலையை உடைய தலைவன், நுந்த — அசைக்க கற்பார் — கற்பு, கால் — காற்று. (நாண் இங்கு மரமாகவும் கற்பு கடுங்காற்றாகவும் கூறப்பெற்று நாணம் பிடுங்கி எறியப் பட்டதாகக் கூறப்படுகிறது.) இற்பாற் — உயர்குடி தான் பெற்ற துயரால் பெண்களின் பிறவியே கூடாது என்கிறாள் தலைவி.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவிற்கு அருள் புரியச் சில பயன்களைத் துறத்தல் கூறப்படுகிறது.

16. துணிவெடுத்து உரைத்தல்

கொளு: செல்வ மாதர் செல்லத் துணிந்தமை
தொல்வரை நாடற்குத் தோழிசொல்லியது.

செல்வத்தை உடைய தலைவி உடன் செல்லத் துணிந் தமையைப் பழமையான மலை நாடனாம் தலைவனுக்குத் தோழி உரைத்தது.

கம்பம் சிவந்த சலந்தரன்
ஆகம் கறுத்ததில்லை
நம்பன் சிவநகர் நற்றளிர்
கற்சுரம் ஆகும்நம்பா
அம்பஞ்சி ஆவம் புகமிக
நீண்(டு)அரி சிந்துகண்ணாள்
செம்பஞ்சி யின்மிதிக் கிற்பதைக்
கும்மலர்ச் சீறடிக்கே. (209)

பொருள்: தலைவனே, அம்புகள் தலைவியின் கண்ணுக்கு ஒப்பாக மாட்டோம் என அஞ்சி அவை வைக்கப்படும் இடமாகிய அம்பறாத் தூணியில் புக, செவ்வரி பரந்த கண்களை உடைய செம்பஞ்சு பூசப்பெற்ற மலர்போலும் அவளது மெல்லிய அடிக்குக் கற்கள்மிகுந்த பாலை நிலமானது, அச்சத்தால் வெகுண்ட சலந்தரன் என்ற அசுரனது உடலைச் சினந்து அழித்த இறைவனின் தில்லை நகரில் காணப்படும் நல்ல தளிர் போல மென்மையும் குளிர்ச்சியும் உடையனவாம் (எனத் தோழி தலைவிக்குத் கூறினாள்)

சொ.பொ.வி.: கல்நிறைந்த பாதை தலைவிக்குத் தளிர்போலக் காணப்படும் என்பதால் உடன்போக்கிற்குத் தலைவி துணிந்தமை கூறப்படுகிறது. கம்பம் — அச்சத்தால், சிவந்த — வெகுண்ட, ஆகம் — உடம்பு, கற்சுரம் — கற்பாரை, நம்பா — தலைவா, ஆவம் — அம்பறாத்தூணி, செம்பஞ்சி — செம்பஞ்சுக்குழம்பு.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்திடம் பேரின்பம் துய்க்கும்பொழுது வினைத்துன்பங்கள் தோன்றாது என்பது பெறப்படுகிறது.

17. குறியிடங் கூறல்

கொளு: மன்னிய இருளில் துன்னிய குறியில்
கோங்கிவர் கொங்கையை நீங்குகொண் டென்றது.

நெருங்கிய இருளில் நினைத்த குறியிடத்தே கோங்கு போன்ற முலையை உடைய தலைவியோடு நீங்குவாயாக என்று தோழி தலைவனிடம் கூறியது.

முன்னோன் மணிகண்டம் ஒத்தவன்
அம்பலம் தம்முடிதாழ்த்(து)
உன்னா தவர்வினை போல்பரந்(து)
ஓங்கும், எனதுயிரே
அன்னாள் அரும்பெறல் ஆவியன்
னாய்அருள் ஆசையினால்
பொன்னார் மணிமகிழ்ப் பூவிழ
யாம்விழை பொங்கிருளே. (210)

பொருள்: எனக்கு உயிரை ஒத்த தலைவியின் உயிரை ஒத்த தலைவனே, நின் அருள் மேல் உள்ள ஆசையால் மகிழ மரத்தின் பூ விழ, அதன் ஓசையை நீ செய்யும் ஓர் குறியாக எண்ணிட நாங்கள் விரும்புகின்ற இந்த இருள் சிவபெருமானின் நீலகண்டத்தை ஒத்து விளங்குகிறது. மேலும் அவன் எழுந்தருளியுள்ள சிற்றம்பலத்தை வணங் காதவர் வினைபோலப் பரந்து காணப்படுகிறது (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: இருளில் மகிழம்பூ மரத்தடியைக் குறியிடமாகக் கொண்டு அங்கு தலைவனை வருமாறு தோழி கூறுகிறாள் என்பது பெறப்படுகிறது. முன்னோன் — சிவபெருமான், உன்னாதவர் — வணங்காதவர், ஆவி — உயிர், விழை — விரும்புதல்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை எய்துவதற்குத் தடையான வினைகளை ஆணவமாகிய இருள் அறியாமை நிலையில் வளர்க்கிறது. அதில் தெளிவடைந்து சிவத்தை அடைய முற்படுதல் பெறப்படுகிறது.

18. அடியொடு வழி நினைந்(து) அவன் உளம் வாடல்

கொளு: நெறியுறு குழலியொடு நீங்கத் துணிந்த
உறுசுடர் வேலோன் உள்ளம் வாடியது.

சுருண்ட கூந்தலை உடைய தலைவியுடன் உடன் போக்குக்கு உடன்பட்ட வேலினை உடைய தலைவன் உள்ளம் வாடிக் கூறியது.

பனிச்சந் திரனொடு பாய்புனல்
சூடும் பரன்புலியூர்
அனிச்சம் திகழும்அம் சீறடி
ஆவ அழல்பழுத்த
கனிச்செந் திரளன்ன கற்கடம்
போந்து கடக்குமென்றால்
இனிச்சந்த மேகலையாட்(கு) என்கொ
லாம்புகுந்(து) எய்துவதே. (211)

பொருள்: குளிர்ந்த சந்திரனோடு பாய்கின்ற கங்கையை யும் சூடிய இறைவனது தில்லையின் கண் உள்ள அனிச்சப் பூப்போலும் திகழுகின்ற தலைவியின் சிறிய அடிகள் தீயாகிய பழத்தின் திரள்போலும் கற்களை உடைய காட்டைக் கடந்து செல்லும் என்றால் மேகலையை உடைய தலைவிக்கு இது தவிர வேறு என்ன துன்பம் வந்து எய்தும்? (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: தன்னுடன் உடன்போக்கிற்கு வரும் தலைவியின் மென்மை கண்டு தலைவன் வருந்திக் கூறியதாம். பனி — குளிர்ச்சி, அனிச்சம் — மலர், ஆவ — இரக்கக் குறிப்பு, அழல் — தீ, கற்கடம் — கற்களைக் கொண்டவழி, சந்தம் — அழகு.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மா தனக்கு அருள் வழங்கச் சிவம் கொள்ளும் கருணையை வியந்து பாராட்டியது.

19. கொண்டு சென்று உய்த்தல்

கொளு: வண்டமர் குழலியைக் கண்டுகொள் கென்றது

வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலை உடைய தலைவியைக் (உடன் கொண்டு செல்ல) காண்பாயாக என்று தோழி தலைவனுக்குக் கூறியது.

வைவந்த வேலவர் சூழ்வரத்
தேர்வரும் வள்ளல்உள்ளம்
தெய்வம் தரும்இருள் தூங்கும்
முழுதும் செழுமிடற்றின்
மைவந்த கோன்தில்லை வாழ்த்தார்
மனத்தின் வழுத்துநர் போல்
மொய்வந்த வாவி தெளியும்
துயிலும் இம்மூதெயிலே. (212)

பொருள்: மிடற்றில் கருமை பொருந்திய இறைவனது தில்லையை வாழ்த்தாதவர்கள் மனம் போல இருள் மிக்கிருக்கிறது. அத்தில்லையை வழுத்துவார் மனம்போலக் குளங்கள் தெளிவாக உள்ளன. இந்த ஊரும் துயிலுகின்றது. கூர்மையான வேலை ஏந்திய பணியாளர்கள் சூழ்ந்துவரத் தேரில் வரும் தலைவனே, நீ கருதியதை இன்றேதெய்வம் கூட்டுவிக்கிறது. எனவே என் தலைவியைக் கூட்டி வந்துள்ளேன், அவளைக் காண்பாயாக. (என்று தோழி கூறியது)

சொ.பொ.வி.: வைவந்த — கூர்மை பொருந்திய, மிடறு — கழுத்து, மை — கருமை, வாவி — குளம், மூதெயிலே — பழமையான கோட்டை கொண்ட ஊர்.

தத்துவப்பொருள்: காலமும் முயற்சியும் கைகூடியதால் ஆன்மாவிற்குமுன் சிவத்தலைவி வந்ததைத் திருவருள் உணர்த்தியது.

Koviloor Digital Library

20. ஓம்படுத்துரைத்தல்

கொளு: தேம்படு கோதையை ஓம்படுத்தது.

தேன் பொருந்திய மாலைகளை அணிந்த தலைவியைப் பாதுகாத்துக்கொள் என்று தோழி தலைவனிடம் வற்புறுத்தியது.

பறந்திருந்(து) உம்பர் பதைப்பப்
படரும் புரங்கரப்பச்
சிறந்(து)எரி யாடிதென் தில்லையன்
னாள்திறத் துச்சிலம்பா
அறம்திருந்(து) உன்னரு ளும்பிறி
தாயின் அருமறையின்
திறம்திரிந் தார்கலி யும்முற்றும்
வற்றும்இச் சேணிலத்தே. (213)

பொருள்: தலைவனே, தேவர்கள் இடைவிடாது நடுங்கப் பறந்து செல்லும் மூன்று கோட்டைகளைக் கெடும்படி எரித்த திருவிளையாட்டினை உடைய இறைவனது தில்லையை ஒப்பானவளிடத்து அறம் திருந்துவதற்குரிய நிலையில் உன்னுடைய அருளும் வேறுபட்டால் இவ்வுலகின் உள்ள அரிய வேதங்களின் ஒழுங்கு குலையும், கடலும் முற்றும் வற்றிப் போகும் (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: வேதம் குறைந்தாலும், கடல் வற்றினாலும் தலைவியைக் கைவிட்டு விடாதே என்று தோழி கூறும் பொருள் பெறப்படுகிறது. உம்பர் — தேவர். எரியாடி — நெருப்பால் விளையாடியவர், அறம்திருந்(து) — அறம் திருந்தும்படியாக, அருமறை — வேதம், ஆர்கலி— ஆரவாரிக்கும் கடல்.

தத்துவப்பொருள்: சிவத்தோடு கலக்கும் ஆன்மா வாசனா மலம் தாக்கினும் பிறழாது வழிபாடும், ஐந்தெழுத்து சிந்தனையும் துணை கொண்டு கலந்து வாழ்தல் வேண்டும் எனத் திருவருள் வேண்டியது.

Koviloor Digital Library

21. வழிப்படுத்துரைத்தல்

கொளு: மதிநுதலியை வழிப்படுத்துப்
பதிவயிற் பெயரும் பாங்கி பகர்ந்தது.

சந்திரன் போன்ற நெற்றியை உடைய தலைவியைத் தலைவனுடன் போகும்படி செய்து தன் இடத்திற்குத் திரும்பும் தோழி கூறியது.

ஈண்டொல்லை ஆயமும் ஔவையும்
நீங்கஇவ் வூர்கவ்வைதீர்த்(து)
ஆண்டொல்லை கண்டிடக் கூடுக
நும்மைஎம் மைப்பிடித்தின்(று)
ஆண்டெல்லை தீர்இன்பம் தந்தவன்
சிற்றம்பலம் நிலவு
சேண்தில்லை மாநகர் வாய்ச்சென்று
சேர்க திருத்தகவே. (214)

பொருள்: எம்மை ஆட்கொண்டு வரம்பற்ற பேரின்பத்தை வழங்கிய சிற்றம்பலம் விளங்கும் தில்லை மாநகரின் கண் நீவீர் பொலிவுடன் சென்று சேர்வீர்களாக. தோழியர் கூட்டமும் தாயும் உங்களைத் தொடர்ந்து வராது இவ் விடத்தே இருப்பதாக. இவ்வூரில் உண்டாகிய ஆரவாரத்தை விரைவில் நீக்கி அங்குவந்து உம்மை நான் விரைவில் காண்பேனாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: ஆயம் — தோழியர் கூட்டம், ஔவை — தாய், ஒல்லை நீங்க — இங்கே தங்க (பின் தொடர்ந்து தேடி வராது இருக்க), கவ்வை — பழிதூற்றல், நும்மை — உங்களை, எம்மை — தோழியை, தொல்லைதீர் இன்பம் — பேரின்பம், சேண் — தூரத்தில் உள்ள, திருத்தக — பொலிவு பெறுக.

தத்துவப்பொருள்: திருவருள், ஆன்மா சிவத்தோடு உடனுறையும் வரை இடையீடு புகாது காத்து உய்க்கும் திறத்தைக் கூறியது.

Koviloor Digital Library

22. மெல்லக் கொண்டேகல்

கொளு: பஞ்சின் மெல்லடி பணைத் தோளியை
வெஞ்சுரத்திடை மெலிவு அகற்றியது.

பஞ்சினும் மெல்லிய அடியை உடைய மூங்கிலை ஒத்த தோளை உடைய தலைவியை வெம்மையான வழியிடத்தில் அவளுடைய தளர்ச்சியைத் தலைவன் அகற்றியது.

பேணத் திருத்திய சீறடி
மெல்லச்செல் பேரரவம்
பூணத் திருத்திய பொங்கொளி
யோன்புலி யூர்புரையும்
மாணத் திருத்திய வான்பதி
சேரும் இருமருங்கும்
காணத் திருத்திய போலும்முன்
னாமன்னு கானங்களே. (215)

பொருள்: பாம்புகளை அணிவதற்காக அவற்றின் தீக் குணங்களை அகற்றிய ஒளி பொருந்திய இறைவனது தில்லையை ஒக்கும் பெரிய ஊர்கள் நாம் செல்லுகின்ற வழியில் இருமருங்கும் இருக்கும். முன்னே உள்ள காடுகள் நாம் செல்லுவதற்கு ஏற்பத் திருத்தப் பெற்றிருக்கின்றன. ஆதலால் நான் விரும்பும் சிறிய அடியை உடையவளே, மெல்ல மெல்லச் செல்வாயாக.

சொ.பொ.வி.: பேண — நான் விரும்ப, திருத்திய — அழகுடைய, திருத்திய — தீயவற்றை நீக்கிய, மாண மாட்சியமைப்பட்ட, திருத்திய — திருத்தம் செய்யப்பட்ட, பதி — ஊர், காணத்திருத்திய — நம் கண்களுக்கு இனிமை யாகத் திருத்தப்பட்ட.

தத்துவப்பொருள்: ஆன்மா இனிய கூறிச் சிறிதும் விலக்காமல் இன்பச் சிவத்தலைவியைத் தன்னுள் கூட்டிச் சென்றது.

Koviloor Digital Library

23. அடலெடுத்து உரைத்தல்

கொளு: வரிசிலைய'வர் வருகுவரெனப்
புரிதரு குழலிக்(கு) அருளவன் உரைத்தது.

எய்துவதற்குத் தயார் நிலையில் உள்ள விற்களை ஏந்தியவர் (சுற்றத்தார்) வருவர் என அஞ்சிய சுருண்ட கூந்தலை உடைய தலைவிக்குத் தலைவன் கூறியது.

கொடித்தேர் மறவர் குழாம்வெங்
கரிநிரை கூடின்என்கை
வடித்தேர் இலங்கெஃகின் வாய்க்குத
வாமன்னும் அம்பலத்தோன்
அடித்தேர் அலரென்ன அஞ்சுவன்
நின்ஐயர் என்னின்மன்னும்
கடித்தேர் குழன்மங்கை கண்டிடுஇவ்
விண்தோய் கனவரையே. (216)

பொருள்: வண்டுகள் சூழ்ந்த நறுமணம் உடைய கூந்தலைக் கொண்ட பெண்ணே, உன்னுடைய ஐயன்மார் (சுற்றத்தார்) வரின், சிற்றம்பலத்தானது திருவடியை அறியாதவர் போல அஞ்சுவேன். அவர்கள் அல்லாது கொடியுடைய தேரும், வீரர் கூட்டமும், யானைகளின் கூட்டமும் அனைத்தும் திரண்டு வந்தால் என் கையிலுள்ள வேலின் நுனிக்கு அவை தப்பமாட்டா. விண்ணை எட்டிய இப்பெரிய மலையிடத்து நான் செய்யப் போவதைக் காண்பாயாக.

சொ.பொ.வி.: உடன்போக்கின் கண் எதிரில் சிலர் வருவது கண்டு அஞ்சிய தலைவிக்குத் தலைவன் இவ்வாறு உரைத்தான் என்க. மறவர் — வீரர், எஃகு—வேல், வாய்க்குதவா — இரையாவதற்குப் போதாது, (தப்பாது அழிந்து விடும்) என்பதாம். தேர்அலர் — வணங்காதவர், ஐயர் — சுற்றத்தார், கண்டிடு — காண்பாயாக.

தத்துவப்பொருள்: ஆன்மா தன்னுடைய வினையின் செயல்களைக் கூறி அவை அகலச் சிவத்தலைவியோடு கூடுவேன் எனக்கூறியது.

Koviloor Digital Library

24. அயர்வு அகற்றல்

கொளு: இன்னல் வெங்க டந்தெறி வேலவன்
அன்னம் அன்னவள் அயற்(வு)அ கற்றியது.

துயரம் தரும் வெம்மையான காட்டில் வேலை உடைய தலைவன் அன்னம் போன்ற தலைவியின் அயர்வை அகற்றியது.

முன்னோன் அருள்முன்னும் உன்னா
வினையின் முனகர்துன்னும்
இன்னாக் கடறி(து)இப் போழ்தே
கடந்தின்று காண்டும்சென்று
பொன்னார் அணிமணி மாளிகைத்
தென்புலி யூர்ப்புகழ்வார்
தென்னா எனஉடை யான்நட
மாடுசிற் றம்பலமே. (217)

பொருள்: முன்னைப் பழம் பொருளாகிய இறைவனது திருவருளை முற்பிறப்பின் கண்நினையாது தீவினையைச் செய்த நீசர்களைச் சேரும் துன்பம் போன்ற இக்காட்டை இப்பொழுதே கடந்து — மணிகள் விளங்கும் மாளிகையை உடைய தில்லையிலே இறைவனைப் போற்றி வழிபடுகின்றவர்கள். தென்னா, என்னா என்று கூற அவர்களை ஆட்படுத்திய இறைவன் கூத்தாடும் சிற்றம்பலத்தை இன்றே சென்று காண்போம். கவலற்க. (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: முன்னோன் — யாவர்க்கும் முற்பட்டவன், முன்னும் — முற்பிறப்:பில், உன்னா — நினைக்க முடியாத, முனகர் — கீழ்மக்கள் (நீசர்), துன்னும் — அ்டையத் தகும். கடந்து — பாலைநிலக்காடுகடந்து.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தோடு இணைந்து செல்லுவதே வினைசளைக் கடப்பதற்கு ஏதுவாம் எனக் கூறியது.

Koviloor Digital Library

25. நெறி விலக்கிக் கூறல்

கொளு: சுரத்திடைக் கண்டவர் சுடர்க்குழை மாதொடு
சரத்தணி வில்லோய் தங்கு கென்றது.

காட்டு வழியில் கண்டவர் சிறந்த காதணியை அணிந்த தலைவியுடன் அம்பினையும் வில்லினையும் உடைய தலைவனைத் தங்கிச் செல்க என்று வேண்டியது.

விடலைஉற் றாரில்லை வெம்முனை
வேடர் தமியையமென்பூ
மடலையுற் றார்குழல் வாடினள்
மன்றுசிற் றம்பலவர்க்(கு)
அடலையுற் றாரின் எறிப்(பு)ஒழிந்
தாங்(கு)அருக் கன்சுருக்கிக்
கடலையுற் றான்கடப் பாரில்லை
இன்றிக் கடுஞ்சுரமே (218)

பொருள்: தலைவனே, இனி நீ போகும் வழியில் நல்ல மக்கள் இல்லை. கொடிய போர் முனையில் போரிடும் வேடர்கள்,தான்உள்ளனர் நீயோ தனி ஆள், மெல்லிய பூவைச்சூடிய கூந்தலை உடைய இவள் வழிநடந்த வருத்தத்தால் வாடி யிருக்கிறாள். சிற்றம்பலத்தை உடைய இறைவர்க்கு ஆட் படாத கொலைகாரர்களைப் போல ஒளிகுன்றி சூரியன் தன் கதிர்களைச் சுருக்கி மேல்கடலை அடைந்தான். இக்கொடிய வழியை இப்பொழுது கடந்து செல்வாரும் இல்லை. ஆகையால் ஈண்டு இங்கு தங்குவாயாக (என்று கண்டோர் கூறினர்)

சொ.பொ.வி.: உற்றார் — உதவும் நல்லவர், தமியை — தனிஆள், அடலை உற்றாரின் — மாறுபட்டு வணங் காதவர்கள் போல, எரிப்பு — ஒளிகுறைந்து, அருக்கண் — சூரியன், சுருக்கி— கதிர்களைச் சுருக்கி, கடல் — மேற்குக் கடல்

தத்துவப்பொருள்: சிவத்தவவியையும் ஆன்மாவையும் மாயையின் நெறிப்படாது இன்ப நெறிக்கண் ஏகுவதற்குத் தங்கிச் செல்க என்று வழியிடைக் காணப்பட்டார் கூறியது.

Koviloor Digital Library

26. கண்டவர் மகிழ்தல்

கொளு: மண்டழற் கடத்துக் கண்டவர் உரைத்தது

மிகுந்த நெருப்புப் போன்ற காட்டு வழியில் தலைவனையும், தலைவியையும் கண்டவர் உரைத்தது.

அன்பணைத்(து) அம்சொல்லி பின்செல்லும்
ஆடவன் நீடவன்தன்
பின்பணைத் தோளி வரும்இப்
பெருஞ்சுரம் செல்வதன்று
பொன்பணைத் தன்ன இறையுறை
தில்லைப் பொலிமலர்மேல்
நன்பணைத் தண்ணற(வு) உண்அளி
போன்றொளிர் நாடகமே. (219)

பொருள்: அழகிய தோற்றத்தையும் நடையையும் காண்பதற்காக அழகிய பெண்ணை அன்பால் அணைத்து அவளுக்குப் பின்னே ஆடவன் ஒருவன் செல்லுகின்றான். முன் செல்லுவதற்கு நாணி ஆடவனின் வீர நடையையும், அவன் செல்லுவதையும் காண அவனுக்குப் பின்னே மூங்கிலைப் போன்ற தோள்களை உடைய பெண் செல்கிறாள். இவ்வாறு இவர்கள் செய்கின்ற செயல் இப்பெரிய காட்டினைக் கடப்பதற்குரிய செய்கை அன்று. பொன்போன்ற வடிவு கொண்டு இறைவன் உறைகின்ற தில்லையில் நல்ல பெரிய மலரிடத்துத் தேனை உண்ட வண்டுகள் இன்பக் களிப்பால் நடத்துகின்ற காட்சி போன்று இருக்கின்றது இது.

சொ.பொ.வி.: மலரில் தேனை உண்டு மயங்கிய வண்டுகள் மலரை விட்டுப் பிரியாது அதனையே சுற்றிச் சுற்றி வருவது போல ஒருவருக்கொருவர் முன்னும் பின்னுமாய்ச் செல்லுகின்ற தலைவனும் தலைவியும் காட்டைக் கடக்க முயலாது அங்கேயே சுற்றிச் சுற்றி வருகின்றவர் என்பதாம். ஆடவன் — ஆண்மகன், பணைத்தோள் — பெண்மகள், சுரம் — காடு, செல்வதன்று — கடப்பதன்று, நறவு — தேன், அளி — வண்டு, நாடகம் — காட்சி.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மாவும் சிவமும் முன்னும் பின்னுமாக மாறிச் செல்லுவதைக் கண்டு எதிரில் வருவோர் இவர்கள் களிப்பில் மகிழ்ந்து கூறியது.

27. வழிவிளையாடல்

கொளு: வன்தழற் கடத்து வடிவேல் அண்ணல்
மின்தங்(கு) இடையொடு விளையா டியது.

நெருப்பை ஒத்த காட்டில் வேலை உடைய தலைவன் மின்னல் இடைத் தலைவியோடு விளையாடிச் சென்றது.

கண்கள்தம் மாற்பயன் கொண்டனம்
கண்டினிக் காரிகைநின்
பண்கட மென்மொழி ஆரப்
பருக வருகஇன்னே
விண்கள்தம் நாயகன் தில்லையின்
மெல்லியல் பங்கன் எங்கோன்
தண்கடம் பைத்தடம் போற்கடுங்
கானகம் தண்ணெனவே. (220)

பொருள்: வழி நடந்த வருத்தத்தால் இளைத்த மேனியுடைய உன்னைக் கண்டு கண்கள் பெற்றதன் பயனைப் பெற்றேன். தலைவியே — விண்ணகத்திற்குத் தலைவன், தில்லைக்கண் உள்ளவன் உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டவனாகிய எம் இறைவனது கடம்பை நகரில் உள்ள பொய்கை போல இந்தக்காடு குளிரும் வரை சிறிது இருந்து இசை போலும் உன்னுடைய மென்மையான சொற்களை என்னுடைய செவியானது பருகும் படி இவ்விடத்து வருவாயாக. (இருப்பாயாக) என்று தலைவன் கூறினான்.

சொ.பொ.வி.: பண்கடம் — இசையின் முறைமை, தன் கடம்பை — குளிர்ச்சி பொருந்திய கடம்பை நகர், தடம் -- குளம், தண்ணென — குளிர்ச்சி பொருந்திய.

தத்துவப்பொருள்: வழிநடந்த சிவத்தலைவியும் ஆன்மாவும் ஒரிடத்திருந்து அளவளாவிக் கொள்ளுதல்.

Koviloor Digital Library

28. நகரணிமை கூறல்

கொளு: வண்டமர் குழலியொடு கண்டவர் உரைத்தது.

வண்டு ஒலிக்கும் பூக்களைச் சூடிய தலைவியுடனே தலைவியைக் கண்டவர்கள் கூறியது.

மின்தங்(கு) இடையொடு நீவியன்
தில்லைச் சிற்றம்பலவர்
குன்றம் கடந்துசென் றால்நின்று
தோன்றும் குருஉக்கமலம்
துன்(று)அம் கிடங்கும் துறைதுறை
வள்ளைவெள் ளைநகையார்
சென்(று)அங்(கு) அடைதட மும்புடை
சூழ்தரு சேண்நகரே. (221)

பொருள்: மின்னலை ஒத்த இடையை உடைய தலைவியோடு தலைவனே, நீ அகன்ற இடத்தை உடைய தில்லைச் சிற்றம்பலத்தவனின் மலையைக் கடந்து சென்றால் செம்மைநிறம் பொருந்திய தாமரைகள் அழகோடு தோன்றும் கிடங்கும், வள்ளைப் பாட்டுப் பாடும் வெண்மையான பற்களை உடைய மகளிர் நீராடுகின்ற தடாகம் சூழ்ந்துள்ள பெரிய நகரமும் தோன்றும் (என்று கண்டவர்கள் கூறினார்கள்)

சொ.பொ.வி.: மின் — மின்னல், குருஉ — இடம், துன்றுஅம் — நெருங்கிய, அழகிய, கிடங்கு — அகழி, வள்ளை — உரல் குற்றும்போது பாடும் பாட்டு, தடம் — குளம், சேண்நகர் — உயர்ந்த நகர்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியும் ஆன்மாவும்த கலந்து ஆனந்த மயமாய் விளங்கும் இடம் உயர்ந்த நகரமாகும் என்று கூறப்படுகிறது.

29. நகர் காட்டல்

கொளு: கொடுங்கடம் கடந்த குழைமுக மாதர்க்குத்
தடம்கி டங்குசூழ் தன்நகர் காட்டியது.

KOVILOO ANDAVAR
A. No. 4587

Koviloor Digital Library

கொடிய வழியைக் கடந்து சென்ற மகரக் குழை அணிந்த தலைவிக்குக் குளமும் அகழியும் சூழ்ந்த நகரைத் தலைவன் காட்டியது.

மின்போல் கொடிநெடு வானக்
கடலுள் திரைவிரிப்பப்
பொன்போல் புரிசை வடவரை
காட்டப் பொலிபுலியூர்
மன்போற் பிறையணி மாளிகை
சூலத்த வாய்மடவாய்
நின்போல் நடைஅன்னம் துன்னிமுன்
தோன்றும்நல் நீள்நகரே. (222)

பொருள்: தலைவியே உனதுநடை போன்ற நடையினை உடைய அன்னங்கள் நெருங்கி வாசலில் நிற்க, இறைவன் பிறையை அணிந்தது போல் உயர்ந்து ஆகாயத்தில் உள்ள சந்திரனைத் தொடும் வண்ணம், இறைவன் சூலத்தை ஏற்றதுபோல வாயினில் சூலத்தைப் பொறித்துவைத்துள்ளமாளிகைகளைக் கொண்ட பெரிய நகரம் — கொடிகள் நெடிய வானமாகிய கடலின் அலைகளைப் போல் அசைய, பொன்னால் செய்யப் பெற்ற மதில்கள் மேருமலையைக் காட்டப் பொலிந்து தோன்றுகின்ற தில்லை நகரமாகும். அதனைக் கண்டு தொழுவாயாக (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: தலைவன் தில்லை நகரத்தைக் காட்டித் தலைவியைத் தொழும்படி கூறுகின்றான். அதன் சிறப்புகளைப் பாடல் பலவிதமாகக் கூறுகிறது. அந்நகரத்தில் மாளிகைகள் உள்ளன. மாளிகையில் கொடிகள் நாட்டப் பெற்றுள்ளன. மாளிகையைச் சுற்றிலும் மதில்கள் உள்ளன. மாளிகையானது அன்னங்கள் உலவுகின்ற வாயிலினை உடையது. அம்மாளிகைகள் வானத்தை எட்டும் உயர் மானவை. ஆதலால் பிறையைச் சூடியிருப்பது போல் காட்சியளிக்கின்றன. சைவ மாளிகைகளில் முன்புறச் சுவரில் சூலக் குறியைப் பொம்மையாகவோ சித்திர மாகவோ வைத்திருப்பர். இங்கும் அது உள்ளது. இத்தகைய

Koviloor Digital Library

மாளிகைகளோடு அதில் நாட்டப் பெற்றிருக்கின்ற கொடிகள் வானமளவு சென்று அலை வீசுவது போல வீசுகின்றன. மாளிகையைச் சுற்றியுள்ள கோட்டைகள் பொன்மயமாக இருப்பதால் மேருமலையைப் போல் காட்சியளிக்கின்றன. இத்தகைய அழகுடைய தில்லைநகர் என்று மணிவாசகப் பெருமான் பாடலில் குறிப்பிடு கின்றார். திரைவிரிப்ப — அலைபோல் அசைய, புரிசை — கோட்டை, வடவரை — இமயம், மன்— மன்னவனாகிய இறைவன், துன்னி — சூழ்ந்து, நீள்நகர் — தில்லைநகர்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி கூடி அருள்புரியும் தில்லை நகரின் பெருமை கூறப்பெற்றுள்ளது.

30. பதிபரிசுரைத்தல்

கொளு: கண்ணிவர் வளநகர் கண்டுசென்(று) அடைந்து
பண்ணிவர் மொழிக்குப் பதிபரி(சு) உரைத்தது

அழகிய பரந்த இடத்தைக் கொண்ட நகரத்தைக் கண்டு சென்று அடைந்த இனிமை உடைய தலைவிக்கு அதன் சிறப்பைத் தலைவன் உரைத்தது.

செய்குன்(று) உவைஇவை சீர்மலர்
வாவி விசும்பியங்கி
நைகின்ற திங்கள் எய்ப்(பு) ஆறும்
பொழில்அவை ஞாங்கர்எங்கும்
பொய்குன்ற வேதியர் ஓதிடம்
உந்திடம் இந்திடமும்
எய்குன்ற வார்சிலை அம்பல
வற்(கு)இடம் ஏந்திழையே. (223)

பொருள்: உவை செய்குன்றுகள் — இவை நல்ல மலர்களை உடைய குளங்கள். அவை ஆகாயத்தில் இயங்கி வருந்துகின்ற திங்கள் இரங்கி வந்து இளைப்பாறும் சோலைகள். அந்த இடம் உலகத்தில் உள்ள பொய்கள் முதலான குற்றங்கள் கெட, மறையவர்கள் வேதம் சொல்லு கின்ற இடம், இந்த இடம் அம்பு எய்யும் மேரு மலையாகிய வில்லை உடைய சிற்றம்பலத்தானின் இருப்பிடம்.

Koviloor Digital Library

தலைவியே இத்தகைய தன்மை உடையது இந்த ஊர் என்பதை அறிவாயாக (என்று தலைவன் கூறினான்.)

சொ.பொ.வி.: இடங்களை மூன்று வகையாகப் பிரிப்பது பண்டைக் காலத்து வழக்கம். சேய்மை, அண்மை, இரண்டிற்கும் நடுவில் உள்ள இடம் என்பன அவை. இதனை அவண், இவண், உவண், என்பர். பாடலின் முதற் பகுதியில் இம் மூன்றும் இடம் பெற்றுள்ளது. உவண் இடத்தில் இருப்பது செய்யப் பெற்ற மலைகளாகிய செய்குன்றினை உடையதாகும். உவை — உவண், இவை — இவண், அவை — அவண், ஞாங்கர் — உலகம், பொய் குன்ற—பொய்கள் நீங்க, இந்திடம் — இந்த இடம், ஏந்திழை — தலைவி.

தத்துவப்பொருள்: முக்தி இன்பத்தைத் தரும் சிற்றம்பல நாதனின் இடம் பற்றிக் கூறியது.

31. செவிலி தேடல்

கொளு: கவலை யுற்ற காதல் தோழியைச்
செவிலி யுற்றுத் தெரிந்து வினாயது.

(தலைவி உடன்போக்கிற்குச் சென்றுவிட்டதால்) கவலையோடு இருந்த அன்புத் தோழியைச் செவிலித்தாய் உற்ற துயரத்தைக் கேட்டது. (செவிலி—வளர்ப்புத்தாய்)

மயிலெனப் பேர்ந்(து)இள வல்லியின்
ஒல்கிமென் மான்விழித்துக்
குயிலெனப் பேசும்எங் குட்டன்எங்
குற்றதென் னெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன்
தில்லைப்பல் பூங்குழலாய்
அயிலெசனப் பேருங்கண் ணாய்என்
கோலாம்இன்(று) அயர்கின்றதே. (224)

பொருள்: மயில் போல் நடந்து இளங்கொடி போல அசைந்து, மெல்லிய மான்போல விழித்து, குயில் போலப் பேசும் எம் மகள் எங்குச் சென்றாள். என்னுடைய நெஞ்சின் கண் என்றைக்கும் இயங்கும் அம்பலத்தானின்

Koviloor Digital Library

தில்லையில் பூத்த மலர்களை அணிந்த கூந்தலை உடைய வளாகிய தோழியே, வேல் போலப் பிறழும் கண்களை உடையவளே, நீ இன்று வருந்தவது எதற்காகவோ? (என்று செவிலி கேட்டாள்)

சொ.பொ.வி.: பேர்ந்து — நடந்து, ஒல்கி — துவண்டு, குட்டன் — பிள்ளை (மகள்) பயிலென — இயங்குவதென.

தத்துவப்பொருள்: திருவருளாம் தோழியிடம் சிவத்தின் நிலைமை பற்றித் திரோதான சக்தி வினவியது.

32. அறத்தோடு நிற்றல்

கொளு: சுடர்க்குனழப் பாங்கி படைத்துமொழி கிளவியில்
சிறப்புடைச் செவிலிக்(கு) அறத்தொடு நின்றது.

ஒளியினை உடைத்தாகிய குழையினை அணிந்த தோழிதான் படைத்து மொழியும் சொல்லால் செவிலித் தாய்க்கு அறத்தோடு நின்றது.

ஆளரிக் கும்அரி தாய்த்தில்லை
யாவருக் கும்எளிதாம்
தாளர்இக் குன்றில்தன் பாவைக்கு
மேவித் தழல்திகழ்வேல்
கோளரிக் கும்நிகர் அன்னார்
ஒருவர் குரூஉமலர்த்தார்
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்டல்
ஆயத்(து)எம் வாணுதலே. (225)

பொருள்: திருமாலுக்கு அரியதாய், தில்லை நகரத்தார்க்கு எளியதாய் உள்ள திருவடியைக் கொண்டவனது இம்மலையிடத்துத் தீப்போலும் வேலை உடைய — சிங்கத்தைப் போன்ற ஒருவனது நல்ல நிறம் பொருந்திய மலர்களால் கட்டப் பெற்ற மாலையைச், செவ்வரி பரந்த கண்களையும், ஒளி பொருந்திய நெற்றியினையும் உடைய தலைவி தன்னுடைய விளையாட்டுப் பாவைக்கு வாங்கி விரும்பி ஏற்றுக் கொண்டாள். நடந்த இதைத்தான் நான் அறிவேன் (என்று தோழி செவிலியிடம் கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: ஆளரி — அருளவேண்டிய திருமால், பாவை—பொம்மை, தழல் — தீ, கோளரி — சிங்கம், குரூஉ — நிறம், வாளரி — செவ்வரி, ஆயம் — தோழியர்.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருள்நிலையை அறத்தொடு கூறியது.

33. கற்பு நிலைக்கு இரங்கல்

கொளு: விற்புரை நுதலி கற்புநிலை கேட்டுக்
கோடா யுள்ள நீடாய் அழுங்கியது.

வில்போன்ற நெற்றியினை உடைய தலைவியின் கற்பு நிலைமை கேட்டுச் செவிலித்தாய் சொல்ல நற்றாய் வாடியது.

வடுத்தான் வகிர்மலர் கண்ணிக்குத்
தக்கின்று தக்கன்முத்தீக்
கெடுத்தான் கெடலில்தொல் லோன்தில்லைப்
பன்மலர் கேழ்கிளர
மடுத்தான் குடைந்தன் றழுங்க
அழுங்கித் தழீஇமகிழ்வுற்(று)
எடுத்தாற்(கு) இனியன வேயினி
யாவன எம்மனைக்கே. (226)

பொருள்: தக்கன் யாகத்தை அழித்தவனும் ஒரு காலத்திலும் தான் அழிவில்லாத நித்தியனுமாகிய சிவ பெருமானது தில்லைக்கண் பூக்கள் நிறைந்து விளங்குகின்ற குளத்தின்கண் குடைந்து நீர் ஆடிய பொழுது தவறி மூழ்கிட அதுகண்டு இரக்கத்துடன் தலைவன் தலைவியை அணைத்து எடுத்துக் காப்பாற்றினான். அத்தகைய தலைவனுக்கு மாவடு பிளந்தது போன்ற கண்களை உடையவளாகிய தலைவியைக் கொடுப்பது அறச் செயலாயினும் அவளுடைய பருவத்தை நோக்கின் தகாதது ஆகும். என்றாலும் பெற்ற தாய் இனிச் செய்வது தலைவியைக் குளத்திலிருந்து காப்பாற்றிய தலைவனுக்குக் கொடுப்பதே அன்றி வேறில்லை (என்று செவிலித் தாய் நற்றாய் செய்யவேண்டிய செயலைக் கூறினாள்).

Koviloor Digital Library

சொ.பொ.வி.: தலைவியினுடைய கற்புநிலையாகிய திருமண நிலையைச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறினாள். வடு — மாவடு, வகிர் — பிளந்து, தக்கின்று— பருவத்திற்கு உடையது அன்று, முத்தீ — யாகம், கெடலில் — கெடுவ தில்லை, மடு—குளம், அழுங்க — மூழ்க, எடுத்தான் — காப்பாற்றிய தலைவன், இனியன — திருமணம் செய்து கொடுப்பது.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அடைவதற்குத் தடையாய் இருந்த திரோதான சக்தியை நினைந்து வருந்தி, சிவத்திடம் ஆன்மாவைச் சேர்ப்பதற்குக் கருணை கூறப்பெற்றது.

34. கவன்றுரைத்தல்

கொளு: அவள்நிலை நினைந்து செவிலி கவன்றது.

தலைவியினுடைய நிலையை அறிந்து செவிலி வருந்தியது.

முறுவல்அக் கால்தந்து வந்தென்
முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தஎல்
லாம்முழு தும்சிதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன்
சிற்றம் பலஞ்சிந்தியார்
உறுவலக் கானகம் தான்படர்
வானாம் ஒளியிழையே. (227)

பொருள்: ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த என் மகளே. அன்றொரு நாள் என்னைப் பார்த்துச் சிரித்து அருகில் வந்து என் மார்பு முழுவதும் தழுவித் தந்திரங்கள் பல செய்தாய். அனைத்தையும் அழிக்கும் கோபத்தை உடைய காலனைச் சிதைத்தவனுடைய சிற்றம்பலத்தை வணங்காதவர்கள் சென்று வாழும் வெம்மையான காட்டைத் தலைவனுடன் நீ கடந்து செல்லுவதற்காகச் செய்தாய் போலும் (என்று செவிலி வருந்தினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: முறுவல் — சிரிப்பு, வலக்காரம் — பல தந்திரங்கள், உறுவல — வெம்மை உடைய , படர்வானாம் — செல்லுவதற்காக.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி முன்பு செய்த துன்பச் செயல்கள் ஆன்மாவுக்குப் பின்னர் அருள் வழங்கவே என்று திரோதானம் நினைப்பது.

35. அடிநினைந்திரங்கல்

கொளு: வெஞ்சுரமும் அவள் பஞ்சுமெல் அடியும்
செவிலி நினைந்து கவலை யுற்றது.

வெம்மையான காட்டையும், தலைவியின் பஞ்சு போன்ற பாதத்தையும் நினைந்து செவிலி வருந்தியது.

தாமே தமக்(கு) ஒப்பு மற்றில்
லவர்தில்லைத் தண்அனிச்சப்
பூமேல் மிதிக்கின் பதைத்தடி
பொங்கும்நங் காய்எரியும்
தீமேல் அயில்போல் செறிபரல்
கானிற் சிலம்படிபாய்
ஆமே நடக்க அருவினை
யேன்பெற்ற அம்மனைக்கே. (228)

பொருள்: தாமே தமக்கு ஒப்பாக மற்றொருவர் இல்லாத சிவபெருமானது தில்லையில் குளிர்ந்த அனிச்சப் பூவினை மிதித்தாலும் கொப்புளம் கொள்ளும் அடிகளை உடைய தலைவியே, கொழுந்து விட்டு எரியும் தீயின் மேல் பதித்த வேலைப் போலப் பருக்கைக் கற்கள் நிறைந்த பாலைவனத்தில் சிலம்பு அணிந்த பாதத்தைப் பரப்பித் தீவினையேன் பெற்ற உன்னால் நடக்க இயலுமோ (என்று செவிலி தனக்குத் தானே வருந்தினாள்.)

சொ.பொ.வி.: பொங்கும் — கொப்புளம், தீமேல் அயில் — நெருப்பில் வைத்தவேல், அடிபாய் — பாதத்தைப் பரப்பி, அருவினையேன் — செவிலித்தாய், அம்மனை — தலைவியைக் குறிக்கும் சொல்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மாவைத் தொடர்ந்து செல்லும் சிவத்தலைவியின் பெருங்கருணையை வியந்தவாறு.

36. நற்றாய்க்கு உரைத்தல்

கொளு: முகிழ்முலை மடந்தைக்கு முன்னிய(து) அறியத்
திகழ்மனைக் கிழத்திக்குச் செவிலி செப்பியது.

சிறிதாகத் தோன்றிய முலைகளை உடைய தலைவிக்கு நடந்ததை மனைக்கிழத்தியாகிய நற்றாய்க்குச் செவிலி கூறியது.

தழுவின கையிறை சோரின்
தமியம்என் றேதளர்வுற்(று)
அழுவினை செய்யுநை யாஅம்சொல்
பேதை அறிவுவிண்ணோர்
குழுவினை உய்யநஞ் சுண்(டு)அம்
பலத்துக் குனிக்கும்பிரான்
செழுவின தாள்பணி யார்பிணி
யாலுற்றுத் தேய்வித்ததே. (229)

பொருள்: தன்னைத் தழுவின கை சிறிது தளர்ந்து விலகினாலும் தான் தமியள் என நினைந்து வருந்தி அழுகின்ற தொழிலை உடைய பேதை போன்ற நம்முடைய மகளின் அறிவு — விண்ணோர் கூட்டம் வாழ்வதற்காக நஞ்சை அமுதாக உண்ட தில்லைச் சிற்றம்பலவனின் வளமான திருவடிகளைப் பணியாதவரைப் போல எங்களை வருத்தமுறச் செய்தது.

சொ.பொ.வி.: கையிறைசோரின் — கைசோர்ந்து விலகினால், நையா — வருந்தா, அம்சொல் — அழகிய சொல், செழுவின— வளமான.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி செய்த செய்கை திரோதான சக்தியை மெலிவித்ததாம்.

Koviloor Digital Library

37. நற்றாய் வருந்தல்

கொளு: கோடாய் கூற நீடாய் வாடியது.

செவிலித்தாய் கூற நற்றாய் வருந்தியது. கோடாய் — கோதாய் — செவிலித்தாய், நீடாய் — நற்றாய்.

யாழியன் மென்மொழி வன்மனப்
பேதையொ.ர் ஏதிலன்பின்
தோழியை நீத்(து)என்னை முன்னே
துறந்துதுன் னார்கண்முன்னே
வாழிஇம் மூதூர் மறுகச்சென்
றாள்அன்று மால்வணங்க
ஆழிதந் தான்அம் பலம்பணி
யாரின் அருஞ்சுரமே. (230)

பொருள்: யாழ் ஓசை போலும் மொழியினையும் வலிய மனத்தினையும் உடைய என் மகளாகிய தலைவி ஒரு அயலவன் பின்—தோழியை விட்டும், என்னை அதற்கு முன்பே விட்டும் ஊரில் உள்ளவர்கள் கலங்க — பகைவரின் முன்னே திருமால் தொழ அவனுக்குச் சக்கரம் கொடுத்த சிவபெருமானது தில்லையம்பலத்தைப் பணி யாதவர்களும் போவதற்கு அரிய காட்டைக் கடந்து சென்றாள். இனி இதனை எவ்வாறு பொறுப்பேன் என நற்றாய் கூறினாள்.

சொ.பொ.வி.: வன்மனம் — வலிமையான மனம் ஏதிலன் — அயலவன் (தலைவன்) துன்னார் — பகைவர், பணியாரின் — வணங்காதவரின்.

தத்துவப்பொருள்: அருள் சத்தியானது (பரை) சிவத்தலைவியின் நிலைகண்டு இரங்கிக் கூறியது.

38. கிளிமொழிக்கு இரங்கல்

கொளு: மெய்த்தகை மாது வெஞ்சுரம் செல்லத்
தத்தையை நோக்கித் தாய்புலம் பியது.

உண்மையான அழகைக் கொண்ட தலைவி வெம்மை யான காட்டில் செல்ல, அவள் வளர்த்த கிளியை நோக்கித் தாய் புலம்பியது.

Koviloor Digital Library

கொன்னுனை வேல்அம் பலவன்
தொழாரின்குன் றம்கொடியோள்
என்னணம் சென்றனள் என்னணம்
சேரும் எனஅயரா
என்னனை போயினள் யாண்டையள்
என்னைப் பருந்தடும்என்(று)
என்னனைப் போக்கன்றிக் கிள்ளைஎன்
உள்ளத்தை ஈர்கின்றதே. (231)

பொருள்: கொலைத் தொழிலை உடைய சூலத்தை ஏந்திய தில்லையம்பலப் பெருமானை வணங்காதவரைப் போலக் கொடுமை உடைய மலை வழியில் என் மகள் எங்ஙனம் செல்லத் துணிந்தாள்? எங்குத் தங்குவாள்? என்று கூற, (அதனைக் கேட்ட கிளிமயங்கி,) என் அன்னை போயினள் அவள் எவ்விடத்தாள்? என்னைப் பருந்து கொல்லப்போகிறதே என்று இக்கிளி சொல்லும் வார்த்தைகள் என்னுடைய மகள் போனதைவிட நெஞ்சை அறுக்கின்றதே என்று நற்றாய் கூறினாள்.

சொ.பொ.வி.: கொல் — கொலைத்தொழில், வேல் — சூலம், அடும் — கொல்லும், என்னனை — என்தலைவி, மகளைத் தாய் என்று அழைப்பதுண்டு.

தத்துவப்பொருள்: பரையாகிய அருள்சத்தி (நற்றாய்) சிவதலைவி பண்டு கொண்டு பழகிய பொருட்களை விட்டுப் பிரிவதாக வருந்தியது.

39. சுடரோடு இரத்தல்

கொளு: வெஞ்சுரத் தணிக்கெனச் செஞ்சுடர் அவற்கு
வேயமர் தோளி தாயர் பராயது.

காட்டின் வெம்மை தணியவேண்டும் என்று செஞ்சுடர் சூரியனிடத்தில் மூங்கில் போலும் தோளை உடைய தாயர் வேண்டிக் கொண்டது.

பெற்றே னொடுங்கிள்ளை வாட
முதுக்குறை பெற்றிமிக்கு

Koviloor Digital Library

நற்றேன் மொழியழல் கான்நடந்
தாள்முகம் நானணுகப்
பெற்றேன் பிறவி பெறாமற்செய்
தோன்தில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்(து)இரந்
தேன்சுடர் வானவனே. (232)

பொருள்: சூரியனாகிய தலைவனே, பெற்ற தாயாகிய யாமும் அவள் வளர்த்த கிளியும் வாட, அறிவு முதிர்ந்த தேன் போலும் மொழியினை உடையாள் வெப்பத்தை உடைய காட்டின்கண் நடந்து செல்லும் அவள் முகத்தைப் — பிறவி பெறாமல் செய்கின்ற இறைவனது தில்லைநகரின் கண் இருக்கும் அழகு பொருந்திய தேனை உடைய மலரைப் போல மலரச் செய்வாயாக. இவ்உதவியை உம்மிடத்தில் இரந்து கேட்கின்றோம் (என நற்றாய் கூறியது.)

சொ.பொ.வி.: கிள்ளை — கிளி, முதுக்குறை — அறிவு முதிர்ந்த தன்மை, தேன்மொழி — இனிய சொற்கள், அழல் — நெருப்பு, அணுக—அடைய, வானவர் — தேவர்.

தத்துவப்பொருள்: பரை சிவத்தலைவியின் பண்புக்கு இரங்கியது.

40. பருவம் நினைந்து கவறல்

கொளு: முற்றா முலைக்கு நற்றாய் கவன்றது.

இளைய முலையினை உடைய தலைவியின் பருவத்தை நினைந்து தாய் வருந்தியது.

வைம்மலர் வாட்படை யூரற்குச்
செய்யும்குற் றேவல்மற்றென்
கைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல்
லாம்தில்லை யான்மலைவாய்
மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென்(று)
எண்ணித்துண் ணென்றொளித்துக்
கைம்மல ரால்கண் புதைத்துப்
பதைக்கும்எம் கார்மயிலே. (233)

Koviloor Digital Library

பொருள்: தில்லைப் பெருமானது மலையிடத்து காந்தள் மலரைப் பாம்பு என்று கருதி அச்சமுற்று கைம் மலரால் தன்னுடைய கண்களைப் புதைத்து நடுங்கும் என்னுடைய மயில் போன்ற சாயலை உடைய, ஒளி பெற்ற கண்களை உடைய தலைவி, கூரிய வாளைப் படையாக உடைய தலைவனுக்குத் தான் செய்யத் தகுந்த குற்றவேல் பணிகளைச் செய்யவல்லவளோ? (என்று தாய் வருந்தினாள்)

சொ.பொ.வி.: வை — கூர்மை, குற்நேவல் — ஏவிய தொழில்கள், மை — கருமை, பாந்தள் — பாம்பு, துண் — அச்சம், கார்மயில்—மயில் போன்ற தலைவி.

தத்துவப்பொருள்: பரை, ஆன்மாவிடம் சிவத்தலைவி கொண்டிருக்கும் பண்பை நினைந்து கூறியது.

41. நாடத் துணிதல்

கொளு: கோடாய் மடந்தையை நாடத் துணிந்தது.

செவிலித்தாய் தலைவியைத் தேடிச் செல்வதாகத் துணிந்து கூறியது.

வேயின தோளி மெலியல்வின்
ணோர்தக்கன் வேள்வியின்வாய்ப்
பாயின சீர்த்தியன் அம்பலத்
தானைப் பழித்துமும்மைத்
தீயின(து) ஆற்றல் சிரம்கண்
இழந்து திசைதிசைதாம்
போயின எல்லையெல் லாம்புக்கு
நாடுவன் பொன்னினையே. (234)

பொருள்: தேவர்கள் தக்கனுடைய யாகத்தில் புகழை உடைய சிற்றம்பலத்தானை இகழ்ந்து கூறியதால் யாகத்தின் ஆற்றலையும், தங்களுடைய ஆற்றலையும், கண்களையும் இழந்து திசைகள் தோறும் ஓடி ஒளிந்தனர். அத்தகைய எல்லைகளில் எல்லாம் சென்று பொன் போன்ற தலைவியைத் தேடுவேன். மூங்கில் போன்ற தோளை

Koviloor Digital Library

உடைய தாயே, நீ வருந்த வேண்டாம் (என்று செவிலித்தாய் கூறினாள்)

சொ.பொ.வி.: பாயின — பரந்த, சீர்த்தி — புகழ், தீயினது ஆற்றல் — யாகத்தின் ஆற்றல் இதனை இழந்தவன் இந்திரன், கண் இழந்தவன் சூரியன், தலை இழந்தவன் அக்கினி, சிரம் — தலை.

தத்துவப்பொருள்: திரோதை, சிவத்தலைவியின் பின்னே தேடிச் செல்வேன் எனக்கூறியது.

42. கொடிக்குறி பார்த்தல்

கொளு: நற்றாய் நயந்து சொற்புட் பராயது.

நற்றாய் சோ திடம் சொல்லும் பறவைகளை வேண்டிக் கொண்டது.

பணங்கள்அஞ் சாலும் பருஅர(வு)
ஆர்த்தவன் தில்லையன்ன
மணங்கொள்அஞ் சாயலும் மன்னனும்
இன்னே வரக்கரைந்தால்
உணங்கல்அஞ் சா(து)உண்ண லாம்ஒள்
நிணப்பலி ஒக்குவல்மாக்
குணங்கள்அஞ் சாற்பொலி யும்நல
சேட்டைக் குலக்கொடியே. (235)

பொருள்: நல்ல குணங்களை விளக்குவதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் நல்ல செயல்களுக்குரிய காகமே, படங்கள் ஐந்தினைக் கொண்ட பாம்பினை அணிந்தவனது தில்லையைப் போலும் நறுமணம் மிக்க அழகிய சாயலை உடைய தலைவியும், மன்னனாகிய தலைவனும் மீண்டும் இங்கு வரும் வண்ணம் நீ கரைந்தால் மீன் வற்றலை அஞ்சாது இருந்து உண்ணலாம். தெய்வத்திற்குக் கொடுக்க வேண்டிய நல்ல ஊன் உணவை உனக்குப் பலியாக வைப்பேன் (என்று நற்றாய் கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: பணம் — படம், அரவு — பாம்பு, மணங் கொள் என்பதற்கு இயற்கையாக மணந்து கொண்ட என்ற பொருளும் உண்டு. மன்னன் — தலைவன், உணங்கல் — உலத்தப் பெற்ற பொருள்கள் (மீன்), நிணப்பலி—ஊன் உணவு, குணங்கள் அஞ்சு — காக்கையின் சிறந்த ஐந்து குணங்கள். 1. மறைந்த புணர்ச்சி 2. மனம் கலங்காமை, 3. காலம் போற்றுதல், 4. தொலை தூரப் பொருள்களைக் காணுதல் 5. சோம்பலின்மை, சேட்டை — இறகுகளை அசைக்கும் செயல்.

43. சோதிடங் கேட்டல்

கொளு: சித்தம் தளர்ந்து தேடும் கோடாய்
உய்த்துணர் வோரை உரைமின் என்றது.

மனம் தளர்ந்து தலைவியைத் தேடும் செவிலி உய்த்து உணர்ந்து கூறும் வல்லவர்களிடம் உதவியாகச் சொல்லு வீர்களாக என்று கூறியது.

முன்னும் கடுவிடம் உண்டதென்
தில்லைமுன் னோன்அருளால்
இன்னும் கடியிக் கடிமனைக்
கேமற்(றி) யர்ம்அயர
மன்னும் கடிமலர்க் கூந்தலைத்
தான்பெறு மாறும்உண்டேல்
உன்னுங்கள் தீதின்றி ஓதுங்கள்
நான்மறை உத்தமரே. (236)

பொருள்: முன்பு பரந்தபட்ட விடத்தை உண்ட தில்லையம்பலத்தானாகிய அனைத்திற்கும் முன்னவனாகிய இறைவனது அருளால் இந்தச் சிறப்பு மிக்க மனையில் நாங்கள் திருமணத்தைச் செய்ய, நிறைந்த மணமுள்ள கூந்தலை உடையவளாகிய தலைவியைத் திரும்பப் பெறு வதற்கு இயலுமாயின் நான்கு வேதங்களையும் உணர்ந்த உத்தமர்களே, ஆராய்ந்து சொல்லுங்கள் (என்று செவிலித் தாய் வேத விற்பனர்களிடம் கேட்டாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: கடி — மணவினை, கடி — நறுமணம், கூந்தலை—தலைவியை, உன்னுதல் — ஆராய்தல், ஓதுங்கள் — கூறுங்கள், மறை — வேதம்.

தத்துவப்பொருள்: திரோதை, சிவம் அருள் வழங்க வருமோ என எண்ணியது.

44. சுவடு கண்டறிதல்

கொளு: சுவடுபடு கடத்துச் செவிலி கண் டறிந்தது.

தலைமக்கள் சென்ற சுவடு கண்டு செவிலித்தாய் கூறியது.

தெள்வன் புனற்சென்னி யோன்அம்
பலம்சிந்தி யார்இனஞ்சேர்
முள்வன் பரல்முரம் பத்தின்முன்
செய்வினை யேன்எடுத்த
ஒள்வன் படைக்கண்ணி சீறடி
இங்கிவை உங்குவைஅக்
கள்வன் பகட்டுர வோன்அடி
யென்று கருதுவனே. (237)

பொருள்: வளமான கங்கையைத் தலைமேல் கொண்ட சிவபெருமானது சிற்றம்பலத்தை வணங்காதவர் கூட்டம் போல — முள்ளையும் பரற்கற்களையும் உடைய இப்பாதை வழியின் கண் காணப்படுகிற சுவடுகள் — முற்பிறவியில் பாவ வினைகளைச் செய்த நான் எடுத்து வளர்த்த வேல் போலும் கண்களை உடையவளின் அடிச்சுவடுகள் ஆகும். அடுத்துள்ள இவை கள்வனாகிய யானை போன்ற வலிமை உடைய தலைவனின் சுவடுகள். ஆகும் இவற்றை நான் உய்த்து உணர்ந்தேன்.

சொ.பொ.வி.: புனல் — கங்கை, பரல் — கற்கள், முரம்பு — பாலை நிலம், ஒள் — ஒளி பொருந்திய, பகடு — யானை.

தத்துவப்பொருள்: திரோதை, சிவத்தின் சின்னம் கண்டது.

Koviloor Digital Library

45. சுவடு கண்டு இரங்கல்

கொளு: கடத்திடைக் காரிகை அடித்தலம் கண்டு
மன்னருள் கோடாய் இன்னல் எய்தியது.

காட்டிடத்தில் தலைவியின் அடிச்சுவட்டைப் பார்த்து அருளுடைய செவிலித்தாய் வருந்தியது.

பாலொத்த நீற்றம் பலவன்
கழல்பணி யார்பிணிவாய்க்
கோலத் தவிசின் மிதிக்கின்
பதைத்தடி கொப்புள்கொள்ளும்
வேலொத்த வெம்பரல் கானத்தின்
நின்றொர் விடலைபின்போங்
காலொத் தனவினை யேன்பெற்ற
மாணிழை கால்மலரே. (238)

பொருள்: பூப்படுக்கையின் மீது மிதித்தாலும், பால் போன்ற வெண்ணீற்றை உடைய அம்பலத்தானது திருவடியைப் பணியாதவர் கொள்ளும் வருத்தத்தைப் போல வருந்தும், அடிகள் பதைபதைத்துக் கொப்புளங்கள் கொள்ளும் — தீவினையேன் பெற்ற தலைவியினது கால்களாகிய மலர்கள், வேல் போன்ற பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டில் செல்லுவதற்கு வலிமை பெற்றன போலும். எவ்வாறு அந்த ஆற்றலைப் பெற்றன? (என்று செவிலித்தாய் வருந்தினாள்)

சொ.பொ.வி.: நீறு — திரு நீறு, பிணி — வருத்தம், தவிசு — தடுக்கு அல்லது மெத்தை, கால்மலர் — மலர்போன்ற கால்கள்.

தத்துவப்பொருள்: திரோதை, சிவத்தின் தன்மை கண்டு வருந்தியது.

46. வேட்ட மாதரைக் கேட்டல்

கொளு: மென்மலர் கொய்யும் வேட்ட மாதரைப்
பின்வரு செவிலி பெற்றி வினாயது.

Koviloor Digital Library

பொன் போன்ற மலர்களைக் கொய்யும் மகளிரைக் கண்டு செவிலித்தாய் தலைவி பற்றி வினவியது.

பேதைப் பருவம் பின்சென்
றதுமுன்றில் எனைப்பிரிந்தால்
ஊதைக்(கு) அலமரும் வல்லியொப்
பாள்முத்தன் தில்லையன்னாள்
ஏதிற் சுரத்தய லானொ(டு)இன்(று)
ஏகினள் கண்டனையே.
போதிற் பொலியும் தொழிற்புலிப்
பல்குரல் பொற்றொடியே. (239)

பொருள்: தாமரை போன்ற அழகும், புலிப்பல்லை அணிந்த கழுத்தையும் உடைய பெண்ணே, எங்கள் வீட்டு முற்றத்தில் குளிர்க்காற்றுக்கு வருந்தும் கொடியை ஒத்த என்மகள், பேதைப் பருவம் கடந்தபின் அநாதி முத்தனது தில்லையை ஒத்து விளங்கினாள். அவள் தனக்கு இயைபு இல்லாத பாலை வழியில் அயலார் ஒருவனோடு இன்று போயினாள். நீ கண்டாயோ? அவள் எவ்வாறு போயினாள்? (என்று செவிலித்தாய் கேட்டாள்)

சொ.பொ.வி.: சென்றது — நீங்கியது, முன்றில் — வீட்டு முற்றம், ஊதை — ஊதற்காற்று, அலமரல் — வருந்தும், வல்லி — கொடி, அயலான் — தலைவன், போது — தாமரைப் பூ, குரற் பொற்றொடி—வேடர்குலப் பெண்.

தத்துவப்பொருள்: திரோதை, அடியவரைக் கண்டு வினாவியது.

47. புறவொடு புலத்தல்

கொளு: காட்டுப் புறவொடு வாட்டம் உரைத்தது.

காட்டிலே வாழுகின்ற புறாவிடம் செவிலித்தாய் தன்னுடைய வருத்தத்தைக் கூறியது.

புயலன்(று) அலர்சடை ஏற்றவன்
தில்லைப் பொருப்பரசி

Koviloor Digital Library

பயலன் தலைப்பணி யாதவர்
போல்மிகு பாவம்செய்தேற்(கு)
அயலன் தமியன்அம் சொல்துணை
வெஞ்சுரம் மாதர்சென்றால்
இயலன்(று) எனக்கிற் றிலைமற்று
வாழி எழிற்புறவே. (240)

பொருள்: கங்கையைத் தன் சடையில் கொண்டவனும், தில்லைக்கண் உள்ளவனும், உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவனும் ஆகிய கூத்தனை வணங்காதவர்களைப் போல — மிகுந்த பாவம் செய்த எமக்கு அயலவனாக இருக்கின்ற தலைவனின் சொல்லையே துணையாகக் கொண்டு என்னுடைய மகள் கொடிய இந்த வழித்தடத்தில் கடந்து சென்றாள் அழகிய புறாவே இது தகுதி அன்று என்று நீ தடுக்கவில்லை, வாழ்வாயாக (என்று செவி'லித் தாய் புறாவிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: புயல் — மேகம், இங்குக் கங்கையைக் குறித்தது, அரசி — உமையவள், பயலன் — ஒரு கூறாக உடை'பவன், இயல் — தகுதி, கிற்றிலை — தடுக்கவில்லை, புறவே — புறாவே.

தத்துவப்பொருள்: திரோதை எதிர்கண்ட உயிரினத் தோடு வினவியது.

48. குரவொடு வருந்தல்

கொளு: தேடிச் சென்ற செவிலித் தாயர்
ஆடற் குரவொடு வாடி உரைத்தது.

தேடிச் சென்ற செவிலித் தாய் காற்றில் அசைந்து கொண்டிருக்கும் குராமரத்தை வினவியது.

பாயும் விடையோன் புலியூர்
அனையஎன் பாவைமுன்னே
காயும் கடத்திடை யாடிக்
கடப்பவும் கண்டுநின்று

Koviloor Digital Library

வாயும் திறவாய் குழைஎ'றில்
வீசவண்(டு) ஓலுறுத்த
நீயும்நின் பாவையும் நின்று
நிலாவிடும் நீள்குரவே. (241)

பொருள்: தளிர்களாகிய குழை அழகு செய்ய, வண்டுகள் மலர்களாகிய பாவையைத் தாலாட்ட, பாவையும் நீயுமாக விளங்குகின்ற குரவ மரமே, பாய்ந்து செல்லும் எருதேற்றினை உடைய தில்லையை ஒக்கும் எனது பாவை போல்வாள் உனக்கு முன் இந்தப் பாலை நிலத்தில் அசைந்தாடிக் கடந்து செல்லவும், அதைத் தடுக்காது இருந்தாய், அதோடு இன்னது நிகழ்ந்தது என்று எனக்குக் கூறவும் மாட்டாய். இது உனக்குத் தகுமோ (என்று செவிலித் தாய் குரா மரத்திடம் கேட்டாள்)

சொ.பொ.வி.: குரவமரத்தின் மலர் பாவை (பொம்மை) போலக் காட்சி தரும். எனவே குரவமரத்தைத் தாயாக நினைத்துப் பாடுவது தமிழ் மரபு. விடை —காளை, காயும் — வெம்மை மிகுந்த, கடத்திடை—வழியிடை, குழை — காதணி, இங்கு தளிர், ஓலுறுத்த—தாலாட்ட, குரவு — மரம்.

தத்துவப்பொருள்: திரோதை சிவத்தைப் பற்றி எங்கும் வினவியது.

49. விரதியரை வினாவல்

கொளு: வழிவரு கின்ற மாவிர தியரை
மொழிமின்கள் என்று முன்னி மொழிந்தது.

எதிரே வருகின்ற பெரும் விரதம் பூண்டவர்களைத் (தலைவியைத் தேடிச்சென்ற) செவிலி சொல்வீர்களாக என்று கேட்டுக் கொண்டது.

சுத்திய பொக்கணத்(து) என்(பு)அணி
கட்டங்கம் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி
யூர்அம் பலவர்க்குற்ற

Koviloor Digital Library

பத்தியர் போலப் பணைத்திறு
மாந்த பயோதரத்தோர்
பித்திதன் பின்வர முன்வரு
மோஓர் பெருந்தகையே. (242)

பொருள்: சுத்தி என்று கூறப்படுகின்ற கபாலத்தால் செய்யப் பெற்ற திருநீற்றுச் சம்படத்தையும், எலும்பாகிய அணியையும், மழுவாகிய படையையும், சுற்றிய சடையையும் உடையவராய், உடல் முழுவதும் மறைத்துக் கொண்டிருக்கும் பெரும் விரதம் பூண்டவர்களே, தில்லையில் எழுந்தருளியுள்ள சிற்றம்பலப் பெருமானுக்கு அன்பு பூண்டவர்களைப் போலப் பெருத்த முலைகளை உடைய ஒருத்தி தனக்குப் பின்னேவர ஒரு தலைவன் முன்னே சென்றானோ, உரையீர் (என்று செவிலித்தாய் கேட்டாள்)

சொ.பொ.வி.: சுத்திய பொக்கணம் — சிப்பியின் வடிவினைப் போலச் செய்யப்பட்ட சிறிய செப்புப் பாத்திரம். இதனைச் சம்படம் என்பர். இதனைத் தலையோட்டினால் செய்துகொள்வது விரதியர் மரபு. கட்டங்கம் — திரிசூலம், சூழ்சடை — சுருண்ட சடை, பொத்திய—போர்த்திய, பத்தியர் — பக்தியுடையவர், பணைத்து—பெருத்து, பயோதரம் — முலை, பித்தி— தலைவி.

தத்துவப்பொருள்: திரோதை தவத்தவரை வினவியது.

50. வேதியரை வினாவல்

கொளு: மாதின்பின் வரும் செவிலி
வேதியரை விரும்பி வினாயது

உடன்போக்கில் தலைவியைத் தேடிவரும் செவிலித்தாய் வேதியர்களை வினவியது.

வெதிரோய் கரத்துமென் தோல்ஏய்
சுவல்வெள்ளை நூலிற்கொண்மூ
அதிரேய் மறையின்இவ் வாறுசெல்
வீர்தில்லை அம்பலத்துக்

Koviloor Digital Library

கதிரேய் சடையோன் கரமான்
எனஒரு மான்மயில்போல்
எதிரே வருமே சுரமே
வெறுப்பவொர் ஏந்தலொடே. (243)

பொருள்: மூங்கில் கோல் ஏந்திய கையினையும், மான் தோல்உடுத்தியும் , வெள்ளைப் பூணூலை அணிந்தும் மேகம் முழங்குவது போல வேதங்களைக் கூறியும் உடையவர் களாகி இவ்வழியில் செல்லும் அந்தணர்களே, ஒருத்தி தில்லையம்பலப் பெருமான் கையிலுள்ள மானின் பார்வை போன்ற நோக்குடையவளாய், மயில் போலும் சாயலை உடையவளாய், எல்லோரையும் வருத்தும் காடு இவளைக் கண்டு வருத்தமுற ஒரு தலைவனோடு நும் எதிர் வந்தாளோ? நீர் பார்த்தீரோ உரைமின் (என்று செவிலித்தாய் கேட்டாள்)

சொ.பொ.வி.: வெதிர் — மூங்கில், மென்தோல் — மான் தோல், சுவல் — கழுத்தின் பிடரிப்பகுதி, வெள்ளை நூல்— பூணூல், கொண்மூ — மேகம், சுரம் — காடு.

தத்துவப்பொருள்: திரோதை கற்றாரைச் சென்று வினவியது.

51. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல்

கொளு: புணர்ந்து டன்வரும் புரவலன் ஒருபால்
அணங்கமர் கோதையை ஆராய்ந்தது.

(எதிரே வருகின்ற) தலைவன் தலைவி இருவருள் தலைவன் தன் பக்கத்தில் வரும் நறுநாற்றம் உடைய மாலை யினை அணிந்த தலைவியைக் கேட்டது.

மீண்டார் எனஉவந் தேன்கண்டு
நும்மைஇம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயின
ரேபுலி யூர்எனைநின்(று)
ஆண்டான் அருவரை ஆளியன்
னானைக்கண் டேன்அயலே

Koviloor Digital Library

தூண்டா விளக்னை யாய்என்னை
யோஅன்னை சொல்லியதே. (244)

பொருள்: உங்களைக் கண்டு எம் தலைவியும் தலைவனும் மீண்டார் என மகிழ்ந்தேன். (ஆனால் நீங்கள் வேற்றவர் என்பதை உணர்ந்தேன், உங்களைப் போன்று மேன்மை தங்கிய இருவர் முன் சென்றனரோ, உரைமின் என்று எதிர் ஊரிலிருந்து வந்த தலைவன் தலைவியைப் பார்த்துச் செவிலி கேட்டாள்) (அதற்கு எதிர்வந்த தலைவன்) தில்லையின் கண் இருக்கின்ற அடியேனையும் ஒரு பொருளாக மதித்து ஆட்கொண்ட தில்லையம்பலப் பெருமானது மலையில் வாழுகின்ற சிங்கம் போன்ற ஒருவனை நான் கண்டேன் (என்று செவிலியிடம் கூறி விட்டுத் தன் காதலியை நோக்கி) தூண்டா விளக்கனை யாய் அவன் பக்கத்தில் வந்ததாக அன்னை கேட்பது யாது? அவளுக்கு அதனைச் சொல்வாயாக (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: நும்மை — எதிரில் வந்த தலைவன் தலைவியை, மேதகவு— உருவமும் செயலும் ஒத்தவர்கள், அருவரை — மலை, ஆழி — சிங்கம், தூண்டா விளக்கு –– எதிர்வந்த தலைவி.

தத்துவப்பொருள்: திரோதை அருள்பெற்ற அடியார் களைக் கேட்டது.

52. வியந்துரைத்தல்

கொளு: வேங்கை பட்டதும் பூங்கொடி நிலையும்
நாடா வரும் கோடாய் கூறியது.

வழியில் ஒரு புலி இறந்து பட்டதைக் கண்டு தன் மகள் நிலையைத் தேடி வந்த செவிலித் தாய் நினைந்து கூறியது.

பூங்கயி லாயப் பொருப்பன்
திருப்புலி யூரதென்னத்
தீங்கை இலாச்சிறி யாள்நின்ற(து)
இவ்விடம் சென்றெதிர்ந்த

Koviloor Digital Library

வேங்கையின் வாயின் வியன்கைம்
மடுத்துக் கிடந்தலற
ஆங்(கு)அயி லாற்பணி கொண்டது
திண்திறல் ஆண்தகையே. (245)

பொருள்: பொலிவுடைய கயிலை மலையை உடையவனது தில்லையைப் போலத் தீங்கில்லாத சிறியவளாகிய என்மகள் நின்ற இடம் இது. தன்னோடு எதிர்த்த புலியை அதன் வாயில் கையினைப் புகுத்தி அது அலறும் வண்ணம் தன் வேலினால் அப்புலியைத் தலைவன் கொன்ற இடம் அது. எனவே என் மகளும் அவள் தலைவனும் இந்த வழியில்தான் சென்றுள்ளார்கள் (என்று செவிலித்தாய் கூறிக் கொண்டாள்)

சொ.பொ.வி.: பொருப்பன் — மலையை உடையவன், தீங்கை—பழியை, மடுத்து—புகுத்தி, கிடந்து—கீழேவிழுந்து, அயில் — வேல், ஆண்டகை — தலைவன்.

தத்துவப்பொருள்: திரோதை ஆன்மாவின் பெருமையையும் சிவத்தின் அருளையும் வியந்து கூறியது.

53. இயைபு எடுத்துரைத்தல்

கொளு:சேயிழையோடு செம்மல் போதர
ஆயிழை பங்கன்என்(று) அயிர்த்தேம் என்றது.

(எதிரில் வந்தவர்கள்) அழகு பொருந்திய அணிகலன்களை உடைய தலைவியோடு தலைவன் சென்றதைப் பார்த்து உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட சிவனாகவே கண்டு மகிழ்ந்தோம் என்று கூறியது.

மின்தொத்(து) இடுகழல் நூபுரம்
வெள்ளைசெம் பட்டுமின்ன
ஒன்(று)ஒத் திடவுடை யாளொ(டு)ஒன்
றாம்புலி யூரன்என்றே
நன்(று)ஒத் தொழிலைத் தொழவுற்
றனம்என்ன தோர்நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனம்அன்னை
நீசொன்ன கொள்கையரே. (246)

Koviloor Digital Library

பொருள்: அன்னையே, நீ கூறும் கொள்கை உடையவர்களை மலைகளின் நடுவே கண்டோம். இருவரும் தம்முள் ஒன்றிச் சென்றதால் அவனுடைய வீரக்கழலும் அவளுடைய சிலம்பும் இடி போன்ற ஒலியை உண்டாக்கின. அவனது வெண்பட்டும், அவளது செம்பட்டும் மின்னி ஒரே வடிவாகத் தோன்றியது. இதனால் எல்லாவற்றையும் உடையவளாகிய உமாதேவியோடு ஒரே வடிவாய்த் திகழும் தில்லைச் சிற்றம்பலத்தான் என்றே கருதி நாங்கள் அவர்களை மனம் ஒன்றித் தொழ நினைத்தோம். அந்த அழகை எங்களால் வருணித்துச் சொல்ல முடியாதாம்.

சொ.பொ.வி.: மின்தொத்து — மின்னலின் கொத்தினை ஒத்து, கழல் — வீரக்கழல், நூபுரம் — சிலம்பு, எழில் — அழகான தோற்றத்தை., நீ சொன்ன கொள்கையர் — நீ கேட்ட தலைவன் தலைவியர்.

தத்துவப்பொருள்: தலைவனும் தலைவியும் சிவவடிவாகத் தோன்றியதை அனுபவித்தவர் கூறியது.

54. மீள உரைத்தல்

கொளு: கடுங்கடம் கடந்தமை கைத்தாய்க்(கு) உரைத்து
நடுங்கன்மின் மீண்டும் நடமின் என்றது.

தலைவனும் தலைவியும் அருமையான காட்டைக் கடந்து சென்றனர் என்று செவிலித் தாய்க்கு உரைத்து இனிமேல் நீ அஞ்சாதே மீண்டு உமது ஊருக்குப் போ என்று வழியில் கண்டவர் கூறியது.

மீள்வது செல்வதன்(று) அன்னைஇவ்
வெங்கடத்(து) அக்கடஙூக்
கீள்வது செய்த கிழவோ
னொடுங்கிளர் கெண்டையன்ன
நீள்வது செய்தகண் ணாள்இந்
நெடுஞ்சுரம் நீந்தியெம்மை
ஆள்வது செய்தவன் தில்லையின்
எல்லை அணுகுவரே. (247)

Koviloor Digital Library

பொருள்: கெண்டை மீன் போன்ற நீண்ட கண்களை உடைய தலைவி இந்தக் கொடிய பாலை நிலத்தில் கடமாவாம் யானையைப் பிளந்த தலைவனோடு நடந்து துன்பம் இன்றிச் சென்றவள் எம்மை ஆட்கொண்ட சிற்றம்பலத்தானின் தில்லையின் எல்லையை நணுகுவள். அதனால் அன்னையே நீ மீள்வதே பொருத்தமாகும். தேடிச் செல்லுதல் வேண்டாம் (என்று வழிப்போவார்) கூறினர்.

சொ.பொ.வி.: மீள்வது — திரும்பிப்போவது, கடமா — யானை, கீள்வது — பிளத்தல், கெண்டை — மீன், நீந்தி — கடந்து.

தத்துவப்பொருள்: ஆன்மாவும் சிவமும் சிவனருள் பெற்றிடுவர் என்று அனுபவித்துக் கூறியது.

55. உலகியல்பு உரைத்தல்

கொளு: செவிலியது கவலை தீர
மன்னிய உலகியல் முன்னி உரைத்தது

செவிலித்தாயின் வருத்தம் தீர உலகத்தின் இயல்பை வழிப் போக்கர் எதிர்ப்பட்டுக் கூறியது.

சுரும்பிலர் சந்தும் தொடுகடல்
முத்தும்வெண் சங்கும்எங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்(கு)அணி
யாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன்
சிற்றம் பலம்அனைய
கரும்பன மென்மொழி யாரும்அந்
நீர்மையர் காணுநர்க்கே. (248)

பொருள்: வண்டுகள் மொய்க்கும் சந்தனமும், கடலின் கண் எடுத்த முத்துக்களும், வெண்சங்கும் (தங்களுக்குள் இருக்காது) எந்த நாட்டில் உள்ளவர் விரும்புகிறார்களோ அவர்களுக்கு அணிகலன்களாக விளங்கும். கங்கையாகிய பெரும்புனலைத் தலைக்கு அணியாகச் சூடுகின்ற இறைவனது சிற்றம்பலத்தை ஒத்த அரும்புபோல் மெல்லிய

Koviloor Digital Library

மொழிகளை உடைய மகளிரும் ஆராய்ந்து பார்த்தால் அத்தன்மையரே, நீ கவலைப்படுதல் வேண்டாம் (என்று செவிலிடம் வழிப்போக்கர் கூறினர்)

சொ.பொ.வி.: சந்தனம், முத்து, சங்கு உள்ளிட்ட பொருள்கள் தோன்றிய இடத்திற்கு இன்பத்தைத் தராது அணிபவரகளுக்கே இன்பத்தைத் தரும். அதுபோல மகளிரும் பெற்றவர்க்கு இன்பத்தைத் தராது உற்றார்க்கு உரியார் ஆவார் என்ற உலக இயல்பு கூறப்படுகிறது. சுரும்பு இவர் — வண்டுமொய்க்கின்ற, தொடுகடல் — ஆழமாய்த் தோண்டப்பட்ட கடல், மெய்க்கு — உடம்பிற்கு, கரும்ப ன— கரும்பு போன்ற, நீர்மையர் — தன்மையர்.

தத்துவப்பொருள்: பெற்ற சிவனருளைப் பிறர்க்கும் உரியதாக ஆன்மாவும் சிவத்தலைவியும் அருளியது.

56. அழுங்கு தாய்க்கு உரைத்தல்

கொளு: செழும்பணை அணைந்தமை
அழுங்கு தாய்க்கு உரைத்தது.

(தலைவனும் தலைவியும்) வளமான மருதநிலமாகிய ஊரை அடைந்தனர் என்று வருந்தும் நற்றாய்க்குச் செவிலி கூறியது.

ஆண்(டு)இல் எடுத்தவ ராம்இவர்
தாம்அவர் அல்குவர்போய்த்
தீண்டில் எடுத்தவர் தீவினை
தீர்ப்பவன் தில்லையின்வாய்த்
தூண்டில் எடுத்தவ ரால்தெங்கொ(டு)
எற்றப் பழம்விழுந்து
பாண்டில் எடுத்தபஃ றாமரை
கீழும் பழனங்களே. (249)

பொருள்: தலைவன் தான் அங்குள்ள தமது வீட்டில் எடுத்து அன்புடன் வளர்த்த தாயரை உடையவர் போலும். அவர் யாவராயினும் அமையட்டும். யாரும் தம்மை அணுகில் அவர்களின் தீவினையைத் தீர்ப்பவனாம்இறைவ

Koviloor Digital Library

னின் தில்லையின்கண் தூண்டில் போட்ட பொழுது அதனை விழுங்கிய வரால் மீன் தென்னை மரத்திலுள்ள பழத்தை மோத, அந்தப் பழமானது விழுந்து கிண்ணம் போலும் பூக்களைக் கொண்ட தாமரையைக் கிழிக்கும் வயல்களை உடைய அவன் ஊருக்கு நம்மகள் சென்று சேர்வாள். நீ கவலற்க (என்று செவிலி நற்றாய்க்கு உரைத்தாள்)

சொ.பொ.வி.: ஆண்டு இல் — அங்குள்ள வீட்டில், எடுத்தாராம் — அன்புடன் வளர்க்கப் பட்டவராம், அல்குவர் — தங்குவர், தீண்டில் — அணுகில், வரால் — மீன், தெங்கு — தென்னைமரம் , எற்ற — மோத, பழம் — தேங்காய், பாண்டில் — கிண்ணம்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியும் ஆன்மாவும் சிவனருள் பெற்றிட அதனை அணுகினர் என்று திரோதை பரையிடம் கூறியது.

உடன்போக்கு முற்றிற்று

17. வரைவு முடுக்கம்

தோழி தலைவன் தலைவி இருவரையும் திருமணம் செய்து கொள்ளும்படியாகத் தூண்டுதல் ஆகும். இது உடன்போக்கு நிகழ்ந்தவழி தோழியின் செய்கையாக அமையும். இது பதினாறு துறைகளை உடையது.

1. வருத்தமிகுதி கூறி வரைவு கடாதல்

கொளு: இரவுக் குறியிடத்(து) ஏந்திழைப் பாங்கி
வரைவு வேண்டுதல் வரவு ரைத்தது.

இரவுக் குறியிடத்து வந்த தலைவனிடம் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வரும் படியாகத் தோழி கூறியது.

எழுங்குலை வாழையின் இன்கனி
தின்(று)இள மந்திஅந்தண்

Koviloor Digital Library

செழுங்குலை வாழை நிழலில்
துயில்சிலம் பாமுனைமேல்
உழுங்கொலை வேல்திருச் சிற்றம்
பலவரை உன்னலர்போல்
அழுங்குலை வேலன்ன கண்ணிக்(கு)என்
னோநின் னருள்வகையே. (250)

பொருள்: தோன்றுகின்ற குலைகளை உடைய வாழையின் இனிய கனிகளைத் தின்று இளம் குரங்குகள் வளமான குலைகளை உடைய வாழையின் நிழலிலே உறங்கும் மலை நாட்டை உடையவனே, போர்க்களத்தில் கொலைத் தொழிலை நன்கு செய்கின்ற மூவிலைச் சூலத்தை ஏந்திய சிற்றம்பலத்தானை எண்ணாதவரைப் போல வருந்துகின்ற, உலைக் களத்தில் அடிக்கப் படுகின்ற வேல் போலும் கூரிய கண்களை உடைய தலைவிக்கு நினது அருள் யாது? நீ இவ்வாறு இரவுக்குறிக்கு மட்டும் வருவது மருந்தாகாது (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: எழுங்குலை — தோன்றியகுலை, செழுங் குலை— முதிர்ந்த குலை முனை — போர்முனை, வேல் — சூலம், அழுங்கும் — வருந்தும், உலை — உலைக்களம்.

தத்துவப்பொருள்: சிவத்தின் நிலையைக் கூறி ஆன்மா இன்பம்பெற வழிகாட்டியது.

2. பெரும்பான்மை கூறி மறுத்தல்

கொளு: குலம்பரி கொம்பர்க்குச் சிலம்பன் செப்பியது.

அழகிய வஞ்சிக் கொடியை ஒத்த தோழிக்குத் தலைவன் சொல்லியது.

பரம்பயன் தன்னடி யேனுக்குப்
பார்விசும் பூடுருவி
வரம்பயன் மாலறி யாத்தில்லை
வானவன் வானகஞ்சேர்
அரம்பையர் தம்மிட மோஅன்றி
வேழத்தின் என்புநட்ட

Koviloor Digital Library

குரம்பையர் தம்மிட மோஇடம்
தோன்றும்இக் குன்றிடத்தே. (251)

பொருள்: இம்மலையிடத்தே தோன்றுகின்ற இந்த இடம்அனைத்துப் பொருளுக்கும் அப்பாலாய் இருந்தாலும் அடியவனாகிய எனக்கு எளிதில் கிடைப்பவனும், விண்ணையும் மண்ணையும் கடந்தவனும், பிரமன், திருமால் ஆகிய தேவர்களால் அறியமுடியாத பெருமை உடையவனும் ஆகிய தில்லையின்கண் தருளியுள்ள இறைவனது வானகத்தைச் சேர்ந்த தெய்வ மகளிரது இடமோ— அல்லது யானைத் தந்தங்களை வேலியாக நட்ட வீடுகளை (குடில்களை) உடைய குறத்தியர் இடமோ? கூறுவாயாக (என்று தலைவன் தோழியிடம் கேட்டான்.)

சொ.பொ.வி.: இவ்வாறு தலைவி வாழும் இடத்தைக் கேட்பதால் தலைவியின் பெருமையைக் —கூறித் தன்னால் அவளை எளிதாகத் திருமணம் செய்து கொள்ள இயலாது என்று தலைவன் கூறிய கருத்து பெறப்படுகிறது. பரம் — எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன், பார் — மண்ணகம், விசும்பு — விண்ணகம், வரம்பு — பெருமை, அயன் — நான்முகன், மால் — திருமால், வேழம் — யானை, என்பு — தந்தம், குரம்பையர் — குறத்தியர்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தின் பெருமையை எடுத்துத் திருவருளுக்குத் கூறியது.

3. உள்ளது கூறி வரைவு கடாதல்

கொளு: இன்மை உரைத்த மன்ன னுக்கு
மாமழை நோக்கித் தோழி உரைத்தது.

இல்லாத ஒன்றைக் கூறிய தலைவனுக்குக் குளிர்ந்த கண்ணை உடைய தோழி கூறியது.

சிறார்கவண் வாய்த்த மணியிற்
சிதைபெருந் தேனிழும்என்(று)
இறால்கழி (வு)ற்றுஎம் சிறுகுடில்
உந்தும் இடமி((து) எந்தை

Koviloor Digital Library

உறாவரை யுற்றார் குறவர்பெற்
றாளும் கொடிச்சி உம்பர்
பெறாஅருள் அம்பல வன்மலைக்
காத்தும் பெரும்புனமே. (252)

பொருள்: சிறுவர்களது கவண்கல்லில் வைத்து அடித்த மணியினால் சிதைந்த தேனானது தேனடையிலிருந்து நீங்கி எமது சிறு குடிலை (வீட்டை) தள்ளும் இடமாகிய இவ் விடம் எமது தந்தையது இடமாகும். எமக்கு உறவினர் குறவர்கள், பெற்றவள் கொடிச்சி, நாங்கள் தேவர்கள் அடைய முடியாத அருளை உடைய தில்லை அம்பல வாணனின் மலைக்கண் உள்ள தினைப் புனத்தைக் காவல் புரிகிறோம், நீ திருமணம் வேண்டாமைக்காக எங்களைப் புனைந்து உரைக்க வேண்டாம் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: இறால் — தேனடை, குடில் — வீடு, உந்தும் — தள்ளும் (தேன் மிகுதி கூறப்படுகிறது). உறாவரை — ஏறமுடியாத மலை, (பிறருக்கு உரியது ஆகாத மலை) பெற்றாள் — தாய்.

தத்துவப்பொருள்: ஆன்மாவுக்கு இன்பத்திற்குரிய இடம் அருளே ஆகும் என்று திருவருள் கூறியது.

4. ஏதங்கூறி இரவரவு விலக்கல்

கொளு: இரவரு துயரம் ஏந்தலுக்(கு) எண்ணிப்
பருவரல் எய்திப் பாங்கி பகர்ந்தது.

தலைவன் இரவுக் குறிக்கண் வருகின்ற துயரத்தை நினைந்து தோழி தலைவனுக்கு உரைத்தது.

கடந்தொறும் வாரண வல்சியின்
நாடிப்பல் சீயம்கங்குல்
இடம்தொறும் பார்க்கும் இயவொரு
நீஎழில் வேலின்வந்தால்
படந்தொறும் தீஅர வன்னம்
பலம்பணி யாரின்எம்மைத்

Koviloor Digital Library

தொடர்ந்தொறும் துன்(பு)என் பதேஅன்ப
நின்னருள் தோன்றுவதே.

(253)

பொருள்: பல சிங்கங்கள் யானையாகிய உணவைத் தேடி இரவில் காடுகள் தோறும் வழிகள் தோறும் சென்று பார்க்கும் இந்த வழியில் தனி ஆளாகிய நீ வேலைத் துணையாகக் கொண்டு வருகிறாய் தலைவனே அவ்வாறு வந்து. — பாம்பினை அணிந்த தில்லைச் சிற்றம்பலனது அம்பலத்தைப் பணியாதவர்களைப் போல எம்மை விடாது தொடர்ந்து வருத்தும் துன்பத்தைத் தருவதுதான் நின் அருளோ? (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: இதனால் இரவில் வரவேண்டாம் என்று கூறியதும் ஆயிற்று. கடம் — காடு, வாரணம் — யானை, வல்சி—உணவுக்காக, சீயம் — சிங்கம், படந்தொறும் — பாம்பின் படம், அரவன் — பாம்பை உடையவன்.

தத்துவப்பொருள்: சிவத்திடம் இன்பத்தை அடைய இரவு இல்லை என்று திருவருள் ஆன்மாவுக்கு உரைத்தது.

5. பழி வரவுரைத்துப் பகல்வரவு விலக்கல்

கொளு: ஆங்ஙனம் ஒழுகும் அடல்வேல் அண்ணலைப்
பாங்கி ஐய பகல்வரல் என்றது.

இரவுக்குறியில்லாது பகற்குறியில் வருகின்ற கொலை வேலைக் கையில் ஏந்திய தலைவனை, தோழி நோக்கிப் பகல் நேரத்திலும் வாராதே என்று கூறுதல்.

களிறுற்ற செல்லல் களைவயின்
பெண்மரங் கைஞ்ஞெமிர்த்துப்
பிளிறுற்ற வானப் பெருவரை
நாட, பெடைநடையோ(டு)
ஒளிறுற்ற மேனியன் சிற்றம்
பலம்நெஞ் சுறாதவர்போல்
வெளிறுற்ற வான்பழியாம் பகல்
நீசெய்யும் மெய்யருளே (254)

Koviloor Digital Library

பொருள்: வழுக்குப் பாறையின் கண் அகப்பட்டு ஆண்யானை பெற்ற துன்பத்தைத் தீர்க்கப் பெண் யானை மரத்தைக் கையால் முறித்தப் பிளிறும். இத்தகைய வானத்தைத் தொடுகின்ற உயர்ந்த மலையை உடைய தலைவனே, அன்னம் போன்ற நடையை உடைய உமா தேவியுடன் விளங்கும் திருமேனியை உடைய சிவ பெருமானின் தில்லைச் சிற்றம்பலத்தை நெஞ்சாலும் நினையாதரைப் போல — யாம் துன்பப்படும்படி நீ வருவதால் ஏற்படும் பழி பெரிதாக அமைகிறது. இதுதான் நீ பகற்கண் வந்து எமக்குச் செய்யும் உண்மையான அருளோ?

சொ.பொ.வி.: செல்லல் — துன்பம், களை — நீக்க, பெண் — பிடியானை, ஞெமிர்த்து — நீட்டி, ஒளிறுற்ற — விளங்குகின்ற, வான்பழி — பெரியபழி.

தத்துவப்பொருள்: திருவருள் ஆன்மாவை நோக்கிக் கேவல நிலையில் வாராது வரைதலாகிய சுத்தநிலையை அடைய (முத்தி) வலியுறுத்தியவாறு. (கேவலநிலை — ஆன்மா ஆணவத்தோடு மட்டும் நிற்பது, சுத்த நிலை — இறைவனோடு இரண்டறக் கலத்தல்)

6. தொழுதிரந்து கூறல்

கொளு: இரவரவின் ஏதம் ஆஞ்சிச்
சுரிதருகுழல் தோழி சொல்லியது.

இரவுக்குறியில் வருவதற்கு அச்சப்பட்டுச் சுருண்ட கூந்தலை உடைய தோழி சொல்லியது.

கழிகாண் தலைமலை வோன்புலி
யூர்கரு தாதவர்போல்
குழிகண் களிறு வெரீஇஅரி
யாளி குழீஇவழங்காக்
கழிகட் டிரவின் வரல்கழல்
கைதொழு தேயிரந்தேன்
பொழிகட் புயலின் மயிலில்
துவளும் இவள்பொருட்டே. (255)

Koviloor Digital Library

பொருள்: மண்டை ஓடுகளை மாலையாகச் சூடும் இறைவனது சிற்றம்பலத்தைக் கருதாதவர் போல அழும் கண்களை உடைய மயில் போலும் சாயலை உடைய தலைவியின் பொருட்டு — சிங்கத்திற்கும் புலிக்கும் அஞ்சி யானைகள் ஒரிடத்தேதிரண்டு நின்று போகாது அச்சுறுத்தும் இரவுப் பொழுதின் கண் வாராது ஒழி வாயாக. உன்னுடைய திருவடிகளைக் கையால் பணிந்து வேண்டுகிறேன். (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: பகலின் வாராதே என்று முன் பாடலில் கூறியதால் மீண்டும் இரவில் வந்துவிடுவானோ என்று எண்ணித் தோழி கூறியது. கழிகண்தலை — கண்கழிந்த (நீங்கிய) தலை மாலை, குழிகண்களிறு — குழி போன்ற சிறிய கண்களை உடைய யானை, கழிகண் இரவு — மிகச் செறிந்த இருள், பொழிகட்புயல் — கண்ணீர் வடியும் கண்.

தத்துவப்பொருள்: சிவத்தை எய்துவதற்கு இரவு ஏற்றதன்று. எனவே இருளைத் துணையாகக் கொள்ளாதே என்று திருவருள் ஆன்மாவிடம் சொல்லியது.

7. தாய் அறிவு கூறல்

கொளு: சிறைப்பு றத்துச் செம்மல் கேட்ப
வெறிக்குழல் பாங்கி மெல்லியற்(கு) உரைத்தது.

தலைவன் சிறப்புறமாக (ஒரு பக்கமாக மறைந்திருக்க) அவன் கேட்கும் படி மணமிக்க கூந்தலை உடைய தோழி மென்மையான இயல்பு கொண்ட தலைவிக்குத் கூறியது.

விண்ணும் செலவறி யாவெறி
யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்தில்லை மல்லெழில்
கானல் அரையிரவில்
அண்ணல் மணிநெடுந் தேர்வந்த
துண்டாம் எனச்சிறிது
கண்ணும் சிவந்தன்னை என்னையும்
நோக்கினள் கார்மயிலே. (256)

Koviloor Digital Library

பொருள்: கார்காலத்து மயிலை ஒத்தவளே, தேவர்களாலும் அடைய முடியாத நறுமணம் மிக்க திருவடியையும், தாழ்ந்த சடையையும் உடைய தீ வண்ணணாகிய சிவபெருமானது தில்லையின் அழகிய காட்டிடத்தே நடு இருள் யாமத்து மணிகள் கட்டிய நெடுந்தேர் வந்ததுண்டா? என நம் தாய் சிறிது கண் சிவந்து என்னைப் பார்த்தாள். ஆதலால் இவ்வொழுக்கத்தை (உன் காதலை) அவள் அறிந்தனள் போலும் (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: தாய் அறிந்தவள் என்பதைத் தலைவன் தெரிந்து கொள்ளுமாறு தோழி கூறினாள். விண் — தவர்கள், செலவு — சென்று அடைய முடியாத, கழல் — திருவடி, மல் — வளம் , அரையிரவு— நடுயாமம்.

தத்துவப்பொருள்: திருவருள் பரையின் பண்பை ஆன்மாவிற்கு அறிவித்ததாம்.

8. மந்திமேல் வைத்து வரைவு கடாதல்

கொளு: வரிவளையை வரைவு கடாவி
அரிவை தோழி உரைபகர்ந்தது.

வளையலை உடைய தலைவியைத் திருமணம் செய்து கொள்ளும்படியாகத் தலைவனிடம் தோழி உரைத்தது.

வான்தோய் பொழில்எழின் மாங்கனி
மந்தியின் வாய்கடுவன்
தேன்தோய்த்(து) அருத்தி மகிழ்வகன்
டாள்திரு நீள்முடிமேல்
மீன்தோய் புனற்பெண்ணை வைத்துடை
யாளையும் மேனிவைத்தான்
வான்தோய் மதில்தில்லை மாநகர்
போலும் வரிவளையே. (257)

பொருள்: நீண்ட திருமுடிமேல் மீன்கள் பொருந்திய கங்கையாகிய பெண்ணை வைத்ததோடு அனைத்தையும் உடையவளாகிய, உமையவளைத் தன் மேனியில் ஒரு

Koviloor Digital Library

பாகத்தில் வைத்த சிவ பெருமானது விண்ணைத் தொடும் மதில்களைக் கொண்ட தில்லை நகரத்தை ஒக்கும் வளையல்களை அணிந்த தலைவி — அழகு பொருந்திய சோலை யின்கண் ஆண் குரங்கு சோலையிலுள்ள மாங்கனி ஒன்றைத் தேனில் தோய்த்துப் பெண்குரங்கின் வாயில் கொடுத்து மகிழ்ந்த காட்சியைக் கண்டாள் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தோழி தலைவனிடம் இந்நிகழ்ச்சியைக் கூறி இதன்மூலம் தலைவி திருமணத்தை விரும்புகிறாள் என்ற செய்தியைப் புலப்படுத்துகிறாள். மந்தி — பெண் குரங்கு, கடுவன் — ஆண் குரங்கு, புனற்பெண்ணை — கங்காதேவி.

தத்துவப்பொருள்: சிவம் அருள்வழங்கும் நிலைக்கு உரியதாய் நிற்கும் தன்மையை ஆன்மாவிற்குத் திருவருள் உரைத்தது.

9. காவல்மேல் வைத்துக் கண் துயிலாமை கூறல்

கொளு: நகர் காவலின் மிகுகழி காதல்

நகரத்தைக் காப்பவரின் காவல் பற்றிச் சிறந்த அன்பாலே தோழி சொல்லியது.

நறைக்கண் மலிகொன்றை யோன்நின்று
நாடக மாடுதில்லைச்
சிறைக்கண் மலிபுனல் சீர்நகர்
காக்கும்செவ் வேல்இளைஞர்
பறைக்கண் படும்படும் தோறும்
படாமுலைப் பைந்தொடியாள்
கறைக்கண் மலிகதிர் வேற்கண்
படாது கலங்கினவே. (258)

பொருள்: நறுமணம் பொருந்திய தேன் பெருகும் கொன்றை மலரை அணிந்த சிவபெருமான் நடம் புரியும் தில்லை நகரில் உள்ள அணையில் — தேங்கி நிற்கும் அணை நீரைக் காக்கின்ற, நகரை இரவில் காக்கும் சிறந்த

Koviloor Digital Library

வேலை உடைய காவலர் பறையடித்து ஒலி எழுப்பும் தோறும் அழகு பொருந்திய முலையை உடைய தலைவி யின் வேல் போன்ற கண்கள் உறங்காது கலங்கின (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: நரைக்கண் — வளமிக் தேன், சிறை — அணை, புனர் — நீர், இளைஞர் — காவலர், படாமுலை — பெருத்தமுலை, படாது — தூங்காது.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை அடைய இடையூறு உண்டு என்று திருவருள் கூறியது.

10. பகல் உடன்பட்டாள் போன்று இரவு விலக்கல்

கொளு: விரை தரு தாரோய் இரவரல் என்றது.

மணம் மிக்க மாலையை உடைய தலைவனே, இரவில் வாராதே என்று தோழி கூறியது.

கலரா யினர்நினை யாத்ததில்லை
அம்பலத் தான்கழற்(கு)அன்
பிலரா யினர்வினை போலிருள்
தூங்கி முழங்கிமின்னிப்
புலரா இரவும் பொழியா
மழையும்புண் ணில்நுழைவேல்
மலரா வரும்மருந் தும்இல்லை
யோநும் வரையிடத்தே. (259)

பொருள்: கீழ்நிலையில் உள்ளவர்கள் நினையாத தில்லைச் சிவபெருமானின் திருவடிகளே நமக்குப் புகலிடம் என்று நினைந்து அன்பு செய்யாதவரின் வினைபோல இருள் செறிந்திருக்கின்ற இந்தப் பொழுதில் தோன்றுகின்ற மின்னலும் இடித்துப் பெய்யும் மழையும் புண்ணில் நுழைந்த வேல் போலத் தீமையாய் உள்ளன. இதற்கு ஒரு மருந்து உம் மலையில் இல்லையா? (என்று தோழி கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: புண்ணில் வேல் நுழைந்தது போல ஏற்கனவே காதல் வெளிப்பட்டுள்ள பழியில் தலைவன் இரவில் வருகின்ற அச்சம் மேலும் துன்பத்தைத் தருகின்றது என்று கூறி இதற்கு வேறு மருந்தில்லையா என்று கேட்டுத் தோழி திருமணத்தை வற்புறுத்துகிறாள். கலர் — மயக்க முடைய கீழ்மக்கள், கழற்கு அன்பிலார் — திருவடியில் அன்பில்லாதவர், நூங்கி — செறிந்து, மலராவரும் — துன்பம் செய்யும்.

தத்துவப்பொருள்: இரவுக் குறியாகிய கேவலநிலை வேண்டாம் எனத் திருவருள் ஆன்மாவிற்கு உரைத்தது.

11. இரவு உடம்பட்டாள் போன்று பகல்வரவு விலக்கல்

கொளு: இகலடு வேலோய் பகல்வரல் என்றது.

கொல்லுகின்ற வேலை உடைய தலைவனைப் பார்த்துப் பகலும் சந்திக்க வாராதே என்று தோழி சொல்லியது.

இறவரை உம்பர்க் கடவுட்
பராய்நின்(று) எழிலியுன்னிக்
குறவரை ஆர்க்கும் குளிர்வரை
நாட கொழும்பவள
நிறவரை மேனியன் சிற்றம்
பலம்நெஞ்(சு) உறாதவர்போல்
உறவரை மேகலை யாட்(கு) அல
ராம்பகல் உன்னருளே. (260)

பொருள்: மழை தொடர்ந்து பெய்யாததால் மழை பெய்வதற்காக மழைத் தெய்வங்களை வணங்கிக் குறவர்கள் ஆரவாரம் செய்கின்ற மலையை உடைய நாட்டினை உடையவனே, செழுமை பொருந்திய பவளம் போன்ற நிறத்தை உடைய திருமேனியைக் கொண்ட சிவபெருமானது திருவடியை நினையாதவர்களைப் போல நாங்கள் வருந்த — மேகலை அணிந்த தலைவிக்கு உன்னுடைய பகல் வரவு அருள் மிக்க அலராகின்றது. ஆதலால் நீ வாராதே (என்று தோழி கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: உம்பர் — மலைமேல், பராய் — வணங்கி, எழிலி— (மேகம்)மழை, உன்னி — நினைந்து, உறவரை — உற்ற இடைக்கு, அலர் — காதல் வெளிப் பட்டுக் கூறும் சொல்.

தத்துவப்பொருள்: சிவத்தை அடைய ஆன்மா கேவலத்திலிருந்து சகலத்திற்கு வருதலையும் அதனால் ஏற்படும் துன்பத்தையும் திருவருள் கூறியது. (சகலம் — வினையின் பயனால் உரிய உடம்பொடு வாழும் நிலை.)

12. இரவும் பகலும் வரவு; விலக்கல்

கொளு: இரவும் பகலும் வரவொழி கென்றது.

தலைவனை நோக்கி இரவிலும், பகலிலும் வாராதே என்று தோழி கூறியது.

சுழியா வருபெரு நீர்சென்னி
வைத்தென்னைத் தன்தொழும்பில்
கழியா அருள்வைத்த சிற்றம்
பலவன் கரந்தருமான்
விழியா வரும்புரி மென்குழ
லாள்திறத்(து) ஐயமெய்யே
பழியாம் பகல்வரில் நீயிர(வு)
ஏதும் பயனில்லையே. (261)

பொருள்: சுழித்துக் கொண்டு வரும் கங்கையைச் சடையில் வைத்து எங்களைத் தம் தொண்டில் நீங்காது நிறுத்தி அருள் செய்கின்ற சிற்றம்பலத்தானின் கையில் உள்ள மானைப் போல விழியைக் கொண்ட மெல்லிய கூந்தலை உடைய தலைவிக்கு நீ பகலில் வந்தால் அலராகும். இரவுவரின் உன்னைச் சந்தித்தல் அருமையாகும். ஆதலால் இரண்டு பொழுதினும் வாராதே (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தொழும்பு — தொண்டு, கரம் — கை, திறத்து — அவனிடத்தில், ஐய — தலைவனே, பழியாம் — அலராம், ஏதும் பயனில்லை — சந்திக்க இயலாது.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: கேவலம் — இரவுக்குறி, சகலம் — பகற்குறி ஆகிய இரண்டு நிலையையும் விடுத்துச் சுத்த நிலையை அடையத் திருவருள் ஆன்மாவை வேண்டியது.

13. காலங்கூறி வரைவு கடாதல்

கொளு: **முந்திய பொருளைச் சிந்தையில் வைத்து**
வரைதரு கிளவியின் தெரிய உரைத்தது.

இயற்கையில் தோன்றுகின்ற பொருளைக் கண்டு சிந்தனையில் வைத்து அதன் மூலம் வலியுறுத்துகின்ற சொற்களால் தோழி உரைத்தது.

மையார் கதலி வனத்து
வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா(து) அயின்றன மந்திகள்
சோரும் இருஞ்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத்
தான்மதி யூர்கொள் வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன்
மாலையின் முன்னினவே. (262)

பொருள்: வாழைக் காட்டில் உள்ள வருக்கைப் பலாப்பழத்தின் தேனை இளம் மந்திகள் அறியாமல் உண்டு மயங்கிக் கிடக்கும் பெரிய மலைநாட்டை உடைய தலைவனே, சந்திரன் முழு நிலவாயிற்று. சிவபெருமானது தில்லையில் வளர்ந்த இள வேங்கை மரங்கள் பொன்நிற மாலை போலப் பூத்து தோன்றுகின்றன. இதனைக் காண்பாயாக. இனி உனக்கு அரியது யாது— (என்று தோழி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: வேங்கை பூத்ததாகிய இயற்கைக் காட்சியை மனதில் வைத்துக் கொண்டு மணம் செய்து கொள்வதற்குரிய காலம் வந்துவிட்டது எனத் தோழி தலைவனிடம் கூறினாள். மையார் கதலிவனம் — நெருங்கி வளர்ந்த வாழைக்காடு, வருக்கை — பலா, சிலம்பா — தலைவா, வேங்கை — வேங்கை மரம்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தை அடைவதற்கு உரிய காலம் இது என்று திருவருள் ஆன்மாவிற்குக் கூறியது.

14. கூறுவிக் குற்றல்

கொளு: ஒத்த(து) ஒவ்வா(து) உரைத்த தோழி
கொத்தவிழ் கோதையால் கூறுவிக் குற்றது.

தலைவனுடன் பொருந்தவும் பொருந்தாமலும் உரையாடிய தோழி இப்பொழுது மலர்களைஅணிந்த கூந்தலை உடைய தலைவியைக் கொண்டு அவனுக்குக் கூறுவித்தது. (கூறுவிக்க என்பது கூறுவிக் என்று நின்றது.)

தேமாம் பொழில்தில்லைச் சிற்றம்
பலத்துவிண் ணோர் வணங்க
நாமா தரிக்க நடம்பயில்
வோனைநண் ணாதவரின்
வாமாண் கலைசெல்ல நின்றார்
கிடந்தநம் அல்லல்கண்டால்
தாமா அறிகில ராயின்என்
நாம்சொல்லும் தன்மைகளே. (263)

பொருள்: தேன் பொருந்திய மாமரங்கள் நிறைந்த சோலையை உடைய தில்லைச் சிற்றம் பலத்தின் கண் தேவர்கள் வந்து வணங்கவும், நாம் விரும்பவும் நடனம் புரியும் சிவபெருமானை இடைவிடாது எண்ணாதாரைப் போல நாம் வருந்த — மேகலை கழலும் நிலை கண்டும் நமக்குத் தலையளி செய்யாது நின்ற தலைவர் நம்முடைய துன்பத்தைக் கண்டு தாமாக அறிந்துகொள்ளும் இயல்பிலர். ஆதலால் நாம் சொல்லும் சொற்களை அறிவாரோ (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: தாமே அறியார் ஆதலால் நீ சொல்லி அறிய வைஎன்று தோழி தலைவியைத் தலைவனுக்குச் சொல்லும்படியாக வைத்தாள். தேமாம் — தேன்மாமரம், நாம் ஆதரிக்க— நாம் விரும்ப, வாமாண்—அழகு பொருந்திய, கலை — மேகலை.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சுத்த நிலைக்குச் சென்று சிவத்தை நுகர வேண்டிய ஆன்மா எதையும் அறியாது நிற்கின்றதே என்று திருவருள் வருந்தியது.

15. செலவு நினைந்து உரைத்தல்

கொளு: பாங்கி நெருங்கப் பணிமொழி மொழிந்து.
தேங்கமழ் சிலம்பற்குச் சிறைப்புறக் கிளவி.

தோழி நெருங்கி வருந்திக் கூறக்கேட்ட தலைவி பல சொற்களை அவளுடன் பேசினாள். அது மணம் பொருந்திய மாலையணிந்த தலைவனுக்குச் சிறைப் புறமாகச் சொல்லும் சொல்லாக அமைந்தது.

வல்சியின் எண்கு வளர்புற்(று)
அகழமல் கும்இருள்வாய்ச்
செல்(வ)அரி தன்றுமன் சிற்றம்
பலவரைச் சேரலற்போல்
கொல்கரி சீயங் குறுகா
வகைபிடி தானிடைச்செல்
கல்லதர் என்வந்த வாறென்
பவர்ப்பெறின் கார்மயிலே. (264)

பொருள்: கார்காலத்து மயிலை ஒத்தவளே, தில்லை யம்பலத்தானின் திருவடியைச் சிந்தியாதார் போல ஆண் யானை வருந்த, சிங்கம் அதனைக் கொல்லாத வண்ணம் காக்கப் பெண் யானையானது அவ்விரண்டிற்கும் இடை யில் சென்று ஆண் யானையை மறைத்துப் பாதுகாக்கும். இந்த அரிய காட்டு வழியில் நீங்கள் எவ்வாறு வந்தீர்கள் என்று வினவுவாரைப் பெற்றால் தனக்கு, ஈசலை உணவாக உண்பதற்குக் கரடியானது உயர்ந்த புற்றை அழிக்கின்ற இம்மிகுந்த இருளில் அவ்வாறு கேட்போர் (தலைவன்) இருக்கும் இடத்தைத் தேடிச் செல்லுதல் நமக்கு அரிதன்று. அங்ஙனம் வருந்திச் செல்லுவோமாயின் மேற்கூறிய வண்ணம் நம்மை வினவுவார் இல்லையே (என்று தலைவி கூறினாள்)—

Koviloor Digital Library

சொ.பொ.வி.: வல்சி — உணவுக்காக, எண்கு — கரடி, புற்று — மண்ணால் விளைந்த புற்று, மல்கும் — செறிந்த, கரி—ஆண்யானை, சீயம் — சிங்கம், பிடி — பெண்யானை, கல்லதர் — வழி.

தத்துவப்பொருள்: சிவத்தின் கருணை வலியக் கிடைப்பதாய் இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளாத ஆன்மாவின் நிலையை எடுத்துச் சொல்லியது.

16. பொலிவழிவு வரைத்து வரைவு கடாதல்

கொளு: வரைவு விரும்பும் மன்னுயிர் பாங்கி
விரைதரு குழலி மெலிவு ரைத்தது.

தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதைப் பெரிதும் விரும்புகின்ற உயிர் போன்ற தோழி மணம் பொருந்திய குழலை உடைய தலைவியின் மெலிவை உரைத்தது.

வாரிக் களிற்றின் மருப்புகு
முத்தம் வரைமகளிர்
வேரிக்(கு) அளிக்கும் விழுமலை
நாட விரிதிரையின்
நாரிக்(கு) அளிக்கமர் நன்மாச்
சடைமுடி நம்பர்தில்லை
ஏரிக் களிக்கரு மஞ்ஞைஇந்
நீர்மைஎன் எய்துவதே. (265)

பொருள்: யானையின் கொம்புகளிலிருந்து உதிர்ந்த முத்துக்களைத் குறத்தியர்கள் கள்ளுக்கு விலையாகக் கொடுக்கின்ற சிறந்த மலைநாட்டை உடையவனே, அலைகளை உடைய கங்கையாகிய பெண் தங்குவதற் குரிய சடைமுடியைக் கொண்ட சிவபெருமானது தில்லைக் கண் உள்ளவளாகிய மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய மயிலை ஒத்த தலைவி தன்னுடைய தன்மை கெட்டு வருத்தம் எய்துவது ஏனோ? நீயே உரை என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

Koviloor Digital Library

சொ.பொ.வி.: தலைவியின் வருத்தம் கூறப்பெற்றதால் அவளின் திருமண வேட்கை வலியுறுத்தப் பெறுகிறது. யானையின் கொம்பில் முத்துக்கள் உதிரும் என்பது மரபு. வேரி—கள், நாரி — கங்கைப்பெண், ஏரி — அழகு, மஞ்ஞை — மயில்.

தத்துவப்பொருள்: சிவம் தன்னுடைய நிலைமையில் தாழ்ந்து திரோதை (செவிலி) பரை (நற்றாய்) ஆகியோருடைய காவலையும் கடந்து, ஆன்மாவிற்கு இரங்கி வந்து நிற்கவும், சுத்த நிலையை அடைய விரும்பாது ஆன்மா சகலநிலையில் நிற்பது ஏன்? என்று வினவப்படுகிறது.

வரைவு முடுக்கம் முற்றிற்று

18. வரை பொருள் பிரிதல்

தோழியால் திருமணத்திற்கு முடுக்கப்பட்ட தலைவன் திருமணத்திற்கு வேண்டும் பொருளைத் (செல்வத்தை) தேடுவதற்குத் தலைவியைப் பிரிந்து செல்லுதல். இது முப்பத்து மூன்று துறைகளை உடையது.

1. முலை விலை கூறல்

கொளு: கொலைவேற் கண்ணிக்கு விலை யிலை என்றது.

கொலை செய்யும் வேல்போன்ற கண்ணை உடைய தலைவிக்கு மதிப்பாகும் விலை இல்லை என்று தோழி கூறியது.

குறைவிற்கும் கல்விக்கும் செல்விற்கும்
நின்குலத்திற்கும் வந்தோர்
நிறைவிற்கும் மேதகு நீதிக்கும்
ஏற்பின்அல் லால்நினையின்
இறைவிற் குலாவரை யேந்திவண்
தில்லையன் ஏழ்பொழிலும்
உறைவிற் குலாநுத லால்விலை
யோமெய்ம்மை யோதுநர்க்கே. (266)

Koviloor Digital Library

பொருள்: தலைவனே வேண்டி நிற்கும் உன்னுடையகுணத்திற்கும், கல்விக்கும், உன் அருளுக்கும் உன்னுடைய குலப் பெருமைக்கும், திருமணம் பேச நீ அனுப்பிய பெரியவர்களின் பெருமைக்கும், மேன்மை மிக்க திருமண நெறிக்கும் ஆகிய இவற்றிற்காகத் தான் உன்னுடைய திருமண நினைவை ஏற்றுக் கொள்ளலாமே தவிர. எல்லா வற்றிக்கும் தலைவனும், மேருமலையை வில்லாகக் கொண்டவனும், தில்லையில் உள்ளவனுமாகிய சிவ பெருமானது ஏழு உலகத்தைத் தரினும் வில்லைப் போன்ற நெற்றியை உடைய தலைவிக்கு உண்மை விலையாகுமா? (ஆகாது என்றபடி)

சொ.பொ.வி.: பண்டைக் காலத்தில் பெண்ணுக்குப் பரிசப் பணம் அளித்துத் திருமணம் செய்து கொள்ளுதல் மரபு. இங்கு தலைவிக்குரிய பரிசப் பொருளாக எந்தப் பொருளும் அடங்காது என்று கூறப்பெறுகிறது. குறைவு — இரந்து வேண்டுதல், செல்விற்கு — அருளிற்கு, நீதி — முறை, உறைவில் — மழைக்காலத்து மின்னல் (வில்) நுதல் — நெற்றி.

தத்துவப்பொருள்: சிவத்தலைவிக்கு மாயேயம் ஆன ஏழு உலகம் தரினும் ஈடாகாது என்பது கூறப்படுகிறது.

2 வருமது கூறி வரைவுடம் படுத்தல்

கொளு: தொடுத்தன விடுத்துக் தோகை தோளெய்து
இடுக்கண் பெரிது இரவரின் என்றது.

எங்கள் இனத்தவர் அடுக்கிச் சொல்கின்ற பரிசப் பொருள்களைக் கொடுத்துத் தலைவியின் தோளைத் தழுவு வாயாக அதனை விடுத்து இரவிடத்தில் வந்தால் துன்பம் உண்டாகும் எனத் தோழி தலைவனிடத்துக் கூறினாள்.

வடுத்தன நீள்வகிர்க் கண்ணிவெண்
நித்தில வாள்நகைத்குத்
தொடுத்தன நீவிடுத் தெய்தத்
துணியென்னைத் தன்தொழும்பிற்

Koviloor Digital Library

படுத்தநன் நீள்கழல் ஈசர்சிற்
றம்பலம் தாம்பணியார்க்(கு)
அடுத்தன தாம்வரின் பொல்லா(து)
இரவின்நின் ஆரருளே. (267)

பொருள்:எங்களைத் தன் அடியார் கூட்டத்தில் உட்படுத்தி அடிமை கொள்ளும் சிவபெருமானது சிற்றம் பலத்தை வணங்காதவர்களுக்கு வரும் தீங்கு போல இரவின்கண் வருகின்ற உனக்குத் தீங்கு ஏற்படுமாயின் நீ தருகின்ற தலையளி (அருள்) எமக்குப் பொல்லாததாம். அதனால் நீண்ட கண்களையும், முத்துப் போன்ற பற்களை யும் உடைய தலைவிக்கு எம்மால் அடுக்கிக் கூறப்படும் பொருள்களை நீ அனுப்பி வரைந்து கொள்வாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: நித்திலம் — முத்து, தொடுத்தன — அடுக்கிக் கூறுவன, தொழும்பில் — அடியார் கூட்டத்தில்.

தத்துவப்பொருள்: அலர் ஏற்பட்டு பொல்லாததாய் முடிவதற்கு முன்னால் சுத்த நிலையை எய்துவதற்கு உரிய நிலையில் முயலவேண்டும் என்று திருவருள் கூறியது.

3. வரைபொருட் பிரிவை உரையெனக் கூறல்

கொளு: ஆங்க வள்வயின் நீங்கல் உற்றவன்
இன்னுயிர்த் தோழிக்கு முன்னி மொழிந்தது.

தலைவியை விட்டு நீங்குவதற்கு நினைந்த தலைவன் உயிர் போன்ற தோழியிடத்துத் தன் பிரிவைக் கூறியது.

குன்றங் கிடையும் கடந்துமர்
கூறும் நிதிகொணர்ந்து
மின்தங் கிடைநும் மையும்வந்து
மேவுவன் அம்பலம்சேர்
மன்தங்(கு) இடைமரு(து) ஏகம்பம்
வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்(று)அங்(கு) இடைகொண்டு வாடா
வகைசெப்பு தேமொழியே. (268)

Koviloor Digital Library

பொருள்: மின்னலைப் போன்ற இடையை உடையவளே, இனி மலைகளுக்கு இடையே அமைந்துள்ள இந்தக் காட்டைக் கடந்துபோய் உன் சுற்றத்தார் சொல்லும் நிதியங்களைக் கொணர்ந்து உம்மை வந்தடைவேன். அதுவரை நீ இடைமருது ஏகம்பம், வாஞ்சியம் ஆகிய தில்லைக் கூத்தப் பெருமானின் தலங்களை ஒத்த தலைவியை வாடாத வண்ணம் தேறுதல் சொல்லுவாயாக (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: கிடை — இடையில் அமைந்த காட்டு வழி, மன்—இறைவன், இடைகொண்டு — அழகு கொண்டு.

தத்துவப்பொருள்: ஆன்மா தான் முயற்சி செய்யும் வரை சிவத்தின் அருள் கிடைக்கத் திருவருளானது துணை யாக நிற்கவேண்டும் என்று திருவருளைக் கேட்டுக் கொண்டது.

4. நீயே கூறு என்றல்

கொளு: காய்திர் வேலோய் கனங்குழை அவட்கு
நீயே உரை நின்செலவு என்றது.

கொலைத் தொழிலையும் ஒளியையும் உடைய வேலை உடைய தலைவனே, மகரக்குழை அணிந்த தலைவிக்கு உன்னுடைய பிரிவை நீயே சொல்லுவாயாக என்றது.

கேழே வரையும்இல் லோன்புலி
யூர்பயில் கிள்ளையன்ன
யாழேர் மொழியாள் இரவரி
னும்பகற் சேறியென்று
வாழேன் என்இருக் கும்வரிக்
கண்ணியை நீவருட்டித்
தாழேன் எனவிடைக் கண்சொல்லி
ஏகு தனிவள்ளலே. (269)

பொருள்: ஒப்பற்ற வள்ளலே, தனக்கு உவமை இல்லாத சிவபெருமானது தில்லையின் கண் உள்ள கிளியை ஒத்த யாழிசையை ஒத்த சொற்களை உடையவள், நீ இரவின்கண்

Koviloor Digital Library

வந்தாலும் பகலின் கண் பிரிந்து செல்வாய் என்று பிரிவால் நொந்து உயிர்வாழ முடியாது என்று நினைக்கும் இளைய உள்ளம் படைத்தவள். அத்தகைய செவ்வரி படர்ந்த கண் களை உடைய தலைவியை உம் வசமாக்கிச் சமயம் பார்த்து உன்னுடைய பிரிவை நீயே சென்று கூறி விரைவில் திரும்பி வருவேன் என்று உணர்த்துவாயாக. (என்று தோழி கூறினாள்.)

சொ.பொ.வி.: கேழ்—ஒப்பு,கிள்ளை — கிளி, வரி—செவ்வரி, வருட்டி — வருடி, (வசமாக்கி) தாழேன்—காலந் தாழ்த்தேன், இடை— பிரிவு.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் மீது கொண்ட எல்லையற்ற கருணையால் சிவம் ஆன்மாவோடு கூடு வதற்கு காலம் தாழ்கிறதே என வருந்திக் கொண்டிருக்கும். அந்த வருத்தத்தை நீக்கி ஆன்மா உடன் சேரவேண்டும்.

5. சொல்லாது ஏகல்

கொளு: நிரைவளை வாட உரையா(து) அகன்றது.

நிறைந்த வளையல்களை உடைய தலைவிக்குச் சொல்லாது தலைவன் பிரிதல்

வருட்டின் திகைக்கும் வசிக்கின்
துளங்கும் மனமகிழ்ந்து
தெருட்டின் தெளியலள் செப்பும்
வகையில்லை சீரருக்கன்
குருட்டின் புகச்செற்ற கோன்புளி
யூர்குறு கார்மனம் போன்(று)
இருட்டிற் புரிகுழ லாட்(கு) எங்ங
னேசொல்லி ஏகுவனே. (270)

பொருள்: நெற்றியும் தோளும் தடவிக் கொடுத்து ஏதேனும் நான் சொல்லத் தொடங்கினால் இது எது கருதிச் சொல்கிறார் என்று மயங்கி நிற்பாள். நேரிடையாக இனிய சொல்லி வசப்படுத்த எண்ணினால் அதனைப் பார்த்து மனம் நடுங்குவாள். என்னுடைய பிரிவை உணர்த்தி

Koviloor Digital Library

விரைவில் வருவேன் என்று கூறினால் நான் சொல்லுதை மகிழ்ச்சியோடு ஏற்க மாட்டாள். ஆகவே அவளுக்குச் சொல்லும் வழி ஒன்றும் தெரியவில்லை. எல்லோருக்கும் பொருள் தெரிய வெளிச்சத்தைத் தருகின்ற பகல் என்னும் சூரியனுக்கு ஒளி குன்றும்படியாகத் தண்டனை கொடுத்த இறைவனது தில்லையை அடையாதவர் மனம் போல இருண்ட கூந்தலை உடையவளுக்கு என்னுடைய பிரிவை எவ்வாறு சொல்லிப் பிரிவேன் (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: எனவே தலைவன் சொல்லாது பிரிந்தான் ஆயிற்று. வருட்டல் — வருடி திகைக்கும் — கலங்குவாள், வசிக்கி—வசப்படுத்தி, துளங்கும் — நடுங்கும், தெருட்டின் — தாழ்த்தாது வருவேன் என்று சூள் செய்தல், செப்பும் — கூறுதல், அருக்கன் — சூரியன், குருட்டின் — ஒளி குன்றல், இருட்டில் — இரவு போன்ற கருமை.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தலைவியிடமிருந்து பிரிந்து முத்திச் சாதனங்களைப் பெற — ஏதும் சொல்லாது பிரிதல். [சாதனங்கள்—முத்திதரும் செயல்கள்]

6. பிரிந்தமை கூறல்

கொளு: தேங்கமழ் குழலிக்குப் பாங்கி பகர்ந்தது.

நறுமணம் மிக்க கூந்தலை உடையவளுக்குத் தோழி கூறியது.

நல்லாய் நமக்குற்ற(து) என்னென்(று)
உரைக்கேன் நமர்தொடுத்த
எல்லா நிதியும் உடன்விடுப்
பான்இமை யோர்இறைஞ்சும்
மல்லார் கழல்அழல் வண்ணர்வண்
தில்லை தொழார்கள்அல்லால்
செல்லா அழற்கடம் இன்றுசென்
றார்நம் சிறந்தவரே. (271)

பொருள்: நல்லாய் (தலைவியே) நம்முடைய உயிர் போன்ற தலைவர் நம்முடைய சுற்றத்தார் சொன்ன

Koviloor Digital Library

பொருள்கள் அனைத்தையும் திரட்டிக் கொணர்வதற்காகத் தேவர்கள் சென்று தொழுகின்ற திருவடிகளை உடைய சிவபெருமானது தில்லையைக் கடந்து இன்று சென்றார். ஆதலால் நமக்குற்ற வருத்தத்தை என்னவென்று சொல்லு வேன் (என்று தோழி தலைவனின் பிரிவைக் கூறினாள்)

சொ.பொ.வி.: நமர் — சுற்றத்தார், இமையோர் — தேவர், மல்லார் — வளம்நிறைந்த அழல் வண்ணர்— தீப் போன்ற நிறம், அழற்கடம் — வெப்பத்தை உடைய வழி.

தத்துவப்பொருள்: ஆன்மா பிரிந்துசென்றதைத் திருவருள் சிவத்தலைவிக்குக் கூறியது.

7. நெஞ்சொடு கூறல்

கொளு: கல்வரை நாடன் சொல்லா(து) அகல
மின்னொளி மருங்குல் தன்னொளி தளர்ந்தது.

சிறந்த மலைநாட்டை உடைய தலைவன் சொல்லாது பிரிந்து செல்ல, மின்னலை ஒத்த இடையை உடைய தலைவி வருந்தியது.

அருந்தும் விடம்அணி யாம்மணி
கண்டன்மற்(று) அண்டர்க்கெல்லாம்
மருந்தும் அமிர்தமும் ஆகும்முன்
னோன்தில்லை வாழ்த்தும்வள்ளல்
திருந்தும் கடன்நெறி செல்லும்இவ்
வாறு சிதைக்குமென்றால்
வருந்தும் மடநெஞ்ச மேயென்ன
யாம்இனி வாழ்வகையே. (272)

பொருள்: உண்ட விடமனது அழகு செய்கின்ற நீல கண்டத்தை உடையவன் சிவபெருமான். அவன் தேவர் களுக்குப் பிறவிப் பிணியைப் போக்கும் மருந்தாகவும், பேரின்பத்தை வழங்கும் அமுதமாகவும் எல்லோர்க்கும் முன்னவனுமாகவும் விளங்குகின்றான். அத்தகைய சிவ பெருமானது தில்லையை வாழ்த்தும் நம் தலைவன் மறைந்து சந்திப்பதை விட்டு விட்டு வரைவு மேற்கொள்ளு

Koviloor Digital Library

வதற்காகப் பிரிந்த இந்த நிலை நம்மைக் கெடுக்கும் என்று கருதினால், அதற்காக வருந்துகின்ற நெஞ்சமே, இனிமேல் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு நீ கூறும் உபாயம் தான் வேறு என்ன? (என்று தலைவி தன் நெஞ்சைப் பார்த்துக் கூறினாள்)

சொ.பொ.வி.: விடம்—நஞ்சு, அளியாம் — அழகாய்த் தோன்றும், திருந்தும் — மறைவாகச் சந்திக்கும் குற்றத்தி லிருந்து நீங்கி, கடன்நெறி—திருமணம் செய்யும் முறை யான நெறி.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தின் மேல் வைத்த பேரன்பால் பிரிய நினைந்தது என்றது.

8. நெஞ்சொடு வருந்தல்

கொளு: வெற்பன் நீங்கப் பொற்பு வாடியது.

தலைவன் பிரிய அழகுடைய தலைவி வருந்ததுதல்.

ஏர்ப்பின்னை தோள்முன் மணந்தவன்
ஏத்த எழில்திகழும்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ
லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்னவிழ் முத்த
மணலிற் கலந்தகன்றார்
தேர்ப்பின்னைச் சென்றஎன் நெஞ்(சு)என்
கொலாம்இன்று செய்கின்றதே. (273)

பொருள்: நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொண்ட திருமால் நின்று துதிக்க, பொன்னால் ஆகிய வீரக் கழலினை அணிந்த திருவடிகளை உடைய சிவ பெருமானது தில்லை நகரைச் சூழ்ந்துள்ள சோலையில் புன்னை மரங்களின் பொன் போன்ற பூக்களும், முத்துப் போன்ற அரும்புகளும் சிதறிக் கிடக்கும் மணற்பரப்பில் எம்மோடு கூடிப் பிரிந்த தலைவரின் தேர் சென்றது. அத்தேருக்குப் பின்னே சென்ற என் நெஞ்சு பெரிதும் வருந்துவது என்னவோ? என்று தலைவி நெஞ்சைப் பற்றிக் கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: பின்னை — நப்பின்னை, மணந்தவன் — திருமால், புன்னை — புன்னைமரம்.

தத்துவப்பொருள்: ஆன்மாவோடு சென்ற அருளைச் சிவத்தலைவி நினைந்தது.

9. வருத்தம் கண்டு உரைத்தல்

கொளு: அழலுறு கோதையின் விழுமுறு பேதையை
நீங்கலரெனப் பாங்கி பகர்ந்தது.

தீயைச் சேர்ந்த மாலை வாடுவதைப் போல வாடியிருக்கும் தலைவிக்குத் தலைவன் பிரியான் என்று தோழி சொன்னது.

கானமர் குன்றர் செவியுற
வாங்கு கணைதுணையா
மானமர் நோக்கியர் நோக்கென
மான்நல் தொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் தில்லையின்
மன்னை வணங்கலர்போல்
தேனமர் சொல்லிசெல் லார்செல்லல்
செல்லல் திருநுதலே. (274)

பொருள்: தேன்போன்ற இனிமையான சொல்லை உடையவளே, காட்டிலே வாழுகின்ற குறவர்கள் மானை எய்வதற்காகத் தம்முடைய வில்லில் அம்பை வைப்பர். ஆனால் தன் மனைவியின் கண்களை ஒத்தது அம்மானின் கண்கள் என்று எண்ணியவுடன் அம்பை எய்யாது மடக்கிக் கொள்வர். அத்தகைய மலை நாட்டை உடைய தலைவர் நம்மை முழுமையாகப் பிரிந்து செல்வர் அல்லர். ஆதலால் அழகிய நெற்றியை உடையவளே, தில்லை இறைவனை வணங்காதவரைப் போலத் துன்பத்தை அடையாதே (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: செவியுறவாங்கு — காதுவரை அம்பை இழுத்து எய்யும் நிலை., கணை — அம்பு. தொடை — அம்பு, தேனமர் சொல்லி — தேன் போன்ற சொல்லை

Koviloor Digital Library

உடையவளே, செல்லல் செல்லல்—துன்பத்தை அடையாதே.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியிடம் ஆன்மாவின் நிலைபற்றித் திருவருள் உரைத்ததாம்.

10. வழியொழுகி வற்புறுத்தல்

கொளு: சூழிருங் கூந்தலைத் தோழி நெருட்டியது.

தூக்கிக் கட்டிய கூந்தலை உடைய தலைவிக்குத் தோழி தெளிவை உண்டாக்கியது.

மதுமலர்ச் சோலையும் வாய்மையும்
அன்பும்மருவி வெங்கான்
கதுமெனப் போக்கும் நிதியின்
அருக்குமுன் னிக்கலுழ்ந்தால்
நொதுமலர் நோக்கமொர் மூன்றுடை
யோன்தில்லை நோக்கலர்போல்
இதுமலர்ப் பாவைக்(கு)என் னோவந்த
வாறென்பர் ஏந்திழையே. (275)

பொருள்: தலைவன் சந்தித்த மலர்களை உடைய சோலையிடத்தையும், அவன் கூறிய சூளுரைகளையும், (சத்தியத்தையும்), அவன் நாள்தோறும் காட்டிவந்த அன்பையும், திடீரெனப் பிரிந்த பிரிவையும், பொருள் தேடுகின்ற முயற்சியின் அருமையையும் தலைவியே நீ நினைந்து — முக்கட் பெருமானது தில்லையைத் தியானிக்காதவர் போல வருந்தினால் திருமகள் போன்றவளாகிய உனக்கு எவ்வாறு வந்தது என்று நம்முடைய சுற்றத்தார் அல்லாதவர்கள் சந்தேகப்படுவர். ஆதலால் நீ வருந்தாதே (என்று தோழி தலைவியிடம் கூறினாள்.)

சொ.பொ.வி.: வாய்மை — சூளுறவு, கதுமென — திடீரென, அருக்கு — முயற்சியின் அருமை, நொதுமலர் — சுற்றத்தார் அல்லாதார்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் நிலைக்குத் திருவருள் சிந்தித்தது.

Koviloor Digital Library

11 வன்புறை எதிர்அழிந்து இரங்கல்

கொளு: வன்கறை வேலோன் வரைவு நீட
வன்புறை அழிந்தவள் மனம்அழுங் கியது.

புள்ளி படிந்துள்ள வேலை உடைய தலைவன் திருமணம் செய்து கொள்ளக் காலம் நீட்டிப்பதால் வலியுறுத்தல் இழந்து தலைவி மனம் வாடியது.

வந்(து)ஆய் பவரைஇல் லாமயில்
முட்டை இளையமந்தி
பந்தா(டு) இரும்பொழிற் பல்வரை
நாடன்பண் போஇனிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென்
தில்லை தொழார் குழுப்போல்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி
நையும் திருவினர்க்கே. (276)

பொருள்: கொத்துக்களாக உள்ள நல்ல கொன்றை மாலை அணிந்த சிவபெருமானது அழகிய பொதிய மலையின் கண் உள்ளதாகிய தில்லை நகரத்தைத் தொழா தவர்கள் கூட்டத்தைப் போலக் கலக்கமுற்று பற்றுக் கோடு இன்றி வருந்தும் எனக்கு — சிந்தித்துப் பார்க்காத மென்மையான மயிலின் முட்டையை இளைய குரங் கானது பந்தாக எண்ணி விளையாடும் பெரிய சோலை களை உடைய மலைகள் பொருந்திய நாட்டை உடைய தலைவனின் இயல்பு இனிதாக இல்லாதது வருத்தத்தைத் தருகிறது.

சொ.பொ.வி.: தலைவன் வரும்வரை ஆற்றியிருக்க வேண்டும் என்று தோழி வற்புறுத்துவது தலைவிக்குத் துன்பத்தைத் தருகிறது. எனவே தலைவன் வந்து திருமண்ம் செய்து கொள்ளுவான், பொறுத்திரு என்று சொல்லுகின்ற தோழியின் நிலையை மயில் முட்டையின் மென்மை தெரியாது பந்தாடுகின்ற குரங்கின் நிலையாகத் தலைவி குறிப்பிடுகிறாள். அதாவது இங்கு மயில்முட்டை என்பது தலைவியாகவும், அதனுடைய மென்மை அறியாது இருப்பது தலைவியின் காதல் துன்பத்தை அறியாது

Koviloor Digital Library

இருப்பதாகவும், குரங்கைத் தோழியாகவும் குறிப்பிட்டு உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது. ஆய்பவர் — உரிய கருத்தோடு நோக்காதவர் (தோழி), நாடன் — தலைவன், பண்பு — தலைவன் நிலையைக் கூறுவது, சிந்தாகுலம்— மனக்கலக்கமுற்று, நாடன்பண்போ இனிதே — என்ற தொடர் மூலம் தலைவன் பிரிவை ஏற்றுக் கொண்டு இறந்து படாதவர்க்கு அவனுடைய பிரிதல் பண்பு இனிதா யிருக்கும். ஆனால் பிரிவைத் தாங்காத எனக்கு அவன் மீண்டு வருவேன் என்று கூறும் பண்பு இனிதாகாது என்று தலைவி கூறுவது பெறப்படுகிறது.

தத்துவப்பொருள்: சிவத்தைச் சாரும் நிலைமையை நீட்டிக்கும் ஆன்மாவிடம் சிவம் பெருங்கருணை கொண்டு நின்று திருவருளின் வற்புறுத்தலுக்கு மனம் அழிந்தது.

12. வாய்மை கூறி வருத்தம் தணித்தல்

கொளு: **வேற்றடங் கண்ணியை ஆற்றுவித்தது.**

வேல்போலும் கண்ணை உடைய தலைவியைத் தோழி ஆற்றுப்படுத்தியது.

மொய்யென் பதேஇழை கொண்டவன்
என்னைத்தன் மொய்கழற்(கு)ஆட்
செய்என் பதேசெய் தவன்தில்லைச்
சூழ்கடற் சேர்ப்பர்சொல்லும்
பொய்என்ப தேகருத்தாயின்
புரிகுழற் பொற்றொடியாய்
மெய்என்ப(து) ஏதுமற்(று) இல்லைகொ
லாம்இவ் வியலிடத்தே. (277)

பொருள்: வன்மையான எலும்புகளை மாலையாக அணிந்து கொண்டவனும், எங்களைத் தன் திருவடிகளுக்கு ஆட்செய்வீர் என்று ஆணை வழங்குபவனும் ஆகிய சிவ பெருமானது தில்லையைச் சூழ்ந்திருக்கின்ற கடற்துறையை உடைய தலைவனது சொற்கள் பொய்யென்று நீ கருதினால் தலைவியே இவ்வுலகத்தில் மெய் என்பது சிறிதும் இல்லையாம் (என்று தோழி கூறியது)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: பொய்—வலிமை, என்பதே—எலும்புகளை, இழை — அணியாக, ஆட்செய் — ஆளாவீர், (பணிசெய்)

தத்துவப்பொருள்: ஆன்மாவின் உண்மை அன்பையும், அதனுடைய தூய்மையையும் திருவருள் சிவத்தலைவிக்குத் தெரிவித்தது.

13. தேறாது புலம்பல்

கொளு: தீதறு கண்ணி தேற்றத் தேறாது
போதுறு குழலி புலம்பியது.

குற்றமற்ற கூந்தலை உடைய தோழி தேற்றினாலும் தெளியாத பூவினை உடைய தலைவி வருந்தியது.

மன்செய்த முன்னாள் மொழிவழி
யேஅன்ன வாய்மைகண்டும்
என்செய்த நெஞ்சும் நிறையும்நில்
லாஎன(து) இன்னுயிரும்
பொன்செய்த மேனியன் தில்லை
யுறாரின் பொறைஅரிதாம்
முன்செய்த தீங்குகொல் காலத்து
நீர்மைகொல் மொய்குழலே. (278)

பொருள்: நெருங்கிய கண்களை உடைய தோழியே, முதன் முதலாகக் கண்டு கூடிய தலைவன் செய்த சத்தியத்தின்படி அதன் உண்மையைக் கண்டு வைத்தும், என் மனமும் என்னுடைய நிறையும் என்னளவில் நிற்க வில்லை. மாறுபட்டு நிற்கின்றன.அதுவுமன்றி என்னுடைய இனிய உயிரும் பொன்னிற மேனியனாகிய சிவபெருமானது தில்லையை அடையாதவரைப் போல வருத்த முறுகிறது. மனம், நிறை, உயிர் ஆகியனவும் இவ்வாறு அமைவதற்குக் காரணம் நான் முன்செய்த தீவினையோ அன்றி காலத்தின் இயல்போ அறிந்திலேன் (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: மன் — தலைவன், நெஞ்சு நில்லாதது — தலைவி வழி நெஞ்சம் நில்லாது தலைவனை ஐயுற்றது,

Koviloor Digital Library

நிறை நில்லாது — (பெண்களின்) தலைவியின் குணங்களில் ஒன்றான நிறையானது காதல்நோய் புறத்தார்க்குத் தெரியும் படி மெலிந்து நிற்றல்.

தத்துவப்பொருள்: மலபரிபாகமும், சிவப்பணியும் உடைய ஆன்மா எதன்மாட்டு உண்மை உடையதோ எனச் சிவத்தலைவி தனிமையில் இரங்கியது.

14. காலம் மறைத்துரைத்தல்

கொளு: காந்தருள் கருவுறக் கடவுள் மழைக்கென்(று)
ஏந்திழைப் பாங்கி இனிதியம் பியது.

காந்தள் பூவானது பூக்க, தெய்வத்தினால் வந்த மழையைப் பார்ப்பாயாக என்று அணிகலன்களை உடைய தோழி தலைவியிடம் கூறியது.

கருந்தினை ஓம்பக் கடவுள்
பராவி நமர்கலிப்பச்
சொரிந்தன கொண்மூச் சுரந்ததன்
பேரரு ளால்தொழும்பிற்
பரிந்தெனை யாண்டசிற் றம்பலத்
தான்பரங் குன்றில்துன்றி
விரிந்தன காந்தள் வெருவரல்
காரென வெள்வளையே. (279)

பொருள்: வெண்மை நிற வளையல்களை உடையவளே, தினைப்பயிர் அழிந்துவிடாமல் காப்பதற்காகக் கடவுளை வணங்கி நம்மவர்கள் ஆரவாரித்தார்கள். அதனால் கடவுளின் திருவருளால் மேகங்கள் பருவம் அன்று என்றாலும் மழையைப் பொழிந்தன. அதனைக் கார் காலம் என்று கருதி — அடிமைக்கு உதவாத என்னைத் தன் பேரருளால் அடிமையாக்கி ஆட்கொண்ட சிற்றம்பல நாதனது திருப்பரங்குன்றில் காந்தள் பூக்கள் மலர்ந்து விட்டன. அதனால் தலைவன் கூறிய கார்காலம் வந்து விட்டது என நீ அஞ்சவேண்டாம் (எனத் தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: கருந்தினை — இளம் தினைப்பயிர், பராவி — வணங்கி, கொண்மூ — மேகம், வெருவரல் — அஞ்சாதே.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: காலம் மாறினும் ஆன்மா தன் பணியில் பொய்யாது என்று திருவருள் சிவத்தலைவியிடம் கூறியது.

15. தூதுவர உரைத்தல்

கொளு: ஆங்கொரு தூதுவரப் பாங்கின்கண் டுரைத்தது.

அங்கு தூது ஒன்று வரக்கண்டு தோழி தலைவிக்கு உரைத்தது.

வென்றவர் முப்புரம் சிற்றம்
பலத்துள்நின் றாடும்வெள்ளிக்
குன்றவர் குன்றா அருள்தரக்
கூடினர் நம்மகன்று
சென்றவர் தூதுகொல் லோஇருந்
தேமையும் செல்லல்செப்பா
நின்றவர் தூதுகொல் லோவந்து
தோன்றும் நிரைவளையே. (280)

பொருள்: அடுக்கிய வளையல்களை உடைய தலைவியே, முப்புரங்களை வென்றவரும், சிற்றம் பலத்தில் நடனம் புரிகின்றவரும் ஆகிய கயிலை நாதனாம் சிவபெருமானது குறையாத அருள் வந்து கூட்ட நம்மோடு கலந்து நம்மை விட்டுப் பிரிந்த தலைவர் அனுப்பிய தூதோ அல்லது பிரிந்து வருந்துகின்ற நமக்கு இனிவரும் துன்பத்தைச் சுட்டிக் காட்ட அயலார் அனுப்பிய தூதோ ஏதோ ஒரு தூது வந்து தோன்றுகின்றது அறிவாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: இருந்தோமையும் — இறந்து படாது இருக்கும் நம்மிடம், செல்லல் — துன்பம், (வேற்றவர், திருமணம்)

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் மாட்டு ஆன்மா விற்குப் பேரன்பு பிறந்ததைத் திருவருள் உணர்த்தியது.

Koviloor Digital Library

16. தூது கண்டழுங்கல்

கொளு: அயலுற்ற தூதுவரக் கயலுற்ற கண்ணி மயலுற்றது.

அயலாரின் தூதுவர கயல்மீனை ஒத்த கண்களை உடைய தலைவி மயக்கமுற்றது.

வருவன செல்வன தூதுகள்
ஏதில வான்புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்தென(து) ஆவிகொண்(டு)
ஏகிஎன் நெஞ்சில்தம்மை
இருவின காதலர் ஏதுசெய்
வான்இன்(று) இருக்கின்றதே. (281)

பொருள்: அயலார் தூதுகள் வருகின்றன, தூய்மை யான தில்லையின்கண் உள்ள சிவஅன்பர்களைப் போல மனம் உருகும் இன்பக் கலவிகளைச் செய்து, பின் என்னுடைய உயிரையும் உடன் கொண்டு சென்று, என் நெஞ்சில் வீற்றிருக்கின்ற தலைவர் இன்னும் இங்குத் தூது அனுப்பாமல் சும்மா இருப்பது என்ன செய்யக் கருதியோ (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: ஏதிலர் — அயலார், தருவன — இன்பக் கலவிகளைத் தருவன, இருவின — இருத்தின..

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தின் கருணையை எய்துவதற்கு முயற்சி செய்யாது இருப்பதை அறிந்து சிவத்தலைவி வருந்தியது.

17. மெலிவு கண்டு செவிலி கூறல்

கொளு: வண்டமர் புரிகுழல் ஒண்டொடி மெலிய
வாடா நின்ற கோடாய் கூறியது.

வண்டுகள் மொய்க்கின்ற செறிந்த கூந்தலையும் அழகிய வளையல்களையும் உடைய தலைவியின் வருத்தம் கண்டு — செவிலித்தாய் வருந்திக் கூறியது.

Koviloor Digital Library

வேயின மென்தோள் மெலிந்தொளி
வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டையள்
அல்லள் பவளச்செவ்வி
ஆயின ஈசன் அமரர்க்(கு)
அமரன்சிற் றம்பலத்தான்
சேயின(து) ஆட்சியில் பட்டன
ளாம்இத் திருந்திழையே. (282)

பொருள்: மூங்கில் போன்ற மெல்லிய தோள் மெலிந்து வாடி, கண்கள் வேறுபட்டு, மேகலையை உடைய தலைவி பண்டுபோல் இல்லாது வேறுபட்டுள்ளாள். ஆதலால் நம்முடைய மகள் செம்மேனி படைத்த ஈசனும், தேவ தேவனும் ஆகிய சிற்றம்பலத்தானுடைய மகனாம் முருகன் ஆட்சி செய்யும் இடத்தை எதிர்ப்பட்டாள் போலும் (என்று செவிலித்தாய் வருந்திக் கூறினாள்)

சொ.பொ.வி.: எனவே முருக தெய்வத்தைக் கண்டு பயந்து விட்டாளோ என வருந்தியது பெறப்படுகிறது. விழி — கண்கள், பவளச்செல்வி — பவளம் போன்ற மேனியை உடைய இறைவன், சேயினது — முருகனது, ஆட்சி — அவனுடைய இடம், பட்டளள் — முருகன் பார்வையைக் கண்டு அஞ்சினளோ.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி தன்னுடைய சேயின் ஆட்சியில் திகழ்கிறது போலும் என்று திரோதானம் நினைத்தது.

18. கட்டு வைப்பித்தல்

கொளு: மால்கொண்ட கட்டுக் கால்கொண்டது.

பெருமை கொண்ட கட்டுவிச்சியை அழைக்க நினைந்தது. (கட்டுவிச்சி — குறிசொல்லுபவள்)

சுணங்குற்ற கொங்கைகள் சூதுற்
றிலசொல் தெளிவுற்றில

Koviloor Digital Library

குணங்குற்றம் கொள்ளும் பருவமு
றாள்குறு காஅசுரர்
நிணங்குற்ற வேல்சிவன் சிற்றம்
பலநெஞ் சுறாதவர்போல்
அணங்குற்ற நோய்அறி வுற்றுவுரை
யாடுமின் அன்னையரே. (283)

பொருள்: சுணங்கு பூத்த தலைவியின் கொங்கைகள் சூதாடு காய் போலப் பெருக்கவில்லை. சொற்களும் மழலை நீங்கி விளக்கம் பெறவில்லை. நல்லது கெட்டது அறியும்பருவம் அடையவில்லை. இத்தகைய நிலையில் நம் தலைவி இளையவளாய் இருக்கிறாள். கட்டு விச்சியராகிய அன்னையரே, முப்புரத்தை உடைய அரக்கர் களின் உடலைக் குத்திய சூலத்தை உடைய சிவபெருமானது தில்லைச் சிற்றம்பலத்தை நினையாதவரைப்போல வருந்தும் எம் மகளின் நோயைத் தெளிய அறிந்து சொல்வீர்களாக (என்று செவிலி கூறினாள்)

சொ.பொ.வி.: சுணங்கு — பசலை, சூதுஉற்றில — சூதாடும் காய்போல் வடிவைப் பெற்றில, கொள்ளும் பருவம்—அறியும் பருவம், நிணம்—உடல்தசை, அன்னையர் — குறிசொல்லும் பெண்கள்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியின் கருணையைக் காட்டுவதற்குச் சிறிது தயங்க அதற்குரிய காரணத்தை திரோதை ஆராய்ந்து பார்த்தல்.

19. கலக்கமுற்று நிற்றல்

கொளு: தெய்வத்தில் தெரியுமென
எவ்வத்தின் மெலிவுற்றது.

தெய்வத்தாலே தலைவியின் காதல் தெரியுமோ என்று தோழி வருந்தியது.

மாட்டியன் றேஎம் வயின்பெரு
நாணின்! மாக்குடிமா

Koviloor Digital Library

சூட்டியன் றேநிற்ப(து) ஓடிய
வா(று)இவள் உள்ளமெல்லாம்
காட்டியன் றேநின்ற தில்லைத்தொல்
லோனைக்கல் லாதவர்போல்
வாட்டியன்(று) ஏர்குழ லார்மொழி
யாதன வாய்திறந்தே. (284)

பொருள்: நம் தலைவியின் மனம் போன வழியெல் லாம் புலப்படுத்தும் தில்லையில் எழுந்தருளியுள்ள பழமைக்கெல்லாம் பழமையனாகிய சிவபெருமானது அருளை அறியாதவர்கள் வருந்தும் வருத்தத்தைத் தரும். அழகிய கூந்தலை உடைய ஊர்ப் பெண்கள் முன் உரைக்காத பழியை இப்பொழுது வெளிப்பட வைக்கும். இப்போது நம்மிடம் உள்ள பெரிய நாணத்தைக் கொல்லும். பிறந்த பெருங்குடிக்குக் குற்றத்தை ஊட்டும். இத்தகைய நிலையில் அல்லவா இக்கட்டுவிச்சியின் தோற்றம் நிற்கிறது (என்று தோழி வாடினாள்)

சொ.பொ.வி.: கட்டுவிச்சி குறி சொன்னால் நடப்ப வற்றை நினைந்து தோழி வருந்தினாள். மாட்டி — மாள் வித்து, எம்வயிர் — எம்மிடத்து உள்ள, மாசூட்டி — குற்றத்தை ஏற்படுத்தி ஏல்நிற்பது—கட்டுவிச்சி தோன்றுவது, காட்டி—தலைவியின் காதலைக்காட்டி, வாட்டி— வருத்தமுறச் செய்து, குழலார்—ஊர்ப்பெண்கள், மொழி யாதன — கூறாத பழி.

தத்துவப்பொருள்: காலம் என்ற கட்டுவிச்சி குறி சொன்னால் சிவம், ஆன்மா உறவு வெளிப்படும் என்று திருவருள் வருந்தியது.

20. கட்டுவித்தி கூறல்

கொளு: கட்டுவித்தி விட்டு ரைத்தது.

குறி சொல்பவள் தெளிவாகக் கூறியது.

குயிலிதன் றேயென்ன லாம்சொல்லி
கூறன்சிற் றம்பலத்தான்

Koviloor Digital Library

இயலிதன் றேயென்ன லாகா
இறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணம்
காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லில்
தோன்றும் அவன்வடிவே. (285)

பொருள்: இது குயிலோசை அன்றே என்று வியக்கும் இனிய சொற்களை உடைய உமாதேவியை ஒரு பக்கத்தே உடையவனும், தில்லைச் சிற்றம்பலத்தவனும், உரிய தன்மையைக் கூற முடியாதவனும் ஆகிய சிவபெரு மானுடைய மகனாகிய முருகன் ஏறிச் செல்லும் மயில் இது. கோழி இது. சூரனைக் கொன்ற வேலு இது. நான் பரப்பியுள்ள நெல்லில் வந்த தோன்றுகின்ற உருவமும் முருகனுடைய உருவம். எல்லோரும் பார்ப்பீர்களாக (என்று கட்டுவிச்சி கூறினாள்.)

சொ.பொ.வி: எனவே தலைவியின் நோய் முருகனால் ஏற்பட்டது என்று வலியுறுத்துகிறாள் கட்டுவிச்சி. அவள் குறிசொல்லுவதற்காக ஒரு கைப்பிடி நெல்லைப் பரப்புவாள். அதை நான்கு நான்காக எண்ணினால் மீதி மூன்று எஞ்சினால் அது மயில் என்றும், இரண்டு எஞ்சி னால் கோழி எனவும், ஒன்று எஞ்சினால் அதுவேல் எனவும், எதுவும் எஞ்சவில்லை என்றால் அது முருகன் எனவும் கூறுவாள். இதுபோல நான்கு முறை போட்டு ஒருமுறை மூன்று, ஒரு முறை இரண்டு, ஒருமுறை ஒன்று, ஒருமுறை எதுவும் எஞ்சவில்லை என்று வந்ததால் இக்குறி கூறினாள் என்பது பெறப்படுகிறது. குயில் — குயிலானது, இயல்—உரியதன்மை, சேய் — முருகன், கடவும்— செலுத்தும், வாரணம் — கோழி, அயில் — வேல், அவன் — முருகன், மயிலும்; கொடியும், வேலும் தோன்றுதலின் தலைவியை வருத்தியது முருகன் என்று கூறினாள் கட்டுவிச்சி. இங்ஙனம் கூறின் குறி பார்த்துக் கூறுதல் பொய்யாகாது. தலைவனுடைய கூட்டத்தைத் தெய்வம் ஏறிக் கட்டுவிச்சிதான் உணர்ந்தாள். ஆயினும் அதனை வெளிப்படுத்தாது உலகியல் நோக்கி இங்ஙனம் உரைப்பது மரபாகும் என உணர வேண்டும்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மாவைச் சார்ந்து இன்பம் ஊட்டியது என்ற தெய்வ நிகழ்ச்சியை அறிந்து திரோதை தெளிந்தது.

21. வேலனை அழைத்தல்

கொளு: வெறியாடிய வேலனைக் கூஉய்
நெறியார் குழலி தாயர் நின்றது.

வெறியாடுவதாக வேலனை அழைத்துச் சுருண்ட கூந்தலை உடைய தலைவியின் தாயர் (செவிலியும் நற்றாயும்) வெறியாடு களத்தில் நின்றது.

வேலன் புகுந்து வெறியா
டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்(து) அவியக்கழல்
வைத்தொழில் தில்லைநின்ற
வேலன் புகுந்தென்கண் நின்றான்
இருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினின்
நிற்பித்த பண்பினுக்கே. (286)

பொருள்: எமன் தானே வலியவந்து தன்னுடைய ஆற்றலைக் கெடுத்துக்கொள்ளும் நிலையில் தன்னுடைய திருவடியினால் உதைத்த, தில்லையின்கண் இருக்கின்ற மேலோனாகிய சிவபெருமான் எளியவனாகிய என்னிடத்தில் புகுந்து நின்றான். அவன் இருந்த திருவெண்காடு என்ற திருத்தலத்திற்கு ஒப்ப இப்பிள்ளை (மகள்) எம் குடியில் பிறந்து வெறியாட்டாகிய இத்தன்மைக்கு உரியவளாய் நிற்கிறாள். ஆதலால் வெறியாட்டு ஆடுதற்கு வேலன் வந்து வெறியும் ஆடுக. வெள்ளாட்டுக் குட்டியையும் பலியாக அறுக்க (என்று தாய் வேலனை அழைத்தாள்.)

சொ.பொ.வி: வெறியாடுதல் — சாமியாடுதல் என்றும் மருளாடுதல் என்றும் இக்காலத்தார் கூறும் ஆவேசம் கொண்டு ஆடுதல். இவ்வாறு ஆடும் பொழுது ஆட்டுக் கிடாயைப் பலிகொடுத்து ஆடுவர். எனவேதான் வெறியாட்டு என்று ஆயிற்று. பெண்கள் காதல் நோய்வாய்ப்

Koviloor Digital Library

பெற்றிருந்தால் அது காதல் நோய் என்பது அறியாமல் அது தெய்வத்தால் ஆகியது என எண்ணி முருகவழி பாட்டுக் குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்து நெல்லும், அரிசியும், பூவும், செம்மறி ஆட்டின் குருதியும் கலந்து தூவி, பூசாரி ஒருவர் முருகனை நினைந்து ஆடிப் பெண்களுக்கு ஏற்பட்ட நோயைத் தீர்க்குமாறு வழிபாடு செய்வதே வெறியாட்டு ஆகும். இந்த வெறியாட்டைச் செய்பவர் பூசாரி என்ற வேலன் ஆவார். இப்பாடலில் வெறியாட்டு ஆடுவதை விரும்பாத தாயர் நம் தலைவி இக்குலத்தில் பிறந்து வெறி யாட்டு ஆடும்படி நேர்ந்துவிட்டதே என வருந்துகின்றனர். வெண்மறி — வெள்ளாடு, காலன் — எமன், அவிய — அழிய, கழல்வைத்து — காலால் உதைத்து, வெண்காடு — திருவெண்காடு, பாலன் — ஈண்டு தலைவி. பெண்மை அடுத்த மகன் என் கிளவி என்ற தொல்காப்பிய இலக்கணப்படி பெண் பிள்ளையைப் பெண்மகன் என்று வழங்குதல் உண்டு (தொல் — சொல் — 164) ஆதலால் பாடலில் மகள் பாலன் என அழைக்கப் பெற்றாள்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மாவோடு கலப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கடவுள்நிலையில் வெளிப் படுத்தல்.

22. இன்னல் எய்தல்

கொளு: ஆடிய வெறியிற் கூடுவ(து) அறியாது
நன்னுறுங் கோதை இன்னல் எய்தியது.

வேலன் வெறியாட்டு ஆடியும் தன்னுடைய காதல் நோயானது நீங்காது ஒழியின் அயலவர்கள் தூற்றுவார்களே என்று அழகிய கூந்தலை உடைய தலைவி துன்பத்தினை எய்தியது.

அயர்ந்தும் வெறிமறி ஆவி
செகுத்தும் விளர்ப்(பு)அயலார்
பெயர்ந்தும் ஒழியா விடின்என்னை
பேசுவ பேர்ந்திருவர்

Koviloor Digital Library

உயர்ந்தும் பணிந்தும் உணரான(து)
அம்பலம் உன்னலரின்
துயர்ந்தும் பிறிதின் ஒழியினென்
ஆதும் துறைவனுக்கே. (287)

பொருள்: வெறியாடியும், ஆட்டின் உயிரை மடித்தும் என்னுடைய மேனியில் தோன்றியுள்ள நிற வேறுபாடு நீங்காதாயின் அயலோர் பேசுவது என்னாகும்? வெறி யாட்டு ஆகிய நிகழ்ச்சியால் என்னுடைய நோய் நீங்கு மானால் தாங்கள்தான் தலைவர்கள் என்று தமக்குள் மாறுபட்டு நான்மகனும் திருமாலும் அன்னமாய்ப் பறந்து சென்றும், பன்றியாய் அகழ்ந்து சென்றும் அறிய முடியாத சிற்றம்பலத்தாரை நினையாதவரைப் போல வருந்திடும் என்னுடைய தலைவனுக்கு நான் என்னாவேன், (என்று கூறித் தலைவி வருந்தினாள்)

சொ.பொ.வி: வெறியாடியதால் காதல் நோய்க்குரிய பசலை நீங்காதாயின் ஊரார் பேச்சு அழியாதே. மேலும் தலைவன் என்னை மனைவியாகத் திருமணம் செய்து கொள்ளாது விட்டுவிட்டான் என்றால் என் நிலைமைதான் என்னாகும் என்று இவ் இருசெயல்களும் முடியாததாயின் உயிர் வாழ்தல் அரிது என்று தலைவி கூறுவதாகப் பாடல் பொருள் தருகிறது. வெறிஅயர்ந்தும் — வெறியாடியும், மறி — ஆட்டுக்குட்டி, ஆவி — உயிர், செகுத்து— கொல்லப் படுதல், பெயர்த்தும் — பின்னும், இருவர் — நான்முகனும், திருமாலும், உயர்ந்து பெயர்ந்தும், பணிந்துஉயர்ந்தும் — உயரப் பறந்தும், பூமியில் அகழ்ந்தும், உன்னவர்— நிலை யாதவர், துயர்ந்து — துயரடைந்து, பிறிதின் — பிற நிலையில், துறைவன் — தலைவன்.

தத்துவப்பொருள்:சிவம் ஆன்மாவிற்கு அருள்நிலை கூடவில்லையே என வருந்ததல்.

23. வெறி விலக்குவிக்க நினைதல்

கொளு: அயல்தரு வெறியின் மயல்தரு மென
விலக்கல் உற்ற குலக்கொடி நினைந்தது.

Koviloor Digital Library

அயலார் தருகின்ற வெறியாட்டால் மயக்கம் (தீமை) தரும் என்று அதனை விலக்க (வெறியாட்டை) குலக் கொடியாம் தலைவி நினைந்தது.

சென்றார் திருத்திய செல்லல்நின்
நார்கள் சிதைப்பரென்றால்
நன்றா அழகிதன் றேஇறை
தில்லை தொழாரின்நைந்தும்
ஒன்றாம் இவட்கு மொழிதல்கில்
லேன்மொழி யாதும்உய்யேன்
குன்றார் துறைவர்க்(கு) உறுவேன்
உரைப்பன்இக் கூர்மறையே. (288)

பொருள்: தில்லையைத் தொழாதவர்கள் வருந்துவது போல என்னைப்போல் வருந்தியும் என்னோடு உயிர் போலப் பழகியும் விளங்குகின்ற தோழியாகிய இவளுக்கு என் காதலைச் சொல்ல நாணம் தடுப்பதால் உரைக்க இயலாமல் உ.ள்ளேன். உரையாமல் இருந்தால் உயிரும் வாழமுடியாது. ஆதலால் மணற் குன்றுகள் நிறைந் திருக்கக் கூடிய துறையை உடைய தலைவர்க்கு (காதலர்க்கு)ச் சிறந்தவளாகிய நான் காதல் மறைப்பை இவளுக்குச் சொல்வேன். தலைவன் உண்டாக்கிய இந்தக் காதல் நோயைத் தீர்ப்பவர் முருகனோ பிறரோ? யாரோ? தீர்ப்பவர் சிலர் என்றால் அது கேட்பதற்கு மிக அழகியதே (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி: தன்னுடைய காதலைத் தோழியிடம் வெளிப்படுத்துவதால் வெறியாட்டுக்கு தேவை இல்லாமல் போய்விடும் என எண்ணித் தோழி மூலம் வெறியாட்டைத் தடுக்க நினைப்பது பெறப்படுகிறது. சென்றார் —பிரிந்த தலைவர், திருத்தியசெல்லல்—ஏற்படுத்திய காதல் துன் பத்தை, நின்றார்—தலைவர் அல்லாத பிறர், சிதைப்பர் — நீக்குவர், அழகியரே — அழகாக இருக்கிறதே, இவள்— தோழி, மொழிதல் — காதல் நோயை வெளிப்படுத்தல், உய்யேன் — வாழேன், கூர்மறை — காதலைக் கூறுவேன்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தலைவி, உயிர்க்கொலை செய்யும் வழிபாட்டினை ஏற்காமையும், அருள் வழங்கு வதற்குக் காலம் தாழ்த்தாமையும் ஆம்.

24. அறத்தொடு நிற்றலை உரைத்தல்

கொளு: வெறித்தலை வெரீஇ வெருவரு தோழிக்(கு)
அறத்தொடு நின்ற ஆயிழை உரைத்தது.

வெறியாட்டு அச்சத்தால் அச்சப்படும் தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்று தன் காதலை வெளிப் படுத்தியது.

யாயும் தெறுக அயலவர்
ஏசுக ஊர்நகுக
நீயும் முனிக நிகழ்ந்தது
கூறுவல் என்னுடைய
வாயும் மனமும் பிரியா
இறைதில்லை வாழ்த்துநர்போல
தூயன் நினக்குக் கடுஞ்சூள்
தருவன் சுடர்க்குழையே. (289)

பொருள்: அழகிய காதணியும், குழையும் உடையவளே, என்னுடைய வார்த்தைகளையும், மனத்தையும் பிரியாத தில்லையை வாழ்த்துகின்றவர்களைப் போல தூய்மையான நான் உனக்குக் கடுமையான சத்தியத்தைச் செய்வேன். அயலார் ஏசட்டும், ஊர் நகைக்கட்டும், தாயும் அஞ்சட்டும், உன்மனம் என்னை வெறுக்கட்டும் (இவை அனைத்தும் நடந்தாலும் பரவாயில்லை) நடந்த காதலை உனக்குச் சொல்வேன், கேட்பாயாக (என்று தலைவி தோழிக்குக் கூறினாள்)

சொ.பொ.வி : அறத்தொடு நிற்றல் — அறநெறியில் நிற்றல், தலைவி தனக்குப் பிறரோடு திருமணம் நடக்க இருந்தாலோ, அல்லது தன்னுடைய காதல் நோயை அறியாது தாயர் வருந்தினாலோ தலைவி தன்னுடைய உண்மையான காதலை வெளிப்படுத்த அறம் தவறாத சொற்களைச் சொல்லுதல், தலைவி தோழிக்கும் தோழி

Koviloor Digital Library

செவிலிக்கும், செவிலி தாய்க்கும், தாய் தன் உறவினர் களுக்கும் அறத்தொடு நின்று தலைவியின் காதலை வெளிப் படுத்த வேண்டும் என்பது மரபு. இதனால் தலைவிக்கும் தலைவனுக்கும் திருமணம் நிகழும்! யாயும் — தன்தாயும், வாய் — இங்கு பேச்சினை உணர்த்திற்று. கடுஞ்சூள் — கடுமையான சத்தியம், அதாவது தான் சொல்லுகின்ற தன் காதல் சத்தியம் எனக் கூறல், குழை — காதணி.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவிற்கு அருள் வழங்குவதை உறுதிப்படுத்துதல்.

25. அறத்தொடு நிற்றல்

கொளு: செய்த வெறியின் எய்துவது அறியாது
நிறத்தொடித் தோழிக்(கு) அறத்தொடு நின்றது.

நிகழ்த்தும் வெறியாட்டால் நிகழப் போவது எது என்று தெரியாததால் அதனை நிறுத்த அழகிய நிறமுடைய வளையல்களைக் கொண்ட தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.

வண்டலுற் றேம்எங்கண் வந்தொரு
தோன்றல் வரிவளையீர்
உண்டலுற் றேமென்று நின்றதோர்
போழ்(து)உடை யான்புலியூர்க்
கொண்டலுற்(று) ஏறும் கடல்வர
எம்உயிர் கொண்டுதந்து
கண்டலுற்(று) ஏர்நின்ற சேரிச்சென்
றான்ஓர் கழலுவனே. (290)

பொருள்: வளையலை அணிந்த தோழியே, நாம் விளையாடும் பொழுது ஒருவன் நம்முடைய சிறுமனை முன் (வீட்டின்முன்) உண்ணக் கருதி வந்தோம் என்று சொல்லி நின்றான். உலகப் பொருள் எல்லாவற்றையும உடைமையாகக் கொண்ட சிவபெருமானுடைய தில்லை எல்லையின்கண் கீழ்க்காற்று மோதியதால் கடல் கொந் தளித்து, கடலில் குளிக்கச் சென்ற என் மேல் கடல் வர,

Koviloor Digital Library

அப்போது என் உயிரைக் காத்தான் வீரக்கழலை உடைய அவன். பிறகு கண்டல் மரம் உள்ள சேரியில் மறைந்தான். இனி உரியதைச் செய்வாயாக (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: ஊரின்கண் விருந்தாக வந்து வீரன் நீரில் மூழ்க இருந்த தன்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்தான். அவ்வாறு தொட்டுத் தூக்கியதால் தனக்கும் அவனுக்கும் தொடர்பு உண்டு என்பதை அறநிலையில் கூறித் தலைவி தன் காதலை வெளிப்படுத்தினாள் என்பது பெறப்படுகிறது. வண்டல் — சிறுவீடுகட்டி விளையாடுதல், தோன்றல் — புதியவன்(தலைவன்), உண்டலுற்றேன்—விருந்தாக வந்தேன், ஏறும் கடல்வர—கரையேறும் கடல் தன்மேல் வர (நீரின் கண் தான் மூழ்க) கண்டல் — ஒருவகை மரம், சேரி — ஊர்ப்புறம்.

தத்துவப்பொருள்: சிவத்துக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு அருள் நோக்கில் வெளிப்படுகிறது.

26. ஐயந்தீரக் கூறல்

கொளு: விலங்குதல் விரும்பு மேதகு தோழி
அலங்கற் குழலிக்(கு) அறிய உரைத்தது.

வெறியாட்டை விலக்க விரும்பும் தோழி அழகிய மாலையணிந்த தலைவிக்கு உரைத்தது.

குடிக்கலர் கூறினும் கூறா
வியன்தில்லைக் கூத்தனதாள்
முடிக்(கு)அல ராக்கும்மொய் பூந்துறை
வற்கு முரிபுருவ
வடிக்கலர் வேற்கண்ணி வந்தன
சென்றுநம் யாய்அறியும்
படிக்கல ராம்இவை என்நாம்
மறைக்கும் பரிசுகளே. (291)

பொருள்: வளைந்த புருவத்தையும், மாவடு பிளந்தது போன்ற பரந்த வேல் போன்ற கண்ணையும் உடையவளே. யாராலும் உரைக்க முடியாத பெருமைகளை உடைய

Koviloor Digital Library

தில்லைக் கூத்தனின் திருவடிகளைத் தன்னுடைய தலைக்குப் பூவாகச் சூடிய தலைவனுக்கு வந்ததாகிய பழிகளை நம் தாயும் அறிவாள். ஊரிலும் அலர் எழுந்து விட்டது. ஆதலால் நம் காதலை மறைத்துச் சொல்லும் நிலைமைதான் என்ன? (என்று தோழி தலைவிக்குக் கூறினாள்)

சொ.பொ.வி.: குடி — தலைவியின் குலம், முடிக்கு அலர்—தலைக்குரியபூ, பூந்துறைவர் — பூக்கள் நிரம்பிய துறைக்குரிய தலைவர், முரி — வளைந்த, படி — இடம் பரிசு — தன்மை. இவ்வாறு தோழி கூறுவதால் செவிலிக்குத் தான் அறத்தோடு நிற்கப் போவதையும் அதற்குத் தலைவியின் உடன் பாட்டையும் பெற்றவள் ஆகிறாள்.

தத்துவப்பொருள்: சிவம் ஆட்கொண்டால் ஆன்மா விற்குப் பழி வராது என்று திருவருள் கூறியது.

27. வெறி விலக்கல்

கொளு: அறத்தொடு நின்ற திறத்தினிற் பாங்கி
வெறி விலக்கிப் பிறிதுரைத்தது.

அறத்தொடு நிற்கும் முறைமையால் தோழி வெறி யாட்டினை விலக்கிப் பிறிதொன்று கூறுவாள்போல் கூறியது.

விதியுடை யார்உண்க வேரி
விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினில்
பாய்புனல் யாம்ஒழுகக்
கதியுடைய யான்கதிர்த் தோள்நிற்க
வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை
கொல்இனி வையகத்தே. (292)

பொருள்: வெறியாட்டில் கள்ளுண்ணும் இயல்பை உடையார் கள் உண்ணட்டும். அதனைத் தடுக்க மாட்டோம். இது ஒருபுறம் நடக்க தில்லைச் சிற்றம்பலத்திற்

Koviloor Digital Library

குரிய சிவபெருமானது திருப்பரங்குன்றில் பாயும் வெள்ளத்திலிருந்து எம்மைக் காப்பாற்றி எடுத்தவனது (தூக்கியவனது) ஒளி பொருந்திய தோள்கள் ஒரு புறம் நிற்கட்டும். எம் காதல் நோய் தீர்வதற்கு வேறு ஒரு உபாயம் கருதும் வேலனாகிய தெய்வமே, உன்னைப் போலும் அறிவுடையார் இவ்வுலகத்தில் இப்போது இல்லைபோலும்.

சொ.பொ.வி. வெறியாட்டாகிய விளையாட்டில் எங்களுக்கு வெறுப்பில்லை. தெய்வத்தால் ஏற்பட்ட நோய்க்குப் பரிகாரமாக ஆடுவதாகும். ஆனால் எம் நோய் காதல் நோயாயிற்றே என்று தோழி கூறகின்ற கருத்து பெறப்படுகிறது. விதியுடையார் — கள் உண்ண வேண்டும் என்ற ஊழினை உடையவர். கதியுடையாரின் — எம்மை எடுத்துக் காப்பாற்றியதால் எமக்குப் புகலிடமாகிய ஒருவன், வேறு கருதுநின்ற — காதலுக்குரிய பரிகாரத்தை விட்டுவிட்டு வேறு பரிகாரம் கருதும் வேலன்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தோடு கலக்க உரிய காரணத்தை திரோதாயி எண்ணாது வேறு எண்ணியதைக் குறிப்பாக வெளிப்படுத்தியது.

28. செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்

கொளு: சிறப்புடைச் செவிலிக்கு அறத்தொடு நின்றது.

பெருமை உடைய செவிலி அறத்தொடு நின்ற தன்மை.

மனக்களி யாய்இன் றியான்மகிழ்
தூங்கத்தன் வார்கழல்கள்
எனக்களி யாநிற்கும் அம்பலத்
தோன்இருந் தண்கயிலைச்
சினக்களி யானை கடிந்தார்
ஒருவர்செவ் வாய்ப்பசிய
புனக்கிளி யாங்கடி யும்வரைச்
சாரற் பொருப்பிடத்தே. (293)

பொருள்: மனக்களிப்புடன் இன்று யாம் மகிழ்ச்சியுறும் வண்ணம் தன் நீண்ட திருவடிகளை எங்களுக்கு வழங்கும்

Koviloor Digital Library

தில்லை அம்பலத்தானது பெரிய கயிலையின்கண் புனத்தில் வருகின்ற சிவந்த வாயினை உடைய கிளிகளை ஓட்டும் பெரிய மலைப் பகுதியின் கண் ஒருவர் எம்மீது கோபத்துடன் வரும் மதங்கொண்ட யானையைத் தடுத்தார். இது நடந்தது. உனக்கு ஏற்பதைச் செய்க (என்று தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்)

சொ.பொ.வி. யானையைத் தலைவன் தடுத்தான் என்பதால் தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதல் அறத்தொடு கூறப்படுகிறது. மகிழ்தூங்க — மகிழ்ச்சி ஏற்பட, எனக்கு — தோழிக்கு (இங்கு தலைவியை உடன்படுத்திக் கூறியதும் ஆம்) சினக்களியானை—சினம் கொண்ட மத யானை, தடிந்தார் — தடுத்து அடக்கினார்.

தத்துவப்பொருள்: யானையினின்று மீட்டார் என்பதால் சிவத்தலைவி உயிரை ஆட்கொண்டது என்பதைத் திரோதை அறியத் திருவருள் உரைத்தது.

29. நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

கொளு: கற்பினின் வழாமை நிற்பித்(து) எடுத்தோள்
குலக்கொடி தாயர்க்(கு) அறத்தொடு நின்றது.

தலைவியைப் பெண்மையின் இலக்கணத்திலிருந்து எடுத்து வளர்த்த செவிலித்தாய் வஞ்சிக்கொடியை ஒத்த நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

இளையாள் இவளைஎன் சொல்லிப்
பரவுதும் ஈர்எயிறு
முளையா அளவின் முதுக்குறைந்
தாள்முடி சாய்த்திமையோர்
வளையா வழுத்தா வருதிருச்
சிற்றம் பலத்துமன்னன்
திளையா வரும்அரு விக்கய
லைப்பயில் செல்வியையே. (294)

பொருள்: தேவர்கள் தலை சாய்த்து வணங்கியும் போற்றியும் வரும் சிற்றம் பலத்தின் கண் உள்ளவனாகிய

Koviloor Digital Library

தில்லைச் சிவபெருமானது ஒலிக்கின்ற அருவிகள் இடைவிடாது ஒழுகுகின்ற கயிலைமலையின்கண் வாழுகின்ற நம்முடைய மகளை என்ன சொல்லிப் புகழுவோம். அவளுக்கு முன் எழும் இரண்டு பற்களும் முளைப்பதற்கு முன்னே அறிவு முதிர்ந்தாள் (என்று செவிலி நற்றாயிடம் கூறினாள்)

சொ.பொ.வி. எனவே தலைவி பருவமும் அறிவும் பெற்று விட்டாள் எனச் செவிலி நற்றாய்க்கு நினைவூட்டுகிறாள். இளையாள்—தலைவி, பரவுதும்—எப்படிப் பாராட்டுவது, எயிறு — பல், முதுக்குறைந்தாள் — அறிவு முதிர்ந்துவிட்டாள். திளையா — என்றும் நீங்காது.

தத்துவப்பொருள் திரோதை பரையின் பாற் சென்று ஆன்மாவைச் சிவத்தலைவி அடைவதற்குரிய கருணைப் பருவத்தைப் பாராட்டிக் கூறியது.

30. தேர்வரவு கூறல்

கொளு: மணிநெடுந் தேரோன் அணிதினின் வருமென
யாழியல் மொழிக்குத் தோழி சொல்லியது.

மணிகள் கட்டப்பட்ட பெரிய தேரினை உடைய தலைவன் பக்கத்தில் வந்துவிட்டான் என்று யாழினைப் போன்ற சொல்லை உடைய தலைவிக்குத் தோழி கூறியது.

கள்ளினம் ஆர்த்துண்ணும் வண்கொன்றை
யோன்தில்லைக் கார்க்கடல்வாய்ப்
புள்ளினம் ஆர்ப்பப் பொருதிரை
யார்ப்பப் புலவர்கள்தம்
வள்ளினம் ஆர்ப்ப மதுகரம்
ஆர்ப்ப வலம்புரியின்
வெள்ளினம் ஆர்ப்ப வரும்பெரும்
தேரின்று மெல்லியலே. (295)

பொருள்: மென்மையான இயல்பை உடைய தலைவியே, வண்டுகள் ஒலித்துத் தேனை உண்ணும் கொன்றை மாலையை உடைய சிவபெருமானது தில்லையைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதியில் ப்றவைகள்

Koviloor Digital Library

ஒலிக்கும் வண்ணம் கரையில் வந்து மோதும் கடலலைகள் ஒலிக்க, புலவர்கள் கூட்டம் மங்கலஒலியால் ஆர்ப்பரிக்க வண்டும் புலம்புரிச் சங்கும் ஆர்ப்பரிக்க நம் காதலரின் தேர் இதோ வருகிறது என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

சொ.பொ.வி: கள்ளினம் — வண்டுகள், புள்ளினம் பறவைகள், திரை—அலை, வள்ளினம்—கூட்டம், மதுகரம் — வண்டு, வலம்புரி—சங்கு.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் செயல்கள் சிவத்தைச் சார இயங்குகின்றன எனத் திருவருள் உரைத்தது.

31. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்

கொளு: நிலங்காவலர் நீண்மனத்தின்
நலங்கண்டவர் நயந்துரைத்தது.

பூமியைக் காக்கின்றவனின் நீண்ட திருமணத்தின் முன்னேற்பாட்டைக் கண்டவர் விரும்பி உரைத்தது.

பூரண பொற்குடம் வைக்க
மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நீடுக தூரியம்
ஆர்க்கதொன் மால்அயற்கும்
காரணன் ஏரணி கண்ணுத
லோன்கடல் தில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென்(று)
ஏங்கும் மணமுரசே. (296)

பொருள்: பழமையை உடைய பிரமன், திருமால் ஆகிய இருவருக்கும் மூலகாரணன், அழகிய நெற்றிக் கண்ணை உடையவன் ஆகிய சிவபெருமானது கடல்சூழ்ந்த தில்லையை ஒத்த — வாரால் கட்டப்பட்ட பெருத்த முலைகளை உடையவளது திருமணத்திற்காக முரசு ஒலிக்கப்படுகிறது. (சுற்றத்தாரால் ஒலிக்கப்படுகிறது) அதனால் மங்கலமாக நிறைகுடங்களை வைத்திடுக, மணி, முத்து, பொன் இவற்றால் அமைந்த வாயிற் தோரணங்கள்

Koviloor Digital Library

எங்கும் ஓங்குக, மங்கல இசைக்கருவிகள் ஒலிப்பனவாக (என்று கண்டோர் கூறினார்கள்)

சொ.பொ.வி. நீடுக—நாட்டப்படுக, தூரியம் — இசைக் கருவிகள், ஏரணி — அழகு செய்கின்ற, வாரணம் — கச்சை கட்டப்பெற்ற.

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்குள்ளே சிவமணம் பூத்து இருப்பதைக் கண்டவர்கள் மகிழ்ந்து கூறல்.

32. ஐயுற்றுக் கலங்கல்

கொளு: நல்லவர் முரசுமற்(று) அல்லவர் முரசெனத்
தெரிவ ரிதென அரிவை கலங்கியது.

தலைவி ஒலிக்கப் படுகின்ற முரசு தலைவன் முரசா, அல்லது அயலவர் மணமுடிக்க வருகின்ற முரசா என ஐயப்பட்டுக் கூறியது.

அடற்களி யாவர்க்கும் அன்பர்க்(கு)
அளிப்பவன் துன்பஇன்பம்
படக்களி யாவண் டறைபொழில்
தில்லைப் பரமன்வெற்பில்
கடக்களி யானை கடிந்தவர்க்
கோஅன்றி நின்றவர்க்கோ
விடக்களி யாம்நம் விழுநகர்
ஆர்க்கும் வியன்முரசே. (297)

பொருள்: மிகுந்த மகிழ்ச்சி கொண்டு விளங்கும் நம் இல்லத்தின்கண் விளங்குகின்ற இப்பெரிய முரசம் — பிறவியால் வருகின்ற இன்ப துன்பங்களைத் தொலைத்திட — தன் அன்பர்கள் யாவர்க்கும் பேரின்பத்தை வழங்கும், வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகளை உடைய தில்லைப் பெருமானது மலையிடத்தில் மத யானை நம்மீது வாராமல் காத்தவருக்கோ அன்றி நம் இயல்புக்கு உரியவர் அல்லாத வருக்கோ ஒலிக்கிறது. அறியேன் (என்று தலைவி கூறிக் கொண்டாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி. அடற்களி — உறுதியான பேரின்பம், கடற்களி—யானை, நின்றவர்க்கோ — ஒழிந்தவர்களுக்சோ, விடக்களி—மிகவும் மகிழ்ச்சியுடைய விழுநகர் — பெருமை யுடைய இல்லம்.

தத்துவப்பொருள்: மணமுரசு கேட்டுத் திருவருள் மகிழ்ந்திடச் சிவத்தலைவி அம்முரசு தன்னிடத்தில் ஆட் பட்ட ஆன்மாவிற்கோ மற்றவர்க்கோ என ஐயுற்றது.

33. நிதிவரவு கூறா நிற்றல்

கொளு: மகிழ்தரு மனத்தொடு வண்புகழ்த் தோழி
திகழ்நிதி மடந்தைக்குத் தெரிய உரைத்தது.

மகிழ்ச்சியுடைய மனத்தோடு புகழை உடைய தோழி மனைக்கிழத்தியாகிய நற்றாய்க்குத் தெளிவாக உரைத்தது.

என்கடைக் கண்ணினும் யான்பிற
ஏத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்தில்லைச்
சங்கரன் தாழ்கயிலைக்
கொன்கடைக் கண்தரும் யானை
கடிந்தார் கொணர்ந்திறுத்தார்
முன்கடைக் கண்ணிது காண்வந்து
தோன்றும் முழுநிதியே. (298)

பொருள்: கடையனாகிய என்னிடத்தும் யான் பிற தெய்வங்களை வணங்காத வண்ணம் எனக்குக் கடைக்கண் அருளை வைத்த முதிர்ந்த தில்லைக்கண் உள்ளவனாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள கயிலைமலையிடத்துத் தமக்கு ஒரு பயனும் கருதாது எமக்கு இறுதியை உண்டாக்க வந்த மதயானையை அன்று ஓட்டியவர். இன்று நம்முடைய இல்லத்து வாயினில் குறைவிலாத செல்வத்தைக் கொண்டு வந்துள்ளார். இதனை நீ காண்பாயாக (என்று தோழி நற்றா யிடம் கூறினாள்.)

சொ.பொ.வி.: என்கடைக் கண்ணினும் — கடைய னாகிய என்னிடத்தும், பிற — பிற தெய்வங்கள், கொன்

Koviloor Digital Library

கடைக்கண்தரும் — நமக்கு இறுதியைத் தரும், முன்கடைக் கண் — இல்லத்தின் முன்னே, முழுநிதி — சுற்றத்தார் கூறிய நிதிகள்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தை எய்துவதற்காக உடல், பொருள் ஆகியவற்றை அடைக்கலப் படுத்தியதைத் திருவருள் உவந்து உரைத்தது.

வரைபொருட் பிரிதல் முற்றிற்று

19. மணம் சிறப்புரைத்தல்

தலைவன் திருமணத்திற்குச் சிறந்து நிற்றலைத் தோழி தலைவிக்கும், செவிலிக்கும், நற்றாய்க்கும் சிறப்புடன் கூறுதல், இது ஒன்பது துறைகளை உடையது.

1. மணமுரசு கூறல்

கொளு: வரைவு தோன்ற மகிழ்வுறு தோழி
நிரைவ ளைக்கு நின்று ரைத்தது.

திருமணச் செய்தி தோன்ற மகிழ்வுற்ற தோழி வளையலை உடைய தலைவிக்குச் சொல்லியது.

பிரசம் திகழும் வரைபுரை
யானையின் பீடழித்தார்
முரசம் திகழு முருகியம்
நீங்கும் எவர்க்குமுன்னாம்
அர(சு)அம் பலத்துநின்(று) ஆடும்
பிரானருள் பெற்றவரின்
புரைசந்த மேகலை யாய்துயர்
தீரப் புகுந்துநின்றே. (299)

பொருள்: அழகான மேகலையை அணிந்த தலைவியே, யாவருக்கும் முன்னோனாக விளங்கும் அரசனும், தில்லையம்பலத்தில் நின்று திருநடம் புரியும் தலைவனும் ஆகிய சிவபெருமானது அருள் பெற்றவரைப் போல நம்முடைய துன்பம் அகல, மலை போன்ற யானையினது

Koviloor Digital Library

வலிமையை நம் பொருட்டு அழித்தவரது மணமுரசம் ஒலிக்கின்றது. அதுவே அன்றி வெறியாடல் காரணமாக முழக்கப்பெற்ற இசைக் கருவிகளும் முழக்கத்தை நிறுத்தின. இனிக் குறையொன்றும் இல்லை (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி. பிரசம் — தேன், பீடு — வலிமை, முருகியம் — இசைக் கருவிகள், பிரான் — சிவபெருமான், புரைசந்த மேகலை — அழகியமேகலை.

தத்துவப்பொருள் : அருள்தரும் நேரம் வந்துவிட்டது என்று நாதஓசை அனுபவத்தைத் திருவருள் சிவத்திற்கு உரைத்தது.

2. மகிழ்ந்துரைத்தல்

கொளு: மன்னிய கடியிற் பொன்னறுங் கோதையை
நன்னுதல் தோழி தன்னின் மகிழ்ந்தது.

நறுநாற்றமுடைய மாலையினை உடைய தலைவியின் நிலைபெற்ற திருமணத்தினை நினைந்து தோழி தனக் குள்ளே கூறியது.

இருந்துதி என்வயின் கொண்டவன்
யான்எப் பொழுதுமுன்னும்
மருந்து திசைமுகன் மாற்கரி
யோன்தில்லை வாழ்த்தினர்போல்
இருந்து திவண்டன வால்எரி
முன்வலம் செய்(து)இடப்பால்
அருந்துதி காணும் அளவும்
சிலம்பன் அருந்தழையே. (300)

பொருள்: அன்பர்கள் வழிபாடு செய்யும் துதிகளை என்னிடத்தும் உண்டாக்கிக் கொண்டவனும் நான் எப்பொழுதும் நினைக்கின்ற இன்சுவை மருந்தாக உள்ளவனும் பிரமனுக்கும் திருமாலும் அரியவனுமாகிய சிவபெருமானது தில்லையை வாழ்த்தினவர்களைப் போல சிலம்பனாகிய தலைவன் தந்த தழைகள் இப்பொழுது — தீயை வலம் வந்து வசிட்ட முனிக்கு இடப்பால் உள்ள

Koviloor Digital Library

அருந்ததி மீனைக் காணுமளவும் வாடாமல் இருந்து விளங்கின.

சொ.பொ.வி.: மணநிகழ்ச்சியில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் என்பது ஒரு மரபு. அச்சடங்கு நிகழ்வில் தோழி தலைவியை நினைத்தது முடித்தாள் என்ற குறிப்பு தழை வாடவில்லை என்பதால் பெறப்படுகிறது. இருந்துதி — பெரியதுதிப்பாடல், உன்னும் — நினைக்கும், திசைமுகன் — நான்முகன், திவண்டன — விளங்கின, பால் — பக்கம், அருந்துதி — அருந்ததி,

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்கு அருள் வழங்கும் நிலையில் நிலைத்திருந்த சிவத்தின் அருள் தன்மையை வியந்து கூறியது.

3. வழிபாடு கூறல்

கொளு: மணமனை காண வந்தசெவி லிக்குத்
துணைமலர்க் குழலி தோழி சொல்லியது.

திருமண மனை காணவந்த செவிலித்தாய்க்கு மலரணிந்த கூந்தலை உடைய தோழி சொல்லியது.

சீரியல் ஆவியும் யாக்கையும்
என்னச் சிறந்தமையால்
காரியல் வாட்கண்ணி எண்ணக
லார்கம லங்கலந்த
வேரியும் சந்தும் வியல்தந்
தெனக்கற்பின் நிற்பர்அன்னே
காரியல் கண்டர்வண் தில்லை
வணங்கும்எம் காவலரே" (301)

பொருள்: தாயே, கரிய கண்டத்தை உடைய சிவ பெருமானது தில்லையை வணங்கும் எம்முடைய காவல ராகிய தலைவன், பெருமை பெற்ற உயிரும் உடம்பும்போல் தம்முள் சிறந்தமையால் கரிய கண்களை உடையவளாகிய உம்முடைய மகளது கருத்தை மீற மாட்டார். தாமரை மலர்த்தேனின் சுவையும், சந்தன மரத்தின் மணமும்

Koviloor Digital Library

சேர்ந்து விளங்கும் பொருள்போலத் தம்முள் இயைந்து இவர்கள் தங்களின் குலப்பெருமையும் குணமும் தோன்ற நின்று வாழுகின்றனர். இவர்கள் வாழ்க்கையில் தலைவியின் வழியின் கண்ணேதான் தலைவன் நிற்பார் (என்று தோழி செவிலியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: சீரிய — பெருமைமிக்க, காரியல் — கரிய இயல்பு, வேரி — மணம், கற்பின் — திருமண வாழ்வில்.

தத்துவப்பொருள் : சிவத்தின் திருவுளக் குறிப்பை ஆன்மா கடவாது என்பதைத் திருவருள் திரோதைக்கு உரைத்தது.

4. வாழ்க்கை நலங்கூறல்

கொளு: மணமனைச் சென்று மகிழ்தரு செவிலி
அணிமனைக் கிழத்திக்(கு) அதன்சிறப்(பு) உரைத்தது.

திருமணமனைக் கண் சென்று மகிழ்ந்த செவிலித்தாய் அணிகளை உடைய நற்றாய்க்குத் தலைவன் தலைவியரின் வாழ்க்கைச் சிறப்பை உரைத்தது.

தொண்டினம் மேவும் கடர்க்கழ
லோன்தில்லைத் தொல்நகரில்
கண்டின மேவும்இல் நீஅவள்
நின்கொழு நன்செழுமென்
தண்டின மேவுதிண் தோளவன்
யானவள் தற்பணிவோள்
வண்டின மேவும் குழலாள்
அயல்மன்னும் இவ்அயலே. (302)

பொருள்: தொண்டர்கள் கூட்டத்தின் இடையே எழுந்தருளும் ஒளி பொருந்திய திருவடியை உடைய சிவபெருமானது தில்லையாகிய பழைய நகரில் நான் கண்ட தலைவன் தலைவி இல்லம் நம் இல்லத்தைப் போன்றது. உன்னுடைய மகள் உன்னை ஒப்பாள். திண்ணிய தோள்களை உடைய தலைவன் உன் கொழுநனோடு ஒப்பான். அங்குக் குற்றேவல் செய்கின்ற என்மகள்

Koviloor Digital Library

என்னை ஒப்பாள். அவளுடைய சுற்றுப்புறமும் நம் சூழலை ஒக்கும். வேறு என்ன சொல்ல வேண்டியது? (என்று செவிலி நற்றாயிடம் கூறினாள்.)

சொ.பொ.வி. :தொண்டினம் மேவும்—தொண்டர் கூட்டத்துள் விளங்கும், இல் — இல்லம், தண்டினமேவும் — செழுமையான.

தத்துவப்பொருள்: திரோதை பரைக்கு ஆன்மாவும் சிவமும் சேர்ந்திருக்கும் இன்பத்தை உரைத்தது.

5. காதல் கட்டுரைத்தல்

கொளு: சோதி வேலவன் காதல் கட்டுரைத்தது.

ஒளி பொருந்திய வேலை உடைய தலைவனின் உயர்ந்த அன்பைக் கூறியது.

பொட்டணி யான்நுதல் போயிறும்
பொய்போல் இடையெனப்பூண்
இட்டணி யான்தவி சின்மலர்
அன்றி மிதிப்பக் கொடான்
மட்டணி வார்குழல் வையான்
மலர்வண் டுறுதல்அஞ்சிக்
கட்டணி வார்சடை யோன்தில்லை
போலிதன் காதலனே. (303)

பொருள்: தலைவன், நெற்றிக்குப்பாரம் என்று எண்ணி பொட்டணியான். மகுடம்போல் உள்ள நீண்ட சடையை உடைய சிவபெருமானது தில்லையை ஒத்தவளின் பொய் போலும் இடை ஒடிந்துவிடும் என்று எண்ணி தலைவிக்கு அணிகலன்களை அணிவிக்க மாட்டான். அடிநோகும் என்று காம்பு களைந்த அனிச்சமலர்கள் மீது அன்றி வேறு மலர்களைக் கட்டிலில் இட்டு நடக்கவிடான். வண்டுகள் மொய்த்துப் பாரத்தைத் தந்து விடும் என அஞ்சி புதிய பூக்களை அவள் தலையில் சூடமாட்டான் (என்று செவிலி தலைவனுடைய பெருமையைக் கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி. பொட்டணியான் — திலகம் அணியான், தவிசில்—கட்டில், கொடான்—வாய்ப்புத் தரமாட்டான், மட்டு—தேன்.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருமையினை அறிந்த ஆன்மாவின் செயல்களைத் திரோதை பரைக்கு அறிவித்தது.

6. கற்பறிவித்தல்

கொளு: விற்பொழி நுதலி கற்பறி வித்தது.

வில்லைஒத்த நெற்றியை உடையவளுடைய தலைவி யது கற்பின் (இல்வாழ்க்கைத் திறம்) திறத்தை அறிவித்தது.

தெய்வம் பணிகழ லோன்தில்லைச்
சிற்றம்பலம் அனையாள்
தெய்வம் பணிந்தறி யாள்என்று
நின்று திறைவழங்காத்
தெய்வம் பணியச்சென் றாலும்மன்
வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணி யன்னார்
பரி(சு)இன்ன பான்மைகளே. (304)

பொருள்: பிறரால் வணங்கப்படுகின்ற சிறு தெய் வங்கள் வணங்குகின்ற திருவடிகளை உடைய தில்லைச் சிற்றம்பலத்தை ஒத்த தலைவி என்றும் பிற தெய்வங் களைத் தொழுதறியாள். அது போலத் தலைவனாகிய இவன் பகைவர்கள் தன்னுடைய காலில் விழுந்து வணங்கும் வண்ணம் அவர்களை வெல்வதற்குப் போர் மேல் சென்றாலும் போரை முடித்துவிட்டு உடன் திரும்புவான். மேலும் தலைவி வாழும் இல்லத்தை விட்டு வேறு இடங்களில் தங்கி அறியான். கடல் ஈன்ற முத்தினைப் போன்ற இவர்கள் இயல்பு இத்தன்மை யானதாம் (என்று செவிலி கூறினாள்)

சொ.பொ.வி. தலைவி கொழுநனை அன்றி வேறு தெய்வத்தை வணங்கி அறியாள் என்பது பெறப்படுகிறது. நின்று — அடிமையாக நின்று, தெய்வம் பணியச் செய்தல்

Koviloor Digital Library

— பகைவர் மேல் அம்பு எய்தச் செய்தல், பௌவம் — கடல், மணி—முத்து. கடலில் பிறந்த முத்து என்பதால் உயர்ந்த குடி என்பது பெறப்படுகிறது.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவை அன்றி வேறு பொருள் உளதாகக் கருதாது என்பதும் ஆன்மா சிவத் தொண்டு புரியப் பிரிந்து சென்றாலும் மீண்டும் சிவத்தையே வந்து அடையும் என்பதும் பெறப்படுகிறது.

7. கற்புப் பயப்புரைத்தல்

கொளு: கற்புப் பயந்த அற்புதம் உரைத்தது.

கற்புடையமையைத் தந்த அழகைச் செவிலி கூறுவது.

சிற்பம் திகழ்தரு திண்மதில்
தில்லைச்சிற் றம்பலத்துப்
பொற்பந்திய யன்ன சடையவன்
பூவணம் அன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனும்
கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல்செல்
லாதவன் ஈர்ங்களிறே. (305)

பொருள்: சிற்பத் தொழில் சிறந்து விளங்கும் மதில்களை உடைய தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ளவர், பொன் தகடுகளைப் பரப்பியதைப் போன்ற செஞ்சடையை உடையவர். இத்தகைய சிவபெருமானது பூவண நகரை ஒத்த பொன் போன்ற தலைவியின் கற்பு அந்திக் காலத்தில் தோன்றும் அருந்ததி என்ற மீனையும் கற்பால் வெல்லும். அதனால், தலைவனுடைய பலம் பொருந்திய யானையும் நிலத்தைக் கடந்து நெடுந்தூரம் சென்றாலும் வேறு எங்கும் தங்காது அவனுடைய இல்லத்திற்கே வந்து தங்கும்.

சொ.பொ.வி.: யானை தங்காது என்பதால் தலைவன் தங்கமாட்டான் என்பது பொருள். பொற்பந்தி— பொன்னைப் போன்ற அழகான வரிசை, பூவணம் — ஒரு சிவத்தலம், வடமீன் — அருந்ததி, படி — நிலம், இற்பந்தி

Koviloor Digital Library

வாய்அன்றி — இல்லின்கண் உள்ள ஒரு பகுதியன்றி, வைகல் — வெளியிடம்.

தத்துவப்பொருள்: சிவபோகம் ஆன்மா வின் கண் மிக்குத் தோன்றுதலால் சிவமும் ஆன்மாவும் வேறின்றிருப் பதை உணர்ந்தது.

8. மருவுதல் உரைத்தல்

கொளு: இருவர் காதலும் மருவுதல் உரைத்தது.

இருவர் காதலின் சிறப்பைப் பொருத்தமுற, செவிலி உரைத்தது.

மன்னவன் தெம்முனை மேற்செல்லு
மாயினும் மாலரியே(று)
அன்னவன் தேர்புறத்(து) அல்கல்செல்
லாது வரகுணனாம்
தென்னவன் ஏத்துசிற் றம்பலத்
தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவல்அன் னாளும்மற்(று)
ஓர்தெய்வம் முன்னலளே. (306)

பொருள்: மன்னவனாம் தலைவன் போர்முனைக்குச் செல்வானே ஆயினும் ஆண்சிங்கத்தைப் போன்ற அவனின் தேர் நிலைக்குத் திரும்புமே அன்றி வேறிடத்தில் தங்குதல் அறியாது. வரகுண பாண்டியன் என்பான் வணங்கும் தில்லைச் சிற்றம் பலத்தில் எழுந்தருளியிருப்பவனும், தேவர் களுக்கு முதல்வனும் ஆகிய தில்லை அம்பலத்தானின் மூவலூரை ஒத்த தலைவி வேறு ஒரு தெய்வத்தைத் தெய்வமெனக் கருதமாட்டாள்.

சொ.பொ.வி.: தெம்முனை — போர்க்களம், அரி — சிங்கம், அல்கல் — தங்குதல், தென்னவன் — பாண்டியன், மூவல் — ஓர் சிவத்தலம், முன்னவள் — நினையாள்.

தத்துவப்பொருள்: ஆன்மாவும் சிவமும் பிரிப்பின்றி ஒன்றிச் சிவானந்தமாய் விளங்குவதைத் திரோதை தெரிவித்தலாம்.

Koviloor Digital Library

9. கலவி இன்பம் கூறல்

கொளு: நன்னுதல் மடந்தை தன்னலங் கண்டு
மகிழ்தூங்(கு) உளத்தோ(டு) இகுளை கூறியது.

அழகிய நெற்றியை உடைய தலைவி பெற்ற நலத்தைக் கண்டு மகிழ்ச்சி மிக்க உள்ளத்தோடு செவிலி கூறியது.

ஆனந்த வெள்ளத்(து) அழுந்தும்ஓர்
ஆருயிர் ஈருருக்கொண்(டு)
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத்
தால்ஒக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத்(து) அறைகழ
லோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற்
றா(து)இவ் வணிநலமே. (307)

பொருள்: இன்ப வெள்ளத்தில் அழுந்தும் ஓர் உயிர் ஒருருவத்தில் இன்பத்தைத் துய்த்தல் இயலாதது. ஆதலால் இரண்டு உடம்பு எடுத்து இன்பத்தில் திளைத்ததோடு ஒக்கும். தலைவன் தலைவி கூடிப்பெறும் இன்பம். மேலும் சிற்றம்பலத்தில் எழுந்தருளி ஆனந்த வெள்ளத்தைச் செய்யும், ஒலிக்கும் கழலணிந்த தில்லை யம்பலத்தானின் அருள் பெற்றவர்கள் எய்தும் இன்பம் போல இவர்கள் இருவரின் இன்பமும் ஒருகாலத்தும் குறைவுபடாது. ஆதலால் இவர்கள் பெற்ற இன்பம் முதிராதது ஆகும்.

சொ.பொ.வி.: ஒருருக்கொண்டு — தலைவி, தலைவன் உருவங்கள், அணிநலம் — அழகிய கலனணி, நலம்— இளமை, முற்றாது — முதுமை அடையாது.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவம் என்ற பொருளால் வேறாயினும் நுகர்தல் என்ற தன்மையால் இரண்டற்றது என்பது பெறப்படுகிறது.

மணம் சிறப்புரைத்தல் முற்றிற்று.

Koviloor Digital Library

20. ஓதற்பிரிவு

இல்லறத்தில் தலைவன் தலைவியர் வாழுகின்ற பொழுது தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல் உண்டு. அத்தகைய பிரிவுகள், ஓதல், காவல், தூது, துணை, பொருள், பரத்தை என்ற ஆறு காரணங்களால் நிகழும் இதில் ஓதல் பிரிவு என்பது அறம் முதலிய நான்கினையும் கூறும் பொருள்களையும் அவற்றை அறிவிக்கும் கருவி நூல்களை யும் கற்பதற்காகப் பிரியும் பிரிவாகும். இவ்வாறு கூறுவதால் திருமணம் செய்வதற்கு முன்புவரை தலைவன் கல்வி இல்லாமல் இருந்தானா என்ற ஐயம் எழலாம். அவ்வாறு அன்று, திருமணத்திற்கு முன் உள்நாட்டுக் கல்வியும், திருமணத்திற்குப் பின் பிறநாட்டுக் கல்வியும், பிறமொழிக் கல்வியும் கற்றலாம். இது நான்கு துறைகளை உடையது.

1. கல்வி நலங்கூறல்

கொளு: கல்விக்(கு) அகல்வர் செல்வத் தவரெனச்
செறிகுழற் பாங்கிக்(கு) அறிவறி வித்தது.

இல்வாழ்க்கையாம் செல்வத்தை உடைய தலைவர் கல்வியின் காரணமாகப் பிரிவார் என்று சுருண்ட கூந்தலை உடைய தோழிக்கு அவளுடைய அறிவு அறிவித்தது.

சீரள வில்லாத் திகழ்தரு
கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவுசென்
றார்அம் பலத்துள்நின்ற
ஓரள வில்லா ஒருவன்
இருங்கழல் உன்னினர்போல்
ஏரள வில்லா அளவினர்
ஆகுவர் ஏந்திழையே. (308)

பொருள்: தலைவியே, நன்மைக்கு எல்லையின்றி விளங்கும் கல்வியாகிய மேரு மலையின் அளவில்லாத எல்லையை அடைந்தவர்கள் சிற்றம்பலத்தின் கண் நின்ற

Koviloor Digital Library

அளவில்லாத ஒப்பற்ற சிவபெருமானது திருவடிகளை அறிந்து தியானித்தவர்களைப் போல நன்மையைப் பெற்றவர் ஆவர் (என்று தோழி தலைவிக்குக் கூறினாள்)

சொ.பொ.வி.: : சீரளவில்லாத — மேன்மையாம் நன்மைக்கு அளவில்லாத, வரை—மலை, ஆரளவு—மிக்க உயரமான, ஓரளவில்லாத — அளவு கூற முடியாத, இருங் கழல்—திருவடி, உன்னினர் — எண்ணியவர், ஏரளவில்லா — எல்லையில்லாத நன்மை.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தைச் சார்ந்து சிவானந்தத்தில் அழுந்துவதற்கு அனுபவ அறிவை விரும்புவதாகக் குறிப்பிடப்படுகிறது.

2. பிரிவு நினைவுரைத்தல்

கொளு: கல்விக்கு அகல்வர் செல்வத் தவரெனப்
பூங்குழல் மடந்தைக்குப் பாங்கி பகர்ந்தது.

இல்வாழ்க்கை உடைய தலைவர் கல்விக்காகப் பிரிவர் என்று பூமணம் பொருந்திய கூந்தலை உடைய் தலைவிக்குத் தோழி கூறியது.

வீதலுற் றார்தலை மாலையன்
தில்லைமிக் கோன்கழற்கே
காதலுற் றார்நன்மை கல்விசெல்
வீதரும் என்பதுகொண்டு
ஓதலுற் றார்உற் றுணர்தலுற்
றார்செல்லல் மல்லழற்கான்
போதலுற் றார்நின் புணர்முலை
யுற்ற புரவலரே. (309)

பொருள்: இறந்தவர்களின் தலையோடுகளை மாலையாக அணிந்தவனும், தில்லைப் பெரியோனுமாகிய சிவபெருமான் திருவடிக்கண் அன்புற்றவர்கள் பெறும் நன்மையைக் கல்வி தரும் என்று கருதி, கல்வியிற் சிறந்த பெரியோர்களை அடைந்து எல்லா நூல்களையும் உணர, உன்னுடைய மேனியை அடைந்து இன்பம் அடைந்த

Koviloor Digital Library

தலைவன் துன்பம் நிறைந்த காட்டு வழியே செல்ல எண்ணினார் என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

சொ.பொ.வி.: வீதலுற்றார் — வீழ்தலுற்றார் (இறந்தவர்) காதலுற்றார்— அன்புடையவர்கள், செல்வீ — தலைவி, ஓதலுற்றார் — கல்வியில் சிறந்தவர், உற்றுணர்தல் உற்றார் — அவரை அடைந்து கற்க எண்ணினார், மல்அழல்கான் — மிக்க நெருப்பை (அச்சத்தை) உடைய காடு.

தத்துவப்பொருள்: அனுபவ அறிவு பெறுவதற்கு ஆன்மா பிரிதலை உணர்த்தியது.

3. கலக்கம் கண்டுரைத்தல்

கொளு: ஓதற் (கு) அகல்வர் மேதக் கவரெனப்
பூங்கொடி கலக்கம் பாங்கிகண்(டு) உரைத்தது.

ஓதல் பிரிவுக்குச் செல்வார் மேன்மை உடைய தலைவர் என்று பூங்கொடி போன்ற தலைவி கலக்கமடைய அதனைக்கண்ட தோழி உரைத்தது.

கற்பா மதில்தில்லைச் சிற்றம்
பலமது காதல்செய்த
விற்பா விலங்கல்எங் கோனை
விரும்பலர் போலஅன்பர்
சொற்பா விரும்பினர் என்னமெல்
லோதி செவிப்புறத்துக்
கொற்பா இலங்கிலை வேல்குளித்
தாங்குக் குறுகியதே. (310)

பொருள்: கல் பரப்பப் பட்ட மதிலை உடைய தில்லைச் சிற்றம்பலத்தான் தான் விரும்பி மேரு மலையை வில்லாக ஏந்தினான். அத்தகைய எம் தலைவன் ஆகிய சிவபெருமானை விரும்பாதவ்ரைப் போலத் தலைவி வருந்தினாள். சொற்களால் ஆகிய கவிதை கொண்ட அரிய நூல்களைக் கற்க விரும்பினார் தலைவர் என்று நான் சொல்ல, அச்சொல் மெல்லிய கூந்தலை உடைய தலைவி யின் செவியில் வேல் சென்று தைத்தலைப் போல சென்று

Koviloor Digital Library

எய்தியது. ஆதலால் தலைவி வருந்தினாள். இனிப் பிரிவை எவ்வாறு தாங்குவாளோ (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: பிரிவார் என்ற சொல்லுக்கே வருந்தியவள் பிரிந்தால் என்ன ஆவாளோ என்று வருந்தியது. கற்பா — கற்கள் பரந்த, காதல் செய்த — விரும்பிய, வில்பா விலங்கல் — வில்லாக மலையைக் கொண்ட, சொல்பா — சொல்லால் ஆகிய பாக்கள், மெல்லோதி — மேன்மையான கூந்தல், கொல்பா — கொல்லனால் செய்யப்பெற்ற, குளித்தாங்கு — சென்றது போல்.

தத்துவப்பொருள்: ஆன்மாவின்பால் சிவத்திற்குக் கருணைகுறைவு இல்லை என்பதைத் திருவருள் உணர்ந்தது.

4. வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல்

கொளு: தீதறு கல்விக்குச் செல்வன் செல்லுமெனப்
போதுறு குழலி புலம்பியது.

தீமையற்ற கல்விக்காகத் தலைவன் பிரிகின்றான் என்பதற்காகத் தலைவி புலம்பிக் கூறியது.

பிரியா மையும்உயிர் ஒன்றா
வதும்பிரி யிற்பெரிதும்
தரியா மையும்ஒருங் கேநின்று
சாற்றினர் தையல் மெய்யிற்
பிரியாமை செய்துநின் றோன்தில்லைப்
பேரியல் ஊரர்அன்ன
புரியா மையும்இது வேயினி
என்னாம் புகல்வதுவே. (311)

பொருள்: தையல் நாயகியாம் உமையவள் தன் திருமேனியிலிருந்து பிரியாமையை உடைய கூத்தப் பெருமானது தில்லையை ஒத்த பெருமையை உடைய தலைவர், பிரியாக் காலத்தில் இருவரும் உயிர் ஒன்றாக இருப்போம் என்றும், பிரியின் தாங்க மாட்டோம் என்றும் நம்மிடையே அக்காலத்தில் கூறினார். அத்தகையவர் இப்பொழுது பிரியாமை என்பதைப் பொய்யாக்கி

Koviloor Digital Library

விட்டார். ஆதலால் இனி அவர் கூறிய பிறவும் அங்ஙனமே யாகும். இனி நாம் என்ன சொல்வோம். (என்று தலைவி வருந்தினாள்)

சொ.பொ.வி: திருமணம் ஆகிய புதிதில் பிரியோம், பிரிந்தால் தரியோம் என்று கூறியவர் இப்பொழுது சொல் தவறிவிட்டார் என்று தலைவி வருந்துவது பெறப்படுகிறது. தரியாமை — ஆற்றாமை, சாற்றினர் — கூறினர், தையல் — உமையவள், ஊரர்அன்ன — தில்லையை ஒத்தவன், புரியாமை — அவள் செயல் செய்யாமை, இதுவே — பொய்ம்மை யாம், புகல்வது — சொல்வது.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் பிரிதலைச் சிவம் பலவாறு எடுத்துக் கூறியது.

ஓதற்பிரிவு முற்றிற்று

21. காவற் பிரிவு

நாட்டினைக் காக்கும் அரசன் ஆணைவழி நாட்டு மக்களுக்கு நீதி முறை வழங்கவும், நாட்டை வழிப் படுத்தவும், அறங்களைப் பாதுகாக்கவும் பகைவர் களிடத்திலிருந்து நாட்டைக் காக்கவும் — இவற்றில் ஏதோ ஒன்று காரணமாகத் தலைவன் பிரிதல். இது இரண்டு துறைகளை உடையது.

1. பிரிவு அறிவித்தல்

கொளு: இருநிலம் காவற்(கு) ஏகுவர் நமரெனப்
பொருசுடர் வேலோன் போக்(கு) அறிவித்தது.

பெரிய பூமியைக் காப்பதற்காகச் செல்கின்றார் நம்முடைய தலைவர் என்று சுடர் பொருந்திய வேலை உடைய தலைவனின் பிரிவைக் கூறியது.

மூப்பான், இளையவன், முன்னவன்,
பின்னவன், முப்புரங்கள்
வீப்பான், வியன்தில்லை யான்அரு
ளால்விரி நீர்உலகம்

Koviloor Digital Library

காப்பான் பிரியக் கருதுகின்
றார்நமர் கார்கயற்கண்
பூப்பால் நலம்ஒளி ரும்புரி
தாழ்குழல் பூங்கொடியே. (312)

பொருள்: கயல் போன்ற கண், மணம் பொருந்திய சுருண்ட கூந்தல், ஆகியவற்றை உடைய பூங்கொடி போன்றவளே, அனைவர்க்கும் மூத்தவன், எல்லோர்க்கும் இளையவன், உலகத் தோற்றத்திற்கு முன்னவன், யாது அழிந்தாலும் அழியாத பின்னவன், முப்புரங்களை எறித்தவன், தில்லைக்கண் உள்ளவன் ஆகிய சிவபெருமான் திருவருளால் கடலால் சூழப்பட்ட உலகத்தைக் காக்க நம் தலைவர் பிரியக் கருதுகிறார் (எனத் தோழி கூறியது)

சொ.பொ.வி.: வீப்பான் — அழிப்பான், விரிநீர் — கடல்நீர், பூப்பால் — பூக்களால்.

தத்துவப்பொருள்: உலகம் இன்பமாக வாழ்வதற்காக ஆன்மா பிரிந்ததனைத் திருவருள் சிவத்தலைவிக்கு உரைத்தது.

2. பிரிவு கேட்டு இரங்கல்

கொளு: மன்னவன் பிரிவு நன்னுதல் அறிந்து
பழங்கண் எய்தி அழுங்கல் சென்றது.

தலைவனுடைய பிரிவைத் தலைவி அறிந்து வருத்தமுற்று மயக்கத்தை அடைந்தது.

சிறுகண் பெருங்கைத்தின் கோட்டுக்
குழைசெவிச் செம்முகமாத்
தெறுகட் டழியமுன் னுய்யச்செய்
தோர்கருப் புச்சிலையோன்
உறுகண் தழலுடை யோன்உறை
அம்பலம் உன்னலரின்
துறுகண் புரிகுழ லாய்இது
வோஇன்று சூழ்கின்றதே. (313)

Koviloor Digital Library

பொருள்: தேன்மலர்களை அணிந்த சுருண்ட கூந்தலை உடையவளே, சிறிய கண்ணையும், பெரிய கையையும், வலிய கொம்பினையும், குழைந்த செவியினையும் சிவந்த முகத்தினையும் உடைய யானை என்மீது பாய்வதைத் தடுத்து — தாய் தந்தையரால் பாதுகாக்கப் படவேண்டிய நேரத்தில் எம்மைக்காத்த தலைவர் — இன்று மன்மதனை அழித்த நெற்றிக்கண்ணில் தீயை உடைய சிவபெருமானது தில்லைச் சிற்றம்பலத்தை நினையாதவர் போன்று வருந்தும் எமக்கு அவர் கண்ணோட்டம் இன்றிச் செய்கின்ற செயல் பிரிவுதானோ? (என்று தலைவி வருந்திக் கூறினாள்)

சொ.பொ.வி.: இளமையில் தாய் தந்தையராகிய பற்றுக்கோடு இருக்கும் பொழுது யானையினிடத்திலிருந்து எம்மைக் காப்பாற்றிய தலைவர், தாய் தந்தையரை விட்டுப் பிரிந்து அவரையே பற்றுக் கோடாக எண்ணியிருக்கும் எம்மைப் பிரியலாகுமோ எனத் தலைவி வருந்திய குறிப்புப் பெறப்படுகிறது. குழை செவி — மடங்கிய காதுகள், கட்டுஅழி — சினம்அழிய, உய்ய — காப்பாற்றிய, கருப்புச் சிலையோன் — கரும்புவில்லை உடைய மன்மதன், உறுகண்—நெற்றிக்கண், உன்னலர்—எண்ணாதவர், துறுகண் புரிகுழல் — தேனை உடைய பூ அணிந்த சுருண்ட கூந்தல்.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் பண்டைய நிலையைக் காட்டி இன்று பிரியக் கருதும் நிலைக்குச் சிவம் வருந்தியது.

காவற்பிரிவு முற்றிற்று

22. பகைதணி வினைப் பிரிவு

அரசர் இருவர் தம்முள் பகைத்துக் கொண்டு போரிட எண்ணியபோது போரால் வருகின்ற அழிவுக்கு வருந்தி அப்பகையை ஒழித்து அவர்களைச் சமாதானப் படுத்தி வாழச் செய்வதற்குப் பிரியும் பிரிவு. இது இரண்டு துறைகளை உடையது.

Koviloor Digital Library

1. பிரிவு கூறல்

கொளு: துன்னு பகைதணிப்ப மன்னவன் பிரிவு
நன்னறுங் கோதைக்கு முன்னி மொழிந்தது.

தம்முள் பகை கொண்டிருந்த பகைவர்களின் பகைமையைத் தணிக்கப் பிரிகின்ற தலைவனுடைய பிரிவை நறுமணமிக்க கூந்தலை உடைய தலைவிக்குத் தோழி கூறியது.

மிகைதணித் தற்(கு)அரி தாம்இரு
வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற்
றார்நமர் பல்பிறவித்
தொகைதணித் தற்(கு)என்னை ஆண்டுகொண்
டோன்தில்லைச் சூழ்பொழில்வாய்
முகைதணித் தற்(கு)அரி தாம்புரி
தாழ்தரு மொய்குழலே. (314)

பொருள்: எனக்கு வரவிருக்கும் பிறவிக் கூட்டத்தைத் தணிப்பதற்காக என்னை ஆட்கொண்டவனின் தில்லையின் கண் உள்ள சோலையில் தோன்றிய பூக்களை அணிந்துள்ள கூந்தலை உடைய தலைவியே—ஒருவருடைய செருக்கை மற்றொருவர் தணிப்பதற்கு இயலாதாக உள்ள இரு வேந்தர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட போராகிய பகையை மாற்றுவதற்கு நம் தலைவர் பிரியக் கருதினார் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: மிகை தணித்தல் — ஒருவரது பகையை மற்றொருவர் தணித்தல், அரிது — இயலாதது, மிடைந்த பகை — ஏற்பட்ட பகை, படர்தலுற்றார் — செல்லலுற்றார், நமர் — தலைவர், முகை — மொட்டு, தணித்தற்கு — தாழ்வு படுத்துவதற்கு, அரிதாம் — அரியதாம்.

தத்துவப்பொருள்: ஆன்மா தன் அனுபவத்தால் பேரின்பம் ஒன்றே வேண்டுவது என்று உலகத்தோர்க்கு அறிவிக்கப் பிரிந்தது.

Koviloor Digital Library

2. வருத்தம் தணித்தல்

கொளு: மணிப்பூண் மன்னவன் தணப்ப தில்லை
அஞ்சல் பொய்யென வஞ்சியைத் தணித்தது.

மணிகளால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்த தலைவன், நிரந்தரமாகப் பிரியவில்லை அஞ்சாதே, பொய் காண் எனத் தோழி தலைவியை ஆற்றுப்படுத்தியது.

நெருப்புறு வெண்ணெயும் நீருறும்
உப்பு மெனஇங்ஙனே
பொருப்புறு தோகை புலம்புறல்
பொய்யன்பர் போக்குமிக்க
விருப்புறு வோரைவின் ணோரின்
மிகுத்துநண் ணார்கழியத்
திருப்புறு சூலத்தி னோன்தில்லை
போலும் திருநுதலே. (315)

பொருள்: தன்னிடத்தில் மிக்க அன்பு கொண்டவர் களைத் தேவர்களைக் காட்டிலும் மிக உயர்த்துவான், பகை கொண்டவர்களை அழிப்பதற்குச் சூலத்தை ஏந்துவான் — அத்தகைய சிவபெருமானது தில்லையை ஒத்த அழகிய நெற்றியை உடையவளே, மயில் போன்றவளே, நெருப்பைச் சேர்ந்த வெண்ணெய் போன்றும், தண்ணீரைச் சார்ந்த உப்பு போன்றும் கரைந்து உருகிப் புலம்பாதே. தலைவ னுடைய பிரிவு பொய்ம்மையானதாகும் (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: பொருப்புறு தோகை — மலை சார்ந்த மயில் போன்றவள், புலம்புறல் — புலம்பாதே, நண்ணார் — பகைவர், திருப்புறு — திருப்புகின்ற (அசைக்கின்ற)

தத்துவப் பொருள்: சிவத் தலைவியைத் திருவருளானது நோக்கி, ஆன்மாவை வேறாகக் காணாதே, ஆன்மாவின் செயல்கள் பொய்யானதாகும் எனக் கூறியது.

பகைதணி வினைப்பிரிவு முற்றிற்று

Koviloor Digital Library

௨௨. வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவு

தலைவன் தனக்கு நண்பனாகிய அரசன், பகை அரசனால் வலிமை இழந்து துன்பப்படும் பொழுது அத்துன்பத்தை நீக்கிடச் செல்லும் பிரிவு. இது பதினாறு துறைகளை உடையது.

1. பிரிந்தமை கூறல்

கொளு: விறல்வேந்தர் வெம்முனைக்கண்
திறல்வேந்தர் செல்வர் என்றது.

வெற்றியை உடைய அரசன் போர் புரியும் போர் முனைக்கண் வீரமுடைய தலைவன் செல்வார் என்று தோழி தலைவிக்குக் கூறியது.

போது குலாய புனைமுடி
வேந்தர்தம் போர்முனைமேல்
மாது குலாயமென் நோக்கிசென்
றார்நமர் வண்புலியூர்க்
காது குலாய குழைஎழி
லோனைக் கருதலர்போல்
ஏதுகொ லாய்விளை கின்ற(து)இன்(று)
ஒன்னார் இடுமதிலே. (316)

பொருள்: மடமையும் அழகும் பொருந்திய தலைவியே, பூக்கள் நிறைந்து விளங்குகின்ற அழகிய கிரீடத்தை அணிந்த அரசனது போர்க்களத்திற்கு நம் தலைவர் சென்றார். தில்லை நகரின்கண் அழகு பெற்று விளங்கும் காதணிகளை உடைய (குழையை) சிவபெருமானைத் தியானிக்காதவர்களைப் போலப் பகைவருடைய மதில் இன்றைக்கு என்னவாயிற்றோ (என்று தோழி தலைவியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: மதில் என்னவாயிற்றோ என்பதால் மதில் இந்நேரம் அழிந்திருக்கும். ஆதலால் போரினை முடித்து தலைவர் விரைவில் வருவார் என்ற பொருள்

Koviloor Digital Library

கிடைக்கிறது. போது — மலர், குலாய — சூடிய, முடி — கிரீடம், மாது — தலைவி, குலாய — அழகுவிளங்கும், காது குலாய—காதில் விளங்கும், எதுகொல் — என்னவாயிற்றோ.

தத்துவப் பொருள்: ஆன்மா அகங்காரத்தை ஒடுக்கி அருள் பெற்றிட விரைவில் வரும் என்று திருவருள் சிவத்திற்குக் கூறியது.

2. பிரிவாற்றாமை கார்மிசை வைத்தல்

கொளு: வேந்தர்க்கு உற்றுழி விறலோன் பிரிய
ஏந்திழை பாங்கிக்(கு) எடுத்துரைத்தது.

தன் அன்புக்குரிய அரசனுக்காகத் தலைவன் பிரிய ஆபரணங்களை உடைய தோழிக்குத் தலைவி மிகுத்துச் சொன்னது.

பொன்னி வளைத்த புனல்சூழ்
நிலவிப் பொலிபுலியூர்
வன்னி வளைத்த வளர்சடை
யோனை வணங்கலர்போல்
துன்னி வளைத்தநம் தோன்றற்குப்
பாசறைத் தோன்றுங் கொலோ
மின்னி வளைத்து விரிநீர்
கவரும் வியன்முகிலே. (317)

பொருள்: காவிரி ஆற்றுநீர் சூழ்ந்து வளைந்திருக்கும் தில்லையில் வன்னித் தளிரால் வளைக்கப்பட்ட சடையை உடைய சிவபெருமானை வணங்காதவரைப் போல — அரசனுக்குரிய பகைவனை வளைத்துக் கொண்ட நம்முடைய தலைவனின் பாசறைக்கண் உலகை வளைத்த கடல்நீரைப் பருகிய மேகம் தோன்றுமோ (என்று தலைவி தோழிக்குக் கூறினாள்)

சொ.பொ.வி: மேகம் தோன்றிக் கார் காலத்தை நினைவூட்டத் தன்னைப் போலத் தலைவனும் பிரிவுக்காக வருந்தமாட்டாரா என்று தலைவி தன் வருத்தத்தைக் கார் காலம் மேல் வைத்துக் கூறினாள் என்பது பெறப்படுகிறது.

Koviloor Digital Library

வன்னி—மரத்தின் இல்லை, துன்னி—சேர்ந்து (பகைவரை), மின்னி—மின்னலைக் கொண்ட மேகம், விரிநீர்— கடல்நிர்.

தத்துவப்பொருள்: ஆன்மா தனக்குக் கிடைத்த அருள் அனுபவத்தைத் தம்மோடு பழகிய பரிபாகற்கு உணர்த் திடப் பிரிந்தது. அவ்வாறு பிரிந்திருக்கும் ஆன்மாவிற்கு தன்நிலை தெரியுமோ என்று சிவம் எண்ணியது.

3. வான்நோக்கி வருந்துதல்

கொளு: மானோக்கி வடிவு நினைந்தோன்
வானோக்கி வருந்தியது.

மான் போன்ற நோக்கத்தை உடைய தலைவியைப் பிரிந்த தலைவன் ஆகாயத்தினை நோக்கிக் கூறியது.

கோலித் திகழ்சிற(கு) ஒன்றின்
ஒடுக்கிப் பெடைக்குருகு
பாலித் திரும்பனி பார்ப்பொடு
சேவல் பயில்இரவின்
மாலித் தனையறி யாமறை
யோன்உறை அம்பலமே
போலித் திருநுத லாட்(கு)என்ன
தாங்கொல்என் போதரவே. (318)

பொருள்: குஞ்சுகளையும் பெடையையும் தன் சிறகு களுக்குள் ஒடுக்கிப் பாதுகாத்துச் சேவல் ஒன்று பனியால் வருந்துகின்ற இரவின்கண் — திருமால் அறிய இயலாத சிவபெருமான் உறையும் தில்லையம்பலத்தை ஒத்த அழகிய நெற்றியை உடைய தலைவிக்கு என் பிரிவு என்ன வருத்தத்தைச் செய்கிறதோ (என்று தலைவன் வருந்தினான்)

சொ.பொ.வி.: கோலி — அரவணைத்து, பெடை — பெண் கோழி, குருகு — குஞ்சு, பாவித்து — பாதுகாதது, மால்—திருமால், மறையோன் — சிவபெருமான், போதரவு — போர்க்களத்திற்கு வந்துள்ள வருகையாகிய பிரிவு.

தத்துவப்பொருள்: உபதேச நிலைக்களத்திற்குச் சென்ற ஆன்மா சிவத்தலைவியின் நிலை பற்றிச் சிந்தித்தது.

Koviloor Digital Library

4. கூதிர்கண்டு கவறல்

கொளு: இருங்கூதிர் எதிர்வுகண்டு
கருங்குழலி கவலையுற்றது.

பெரிய குளிர்காலம் வந்தது கண்டு கருமையான கூந்தலை உடைய தலைவி வருந்தியது.

கருப்பினம் மேவும் பொழில்தில்லை
மன்னன்கண் ணார்அருளால்
விருப்பினம் மேவச்சென் றார்க்கும்சென்(று)
அல்குங்கொல் வீழ்பனிவாய்
நெருப்பினம் மேய்நெடு மால்எழில்
தோன்றச்சென் றாங்குநின்ற
பொருப்பினம் ஏறித் தமியரைப்
பார்க்கும் புயலினமே. (319)

பொருள்: பெய்கின்ற பனியிடத்து அதன் குளிரைப் போக்க மலையில் நெருப்பினை மூட்டுவர். அது திருமாலைப் போன்ற அழகினைக் கண்டவர்களுக்குத் தோற்றுவித்தது. அத்தகைய தோற்றத்தைக் கொண்ட மலை களிடத்து ஏறிச் சென்று பிரிந்திருப்பவர்களைத் தேடி அலைகின்ற மேகக்கூட்டங்கள், கருப்பஞ்சோலை சூழ்ந்த தில்லைச் சிவபெருமானின் பெரும் கருணையால் — தம் நண்பர்கள் உதவி பெற்று மகிழச் சென்ற தலைவனிடத் திலும் சென்று தன்னைக் காட்டுமோ (என்று தலைவி வருந்தினாள்).

சொ.பொ.வி.: கருப்பினம் — கரும்புக்கூட்டம், விருப்பினம் — நட்பினர், நெருப்பினம் — நெருப்புக் கூட்டம், பொருப்பினம் — மலைக்கூட்டம்.

தத்துவப்பொருள்: பனிநிலைகண்ட சிவத்தலைவியிடம் ஆன்மாவின் நிலையை நினைத்தது.

5. முன்பனிக்கு நொந்துரைத்தல்

கொளு ஆன்றபனிக்(கு) ஆற்றா(து) அழிந்(து)
ஈன்றவளை ஏழை நொந்தது.

Koviloor Digital Library

மிக்க பனியால் வருந்தும் தலைவி நெஞ்சழிந்து, பெற்ற தாயை நொந்து கொண்டது.

சுற்றின வீழ்பனி தூங்கத்
துவண்டு துயர்களன்று
பெற்றவ ளேஎனைப் பெற்றாள்
பெடைசிற கான்ஒடுக்கிப்
புற்றில வாளர வன்தில்லைப்
புள்ளும்தம் பிள்ளைதழீஇ
மற்றினம் சூழ்ந்து துயிலப்
பெறும்இம் மயங்கிருளே. (320)

பொருள்: புற்றிலே வாழாத ஒளி பொருந்திய பாம்புகளை அணிந்த சிவபெருமானதுதில்லையில் மக்களே அன்றி ஆண் பறவைகளும் தன் பெடைகளைத் தன் சிறகுக் குள்ளே ஒடுக்கிக் குஞ்சுகளைத் தழுவிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் — நடுங்காது தூங்குகின்ற என்தாய் இந்த இரவில் பனியானது இடைவிடாது பெய்ய என்னை மட்டும் துவண்டு வருந்தும்படி ஈன்றாளே, இனி நான் யாரை நொந்து கொள்வேன் (என்று தலைவி வருந்தினாள்).

சொ.பொ.வி.: ஊரில் உள்ளவர் எல்லாம் தூங்க, நான் மட்டும் தலைவனைப் பிரிந்து பனியால் வருந்தத் தாய் பெற்றுவிட்டாள் என்று தலைவி வருந்தியது பெறப்படு கிறது. சுற்றின—சூழ்ந்த, தூங்க — பெய்ய, பெற்றவள்— தாய், புற்று—பாம்புப்புற்று, புள்—பறவை, பிள்ளை— குஞ்சு.

தத்துவப்பொருள்: சிவமானது ஆன்மா பிரிந்ததே என்று வருத்தமுற்றுப் பரையை நினைந்து நொந்தது.

6. பின்பனி நினைந்த இரங்கல்

கொளு: இரும்பனியின் எதிர்வு கண்டு
சுரும்பிவர் குழலி துயரம் நினைந்தது.

மிக்க பனிக்காலம் வந்ததைக் கண்டு தலைவன் வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய தலைவியின் துயரத்தை நினைந்தது.

Koviloor Digital Library

புரமன்(று) அயரப் பொருப்புவில்
ஏந்திப்புத் தேளிர்நாப்பண்
சிரம்அன்(று) அயனைச்செற் றோன்தில்லைச்
சிற்றம் பலம்அனையாள்
பரம்அன்(று) இரும்பணி பாரித்த
வாபரந்(து) எங்கும்வையம்
சரமின்றி வான்தரு மேலொக்கும்
மிக்க தமியருக்கே. (321)

பொருள்: பனியானது உலகமெங்கும் பரந்து பனித் திவலைகளைப் பரப்பும் காலத்தில் முப்புரங்களை அழிக்க மேருமலையை வில்லாக ஏந்தியவன் பிரமனின் நடுத் தலையைக் கொய்தவன் ஆகிய சிவபெருமானது தில்லை யில் உள்ள சிற்றம்பலத்தை ஒத்த தலைவியின் வருத்தம் அளவுகூறத் தக்கதன்று. பிரிந்திருக்கும் அவளுக்கு இப் பனியானது உயிரைக் கவர, வானமானது வெகுண்டு அம்பைப் பொழிவது போல விளங்குகிறது.

சொ.பொ.வி.: புத்தேளிர் — தேவர், நாப்பண் சிரம் — நடுத்தலை, பரம் அன்று—ஆற்றுவிக்கும் அளவை யுடைய தன்று, பாரித்தல் — பரப்புதல், சரம் — அம்பு, தமியர் — பிரிந்திருக்கும் தலைவிக்கு.

தத்துவப்பொருள்: உபதேச நிலைக்கண் சென்ற ஆன்மா பிரிந்திருக்கும் சிவத்தின் நிலையை நினைந்தது.

7. இளவேனிற்கண்டு இன்னல் எய்தல்

கொளு: இன்னிள வேனில் முன்னுவது கண்டு
மென்னகைப் பேதை இன்னல் எய்தியது.

இளவேனிற் காலம் எதிர்கொண்டதைக் கண்டு மெல்லிய சிரிப்பை உடைய தலைவி வருந்தியது.

வாழும் படியொன்றும் கண்டிலம்
வாழிஇம் மாம்பொழில்தேன்
சூழும் முகச்சுற்றும் பற்றின
வால்தொண்டை யங்கனிவாய்

Koviloor Digital Library

யாழின் மொழிமங்கை பங்கன்சிற்
றம்பலம் ஆதரியாக்
கூழின் மலிமனம் போன்(று)இரு
ளாநின்ற கோகிலமே. (322)

பொருள்: கொவ்வைக்கனி போன்ற இதழையும், யாழ் போன்ற மொழியினையும் உடைய உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமானது சிற்றம்பலத்தை விரும்பாத (ஆனால் உணவை விரும்பியிருக்கும்) மனம் போல — ஒரு காலைக்கு ஒரு கால் கருமை நிறம் வளரும் குயில்கள் மாஞ்சோலையில் வண்டுகள் மொய்க்கும் இடங்களில் எல்லாம் சூழ்ந்து கொண்டன. இனி உயிர் வாழும் வகை தெரியாது உள்ளேன் (என்று தலைவி வருந்தினாள்).

சொ.பொ.வி: குயில் வந்தது என்பதால் இளவேனிற் வந்தது. அதனால் பிரிவுத் துயர் அதிகமாகித் தலைவி வருந்தினாள் என்பது பெறப்படுகிறது. வாழும்படி — உயிர்வாழும், வகை, வாழி — இளவேனிலே வாழ்வாயாச, தேன்சூழும் — தேன் ஒழுகும், முகச்சுற்று — இடம் முழுவதும், ஆதரியா — விரும்பாத, கூழின்மலிமணம் — உணவையே விரும்பியிருக்கும் மனம், இருளாய் நின்ற கோகிலம் — கருமை மேலும் மேலும் வளர்கின்ற குயில்கள்.

தத்துவப்பொருள் : ஆன்மாவின் நிலையை நினைந்து சிவத்தலைவி இளவேனிற் காலத்தில் வருந்தியது.

8. பருவங் காட்டி வற்புறுத்தல்

கொளு: கார் வருமெனக் கலங்கு மாதரைத்
தேர் வருமெனத் தெளிவித்தது.

கார்காலம் வந்துவிட்டது எனக் கலங்கும் தலைவியை ஆற்றுப் படுத்தத் தலைவனின் தேர் வந்துவிடும் எனத் தோழி ஆற்றுப்படுத்தியது.

பூண்பதென் றேகொண்ட பாம்பன்
புலியூர் அரன்மிடற்றின்

Koviloor Digital Library

மாண்பதென் றேஎண வானின்
மலரும் மணந்தவர்தேர்
காண்பதன் றேயின்று நாளையிங்
கேவரக் கார்மலர்த்தேன்
பாண்பதன் தேர்குழ லாய்எழில்
வாய்த்த பனிமுகிலே. (323)

பொருள்: கார்காலத்தில் பூவில் உள்ள தேன் உண்ணும் வண்டுகள் தமது பண்களை இசைப்பதற்கு ஆராய்ந்து பார்க்கக்கூடிய மலர்களைக் கொண்ட அழகிய கருங்கூந் தலை உடைய தலைவியே — தான் அணியும் அணியாகப் பாம்புகளைக் கொண்ட தில்லைச் சிவபெருமானது நீலகண்டத்தின் கருமை நிறத்தைக் கொண்ட கருமுகில்கள் ஆகாயத்தில் பரவி உள்ளன. ஆதலால் உன்னை மணந்த தலைவனின் தேர் இன்றோ நாளையோ இங்கு வரக் காண்பாய். இனிக் கவலற்க (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: பூண்பது — அணிவது, பாம்பன் — பாம்பை உடைய சிவன், மிடறு — கழுத்து, பாண்பதன் தேர் குழலாய் — வண்டுகள் தமது பண்ணினை இசைப் பதற்கு உரிய கூந்தலை உடைய தலைவியே.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருளைப் பெற உரிய பருவமான (கார்காலத்தில்) இக்காலத்தில் ஆன்மா விரைந்துவரும் என்று திருவருள் கூறியது.

9. பருவம் அன்று என்று கூறல்

கொளு: காரெனக் கலங்கும் ஏரெழில் கண்ணிக்கு
இன்துணைத் தோழி அன்றென்று மறுத்தது.

கார்காலம் வந்துவிட்டது எனக் கலங்கும் தலைவிக்கு இது அப்பருவமல்ல எனத் தோழி மறுத்துக் கூறியது.

தெளிதரல் காரெனச் சீர்அனம்
சிற்றம் பலத்தடியேன்
களிதரக் கார்மிடற் றோன்நட
மாடக்கண் ணார்முழவம்

Koviloor Digital Library

துளிதரல் காரென ஆர்த்தன,
ஆர்ப்பத்தொக்(கு) உன்குழல்போன்(று)
அளிதரக் காந்தளும் பாந்தளைப்
பாரித்(து) அலர்ந்தனவே. (324)

பொருள்: நாம் மிக மகிழ்ச்சியடைய தில்லைச் சிற்றம்பலத்தில் சிவபெருமான் நடம் புரிவதால் முழவம் என்ற இசைக்கருவி மேகம்போல முழங்கியது. அதனை இடி முழக்கம் என எண்ணிக் காந்தள் பூவும் ஒருங்குகூடி உன் கூந்தலை ஒத்து வண்டுகள் மொய்க்கப் பாம்பு போலும் துடுப்புக்களைப் பரப்பி மலர்ந்தன. எனவே அன்னம் போன்றவளே, இதனைக் கார்காலம் என்று எண்ணாதே.

சொ.பொ.வி.: மேக இடி முழக்கம் கேட்டு மலர வேண்டிய காந்தள் முழவ இசை கேட்டு மலர்ந்து விட்டதால் இது கார்ப்பருவம் அன்று என்று தோழி கூறினாள் என்பது பெறப்படுகிறது. தெளிதரல்கார் — கார் காலம் என்று தெளியாதே, சீர்அனம் — அன்னம் போன்றவளே, முழவம் — இசைக்கருவி, துளிதரல்காரென — மழைத்துளி தரும் மேகம்என. காந்தள்பூ தலைவியின் கூந்தலில் வண்டுகள் மொய்ப்பதைப் போலத் தன் னிடத்தில் வண்டுகள் மொய்க்க பாம்பினைப் போன்று நடுவில் உள்ள துடுப்பு அமைப்பினைக் கொண்டு மலர்ந்தது என்ற வருணனை சிறப்புடைத்தாம்.

தத்துவப்பொருள் : திருவருள், ஆன்மா பரிபக்குவம் அடைவதற்குரிய காலம் இதுவன்று என்று திருவருள் கூறியது.

10. மறுத்துக் கூறல்

கொளு: பருவம் அன்றென்று பாங்கி பகர
மருவமர் கோதை மறுத்து ரைத்தது.

இது கார் பருவமன்று என்று தோழி மறுத்துக் கூறத் தலைவி அதனை மறுத்துக் கூறியது.

Koviloor Digital Library

தேன்திக்(கு) இலங்கு கழல்அழல்
வண்ணன்சிற் றம்பலத்(து)எங்
கோன்திக்(கு) இலங்குதிண் தோள்கொண்டல்
கண்டன் குழைஎழில்நாண்
போன்(று)இக் கடிமலர்க் காந்தளும்
போந்தவன் கையனல்போல்
தோன்றிக் கடிமல ரும்பொய்ம்மை
யோமெய்யில் தோன்றுவதே. (325)

தேன் போன்ற தலைவியே, வீரக்கழலை அணிந்த செந்தீ வண்ணன், தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளி யுள்ள தலைவன், எட்டுத் திசைகளாக விளங்குகின்ற வலிமையான தோள்களை உடையவன், கருமேகம் போன்ற கண்டத்தை உடையவன், ஆகிய சிவபெருமானுடைய மார்பில் விளங்கும் அணியாக இருக்கும் பாம்பை ஒத்து காந்தள் பூவின் துடுப்புகள் தோன்றின. சிவபெருமான் கையில் விளங்குகின்ற அனலைப் போன்ற தோன்றி என்ற பூவும் தோன்றிவிட்டன. இது பொய்யோ (என்று தலைவி தோழியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: பாம்பை ஒத்த காந்தளும் மலர்ந்து, தீயை ஒத்த தோன்றியும் மலர்ந்து கார்காலத்தை அறிவித்தன. இதனைப் பொய் என்பதோ என்று தலைவி வருந்தியதாகப் பொருள் பெறப்படுகிறது. தேன் — தேனை ஒத்த தலைவி, திக்குஇலங்கு — திசைகளில் விளங்கும், கழல் — வீரக்கழல், குழை — காதணி, நாண்போன்று — மார்பில் அணியும் அணி, அனல் — தீ, தோன்றி — ஒருவகை மலர்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மா கூடுவதற் குரிய மலபரிக்காலம் வந்துவிட்டது எனத் திருவருளுக்கு உரைத்தது.

11. தேர்வரவு கூறல்

கொளு: பூங்கொடி மருளப் பாங்கி தெருட்டியது

பருவம் கண்டு வருந்திய பூங்கொடி போன்ற தலைவிக்குத் தோழி வற்புறுத்திக் கூறியது.

Koviloor Digital Library

திருமால் அறியாச் செறிகழல்
தில்லைச்சிற் றம்பலத்(து)எம்
கருமால் விடையுடைய யோன்கண்டம்
போற்கொண்டல் எண்டிசையும்
வருமால் உடன்மன் பொருந்தல்
திருந்த மணந்தவர்தேர்
பொருமால் அயிற்கண்நல் லாய்இன்று
தோன்றும்நம் பொன்னகர்க்கே. (326)

பொருள்: திருமால் அறியாத வீரக்கழல் பொருந்திய திருவடியை உடையவன். தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளி உள்ளவன். திருமாலை இடப வாகமானக் கொண்டவன். இத்தகைய சிவபெருமானது கண்டம் போல இருண்டு கரியமேகங்கள் எட்டுத்திசைக் கண்ணும் பரந்துள்ளன. ஆதலால் ஒன்றோடொன்று மோதுவதைப் போல பிரழுகின்ற பெரிய வேல் போன்ற கண்களை உடைய பெண்ணே, நம்மை நயந்த தலைவனுடைய தேர் மன்னர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட போரைத் திருத்திக் கொண்டதால் நம் இல்லத்தின்முன் இன்று வந்து தோன்றும் (என்று தோழி தலைவிக்குக் கூறினாள்)

சொ.பொ.வி.: விடை — காளை வாகனம், பொருந்தல் திருந்த — போர் புரிதலைத் திருத்திக் கொண்ட, அயில்கண் — வேற்கண்.

தத்துவப்பொருள்: திருவருள் சிவத்தலைவிடம் பரிபக்குவம் அடைந்த ஆன்மா அருள்பெற வந்து சேரும் என்றது.

12. வினைமுற்றி நினைதல்

கொளு: பாசறை முற்றிப் படைப்போர் வேந்தன்
மாசறு பூண்முலை மதிமுகம் நினைந்தது.

பாசறையில் தங்குவது முடிந்து போருக்கு உதவியாக வநத தலைவன் குற்றமற்ற அணிகலன்கள் அணிந்த முலையை உடைய மதிபோன்ற தலைவியின் முகத்தை நினைவு கூர்ந்தது.

Koviloor Digital Library

புயலோங்(கு) அலர்சடை ஏற்றவன்
சிற்றம் பலம்புகழும்
மயலோங்கு இருங்களி யானை
வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங்(கு) இருஞ்சிலை கொண்டுமன்
கோபமும் காட்டிவரும்
செயலோங்(கு) எயில்எரி செய்தபின்
இன்றோர் திருமுகமே. (327)

பொருள்: தொழிலால் சிறந்த (கட்டிடத்தொழில்) மும்மதில்களை எரியூட்டியவனும், கங்கையைச் சூடிய சடையை உடையவனும் ஆகிய சிவபெருமானது சிற்றம் பலத்தையே வணங்கி நிற்கும் பெரிய யானையை உடைய வரகுண பாண்டியன் இமயமலையில் எழுதி வைத்த மீன் போலும் கண்ணையும், உயர்ந்த வில்போன்ற புருவத்தையும், இந்திரகோபம் போன்ற வாயையும், ஓர் அழகிய முகம் இன்று காட்டி நிற்கிறது. ஆதலால் விரைந்து போவோம் என்று தலைவன் தலைவியின் முகத்தை நினைந்து கூறியது.

சொ.பொ.வி.: புயல—கங்கை நீர், மயல் ஓங்கு இருங் களியானை—மதத்தை உடைய பெரிய யானை, வரகுணன் — பாண்டியன், (பாண்டியன் இமயத்தை வென்றதற்கு அடையாளமாகத் தன்னுடைய மீன் கொடியை நாட்டியது வரலாற்றுக் குறிப்பு), கோபம் . இந்திரகோபம் என்பது ஒருவகை செம்மை நிறப் பூச்சி.

தத்துவப்பொருள் :ஆன்மா, உபதேசக் களத்தில் பணியை முடித்துவிட்டுச் சிவத்தை நினைந்து அருள்பெற விரைந்தது.

13. நிலைமை நினைந்த கூறல்.

கொளு: பொற்றொடி நிலைமை மற்றவன் நினைந்து
திருந்துதேர்ப் பாகற்கு வருந்துபு புகன்றது.

வளையல்களை அணிந்த தலைவியை நினைந்து தலைவன் தேர்ப்பாகற்குக் கூறியது.

Koviloor Digital Library

சிறப்பின் திகழ்சிவன் சிற்றம்
பலஞ்சென்று சேர்ந்தவர்தம்
பிறப்பிற் றுனைந்து பெருகுக
தேர்பிறங் கும்ஒளியார்
நிறப்பொன் புரிசை மறுகினில்
துன்னி மடநடைப்புள்
இறப்பின் துயின்றுமுற் றத்(து)இரை
தேரும் எழில்நகர்க்கே. (328)

பொருள்: சிறப்புடைய ஒளி பொருந்திய பொன்னால் செய்யப்பட்ட உயர்ந்த மதில்களை உடைய ஊரின் தெரு விலே, ஆண் பறவையும் பெண் பறவையுமாகச் சேர்ந்து விளையாடிடும் மாடப்புறாக்கள் வீட்டினுடைய மாடங் களில் சேர்ந்து துயின்று பிறகு முற்றத்தின்கண் இறைந்து கிடக்கும் தானியங்களை உண்ணுகின்ற அழகை உடைய தலைவி இருக்கும் வீட்டிற்கு — சிவபெருமானது தில்லைச் சிற்றம் பலத்தைச் சென்று அடைந்தவர்களது பிறவி விரைந்து கழிவதைப் போல—இத்தேரை விரைந்து ஓட்டிச் செல்வாயாக என்று தலைவன் தன் தேர்ப்பாகற்குக் கூறினான்.

சொ.பொ.வி.: பிறப்பு — பிறவி, துனைந்து பெருக — கெடுவதுபோல விரைந்து முடுக்குக. பிறங்கும் — விளங்கும், புரிசை—கோட்டை, மறுகு — தெரு, துன்னி — சேர்ந்து, புள்—புறா, இறப்பின் — வீட்டின் மாடம், (தாழ்வாரத்தின் மேற்பகுதி) எழில்நகர்க்கு — நகரில் அமைந்தவீட்டிற்கு.

தத்துவப்பொருள்: சிவத்தை அடைவதற்காக ஆன்மா சிவத்தின் நிலையை எண்ணி தனது மனமாகிய தேர்ப் பாகற்குக் கூறி விரைவு படுத்திக் கொண்டது.

14. முகிலொடுகூறல்

கொளு: முனைவற்(கு) உற்றுழி வினைமுற்றி வருவோன்
கழுமல் எய்திச் செழுமுகிற்(கு) உரைத்தது.

போர் முனையில் அரசருக்கு உதவியாக இருந்து போர் வினை முடிந்து திரும்பி வருகின்ற தலைவன் மயங்கி மேகத்திற்கு உரைத்தது.

Koviloor Digital Library

அருந்(து)ஏர் அழிந்தனம் ஆலம்என்(று)
ஓலமிடும் இமையோர்
மருந்(து)ஏர் அணிஅம் பலத்தோன்
மலர்த்தாள் வணங்கலர்போல்
திருந்(து)ஏர் அழிந்து பழங்கண்
தரும்செல்வி சீர்நகர்க்(கு)என்
வரும்தேர் இதன்முன் வழங்கேல்
முழங்கேல் வளமுகிலே. (329)

பொருள்: *(பாற்கடலில் தோன்றிய)* நஞ்சைக்கண்ட தேவர்கள் நாங்கள் அனைவரும் அழகு அழிந்தோம், எனவே நஞ்சை நீர் அருந்துக என்று முறையிட்டனர். அந்த நஞ்சை அருந்தி இடரைப் போக்கும் மருத்துவனாக மேலும் தில்லைச் சிற்றம் பலத்தில் எழுந்தருளி இருப்பவனாக விளங்கும் சிவபெருமானது திருவடி மலரைத் தொழாத வரைப் போல அழகை அழித்துத் துன்பத்தை உண்டாக்கும் தலைவியின் ஊரின்கண் மேகமே என்னுடைய தேருக்கு முன் நீ சென்று விடாதே. சென்றாலும் அவள் கேட்கும் படியாக இடிமுழக்கம் செய்யாதே என்று தலைவன் மேகத்தைப் பார்த்துக் கூறினான்.

சொ.பொ.வி.: மேகம் சென்று இடிமுழங்கினால் கார்காலம் வந்துவிட்டது என்று தலைவி வருந்துவாள் என்பதால் மேகத்தைத் தடுத்தான் ஆயிற்று. ஏர் — அழகு, ஆலம் — ஆலகாலவிடம், ஏர் — ஒளிபொருந்திய, திருந்து ஏர் — தலைவி திருத்தமாகப் பெற்ற அழகு, பழங்கண் — துன்பம், செல்வி — தலைவி, முகில் — மேகம்.

15. வரவெடுத்து உரைத்தல்

கொளு: வினை முற்றிய வேந்தன் வரவு
புனையிழைத் தோழி பொற்றொடிக்(கு) உரைத்தது.

போர்வினை முடித்த தலைவனின் வரவைச் சிறந்த ஆபரணங்களை உடைய தோழி அழகிய வளையல்களை அணிந்த தலைவிக்குக் கூறியது.

Koviloor Digital Library

பணிவார் குழைஎழி லோன்தில்லைச்
சிற்றம் பலம்அனைய
மணிவார் குழல்மட மாதே
பொலிகநம் மன்னர்முன்னாப்
பணிவார் திறையும் பகைத்தவர்
சின்னமும் கொண்டுவண்தேர்
அணிவார் முரசினொ(டு) ஆலிக்கும்
மாவோ(டு) அணுகினரே. (330)

பொருள்: பாம்புக் காதணியால் அழகு பெற்ற சிவ பெருமானது தில்லையம்பலத்தினை ஒத்த நீலமணி போன்ற நீண்ட கூந்தலை உடைய தலைவியே, பொலிவு பெறுக. நம்முடைய தலைவன் பணிந்த பகைவர் கொடுத்த கப்பத்தையும், பணியாத பகைவர்களின் அடையாளங் களையும் தனது தேரில் முன்னால் கொண்டு, வாரால் கட்டப்பட்ட முரசு ஒலிக்கும் குதிரைகளோடு வந்தான், அறிவாயாக என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

சொ.பொ.வி.: பணி — பாம்பு, குழை — தோடு, மணி — நீலமணி, மா — குதிரை.

தத்துவப்பொருள்: சமயவாதிகளை வென்று ஆன்மா வானது அவர்களின் காணிக்.கைகளோடு வருகின்றது எனத் திருவருள் சிவத்தலைவிக்கு உரைத்தது.

16. மறவாமை கூறல்

கொளு: பாசறை முற்றிப் பைந்தொடியோ(டு) இருந்து
மாசறு தோழிக்கு வள்ளல் உரைத்தது.

பாசறை வினை முடிந்து வந்த தலைவன் வளையலை உடைய தலைவியோடு மகிழ்ந்திருந்து குற்றமற்ற தோழிக்கு உரைத்தது.

கருங்குவ ளைக்கடி மாமலர்
முத்தங் கலந்திலங்க
நெருங்கு வளைக்கிள்ளை நீங்கிற்
றிலள்நின்று நான்முகனோ(டு)

Koviloor Digital Library

ஒருங்கு வளைக்கரத் தான்உன
ராதவன் தில்லையொப்பாய்
மருங்கு வளைத்துமன் பாசறை
நீடிய வைகலுமே. (331)

பொருள்: பிரமனும், திருமாலும் அறியமுடியாத தில்லையை ஒத்தவளே, மன்னனுக்குத் துணையாகப் போர்க்களத்திற்குச் சென்று மன்னனுடைய பாசறையில் நான் தங்கியிருந்த காலத்தும், தலைவியின் கண்ணாகிய கருங்குவளை மலர் கண்ணீராகிய முத்தத்தைக் கொண்டு என் மனத்தகத்தே நின்றது. கிளியைப் போன்ற அவள் ஒரு போதும் என்னை விட்டு நீங்கவில்லை. அதனால் பிரிவே இல்லை (என்று தலைவன் தோழியிடம் கூறினான்)

சொ.பொ.வி.: முத்தம் — கண்ணீராகிய முத்தம், கிள்ளை — கிளி, வளைக்கரத்தான்—சக்கரத்தை ஏந்திய கையை உடையவன், மன்—மன்னன், வைகல்— நாட்களில்.

தத்துவப்பொருள்: ஆன்மா தன்னிடத்தில் சிவபோக வேட்கை இருந்ததால் சிவம் என்றுமே என்னைவிட்டுப் பிரிந்ததில்லை என்று திருவருளிடம் கூறியது.

வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவு முற்றிற்று.

24. பொருள்வயின் பிரிவு

தலைவியோடு கூடி இல்லறம் நடத்திக் கொண் டிருக்கும் தலைவன் இல்லறத்திற்குரிய பொருளை ஈட்டுவதற்குப் பிரிகின்ற பிரிவாகும். இல்லறத்திற்கு முன் பெற்றோரின் பொருளைக் கொண்டு வாழ்ந்தவன் இனிவரும் இல்லற நிகழ்வுகளில் தாம் ஈட்டிய பொருளால் அறம் செய்து அதனால் ஏற்படும் நல்வினையை ஏற்கக் கருதிப் பொருள் தேடப் பிரிந்தது. இது இருபது துறைகளை உடையது.

Koviloor Digital Library

1. வாட்டங்கூறல்

கொளு: பிரிவு கேட்ட வரிவை வாட்டம்
நீங்கல் உற்றவன் பாங்கிக்கு உரைத்தது.

தலைவன் பிரிவைக் கேட்ட தலைவியின் வாட்டம் நீங்குவதற்குத் தலைவன் தோழியிடம் உரைத்தது.

முனிவரும் மன்னரும் முன்னுவ
பொன்னான் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்திருச்
சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி(து) என்னென்று
தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோஎன்று
வந்திக்கும் நன்னுதலே" (332)

பொருள்: துறவிகள் கருதும் மறுமை இன்பமும், மனிதர்கள் கருதும் இம்மை இன்பமும் பொருளால்தான் முடியும் என்று நான் பொதுவாகப் பொருளின் தேவையைத் தலைவியிடம் கூற உடன் அவளுடைய கண்களில் கண்ணீர் தேங்கியது. சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் தில்லைச் சிற்றம்பலத்தினை ஒத்த தோழியே, தலைவி வருத்தம் எக்காரணத்தால் வந்தது? நான் பிரியேன் என்று கண்ணீரைத் துடைத்தவுடன் அவள் தெளிவு பெற்றாள். வருந்திக் கண்ணீர் வடித்த நேரத்தை நான் பிரிந்த காலமாகவே எண்ணி என்னை வணங்கினாள். (ஆதலால் நீ அவள் வருந்தா வண்ணம் என் பிரிவைக் கூறித் தேற்றுவாயாக) என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: முனிவர்—துறவி, முன்னுதல் — கருதிய, பொன்னால் — பொருளால், பனி—கண்ணீர்த் துளி, தூநீர் தெளித்தளிப்ப — கண்ணீரைத் துடைத்துத் தெளிவிக்க, நனிவருநாள்—பிரிந்தபின் வரும் நாளோ, வந்திருக்கும்— வணங்கும்.

தத்துவப்பொருள் :ஆன்மா சாதனங்களைத் தேடிப் பிரியக் கருதும் பொழுது சிவத்தை ஆற்றுப் படுத்துமாறு திருவருளை வேண்டியது.

Koviloor Digital Library

2. பிரிவு நினைவுரைத்தல்

கொளு: பொருள்வயின் பிரியும் பொருவே லவனெனச்
சுருளுறு குழலிக்குத் தோழி சொல்லியது.

பொருள் ஈட்டுவதற்காக வேலைக் கையில் ஏந்திய தலைவன் பிரிகின்றான் என்று சுருண்ட கூந்தலை உடைய தலைவிக்குத் தோழி சொல்லியது.

வறியார் இருமை அறியார்
எனமன்னும் மாநிதிக்கு
நெறியார் அருஞ்சுரம் செல்லலுற்
றார்நமர் நீண்டிருவர்
அறியா அளவுநின் றோன்தில்லைச்
சிற்றம்பலம்அனைய
செறிவார் கருங்குழல் வெண்ணகைச்
செவ்வாய்த் திருநுதலே. (333)

பொருள்: வறியவராகிய திருமாலும் பிரமனும் அடிமுடி அறிய முடியாத வண்ணம் நீண்டு நின்ற சிவ பெருமானது தில்லைச் சிற்றம்பலத்தை ஒத்த நீண்ட கரிய கூந்தலையும் வெண்மையான பற்களையும் சிவந்த வாயினையும் அழகிய நெற்றியினையும் உடைய தலைவியே, பொருளில்லாத வறியவர்கள் இருமையின் இன்பத்தையும் அறியார்கள் என்பதை எண்ணி நிலையான செல்வத்தைத் தேடுவதற்கு அரிய காட்டுவழியில் சென்றார் நம்முடைய தலைவர் (என்று தோழி தலைவிக்கு உரைத்தாள்)

சொ.பொ.வி.: இருமை—இம்மை, மறுமை. நெறியார் — சரியாக வழி புலப்படாத, நமர் — தலைவர்.

தத்துவப்பொருள்: ஆன்மா பேரின்பத்தைப் பெற அதற்குரிய சாதனங்களைத் தேடி பிரிகிறது என்று சிவத்திடம் திருவருள் கூறியது.

3. ஆற்றாது புலம்பல்

கொளு: பொருள்தரப் பிரியும் அருள்தரு பவனெனப்
பாங்கி பகரப் பூங்கொடி புலம்பியது.

Koviloor Digital Library

நமக்கு அருளைத் தருகின்ற தலைவன் பொருள் கொண்டுவரப் பிரிந்தான் என்று தோழி கூறப் பூங்கொடி போன்ற தலைவி வருந்தியது.

சிறுவாள் உகிருற்(று) உறாமுன்னம்
சின்னப் படுங்குவளைக்(கு)
எறிவாள் கழித்தனள் தோழி
எழுதிற் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவ(து) அஞ்சனம்
அம்பல வர்ப்பணியார்
குறிவாழ் நெறிசெல்வர் அன்பரென்(று)
அம்ம கொடியவளே. (334)

பொருள்: தலைவன் இதுவரை வாராமையால் — நான் மைஎழுதி என்னை அழகுபடுத்திக் கொள்ளவில்லை. இதனைத் தோழியாகிய கொடியவள் அறிவாள். தில்லைச் சிற்றம்பலத்தானை வணங்காதவர்கள் வாழ்கின்ற நெறி போலக் கொடுமை உடைய வழியில் நம் தலைவர் செல்வார் என்று, ஒளி பொருந்திய சிறிய நகம் பட்ட வுடனேயே பொடிபடும் குவளைப் பூக்களைப் பறிப்பதற்கு சிறுவாளாகிய கருவியை அதன் கூட்டில் இருந்து எடுத்தாள் போல் கூறினாள்.

சொ.பொ.வி.: நகம் படுவதற்கு முன்னமேயே கீழே உதிர்ந்துவிடும் குவளைப்பூவைப் பறிக்கக் குறுவாளை எடுத்ததுபோலத் தோழி பிரிவிலை பிரிவிலை என்று கூறி வந்தவள் இப்பொழுது கொடுமையான வழியில் சென்றார் தலைவர் என்று சொல்லி என்னைக் கொன்றுவிட்டாள் எனத் தலைவி வருந்தியது பெறப்படுகிறது. வாள்உகிர் — ஒளியுடைய நகம், உற்றுஉறா முன்னம் — படுவதற்கு முன்னால் (சிறிது பட்டவுடன்) எறிவாள் — வாள்எறி -- வாளை எறிய கழித்தனள் — உறையிலிருந்து எடுத்தாள், அஞ்சனம் — மை (மை தீட்டி அழகு படுத்துகின்ற வரை தலைவன் பிரிவான். என்பதைக் கூறாத கொடியவள் தீட்டும்போது கூறினாள்)

Koviloor Digital Library

*தத்துவப்பொருள் :*ஆன்மா பிரியாது என்று கூறி வந்த திருவருள் இப்பொழுது கூறுவதற்கு என்ன வந்தது என்று சிவத்தலைவி வருந்தியது.

4. ஆற்றாமை கூறல்

கொளு: ஏழை யழுங்கத் தோழி சொல்லியது.

தலைவி வருந்துவதைத் தலைவனுக்குத் தோழி சொல்லியது.

வானக் கடிமதில் தில்லைஎம்
கூத்தனை ஏத்தலர்போல்
கானக் கடஞ்செல்வர் காதலர்
என்னக் கதிர்முலைகள்
மானக் கனகம் தரும்மலர்க்
கண்கள்முத் தம்வளர்க்கும்
தேனக்க தார்மன்னன் என்னோ
இனிச்சென்று தேர்பொருளே. (335)

பொருள்: மேகம் சூழ்ந்த காவலை உடைய மதில்களால் சூழப்பட்ட தில்லை நகரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வாழ்த்தாதவர் போன்ற காட்டு வழியில் தலைவர் சென்றார் என்று நான் சொல்ல, தலைவியின் முலைகள் பொன்னைத் தந்தன. (பசலை பூத்தன) மலர்களாகிய கண்கள் முத்தாகிய கண்ணீரைச் சிந்தின. ஆதலால் தேன் பொருந்திய மாலையை உடைய தலைவனே நீ இனிச் சென்று தேடும் பொருள் யாது (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: கடி — காவல், கனகம் தரும் — பசலை தரும்.

தத்துவப்பொருள்: ஆன்மா பிரிந்ததால் வருத்தமுற்ற மனத்துடன் சிவத்தலைவி இருந்தாள் என்பதைத் திருவருள் கூறியது.

Koviloor Digital Library

5. திணை பெயர்த்து உரைத்தல்

கொளு: துணைவன் பிரியத் துயருறு மனத்தொடு
திணைபெயர்த் திட்டுத் தேமொழி மொழிந்தது.

தலைவன் பிரிந்ததால் வருத்தமுற்றுத் தான் இருந்த இடத்தை விட்டுப்பெயர்ந்து சென்று தேன் போன்ற மொழிகளை உடைய தலைவி கூறியது (திணை—நிலம்)

சுருள்தரு செஞ்சடை வெண்சுடர்
அம்பல வன்மலயத்(து)
இருள்தரு பூம்பொழில் இன்னுயிர்
போலக் கலந்தீசைத்த
அருள்தரும் இன்சொற்கள் அத்தனை
யும்மறந்(து) அத்தம்சென்றோ
பொருள்தரக் கற்கின் றதுவினை
யேற்குப் புரவலரே" (336)

பொருள்: சுருண்டு செம்மையுடன் விளங்கும் சடையில் பிறைமதி அணிந்த சிவபெருமானது பொதிய மலையின்கண் இருண்ட பூஞ்சோலையில் என்னுடைய உயிரோடு ஒன்றிய காலத்து எனக்குக் கூறிய இனிய சொற்கள் அத்தனையையும் மறந்து இன்று கடத்தற்கரிய வழியில் சென்று தீவினையளாகிய எனக்குப் பொருள் தரத் தலைவர் சென்றார். இது தகுமோ (என்று தலைவி வருந்தியது)

சொ.பொ.வி.: பொதியமலை என்பதால் குறிஞ்சித் திணை, கடத்தற்கரிய காடு என்பதால் பாலை. எனவே குறிஞ்சித்திணையில் கூறியதைப் பாலைத் திணையில் மறந்தார் என்று இடம் பெயர்ந்து நிகழ்ந்ததைத் தலைவி கூறியதாகப் பொருள் புலப்படுத்தப் பெற்றுள்ளது. மலயம் — பொதியமலை. இருள்தரு — மரங்கள் அடர்ந்து இருள் தரும் சோலை, அருள்தரும் — கருணை (அருளை) வெளிப் படுத்துகின்ற, அத்தம் — கடத்தற்கரியகாடு, தரக்கிற்கின்றது — தரத் தொடங்குவது, புரவலர்—காப்பவராகிய தலைவர்.

Koviloor Digital Library

தத்துவப் பொருள்: ஆன்மா சிவலோகம் அடையும் இடத்தை விட்டுச் ச்ாதனம் இருக்கும் இடத்தைத் தேடிந் சென்றதைச் சிவம் வருந்திக் கூறியது.

6. பொருத்த மறிந்துரைத்தல்

கொளு: பொருள்வயின் பிரிவோன் பொருத்த நினைந்து
சுருளுறு குழலிக்குத் தோழி சொல்லியது.

பொருள்வயிற் பிரிகின்ற தலைவனுக்குப் பொருள் மேல்தான் நாட்டம் இருக்கிறது என்று (தன்னைவிட) வருந்திய தலைவிக்குத் தோழி கூறியது.

மூவர்நின்(று) ஏத்த முதல்வன்
ஆடமுப் பத்துமும்மைத்
தேவர்சென்(று) ஏத்தும் சிவன்தில்லை
அம்பலம் சீர்வழுத்தாப்
பாவர்சென்(று) அல்கும் நரகம்
அனைய புனையழற்கான்
போவர்நம் காதலர் என்நாம்
உரைப்பது பூங்கொடியே. (337)

பொருள்: திருமால், பிரமன், உருத்திரன் ஆகிய மூவர் நின்று துதிக்கும் முதல்வன் திருநடம் புரிகின்ற முப்பது முக்கோடி தேவர்கள் சென்று ஏத்தும் சிவபெருமானின் தில்லையம்பலத்தைப் புகழாத பாவத்தை உடையோர் சென்று தங்கும் நரகத்தை ஒக்கும் கொடிய வெப்பத்தைக் கொண்ட அழலை உடைய காட்டில் போகிறார் நம் தலைவர். பூங்கொடி போன்றவளே இனி நாம் என்ன உரைப்பது.

சொ.பொ.வி.: தில்லையை வணங்கும் நம் தலைவர் தில்லையை வணங்காத வரைப் போன்ற கொடிய காட்டு வழியில் செல்கின்றார் என்றால் அவருடைய செயலைப் பார்க்காது உள்ளத்தை எண்ணி நாம் செயல்பட வேண்டும் என்று தோழி, தலைவிக்குக் கூறுகின்றாள். மூவர் — அயன், அரி, அரன், பாவர் — பாவம் செய்தவர், அல்கும் — தங்கும், புனைஅழல்கான்—மூட்டிய நெருப்புவிளங்கும் காடு.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மாவின் நோக்கம் அன்பு செலுத்துவதே அன்றிப் பிரிவது அல்ல என்று திருவருள் சிவத்தலைவியிடம் கூறியது.

7. பிரிந்தமை கூறல்

கொளு: எதிர்நின்று பிரியின், கதிர்நீ வாடுதற்(கு)
உணர்த்தா(து) அகன்றான் மணித் தேரோன், என்றது.

நேரில் நின்று சொன்னால் நீ வருந்துவாய் என்று உணர்ந்து மணிகளைக் கொண்ட தேரினை உடைய தலைவன் கூறாது பிரிந்தான் என்று தோழி கூறியது.

தென்மாத் திசைவசை தீர்தரத்
தில்லைச்சிற் றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரி
யாடும் இறைதிகழும்
பொன்மாப் புரிசைப் பொழில்திருப்
பூவணம் அன்னபொன்னே
வன்மாக் களிற்றொடு சென்றனர்
இன்றுநம் மன்னவரே. (338)

பொருள்: தெற்குத் திசையின் குற்றம் நீங்க என்னுடைய கரிய தலையின்கண் திருவடிகளை வைத்துத் தில்லைச் சிற்றம்பலத்திலே எரி ஏற்றி ஆடுகின்ற சிவ பெருமானது பெரு மதிலால் சூழப்பட்ட சோலைகளை உடைய திருப்பூவணம் என்ற ஊரை யொத்த தலைவியே, நம் மன்னர் பெரிய யானைகளோடு பொருள்தேடப் புறப்பட்டார் (என்று தோழி தலைவியிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: திசைவசைதீர்தர — தெற்குத்திசை புகழ் பெற்று விளங்க, மாத்தலை — நாய்த்தலை என்று பொருள் கூறுவாறும் உண்டு ஆயின் கருந்தலை என்று பேராசிரியர் கூறுவதே சிறப்பு — தலைவன் தலைவியிடம் வெளிப்படை யாகக் கூறாததால் தோழி இவ்வாறு கூறுவாளாயிற்று.

தத்துவப்பொருள்: ஆன்மா சாதனங்களைத் தேடப் பிரிந்தது என்பதை நேரிடையாகச் சிவத்தலைவிக்கு உரைத்தது.

Koviloor Digital Library

8. இரவுறு துயரத்திற்கு இரங்கி உரைத்தல்

கொளு: அயில்தரு கண்ணியைப் பயில்தரும் இரவினுள்
தாங்குவது அரிதெனப் பாங்கி பகர்ந்தது.

வேல் போன்ற கண்ணை உடைய தலைவியை இரவு நேரத்தில் பிரிவை ஆற்றியிரு என்று கூறுதல் மிகவும் கடினம் என்று தோழி வருந்தியது.

ஆழியொன்(று) ஈர்அடி யும்இலன்
பாகன்முக் கண்தில்லையோன்
ஊழியொன் றாதன நான்கும்ஐம்
பூதமும் ஆறொடுங்கும்
ஏழியன் றாழ்கட லும்எண்
திசையும் திரிந்திளைத்து
வாழியன் றோஅருக் கன்பெருந்
தேர்வந்து வைகுவதே. (339)

பொருள்: சக்கரம் ஒன்று, தேரை ஓட்டும் பாகன் இரண்டு கால்களும் இல்லாதவன், இத்தகைய குறை பாட்டுடன் உடையது சூரியனின் பெரிய தேர். ஐந்து பூதமும் தாம்தாம் தோன்றியவாறு ஒடுங்கும் முக்கண்ண னாகிய தில்லைப் பெருமானது—ஊழிக் காலத்தை ஒவ்வாத நான்கு யாமமும், ஏழு கடல்களும், எட்டுத் திசைகளும் கடந்து இளைத்துச் சூரியனுடைய அத்தேர் காலைப் பொழுதில் வரவேண்டும். தேர் வருவது எப்போதோ, இவள் ஆற்றுவது எப்போதோ? (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: நடுநிசியில் பிரிவைத் தாங்க முடி. யாதவள் தலைவி என்ற குறிப்புப் பொருள் பெறப்படுகிறது. சூரியனுடைய தேர் ஒற்றைச் சக்கரம் உடையது. வாழி — அசை நிலைச்சொல். இப்பாடலில் ஒன்றுமுதல் எட்டு வரை எண்கள் அமைந்துள்ளமை சிறப்பு.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவிற்கு அரு[illegible] வருந்தியிருக்கும் நிலையைக் கூறியது.

Koviloor Digital Library

9. இகழ்ச்சி நினைந்து அழிதல்

கொளு: உணர்த்தாது பிரிந்தாரென
மணித்தாழ் குழலி வாடியது.

அறிவிக்காது பிரிந்தார் என்று மணி போன்ற கருமையான கூந்தலை உடைய தலைவி வாடியது.

பிரியார் எனஇகழ்ந் தேன்முன்னம்
யான்பின்னை எற்பிரியின்
தரியாள் எனஇகழ்ந்த தார்மன்னர்
தாந்தக்கன் வேள்விமிக்க
எரியார் எழில்அழிக் கும்எழில்
அம்பலத் தோன்எவர்க்கும்
அரியான் அருளிலர் போலன்ன
என்னை அழிவித்தவே. (340)

பொருள்: முற்காலத்தில் தலைவர் என்னை விட்டுப் பிரியார் என்று இகழ்ந்து இருந்தேன். பிறகு என்னை அவர் பிரிகின்றார் என்பதை நான் உணர்ந்ததால் இறந்து விடுவேன் என்று அவர் இகழ்ந்திருந்தார். இந்த இரண்டு நிகழ்வுகளும் — தக்கனது வேள்வியில் எழுந்த முத்தீயை அழித்த தில்லைச் சிற்றம்பலத்தான் யாவர்க்கும் அரியவனாகிய சிவபெருமானின் அழிவது அருளில்லாதவர்கள் போல என்னை அழிவித்தன (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: முன்பு தலைவன் தன்னுடைய பிரிவைக் குறிப்பாக உணர்த்தியதை அறியாது அவன் பிரிய மாட்டான் என்று தான் நினைத்திருந்த அறியாமையும், இப்பொழுது நான் உயிர் வாழமாட்டேன் என்பதைக் குறிப்பால் தெரிந்தும் அதனை நினையாது வெளிப்படையாகக் கூறாது தலைவன் பிரிந்த அறியாமையும் இப்பொழுது தலைவியை வருத்துகின்றன என்ற குறிப்புப் பொருள் பெறப்படுகிறது. இகழ்ச்சி — அறியாமை, மன்னர் — தலைவர்.

தத்துவப்பொருள் : சிவம் ஆன்மாவின் கேவல நிலையையும், சகல நிலையையும் நினைந்து வருந்தியது.

Koviloor Digital Library

10. உருவு வெளிப்பட்டு நிற்றல்

கொளு: பொருள்வயின் பிரிந்த ஒளியுறு வேலவன்
ஓங்கழற் கடத்துப் பூங்கொடியை நினைந்தது.

பொருள்: தேடுவதற்குப் பிரிந்த ஒளிபொருந்திய வேலை உடைய தலைவன் மிக்க வெப்பமுடையதாகிய காட்டுவழியில் பூங்கொடியைப் போன்ற தலைவியை நினைந்தது.

சேணும் திகழ்மதில் சிற்றம்
பலவன்தெண் ணீர்க்கடல்நஞ்(சு)
ஊணும் திருத்தும் ஒருவன்
திருத்தும் உலகின்னெல்லாம்
காணும் திசைதொறும் கார்க்கய
லும்செங் கனியொடுபைம்
பூணும் புணர்முலை யுங்கொண்டு
தோன்றுமொர் பூங்கொடியே. (341)

பொருள்: நெடுந்தொலைவிலும் காணப்பெறும் மதிலை உடைய தில்லைச் சிற்றம்பலத்திற்கு உரியவனும், கடலிலிருந்து தோன்றிய நஞ்சை உணவாகத் திருத்தி உண்டவனும் ஆகிய ஒப்பில்லாத தில்லைப் பெருமானால் படைக்கப்பட்ட உலகத்தின் திசைகள்தோறும் கண்ணாகிய கயல் மீன்களையும், வாயாகிய செங் கனிகளையும், பொன் ஆபரணங்களை அணிந்த முலைகளையும் கொண்டு பூங்கொடியாகிய தலைவி தோன்றி நின்றாள் என்று தலைவன் நினைந்தான்.

சொ.பொ.வி.: சேணும்திகழ் — தொலைவிலேயே தோன்றும் மதில் (தேவர்களுக்கு அருகில் சென்று காண முடியாத தில்லைச் சிற்றம்பலம், வியாக்கிரபாதர் முதலிய அன்பர்களுக்குத் தூரத்தில் இருந்து பார்த்தாலும் அருள்புரியும் — பழைய உரை) திருத்தும் — நஞ்சை ஊணாகத் திருத்திய, திருத்தும் — படைத்த

தத்துவப்பொருள் :ஆன்மா சிவத்தை நோக்கும் திசையெல்லாம் கண்டு மகிழ்ந்தது. உலகப் பொருளால் ஆவது ஒன்றும் இல்லை என்று எண்ணியது.

Koviloor Digital Library

11. நெஞ்சொடு நோதல்

கொளு: வல்லழற் கடத்து மெல்லியலை நினைந்து
வெஞ்சுடர் வேலோன் நெஞ்சொடு நொந்தது.

காட்டு வழியில் மெல்லிய இயல்புடைய தலைவியை நினைந்து வெஞ்சுடர் வேலை உடைய தலைவன் தன் நெஞ்சினை நொந்து கொண்டது.

பொன்னணி ஈட்டிய ஓட்டரும்
நெஞ்சம்இப் பொங்குவெங்கா
னின்நணி நிற்கும்இ(து) என்னென்ப
தேஇமை யோர்இறைஞ்சும்
மன்னணி தில்லை வளநகர்
அன்னஅன் னந்நடையாள்
மின்னணி நுண்ணிடைக் கோபொருட்
கோநீ விரைகின்றதே. (342)

பொருள்: பொற்குவியலாம் பொருளைத் தேட ஓடுகின்ற நெஞ்சமே, நீ இப்படி விரைந்து செல்வது எதற்கு? தேவர்கள் சென்று வணங்கும் சிவபெருமானது தில்லை நகரை ஒத்த அழகு பொருந்திய, அன்னநடையை உடைய மின்னலைப்போன்ற தலைவியின் இடையை விரும்பியோ? அன்றிப் பொருளை விரும்பியோ? இரண்டும் அல்லாத எதற்கோ? இக்காட்டு வழியே போகாமலும் மீண்டு வராமலும் நின்றதற்குக் காரணமும் என்ன? (என்று தன் நெஞ்சைப் பார்த்துத் தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: ஓட்டு — ஓடுகின்ற, நணிநிற்கும்இதுஎன் — காட்டில் செல்வதும் திரும்புவதும் ஏன்? இமையோ — தேவர்கள், விரைவது — ஓடுவது.

தத்துவப்பொருள்: ஆன்மா நெஞ்சினை நோக்கி , விரும்புவது உலக இன்பமா அல்லது சிவத்தின் அருளா என வினவியதாம்.

Koviloor Digital Library

12. நெஞ்சொடு புலத்தல்

கொளு: அழற்கடத் தழுக்கமிக்கு
நிழற்கதிர் வேலான் நீடுவாடியது

நிழலைச் செய்கின்ற ஒளியை உடைய வேலை ஏந்திய தலைவன் நெஞ்சொடு நொந்தது.

நாய்வயின் உள்ள குணமும்இல்
வேனைநற் தொண்டுகொண்ட
தீவயின் மேனிய்ன் சிற்றம்
பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்அரி தாகும்
பிரி(வு)எளி தாக்குவித்துச்
சேய்வயின் போந்தநெஞ் சேஅஞ்சத்
துக்க(து)உன் சிக்கெனவே. (343)

பொருள்: நாயிடத்து உள்ள நன்றியறிதலாகிய குணமும் இல்லாத என்னையும் நல்ல தொண்டனாக ஏற்றுக் கொண்ட தீப்போலும் மேனியை உடைய சிவபெருமானின் சிற்றம்பலத்தை ஒத்த இனிய மொழியை உடைய தலைவி யிடத்து—பேயிடத்தும் அரிதாகிய பிரிதலை எளிதாகச் செய்வித்து நெடுந்தொலைவு பிரிந்து வந்திருக்கின்ற நெஞ்சமே, உன்னுடைய உறுதி அஞ்சத் தக்கதாகும் (என்று தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: தொண்டு — அடிமை, தீவயின்மேனி — தீயில் உள்ள நிறத்தைக் கொண்ட மேனி, பேய் வயினும் அரிதாகும் பிரிவு—நட்புக்கொண்ட பேயைவிட்டுப் பிரிவதும் அரிது. சேய்மை — தூரம், சிக்கெனவே — நெஞ் சுறுதி.

தத்துவப்பொருள்: ஆன்மா உலக இன்பத்தைத் தேடும் நெஞ்சை இகழ்ந்துரைத்தது.

13. நெஞ்சொடு மறுத்தல்

கொளு: நீணெறி சென்ற நாறிணர்த் தாரோன்
சேணெறி யஞ்சி மீணெறி சென்றது.

Koviloor Digital Library

பொருள் தேடி நீண்ட தூரத்தில் மணமிக்க மாலையுடைய தலைவன் செல்லுகின்ற பொழுது பயணத்திற்கு அஞ்சி மீள்வதற்கு நினைந்தது.

தீமே வியநிருத் தன்திருச்
சிற்றம் பலம்அனைய
பூமே வியபொன்னை விட்டுப்பொன்
தேடியிப் பொங்குவெங்கான்
நாமே நடக்க ஒழிந்தனம்
யாம்நெஞ்சம் வஞ்சியன்ன
வாமே கலையைவிட் டோபொருள்
தேர்ந்தெம்மை வாழ்விப்பதே. (344)

பொருள்: நெஞ்சே, தீயினை ஏந்தியிருக்கும் சிவ பெருமானது தில்லைச் சிற்றம்பலத்தை ஒத்த, செந்தாமரைப் பூவின் கண் உள்ள திருமகளாம் தலைவியை விட்டு விட்டு வேறான பொருளைத் தேடி வெப்பம் மிகுந்த இக்காட்டில் நாம் நடப்பதை ஒழிந்தோம். வஞ்சிக் கொடியை ஒத்த மேகலை அணிந்தவள் ஆகிய தலைவியை விடத் தேடிச் செல்லும் பொருளோ என்னை வாழவைப்பது. யாம் இதற்கு உடன்படோம் (என்று தலைவன் நெஞ்சிற்குக் கூறியது)

சொ.பொ.வி.: நிருத்தன் — சிவபெருமான், பொன் — திருமகள், பொன்— பொருள், வஞ்சி — கொடி.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவமே வாழவைப்பது என்பதை உணர்ந்து நெஞ்சுக்கு உணர்த்தியது.

14. நாள் எண்ணி வருந்தல்

கொளு: சென்றவர் திறத்து நின்றுநனிவாடும்
சூழிருங் கூந்தற்குத் தோழிநனி வாடியது.

பிரிந்து சென்ற தலைவனை நினைந்து வாடுகின்ற சுருண்ட கூந்தலை உடைய தலைவியின் வருத்தத்தைக் கண்டு அவளை ஆற்றமுடியாத நிலைக்குத் தோழி வருந்தியது.

தெண்ணீர் அணிசிவன் சிற்றம்
பலம்சிந்தி யாதவரின்

Koviloor Digital Library

பண்ணீர் மொழியிவ ளைப்பையுள்
எய்தப் பனித்தடங்கண்
உண்ணீர் உகஒளி வாடிட
நீடுசென் றார்சென்றநாள்
எண்ணீர் மையின்நில னுங்குழி
யும்விரல் இட்டறவே. (345)

பொருள்: தெளிந்த கங்கையைச் சூடிய சிவபெருமானது தில்லைச் சிற்றம்பலத்தைச் சிந்தியாதவர்களைப் போல — இனிய இசை போன்ற சொற்களை உடைய தலைவியைப் பிரிவு நோயானது வருத்த — அவளுடைய கண்களிலிருந்து நீர் வடிய, அவளுடைய மேனியானது ஒளிவாட, தலைவன் பிரிந்த நாளை எண்ணுகின்ற தன்மையால் அவளுடைய விரலும் தேய, நிலமும் குழியாயிற்று. இனி இவளை எவ்வாறு ஆற்றுவது? (என்று தோழி வருந்தினாள்)

சொ.பொ.வி.: தெண்ணீர் — தெளிந்த நீர், பண்ணீர் — பண்போன்ற நீர்மை உடைய, பையுள் — துன்பம், உண்ணீர் — கண்ணீர், எண்ணீர்மை — எண்ணியதன்மை — தலைவன் பிரிந்து சென்ற நாட்களை நாளுக்கு ஒரு கோடாகத் தரையில் வரைந்து கோடுகளை நாள்தோறும் தலைவி தன் விரலால் எண்ணுவதால் தலைவியின் விரலும் தேயும், தரையும் குழிபடும் என்பது பண்டை வழக்கு. இட்டு — விரல் விட்டு எண்ணுதல். ஒப்புமைத் திருக்குறள் "வாளற்றுப் புற்கென்ற கண்ணும், அவர் சென்ற நாளொற்றித் தேய்ந்த விரல்" *(1261)*

தத்துவப்பொருள்: ஆன்மா பிரிந்த நாளை எண்ணிச் சிவமானது அருள் வழங்கக் காலம் தாழ்த்துகிறதே என்று எண்ணிட உடன் திருவருளும் வருந்தியது.

15. ஏறு வரவுகண்டு இரங்கி உரைத்தல்

கொளு: நீடிய பொன்னின் நெஞ்சம் நெகிழ்ந்து
வாடியவன் வரவுற்றது.

Koviloor Digital Library

பொருள் தேடச் சென்ற தலைவன் நெஞ்சும் நெகிழ்ந்து வாட்டமுற்றுத் திரும்பி வந்தது.

சுற்றம் பலம்இன்மை காட்டித்தன்
தொல்கழல் தந்ததொல்லோன்
சிற்றம் பலமனை யாள்பர
மன்றுதிண் கோட்டின்வண்ணப்
புற்றங்(கு) உதர்ந்துநல் நாகொடும்
பொன்னார் மணிபுலம்பக்
கொற்றம் மருவுகொல் ஏறுசெல்
லாநின்ற கூர்ஞ்செக்கரே. (346)

பொருள்: தன்னுடைய வலிமையான கொம்புகளினால் மண்புற்றைத் தோண்டி கொம்பில் கட்டப்பட்ட மணிகள் ஒலிக்க வெற்றி பொருந்திய காளைமாடுகள் பசுவோடு ஊருக்குள் திரும்புகின்ற இந்த மாலை நேரக் காட்சி - - பிறவி நோய்க்கு மருந்தான தன்னுடைய திருவடிகளைத் தந்து உதவுகின்ற சிவபெருமானது தில்லைச் சிற்றம்பலத்தை ஒத்த தலைவிக்குச் சுற்றமாகிய தோழிகளால் பயனின்மையை உணர்த்துகிறது. ஆதலால் தலைவி இனி என்னாவாள்? (என்று தலைவன் நினைந்தது)

சொ.பொ.வி.: சுற்றம் — தோழியர் கூட்டம், பலம் இன்மை— பயனுடையது ஆகாமை, பரமன்று — பொறுக்க முடியாதது, கோடு—கொம்பு, புற்று — மண்புற்று, உதிர்ந்து — உதிர்த்து, மாலைக்காலத்தில் ஆநிரைகள் திரும்புகின்ற காட்சி தலைவிக்குக் காதல் ஏக்கத்தை உண்டாக்கும். அந்த ஏக்கம் தோழியரால் தீர்க்க முடியாதது. எனவேதான் தலைவன் வருந்தினான். கூர்ஞ்செக்கர் — செம்மைநிற மாலைக்கால வானம்.

தத்துவப்பொருள்: ஆன்மா வினை விளையும் காலம் கண்டு சிவம் எண்ணுகின்ற எண்ணத்தை நினைந்து வருந்தியது.

16. பருவங்கண்டு இரங்கல்

கொளு: மன்னிய பருவம் முன்னிய செலவின்
இன்னல் எய்தி மன்னன் ஏகியது.

Koviloor Digital Library

காணுகின்ற கார்ப் பருவத்தைக் கண்டு பிரிந்து சென்ற தலைவன் துன்பமுற்றுத் திரும்பியது.

கண்ணுழை யாதுவின் மேகம்
கலந்து கணமயில்தொக்(கு)
எண்ணுழை யாத்தழை கோலிநின்(று)
ஆலும் இனமலர்வாய்
மண்ணுழை யாவும் அறிதில்லை
மன்னன(து) இன்னருள்போல்
பண்ணுழை யாமொழி யாள்என்ன
ளாங்கொல்மன் பாவியற்கே. (347)

பொருள்: ஆகாயத்தில் மேகங்கள் நெருங்கி உள்ளன. அதனால் மலர்களை உடைய சோலைகள் தோறும் மயிற் கூட்டங்கள் கூடிநின்று தோகை விரித்து ஆடுகின்றன. மண்ணுலகில் எல்லா உயிர்களும் அறிந்து அனுபவிக்கக் கூடிய எளிமை உடைய தில்லைச் சிவபெருமானது இனிய அருள்போல — பண் போன்ற இனிய மொழிகளை உடைய தலைவி தீவினையான எனக்கு எத்தன்மையள் ஆவாளோ? அறிகிலேன் (என்று தலைவன் கூறியது)

சொ.பொ.வி.: மேகம் சூழ மயில் ஆட கார்ப்பருவம் வர அதனைக் கண்டு தலைவி என்னாவாளோ என்பது குறிப்பு. விண்கண் நுழையாது—கண்பார்வை செல்ல முடியாத ஆகாயத்தில் (மேகங்கள் நெருங்கிச் சூழ்ந்துள்ள) கணமயில்—மயிற்கூட்டம், எண்ணுழையா — எண்ண முடியாத, தழைக்கோலி—தோகையை விரித்து, ஆலும் — ஆடும்,

தத்துவப்பொருள்: ஆன்மா சிவம் அருள் வழங்கும் காலம் எண்ணி வருந்துதல்.

17. முகிலொடு கூறல்

கொளு : எனைப்பல துயரமோ(டு) ஏகா நின்றவன்
துனைக்கார் அதற்குத் துணிந்து சொல்லியது.

Koviloor Digital Library

பலவிதமான துயர எண்ணங்களோடு சென்ற தலைவன் விரைந்து செல்லுகின்ற மேகக் கூட்டத்திடம் கூறியது.

அற்படு காட்டில்நின்(று) ஆடிசிற்
றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீள்முகில் என்னின்முன்
னேல்முது வோர்குழுமி
விற்படு வாணுத லாள்செல்லல்
தீர்ப்பான் விரைமலர்தூய்
நெற்படு வான்பலி செய்(து)அய
ராநிற்கும் நீள்நகர்க்கே. (348)

பொருள்: மழைக்காலத்து இருளில் சுடுகாட்டில் ஆடுகின்ற சிற்றம்பலத்தானின் கண்டத்தைப் போல இருண்டிருக்கும் நீண்ட மேகமே, முதுமையான பெண்கள் கூடி வில் போன்ற நெற்றியை உடைய தலைவியின் துன்பத்தைப் போக்க மலர்களைத் தூவி நெல்லொடு கலந்த தூய பலியைக் கொடுத்து வீட்டுத் தெய்வத்தை வணங்குவர் அத்தகைய வீட்டுப்பக்கம் எனக்கு முன்னே சென்று விடாதே (என்று தலைவன் மேகத்திடம் கூறினான்)

சொ.பொ.வி.: அல்படுகாடு — இருள்நேரக் காடு, முன்னேல் — முன்னே செல்லாதே, முதுவோர் — முதுமை உடைய பெண்கள், செல்லல் -- துன்பம்.

தத்துவப்பொருள்: ஆன்மா மேகத்தைக் கண்டு சிவத்திடம் தான் விரைந்து செல்வதை உணர்த்தியது.

18. தேர் வரவு கூறல்

கொளு: வேந்தன் பொருளோடு விரும்பி வருமென
ஏந்திழைப் பாங்கி இனி(து) இயம்பியது.

பொருள்தேடிச் சென்ற தலைவன் திரும்பி வருகிறான் என்பதை மிக்க அணிகலன்களை உடைய தோழி விரும்பிச் சொன்னது.

Koviloor Digital Library

பாவியை வெல்லும் பரிசில்லை
யேமுகில் பாவையஞ்சீர்
ஆவியை வெல்லக் கறுக்கின்ற
போழ்தத்தின் அம்பலத்துக்
காவியை வெல்லும் மிடற்றோன்
அருளிற் கதுமெனப்போய்
மேவிய மாநிதி யோ(டு)அன்பர்
தேர்வந்து மேவினதே. (349)

பொருள்: கார்மேகமானது பாவை போன்ற தலைவியின் உயிரைக் கவரக் கருதிய காலத்தில் — சிற்றம்பலத்தில் உள்ள நீலப்பூவை ஒத்த கழுத்தையுடைய சிவபெருமானது அருளைப் போல — தான் திரட்டிய பெரும் பொருளோடு நம்முடைய தலைவனின் தேர் விரைவில் வந்துசேர்ந்தது. எனவே தலைவிக்கு வரக்கூடிய துன்பத்தை வெல்லுவதற் குரிய தன்மை இனித் தேவையில்லை (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: பாவி — வரக்கூடிய துன்பம், முகில் — கார்மேகம், பாவை—தலைவி, காவி—நீலமலர், கதுமென — விரைவாக, மேவினது — வந்தது.

தத்துவப்பொருள்: திருவருள் அருள் வழங்குவதற்குரிய காலத்தில் ஆன்மா சிவத்தலைவியின் பக்கம் வந்தது எனக் கூறுவது.

19. இளையர் எதிர்கோடல்

கொளு: செறிகழலவன் திருநகர் புகுதர
எறிவேல் இளைஞர் எதிர்கொண்டது.

காலில் கட்டப்பட்ட வீரக்கழலை உடைய தலைவன் அழகிய நகரில் வந்துபுக. அவனுடைய தோழர்களான வேல்களைக் கையில் ஏந்திய இளையவர்கள் அவனை வரவேற்றது.

யாழின் மொழிமங்கை பங்கன்சிற்
றம்பலத் தான்அமைத்த

Koviloor Digital Library

ஊழின் வலியதொன்(று) என்னை
ஒளிமே கலையுகளும்
வீழும் வரிவளை மெல்லியல்
ஆவிசெல் லாதமுன்னே
சூழும் தொகுநிதி யோ(டு)அன்பர்
தேர்வந்து தோன்றியதே. (350)

பொருள்: ஒளி பொருந்திய மேகலை இடையிலிருந்து வீழ்ந்தது. வரி பொருந்திய வளையல்கள் கையிலிருந்து விழுந்தன. இத்தகு நிலையில் மென்மையான இயல்புடைய தலைவி உயிர் விடுவதற்கு முன்னால் நிறைந்த செல்வத் தோடு தலைவருடைய தேர் வந்து சேர்ந்தது. எனவே உமையவளை இடப்பாகத்தில் கொண்ட சிற்றம்பலத்தான் அமைத்த ஊழைக்காட்டிலும் வலியது எது?

சொ.பொ.வி.: தேர் வந்ததால் இளைஞர்கள் வரவேற்றனர் என்பது குறிப்புப் பொருள். யாழின்மொழி — மங்கை உமையவள், உகளும் — வீழும்.

தத்துவப்பொருள்: ஆன்மா, தன் ஊழ்வினையை நினைந்து மகிழ்ந்தது.

20. உள்மகிழ்ந்து உரைத்தல்

கொளு: பெருநிதி யோடு திருமனை புகுந்தவன்
வளமனைக் கிழத்தியோ(டு) உளமகிழ்ந்(து) உரைத்தது.

பெரும் பொருளோடு திரும்பிய தலைவன் தன் இல்லம் புகுந்து தலைவியோடு உளம் மகிழ்ந்துரைத்தல்.

மயில்மன்னு சாயல்இம் மானைப்
பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயில்மன்னு வெஞ்சுரம் சென்றதெல்
லாம்விடை யோன்புலியூர்க்
குயில்மன்னு சொல்லிமென் கொங்கைஎன்
அங்கத் திடைகுளிப்பத்
துயில்மன்னு பூவணை மேலணை
யாமுன் துவள்உற்றதே. (351)

Koviloor Digital Library

பொருள்: மயில் போலும் சாயலை உடைய மான் போன்ற இத்தலைவியினைப் பிரிந்து பொருள் தேடுவதற்காக வெயில் எரிக்கும் வெம்மையான சுரத்தில் சென்ற துன்பம் எல்லாம் — விடை (காளை)யை உடைய சிவ பெருமானின் தில்லையில் உள்ள குயில் போன்ற இனிய சொல்லைக் கொண்ட தலைவியின் மெல்லிய கொங்கைகள் என் மார்புக்குள் மூழ்கும் நிலையில் துயில்வதற்குரிய படுக்கையில் அணைய முற்படும் முன்னே மஃறந்தது.

சொ.பொ.வி.: வெயில்மன்னும் — வெயில் எரிக்கும், அங்கம் — கை, பூவணை — படுக்கை.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருள்நோக்கம் பெற்று ஆன்மா மகிழ்ந்துரைத்தது.

பொருள்வயின் பிரிவு முற்றிற்று.

25. பரத்தையர் பிரிவு

தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தும் பொழுது பல பிரிவுகளை மேற்கொள்ளுவான். அதில் இப்பிரிவும் ஒன்று. காவல், கல்வி முதலியவற்றிற்காகப் பிரிவது அறத்தின் அடிப்படையைக் கொண்டு பிரிதலாகும். நண்பருக்காக அல்லது அரசருக்காகப் போருக்குச் சென்று திரைப்பொருள் கொள்வதும், பொருள் தேடப் பிரிவதும் பொருளை அடிப்படையாகக் கொண்டு பிரிதலாகும். இப்பரத்தையர் பிரிவு இன்பத்தின் அடிப்படையில் பிரிதலாகும். இப்பரத்தையர் பிரிவு தலைவனுக்கும் தலைவிக்கும் ஊடலை உருவாக்கும். ஊடல் என்பது அகப்பொருட் சுவையில் விறுவிறுப்பையும், எழுச்சியையும் உருவாக்கும். எனவே இப்பிரிவை அக இலக்கணத்தில் முன்னோர்கள் சேர்த்தனர் என்பது ஒருவித ஆராய்ச்சியாகும்.

Koviloor Digital Library

இல்லறத் தலைவி அன்றி ஆடல் பாடல் தொழில் களைப் புரிகின்ற மகளிரின் பொருட்டுப் பிரிந்து சென்று அவர்கள்பால் உரிமை ஏற்பட்டுத் தங்குதலும் இப்பிரிவு என்பர். சிலப்பதிகாரத்தில் மாதவியிடத்துக் கோவலன் பிரிந்த பிரிவை இங்கு நினைவு கொள்ளலாம். இது ஒருவகை ஆய்வுமுடிவு. ஐந்திணை ஒழுக்கத்தில் பரத்தையர் பிரிவு ஏற்புடைய ஒழுக்கம் இல்லை என்றாலும் சமூக நோக்கில் இவ்வொழுக்கம் பரந்து நிலவியதால் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழல், சமுதாயம் இதைத் தவறாகக் கருதாமை, கலைத்துறையால் ஆடவர் ஈர்க்கப்படுதல், கட்டுப்பாடு உடைய பரத்தமை ஒழுக்கம் ஆகிய காரணங் களால் இப்பரத்தையர் பிரிவு சங்க இலக்கியங்களில் காணப்பெறுகிறது. இது மற்றொருவகை ஆராய்ச்சி. இந்த அடிப்படைகளில்தான் மணிவாசகரும் இப்பிரிவை ஏற்றுக்கொண்டு நாற்பத்தொன்பது துறைகளாகப் பாடி யிருக்கிறார் எனலாம். இதனால்தான் மணிவாசகப் பெருமான் இப்பகுதிக்குரிய பாடல்களில் பிரிவையும், பிரிவால் ஏற்பட்ட ஊடல்களையும், ஊடலைத் தணிக்கும் முறைமைகளையும் நிகழ்ச்சிகளாகப் பாடியுள்ளாரே தவிரப் பரத்தையராம் பிற மகளிரிடம் இன்பம் துய்த்ததாகச் செய்தியைத் தரவில்லை. எனவே பிரிவு என்ற நிலையிலும், ஊடல் நிகழ்ச்சி என்ற நிலையிலும் தான் இப்பகுதி அமைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

தத்துவப்பொருள்: சுத்த, கேவல நிலையில் சிவமும் உயிரும் பிறிதல் இன்றி சிவத்தன்மை அடைந்து அடங்கிக் கிடந்த ஆன்மா அறிவு பூரணமாய் எங்கும் இன்பம் நிறைந்திருத்தலை அறிந்து, பிறதெய்வ வழிபாட்டை நுகர்தல் பரத்தையர் பிரிவு என்பதாம். “உரைத்த சிவானந்தம் ஆண்டு எல்லாம் பூரணமாய்க் கண்ட அனுபூபதி” என்ற திருவாசக வியாக்கியானம் கூறும்.

1. கண்டவர் கூறல்

கொளு: உரத்தகு வேலோன் பரத்தையிற் பிரியத்
திண்தேர் வீதியில் கண்டோர் உரைத்தது.

Koviloor Digital Library

வலிமை உடைய வேலினைக் கொண்ட தலைவன் பரத்தையின் இல்லத்திற்குப் பிரிதல் பொருட்டுத் தேரில் செல்லும் பொழுது கண்டோர் உரைத்தது.

உடுத்தணி வாளரா வன்தில்லை
யூரன் வரஒருங்கே
எடுத்தணி கையே றினவளை
ஆர்ப்ப இளமயிலேர்
கடுத்தணி காமர் கரும்புரு
வச்சிலை கண்மலர்அம்(பு)
அடுத்தணி வாள்இளை யோர்சுற்றும்
பற்றினர் மாதிரமே. (352)

பொருள்: பாம்பினைக் கச்சாகக் கொண்ட சிவ பெருமானது தில்லைக்குரிய தலைவன், இவ்வீதியில் தேரில் வர, வளையல்களை அணிந்த, மயிலின் சாயலைக் கொண்ட பெண்கள் கரிய புருவமாகிய வில்லில் கண் மலராகிய அம்பைச் சேர்த்துத் தலைவனைக் காண ஒருங்கு கூடினர். இதனை இவன் தலைவி அறிந்தால் என்ன வாகும்? என்று கண்டோர் கூறினர்.

சொ.பொ.வி.: உடுத்தணி — உடையின்மேல் கட்டும் அணி (கச்சு), ஊரன் — தலைவன், இனவளை — வளையல் கூட்டம், மாதிரம் — திசை.

தத்துவப்பொருள்: ஆன்மாவாகிய தலைவன் அறிவு பூரணமாய் எல்லா உயிரிடத்தும் அன்பு செலுத்தப் பிரிகின்ற பிரிவை சிவமாம் தலைவி அறிந்தால் என்ன வாகும் என்பதாம்.

2. பொறை உவந்து உரைத்தல்

கொளு: கள்ளவிழ்க் கோதையைக் காதல் தோழி
உள்ளவிழ் பொறைகண்(டு) உவந்து ரைத்தது.

அன்புத்தோழி தேன் பொருந்திய மாலையை உடைய தலைவியின் பொறுமை கண்டு மகிழ்ந்து உரைத்தது.

Koviloor Digital Library

கரும்புறு கொன்றையன் தொல்புலி
யூர்ச்சுருங் கும்மருங்குல்
பெரும்பொறை யாட்டியை யென்இன்று
பேசுவ பேரொலிநீர்க்
கரும்புறை யூரன் கலந்தகன்
றானென்று கண்மணியும்
அரும்பொறை யாகும்என் னாவியும்
தேய்வுற்(று) அழிகின்றதே. (353)

பொருள்: ஒலிக்கின்ற நீரைக்கொண்டு கரும்பு வளர்க்கின்ற ஊரை உடைய தலைவன் பிரிந்தான் என்பதை அறிந்த நான் அதனைத் தாங்குவது பெரிதும் சுமையாயிற்று. மேலும் என் உயிரும் தேய்ந்து தேய்ந்து அழிகின்றது. என் மனமும் அதிகமாகக் கலங்குகின்றது. என்றாலும் வண்டுகள் மொய்க்கின்ற கொன்றைமாலையை உடைய சிவபெருமானது தில்லையில் உள்ள இடைசுருங்கிய தலைவியோ மிகவும் பொறுமை உடைய வளாய் இருக்கின்றாள். இவளை என்னவென்று பாராட்டுவது (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: சுரும்பு — வண்டு, மருங்கல் — இடை, கரும்புறையூரன் — கரும்புவளர்கின்ற ஊரை உடைய தலைவன், கண்மணி — தோழியின் மனத்தைக் குறித்தது.

தத்துவப்பொருள்: ஆன்மா பிரிந்தது கேட்டுப் பொறுமையாயிருக்கும் சிவத்தலைவியைத் திருவருள் பாராட்டியது.

3. பொதுப்படக் கூறி வாடி யழுங்கல்

கொளு: பொற்றிகழ் அரவன் மற்றிகழ் தில்லைப்
பிரிந்த ஊரனோ(டு) இருந்துவா டியது.

அழகிய, சிறந்த பாம்பை அணியாக உடையவனின் தில்லை நகரில் பிரிந்த தலைவனை எண்ணி, தலைவி வருந்திக்கூறியது.

Koviloor Digital Library

அப்புற்ற சென்னியன் தில்லை
உறாரின் அவர்உறுநோய்
ஒப்புற்(று) எழில்நலம் ஊரன்
கவரஉள் ளும்புறம்பும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றுத்தம்
மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொல்
ஆருயிர் தேய்பவரே. (354)

பொருள்: கங்கையைத் தலையில் சூடிய சிவபெரு மானது தில்லையை அடையாதவரைப்போல வருந்தும் வண்ணம் என்னுடைய அழகைத் தலைவன் கவர்ந்து கொண்டான். தில்லையை அடையாதவர் பெறு கின்ற நோயைப் பெற்று உள்ளும் புறமும் வாடிப் பெருமூச்சு விட்டுப் படுக்கையே துணையாக வாடுகின்ற கொங்கையை உடைய மகளிர் பிறர் யாரோ? (என்னைத்தவிர) (எனத் தலைவி பொதுப்படக் கூறினாள்)

சொ.பொ.வி.: தலைவன் பிரிந்ததால் வாடுகின்ற என்னைப்போல் பிறமகளிர் இருக்கமாட்டார்கள் என்பதால் பிறருக்கு இன்பம் தருகிறான் என்பது பெறப் படுகிறது. அப்பு — நீர் (கங்கை), உறார்—சேராதவர், வெய் துயிர்ப்பு — பெருமூச்சுவிட்டு, மெல்லணை — படுக்கை, செப்புற்ற கொங்கையர் — செப்புபோன்ற முலைகளை உடைய மங்கையர்.

தத்துவப்பொருள்: பல உயிர்களிடத்தில் அன்பு காட்டல் ஆன்மாவின் விதி போலும் (இலக்கணம்) என்று சிவத்தலைவி நினைத்தல்.

4. கனவிழந்து உரைத்தல்

கொளு: சினவில் தடக்கைத் தீம்புனல் ஊரனைக்
கனவில் கண்ட காரிகை உரைத்தது.

பெரிய வில்லைக் கையிலே உடைய தலைவனைக் கனவிலே கண்ட தலைவி கூறியது.

Koviloor Digital Library

தேவா சுரர்இறைஞ் சும்கழ
லோன்தில்லை சேரலர்போல்
ஆவா கனவும் இழந்தேன்
நனவென்(று) அமளியின்மேல்
பூவார் அகலம்வந்(து) ஊரன்
தரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற், றிலேன்விழித்
தேன்அரும் பாவியனே. (355)

பொருள்: நலமுடைய தோழியே, கனவில் தலைவன் என்னுடைய படுக்கையில் வந்து அவ்னுடைய மாலை யணிந்த மார்பைத் தர, அவனோட்டு நானும் மயங்கி நனவு என்றே தழுவினேன். உடனே பாவியாகிய நான் விழித்துக் கொண்டேன். அதனால் தேவரும் அசுரரும் ஒருங்கு கூடி வந்து வணங்கும் திருவடியை உடைய சிவபெருமானது தில்லையைச் சேராதவரைப் போல நான் கனவையும் இழந்து வருந்துகின்றேன் (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: ஆவா — இரங்கல்குறிப்பு, அமளி — படுக்கை, அகலம் — மார்பு, புலம்பாய் — தனித்துப் புலம்பு கின்ற நான், பாவாய் — பாவையைப் போன்ற தோழியே.

தத்துவப்பொருள்: கனவை நனவாக மயங்கிச் சிவத்தலைவி தான் நின்ற நிலையைத் திருவருளுக்கு உரைத்தது.

5. விளக்கொடு வெறுத்தல்

கொளு: பஞ்சணைத் துயின்ற பஞ்சின் மெல்லடி
அன்புடன் அழுங்கிச் செஞ்சுடர்க்(கு) உரைத்தது

பஞ்சு போன்ற கால்களை உடைய தலைவி படுக்கையில் துயிலும் பொழுது அழகிய விளக்குகளோடு தலைவனை எண்ணி வருந்திக் கூறியது.

செய்ம்முக நீல மலர்தில்லைச்
சிற்றம் பலத்தரற்குக்

Koviloor Digital Library

கைம்முகங் கூம்பக் கழல்பணி
யாரிற் கலந்தவர்க்குப்
பொய்ம்முகங் காட்டிக் கரத்தல்
பொருத்தம்அன்(று) என்றில்லையே
நெய்ம்முக மாந்தி இருள்முகங்
கீழும் நெடுஞ்சுடரே. (356)

பொருள்: முகத்தால் நெய்யைக் குடித்து இருளின் முகத்தைக் கிழிக்கின்ற சுடரே, வயல்களில் நீலமலர்கள் பூத்துக் குலுங்கும் தில்லையில் உள்ள சிவபெருமானுக்கு முன் சென்று, கைகளைக் கூப்பித் திருவடிகளை வணங் காதவர்களைப் போலத் திருமணம் செய்தவர்க்குப் பொய்ம் மையான முகத்தைக் காட்டி வரைந்து, துன்பத்தைத் தருவது தகுதி அன்று என்று தலைவனுக்குக் கூறாயோ? நீ கூறவில்லை என்றால் யார் கூறுவது (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: செய் — வயல், கலந்தவர் — மணந்து கொண்ட தலைவி, பொய்முகம் — பொய்யாக்கி, கலத்தல் — மறத்தல், நெய்முகம் மாந்தி — அகல்விளக்கின் மூக்கின்வழியே நெய்யைக் குடித்து.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மா பிரிந்து சென்றதைச் சுடர்கள் தடுக்கவில்லை என வருந்திக்கூறியது.

6. வாரம் பகர்ந்து வாயில் மறுத்துரைத்தல்

கொளு: வார்புன லூரன் ஏர்திகழ் தோள்வயின்
கார்புரை குழலி வாரம் பகர்ந்தது.

புனல் சூழ்ந்த ஊரை உடைய தலைவனின் அழகு திகழ்கின்ற தோளை நோக்கிக் கருமை பொருந்திய கூந்தலை உடைய தலைவி அன்பு (வாரம்) தோன்றக் கூறியது.

பூங்குவ ளைப்பொலி மாலையும்
ஊரன்பொற் றோளிணையும்

Koviloor Digital Library

ஆங்கு வளைத்துவைத் தாரேனும்
கொள்கநள் ளார்அரணம்
தீங்கு வளைத்தவில் லோன்தில்லைச்
சிற்றம் பலத்தயல்வாய்
ஒங்கு வளைக்கரத் தார்க்கடுத்
தோமன் உறாவரையே. (357)

பொருள்: குவளைப் பூவால் கட்டப் பெற்ற மாலையைக் கொண்ட தலைவனின் பொன் போலும் இரண்டு பக்கத் தோள்களையும் விரும்புவர் யாரேனும் வளைத்துக் கொள்வார்களாக. பகைவர்களது கோட்டையினை அழித்த வில்லை உடைய சிவபெருமானின் தில்லைக்கு அயலாகிய இடத்தில் வாழ்கின்ற பெண்களுக்குத் தலைவனை முற்றூட்டாக அளித்துவிட்டோம் என்பதால் (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: தலைவனை முழுமையாகப் பிறருக்கு அனுபவிக்கக் கொடுத்து விட்டதை உறாவரை என்ற சொல்லால் குறிப்பிடுகிறாள் தலைவி. தோளை வளைத்துக் கொள்ளுதல் என்பது அழகாலும், பேச்சாலும், நடையாலும் தலைவனை தன்வசப் படுத்திக் கொள்ளுதல். நள்ளார்—பகைவர், உறாவரை—தான் சிறிதும் கொள்ளாத முற்றூட்டு.(அடமானம்)

தத்துவப்பொருள்: ஆன்மாவாகிய தலைவனைப் பிற சமயத்தார் அனுபவித்தல் பொருட்டுக் கொடுத்து விட்டோம் எனச் சிவத்தலைவி கூறியது.

7. பள்ளியிடத்து ஊடல்

கொளு: பீடிவர் கற்பின் தோடிவர் கோதை
ஆடவன் தன்னோ(டு) ஊடி உரைத்தது.

பெருமை மிக்க கற்பினை உடைய தலைவி தலைவனோடு ஊடல் கொண்டு உரைத்தது.

தவஞ்சய் திலாதவெந் தீவினை
யேம்புன்மைத் தன்மைக்(கு)எள்ளா(து)

Koviloor Digital Library

எவம்செய்து நின்(று)இனி இன்(று)உனை
நோவ(து)என் அத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை
யூரநின் சேயிழையார்
நவம்செய்த புல்லங்கள் மாட்டேம்
தொடல்விடு நற்கலையே. (358)

பொருள்: அனைவருக்கும் தந்தையும், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவரும் ஆகிய சிவபெருமானின் அருள் நிறைந்த தில்லையில் உள்ள தலைவனே, முற் பிறப்புக்களில் தவம் செய்யாத தீவினை உடைய யான் எம்முடைய புன்மை நிலைக்கு வருந்தாது, துன்பத்தைச் செய்து உன்னை வருத்துவது எதற்காக? உம்முடைய பிற காதலியர் செய்யும் புதிய வகையான தழுவுதலையும் செய் யோம். ஆதலால் எம்முடைய மேகலையைத் தீண்டாது விட்டு விடுக (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: புன்மைத்தன்மை — கீழ்மைநிலை, நோவல்என் — உன்மீது வருத்தம் கொள்வது ஏன்? அத்தன் — தந்தை, முத்தன் — பாசத்திலிருந்து நீங்குதல், சேயிழை யார் –– பரத்தையராம் பிறமகளிர், புல்லங்கள் — தழுவுதல், நற்கலை — மேகலை.

தத்துவப்பொருள்: ஆன்மாவோடு சிவத்தலைவி புலந்து கூறியது.

8. செவ்வணி விடுக்க இல்லோர் கூறல்

கொளு: பாற்செலு மொழியார் மேற்செல விரும்பல்
பொல்லா தென்ன இல்லோர் புகன்றது.

பால்போன்ற இனிமை உடையார்பால் செல்ல விரும்புதல் பொல்லாதது ஆகும் என இல்லத்தோர் கூறியது.

செவ்வணி விடுதல் என்பது தலைவன் பரத்தையர் இடத்தில் இருக்கும் பொழுது தலைவி பூத்து நீராடிய செய்தியை அவனுக்கு உணர்த்துவதற்காகத் தோழி

Koviloor Digital Library

ஒருத்தியைச் செம்பட்டாடை உடுத்தி, செம்மலர் சூட்டிப் பரத்தையர் இல்லத்திற்கு அனுப்புதல் ஆகும். இதனால் தலைவன் உடன் வீடு திரும்புவான்.

தணியுறப் பொங்கும்இக் கொங்கைகள்
தாங்கித் தளர்மருங்குல்
பிணியுறப் பேதைசென்(று) இன்றெய்து
மால்அர வும்பிறையுஞ்
அணியுறக் கொண்டவன் தில்லைத்தொல்
லாயநல் லார்கண்முன்னே
பணியுறத் தோன்றும் நுடங்கிடை
யார்கள் பயின்மனைக்கே. (359)

பொருள்: சந்திரனையும், அதற்குப் பகையான பாம்பையும் அணிந்துள்ள சிவபெருமானது தில்லையிலே வாழுகின்ற ஆயத்தார்களிடையே—பாம்பு போல அசைகின்ற இடையை உடைய பரத்தையர் வாழுகின்ற வீடுகளுக்கு, பருத்த கொங்கைகளைக் கொண்ட தளர்கின்ற இடையே உடைய தலைவி வருந்த, செவ்வணி அணிந்த தோழி செல்லுவது எமக்குப் பெரிதும் இழிவாம் (கேவலமாம்) (என்று வீட்டில் உள்ளோர் கூறினர்.)

சொ.பொ.வி.: தில்லையில் வாழுகின்ற மகளிரிடையே ஒருசிலர் பரத்தையராய் வாழ்ந்தனர் என்பதை அடிகள் பணியுறத் தோன்றும் என்ற சொல்லால் குறிப்பிடுவது அழகுடைத்தாம். பணி — பாம்பு தோற்றத்தால் இடையும், விஷம் போன்ற பண்பால் அல்குலும் குறிக்கப் படுகிறது. அதாவது பாம்பு போன்ற இடையை உடைய பரத்தையர் என்பது அவர்தம் தோற்றத்தையும், பண்பையும் குறிக்கிறது. தணியுற — வளர்ந்து, மருங்குல் — இடை, பிணியுற — தலைவி வருந்த, பேதை — தோழி, மால் — இழிவு.

தத்துவப்பொருள்: சிவத்தை அடைந்து பெறுகின்ற இன்பத்தை விட்டுவிட்டு போன்று ஆன்மா பிற தெய்வங்களை அடைந்து வழிபாடு செய்வது சிறப்பாகாது என்பதாம்.

Koviloor Digital Library

9. அயல் அறிவுரைத்தவள் அழுக்கம் எய்தல்

கொளு: உலகியல் அறியச் செலவிடல் உற்ற
விழுத்தகு மாதர்க்கு அழுக்கஞ் சென்றது.

உலகார் அறியும்படி செவ்வணி அணிந்து விடுகின்ற தன்மைக்கு விழுப்பம் மிக்க தலைவி வருந்திக் கூறியது.

இரவணை யும்மதி யேர்நுத
லார்நுதிக் கோலஞ்செய்து
குரவணை யுங்குழல் இங்(கு)இவ
ளால்இக் குறியறிவித்(து)
அரவணை யும்சடை யோன்தில்லை
யூரனை ஆங்கொருத்தி
தரஅணை யும்பரி சாயின
வாறுநம் தன்மைகளே. (360)

பொருள்: இரவில் தோன்றும் பிறை போன்ற நெற்றியை உடைய பெண்களின் (பரத்தையர்) முன்னே செவ்வணி கோலத்தைக் கொண்ட தோழியை, — பாம்பை அணிந்த சடையை உடைய சிவபெருமானது தில்லையினைச் சார்ந்த தலைவன் இருக்கும் பரத்தையர் மனைக்கண் அனுப்பி, அப்பரத்தையர் ஒருத்தி கொடுக்க, அத்தலைவனை நாம் பெறும் நிலை வாய்ந்துள்ளதே, நம் பெண் தன்மையை என்னவென்று சொல்வது? (என்று தலைவி வருந்திக் கூறினாள்)

சொ.பொ.வி.: அணையும் — தோன்றும், நுதி — பரத்தையர் முன்னே, குரவு — செந்நிறப்பூ. இக்குறி — செவ்வணிக்குறி, அணையும்பரிசு — பெறுகின்ற நிலைமை, செவ்வணி அணிந்த தோழியால் பரத்தையர் இல்லத்தில் அறிவித்துத் தலைவனைப் பெற வேண்டிய நிலை உள்ளதே என்று தலைவி வருந்திய குறிப்பு பெறப்படுகிறது.

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவைப் பிற உயிர்கள் தரப் பெறவேண்டிய நிலை உள்ளதே என வருந்தியது.

Koviloor Digital Library

10. செவ்வணி கண்ட வாயிலவர் கூறல்

கொளு: மணிக்குழை பூப்பியல் உணர்த்த வந்த
ஆயிழையைக் கண்ட வாயிலவர் உரைத்தது.

நீலமணி போலும் கூந்தலை உடைய தலைவியின் பூப்பினை அறிவிக்க வந்த செவ்வணி அணிந்த தோழியைக் கண்டு வாயிற் காவலர் உரைத்தது.

சிவந்தபொன் மேனி மணிதிருச்
சிற்றம் பலமுடையான்
சிவந்தஅம் தாளணி ஊரற்(கு)
உலகிய லாறுரைப்பான்
சிவந்தபைம் போதும்அம் செம்மலர்ப்
பட்டும்கட் டார்முலைமேல்
சிவந்தஅம் சாந்தமும் தோன்றின
வந்து திருமனைக்கே. (361)

பொருள்: செம்பொன் மேனியை உடைய திருச் சிற்றம்பலத்தை உடைய சிவபெருமானின் தாள் களைத் தன்னுடைய தலைக்கு அணியாகக்கொண்ட தலைவனுக்கு உலகத்தின் இயல்பினை அறிவிக்க வேண்டி, நம் வீட்டு வாசலில் சிவந்த பூவும், செம்மலர் பட்டும், முலையின்மேல் அழகிய செம்மையான சந்தனமும் கொண்டு தோழி தோன்றினாள். ஆதலால் இனி அறத்திற்குக் குறைவு வாராமல் தலைவன் தன்னுடைய வீட்டிற்குச் செல்ல வேண்டும் (என்று பரத்தையின் வாயிற் காவலர் கூறினர்)

சொ.பொ.வி.: சிவந்தஅம் தாளணி — செம்மை நிறம் பொருந்திய திருவடியைத் தனக்கு முடியணியாய்க் கொண்ட, பைம்போது — பசியபூ, கட்டார்முலை — கச்சணிந்த முலை.

தத்துவப்பொருள்: பிறதெய்வ வழிபாடுகளைச் செய்யும் உயிர்கள் வாழும் இடத்தில் உள்ளோர் ஆன்மாவின் நிலை பற்றிக் கூறியது.

Koviloor Digital Library

11. மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல்

கொளு: கடனறிந்(து) ஊரன் கடிமனை புகுதர
வாய்ந்த வாயிலவர் ஆய்ந்(து) உரைத்தது.

தலைவன் தலைவியின் வீட்டில் கடமை அறிந்து புகவும் அழகிய வாயிலில் உள்ளோர் உரைத்தது.

குராப்பயில் கூழை இவளின் மிக்(கு)
அம்பலத் தான்குழையாம்
அராப்பயில் நுண்ணிடை யார்அடங்
கார்எவ ரேயினிப்பண்(டு)
இராப்பகல் நின்றுணங்(கு) ஈர்ங்கடை
யித்துணைப் போழ்திற்சென்று
கராப்பயில் பூம்புன லூரன்
புகும்இக் கடிமனைக்கே. (362)

பொருள்: முன்பு இரவிலும் பகலிலும் தலைவியைச் சமாதானப் படுத்தும் வாயில்களைப் பெறாது நின்று வாடிய குளிர்ச்சி பொருந்திய தலைவியின் மனைக்கண் காலம் நீட்டிக்காது—முதலைகள் வாழுகின்ற நீர்நிலையைக் கொண்ட ஊரை உடைய தலைவன் புகுந்தான். குரவமலர் சூடிய கூந்தலை உடைய தலைவியினும் மேம்பட்ட தில்லையம்பலத்தானின் காதணியாகிய பாம்பை ஒத்த இடையினை உடைய மகளிர் எவர் அடங்காதவர்? (எவரும் இல்லை என்றாறு)

சொ.பொ.வி.:தலைவன் இல்லத்தில் புகுந்தவுடன் தலைவி அவனோடு ஊடலை நீக்கி அன்பு காட்டினாள் என்ற பொருள் பெறப்படுகிறது. குரா — குரவமலர், கூலை — கூந்தல், பண்டு — முன்பு, உணங்கு — வருத்தமாயிருந்த, கடை — வாயில், கராம் — முதலை.

தத்துவப்பொருள்: ஆன்மா தடையின்றிச் சிவத்தின் இருப்பிடம் புகுதலும், அன்புடைய வாயிலோர் சிவத்தைப் பாராட்டுதலும் ஆம்.

Koviloor Digital Library

12. முகமலர்ச்சி கூறல்

கொளு: பூம்புன லூரன் புகமுகம் மலர்ந்த
தேம்புனை கோதை திறம்பிறர் உரைத்தது.

பூக்கள் நிரம்பிய நீர்நிலைகள் சூழப்பெற்ற ஊரை உடைய தலைவன் தலைவியின் இல்லத்தில் புகுந்த அளவில் மலர்சூடிய கூந்தலை உடைய தலைவி பெற்ற மகிழ்ச்சியை அயலவர் கூறியது.

வந்தான் வயலணி ஊரன்
எனச்சின வாள்மலர்க்கண்
செந்தா மரைச்செவ்வி சென்றசிற்
றம்பல வன்அருளான்
முந்தா யினவியன் நோக்கெதிர்
நோக்க முகமடுவில்
பைந்தாள் குவளைகள் பூத்திருள்
சூழ்ந்து பயின்றனவே. (363)

பொருள்: வயல்கள் அழகு செய்யும் ஊரை உடைய தலைவன் வந்தான் என்ற சொன்ன அளவில் சினத்தோடு இருந்த தலைவியின் வாள்போன்ற கண்கள் செந்தாமரைப் பூவின் செம்மை நிறம் பெற்று அழகுடன் திகழ்ந்தன. தில்லையம்பலத்தானின் அருளால் தலைவி கொண்ட ஊடலுக்கு எதிராகத் தலைவன் அன்பினால் நோக்க தலைவியின் முகமாகிய குளத்தில் பசிய தண்டினை உடைய குவளைப் பூக்கள் மலர்ந்து கருமை கொண்டன.

சொ.பொ.வி.: தலைவன் பரத்தமை ஒழுக்கத்திலிருந்து வந்தான் என்றதால் ஊடல் கொண்ட தலைவியின் கண்கள் சிவந்தன. ஊடலைத் தீர்க்கத் தலைவன் அன்புடன் எதிர்நோக்கியதால் கண்களில் கோபச் செம்மை மாறி இயல்பான கருமை நிறம் பெற்றன என்ற பொருள் பெறப்படுகிறது. செவ்வி — செம்மைஅழகு, முந்தாயின — முன்உண்டாகிய, வியன் — அகன்ற, மடு — குளம், பைந்தாள் — பசிய காம்பு.

தத்துவப்பொருள்: ஆன்மா பிற உயிர்களின் பிறதெய்வ வழிபாட்டிலிருந்து வந்தது எனக்கேட்ட சிவத்தலைவி

Koviloor Digital Library

புலந்து, பின் ஆன்மாவின் பணிவால் அருள்வழங்க மகிழ்ந்தது என்பதாம்.

13. காலநிகழ்வு உரைத்தல்

கொளு: இகழ்வ(து) எவன்கொல் நிகழ்வதிவ் வாறெனச்
செழுமலர்க் கோதை உழையர் உரைத்தது.

தலைவனை இகழ்வது எதற்காக? தலைவன் மிகுதியும் வருந்துகிறான் என்று மலர்சூடிய கூந்தலை உடைய தலைவியிடம் அருகில் நின்றவர் கூறியது.

வில்லிகைப் போதின் விரும்பா
அரும்பா வியர்க்ள்அன்பில்
செல்லிகைப் போதின் எரியுடை
யோன்தில்லை அம்பலம்சூழ்
மல்லிகைப் போதின்வெண் சங்கம்வண்(டு)
ஊதவிண் தோய்பிறையோ(டு)
எல்லிகைப் போதியல் வேல்வயல்
ஊரற்(கு) எதிர்கொண்டதே. (364)

பொருள்: கரும்பு வில்லைக் கொண்ட காமனின் கையில் உள்ள அம்பாகிய பூக்களில் விருப்பம் இல்லாதவர் (காமத்தை வெறுத்தவர்) தனக்குச் செய்யும் அன்பின்கண் விருப்பம் உடையவனும், கையில் தீயை ஏந்தியவனும் ஆகிய சிவபெருமானது தில்லையைச் சூழ்ந்த மல்லிகையின் அரும்பாகிய வெண்சங்கை வண்டுகள் ஊதும் தேய்பிறை தோன்றுகின்ற இரவுப் பொழுதில் கையில் வேலை உடைய தலைவனிடம் மாறுபாடு கொண்டது ஏன்? (என்று தலைவியிடம் அருகில் உள்ளவர் கேட்டனர்.)

சொ.பொ.வி.: இரவில் மல்லிகை மலரும், தேய்பிறையும் தலைவனுக்குத் துன்பத்தைத் தரும் ஆதலால் அவன் தலைவியின் வீட்டிற்குள் புகுந்தான். அவனை ஏற்காது தலைவி ஊடுவது தகாது என்று அருகில் உள்ளவர் கூறினர் என்றதாம். வில்லி — கரும்புவில்லையுடைய மன்மதன், கைப்போது — கையில் உள்ள மலர்களாகிய அம்புகள், செல்லி — செல்பவன், கைப்போதின்எரி — கையாகிய

Koviloor Digital Library

மலரில் தீயை ஏந்தியவன், மல்லிகைப் போது — மல்லிகை மொட்டு, எல்லி — இரவு, கைப்போது இயல்வேல் — கையாகிய மலரிடத்து வேலை உடையவன்.

தத்துவப்பொருள்: ஆன்மாவைச் சிவத்தலைவி ஏற்றுக் கொள்ளாது வெறுத்தலுக்குரிய காலம் இதுவல்ல என்று அருகில் நின்ற அடியவர்கள் கூறியது.

14. எய்தல் எடுத்து உரைத்தல்

கொளு: சீரியல் உலகில் திகழ்தரக் கூடி
வார்புனல் ஊரன் மகிழ்வுற்றது.

சிறப்புக்களைப் பெற்ற உலகத்தில் மகிழ்ச்சியோடு (தலைவியை) கூடிய நீர்நிலை சூழ்ந்த ஊரை உடைய தலைவனின் மகிழ்ச்சியைக் கூறியது.

புலவித் திரைபொரச் சீறடிப்
பூங்கலம் சென்னிஉய்ப்பக்
கலவிக் கடலுள் கலிங்கஞ்சென்(று)
எய்திக் கதிர்கொள்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்(து)அம்
பலத்துநின் றோன்அருள்போன்(று)
உலவிய லாத்தனம் சென்றெய்தல்
ஆயின ஊரனுக்கே. (365)

பொருள்: ஊடலாகிய திரை தடுக்க அதை நீக்கத் தலைவியின் சீரடியாகிய அழகு பெற்ற அணியைத் தலைவன் தன் தலையில் சூட்டி, அதனால் ஊடல் நீங்கி, புணர்ச்சியாகிய கடலுள் ஆடையைப் பற்றி ஒளியோடு கூடிய முத்தை ஒத்த பற்களை உடைய சிரிப்பிலே நிலை பெற்று (முத்தமிட்டு) நிறைந்த நீராகிய தேனை உண்டு — தில்லைச் சிற்றம்பலவனின் அருள்போலத் தளராத தலைவியின் முலைகள் தலைவன் அடைவதற்கு எளிதாயின. (என்றவாறு)

சொ.பொ.வி.: புலவித்திரை — ஊடலாகியதிரை (அலை), கலவி — புணர்ச்சி, கலிங்கம் — ஆடை, நிறைமது —

Koviloor Digital Library

நிறைந்த மதுவாகிய நீர், உலவியலாத்தனம் — தளர்ச்சி யில்லாதமுலை.

தத்துவப்பொருள் :ஊடல் தீர்ந்து ஆன்மா இன்பம் பெற்றதைக் கண்டோர் மகிழ்ந்துரைத்தது.

15. கலவி கருதிப் புலத்தல்

கொளு: மன்னிய உலகில் துன்னிய அன்பொடு
கலவி கருதிப் புலவி எய்தியது.

அன்போடு புணர்ச்சி இன்பத்தை அனுபவித்து ஊடல் கொண்டது.

செவ்வாய் துடிப்பக் கருங்கண்
பிறழ்ச்சிற் றம்பலத்(து)எம்
மொய்வார் சடையோன் அருளின்
முயங்கி மயங்குகின்றாள்
வெவ்வாய் உயிர்ப்பொடு விம்மிக்
கலுழ்ந்து புலந்துநைந்தாள்
இவ்வா(று) அருள்பிறர்க்(கு) ஆகு
மெனநினைந்து இன்னகையே. (366)

பொருள்: இனிய நகையை (சிரிப்பை) உடைய செம்மை யான வாய் துடிப்ப, கரிய கண்கள் பிறழ — சிற்றம்பலத்தில் உள்ள சிவபெருமானது அருள்பெற்றவரைப் போலப் புணர்ச்சியால் மயங்குகின்ற தலைவி — இவ்வாறு தனக்கு இன்பமளிக்கும் தலைவன் பிற மாந்தர்க்கும் இவ்வாறே இன்பம் கொடுப்பாரே என்று எண்ணிப் பெருமூச்சுவிட்டு விம்மிப் புலந்து வருந்தினாள்.

சொ.பொ.வி.: கூடலும் ஊடலும் கோவலர்க்கு அளித்து என்ற சிலப்பதிகாரச் செய்தி ஒப்பு நோக்கத் தக்கது. (சிலம்பு — கடலாடுகாதை — 109) மொய்வார் சடையோன்—நெருங்கிய சடையை உடைய சிவபெருமான், கலுழ்ந்து — வருந்தி, புலந்து — ஊடி, நைந்தாள் — வருந்தினாள்.

தத்துவப்பொருள்: சிவம் அருள் வழங்கியபோது ஆன்மாவின் தன்மை பேரின்பத்திலும் இவ்வாறு நிளைக்கும் எனப் புலந்தது.

Koviloor Digital Library

16. குறிப்பறிந்து புலந்தமை கூறல்

கொளு: குறிப்பினிற் குறிப்பு நெறிப்பட நோக்கி
மலர்நெடுங் கண்ணி புலவி யுற்றது.

தலைவனுடைய முகக் குறிப்பால் அவனுடைய நெஞ்சக் கருத்தை நோக்கி வேறுபட்டு மலர் போன்ற கண்களை உடைய தலைவி ஊடல் கொண்டது.

மலரைப் பொறாஅடி மானும்,
தமியள்மன் னன்ஒருவன்
பலரைப் பொறா(து)என்(று) இழிந்துநின்
றாள்பள்ளி காமன்எய்த
அலரைப் பொறா(து)அன்(று) அழல்விழித்
தோன்அம் பலம்வணங்காக்
கலரைப் பொறாச்சிறி யாள்என்னை
கொல்லோ கருதியதே. (367)

பொருள்: மலரை மிதித்தாலும் தாங்காத மெல்லிய கால்களை உடைய மான்போன்ற தலைவியும், தலைவனும் ஆக தனித்தனியே இருவர் இருந்தனர். ஆனால் தலைவியோ இந்தப் படுக்கைக் கட்டில் (பள்ளி) பலரைத் தாங்காது என்று கூறிப் படுக்கையிலிருந்து கீழே இறங்கினாள். (அதனைக் கண்ட வாயில்கள்) மன்மதன் எறிந்த அம்பைப் பொறுக்காது அவனை நெற்றிக் கண்ணால் அழித்த சிவபெருமானது தில்லைச் சிற்றம்பலத்தை வணங்காத கீழோரை வெறுக்கின்ற சிறியவளாம் தலைவி இவ்வாறு கருதிச் செய்தது எதற்கு? (என்று கண்ட வாயில்கள் தம்முள் கூறிக் கொண்டனர்)

சொ.பொ.வி.: தலைவன் முகத்தின் குறிப்பைக் கண்டு அவன் ஏதோ எண்ணத்தில் இருக்கிறான் என்று தவறாக நினைத்துக் காரணமில்லாமல் சம்மந்தமில்லாத சொற்களைக் கூறித் தலைவி ஊடியதை வாயில்கள் கண்டு வருந்தினர் என்பது இப்பாடலின் கருத்தாகும். பொறாஅடி — மலரை மிதித்தாலும் தாங்காத கால்கள், மான் — தலைவி, தமியள் — தனியள், மன்னன் — தலைவன், பள்ளி — படுக்கை, அலர் — மலர்அம்பு, கலர் — கீழ்மக்கள்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தின் ஊடல் தன்மையை வாயிலோர் கண்டு உரைத்தது.

17. வாயிலவர் வாழ்த்தல்

கொளு : தலை மகனது தகவுடைமை
நிலைதரு வாயில் நின்றோர் உரைத்தது.

தலைவனின் தகவுடைமையாம் பெருமையை நிலைத்த வாயில்(சந்துசெய்பவர்கள்)களாய் நின்றவர்கள் உரைத்தது.

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி
கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை
யான்நின்று வான்வழுத்தும்
தில்லைப் பொலிசிவன் சிற்றம்
பலஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரன்மெய்
யேதக்க வாய்மையனே. (368)

பொருள்: வில்லைப் போன்ற நெற்றியை உடையவளும், வேல் போன்ற கண்களை உடையவளுமாகிய தலைவி, தான் பிரிந்தமையால் மெலிந்தாள் என்பதை அறிந்து விரைந்து அவளை ஆற்றுப்படுத்த தலைவன் வந்தான். ஆதலால் அவன் வயல்வளம் மிக்க ஊருக்குரிய தேவர்கள் போற்றும் தில்லை நகரில் விளங்கும் சிற்றம் பலத்தைச் சிந்தை செய்பவர்களைப் போல உண்மை யாகவே நல்ல வாய்மையை உடையவன் என்று வாயிலோர் போற்றினர்.

சொ.பொ.வி.: மெலிவு — வாட்டம், வல்லை — விரைவாக, பொலிவொடுவந்தான் — தலைவியை ஆற்றுப் படுத்தும் நிலை, மல் — வளம், மெய் — உண்மையாக.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருளைப் பெற்றிட ஆன்மா செய்த தவத்தின் நிலையை அடியார் பாராட்டியது.

Koviloor Digital Library

18. புனல் வரவுரைத்தல்

கொளு: புனலா டுகஎனப் புனைந்து கொண்டு
மனைபுகுந் தவனை வையம் உரைத்தது.

புனல் ஆடவேண்டும் என்று கூறிக்கொண்டு தலைவன் பரத்தையரோடு ஆடுவான் என்று நினைந்து தலைவி ஊடல் கொள்ளுவதும் நிகழப்போகிறது என்று வையத்தவ ராகிய கண்டோர் கூறியது.

(தலைவன் தலைவியோடு கூடியிருக்கும் இந்த நேரத்தில் புதுவெள்ளம் பொய்கையில் வந்தது. எனவே தலைவன் பரத்தையரோடு புனலாடச் சென்றுவிடுவான். அதனால் தலைவி ஊடல் கொள்ளப் போகிறாள் என்று கண்டவர் கூறினர் என்பது இதன் கருத்து)

சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக்(கு)
இல்துணை- சேவல் செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மேன்பூக்
குதர்செம்ம லூரன் திண்தோள்
மான்முதிர் நோக்கின்நல் லார்மகி
ழத்தில்லை யான்அருளே
போன்முதிர் பொய்கையில் பாய்ந்தது
வாய்ந்த புதுப்புனலே. (369)

பொருள்: சேவலானது தன்னுடைய கருவுற்ற துள்ளும் நடையை உடைய பெடைக்குக் குஞ்சை ஈனுவதற்குரிய வீட்டை (இல்லை) தயார் செய்ய வேண்டித் தேன்போலும் சாரை உடைய கரும்பின் மெல்லிய பூவைக் கோதும் வளத்தை உடைய தலைவனது வலிமை மிகுந்த தோள் களை மான் போன்ற பார்வையை உடைய பெண்கள் பலர்கூடித் தழுவி இன்புறும் வண்ணம் — தில்லை இறைவனின் அருளை ஒத்த பொய்கையில் நல்ல புது வெள்ளம் வந்தது. ஆதலால் தலைவன் புனலாடித் தன் தலைவியை ஊடலால் கண் சிவப்பிக்கச் செய்வான் போலும் என்று கண்டோர் கூறினர்.

Koviloor Digital Library

சொ.பொ.வி.: சூல் — கருவுற்ற, பெடை — பெண் பறவை. வேழம்—கரும்பு, குதர் — கோதுதல், நல்லார — பிற்பெண்கள், புதுப்புனல் — புதுவெள்ளம்.

தத்துவப்பொருள்: ஆன்மா பூரண ஞானம் பெற்றமையால் அதற்கு எங்கும் இன்பமே தோன்றும் என்று அடியவர் கூறியது.

19. தேர் வரவு கண்டு மகிழ்ந்து கூறல்

கொளு: பயில்மணித் தேர்செலப் பரத்தையர் சேரிக்
கயல்மணிக் கண்ணியர் கட்டுரைத்தது.

தங்கள் தெருவில் மணி கட்டப்பட்ட. தலைவனின் தேர் செல்லக் கண்டு கயல்போன்ற கண்களை உடைய பரத்தையர் கூறியது.

சேயே எனமன்னும் தீம்புன
லூரன்திண் தோள்இணைகள்
தோயீர் புணர்தவம் தொன்மைசெய்
தீர்சுடர் கின்றகொலம்
தீயே எனமன்னு சிற்றம்
பலவர்தில் லைந்நகர்வாய்
வீயே எனஅடி யீர்நெடுந்
தேர்வந்து மேவினதே. (370)

பொருள்: ஒளிபொருந்திய திருமேனி தீ என்று சொல்லும்படியான சிவபெருமானது தில்லைக் கண் உள்ளவராகிய மலரை ஒக்கும் திருவடியை உடையவர் களே, தலைவனின் பெரிய தேர் வந்து பொருந்தியது, அத்தேருக்குரிய தலைவனைப் புணரும் தவத்தை முற்பிறவியில் செய்தவர்களே; முருகனே எனக் கருதும் தலைவனின் தோளினைத் தழுவிக் கொள்வீர்களாக (என்று பரத்தையர்களின் ஏலவர்கள் கூறியது)

சொ.பொ.வி. சேய் — முருகன், தோயீர் — தழுவிக் கொள்வீர், வீயே — மலர்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: எங்கும் சிவமாய்க் காணுகின்ற செவ்விய தன்மையை உடையவர்கள் எவர்க்கும் இன்பம் கிடைக்கும் என்று அடியவர் மகிழ்ந்ததாம்.

20. புனல் விளையாட்டில் தம்முள் உரைத்தல்

கொளு: தீம்புனல் வாயில் சேயிழை வருமெனக்
காம்பன தோளியர் கலந்து கட்டுரைத்தது.

புனலாடுகின்ற இடத்தில் காதல் பரத்தையர்கள் வருவர் என மூங்கிலை ஒத்த தோள்களை உடைய தோழியர் கூடிச் சொல்லியது.

அரமங் கையரென வந்து
விழாப்புகும் அவ்வவர்வான்
அரமங் கையரென வந்தணு
கும்அவள் அன்(று)உகிரால்
சிரம்அங்(கு) அயனைச்செற் றோன்தில்லைச்
சிற்றம் பலம்வழுத்தாப்
புரமங் கையரின்நை யாதுஐய
காத்துநம் பொற்பரையே. (371)

பொருள்: தேவலோகத்துப் பெண்களைப் போல புனலாட்டு விழாவில் வந்து சேரும் நாம் அனைவரும் அரமங்கையர். நம்மிடையே விண்ணுலக மாதரைப் போல ஒருத்தி வந்தாள். (இல்லத்தலைவி). வந்து நம் தலைவரை அணுகுவாள். எனவே அன்று தன்னுடைய நகத்தால் பிரமனின் தலையைக் கொய்தவனாகிய இறைவனது சிற்றம்பலத்தை வணங்காத மகளிர்களைப் போல நாம் வருந்தாது முன்கூட்டியே நம் தலைவரை நமக்குரியவராக் காத்து நிற்போம் (என்று பரத்தையர் கூறிக்கொண்டனர்)

சொ.பொ.வி.: அரமங்கையர் — தேவலோகப் பெண்களின் பொதுப்பெயர், விழா — புனல் விளையாட்டு விழா, வானரமங்கை — உருப்பசி போன்ற தலைமை பெற்றவர்களுக்குரிய சிறப்புப் பெயர், உகிர் — நகம், சிரம் — தலை, ஐயன் — நான்முகன், பொற்பரை — அழகுமிக்க தலைவன்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: புறத்தெய்வமாகிய நம்மிடம் சேர்ந்த ஆன்மாவைச் சிவத்தலைவி வந்து அடைவதற்கு முன்னே நமக்காக்கிக் கொள்ளக் கருதியதாம்.

21. தன்னை வியந்தரைத்தல்

கொளு: அரத்தத் துவர்வாய்ப் பரத்தைத் தலைவி
முனிவு தோன்ற நனிபு கன்றது.

மிகவும் சிவந்த வாயினை உடைய பரத்தையருக்குத் தலைவி வெறுப்புத் தோன்ற மிகுதியாகக் கூறியது.

கனலூர் கணைதுணை யூர்கெடச்
செற்றசிற் றம்பலத்தெம்
அனலூர் சடையோன் அருள்பெற்
றவரின் அமரப்புல்லும்
மினலூர் நகையவர் தம்பால்
அருள்விலக் காவிடின்யான்
புனலூ ரனைப்பிரி யும்புன
லூர்கணப் பூங்கொடியே. (372)

பொருள்: தீயை உடைய அம்பினால் ஒன்றுக்கொன்று துணையான முப்புரங்களை அழித்த சிற்றம்பலத்தில் உள்ளவனாகிய சிவபெருமானின் அருளைப் பெற்றவர் போலச் செம்மாந்து தலைவனைத் தழுவுகின்ற பிற மகளிரிடத்து அவனுடைய காதல் செல்லாத வண்ணம் நான் விலக்கேனாகில் நீர்வளம் உடைய தலைவனைப் பிரிந்திருக்கும் கண்ணீர் மிக்க கண்களை உடைய தலைவனின் உரிமைத் தலைவியாம் பூங்கொடியாவேன் (என்று பரத்தையர் தலைவி தன்னை வியந்துரைத்தாள்)

சொ.பொ.வி.: தலைவனை விரும்பும் பரத்தையர் குலத்துத் தலைவி பிற பரத்தையரிடமிருந்து அவனைப் பிரித்துத் தனக்கு மட்டும் உரியவன் ஆக்கிக் கொள்வேன் என்று வஞ்சினம் கூறுதலும், அவ்வாறு நிகழவில்லை என்றால் நானும் திருமணம் செய்து கொண்ட மனைவி போல வருந்த வேண்டியதுதான் என்று கூறுவதாகிய குறிப்பைத் தருகிறது இப்பாடல். கனலூர்கணை — தீயை

Koviloor Digital Library

உடைய அம்பு, ஊர் — முப்புரம், அனலூர் சடை — தீயைப் போன்ற சடை, புல்லும் — தழுவும், மினலூர் நகை — ஒளி பொருந்திய முறுவல், பூங்கொடி — இல்லக்கிழத்தி.

தத்துவப்பொருள்: பிறமதத் தலைவி ஆன்மாவைப் பிற இன்பங்களிலிருந்து விலக்கித் தன்னையே அடைய வைத்துக் கொள்வேன் என்றது.

22. நகைத்துரைத்தல்

கொளு: வேந்தன் பிரிய ஏந்திழை மடந்தை
பரத்தையை நோக்கி விரித்து ரைத்தது.

தலைவன் பிரிந்ததால் அணிகலன்களை அணிந்த தலைவி பரத்தையரை நோக்கி வருந்திக்கூறியது.

இறுமாப்(பு) ஒழியும்அன் றேதங்கை
தோன்றின்என் எங்கைய்ங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத்
தான்தில்லை யூரன்திண்தோள்
பெறுமாத் தொடும்தன்ன பேரணுக்
குப்பெற்ற பெற்றியினோ(டு)
இறுமாப்(பு) ஒழிய இறுமாப்(பு)
ஒழிந்த இணைமுலையே. (373)

பொருள்: கையில் மானை ஏந்திய சிவபெருமானது தில்லைக்கண் உள்ளவனாகிய தலைவனின் தோள்களைத் தழுவுதலால் உண்டாகிய பெருமையோடும், தனக்குரியவனாக அவனைப் பெற்ற தன்மையோடும் பரத்தையாகிய எங்கை (என் தங்கை) இறுமாப்பு ஒழிய, அவள் கொங்கைகளும் அவளுக்கு ஒரு தங்கை (மற்றொரு பரத்தை) தோன்றின் இறுமாப்பு ஒழியுமன்றே (என்று கேலியாக இல்லறத் தலைவி பேசினாள்)

*சொ.பொ.வி.:*இன்று பரத்தை எனக்குத் தங்கையாகத் தோன்றியதால் என் இன்பம் அழிந்தது. அதுபோல இன்று தலைவனைக் கூடி இறுமாப்புடன் இருக்கும் பரத்தைக்கும் நாளை வேறொரு பரத்தையிடம் தலைவன் கூடினால்

Koviloor Digital Library

இன்று இறுமாப்புடன் இருக்கும் பரத்தையின் இன்பம் அழியுமன்றே என்று தலைவி நகையாடிய குறிப்பு பெறப் படுகிறது. தங்கை — நாளை கூடும் பரத்தை, என் எங்கை — இன்று கூடிய பரத்தை (தங்கை என்பது இகழ்ச்சிக் குறிப்பு) பெறுமாத்தொடும் — தலைவனைப் பெற்றதாகிய பெருமையோடும், பேரணுக்கம் — பெரிய அணுக்கத் தன்மை.

தத்துவப்பொருள்: சிவம் பிற இன்பங்களின் நிலைமையை எண்ணி இகழ்ந்துரைத்தது.

23. நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல்

கொளு: மன்னவன் பிரிய நன்மனைக் கிழத்தியை
நாணுதல் கண்ட வாணுதல் உரைத்தது.

தலைவன் பரத்தையிற் பிரிய அதனால் ஏற்பட்ட பிரிவை வெளிப்படுத்தினால் அவனுக்குப் பழியாகும் என்று நாணிய இல்லத் தலைவியின் சிறப்பைத் தோழி உரைத்தது.

வேயாது செப்பின் அடைத்துத்
தமிவைகும் வீயின்அன்ன
தீயாடி சிற்றம் பலமனை
யாள்தில்லை யூரனுக்கின்(று)
ஏயாப் பழியென நாணியென்
கண்ணிங்ங னேமறைத்தாள்
யாயாம் இயல்பிவள் கற்புநற்
பால இயல்புகளே. (374)

பொருள்: தலையில் சூடப்படாது செம்பிற்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கும் பூவைப்போன்ற தீயாடியாம் சிற்றம்பல இறைவனை ஒத்த தலைவி தில்லைநகர் தலை வனுக்குப் பழி ஏற்படும் என்று நாணித் தனது ஆற்றாமையை என்னிடத்தில் மறைக்கின்றாள். ஆதலால் தலைவியின் கற்பு நமக்குத் தாய்போலும் இயல்பினை உடையது. இவளுடைய நாணம் முதலியன பாராட்டுத் தக்கதாகும். (என்று தோழி கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: வேயாது — சூடாது, செப்பு — செம்பு, வீ—மலர், தில்லையூரன் — தலைவன், யாயாம் — தாயாம்.

தத்துவப்பொருள்: திருவருள் சிவத்தலைவியின் பெருமையை வியந்துரைத்ததாம்.

24. பாணன் வரவுரைத்தல்

கொளு: இகல்வே லவன்அகல்(வு) அறியாப் பாணனைப்
பூங்குழல் மாதர்க்குப் பாங்கி பகர்ந்தது.

வேலை ஏந்திய தலைவனின் இயல்புகளை அறியாத (பரத்தையிடம் சென்றதை அறியாத) பாணனைப் பற்றி தோழி, பூச்சூடிய கூந்தலை உடைய தலைவிக்கு உரைத்தது.

விறலியும் பாணனும் வேந்தற்குத்
தில்லை இறைஅமைத்த
திறலியல் யாழ்கொண்டு வந்துநின்
றார்சென் றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை
மாமரம் போலும்மன்னோ
அறலியல் கூழைநல் லாய்தமி
யோமை யறிந்திலரே. (375)

பொருள்: விறலியும் பாணனும் தில்லைப் பெருமானால் அளிக்கப் பெற்ற யாழோடு நம் தலைவனுக்குத் துயில் எழும் மங்கலப் பாடலைப் பாட வாயிலில் நிற்கின்றார்கள். அரிய மணல் போன்ற கூந்தலை உடைய தலைவியே இரவுப் பொழுதில் திசையெல்லாம் பரந்து சென்று பகலில் வெளவால்கள் வந்து தங்குகின்ற மரம் போல் விளங்கும் நம்மை இவர்கள் அறிந்திலர் போலும் (விறலியும் பாணனும்) (என்று தோழி கூறினாள்).

சொ.பொ.வி.: இரவில் திரிந்து பறந்து செல்லும் வெளவால்கள் பகலில் வந்து தங்கும் மரம் என்று தோழி கூறிக் கொள்ளுவதால் இரவில் தலைவன் பரத்தையிடத்துச் சென்று காலையில் வீட்டிற்கு வருகிறான் என்ற குறிப்புப் பெறப்படுகிறது. மேலும் இரவில் வீட்டில் இல்லாத தலைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாட விறலியும்

Koviloor Digital Library

பாணனும் வருவது வேடிக்கையாக உள்ளது என்ற குறிப்பும் பெறப்படுகிறது. வேந்தன் — தலைவன், அமைத்த — ஆக்கிய, தில்லை இறைஅமைத்த யாழ் என்பது உலகத் தோற்றத்தின்கண் இறைவன் ஆக்கிக் கொண்ட யாழ் என்று பொருள்படும். பறலியல் — பறந்துசெல்லும், வாவல் — வௌவால், அறவியல் — அருமறை போலும், கூழை — கூந்தல்.

தத்துவப்பொருள்: திருவருள் ஆன்மாவைப் பாராட்ட, பாணரும் விறலியருமாகிய அடியார்கள் வந்தமை கூறல்.

25. தோழி இயற்பழித்தல்

கொளு: தலைமகனைத் தகவிலன் எனச்
சிலைநுதற் பாங்கி தீங்கு செப்பியது.

தலைவன் பரத்தையிற் பிரிந்து தகவிலன் ஆயினான் என வில்லையொத்த நெற்றியினை உடைய தோழி தலைவனைக் குற்றம் கூறியது.

திக்கின் இலங்குதிண் தோள்இறை
தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கின் இறக(து) அணிந்துநின்
றாடிதென் கூடலன்ன
அக்கின் நகையிவள் நைய
அயல்வயின் நல்குதலால்
தக்கின் றிருந்திலன் நின்றசெவ்
வேல்எம் தனிவள்ளலே. (376)

பொருள்: திசைகள் தோறும் விளங்கும் அருள் பொருந்திய தோள்களை உடையவனும் தில்லைச் சிற்றம்பலத்தில் கொக்கினது இறகை அணிந்து ஆடுபவனும் ஆகிய சிவபெருமானுடைய கூடல் நகரை ஒத்த சங்கு போன்ற இனிய பற்களை உடைய தலைவி வருந்த அயல் பெண்களிடத்தில் இன்பம் துய்க்க எல்லோரும் அறியும் வண்ணம் பிரிந்து சென்ற சிவந்த வேலை உடைய ஒப்பற்ற வள்ளலாகிய தலைவன் தகைமை உடையவன் அல்லன் (என்று தோழி கூறினாள்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: திக்கு — திசை, திண்தோள் — வலிமையான இறைவனுடைய எட்டுத் தோள்கள், கொக்கு — குரண்டன் என்ற அசுரன் கொண்ட கொக்கு வடிவத்தை அழித்துக் கொக்கின் இறகைச் சிவபெருமான் அணிந்தான் என்பது புராண வரலாறு. கடல் — கூடல் நகரம் , அக்கு இன்நகை — சங்குபோன்ற பற்கள், தக்கின்றிருந்திலன் — தகுதியான வள்ளல் தன்மை இன்றி இருந்தவன்.

தத்துவப்பொருள்: திருவருளாகிய தோழி சிவனருளை விட்டுவிட்டுப் பிறதெய்வங்களை அடையச் சென்ற ஆன்மாவைப் பழித்துரைத்தது.

26. உழையர் இயற்பழித்தல்

கொளு: அரத்தவேல் அண்ணல் பரத்தையிற் பிரியக்
குழைமுகத் தவளுக்(கு) உழையர் உரைத்தது.

செம்மை நிறம் பொருந்திய வேலைக் கையில் ஏந்திய தலைவன் பரத்தையரிடம் பிரிய, வருந்தும் முகத்தை உடைய தலைவிக்குத் தோழியைப் போலப் பாங்காயினோர் தலைவனின் பெருமையை அழித்துக் கூறியது.

அன்புடை நெஞ்சத்து இவள்பே
துறஅம் பலத்தடியார்
என்பிடை வந்(து)அமிழ்(து) ஊறநின்(று)
ஆடி இருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந்(து)
அன்னம் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல்துயி லும்வய
லூரன் வரம்பிலனே. (377)

பொருள்: எலும்புகளுக்கு இடையே அமுதம் ஊறும் வண்ணம் தில்லைச் சிற்றம்பலத்தின் கண் ஆடுகின்ற சிவபெருமானது திருச்சுழியல் என்னும் திருத்தலத்தில் தன்னுடைய பெடை வருந்தும் வண்ணம் தகுதிகெட்டு அன்னமானது வேறு ஒரு சலஞ்சலம் என்னும் சங்கின் பெடையின்மேல் கிடந்து உறங்குகின்ற வயல்சூழ் ஊரை

Koviloor Digital Library

யுடைய தலைவன் தன்மாட்டு அன்புடைய தலைவிக்கு ஏற்பட்ட வருத்தம் தீர ஆற்றாத காரணத்தால் அவன் தகவுடையவன் அல்லன். (எனப் பாங்காயினர் கூறினர்.

சொ.பொ.வி.: இவள் — தலைவி, பேதுற — வருந்தும் படி, என்பிடை — எலும்புகளுக்கு இடையில், இறைவனின் சிற்றம்பலத்து ஆட்டத்தைக் கண்டால் அடியவர்களின் உள்ளம் புளகாங்கிதம் அடையும் என்பதை .அமிழ்துஊற என்ற சொல் குறிப்பிடுகிறது. சுழியல் — திருத்தலம், நைய — வருந்த, தகவு — பெருமை, சலஞ்சலம் — ஒருவகைச் சங்கு, வரம்பிலன் — தகுதியல்லன் (ஒழுக்கமற்றவன்)

தத்துவப்பொருள்: சிவத்தின் அருளைப் பெற்ற ஆன்மா பிற தெய்வங்களாம் அரி, அயன் ஆகியவர்களிடத்தில் இன்பத்தைக் காண விழைவது தகுதியற்றது என அடியவர் கூறியது.

27. இயற்பட மொழிதல்

கொளு: வரிசிலை யூரன் பரிசு பழித்த
உழையர் கேட்ப எழில் நகை உரைத்தது.

வரி பொருந்திய வில்லினை உடைய தலைவனின் இயல்பைப் பழித்துரைத்தவர் கேட்கும்படி தலைவி யானவள் தலைவனுடையை பெருமையைக் கூறுதல்.

அஞ்சார் புரஞ்செற்ற சிற்றம்
பலவர்அந் தண்கயிலை
மஞ்சார் புனத்தன்று மாந்தழை
யேந்திவந் தார்அவரென்
நெஞ்சார் விலக்கினும் நீங்கார்
நனவு கனவும் உண்டேல்
பஞ்சார் அமளிப் பிரிதலுண்
டோஎம் பயோதரமே. (378)

பொருள்: பகைவரின் முப்புரங்களை அழித்த சிற்றம்பலத்தானின் கயிலையைச் சார்ந்த தினைப்புனத்தின்

Koviloor Digital Library

கண் முன்பு தழை ஏந்திவந்த தலைவன் இன்று கனவிலும் நனவிலும் என் நெஞ்சத்தில் உள்ளார். நான் விலக்கினாலும் என் நெஞ்சை விட்டு அகலார். இரவு தூங்குகின்ற பொழுதும் பஞ்சணையில் என் முலையை விட்டுப் பிரிவதும் இல்லை. நீர் கொடுமை கூறியது ஏன்? (என்று தலைவி இயற்பழித்தாரிடம் கூறினாள்.)

சொ.பொ.வி.: அஞ்சார் — பகைவர், மஞ்சார் — மேகம் சூழ்ந்த, கனவு — இரவு, அமளி — படுக்கை, பயோதரம் — முலை.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் அன்பினை சிவத் தலைவி அடியார்க்குக் கூறியது.

28. நினைந்து வியந்துரைத்தல்

கொளு: மெல்லியற் பரத்தையை விரும்பி மேவினோன்
அல்லியங் கோதையை அகனமர்ந்(து) உரைத்தது.

மெல்லிய இயல்புகளை உடைய பரத்தையை விரும்பிச் சென்ற தலைவன் அழகிய மாலையை உடைய தலைவியை நெஞ்சார்ந்து விரும்பிக் கூறியது.

தெள்ளம் புனற்கங்கை தங்கும்
சடையன்சிற் றம்பலத்தான்
கள்ளம் புகுநெஞ்சர் காணா
இறையுறை காழியன்னாள்
உள்ளம் புகும்ஒரு காற்பிரி
யாதுள்ளி உள்ளுதொறும்
பள்ளம் புகும்புனல் போன்(று)அகத்
தேவரும் பான்மையளே. (379)

பொருள்: தெளிந்த கங்கையைச் சடையில் உடையவனும், சிற்றம்பலத்தை உடையவனும், கள்ள மனத்தவர் காணாத தன்மையனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள சீர்காழித் திருநகரை ஒத்த தலைவி நான் வேறொரு பெண்ணிடத்து உள்ளம் செலுத்தினாலும் என்னை நினைந்து என் உள்ளத்துள்ளே தங்குபவள் ஆவள். மேலும்

Koviloor Digital Library

அவளை நான் நினைக்கும் பொழுது மேட்டில் இருந்து பள்ளத்தில் புகும் தண்ணீர் போல என் மனத்தின் கண் ஓடிவரும் தன்மையள் ஆவாள். ஆதலால் அவளைப் பிரிந்திருத்தல் அரிதாகும் (என்று தலைவன் தலைவியைப் பாராட்டினான்)

சொ.பொ.வி.: தெள்ளம்புனற்கங்கை — தெளிந்த நீரை உடைய கங்கை, காழி — சீர்காழி, உள்ளுந்தொறும் — நினைக்குந்தொறும்.

தத்துவப்பொருள்: ஆன்மா பிற இடத்தில் பிற தேவர்களைக் காணுந்தொறும் சிவமாகவே காண்கும் எனக் கூறுதல்.

29. வாயில் பெறாது மகன் திறம் நினைதல்

கொளு: பொற்றொடி மாதர் நற்கடை குறுகி
நீடிய வாயிலின் வாடினன் மொழிந்தது.

அழகிய வளையல்களை அணிந்த தலைவியினைக் காண வீட்டு வாசலில் சென்று தலைவியைச் சார்வதற் குரிய வாயில் பெறாததால் வாடிய தலைவன் கூறியது.

தேன்வண்(டு) உறைதரும் கொன்றையன்
சிற்றம் பலம்வழுத்தும்
வான்வண் டுறைதரு வாய்மையன்
மன்னு குதலையின்வா
யான்வண் டுறைதரு மால்அமு
தன்னவன் வந்தணையான்
நான்வண்(டு) உறைதரு கொங்கைஎவ்
வாறுகொல் நண்ணுவதே. (380)

பொருள்: தேனும் வண்டும் உறைகின்ற கொன்றைப் பூவை அணிந்த சிவபெருமான் தில்லைச் சிற்றம்பலத்தைத் துதித்தால் கிடைக்கும் சொர்க்க போகத்தை எனக்கு வழங்குகின்ற தன்மை உடையவனும், குதலைச் சொல் பொருந்திய இனிய வாயை உடையவனும், திருப்பாற்கடல் தந்த அமுதத்தை ஒத்தவனும் ஆகிய என் மகன் என்னை

Koviloor Digital Library

வந்து அணுகவில்லை. ஆதலால் நறுமணம் மிக்க வண்டுகள் ஒலிக்கின்ற (மாலைசூடிய) கொங்கைகளை உடைய தலைவியை நான் கூடுவது எவ்வாறு? (என்று தலைவன் வருந்திக் கூறினான்)

சொ.பொ.வி.: மகனை வாயிலாகப் பெற்றுத் தலைவியைக் கூட நினைத்த தலைவன் அது நடக்காதது கண்டு வருந்திக் கூறியதாம். வான்வள்துறை — வானுலகத்தில் உள்ள சொர்க்கமாகிய இடம், குதலை — மழலைச்சொல், வன்துறை—கடல், நண்ணுவது — சேர்வது.

தத்துவபபொருள்: ஆன்மா அடியவர்களில் ஒருவராகிய மகன் தன்னைவந்து சாரவில்லையே என்று வருந்திக் கூறியது.

30. வாயிற்கண் நின்று தோழிக்கு உரைத்தல்

கொளு: பெருந்தகை வாயில் பெறாது நின்று
அருந்தகைப் பாங்கிக்(கு) அறிய உரைத்தது.

த்கைமை உடைய தலைவன் வாயில் பெறாது வருந்தித் தகைமை உடைய தோழிக்கு வருத்தமுடன் உரைத்தது.

கயல்வந்த கண்ணியர் கண்ணிணை
யால்மிகு காதரத்தால்
மயல்வந்த வாட்டம் அகற்றா
விரதம்என் மாமதியின்
அயல்வந்த ஆடர(வு) ஆடவைத்
தோன்அம் பலம்நிலவு
புயல்வந்த மாமதில் தில்லைநன்
னாட்டுப் பொலிபவரே. (381)

பொருள்: பாம்பைப் பிறைச்சந்திரனுக்குப் பக்கத்தில் ஆடும்படியாகத் தன் தலையில் வைத்த இறைவனது சிற்றம்பலத்தை உடைய மதில்சூழ்ந்த தில்லையில் வாழுகின்ற கயல்போன்ற கண்களை உடைய எங்கள் தலைவியின் கண்ணாகிய அம்புகளால் உண்டாகிய மயக்கத்தை நீக்காத விரதம் எதற்கு? (என்று தலைவன் கூறினான்)

Koviloor Digital Library

சொ.பொ.வி.: கயல் — மீன், கண்ணிணையால் — கண்ணாகிய அம்பால், காதரவு — அச்சம், மயல் — மயக்கம், விரதம் — இரங்காத தன்மை, புயல் — மேகம்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தின் ஊடலைத் தீர்ப்பதற்குத் திருவருள் துணை புரியாததை வருந்திக் கூறியது.

31. வாயில் வேண்டத் தோழி கூறல்

கொளு: கைவேல் அண்ணல் வாயில் வேண்டப்
பையரவு அல்குல் பாங்கி பகர்ந்தது.

கூரிய வேலை உடைய தலைவன் வாயில் வேண்டப் பாம்பின் படம் போன்ற அல்குலை உடைய தோழி பதில் கூறியது.

கூற்றா யினசின ஆளியெண்
ணீர்கண்கள் கோள்இழித்தால்
போல்தான் செறியிருள் பொக்கம்எண்
ணீர்கன்(று) அகன்றபுனிற்(று)
ஈற்றா வெனநீர் வருவது
பண்(டு)இன்(று)எம் ஈசர்தில்லைத்
தேற்றார் கொடிநெடு வீதியில்
போதிர்அத் தேர்மிசையே. (382)

பொருள்: கூற்றம் போலக் கொடிய சினத்தை உடைய சிங்கம் துன்புறுத்தும் என்று கருதாமல், மேலும் கண்களைக் கெடுத்தாற் போன்று மிகுந்து விளங்கும் இருளையும் தடையாக நினைக்காது, கன்றை விட்டுப் பிரிந்த பசுவைப் போல முன்பு எம்மிடத்தில் வந்தீர். இன்று எம்முடைய இறைவனது தில்லையிலே எமது பகைவராகிய பரத்தையர் வாழும் நெடிய கொடிகட்டிய வீதியில் முன்பு எம்மைக் காணவந்த அதே தேர்மீதே ஏறிச் செல்கின்றீர், இதுதான் நீ எமக்குச் செய்யும் அருளோ? (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: கூற்று — யமன், ஆளி — சிங்கம், எண்ணீர்— கருதாது, கோள்இழித்தல்—பார்க்கும்

Koviloor Digital Library

ஆற்றலைக் கெடுத்தல், பொக்கம் — தடை, புனிற்றா — பசு, பண்டு — முன்பு, தேற்றா — பகைவராகிய பரத்தையர்.

தத்துவப்பொருள்: திருவருள் ஆன்மாவிற்குப் பிறதேவரையும் காண விழைந்தது சரியா எனக் கூறியது.

32. தோழி வாயில் வேண்டல்

கொளு: வாயில் பெறாது மன்னவன் நிற்ப
ஆயிழை அவட்குத் தோழி சொல்லியது.

(தலைவியைச் சமாதானம் செய்ய) வாயில் பெறாது தலைவன் நிற்ப அழகிய அணிகலன்களை அணிந்த தலைவிக்குத் தோழி கூறியது.

வியந்தலை நீர்வையம் மெய்யே
இறைஞ்சவிண் தோய்குடைக்கீழ்
உயந்தலை கூர்ந்தொன்றும் வாய்திற
வார்வந்த வாளரக்கன்
புயந்தலை தீரப் புலியூர்
அரன்இருக் கும்பொருப்பிற்
கயந்தலை யானை கடிந்த
விருந்தினர் கார்மயிலே.

பொருள்: கார்காலத்து மயிலைப் போன்றவளே, கயிலை மலலயைத் தூக்கிய இராவணன் கையும் தலையும் நெறிய, தில்லைப் பெருமான் வாளா இருந்தார். அத்தகைய கயிலைமலையின் கண் யானை நம்மேல் வராமல் தடுத்த நம் விருந்தினராம் தலைவர் தமது விண்ணளாவிய குடையின் கீழ் உலகம் எல்லாம் வணங்கும்படி உள்ள தனது பெருமையை நினையாது நம் வீட்டு வாயிலில் வந்து காதல் மிக ஒன்றும் சொல்லாது இருக்கின்றார். நீ அவரை மறுத்தல் அரிதாகும். உணர்வாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: அலைநீர்வையம் — கடல்சூழ்ந்த உலகம், வயந்தலைகூர்ந்து—வயா — வேட்கை — தலைகூர்ந்து — மிகுந்து, புயம் தலை — தோளும்தலையும், தீர — நெறிய, கயந்தலை — மென்மையானதலை.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: திருவருள் ஆன்மாவின், வேட்கையைச் சிவத்தலைவிக்கு எடுத்துக் கூறியது.

33. மனையவர் மகிழ்தல்

கொளு: கன்னி மானோக்கி கனன்று நோக்க
மன்னிய மனையவர் மகிழ்ந்து ரைத்தது.

இளைய மான்போன்ற நோக்கினை உடைய தலைவி கோபத்துடன் தலைவனை நோக்க இல்லத்தில் உள்ளோர் மகிழ்ந்து கூறியது.

தேவியங் கண்திகழ் மேனியன்
சிற்றம் பலத்தெழுதும்
ஓவியம் கண்டன்ன ஒண்ணுத
லாள்தனக்(கு) ஓகையுய்ப்பான்
மேவியம் கண்டனை யோவந்
தனன்என வெய்துயிர்த்துக்
காவியம் கண்கழு நீர்ச்செவ்வி
வௌவுதல் கற்றனவே. (384)

பொருள்: உமாதேவி இடப்பாகத்தில் விளங்கும் மேனியை உடைய சிவபெருமானது தில்லைச் சிற்றம் பலத்தில் எழுதப் பெற்ற ஓவியத்தை ஒத்த ஒளிபொருந்திய நுதலை உடைய உனக்கு மகிழ்ச்சி அளிப்பதற்காகத் தலைவன் வந்தான் என்ற இனிய ஒலியைக் கேட்டிலையோ என்று கண்டோர் கூறக்கேட்ட தலைவி பெருமூச்சிட்டுக் குவளைபோலும் மலர்க் கண்களில் செங்கழுநீர் போன்ற செம்மையைப் பெற்றாள். இனி என்ன நிகழுமோ? (என்று இல்லத்தில் உள்ளோர் கூறியது)

சொ.பொ.வி.: தலைவன் வந்தான் என்று கூறிய கூற்று தலைவிக்கு மறுதலையாக அமைந்து அவள் சினத்தை மாற்ற முயற்சித்த கூற்றாகும். அம்கண்—அழகான இடத்தில் (இடப்பாகத்தில்) ஓகை — மகிழ்ச்சி, மேவி — வந்து, காவி — மலர்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தின் அருளைப் பெற வந்தமை அறிந்து மனையவராம் அடியவர்கள் மகிழ்ந்து கூறியது.

Koviloor Digital Library

34. வாயின் மறுத்துரைத்தல்

கொளு: மடவரல் தோழி வாயில் வேண்ட
அடல்வே லவனார் அருளு ரைத்தது.

வாயில் வேண்டிய தோழிக்கு மடப்பத்தை உடைய தலைவி வேலையுடைய தலைவனின் அருளைக் கூறியது.

உடைமணி கட்டிச் சிறுதேர்
உருட்டி உலாத்தரும்இந்
நடைமணி யைத்தந்த பின்னர்முன்
நான்முகன் மால்அறியா
விடைமணி கண்டர்வண் தில்லைமென்
தோகையன் னார்கண்முன்நம்
கடைமணி வாள்நகை யாய்இன்று
கண்டனர் காதலரே. (385)

பொருள்: முத்துப்போலும் ஒளிபொருந்திய பற்களை உடையவளே, ஒலிக்கும் சிறுமணியை இடையில் கட்டிக் கொண்டு சிறுதேர் உருட்டி உலாவுகின்ற மகனை நமக்குத் தந்தபின், நான்முகனும் திருமாலும் காணமுடியாத விடையை உடைய நீலகண்டனாம் சிவபெருமானது தில்லை நகரத்தின் கண் வாழுகின்ற மயிலை ஒத்த பெண்களுக்கு முன்னே நம்முடைய கடைவாசலைத் தலைவர் இன்று கண்டார். இது வன்றோ அவர் நம்மிடம் காட்டும் அருள் (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: புதல்வனைத் தந்தபின் இன்றுதான் நம் வீட்டிற்கு வந்தர்ர் தலைவர். இதுவரை அவர் புறத்து ஒழுக்கமாம் பரத்தையர் ஒழுக்கத்தில் இருந்தார் என்று தலைவி கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. உடைமணி — இடையில் கட்டும் அரைஞாண், உலாத்தரும் — உலாவு கின்ற, நடை.மணி — மகன், மகன் வளர்ந்து சிறுதேர் உருட்டுகின்ற பருவம் வரை தலைவன் வராது புறத் தொழுக்கத்து இருந்தான் என்பதைச் சிறுதேர் உருட்டி என்ற தொடர் புலப்படுத்துகிறது. தோகையன்னார் — ஆயர்கூட்டத்தார்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: ஆன்மாவிற்கு அருள் நீட்டித்த காரணத்தைச் சிவத்தலைவி திருவருளிடம் கூறியது.

35. பாணனோடு வெகுளுதல்

கொளு: மன்னியாழ்ப் பாணன் வாயில் வேண்ட
மின்னிடை மடந்தை வெகுண்டு ரைத்தது.

நிலைபெற்ற இனிய ஓசையை உடைய யாழைக் கையிலேந்திய பாணன் வாயில் வேண்ட மின்னல் போன்ற இடையினை உடைய தலைவி சினந்து உரைத்தது.

மைகொண்ட கண்டர் வயல்கொண்ட
தில்லைமல்(கு) ஊரர்நின்வாய்
மெய்கொண்ட அன்பினர் என்பதென்
விள்ளா அருள்பெரியர்
வைகொண்ட ஊசிகொல் சேரியின்
விற்றெம்இல் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை
ஆத்தின்னி போந்ததுவே. (386)

பொருள்: கருமை நிறம் பொருந்திய கண்டத்தை உடைய சிவபெருமானின் தில்லையைச் சூழ்ந்த ஊரராகிய தலைவன் என்னிடத்தில் உண்மை உடையவன் என்று புலையனாகிய ஆதின்னியாம் பாணனே, நீ சொல்ல வேண்டுமா? எம்மிடத்தில் தலைவன் நீங்காத அருளால் பெரியவன் ஆவான். அது ஒருபுறம் இருக்கக் கூர்மை பொருந்திய ஊசியைக் கொல்லன் தெருவில் விற்றல் போல எம் இல்லத்தில் வந்து நல்ல நல்ல பொய்யைக் கூறிக் கொண்டிருக்கிறாயே (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: கொல்லன் தெருவில் ஊசி விற்றால் விலையாகாதது போலத் தலைவனைப் பற்றிய பொய்யான செய்திகளை எம்மிடத்து உன்னால் சொல்ல இயலாது என்பது குறிப்புப் பொருள். மை — கருமை, வை — கூர்மை, கொற்சேரி — கொல்லன்தெரு—, புலைஆத்தின்னி — புலையனாகி பசு தின்பவன்.

Koviloor Digital Library

தத்துவப்பொருள்: சிவத்தலைவி வாயிலாக வந்த அடியவரை மறுத்தது.

36. பாணன் புலந்துரைத்தல்

கொளு: கருமமலர்க் கண்ணி கனன்றுகட் டுரைப்பப்
புரியாழ்ப் பாணன் புறப்பட்டது.

கரிய மலரை ஒத்த கண்களை உண்டய தலைவி சினந்து உரைப்ப யாழ்ப்பாணன் வருந்திப் புறப்பட்டது.

கொல்லான் டிலங்கு மழுப்படை
யோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண் டிலங்கு புருவம்
நெரியச்செவ் வாய்துடிப்பக்
கல்லாண்(டு) எடேல்கருங் கண்சிவப்
பாற்று கறுப்பதன்று
பல்லாண்(டு) அடியேன் அடிவலம்
கொள்வன் பணிமொழியே. (387)

பொருள்: கொல்லுகின்ற தொழிலை உடைய மழுவாயுதத்தை ஏந்திய சிவபெருமானது தில்லையை ஒத்தவளே, உன்னுடைய வில் போன்ற புருவம் நெறியச் செவ்வாய் துடிப்ப என்னை அடித்தற்குக் கல்லை எடுக்க வேண்டாம். கரிய கண்களில் ஏற்பட்ட சிவப்பை மாற்று. என்னைக் கோபிப்பது நன்றன்று. உனக்குப் பல்லாண்டு கூறுகின்றேன். எம்மை ஏவலாகக் கொள்ளுகின்ற மொழியை உடையவளே, அடியேன் உன்னுடைய திரு வடியை வலங்கொண்டு வணங்குகிறேன் (என்று பாணன் கூறினான்)

சொ.பொ.வி.: கொல்லாண்டிலங்கு — கொல்லுகின்ற தொழிலை உடைய, வில்லாண்டிலங்கு — வில்லைப் போன்று விலங்கும், கறுப்பதன்று — கோபப்படாதே.

தத்துவப் பொருள்: சிவத்தை அ்டியவர் வணங்கிப் போற்றியது.

Koviloor Digital Library

37. விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல்

கொளு: பல்வளை பரிசுகண்டு இல்லோர் இயம்பியது.

வளையல்களை உடைய தலைவியின் பெருமை கண்டு இல்லோர் கூறியது.

மத்தக் கரியுரி யோன்தில்லை
யூரன் வரவெனலும்
தத்தைக் கிளவி முகத்தா
மரைத்தழல் வேல்மிளிர்ந்து
முத்தம் பயக்கும் க்ழுநீர்
விருந்தொடென் னாதமுன்னம்
கித்தக் கருங்குவ ளைச்செவ்வி
யோடிக் கெழுமினவே. (388)

பொருள்: மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திய சிவபெருமானின் தில்லையின் கண் உள்ள தலைவன் வந்தான் என்று சொல்லத் தொடங்கிய வுடன் கிளிபோலும் மொழியை உடைய தலைவியின் முகமாகிய தாமரையில் வெப்பத்தை உடைய வேல் போன்று பிறழ்ந்து நீர்த்துளியாயிய முத்துக்களைச் சொரி யும் கண்ணாகிய செங்கழுநீர்ப்பூ — விருந்தொடு வந்தான் என்று சொல்லுவதற்கு முன்னால் கருங்குவளை போலக் காட்சி தந்தது. என்னே தலைவியின் நிலை (என்று இல்லோர் கூறியது)

சொ.பொ.வி.: தலைவன் வந்தான் என்று சொன்ன வுடன் தலைவியின் கண்கள் சிவந்தன. ஆனால் அவன் விருந்தொடு வந்தான் என்றவுடன் சினம் மாறிக் கண்கள் இயல்பான கருமைநிறம் பெற்றன என்ற குறிப்பு பெறப் படுகிறது. மத்தம் — களிப்பு (மதம்), ஊரன் — தலைவன், தத்தை — கிளி, முத்தம் — முத்துப்போன்ற கண்ணீர், கித்த — உரிச்சொல் — விரைவு.

தத்துவப்பொருள்: ஆன்மா பணிவாகிய விருந்தொடு வந்தது என அறிந்த சிவத்தலைவி சினம் மாறி அருள் வழங்கத் தலைப்பட்டது.

Koviloor Digital Library

38. ஊடல் தணிவித்தல்

கொளு: தோன்றலைத் துணையொடு தோழி கண்டு
வான்தகை மடந்தையை வருத்தம் தணித்தது.

தோன்றலாம் மகனைத் துணையாகக் கொண்டு தலைவன் வருவதைத் தோழி கண்டு தலைவியின் வருத்தத்தைத் தணித்தது.

கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக்
காட்டிடை ஆட்டுவந்த
தவலங் கிலாச்சிவன் தில்லையன்
னாய்தழு விம்முழுவிச்
சுவலங் கிருந்தநம் தோன்றல்
துணையெனத் தோன்றுதலால்
அவலங் களைந்து பணிசெயற்
பாலை அரசனுக்கே. (389)

பொருள்: கவலை கொண்ட பேய்க்கூட்டங்கள் குட்டிக்கரணம் இட்டுப் பாடும் சுடுகாட்டில் ஆடுவதை விரும்புகின்ற அழிவில்லாத சிவபெருமானது தில்லையை ஒத்தவளே, பிள்ளையைத் தழுவி முத்தம் கொண்டு தன்னுடைய பிடரியின்கண் ஏற்றிக் கொண்டு அவனைத் துணையாகக் கொண்டு நம் தலைவன் தோன்றுவதால் நின் மனத்திலுள்ள கவலையை நீக்கி அவனுக்குப் பணி செய்வாயாக (என்று தோழி கூறினாள்)

சொ.பொ.வி.: கவலம் — கவலை, தவலம் அங்கு இலா — அழிவில்லாத, சுவல் — பிடரி அவலம் — வருத்தம், அரசன் — தலைவன்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவியிடம் ஆன்மாவை ஏற்றுக் கொள்ளும்படி திருவருள் வேண்டியது.

39. அணைந்தவழி ஊடல்

கொளு: தெளிபுனல் ஊரன் சென்றணைந் தவழி
ஒளிமதி நுதலி ஊடி யுரைத்தது.

Koviloor Digital Library

தெளிவான நீர்நிலையை உடைய ஊரைக் கொண்ட தலைவனை மதி போன்ற நெற்றியை உடைய தலைவி வெறுத்துச் சொல்லியது.

சேல்தான் திகழ்வயல் சிற்றம்
பலவர்தில் லைநகர்வாய்
வேல்தான் திகழ்கண் இளையார்
வெகுள்வர்மெய்ப் பாலன்செய்த
பால்தான் திகழும் பரிசினம்
மேவும் படி(று) உவவேம்
கால்தான் தொடல்தொட ரேல்விடு
தீண்டல்எம் கைத்தலமே. (390)

பொருள்: மீன்கள் விளங்கும் வயலை உடைய சிவபெருமானின் தில்லை நகரில் உள்ளவராகிய வேல் போலும் கண்களை உடைய இளைய பெண்கள் நீ செய்கின்றதை அறிந்தால் உன்னைக் கோபிப்பர். மேலும் என் மேனியானது மகனால் உண்டாக்கப் பெற்ற பால் நாறும் தன்மை உடையது. மேலும் நீயும் நானும் பொருந்தும் நாணமற்ற கள்ளத்தை நான் விரும்பேன். ஆதலால் என் காலைத் தொடாதே, என் கையையும் தீண்டாதே. விடு (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: சேல் — மீன், இளையர் — தலைவனின் பிற மகளிர், திகழும்பரிசினம் — பால் நாறும் மேனி, மேவும் படிறு — நீ விரும்பும் பஞ்சணை, உவவேம் — விரும்பேம், கைத்தலம் — கை

தத்துவப்பொருள்: சிவம் ஆன்மாவின் செயலை வெறுத்துக் கூறியது.

40. புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல்

கொளு: ஆங்கதனுக்(கு) அழுக்கம் எய்தி
வீங்கு மென்முலை விட்டுரைத்தது.

தலைவன் முன்பு செய்த புதுப்புனலாட்டுக்கு வெறுத்து விம்முகின்ற முலலயை உடைய தலைவி கூறியது.

Koviloor Digital Library

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம்
பலவர்தில் லைநகரோர்
பந்தார் விரலியைப் பாய்புன
லாட்டிமன் பாவிஎற்கு
வந்தார் பரிசும்அன் றாய்நிற்கும்
ஆறென் வளமனையில
கொந்தார் தடந்தோள் விடங்கால்
அயிற்படைக் கொற்றவரே. (391)

பொருள்: பூங்கொத்துக்களாகிய மாலை அணிந்த தோளினையும், நஞ்சைக் கக்கும் வேலையும் உடைய தலைவனே, எம் இல்லத்தில் வந்து பந்து விளையாடிய பிற மகளிர் ஒருத்தியைக் கொன்றை மாலையை உடைய சிவபெருமானது தில்லைநகர்க்கண் பாய்கின்ற ஆற்றுநீரில் நீராட்டுவித்து வெளிப்படக் குற்றம் செய்தார் நிற்கின்ற தன்மையும் உடையாய் இல்லை. ஆனால் மனதுக்குள்ளே தவறு செய்தவர் போல இப்போது நீ வந்து நின்றால் பாவியேனாகிய என்னால் பொறுத்தற்கு அரிதாகும் (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: பிற மகளிரைப் புனலாட்டி அக் குற்றத்தை மறைக்காது வந்தாலாவது ஏற்றுக் கொள்ளலாம. ஆனால் அதை மறைத்து வந்திருக்கிறாய். இதை எப்படி ஏற்பது என்று தலைவி கூறுவதாகக் குறிப்பு பெறப்படுகிறது. செந்தார் நறுங்கொன்றை — செம்மைநிறம் பொருந்திய கொன்றை மலர்... பந்தார் விரலி — பந்து விளையாடிய பிற மகளிரை, மன்பாவி எற்கு — மிக்க தீவினை உடைய என்னிடத்து, பரிசு — வெளிப்படநிற்கும் நிலை, விடங்கால் அயிற்படை — நஞ்சைக் கக்குகின்ற வேல்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மாவின் செயலாம் பிறசமய இன்பத்தை வெறுத்துக் கூறியது.

41. கலவி கருதிப் புலத்தல்

கொளு: கலைவளர் அல்குல் தலைமகன் தன்னொடு
கலவி கருதிப் புலவி புகன்றது.

Koviloor Digital Library

மேகலை அணிந்த அல்குலை உடைய தலைவி தலைவனுடன் புணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஊடல் உடையாள் போலக் கூறியது.

மின்துன் னியசெஞ் சடைவெண்
மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம்
பலவன்தென் னம்பொதியில்
நன்றும் சிறியவர் இல்எம(து)
இல்லம்நல் லூரமன்னோ
இன்றுன் திருவருள் இத்துணை
சாலுமன் எங்களுக்கே. (392)

பொருள்: மின்னலைப் போன்ற செஞ்சடையில் பிறைச் சந்தினை உடையவனும், நல்ஊழ் உடையோர் சென்று தியானிக்கின்ற கழல்களை உடைய சிற்றம்பலவனும் ஆகிய சிவபெருமானின் தெற்குத் திசையில் உள்ள பொதியமலையில் எமது குடி சிறிது குடியாகும். ஆதலால் தலைவனே இன்று உனது திருவருள் இந்த அளவே போதும் (அதிகமாக வற்புறுத்த வேண்டாம்) (என்று தலைவி கூறினாள்)

சொ.பொ.வி.: ஊடலைத் தணிவிக்கத் தலைவன் தலைவியின் தோள்களைத் தழுவியிருக்கிறான். அதனைத் தடுக்காத தலைவி இந்த அளவில் போதும் என்கிறாள் என்று கருத்து பெறப்படுகிறது. விதி உடையோர் — நல்ஊழினை உண்டயோர், சாலுமன் — போதும்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மா வந்ததே போதும் என்றும், வேறு அன்பு காட்டவேண்டாம் என்றும் கூறியது.

42. மிகுத்துரைத்து ஊடல்

கொளு: நாடும் ஊரும் இல்லும் சுட்டி
ஆடற் பூங்கொடி ஊடி உரைத்தது.

Koviloor Digital Library

நாட்டையும், ஊரையும், வீட்டையும் சுட்டிக் காட்டிப் பூங்கொடி போன்ற தலைவி ஊடலுடன் உரைத்தது.

செழுமிய மாளிகைச் சிற்றம்
பலவர்சென்(று) அன்பர்சிந்தைக்
கழுமிய கூத்தர் கடிபொழில்
ஏழினும் வாழியரோ
விழுமிய நாட்டு விழுமிய
நல்லூர் விழுக்குடியீர்
விழுமிய அல்லகொல் லோஇன்ன
வாறு விரும்புவதே. (393)

பொருள்: வளமான மாளிகைகள் சூழப் பெற்ற சிற்றம்பலத்தை உடையவராய் அன்பர்களின் சிந்தையில் சென்று சேர்பவராய் விளங்கும் சிவபெருமானது உலகம் ஏழினும் சிறந்த நாட்டில் சிறந்த நல்லூரில் சிறந்த குடியைச் சார்ந்த தலைவனே, எம்மிடத்தில் நீர் புணர்ச்சியை விரும்புவது உமக்குத் தகைமை உடையது அல்ல (என்று தலைவி போற்றுவது போல் இகழ்ந்து கூறினாள்)

சொ.பொ.வி.: கழுமிய — செறியச் சேருகின்ற, விழுமிய — பெருமை மிக்க, விழுமிய அல்லகொல் — பெருமை உடையது அல்ல.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் சரியை, கிரியை, யோகம் (நாடு, ஊர், குடி) ஆகிய குணநலன்கள் கூடி நிற்க பிறவழிபாடு செய்தல் நன்றன்று எனச் சிவத்தலைவி கூறியது.

43. ஊடல் நீட வாடி உரைத்தல்

கொளு: வாடா ஊடல் நீடா வாடியது.

தீராத ஊடல் நீண்டு கொண்டே செல்ல தலைவன் வாடியது.

திருந்தேன் உயநின்ற சிற்றம்
பலவர்தென் னம்பொதியில்

Koviloor Digital Library

இருந்தேன் உயவந்(து) இணைமலர்க்
கண்ணின்இன் நோக்கருளிப்
பெருந்தேன் எனநெஞ் சுகப்பிடித்(து)
ஆண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தேல் அதுவன்(று) இதுவோ
வருவதொர் வஞ்சனையே. (394)

பொருள்: ஒருவாற்றாலும் திருந்தாத நான் பிறவித் துன்பத்திலிருந்து மீள அருள்செய்த சிவபெருமானது தெற்கின் கண் உள்ளதாகிய பொதிய மலையிடத்து ஒரு முயற்சியும் இன்றி இருந்தேன். அவ்வாறு இருந்த நான் வாழும் வண்ணம் இணைமலர் போலும் கண்களால் இனிய நோக்கத்தைத் தந்தாள். பெருந்தேன் போல இனிதாய் இருந்தாய், நெஞ்சம் உருக என்னை வசப்படுத்தினாள், அத்தகைய அன்றையப் பெண் அமுதம் இதுவன்று. இன்றைக்கு வஞ்சனையின் வடிவமாக இருக்கின்றது. ஆதலால் நெஞ்சே நீ வருந்தாது ஒழி (என்று தலைவன் நெஞ்சைப் பார்த்துக் கூறினான்)

சொ.பொ.வி.: உய — உய்ய. வாழ, இன்நோக்கு — இனிய நோக்கு, பிடித்துஆண்ட—வசப்படுத்திய, வஞ்சனை — வஞ்சனைவடிவம்.

தத்துவப்பொருள்: ஆன்மா சிவத்தலைவியின் அருள் கிடைக்காது வருந்தி முன்அருள் கொடுத்த நிலையைச் சுட்டிக் காட்டியது.

44. துனியொழிந்து உரைத்தல்

கொளு: தகுதியின் ஊரன் மிகுபதம் நோக்கிப்
பனிமலர்க் கோதை துனியொ ழிந்தது.

தலைவனுடைய அன்பை நோக்கி அவனுடைய எளிய தன்மையும் நோக்கி மலர்அணிந்த கூந்தலை உடைய தலைவி கூறியது.

இயல்மன்னும் அன்புதந் தார்க்(கு)என்
நிலைஇமை. யோர்இறைஞ்சும்

Koviloor Digital Library

செயல்மன்னும் சீர்க்கழல் சிற்றம்
பலவர்தென் னம்பொதியில்
புயல்மன்னு குன்றில் பொருவேல்
துணையாப்பொம் மென்இருள்வாய்
அயல்மன்னும் யானை துரந்(து)அரி
தேரும் அதரகத்தே. (395)

பொருள்: தேவர்கள் வணங்கும் வீரக்கழலை அணிந்த திருவடியை உடைய சிற்றம்பலநாதனின் தெற்குத் திசையில் உள்ள பொதிய மலையிடத்து மிகுந்த இருளில் யான்னகள் ஓடிட, சிங்கம் புகுந்த காட்டு வழியில் வேலே துணையாகக் கொண்டு அன்றுவந்து அன்பை நமக்குத் தந்தவர்க்கு இன்று உடம்படாது நிற்கும் நிலை தகாது (என்று தலைவி ஊடல் தணிந்தாள்)

சொ.பொ.வி.: இயல்மண்ணும் — இயல்பாகப் பொருந்திய அன்பு, புயல் மன்னும் — மேகம் சூழ்ந்த மலை, பொம்மென் இருள் — மிக்க இருள், அரி — சிங்கம், அதரகம் — காட்டுவழியில்.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி ஆன்மாவின் பெத்த நிலையை நினைந்து முத்தியைத்தர எண்ணியது.

45. புதல்வன் மேல் வைத்துப் புலவி தீர்தல்

கொளு: புதல்வனது திறம் புகன்று
மதரரிக் கண்ணி வாட்டம் தவிர்ந்தது.

பெற்ற மகனின் திறத்தைச் சொல்லுவாள் போல நல்ல நிறம் படைத்த கண்களை உடைய தலைவி தன் ஊடலைத் தணித்துக் கொண்டது.

கதிர்த்த நகைமன்னும் சிற்றவ்வை
மார்களைக் கண்பிழைப்பித்(து)
எதிர்த்(து)எங்கு நின்(று)எப் பரிசளித்
தான்இமை யோர்இறைஞ்சும்
மதுத்தங் கியகொன்றை வார்சடை
ஈசர்வண் தில்லைநல்லார்

Koviloor Digital Library

பொதுத்தம்ப லங்கொணர்ந் தோபுதல்வா
எம்மைப் பூசிப்பதே. (396)

பொருள்: தேன் நிறைந்த கொன்றை மாலை அணிந்த சடையை உடைய சிவபெருமானது தேவர்கள் வணங்கும் தில்லை நகர்க்கண் வாழும் பெண்கள் அனைவருக்கும் பொதுவாக அமைந்த வெற்றிலைத் தம்பலத்தைக் கொண்டு வந்தோ மகனே, நீ எம்மைக் கொண்டாடுவது. அது ஒரு பக்கம் இருக்க நல்ல ஒளி பொருந்திய பற்களை உடைய உன்னுடைய சிற்றன்னைமார்களுக்குத் தப்பி அவர்கள் காணாத வண்ணம் எப்படியோ உன்னை எதிர்ப்பட்டு எந்த இடத்தில் தந்தை உனக்கு இதைத் தந்தார்? (என்று மகனை நோக்கிக் கேட்டாள் தலைவி)

சொ.பொ.வி: கதிர்த்த — ஒளிபொருந்திய த்வ்வை — தாய்(பிறமகளிர்), இப்பரிசு — தாம்பூலம், எதிர்த்து— எதிர்ப்பட்டு.

தத்துவப்பொருள்: சிவத்தலைவி முக்தியாகிய புதல்வனை வைத்து ஆன்மாவிடம் சினம் தணிந்தது.

46. கலவி இடத்து ஊடல்

கொளு: சீறடிக்(கு) உடைந்த நாறிணர்த் தாரவன்
தன்மை கண்டு பின்னும் தளர்ந்தது.

சிறிய அடியைக் கண்டு உடைந்த மாலையணிந்த தலைவன் செய்த செயலைக் கண்டு அதனையே காரணமாகக் கொண்டு தலைவி ஊடியது.

சிலைமலி வாணுதல் எங்கைய(து)
ஆகம் எனச்செழும்பூண்
மலைமலி மார்பின் உதைப்பத்தந்
தான்தலை மன்னர்தில்லை
உலைமலி வேற்படை ஊரனில்
கள்வர்இல் என்னஉன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த
மாலை கலுழ்ந்தனவே. (397)

Koviloor Digital Library

பொருள்: தலைவி சினமுற்று மலைபோன்ற தலைவன் மார்பில் உதைக்க, தலைவியின் கால் மார்பில் படாத வண்ணம் தன் தலையில் அதைத் தாங்கிக் கொண்டான். ஆதலால் தில்லையின் நகரில் உலையிலே நன்றாகச் செய்யப்பட்ட வேற்படையை உடைய தலைவனைப் போலக் கள்வன் இல்லை என்று கருதித் தலைவியின் கண்கள் கண்ணீரை முத்து மாலையாகப் பொருந்தின. ஆதலால் இவள் ஊடுவதற்குக் காரணம் வேண்டாம் போலும்.

சொ.பொ.வி.: தலைவி தலைவனுடைய மார்பில் கிடந்த மாலைகள் தங்கையாகிய பிறமகளிர் சூட்டிய மாலை என்று நினைத்து மார்பை உதைத்தாள். ஆனால் தலைவனோ மார்பில் படாதவண்ணம் ஊடல் தணிக்கத் தலையில் சுமந்தான். இந்தச் செயலையும் தலைவி தவறாக நினைத்தாள். எவ்வாறென்றால் மார்பு பிறையை ஒத்த நெற்றியை உடைய பிறமகளிர்க்கு உரியது என்பதால் மார்பில் படாது தடுத்தான் என எண்ணினாள். உடனே ஊடல் கொண்டு அழுதாள் என்பது இப்பாட்டின் குறிப்புப் பொருள். எங்கை — தங்கையாகிய பிறமகளிர், தந்தான் தலை — தலையளி ஏற்றான், கலைமலி காரிகை — கலைகள் மலிந்த தலைவி, கலுந்தன — உகுத்தன.

தத்துவப்பொருள்: சிவத்தின் அருள் திருவடித் தீட்சையாக அமைந்தது என்று ஆன்மா நினைந்ததைக் கூறுவது.

47. முன்னிகழ்வு உரைத்து ஊடல் தீர்தல்

கொளு: முன்னி கழ்ந்தது நன்னுதற்(கு) உரைத்து
மன்னு புனலூரன் மகிழ்வுற்றது.

முன் நிகழ்ந்த நினைவுகளை நல்ல நெற்றியை உடைய தலைவிக்கு உரைத்து நீர்வளம் மிக்க ஊரை உடைய தலைவன் கூறி மகிழ்ந்தது.

ஆரூர் சடைமுடி அம்பலத்(து)
அண்டர்அண் டம்பெறினும்

Koviloor Digital Library

மாறூர் மழலிடை யாய்கண்
டிலம்வண் கதிர்வெதுப்பு
நீறூர் கொடுநெறி சென்றிச்
செறிமென் முலைநெருங்கச்
சீறூர் மரையத ளில்தங்கு
கங்குற் சிறுதுயிலே. (398)

பொருள்: கங்கை தாங்கிய சடைமுடியை உடைய சிற்றம்பலவனது அண்டம் முழுவதையும் நாம் பெற்றாலும் — ஞாயிற்றின் கதிர்கள் வெம்மையைத் தரக் கொடிய நெறியிலே சென்று உனது செறிந்த முலைகளை எம்முடைய மார்பிலே நெருங்கும்படி செய்து அந்தச் சிற்றூரில் மான்தோல் படுக்கையில் தங்கி இரவில் யான் கொண்ட சிறிய தூக்கத்திற்கு ஒப்பாகாது. இதனை மழவிடையாய் நினைத்துப் பார்ப்பாயோ (என்று தலைவியிடம் தலைவன் கூறினான்)

சொ.பொ.வி.: ஆறார் — ஆறுஊர்ந்த (கங்கை தாங்கிய), மாறூர்மழவிடையாய் மாது — நிகரில்லாத இளம் மகனை உடையவள். நீறூர்நெடுநெறி — வெப்பத்தால் புழுதி பரக்கின்ற வழி, மரையதள் — மான்தோல்.

தத்துவப்பொருள்: ஆன்மா, முன்பு கிடைத்த சிவனருளை நினைந்து மகிழ்ந்தது.

48. பரத்தையைக் கண்டமை கூறிப் புலத்தல்

கொளு பரத்தையைக் கண்ட பவளவாய் மாதர்
அரத்த நெடுவேல் அண்ணற்கு உரைத்தது.

தலைவனின் பரத்தமையைக் கண்டேன் என்று பவளம் போன்ற வாயினை உடைய தலைவி நெடிய வேலினை உடைய தலைவனுக்குச் சொல்லியது.

ஐயுற வாய்நம் அகன்கடைக்
கண்டுவண் தேர்உருட்டும்
மையுறு வாட்கண் மழவைத்
தழுவமற்(று) உன்மகனே

Koviloor Digital Library

மெய்யுற வாம்இதுன் இல்லே
வருகென வெள்கிச்சென்றாள்
கையுறு மான்மறி யோன்புலி
யூரன்ன காரிகையே. (399)

பொருள்: நமது வீட்டு வாயிலில் நின்ற மகனை உன் மகனாக இருப்பானோ என்று ஐயுற்று வளமான தேரை உருட்டுகின்ற ஒளிபொருந்திய கண்களை உடைய நம் புதல்வனை வந்து ஒருத்தி தழுவ — அதனைக்கண்ட நான் உன்மகனே இவன், ஏற்பட்ட உறவு உண்மையே, இது உன்னுடைய வீடே வருவாயாக என்று வந்து நிற்பவளிடம் கூறினேன். ஆனால் மானைக் கையிலேந்திய சிவபெருமானது தில்லையைப் போன்ற அந்தப் பெண்ணோ வெட்கத்துடன் சென்றுவிட்டாள். ஆதலால் அவளை நான் அறியேன் என்று நினைத்து நீர் மாயம் கூறவேண்டிய தில்லை (என்று தலைவி தலைவனிடம் கூறினாள்)

சொ.பொ.வி.: ஐயுறவாய் — ஐயம் கொண்டவளாய், கடைக்கண் — வீட்டுவாயிலின்கண், மழலை — மகனை, வெள்கி — வெட்கத்துடன்.

தத்துவப்பொருள்: ஆன்மாவின் பிறசமய உணர்வைச் சிவத்தலைவி அறிந்தமையைக் கூறியது.

49. ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தல்

கொளு: இரும்பரிசில் ஏற்றவர்க்(கு) அருளி
விரும்பினர் மகிழ மேவுதல் உரைத்தது.

வந்தவர்க்கு எல்லாம் பரிசில் கொடுத்ததும் விரும்பினவர்க்கு விரும்பியதைக் கொடுத்ததும் ஆகிய செயல்களைக் கூறியது.

காரணி கற்பகம் கற்றவர்
நற்றுணை பாணர்ஒக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்

Koviloor Digital Library

தாரணி கொன்றையன் தக்கோர்
தம்சங்க நிதிவிதிசேர்
ஊரணி உற்றவர்க்(கு) ஊரன்மற்(று)
யாவர்க்கும் ஊதியமே. (400)

பொருள்: தலைவன் கைம்மாறு கருதாது கொடுத்தலால் மேகத்தை ஒத்தவன், விரும்பியதைக் கொடுத்தலால் கற்பக மரத்தை ஒத்தவன். கற்றவர்க்கு நல்ல துணையை ஒத்தவன். பாணர்களுக்கு சுற்றத்தை ஒத்தவன். நினைத்ததெல்லாம் கொடுத்ததால் சிந்தாமணியை ஒத்தவன், தில்லையில் விளங்கும் சிவபெருமானது கொன்றைப் பூவின் தன்மையை ஒத்தவன், சான்றோர்களுக்குச் சங்க நிதியை ஒத்தவன். தப்பாத பயன் கொடுத்தலால் விதியை ஒத்தவன், சுற்றத்தார்க்கு ஊருணியை ஒத்தவன். இவ்வாறு அனைவருக்கம் பெரும் பயனாவான் தலைவன் (என்று தோழி தலைவனைப் பாராட்டினாள்)

சொ.பொ.வி.: கார் — மேகம், ஒக்க — சுற்றம், சீரணி — புகழை உடைய, தக்கோர் — சான்றோர், விதி — ஊழ், ஊதியம் — பயன்.

தத்துவப்பொருள்: திருவருளாகிய தோழி தற்போதம் அழிந்து சிவபோதம் மிக்க ஆன்மாவைச் சிவத்தோடு சேர்ந்து அருள் பெற்றதைப் பாராட்டியது.

பரத்தையிற் பிரிவு முற்றிற்று.

அருள்மிகு மாணிக்கவாசகர் பாடியருளிய திருக்கோவையாருக்குத் தமிழாகரர் சித்தாந்தச் செம்மணி முனைவர் பழ. முத்தப்பன் எழுதிய எளிய உரை முற்றிற்று.

Koviloor Digital Library

பாட்டு முதற்குறிப்பு அகராதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR

Koviloor Digital Library

குறிப்புக்காக...

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45871

Koviloor Digital Library

Koviloor Digital Library



இந்நூலின் உரையாசிரியர் முனைவர் பழ.முத்தப்பன் அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் நுண்மான் நுழைபுலம் மிக்கவர். குறிப்பாகத் திருமுறைகளிலும்,சித்தாந்த நூல்களிலும் சிறப்புப் புலமை பெற்றவர். இவரின் இப்புலமை பேச்சுரைகளாகவும், எழுத்துரைகளாகவும் உலகெலாம் சென்று பயன் தந்து வருகின்றன. தமிழ்நாடு தவிர இலங்கை, சிங்கப்பூர் முதலான வெளிநாடுகளிலும், இவரது சித்தாந்தப் பேச்சுப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.இவரின் எழுத்துப் பணிகள் வாயிலாக திருமுறைகளில்அகக் கோட்பாடு, சிந்து இலக்கியம், சிவஞான சித்தியாரின் நூல்கள் ஓர் ஆய்வு முதலான ஆய்வு நூல்கள் வெளிவந்தன. சித்தாந்த நூல்கள் பல உரை பெற்றன. ஞானாமிர்தம், சிவஞான சித்தியார் (பரபக்கம்) ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இவ்வரிசையில் தற்போது மணிவாசகரின் திருக்கோவையாரும் இடம்பெறுகிறது. இவரின் இப்பணிகளால் சைவ உலகம் மேன்மை பெற்று வருகிறது. இவரின் இம்மேன்மையைப் போற்றும் வகையில் பல நிறுவனங்கள் இவரை அவ்வப்போது பாராட்டி வருகின்றன.

குன்றக்குடி ஆதீனம் இவருக்குத் 'தமிழாகரர்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது.

திருவாவடுதுறை ஆதீனம் தற்போது இவருக்கு 'சித்தாந்தச் செம்மணி' என்ற பட்டத்தை வழங்கியது.

உறையூர் வாரவழிபாட்டு மன்றம் இவரின் தொடர்பொழிவைப் பாராட்டி 'சிவஞானச் செம்மல்' என்ற பட்டம் தந்து பெருமை கொண்டது.